வெளியீடு 4-1-1984] [Issued 4-1-198

(12)

31 மார் 1984
2702

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மார்ச் 28, 1983—தொகுதி XLVII எண். 2

Monday the March 28th 1983 Volume XLVII No. 2

...மன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009

...ive Assembly Department Fort St. George
Madras-600 009.

... 3-50 காசுகள்] [Price Rs. 3-50 Paise

ம
V211,31 N83
N83.47.243
136019
சென்னை-600 008

## உள்ளடக்கம்

28—[illegible]—1983


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள்; | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 143—166 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் | 166 |
| 2. தக்வல் கோரல், | |
| (அ) பேரவை நடக்கும்போது கொள்கை அறிவிப்பை அமைச்சர் வெளியே தெரிவிப்பது. | 166—168<br>185—186 |
| (ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை | 168 |
| 3. ஒத்திவைப்புத் தீர்வானம்: | |
| தமிழ்நாடு—கேரளா எல்லைப் பகுதியிலுள்ள கண்ணகி கோவிலில் சிலர் துர்க்கையம்மன் சிலையை வைத்துள்ளது | 168—184 |
| 4. அறிக்கை அளித்தல். | |
| விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வு ஊதியம் | 184 |
| 5. பேரவைக்குக் கொடுக்கப்பெறும் மனுக்கள். | 187—188 |
| 6. ஒழுங்குப் பிரச்னை. | |
| உறுப்பினர்கள் 'பாட்ஜ்' அணிந்து வருவது | 188—189 |
| 7. கவன ஈர்ப்புக்கள். | |
| (அ) வட ஆற்காடு மாவட்டத்தில் பயிர் ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் நஷ்டயீடு வழங்குவது | 189—192 |
| (ஆ) மயிலாடுதுறையில் சைக்கிள் ரிக்ஷா ஆட்டோ, வாடகைக் கார் ஓட்டுநர்களிடையே மோதல் | 192—197 |

9 வரவு—செலவுத் திட்டம் 1983–84 வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம் 197—198

கோரிக்கை எண். 25—சின்கோனா
கோரிக்கை எண். 45—காட்டுவளத் துறை
கோரிக்கை எண். 47—திரைப்படத் தொழில் நுட்பவியல்
கோரிக்கை எண். 55—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு
198-281

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் 197—201, 253—266, 269—270

திரு. ஆர். ரங்கசாமி 206—210

திரு. மு. அரங்கநாதன் 201—206

திரு. எஸ். இராசாராமன் 210—213

திரு. செ. செம்மலை 213—217

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் 217—221

திரு. ஏ. டி. கருப்பையா 221—224

திரு. பெ. திருமாறன் 224—227

திரு. ஏ. எஸ். பொன்னம்மாள் 227—230

திரு. சி. கணேசன் 230—234

திரு. கெ. சொக்கலிங்கம் 234—237

திரு. கே. கல்லன் 237—239

திரு. கே. உச்சி 239—242

திரு. எஸ். என். இராமசாமி 242—244

திரு. துரைமுருகன் 244—254

10. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள், 282

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1983 மார்ச் 28.

பங்குனி 14, துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு, 2014

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்

பகலும்பாற் பட்டன்று இருள்''

பிறரோடு கலந்து பழகி, மகிழ முடியாதவர்க்கு, மிகப் பெரிய இந்த உலகம் ஒளியுள்ள பகற்காலத்திலும் இருளில் கிடப்பதாகும்.

### 1. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

#### பழம்புத்தூர், புதுப்புத்தூர் ஆகிய ஊர்களுக்கான குடும்பக் கார்டுகள்.

*வினா எண். 766—திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் வட்டம், பழம்புத்தூர், புதுப்புத்தூர் ஆகிய ஊர்களுக்கு இதுவரை குடும்பக்கார்டு வழங்கப்படாதது அரசுக்கு தெரியுமா?

(ஆ) விரைவில் வழங்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) பழம்புத்தூர், புதுப்புத்தூர் ஆகிய இரு கிராமங்களும், கொடைக்கானல் வட்டம் கூக்கல் கிராமத்தைச் சேர்ந்த மதுரா கிராமங்களாகும் (Hamlet Villages). 1982-ம் ஆண்டு வீடு வீடாகச் சென்று கணக்கெடுத்து பழம்புத்தூர் கிராமத்திற்கு 148 குடும்ப அட்டைகளும், புதுப்புத்தூர் கிராமத்திற்கு 233 குடும்ப அட்டைகளும் வழங்கப்பட்டன.

(ஆ) தகுதியுடைய எல்லா குடும்பங்களுக்கும் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, இவ்வாறு குடும்ப கார்டு கணக்கு எடுக்கும்பொழுது அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர் வேலைக்குப் போயிருக்கிறார்கள், அல்லது போய்க் கணக்கெடுக்கிறவர்கள் சரியாக எடுக்காமல் விட்டுவிடுகிறார்கள்.

[1983 மார்ச் 28

அதனாலே பல குடும்பங்கள், குடும்பக் கார்டுகள் இல்லாமல் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே மறு பரிசீலனை செய்து அவர்களுக்கு குடும்பக் கார்டுகள் வழங்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குடும்பக் கார்டுகள் சில காரணங்களால் பெற இயலாத நிலை ஏற்பட்டால், அவர்கள் அதற்கான காரணங்களைச் சொல்லி அங்கே இருக்கிற வழங்குதுறை அதிகாரி இடத்தில் தெரிவித்து, புதிய குடும்பக் கார்டுகளைப் பெறுவதற்கு வழிவகைகள் காணலாம்.

## தஞ்சை மாவட்டத்திலுள்ள நியாயவிலைக் கடைகள்

*வினா எண். 567—திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் எத்தனை நியாயவிலைக் கடைகள் உள்ளன?

(ஆ) அவற்றுள் கூட்டுறவுத் துறை நடத்தும் கடைகள் எத்தனை?

(இ) நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தும் கடைகள் எத்தனை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) தஞ்சை மாவட்டத்தில் 1712 நியாய விலைக் கடைகள் உள்ளன.

(ஆ) கூட்டுறவுத் துறை நடத்தும் கடைகள் 613.

(இ) நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தும் கடைகள் 1099.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தஞ்சை மாவட்டத்தில் திறக்கப்பட்ட கடைகள் அத்தனையும் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறதா? கூட்டுறவுத் துறை மூலமாக நடத்தும் பெரும்பான்மையான கடைகள் மூடப்பட்டுவிட்டன. அப்படி நடத்தமுடியாத மூடிய கடைகள் எத்தனை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, எனக்குக் கிடைத்த தகவல்படி எல்லாக் கடைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒரு சில கடைகள் நடைபெறாமல் போனால். அதன் புள்ளிவிவரங்களை தனியாகத் தரலாம். ஆண்டுக்காண்டு விற்பனைக் கணக்கைப் பார்க்கும்பொழுது வளர்ந்துகொண்டு தான் வருகிறது. 1979-80-ல் கூட்டுறவு வஙங்களில் 613 நியாய விலைக் கடைகள் நடைபெற்று



1983 மார்ச் 28]

வந்தன. ஆனால் தாலுக்கா வாரியமாக விவரங்களும் தரப்
பட்டிருக்கின்றன. ஆனால் எங்கேயாவது மூடப்பட்டிருக்கிற
சூழ்நிலை ஏற்பட்டிருக்குமேயானால், கூட்டுறவுத் துறைக்குக்
கொண்டு வந்து அதை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சி
களிலே நாம் ஈடுபடலாம். 1979-80-ல் ரூ. 3,02.12,00-க்கு
விற்பனையாயிற்று என்றால், 1980—81-ல் ரூ. 3.44,93.00 என்ற
அளவிற்கு ஆண்டுக்காண்டு அதனுடைய விற்பனைக் கணக்கு
வருகின்ற காரணத்தால், அது நடைபெற்றுக்கொண்டு வருகின்றன;
எங்கேயாவது ஓரிரு கடைகள் நடைபெறாமல், தடைபெற்றிருக்கு
மேயானால், அதை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளை
அரசு மேற்கொள்ளும்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவ
ரவர்களே, இப்படி நியாய விலைக் கடைகளிலும், அமுதம்
அங்காடிகளிலும் பணியாற்றுகிற பணியாளர்களுக்கு வழங்கும்
சம்பளம் குறைவாகக் கொடுக்கப்படுகிற காரணத்தினால் பல
கடைகளில் இன்றையதினம் பணியாளர்கள் வேலை செய்வதற்கு
வருவதில்லை. அதன் காரணமாக பல இடங்களில் கடைகள்
மூடப்பட்டிருக்கின்றன. அதோடு கூட்டுறவுத் துறையின் மூலம்
கடைகள் சரியாக இயங்காததால், அந்தக் கடைகளை மாற்றி
நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் எல்லா கிராமங்
களிலும் அமுதம் அங்காடிகள் திறப்பதற்கு அரசு முன்வருமா
என்பதை நான் அறிய விரும்புகிறேன். என்னுடைய ஊரில்,
பழைய கூடலூரில் இரண்டு வருஷமாகக் கூட்டுறவுத் துறையின்
மூலமாக இருந்த கடை மூடப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட
இடங்களில் நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாக உடனடியாக
கடைகளைத் திறப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, நுகர்பொருள் வாணிபக் கழகம் இந்த
சில்லறை அங்காடிகளை நடத்திவருகின்றன. கூட்டுறவுக் கழகத்
திற்கும் தரப்பட்டிருக்கின்றன. சில மாவட்டங்களில் நுகர்
பொருள் வாணிபக் கழகம் இந்தப் பொறுப்பை ஏற்றுக்
கொண்டிருக்கின்றது. பெரும்பாலான மாவட்டங்களில்
கூட்டுறவுத் துறை தான் ஏற்றுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு
உறுப்பினர் சொல்வது போன்று, மூடப்பட்டதன் காரணத்தை
அறிந்து அதை நீக்கி நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளை
அரசு ஆங்காங்கே செய்துகொண்டு வருகிறது. மாண்புமிகு
உறுப்பினர் கூறுவது போல் சில பல இடங்களிலுள்ள அதனை
நடத்துவதற்கான ஆட்கள் வராததன் காரணமாக சில பல
கடைகள் நடைபெறாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அவை
களை நடைமுறைப்படுத்துவதற்கான பெரிய முயற்சிகளை மேற்
கொள்ள வேண்டுமென்று அந்தந்த மாவட்டங்களிலுள்ள வழங்கு

துறை அதிகாரிகள் எல்லாம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்; அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். அதற்கான இடர்ப்பாடுகள், சங்கடங்கள் ஆகியவற்றை நீக்கி அவற்றை நடத்துவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசு நியாயவிலைக் கடைகளில் 3 மாத காலமாக பாமாயில் அரிசி போன்ற பொருள்கள் முழுமையாக சப்ளை செய்யாமல் வாங்கக்கூடிய மக்கள் போய்த் திரும்பி வருகிறார்கள். இந்த நிலையை நீக்க தொடர்ச்சியாக நமது நியாய விலைக் கடைகளில் பொருள்கள் கிடைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு, அங்கே பணியாற்றக்கூடிய ஊழியர்கள் சில நடவடிக்கைகளின் காரணமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டதால் அதன் காரணமாக கடையை மூடக்கூடிய நிலை இருக்கிறது. அப்படி கடையை மூடாமல் இருப்பதற்கும் மூடிய கடைகளைத் திறப்பதற்கும் அங்கே பணியாற்றுகிற ஊழியர்களுக்கு ஒரு நியாயமான சம்பளம் கிடைப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்; பேரவைத் தலைவர் அவர்களே, அரிசி வழங்குதலைப் பற்றி நான் உணவு மானியக் கோரிக்கை வந்தபோது, அதுபற்றி விளக்கமாக எடுத்துச் சொன்னேன். ஆகவே ஒரு மாதத்திற்கு முன்பாலே நாம் மொத்தமாக கொடுத்த நிலை இல்லாமல், அவ்வப்போது கொல் முதல் செய்து அரவை செய்து கடைகளுக்கு அனுப்ப வேண்டிய தன்மைகள் இருப்பதன் காரணமாக, முழுமையாக கொடுக்க முடியாத சூழ்நிலையும் ஏற்படுகிறது. ஆகவே 1 மாதத்திற்கு 2 தடவை, 3 தடவை இப்படி பங்கிட்டுக் கொடுக்கக்கூடிய நிலைமைகள் ஏற்படுகிறது. சர்க்கரை, கோதுமை, மைதா, ரவை, பாமாயில் போன்றவைகள் மத்திய அரசு எப்போதைக்கப் போது ஒதுக்கீடு செய்து தருகிறதோ, அவ்வப்போது தர வேண்டியது மட்டுமல்லாமல், எவ்வளவு தருகிறதோ, அதை வைத்துத்தான் நாம் பங்கீடு செய்யவேண்டிய அவசியம் இருக்கிறது. இவற்றையெல்லாம் நான் இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லி இருப்பதைப்போன்று, அவர்கள் கூடுதலாக வழங்க வேண்டும் என்று கோரிக்கையை நாம் தொடர்ச்சியாக வைத்துக் கொண்டுதான் வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று சிலபல இடங்களிலே கடைகள் மூடப்படுவதற்கான நிலைமைகள், நடவடிக்கைகள் எடுப்பதன் மூலமாகவோ, அவர்கள் விட்டுவிடுவதன் மூலமாகவோ ஏற்படுகின்ற நிலைமைகள் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதை உடனடியாகக் கவனித்து அந்தக் கடைகள் எப்படியும் இயங்கச் செய்யவேண்டுமென்று பொதுவாக அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. குறிப்பாக சில கடைகள் மூடப்பட்டிருந்தால், தனியாக கவனித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



## நெல்லை மாவட்டத்தில் கட்ட அனுமதிக்கப்பட்ட மீனவர் குடியிருப்புகள்

*வினா எண். 568—திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்தில் 1981–1982, 1982–1983 ஆண்டுகளில் எத்தனை மீனவர் குடியிருப்புகள் கட்ட அனுமதிக்கப் பட்டன?

(ஆ) கட்டுவதற்கு ஆகும் செலவு உயர்த்தப்பட்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) 1975–76 ஆம் ஆண்டு முதல் 1982–83 வரை மீனவர்களுக்கு ரூ.680 இலட்சம் செலவில் 9,931 வீடுகள் கட்ட ஒப்புதலளிக்கப்பட்டது. நெல்லை மாவட்டத்தில் மட்டும் ரூபாய். 93,45,000 செலவில் 1,849 வீடுகள் கட்ட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

(ஆ) 1981-82–க்கு முன்னர் அனுமதிக்கப்பட்டு, கட்டுமானப் பணிகளுக்கு எடுத்துக்கொள்ளப்படாத வீடுகளுக்கு, வீடுகள் கட்டுவதற்கு ஆகும் செலவு கீழ்க்கண்டவாறு உயர்த்தப் பட்டுள்ளது:—

| | ரூபாய். |
|---|---|
| (1) 237 சதுர அடி கொண்ட வீட்டிற்கு கட்டுவதற்கு ஆகும் செலவு. | 9,850 |
| (2) 207 சதுர அடி கொண்ட வீட்டிற்கு கட்டுவதற்கு ஆகும் செலவு. | 9,460 |

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 575 முதல் 578 வரை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க எடுத்துக்கொள்ளப் பெறுகின்றன.

## போக்குவரத்தில் ஒரு பேருந்தை ஒரு கிலோ மீட்டர் தூரம் இயக்க ஆகும் செலவு.

*வினா எண். 575—திரு. கே. நாராயணசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்தில் ஒரு பேருந்தை இயக்குவதற்கு ஒரு கிலோ மீட்டருக்கு எவ்வளவு செலவு ஆகும்?

(ஆ) சராசரி பராமரிப்பு மற்றும் இயக்கச் செலவு தொகை என்ன?

[1983 மார்ச் 28

(இ) நாளொன்றுக்கு சுமார் 400 கிலோ மீட்டர் ஓடும் பேருந்துக்கு எவ்வளவு வசூலானால் இலாபகரமான சர்வீஸ் என்று கருதப்படும்?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** (அ) 329 பைசா.

(ஆ) பராமரிப்புச் செலவு 182.3 பைசா. இயக்கச் செலவு 146.8 பைசா.

(இ) ரூ.1,316-க்கும் அதிகமான தொகை வசூலாகப் பெறவேண்டும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பேருந்தை இயக்குவதற்கு எத்தனை தொழிலாளர்கள் இன்று வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்? ஏற்கனவே அரசு வைத்திருக்கும் தொழிலாளர்களுடைய எண்ணிக்கைக் குறைவாக இருப்பதன் காரணமாக பல வழித்தடங்களில் பேருந்துகள் ஓடாமல் இருக்கக்கூடிய நிலைமைகள் அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பேருந்துக்கு 7½ நபரை வைத்திருக்க வேண்டும். அந்த வகையிலேதான் இப்போது நாம் வைத்து இயக்கிக் கொண்டு வருகிறோம். சில இடங்களில் சில நாட்களிலே தொழிலாளர்களுக்கு ஏதாவது விடுப்பு வேண்டுமென்ற காரணத்தால் அவர்கள் ஏதாவது ஒரு சூழ்நிலையின் காரணமாக வராமல் விட்டுவிட்டால் அப்படிப்பட்ட பேருந்துகள் மட்டும் இயங்காமல் இருக்கும். அதுவும்கூட ஒரு மணி நேரம், 2 மணி நேரம் காலதாமதமாக இருக்குமேயொழிய மொத்தமாக இயக்கப் படாமல் இருப்பதில்லை.

**திரு. உ. சுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அரசு போக்குவரத்துத் துறைக்கு ஏற்படுகின்ற செலவுக்கும் தனியார் போக்குவரத்திலே ஏற்படுகின்ற செலவுக்கும் வித்தியாசம் இருக்கிறதா, அப்படியிருந்தால், அரசுத் துறைகளிலே கூடுதலாக இருந்தால், அதற்கான காரணம் என்ன?

(முற்பகல் 9-10)

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, நிச்சயமாக வித்தியாசம் இருக்கிறது. நம்முடைய போக்குவரத்துக் கழகத்திலே இயக்கப்படுகின்ற பேருந்துகளுக்கு அதிகமாகச் செலவாவதற்குக் காரணம் நாம் அதிகமான எண்ணிக்கையில் தேவையான அளவிற்குத் தொழிலாளர்கள் வைத்து இருக்கிறோம். 7½ நபர்கள் ஒரு பேருந்துக்கு என்று வைத்து இருக்கிறோம். சட்டப்படி வைக்க வேண்டிய அளவிற்கு வைத்து இருக்கிறோம். தனியார் பேருந்துகளில் 4 பேரை வைத்துக்கூட இயக்கிவிட முடிகிறது. இப்படிப்பட்ட நிர்வாகச் செலவுகளை நாம் தொழிலாளர்கள் வசதி கருதி செய்கிற காரணத்தால் சிலபல காரணங்களால் இப்படிப்பட்ட செலவு அதிகமாக இருக்கிறது.



1983 மார்ச் 28]

### சென்னை திண்டிவனம் பகுதியில் ஏற்படும் விபத்துக்களைத் தடுக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்.

*வினா எண். 576—**திரு. எஸ். டி. உகம்சந்த்:** மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை—திண்டிவனம் பகுதியில் அதிகாலையில் விபத்துக்கள் அதிகமாக நிகழ்வதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

(ஆ) விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக மருத்துவ வசதி அளிக்க தனியாக ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** (அ) சென்னை மாநகர், செங்கல்பட்டு கிழக்கு, செங்கல்பட்டு மேற்கு, தென்ஆற்காடு ஆகிய மாவட்டங்களிலுள்ள காவல்துறை அதிகாரிகள் போக்குவரத்து விதிகளைக் கண்டிப்புடன் செயலாக்கும்படி அவர்களுடைய சார்நிலைப் பணியாளர்களுக்குக் கட்டளையிட்டுள்ளனர்.

விபத்தில் காயமுற்றோருக்கு முதலுதவி அளித்தும், விபத்து நடந்த இடத்திலிருந்து காயமுற்றோரை மருத்துவமனைக்கு உடனடியாக எடுத்துச் செல்லவும் காவலர்கள் உடனடியாக ஆவன செய்கின்றனர். இம்மாநிலத்திலுள்ள மருத்துவமனைகளில் செயல்படுகிற விபத்து-சிகிச்சை மருத்துவப் பிரிவுகள், பெரும் அளவுக்குப் பயன்படுகின்றன.

**திரு எஸ். டி. உகம்சந்த்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாலை 2 மணி முதல் 5 மணி வரையில் போக்குவரத்தை நிறுத்துவதற்கு அரசு ஆலோசனை செய்யுமா? ஏனென்றால், அந்த நேரத்தில் தான் விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றன. ஆகவே, அதைச் செய்ய அரசு ஆலோசனை செய்யுமா? அதேபோன்று இந்த விபத்துக்களைத் தடுப்பதற்கு ஆங்காங்கு மொபைல் பார்ட்டிகளை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக அந்த வழித்தடத்தில் மொபைல் பார்ட்டி அமைக்க வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. விரைவாக அது நிறைவேற்றப்படும். ஆனால் எந்தெந்த நேரத்தில் போக்குவரத்துக்களை நிறுத்துவது என்பதைப்பற்றி இன்னும் முடிவு எடுக்கவில்லை. உறுப்பினரின் ஆலோசனையைப் பார்த்து, அதைப்பற்றி யோசித்து முடிவு எடுக்கலாம்.

[1983 மார்ச் 28

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோன்று விபத்துக்கள் எல்லாம் ஏற்படுவதற்குக் காரணம், ஆங்காங்கு பழுது அடைந்து நின்று விடுகின்ற லாரிகளால் தான் அதிகமாக ஏற்படுகின்றன. ஆகவே, அது போல் பழுதடைந்து நிற்கும் லாரிகளையோ, பேருந்துகளையோ உடனடியாக அப்புறப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கைகள் எடுக்குமா? அதைப் போன்று அந்தச் சாலையையும் அகலப் படுத்த அரசு பரிசிலனை செய்யுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் சாலையைப் பற்றிக் கேட்பது சம்பந்தமில்லாதது. ஆகவே, போக்குவரத்தைப் பற்றி மட்டும் சொல்லி நிறுத்திக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே சில இடங்களில் வாகனங்கள் பழுதடைந்து நின்று விடுகின்றன. அதையெல்லாம் அப்புறப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்க முடியாது. அது அரசுக்கு சாத்தியமானதும் அல்ல. இருந்தாலும், அதை ஓட்டுநர்களே பார்த்து. இந்த விபத்துக்கள் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இதிலே, அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் சூழ்நிலை எதுவும் இல்லை.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த போக்குவரத்து விபத்துக்களைத் தடுப்பதற்கு—பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், அமைச்சர் போன்றவர்கள் விபத்தில் இருந்து தப்பிப்பதற்கு—அமைச்சர் அவர்களே, ஒரு விபத்தில் இருந்து தப்பித்து வந்து இருக்கிறார்—ஏதாவது சிக்னல் வசதிகள் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப் படுமா?

மாண்புமிகு திரு. சு முத்துசாமி: தலைவர் அவர்களே, ஏதோ நான் தப்பித்துப் பிழைத்து வந்ததாக உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை எதுவும் ஏற்பட்டு விடவில்லை. அதற்காக தனியாக சிக்னல் எதுவும் போட வேண்டிய அவசியம் இல்லை. எல்லோருக்கும் பாதுகாப்புத் தேவை என்று தான் அரசு கருதுகிறது.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அதிகமான விபத்துக்கள் ஏற்படுவதற்குக் காரணம், நம்முடைய ஆர்.டி.ஓ. ஆபீசில் எப்.சி. கொடுக்கின்ற நேரத்தில், கடைபிடிக்கப்பட வேண்டிய விதிகள் சரியாக கடைபிடிக்கப்படவில்லை என்று புகார் வருகிறது. ஆகவே விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றன என்றும் சொல்லப்படுகிறது. அதே போல், அதிகாலை 2 மணி முதல் 5 மணி வரை விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றன. அந்த நேரம் கடுமையான தூக்க நேரம் ஆகும். அந்த நேரத்தில் லாரிகள் நடமாட்டத்தைத் விர்க்ககவும், எப். சி. கொடுக்கிறபோது சரியான முறையில் விதிகள் கடைப்பிடிக்கப்படுவதற்கும் அரசு கண்டிப்பாக உத்தரவு பிறப்பிக்குமா?



1983 மார்ச் 28]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, புதிய வண்டிகள் கூடவிபத்துக்குள்ளாவதை நாம் பார்க்கிறோம். அதைப் போல தனியார் கார்களுக்குக்கூட விபத்து ஏற்படுகின்றது. இவை எல்லாம் எஃப். சி. சரியாகப் பார்த்துக் கொடுக்கபடாத தால் ஏற்படுகின்றன என்று சொல்ல முடியாது. இருந்தாலும் தவறு எங்காவது நடக்குமானால் அதைக் கண்காணித்து அரசு தக்க நடவடிக்கை எடுக்கும். அதிகாலை 2 மணி முதல் 5 மணி வரை வண்டிகளை நிறுத்தி வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதுபற்றி ஏற்கெனவே நான் சொன்னேன். அது பற்றி அரசாங்கம் சிந்தித்து, தகுந்த முடிவு எடுக்கும்.

அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளுக்கான கட்டணம்

*வினா எண். 577—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேருந்து கட்டணத்தை உயர்த்துமாறு மத்திய அரசு மாநில அரசை வற்புறுத்தி வருவது உண்மையா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: அரசுப் போக்குவரத்துக் கழகங்களினால் இயக்கப்படும் பேருந்து போக்குவரத்துச் செலவினங்கள் கூடுதலாகிவிட்டபடியால் அதனை ஈடுகட்டு வதற்கு இயலும் வகையில் பேருந்துக் கட்டணங்களைத் திருத்தி அமைக்கலாம் என்று மத்திய திட்டக் குழு ஆலோசனை கூறி வருகிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே, டீசல் போன்ற பொருள்களின் விலையேற்றத்தினால் கூடுதல் செலவு ஏற்படுகிறது என்று சொன்னார்கள். சமீபத்தில் எண்ணெய் உற்பத்தி செய்கிற நாடுகள் விலையை குறைத்துள்ளதால், அதன் காரணமாக கிட்டத்தட்ட 700 கோடி ரூபாய் மத்திய அரசுக்கு மிச்சம் ஏறபட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, அதிலிருந்து அரசு போக்குவரத்துக் கழகங்கள் வாங்குகின்ற டீசல் போன்றவைகளுக்கு மத்திய அரசு மானியம் வழங்கலாம்; அவர்கள் மானியம் வழங்க வேண்டும். அந்த வகையில் மத்திய அரசு மானியம் வழங்க மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தியிருக்கிறதா? இல்லை என்றால் இனியாவது வற்புறுத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, இதற்கு முன்பே டீசல் விலையை மத்திய சர்க்கார் குறைக்க வேண்டும் அல்லது அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு மானியம் கொடுக்க வேண்டுமென்று கேட்டபோது, அதற்கு இன்னும் எதிர்பார்த்த பதில் வரவில்லை. எனவே மீண்டும் வற்புறுத்துவதில் பயனில்லை என்று கருதுகிறோம்.

[1983 மார்ச் 28

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவரவர்களே, இந்த பேருந்து கட்டணத்தை ஏற்கனவே உயர்த்தி இருப்பதால் பயணிகள் கட்டணம் அதிகமாகச் செலுத்த வேண்டியிருக்கிறது. ஆகவே, மீண்டும் பரிசீலனை செய்து கட்டணத்தை உயர்த்தாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, மத்திய திட்டக்குழு சொல்கிறது என்றுதான் சொல்வேன், அரசாங்கம் அதுபற்றி முடிவு செய்யவில்லை. கட்டணத்தை உயர்த்தாமலிருக்க மறுபரிசீலனை செய்யுங்கள் என்று சொன்னார்கள். நாங்கள் கட்டணத்தை உயர்த்துவதுபற்றி சிந்திக்கவே இல்லை.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் 1982 செப்டம்பர் முடிய உள்ள சொகுசுப் பேருந்துகள்.

*வினா எண். 578—திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் செப்டம்பர் 1982 முடிய உள்ள சொகுசு பேருந்துகள் எத்தனை?

(ஆ) அவைகள் எந்தெந்த வழித்தடங்களில் ஓடுகின்றன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ); மற்றும் (ஆ) இதுபற்றி விவர அறிக்கை ஒன்று** பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. மு. அப்பாதுரை: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிற விவர அறிக்கையில் 118 வழித்தடங்களில் சொகுசு பேருந்துகள் சென்று கொண்டிருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். 14 ஸ்பேர் பஸ்கள் இருக்கின்றன என்றும் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு இந்த சொகுசு பேருந்துகளில் பயணம் செய்யும்போது தல பேருந்துகள் இடைவழியில் நின்று விடுகின்றன. நேற்றைக்கு முன் தினம் நான் பாண்டிச்சேரிக்குச் சென்றபோதுகூட இதைப் பார்த்தேன். அரைமணி இடைவெளியிலேயே அந்த பேருந்து திரும்பி வரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. இப்படி இடைவெளி குறைவாக இருப்பதால்தான் பழுது ஏற்பட்டு, வழியில் நிற்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது என்று ஓட்டுநர் சொல்கிறார். ஆகவே, பேருந்துகள் சரியாகப் பழுது பார்க்கப்பட்டு, இடைவெளி அதிகம் விட்டு, ஓட்டுவதற்கு அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

** 283 ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



1983 மார்ச் 28]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, இங்கே விபத்துக்களைப் பற்றி இப்போதுதான் பேசி முடித்திருக்கிறோம். அவற்றை மனதிலே கொண்டு ஒரு குறிப்பிட்ட வேகத்திற்கு மேல் பேருந்துகளை இயக்கக் கூடாது என்று உத்தரவிட்டிருக்கிறோம். கன்னியாகுமரிக்கு இங்கிருந்து ஒரு பேருந்து போகிறது என்றால் 3 அல்லது 4 மணி இடைவெளியில் அங்கிருந்து திரும்பி வரவேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த குறைந்த இடைவெளியில் தான் அது பழுது பார்க்கப்படவோ அல்லது பராமரிக்கப்படவோ வேண்டியிருக்கிறது. அதற்குள்ளாக சரியாக அதை பார்க்க முடியாது என்ற காரணத்தால் இந்த ஸ்பேர் பஸ்களை அதிகமாக வைத்துக் கொள்ள முடிவு செய்து, இப்போது ஏறத்தாழ 15 ஸ்பேர் பஸ்களை அளிக்கவேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறோம். ஒவ்வொரு பேருந்தும் வாரம் ஒருமுறை, வேலை இருந்தாலும் இல்லாவிட்டாலும் நிறுத்தி பராமரித்து அதற்குப் பின்னால் அனுப்ப வேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறோம்.

திரு. மு. அப்பாதுரை: தலைவரவர்களே, இந்த சொகுசுப் பேருந்துகள், பழுதுபட்டிருக்கும்போது அதில் வைத்திருக்கிற உதிரி பாகங்கள் அல்லது பழுது நீக்கக்கூடிய பாகங்கள் அதற்கு சம்பந்தம் இல்லாமல் இருக்கின்றன. நான் கூட ஒரு நாள் திருச்சியில் பார்த்தேன். ஏற்பட்ட பழுதை நீக்குவதற்கு முயற்சி செய்தபோது, அதிலே இருந்த ஜாக்கி பொறுத்த முடியாமல் இருந்தது. இப்படிப்பட்ட பிரச்சனைகள் இருக்கின்ற காரணத்தால் எந்த எந்த பேருந்துகளுக்கு எப்படிப்பட்ட பாகங்களைப் போட வேண்டுமென்று பார்த்து, அந்தப் பாகங்களை வைக்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: தலைவரவர்களே, இப்போது அப்படிப்பட்ட முறையிலே பொருத்தமான பாகங்கள் வைக்கப் பட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இப்படி ஒன்றிரண்டு பேருந்துகளில் தவறு நடந்திருந்தால் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கலாம். இந்த நிகழ்ச்சி ஏற்பட்டவுடன் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்க உதவியாக இருந்திருக்கும். இப்போது சொல்லியிருக்கிறார்கள், நன்றி. அது உடனடியாகக் கவனிக்கப்படும்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் 118 வழித்தடங்களில் சொகுசு பேருந்துகள் ஓடுவதாகச் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு தமிழ்நாட்டில் தனியார் 'ஆம்னி பஸ்கள்' என்ற பெயரால் பல நூற்றுக்கணக்கான பேருந்துகளை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக அரசாங்கத்தினுடைய சொகுசு பேருந்துகளுக்கு வருமானம் குறைவது மட்டுமல்ல; அரசாங்கம் பேருந்துகளை நட்டத்தில் ஓட்டக்கூடிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, தனியார் நடத்துகின்ற ஆம்னி பஸ்களை.......

[1983 மார்ச் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர் கேள்வி திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைப் பற்றியது. மூலக் கேள்விக்கும் நீங்கள் கேட்பதற்கும் சம்பந்தம் இல்லை.

தென்னாற்காடு மாவட்டத்தில் 2 வது நிலக்கரி சுரங்கத்திற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட வீடு மற்றும் நிலம் போன்ற உடைமைகள்.

*வினா எண்.569—திரு. பம்மல் நல்லதம்பி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் அஜிஸ்நகர் செட்டில் மெண்டில் வசிக்கும் குற்ற மரபினர்களின் வீடு, நிலம் போன்ற அசையா உடைமைகளை 2-வது நிலக்கரி சுரங்கத்திற்கு எடுத்துக் கொண்டதால் அவர்களின் உடைமைகளுக்கு நட்டஈடு மற்றும் புனர்வாழ்வு அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) மற்றும் (ஆ) ஆம். 2—வது நிலக்கரிச் சுரங்கத்திற்காக அஜிஸ்நகர் செட்டில் மெண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள குற்ற மரபினரின் வீடு மற்றும் நிலங்களுக்கு நஷ்ட ஈடு மற்றும் புனர்வாழ்வு அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. நஷ்டஈட்டுத் தொகையை அரசே அஜிஸ்நகர் மக்களுக்கு கொடுத்துவிட்டு, அதனை பிறகு நெய்வேலி நிலக்கரி கழக நிறுவனத்திடமிருந்து அரசு பெற்றுக் கொள்ளலாமா அல்லது நெய்வேலி நிலக்கரி கழக நிறுவனத்தினரையே நஷ்ட ஈட்டுத் தொகையை கொடுக்கச் சொல்லலாமா என்பது பற்றி சட்டத் துறையுடன் இவ்வரசு பரிசீலித்து வருகிறது.

(முற்பகல் 9-20)

திரு. எல்.இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அஜிஸ்நகர் என்பது 100 ஆண்டுகளுக்கு முன்பு குற்றப்பரம்பரையினரை மதுரை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய பகுதிகளிலிருந்து கொண்டு வந்து குடியேற்றப்பட்ட இடம். அவர்களுக்கு ஆதிதிராவிடர் நலத் துறையில் இருந்து ஹைஸ்கூல், வீடுகள் எல்லாம் கட்டிக் கொடுக்கப்பட்டது. சிலர் தாங்களே சம்பாதித்து சொத்துக்கள் வாங்கினார்கள். அந்த இடத்தைப் பொறுத்தவரையில் செட்டில் மெண்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆகியும் கூட ரெவின்யூ அதிகாரியிடம் சொன்னதற்குப் பிறகும் இதுவரை எந்தவிதமான நஷ்டஈடும் கொடுக்கவில்லை. அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கின்ற வகையில் அவர்களுக்கு வேலையும் கொடுக்கவில்லை. இவற்றையெல்லாம் அரசாங்கம் உடனடியாகக் கவனித்து அவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கின்ற வகையில் வேலைவாய்ப்பு அளிப்பதற்கும், அவர்களுக்கு மார்க்கெட் ரேட் பிரகாரம் நஷ்டஈடு கொடுப்பதற்கும் அரசாங்கம் உத்தரவிடுமா?



1983 மார்ச் 28]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் குற்றப்பரம்பரையினர் என்பதால் அவர்கள் குற்றம் செய்யாமல இருக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் அவர்களுக்குப் புனர் வாழ்வு அளிக்க வேண்டும் என்பதற்காகத்தான் அங்கே முதலில் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. ஆனால் எதிர்பாராத விதமாக அந்த இடத்திலே நிலக்கரி இருக்கின்றது என்பது தெரியவந்ததால் அவர்களை அப்புறப்படுத்த வேண்டிய கட்டாயத்திற்கு வந்தார்கள் அப்படிப்பட்ட 369 குடும்பங்களில் 225 குடும்பத்தினருக்கு நெய்வேலி நிலக்கரி சுரங்கத்திலும் மற்றும் இதர அரசு நிறுவனங்களிலும் வேலை கொடுக்கப்பட்டு இருக்கின்றது. மற்றவர்களுக்கும் விரைவிலே வேலை கொடுப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். நஷ்டஈடு கொடுப்பதைப் பொறுத்தவரையில் நேரடியாக நெய்வேலி நிலக்கரி நிறுவனம் கொடுத்துவிடுவதா அல்லது அரசாங்கம் வாங்கி அதை அவர்களுக்குக் கொடுப்பதா என்பதில் ஒரு சிக்கல் இருக்கின்றது. அதுபற்றி சட்டத்துறை ஆலோசனை செய்து விரைவில் கொடுக்க ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

முனிசிபல் நகரங்களில் தனிநபர் வைத்திருக்கும் வீட்டு மனை நிலங்களுக்கான உச்சவரம்பு

*வினா எண். 570—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முனிசிபல் நகரங்களில் தனிநபர் வைத்திருக்கும் வீட்டுமனை நிலங்களுக்கு உச்சவரம்பு விதிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் ஒருவர் வைத்துக்கொள்ள அனுமதிக்கப் பட்டுள்ள பரப்பு எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்பகுதி நில (உச்சவரம்பு கட்டுதல்—முறைப்படுத்துதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 24/78) சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பளளி, திருநெல்வேலி ஆகிய நகர் கூட்டுப் பகுதிகளில் மட்டும் 3—8—1976 ஆம் ஆண்டு முதல் செயலிலுள்ளது.

(ஆ) கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நகர் கூட்டுப் பகுதி ஒவ்வொன்றிலும் தனிப்பட்ட நபர் நிலம் வைத்து வர அனுமதிக்கப் பட்ட உச்சவரம்பின் விவரம் பின்வருமாறு :—

தமிழ்நாடு சட்டம் 24/78

| நகர் கூட்டுப் பகுதி. | வகைப்பாடு. | தனிப்பட்ட நபர் ஒருவர் |
|---|---|---|
| சென்னை | I | 500 ச. மீ. |
| மதுரை | II | 1500 ச.மீ. |
| கோயம்புத்தூர் | | |
| சேலம் | | |
| திருச்சிராப்பள்ளி | III | 2,000 ச. மீ. |
| திருநெல்வேலி | | |

[1983 மார்ச் 28

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, எனது கேள்விக்கு, முனிசிபல் நகரங்களில் தனிநபர் வைத்திருக்கும் வீட்டு மனை நிலங்களுக்கு உச்சவரம்பு விதிக்கப்பட்டுள்ளதா என்ற கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் நேரத்தில் சென்னை, கோவை, மதுரை, சேலம், திருச்சி, திருநெல்வேலி ஆகிய நகரங்களுக்கு மட்டும் இந்தச் சட்டம் பொருந்தும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது ஒவ் வொரு முனிசிபல் நகரத்திலும் குறிப்பாக சோவி பட்டியில் ஒரு க்ரவுண்ட் ரூ. 25,000 லிருந்து ரூ. 50,000 வரை உயர்ந்து கொண்டு இருப்பதால் சாதாரண ஏழை எளிய நடுத்தர வகுப்பு மக்கள் சொந்தமாக வீடு கட்டிக் கொள்ளும் எண்ணத்தையே கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே எல்லா முனிசிபல் நகரங்களுக்கும் இந்தச் சட்டத்தை விஸ்தரித்து, இந்த உச்சவரம்புச் சட்டத்திற்கு மேல் அதிகமாக இருக்கக் கூடிய வீட்டு மனை நிலங்களை எடுத்து ஏழை எளிய மக்களுக்கு மலிவான விலையில் கொடுப்பதற்கு வேண்டிய ஆலோசனை அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் முதலிலேயே தெரிவித்தபடி சென்னை மாநகரம், மதுரை மாநகரம், கோவை மாநகரம், சேலம், திருச்சி, திருநெல்வேலி இவற்றில் மட்டும்தான் இந்த உச்சவரம்பு கொண்டுவரப் பட்டிருக்கிறது. மற்ற இடங்களுக்கு கொண்டுவருவதா இல்லையா என்பது கொள்கை பற்றிய விளக்கமாகும். ஆகவே அதுபற்றி கேள்வி நேரத்தில் சொல்வதற்கில்லை என்பதை இதற்கு முன்னாலே தெரிவித்திருக்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை உடனடியாக எல்லா முனிசிபல் நகரங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்பது மட்டுமல்லாமல், இப்போது இருக்கிற நிலையில் சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம், நெல்லை ஆகிய இந்த நகரங்களில் கூட இந்தச் சட்டம் சரிவர அமல் நடத்தப்படவில்லை என்ற புகார் இருந்து வருகிறது. உச்சவரம்பிற்கு மேல் உள்ள வீட்டு மனை நிலங்களை எடுத்து வீட்டு மனை இல்லாதவர்களுக்கு, குறைந்த வருமானம் உள்ள வர்களுக்கு மலிவான விலையில் கொடுக்க நடவடிக்கை எடுக்கப் படுமா? மற்ற முனிசிபல் நகரங்களுக்கும் இந்தச் சட்டத்தை விஸ்தரிப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, கேள்வியின் இரண்டாவது பகுதிக்கு நான் முன்பே பதில் அளித்துவிட்டேன். முதல் பகுதிக்கு, எங்கெங்கே தவறுகள் நடக்கின்றனவோ அவற்றை அரசாங்கம் கண்டுபிடித்து நட வடிக்கை எடுக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அப்படி ஏதாவது தகவல் இருந்தால் அதைச் சொன்னால் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். தவறு இல்லாமல் பார்த்துக்கொள்ள அரசுக்குத் தெரிந்தாலும் முயற்சி செய்யும்.



1983 மார்ச் 28]

திரு. எஸ். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது விரைவில் என்று சொன்னார்கள். இந்த அர்பன் லாண்ட் சீலிங் சம்பந்தமாக ஒரு குழு இருக்கிறது. அந்தக் குழு எடுத்த நடவடிக்கைகள் என்ன? இப்போது கூட சென்னையில் இந்த உச்சவரம்பு சம்பந்தமான நிலைமையை வேகமாகச் செய்ய முடியாத நிலை இருக்கிறது. அதற்கு காரணம் என்ன என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, வேகமாகத்தான் நடைமுறைப்படுத்தி வருகிறோம். இதை விட வேகமாகச் செய்ய வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும் என்று சொன்னால் அதைச் செய்யத் தயாராயிருக்கிறோம்.

திரு. கோவைத்தம்பி : தலைவர் அவர்களே, கோவை மாநகரத் திற்கு உட்பட்ட பகுதிகளில் தொழிற்கூடங்கள் நிறைய இருக் கின்றன. இந்த உச்சவரம்புச் சட்டத்தினால் அந்தத் தொழிற் கூடங்கள் பாதிக்கப்படுமா? அப்படிப் பாதித்தால் சுகாதாரக் கேடுகள் வர வாய்ப்பிருக்கும். அரசாங்கம் இதற்காக ஒரு புதிய திட்டத்தை வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே நில உச்சவரம்புச் சட்டத்திற்கு முன்னால் தனிப் பட்ட நபர்களும், தொழிற்கூடமும் தர்மசொத்துக்களும் எல்லாம் ஒன்றாகத்தான் மதிக்கப்படுகிறது. அதிலே பாகுபாடு இல்லை. ஆனால் தொழிற் கூடங்கள் அவர்களுடைய தொழிலை அபி விருத்தி செய்யவேண்டுமென்று முறையாக அதற்கு மனுக்கள் செய்தால், வரைபடமும் போட்டு என்ன தொழில் செய்யப் போகிறார்கள், அதற்கு அவர் களிடத்தில் என்ன பொருளாதார ஆதாரங்கள் இருக்கின்றன என்பதையெல்லாம் சொன்னால் உடனடியாக அரசாங்கம் அனுமதிக்கிறது. அனுமதித்து விட்டால் பிறகு பேசாமல் இருந்துவிடுவார்கள் என்பதற்காக இரண்டு ஆண்டுகளுக்குள் அதைச் செய்து முடிக்கவேண்டும், ஆறு மாதத்திற்கு ஒரு தடவை என்ன செய்திருக்கிறார்கள் என்று சொல்லவேண்டும். இதைச் சொல்லாமல் இருந்தாலும் எந்த நேரத்தில் வேண்டுமென்றாலும் கொடுக்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்படும்.

திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, இந்த நகர்ப் புற நிலங்களுக்கான உச்சவரம்புச் சட்டம் சென்னை, கோவை, திருச்சி போன்ற நகரங்களில் அமுலாகியிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்தச் சட்டத்தின்படி திருச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் எவ்வளவு நிலம் அதிகமாக இருப்பது எடுக்கப்பட்டது அது எப்படி விநியோகிக்கப் பட்டது என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தனித்தனியாக ஒவ்வொரு நகரத்திலும் எவ்வளவு எடுக்கப் பட்டது, எப்படி அளிக்கப்பட்டது என்ற விவரங்கள் என்னிட மில்லை. தனிக் கேள்வி போட்டால் தருகிறேன்.

[1983 மார்ச் 28

தமிழகத்தில் உற்பத்தியாகும் காப்பி, தேயிலை

*வினா எண். 529.—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழகத்தில் தற்பொழுது உற்பத்தியாகும் காப்பி தேயிலையின் அளவு என்ன?

(ஆ) வெளிநாடுகளுக்கு அவை ஏற்றுமதி செய்யப்படுகிறதா?

(இ) ஆம் எனில் அதன் மூலம் கிடைக்கும் வருவாய் எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ)

| | 1981. | 1982 (அக்டோபர் வரை). |
|---|---|---|
| (i) காப்பி (பதப்படுத்தப்பட்டது) | 12,606 டன்கள் | 11,803 டன்கள். |

| | 1981 | 1982 (நவம்பர் வரை). |
|---|---|---|
| (ii) தேயிலை (பதப்படுத்தப்பட்டது) | 71,595 டன்கள். | 65,636 டன்கள். |

(ஆ) ஆம்.

(இ) 1981 ஆம் ஆண்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட காப்பிக் கொட்டையின் மதிப்பு ரூ. 384 இலட்சம் ஆகும். 1981 ல் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் மதிப்பு விவரம், 1982-ல் ஏற்றுமதி செய்யப்பட்ட காப்பிக்கொட்டை மற்றும் தேயிலை ஆகியவற்றின் மதிப்பு பற்றிய விவரங்களும் காப்பி மற்றும் தேயிலை வாரியங்களால் தமிழகத்திற்கென தனியே சேகரிக்கப்படவில்லை.

(முற்பகல் 9-30)

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உற்பத்தி ஆகக்கூடிய காப்பி, தேயிலையினுடைய அளவுகள் பற்றியும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடியது பற்றியும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புவதெல்லாம், கிட்டத்தட்ட நம்முடைய இந்திய நாட்டிற்கு அதிகப்படியான அந்நிய செலாவணியை ஈட்டிக்கொடுக்கக்கூடிய பொருள்களாக காப்பியும் தேயிலையுமாக இருக்கிறது. இப்படி அந்நிய செலாவணியை ஈட்டிக்கொடுக்கக்கூடிய இந்தப் பொருள்களால், தமிழகத்திற்கு ஏதேனும் மத்திய அரசாங்கம் பங்கு கொடுக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.



1983 மார்ச் 28]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இது பற்றிய தகவல் இல்லை. ஆனால், இவைகளைப் பற்றி ஏற்றுமதி போன்றவைகளைக் கவனிப்பதற்கு தனியாக அமைக்கப்பட்டிருக்கக்கூடிய குழுவின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற வாரியங்கள் நடத்துகின்றன.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தேயிலையைப் பொறுத்த அளவில் கொச்சியிலே ஏலம் விடுகின்ற முறை அமுலில் இருக்கிறது. அப்படி கொச்சியில் ஏலம் விடுவதன் காரணமாக, வெளிநாட்டு கம்பெனிகள் கூட்டாகச் சேர்ந்து விலையைக் குறைக்கக்கூடிய நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதைத் தவிர்க்கக் கூடிய முறையில், ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலம் இந்தத் தேயிலை வியாபாரத்தை ஏற்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இது தனி வாரியத்தால் நடத்தப்படுகின்றது. இதுபற்றி நாம் அவர்களுக்கு ஆலோசனை சொல்ல முடியும். அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்து, ஏற்கனவே தேயிலை உற்பத்தியாளர்களால் என்னிடம் தெரிவிக்கப்பட்டது. அதுபற்றி நடவடிக்கை எடுக்க அரசு ஆலோசிக்கும்.

Research into Onion Cultivation.

*Q. No. 530 THIRU VEDACHANTHUR V. P. BALASUBRAMANIAM TAIRU C. GANESAN Will the Hon. the Minister for Agriculture be pleased to state.

(a) Whether any reserarch into Onion Cultivation has been under taken in this state; and

(b) if so the details thereof?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) நமது மாநிலத்தில் வெங்காயப் பயிரைப் பற்றிய ஆராய்ச்சி கோவை, பெரியகுளம் மற்றும் மதுரை ஆராய்ச்சி நிலையங்களில் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படுகிறது.

(ஆ) ஆராய்ச்சியின் பயனாக குறுகிய காலத்தில் அதிக விளைச்சல் தரக்கூடிய கோ. 1, கோ. 2, கோ. 3, மதுரை 1, மற்றும் கோ. 4 என்ற கலப்பின ரகம் வெளியிடப்பட்டன.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய ரகம் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதிக அளவிலே வெங்காய உற்பத்தி, இலைக்கருகல் நோய், சூரை நோய் ஆகியவற்றால் பாதிக்கப்படுவதுடன், அவை முழுக்க முழுக்கப் பயனற்றுப் போய்விடுகின்றன. மதுரை மாவட்டம், வேடசந்தூர், திண்டுக்கல் ஆகிய பகுதிகளில் கடந்த

[திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்] [1983 மார்ச் 28 ஆண்டில் இந்த வெங்காய உற்பத்தி இந்த நோய்களால் பெரிதும் பாதிக்கப்பட்டது. எனவே, இந்த நோய்களைத் தடுப்பதற்கு, இந்த நோய்களிலிருந்து காப்பாற்ற வெங்காய உற்பத்திக்கு சிறப்பான ஒரு ஆராய்ச்சிப் பிரிவு ஏற்படுத்த அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா காளிமுத்து : தலைவர் அவர்களே, ஆராய்ச்சியின் நோக்கமே பயிர்களுக்கு ஏற்படக்கூடிய நோய் களைப் பற்றி கண்டறிந்து, அந்த நோய்கள் எப்படி தாக்காமல் இருப்பது என்று கண்டுபிடிப்பதுதான். அந்த வகையில் தொடர்ந்து ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

திரு. சி. கணேசன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வெங்காய கொள்முதல் செய்து, ஏற்றுமதி செய்கின்ற நேரத்தில் கிட்டத்தட்ட ஒரு மாதத்தில் 10,000, 15,000 டன்கள் ஏற்றுமதி ஆகின்றது. இந்த ஏற்றுமதியைச் செய்கின்றவர்கள் தனியார்களாக இருக்கின்றார்கள். அப்படி தனியார் கையிலே இருப்பதை, அரசாங்கம் கைப்பற்றி, இந்த ஏற்றுமதியைச் செய்தால் 2,000 தாய்மார்கள் அதனால் பயனடைவார்கள். நல்ல லாபமும் கிடைக்கும். எனவே, இந்தக் கருத்தை அரசு கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே. வெங்காயம் போன்ற அழுகு பொருள்களை சேமித்து வைக்கக் கூடிய வசதியில்லை. அந்த வசதியைப் பெறுகின்ற வகையிலே, உலக வங்கி உதவியுடன், நம்முடைய விற்பனைக் கழக அங்காடி களில் சேமிப்பு கிடங்குகளைக் கட்டுவதற்கான திட்டம் வரை யறுத்து, அது மைய அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அந்தத் திட்டம் அமுலுக்கு வருகின்ற நேரத்தில், இதுபோன்ற முயற்சி களை மேற்கொள்ளலாம்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வெங்காயப் பயிருக்கு பயிர் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டத்தைத் தமிழகம் முழுவதும் அமுல்படுத்த அரசு பரிவுடன் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, பரிசீலிக்கும்.

### சின்னதாராபுரம் நகருக்கு அமராவதி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம்.

* வினா எண். 571—திரு. ப. செ. சென்னியமலை என்கிற கந்தசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சின்னதாராபுரம் நகருக்கு அமராவதி ஆற்றில் இருந்து குடிநீர் வழங்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) இது குறித்து அந்த ஊர் பொதுமக்கள் சார்பில் விண்ணப்பித்துள்ளார்களா?



1983 மார்ச் 28]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) பொதுமக்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னதாராபுரம் நகரம் அமராவதி ஆற்றின் ஓரத்தில் இருக்கிறது. ஆனாலும் அந்தப் பொதுமக்களுக்கு குடிதண்ணீர் வசதியில்லை. ஆகவே அதைக் கருத்தில் கொண்டு விரைவில் அந்தத் திட்டத்தை எடுத்து முடிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இந்த ஊர் தண்ணீர் கொடுப்பதற்காகப்பிரிக்கப்பட்ட வகையில் 6வது பிரிவில் உள்ளது 1982 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் சின்னதாராபுரம் 3வது குடியிருப்பாக மாற்றப்பட்டு உள்ளது. எனவே தண்ணீர் வழங்கு வதற்கான ஏற்பாடுகள் விரைவில் செயல்படுத்தப்படும். நிரந்தர திட்டம் செயல்படுத்தப்படும் வரையில், தற்காலிக நிவாரணத் திற்காக, அமராவதி ஆற்றில் ஆழ் வடிகுழாய் கிணறு ஒன்று அமைத்து அதிலிருந்து தண்ணீர் எடுத்து தற்போதுள்ள நீர்த் தேக்கத் தொட்டிக்குக் கொண்டு சென்று சின்னதாராபுரத்திற்குத் தண்ணீர் வழங்குவதற்கு விரைவில் வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

### தோட்டத் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்சக்கூலி நிர்ணயிப்பதற்கான குழு.

*வினா எண். 572. திரு. ஜே. ஹேமச்சந்திரன் மற்றும் திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தோட்டத் தொழிலுக்குக் குறைந்த பட்சக்கூலி நிர்ணயிப்பதற்கான குழு தமிழக அரசால் 1975க்குப் பிறகு அமைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் எந்தெந்த வருடங்களில் அமைக்கப் பட்டுள்ளது?

(இ) அக்குழுக்களின் பரிந்துரை மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

(ஈ) எந்தெந்த குழுக்களின் பரிந்துரை ள் வெளியிடப் பட்டிருக்கின்றது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ). 1975–ம் ஆண்டுக்குப் பிறகு மலைத்தோட்டத் தொழிலாளர் களுக்கு குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் கீழ் குறைந்த அளவு ஊதிய வீதங்களைத் திருத்தியமைப்பது பற்றி ஆலோசனை கூற அரசு 1982–ம் ஆண்டு ஜூலைத் திங்களில் ஒரு ஆலோசனைக் குழுவை அமைத்தது.

(இ) மேற்கண்ட குழுவின் பரிந்துரைகள் இன்னும் அரசுக்குக் கிடைக்கப்பெறவில்லை. பரிந்துரைகள் கிடைத்தவுடன் குறைந்த அளவு கூலி வீதங்களைத் திருத்தி அமைக்க நடவடிக்கை எடுக்கப் படும்.

(ஈ) இவ் வினாவிற்கு இடமில்லை.

[1983 மார்ச் 28

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நியமிக்கப்பட்ட, 1982 ஆம் ஆண்டு ஜூலைத்திங்களில் ஏற்படுத்தப்பட்ட குழுவிலே அங்கத்தினர்களை தேர்வு செய்வதற்கு மேற்கொண்ட அடிப்படைகள் என்னென்ன? தொழிற்சங்கங்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கும் இதில் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்று ஏதேனும் மனுக்கள் வரப்பெற்றதா? அப்படி என்றால் அதன் மீது என்ன முடிவு எடுக்கப்பட்டது? எந்தெந்த கிராப்ஸ் பயிர் செய்யும் தோட்டங்களுக்கு இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது—(குறுக்கீடு) அதாவது, இதில் கிராம்பு, தேயிலை போன்ற தோட்டத் தொழிலாளர்களும் சேர்க்கப்பட்டுள்ளனரா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: காப்பி, தேயிலை, ரப்பர் மற்றும் கொயினா போன்ற தோட்டத் தொழிலாளர் களுக்குக் குறைந்தபட்சம் ஊதியம் நிர்ணயிப்பதற்காக நியமிக்கப்பட்டது இது. அந்தக் குழுவினுடைய அறிக்கை 25—4—1983-க்கு உள்ளாக கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அடுத்து, யார் யாருக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்பது குறித்து அரசு பரிசீலனை செய்து, அதன் முடிவிற்கேற்ப பிரதிநிதித்துவம் தரப்படுகிறது. மாண்புமிகு ஹேமச்சந்திரன் அவர்களிடமிருந்தே தன்னை உறுப்பினராக சேர்த்துக் கொள்ளவேண்டும் என ஒரு மனு வந்தது—தன்னை என்றால் திரு. ஹேமச்சந்திரன் அவர்களையோ அல்ல—அவர்கள் சார்ந்திருக்கிற சி.ஐ.டி.யூ. சங்கத்திற்கு, பிரதிநிதித்துவம் வேண்டும் என்று மனு கொடுக்கப்பட்டது.. அதுவும் பரிசீலனை செய்யப்பட்டது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சி.ஐ.டி..யூ.விற்கு பிரதிநிதித் துவம் வேண்டும் என்று கேட்கப்பட்டதாக சொன்னார்கள்.. ஏற்கெனவே ரப்பர் தோட்ட தொழிலாளர்கள் பிரச்சினை குறித்தும் இதில் சேர்க்கப்பட்டிருப்பதன் காரணமாக, ரப்பர் என்பது பிரத்யேகமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் அதிக அளவில் உள்ள ஒரு தொழில் என்ற முறையில் அந்த தொழிலாளர்களுக்கு பிரதிநிதித்துவம் வேண்டும் என்று அந்த மனுவில் கேட்கப்பட்டிருந்தது. சி.ஐ.டி.யூ.வைச் சேர்ந்த சங்கம் என்ற காரணத்தினால்தான் அவர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்காமல் இருந்ததா?

மாண்புமிகு திரு. எஸ், இராகவானந்தம்: சி.ஐ.டி.யூ.வை ஒதுக்க வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு கிடையாது. இன்னும் சொல்லப்போனால், அவர்களிடம் மிக நெருக்கமாக இருக்க வேண்டும் என்றே நான் ஆசைப்படுகிறேன். பல குழுக்களில் அவர்களுக்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளவிரும்பு கிறேன்.



1983 மார்ச் 28]

திரு. ஏ. டி. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர் களுக்கு குறைந்தபட்சக் கூலியை நிருத்தியமைக்க என்று குழு அமைக்கப்பட்டுள்ளதா என்ற கேள்விக்கு, அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது குழு அமைக்கப்பட்டு 83-லே அதன் முடிவு அறிவிக்கப்படும் என்று கூறினார்கள். அந்தக் கமிட்டி நிர்ணயம் செய்யும் அந்தக் கூலியை தமிழக அரசால் நடத்தக்கூடிய தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும், அமுல்படுத்தும் வகையில் பொருந்துமா என்று அறியவிரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் பொருந்தும் வகையில்தான் அவர்கள் பரிந்துரையை வழங்குவார்கள்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, 1975லிருந்து 1982 வரைக்கும் சுமார் 7 வருட காலத்திற்கு அந்தத் தோட்டத் தொழிலாளர்களுடைய அடிப்படை சம்பளத்தை திருத்தியமைக்க ஒரு கமிட்டி இதுவரையில் போடப்படாமல் இருந்ததற்கு என்ன காரணம்? இரண்டு வருஷம் ஆனாலும் கூட, இது போன்ற குறைந்தபட்ச சம்பள விகிதங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று கோரப்படுகிற, தற்போதைய கால சூழ்நிலையில், இப்படி இதற்கென கமிட்டி அமைக்கப் படாததினால், மிகக் குறைந்த அளவே கூலி வாங்கும் இந்தத் தோட்டத் தொழிலாளர்கள், இப்போதுள்ள பயங்கரமான விலைவாசி ஏற்றத்தினால் பல சங்கடங்களுக்கு ஆளாக்கப் பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டு, அந்தக் கமிட்டியினுடைய சிபாரிசுகளைப் பெற்றதற்குப் பிறகு, அவைகளை நல்ல முறையில் பரிசீலித்து, அந்தச் சம்பளவிகிதத்தைத் திருத்தி உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தான் குறைந்தபட்ச ஊதியத்தை மாற்றி அமைக்கும் பழக்கம் இதுவரையில் இருந்து வந்தது. ஆனால் இப்போது 2 ஆண்டுகள் முடிந்தாலோ அல்லது வாழ்க்கைப் புள்ளி 50 உயர்ந்து விட்டாலே மாற்றி அமைக்கலாம் என்று முடிவு எடுத்து, அதற்கு ஏற்ப மிக விரைவாக ஏற்பாடு செய்துகொண்டு வருகிறோம். இந்தக் குழுவின் வேலை சற்று சுறுசுறுப்பாக நடக்கவேண்டும் என்பது இந்த அரசின் எண்ணம். எனவே அவர்களுக்கு கடிதம் எழுதியிருக்கிறோம். அடுத்த மாதம் 25–4–83-க்குள் கொடுத்துவிட வேண்டும் என்று. மானியக்கோரிக்கை வரும்போது நான் சொல்லத் தயாராக இருக்கிறேன். இதுவரையிலே குறைந்தபட்ச ஊதியம் மாற்றி அமைக்காத எல்லா துறையில் உள்ள தொழிலாளர்களுக்கும் 2 ஆண்டு முடிந்து இருக்குமானால் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயித்து அவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் கிடைப்பதற்கு குழு

அமைத்துவிடவேண்டும் என்று இந்த அரசு முடிவு எடுத்து இருக்கிறது என்பதை அட்வான்ஸாக இப்போதே சொல்லி விடுகிறேன் இது 6-ம் தேதி சொல்ல வேண்டியது.

திரு. பி. வின்சென்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டத் தொழிலாளர்களில் ரப்பர் தொழிலாளர்கள் சேர்க்கப்படாததற்கு அடிப்படைக் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேர்த்து இருக்கிறோம். ரப்பர் தோட்டத்துக்கும் உண்டு. காப்பி, தேயிலை, ரப்பர் இவைகளையும் சேர்த்து இருக்கிறோம். (குறுக்கீடு) எல்லாத் தொழிலாளர்களுக்கும், ரப்பருக்கும் ரெப்பரசன்டேஷன் உண்டு. What do you mean by the representation in the minimum wages Committee? தொழிற்சங்கத்தலைவர் திரு. உமாநாத் அவர்கள் சகலகலாவல்லவர் என்று பொருள்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதை ஒத்துக்கொள்ளவில்லை.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திரு. உமாநாத் அவர்கள் அதை ஒத்துக் கொள்ளவில்லை என்றாலும் நாம் இரண்டு பேரும் போராடி இருக்கிறோம். டிரான்ஸ்போர்ட் பற்றி உங்களுக்கு தெரியும். சர்க்கரையைப் பற்றி உங்களுக்குத் தெரியும். மற்ற தொழில்களைப் பற்றியும் உங்களுக்குத் தெரியும். சி.ஐ.டி.யூ.சி.என்றால் அந்த டாப் லீடர்களுக்கு எல்லாம் தெரியும். ஏ.ஐ.டி.யூ.சி. இதிலே போட்டிருக்கிறோம். அந்த டாப் லீடர்களுக்கு எல்லாம் தெரியும். அண்ணா தி.மு.க. தொழிற்சங்க லீடராக நான் இருந்தால் எனக்கும் எல்லாம் தெரிந்து இருக்கவேண்டும், எல்லாம் தெரியும். அப்படி போட்டு இருக்கும்போது ஏ.ஐ.டி.யூ.சிக்கு தலைவர் ஒருவர் இருக்கிறார், அவருக்கு இந்த ரப்பரைப் பற்றித் தெரியும். ஒரு தடவை ஏ.ஐ.டி.யூ.சி., ஒரு தடவை சி.ஐ.டி.யூ.சி. அடுத்த முறை ஐ.என்.டி.யு.சி. இப்படி மாற்றி எல்லோருக்கும் இக்கியுட்டபிள் டிஸ்ட்ரிபுஷன் கொடுக்கிறோம். இந்தக் குழுவில் ஏ.ஐ.டி.,யூ.சி. தலைவர் இருக்கிறார்.

திண்டிவனம் நகரம் காவேரிப்பாக்கம் பகுதியில் கூடுதலாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம்.

*வினா எண். 573—திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் நகரம் முழுவதும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்க காவேரிப்பாக்கம் பகுதியில் கூடுதலாக ஒரு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம்எனில் எப்பொழுது முதல் அமுல்படுத்தப்படும்?





மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கிடமில்லை.

திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் மக்களைப் பயமுறுத்தி வருகிறது திண்டிவனம் குடிநீர்ப் பிரச்னை. இப்போது வாரத்திற்கு ஒரு முறை தண்ணீர் விடுகிறார்கள். ஒவ்வொரு வருடமும் மக்களின் தீராத பிரச்சனையாக இருக்கிறது இந்தக் குடிநீர்ப் பிரச்சனை. தொலைநோக்கோடு சாத்தனூர், நெய்வேலி அல்லது திருக்கோவிலூர் ஆற்றுப்படுகை இவற்றில் ஏதாவது ஒரு இடத்திலிருந்து தண்ணீர் கொண்டுவர திட்டம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் மக்களுக்குத் தண்ணீர் கொடுப்பதற்கு இடைநிலை மேம்பாட்டுத் திட்டங்கள் பல செய்யப்பட்டு இருக்கின்றன. இருந்தாலும் தண்ணீர் அங்கு போதுமானதாக இல்லை. எனவே 3 திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன. (1) பொன்னையாற்றின் குறுக்கே சாத்தனூர் அணைக்கட்டின் கீழ் ஆற்றின் மேற்பரப்பில் உள்ள நீரை நீர் ஆதாரமாகக் கொண்டு அனந்தபுரம், செஞ்சி மற்றும் திண்டிவனத்திற்குமான, கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான ஆய்வு வேலைகள் நடைபெற்று வருகின்றன. (2) அடுத்து, திருக்கோவிலூர் அணைக்கட்டிற்கு அருகில் பொன்னையாற்றில் நிலத்தடி நீரைக் கொண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைப்பதற்கான இரண்டாவது மாற்றுத் திட்ட ஆய்வு வேலைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. (3) மேலும் மூன்றாவது மாற்றுத் திட்டமான பண்ருட்டிக்கு அருகாமையில் கிடைக்கும் நிலத்தடி நீரைக் கொண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைப்பதற்கான ஆய்வு வேலைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. எந்த இடத்தை ஆதாரமாகக் கொள்வது என்பது இன்னும் முடிவாகவில்லை. இது முடிவு ஆனபிறகு திட்டத்திற்கு அரசு அனுமதி கொடுக்கும்போது, திட்ட அறிக்கை தயாரிக்கும்போது திண்டிவனத்திற்குத் தற்போதைய தேவையை முன்னிட்டு கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அவசியம் எனக் கருதப்பட்டால் கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றைத் தகுந்த இடத்தில் அமைக்க திட்ட அறிக்கையில் முன்னேற்பாடு செய்யப்படும்.

திரு. கே. எம். தங்கமணி: தலைவர் அவர்களே, திண்டிவனத்திற்கு இன்றியமையாத குடிநீர்ப் பிரச்சினையைக் கருத்தில் கொண்டு உடனடியாகத் தர அரசு பரிசீலனை செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன். எப்படியும் நல்லவகையில் குடிநீர் கொடுக்கவேண்டுமென்று ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்று வகையான திட்டங்கள் பரிசீலிக்கப்படுகின்றன எந்தத் திட்டம் மிக உபயோகமாக அந்த ஊருக்கு இருக்கும் என்று முடிவு எடுக்கப்படுகிறதோ அந்தத் திட்டத்தின் மூலமாக விரைவிலே குடிநீர் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

## துறையூர் வட்டம், சொரத்தூர் கிராமத்திற்குக் குடிநீர் வழங்கும் திட்டம்.

*வினா எண். 574—திரு. வெ. அரங்கராசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் துறையூர் வட்டம் சொரத்தூர் கிராமத்திற்குக் குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு?

(இ) பணி எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) முதல் (இ) வரை: இங்குள்ள அரிஜன காலனி பிரிவுக்குத் தன்னிறைவுத் திட்டம் இரண்டாம் கட்டத்தின் கீழ் 1983-84ல் குடிநீர் வசதியளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

401–650 வரை, 496, 497, 498, 576, 577—நீங்கலாக உடுக்குறியிடாத வினாக்களையும் விடைகளையும் தனி இணைப்பில் காண்க. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகளின் (ஆ) பிரிவில் இனம் 131 ஆக வைக்கப்பெற்றுள்ளது.

## 2. தகவல் கோரல்.

### (அ) பேரவை நடக்கும்போது கொள்கை அறிவிப்பை அமைச்சர் வெளியே தெரிவிப்பது.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிக்கடி தாங்கள் ரிப்பீட்டடாக ஒரு ரூலிங் கொடுத்திருக்கிறீர்கள். அவை நடக்கிறபோது கொள்கை சம்பந்தமான பிரச்சினைகளிலோ அல்லது அவையின் விவாதத்திற்கு உட்பட்ட பிரச்சினைகளிலோ—இவை சம்பந்தமாக ஏதாவது விஷயங்கள் இருந்தால்—அவைகளைப்பற்றி அரசாங்கத்தின் சார்பாக ஏதாவது சொல்லவேண்டுமென்றால் அதை இந்த அவைக்குள்ளேதான் சொல்லவேண்டும், அவைக்கு வெளியே சொல்லக்கூடாது என்று ரிப்பீட்டடாக டெஸிஷன்ஸ் கொடுத்திருக்கிறீர்கள். இந்த நுழைவுவரி சம்பந்தமாக அன்றைக்கு ரிப்ளை பண்ணுகிறபோது

*பேரவையில் 11.3.1983 அன்று தலைவர் அளித்த ஆணைக் கிணங்க *வினா எண். 375—க்கான விடையை இணைப்பு—11ல் காண்க,





சில அயிட்டங்களை எடுக்கிறோம் என்று கன்சஷன்ஸ் கொடுத்தார்கள், அதற்கு மேலே எங்களுக்கு வழியே இல்லை, அதனால்தான் போடப்படுகிறது என்று அவை முன்னவர் அவர்கள் சொன்னார்கள். நேற்றைக்கு பேக்கர்ஸ் அசோசியேஷனிலே— பத்திரிகையிலே வந்து இருக்கிறது—இன்டஸ்ட்ரீஸ் மினிஸ்டர் திரு. திருநாவுக்கரசு அதை மீறி பேசி இருக்கிறார். நான் அதை கோட் பண்ணுகிறேன். "Industries Minister Thiru S Thirunavukkarasu said the Government was examining exempting some more commodities from the proposed entry tax". இப்படி பாஸிட்டிவாக இன்னும் சில இனங்களுக்கு நீக்குவதற்கு அரசாங்கம் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. இது ஒரு புது டெவலப்மெண்ட். அதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். பூராவும் எடுக்கவேண்டுமென்றுதான் நாங்கள் சொல்கிறோம். இது ஒரு பாஸிட்டிவ் ஸ்டேட்மெண்ட். "Some more items will be exempted". நாங்கள் ஏதாவது மீறினால் எங்களை நீங்கள் 'சைட்' பண்ணுகிறீர்கள். நாங்கள் தங்களைக் கேட்டுக் கொள்வது, இண்டஸ்ட்ரீஸ் மினிஸ்டர்—Either you chide him or he must seek the apology of the house. இல்லையென்றால் நாங்கள் பலரும் மீறுகிறபோது you cannot control the house என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் அந்த மாநாட்டில் என்ன கூறினார் என்பது தெளிவாகத் தெரியவில்லை. பத்திரிகையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் பார்த்ததைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

திரு. ரா. உமாநாத்: ரேடியோவிலேயும் சொன்னார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நிதியமைச்சர் என்ற பொறுப்பிலேயும் வரித்துறையைப் பொறுத்தவரையிலேயும் பல பேர்கள் வர்த்தக சங்கங்கள் சார்பாகவும் மற்றவர்கள் சார்பாகவும் மகஜர்கள் கொடுத்துக்கொண்டிருக்கிறார்களே தவிர எந்த வரியையும் நீக்குவதாகவோ அதற்கான தன்மையிலேயோ எந்த முடிவையும் அரசு இன்னும் செய்யவில்லை. பல மகஜர்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள், அதைப் பரிசீலிக்கிறோம், பார்க்கிறோம் என்றுதான் சொல்கிறோமே தவிர எந்த முடிவையும் சொல்லவில்லை. அரசினுடைய பொஸிஷன் என்ன என்பதை விளக்குகிறேன். ஆனால் அவர்கள் மாநாட்டிலே என்ன சொன்னார்கள் என்பதைப்பற்றி அவர்கள்தான் விளக்கவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் கிளப்பிய பிரச்சினைக்கு அரசாங்கத்தினுடைய ஸ்டான்டை நான் சொல்கிறேன். அதைப்பற்றி எந்த முடிவும் எடுக்கவில்லை. பல பேர்களும் மகஜர்களைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள் பார்க்கிறோம், பரிசீலிக்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 மார்ச் 28

இறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம், எத்தகைய முடிவும் எடுக்கவில்லை. ஒரு முடிவுக்கு வந்து அதை வெளியே சொல்லிவிட்டார் என்ற நிலை அரசாங்கத்தைப் பொறுத்த வரைக்கும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: பொதுவாக மகஜர்களைப் பார்க்கிறோம் பரிசீலிக்கிறோம் என்று சொல்வது வேறு. ஆனால் இன்னும் சில அயிட்டங்களை நீக்குவதற்காக பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம் என்பது வேறு. Statement is a different one. அது ஜெனரல் ரிப்ளை. Certain items will be removed. It is under consideration, It is different என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் தற்போது அவையில் இல்லை. நான் அதை விசாரிக்கிறேன். வரி சம்பந்தப்பட்டவரையில் என்ன பேசினார் என்று தெரியவில்லை. நான் பத்திரிகையில் பார்க்கவில்லை, அமைச்சர் அவர்களைக் கேட்டுவிட்டு நாளைக்கு வேண்டுமானாலும் அவைக்கு பதில் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-50)

(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என தொகுதியில் அம்மை நோய் ரொம்ப கடுமையாகப் பரவியிருக்கிறது. ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது உரிய நேரத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

தமிழ்நாடு-கேரளா எல்லைப் பகுதியிலுள்ள கண்ணகி கோவிலில் சிலர் துர்க்கையம்மன் சிலையை வைத்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ப. நெடுமாறன், அ. ரகுமான்கான், க. பாரமலை, பெ. சு. திருவேங்கடம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற செ ரணம், என். வரதராஜன் மற்றும் திருமதி ஏ. எ . பொன்னம்மாள், ஆகியோர் "தமிழ்நாடு—கேரளா எல்லைப் பகுதியில் அமைந்திருக்கும் கண்ணகி கோவிலில் துர்க்கையம்மன் உருவத்தை சிலர் பிரதிஷ்டை செய்ததன் விளைவாக தமிழக மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.



1983 மார்ச் 28]

*திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், உத்தமபாளையம் தாலூகாவின் தெற்கு எல்லையில், தமிழ்நாட்டின் எல்லைக்குள்ளாகவே அமைந்திருக்கக்கூடிய மங்கலதேவி கோவில் என்று வழங்கப் படுகிற கண்ணகிக் கோட்டத்தில் சென்ற மார்ச் மாதம் 15-ம் தேதியன்று கேரளவாசிகள் சிலர் ஒன்றுகூடி அங்கே ஒரு துர்க்கை சிலையை பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். கேரளா விலிருந்து வரக்கூடிய "தீபிக" பத்திரிகை மிக விவரமாக இந்தச் செய்தியை சொல்லியிருக்கிறது. மற்றப் பத்திரிகைகளிலும் இச்செய்தி வந்திருக்கிறது. இதற்கு விழாக் குழுத் தலைவராக ஏ. எஸ். சுகுமாரன் அவர்கள், குமுளி வில்லேஜ் ஆபீசர் கே. மனோகரன், பீர்மேடு தாசில்தார், சர்க்கிள் இன்ஸ்பெக்டர் தாமஸ் ஆகிய கேரள உயர்தர அதிகாரிகளுடைய உதவியோடு இந்தப் பிரதிஷ்டை நடைபெற்றதாக அந்தப் பத்திரிகையில் சொல்லப்பட்டிருக்கிறது. இது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னை என்பதை நான் எடுத்து விளக்க விரும்பு கிறேன். ஏதோ ஒரு கோவிலில், ஏதோ ஒரு சிலையை பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள் என்ற அளவிலே நம் இந்தப் பிரச்னையைப் பார்க்கக்கூடாது. ஏற்கெனவே அந்தக் கோவில், கண்ணகி கோவில், அது தமிழகத்தைச் சார்ந்தது என்று பல ஆதாரங்களை எடுத்துக்காட்டி நம்முடைய அரசும், நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய பல்வேறு கட்சித் தலைவர்களும் எடுத்துச்சொல்லி வற்புறுத்தி வருகிறோம். இந்தப் பிரச்னை கேரள அரசிற்கும், தமிழ்நாடு அரசிற்கும் தகராறிற்குரிய பிரச்னையாக இன்னும் முடிவடையாமல் இருக்கிறது.

ஆண்டுதோறும் சித்ரா பௌர்ணமியன்று நம்முடைய தமிழ் நாட்டின் சார்பிலே மதுரை மாவட்டம், கம்பம் பகுதியில் இருக்கக் கூடியவர்கள் அங்கே சென்று கண்ணகி விழாவை சிறப்பாக இதுவரையில் நடத்தி வந்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு மே மாதம் 7, 8, 9 தேதிகளில் ஆண்டுதோறும் நடத்தப்படுகிற கண்ணகி விழாவை நடத்துவதற்கு நம்மவர்கள் அங்கே சென்றபோது கேரளா போலீஸ் தடுத்து நிறுத்திவிட்டது. நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கோபாலன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட ஒரு குழு, மறைந்த கம்பம் நடராஜன், நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட அந்தக் குழுவை கேரள போலீஸ் தடுத்து நிறுத்திவிட்டது. அங்கே தமிழர்கள் உள்ளே நுழைய முடியவில்லை. இந்தச் சூழ்நிலையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேரளா கவர்னருக்கு ஒரு தந்தி கொடுத்தார்கள். அதன் பின்னால் கோவிலுக்குச் சென்று வழிபாடு செய்வதற்குக் கேரளா அதிகாரிகள் அனுமதித்தார்கள். ஆனாலும் கண்ணகி சிலையை அங்கே பிரதிஷ்டை செய்வதற்கு அனுமதி மறுத்துவிட்டார்கள். இது சென்ற ஆண்டு நடைபெற்ற ஒரு விவகாரம். சென்ற ஆண்டு நம்மவர்கள் அங்கே கண்ணகி சிலையை பிரதிஷ்டை செய்ய அனுமதி மறுத்த கேரளா அரசு அதிகாரிகள், இந்த ஆண்டு அந்தக் கோவிலிலே துர்க்கை சிலையை கேரளா மக்களிலே சிலர் அதிகாரிகளுடைய துணையோடு சென்று அங்கே பிரதிஷ்டை செய்ததை எப்படி அனுமதித்தார்கள்?

அதற்கு இந்த அரசாங்கம் ஆட்சேபணை தெரிவித்ததா? இல்லையா? என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன். இந்தப் பிரச்னையை சாதாரண பிரச்னையாக நான் பார்க்கவில்லை. ஏற்கெனவே கண்ணகிக் கோட்டத்திலிருந்த கண்ணகி சிலையை பல ஆண்டுகளுக்கு முன்னாலே யாரோ சில சமூக விரோதிகள் உடைத்து நொறுக்கிவிட்டார்கள். அதற்குப் பிறகு புதிய சிலையை அங்கே நிர்மாணிப்பதற்கு தமிழர்கள் செய்த முயற்சியை கேரளா அரசாங்கம் அனுமதிக்கவில்லை. மூன்றாவதாக கண்ணகி சிலை இருந்தால் தானே இது கண்ணகிக் கோட்டம் அல்லது கண்ணகிக்கோவில் என்று தமிழர்கள் உரிமை கொண்டாடுவார்கள் என்ற காரணத்தாலே, அங்கே துர்க்கை சிலையை பிரதிஷ்டை செய்துவிட்டால் அது துர்க்கை கோவில் ஆகிவிடும். ஆகவே, இந்தப் பிரச்னையை நாம் இத்துடன் முடித்துவிடலாம் என்று நினைத்து திட்டமிட்டு இதை அவர்கள் செய்திருக்கிறார்கள். இதை நான் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்தக் கோயிலுக்கு வரலாற்று சிறப்புண்டு .சேரன் செங்குட்டுவனாலே இந்தக் கோயில் கட்டப்பட்டது. சிலப்பதிகாரத்தின் வஞ்சிக் காண்டத்திலே, வளம்பெருங் காதையிலே இதுபற்றி விரிவாகத் தகவல்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. இராஜராஜசோழனும் சுந்திரபாண்டியனும், விஜயநகர சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த பல மன்னர்களும் அந்தக் கோயிலுக்குப் பல்வேறு நைவேதியச் செலவுகளையும் மானியங்களையும் அளித்தார்கள். அதற்கான கல்வெட்டுச் சான்றுகள் இன்னமும் அங்கே, அந்தக் கோயிலிலே இருக்கின்றன. இந்த மன்னர்கள் காலத்திலே அந்தக் கோயில் சீரமைக்கப்பட்டது. இந்தியக் கல்வெட்டு ஆராய்ச்சித் துறையினர் இந்த ஆலயத்திலுள்ள கல்வெட்டுக்களை எல்லாம் ஆராய்ந்து, இது தமிழகத்திற்குத்தான் சொந்தம் என்பதற்கு ஆதாரம் தந்திருக்கிறார்கள். பல கல்வெட்டுகள் இன்றைக்கு இடமாற்றப் பட்டாலும், இரண்டு கல்வெட்டுகள் இன்னமும் அந்தக் கோயிலிலேயே இருக்கின்றன. முதலாவது இராஜராஜசோழன் காலத்துக் கல்வெட்டு ஒன்றும், குலசேகரபாண்டியன் காலத்துக் கல்வெட்டு ஒன்றும் இன்னமும் அந்தக் கோயிலிலேயே இருக்கிறது. இந்தச் சில கல்வெட்டுகளிலே மாசாத்துவான் என்ற சொற்றொடர் காணப்படுகிறது. மாசாத்துவான் என்ற சொற்றொடர் கோவலனின் குடும்பப் பெயரைக் குறிக்கிற சொல். ஆகவே, தமிழர்களுக்குள்ள உரிமை தெளிவாகப் புலனாகும் என்று நான் நம்புகிறேன்.

சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னால், இன்றைக்கு உத்தமபாளையம் தாலூகா என்று சொல்லப்படுகிற பகுதி சேர நாட்டு மன்னர் பரம்பரையைச் சேர்ந்த ஊமைப்பாரா தம்பிரான் ரவிவர்மா என்பவரால் ஆளப்பட்டபொழுது, அன்றைக்கு அவருக்கும் இராணி மங்கம்மாவுக்கும் நடைபெற்ற போரிலே ஒரு ஒப்பந்தம் 1782 ஆம் ஆண்டு ஏற்பட்டிருக்கிறது. அதற்குப் பல்வேறு சான்றுகள் எல்லாம் இருக்கின்றன. இந்த.



ஒப்பந்தத்தின்படி, இன்றைய உத்தமபாளையம் தாலூகா என்று சொல்லப்படுகிற பகுதியும் கண்ணகி கோயில் இருக்கிற அந்தப் பகுதிக்கு உட்பட்ட, அந்தத் தாலூகா பூராவும் தமிழ்நாட்டைச் சேர்ந்தது என்று முடிவு செய்யப்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலும் இந்த நிலவரம்தான் நீடித்தது.

சென்னை வருவாய்த்துறை இக்கோயில் அடங்கியுள்ள பகுதியை இருமுறைசர்வே செய்து, இக்கோயில் தமிழ்நாட்டைச் சேர்ந்ததுதான் என்று முடிவு செய்திருக்கிறது. அதேபோல, வனத்துறையினால் பராமரிக்கப்பட்டு வரும் வரைபடத்தில்—மேப்பில்—இந்தக் கோயில் தமிழ்நாட்டில்தான் இருக்கிறது என்பதற்குச் சான்றுகள் தெளிவாக எடுத்துச் சொல்லப் பட்டிருக்கின்றன.

கண்ணகிக் கோட்டம் தமிழகத்திற்குச் சொந்தம் என்பதற்கு ஆங்கில அரசின் ஆணை ஒன்றும் இருக்கிறது. 18 2 வருஷத்தில் மெட்ராஸ் பாரஸ்ட் 5-வது ஆக்ட், 18-வது செக்ஷன்படி மெட்ராஸ் ஸ்டேட் ஆக்ட் சர்வேயர் அவர்கள் கூடலூர் கிராமத்தார்களுக்கு அந்தக் கோயில் சொந்தம் என்று தெளிவாக ஒரு ஆணையைப் பிறப்பித்திருக்கிறார். அது பற்றிய விவரங்கள் எல்லாம் இருக்கின்றன. எடுத்துச் சொன்னால் அதிக நேரம் ஆகும் என்பதனால் ஆணையை மட்டும் சொல்கிறேன்.

பின்னாலே, 1975 ஆம் ஆண்டு ஏப்ரல் 18 ஆம் தேதி தமிழகத்தைச் சேர்ந்த நில அளவைப் பதிவேட்டுத் துறை இணை இயக்குநர் திரு. பி. கணேசன், பி.ஏ., எம்.ஐ.எஸ். அவர்களும் கேரள மாநில நில அளவைப் பதிவேட்டுத் துறைத் தலைவரும் ஆக, தமிழக, கேரள மாநில இரண்டு அதிகாரிகளும் இந்த எல்லைப் பகுதியில் கூட்டு சர்வே செய்து, கேரள எல்லையிலிருந்து 40 அடி தூரம் தமிழக எல்லைக்குள் கண்ணகி கோயில் அமைந்திருப்பதாக, கேரள நில அளவுப் பதிவேடுகள் துறையின் ஒப்புதலோடு தமிழக அரசுக்கு ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையைப் பற்றிய தஸ்தாவேஜுகள் இன்னமும் ஜாய்ன்ட் டைரக்டர் ஆப் சர்வே ஆபீஸில் பாதுகாப்பாக இருக்கிறது என்பதையும் அரசாங் கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். ஆக, இந்தப் பிரச்னையில், கொஞ்சமும் சந்தேகத்திற்கு இடமின்றி, இந்தக் கோயில் அமைந்திருக்கிற பகுதி தமிழகத்திற்குச் சொந்தம் என்பது நிலைநாட்டப்பட்டிருக்கிறது. ஆனாலுங்கூட, இன்றைக்கு வீணான சர்ச்சை கேரள மாநிலத்தைச் சேர்ந்த சிலராலே எழுப்பப்பட்டிருக்கிறது.

1975 ஆம் ஆண்டு இந்தச் சட்டமன்றத்திலே உறுப்பினராக இருந்த திரு. என். எஸ் கே. பி. கோபால்—கம்பம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இந்தப் பிரச்னையைச் சட்டமன்றத்திலே எழுப்பியிருக்கிறார். அதற்குப் பின்னால், ரெவினியூ போர்டு சேர்மனாக இருந்த திரு. அனந்தபத்மநாபன், ஐ.ஏ.எஸ்.

அவர்களும், மதுரை மாவட்ட கலெக்டர் திரு யூ.எஸ்.நடராஜன் ஐ.ஏ.எஸ். அவர்களும், அங்கே சென்று சர்வே செய்து இந்தக் கோயில் தமிழக எல்லைக்குள்தான் இருக்கின்றது என்று அவர்கள்.... ..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகச் சொல்லுங்கள். ஒரு சின்ன வேண்டுகோள் இந்தப் பிரச்னையிலே விளக்கமாகப் பேசுவதை வரவேற்கிறேன். இரண்டு மாநிலங்களுக்குள் புதுப் பிரச்னை உருவாகாதபடி பேசினால் நல்லது.

(முற்பகல் 10.00)

**திரு. ப. நெடுமாறன்:** ஏற்கனவே நம்முடைய மாண்புமிகு அமைச்சர், திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் 1–7–79-ல் இந்தப் பகுதியைச் சென்று பார்த்திருக்கிறார்கள். அதற்குப் பின்னால், மதுரை மாவட்டக் கலெக்டராக இருந்த சிரியாக். பூர்ணலிங்கம் போன்றவர்களும் பார்வையிட்டு இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் திரு. காளிமுத்து அவர்களும் 15—8—79-லே இந்தப் பகுதியைச் சென்று பார்வையிட்டிருக்கிறார்கள். 1980 ஆம் ஆண்டில் கவர்னர் உரையிலே தமிழக அரசு இந்தக் கோயிலைப் பற்றிய ஒரு குறிப்பு சொல்லியிருக்கிறது. "கண்ணகி கோவில் பிரச்னை பற்றி எனது அரசு கேரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்தும். இதன் விளைவாக கோயிலை மக்கள் சென்று பார்ப்பதற்கான வசதிகள் உருவாக்கப்படும். மாநில அரசின் புதைபொருள் ஆராய்ச்சித் துறையினர் இங்கேயும் மற்ற இடங்களிலும் ஆராய்ச்சி மேற்கொள்வார்கள்" என்று கவர்னர் உரையிலே மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

இதற்குப் பின்னாலே 1981 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2 ஆம் தேதி இந்தப் பிரச்சினையைப் பற்றி இதே மன்றத்தில் நானே ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். ஆக இவ்வளவுக்குப் பிறகும் இந்தக் கோயிலைப் பற்றிய பிரச்சினை இன்னமும் தீரவில்லை. இதன் விளைவாக தமிழக மக்கள் மத்தியிலே இயற்கையான ஒரு கவலை எழுந்திருக்கிறது. இந்தக் கோயில் தமிழகத்திற்குச் சொந்தமா, கேரளத்திற்குச் சொந்தமா என்ற பிரச்சினையில் நான் விரிவாகப் போகவில்லை. சம்பந்தப்பட்ட அரசுகள் பேசி சுமூகமாக முடிக்க வேண்டும். தமிழக மக்களும் கேரள மக்களும் சுமூகமான உறவோடு இருந்து வருகிறார்கள். ஐயப்பன் கோவிலுக்கு லட்சக்கணக்கான பக்தர்கள் ஆண்டுதோறும் தமிழகத்திலிருந்து செல்கிறார்கள். கேரளத்திலிருந்து லட்சக்கணக்கான பக்தர்கள் பழனிக் கோயிலுக்கு ஆண்டுதோறும் வந்துவிட்டுப்போகிறார்கள். எந்த பிரச்சினைக்கும் இடம் இல்லாமல் இருக்கிற ஒரு சூழ்நிலையில் எவ்வளவோ சரித்திர, இலக்கியச் சான்றுகள் இருந்தபோதிலும்கூட, திருப்பதிகோவில் மீது நமக்குள்ள உரிமையை நாம் வற்புறுத்தவில்லை. ஆந்திர மக்களுக்காக விட்டுக்கொடுத்திருக்கிறோம். அதே போல தமிழக மக்கள் உணர்ச்சி பூர்வமாக, கண்ணகி மீது அவர்கள் வைத்திருக்கிற அந்த உணர்வு பூர்வமாக அன்பின் காரணமாக, இலக்கிய ரீதியாக



பிரச்சினையிலே கேரள அரசு சற்று பெருந்தன்மையோடு இருக்கக்கூடிய முக்கியத்துவத்தின் காரணமாக இந்தக் கோயில் நடந்து கொள்ள வேண்டுமென்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன், இந்தக் கோயிலைப் பொறுத்தவரையில்— archaeological importance இருக்கிறது. historical importance இருக்கிறது. Literary importance இருக்கிறது. இது தமிழருடைய உணர்வோடு கலந்துவிட்ட ஒரு முக்கியமான பிரச்சினை. இந்தப் பிரச்சினையில் வீணான பிடிவாதங்களுக்கு இடம் இல்லாமல், கேரள அரசு தமிழ் மக்களுடைய உணர்வுகளை மதித்து, தமிழர்களின் எல்லைக்குள்ளேயே இருக்கிற கோயிலின் மீது உரிமை கொண்டாடுவது, அதுவும் சம்பந்தம் இல்லாமல் யாரோ உரிமையைக் கொண்டாடுவதை, கேரள அரசு உதாசீனம் செய்து தமிழ் மக்களுடைய உணர்வுகளை மதித்து, இந்த கோயிலின் மீது உரிமை கொண்டாடுவதை நிறுத்த வேண்டுமென்பதை இந்த அரசு கேரளத்தை மீண்டும் வற்புறுத்துவதற்காக இது பற்றி விவாதிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று வற்புறுத்தி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவரவர்களே, இன்றைக்கு இருக்கக்கூடிய இந்த மங்கள தேவிக் கோயில் தமிழகத்தினுடைய எல்லையிலே இருக்கிறது. வண்ணாத்திப்பாறை என்று சொல்லக்கூடிய protected forest area பகுதியிலே, 4,380 அடி உயரத்திலே நீண்ட சதுர வடிவத்திலே 86 செண்ட் நிலத்திலே இது இருக்கிறது. குறிப்பாக எங்களுடைய ஊருக்குப் பக்கத்திலே கம்பம் நகரில் ஒரு 15 மைல் தொலைவிலே இருக்கிறது. இப்போது கூட அந்த வண்ணாத்திப்பாறை பகுதியிலும், கம்பம், கூடலூர் போன்ற பகுதிகளிலும் இருப்பவர்களுக்கு அங்கே நிலங்கள் எல்லாம் இருக்கிறது. இன்றைக்கு நம்முடைய தமிழகத்திற்குச் சொந்தமானது என்பதற்கான ஆதாரங்களை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ப. நெடுமாறன் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். 1883 ஆம் ஆண்டு வனத்துறை Notification-யை இங்கே எடுத்துக் காட்டினார்கள். அதேபோல் பல்வேறு கல்வெட்டுக்கள் இங்கே ராஜராஜசோழன் காலத்திலிருந்து, 11 ஆவது நூற்றாண்டு ராஜராஜசோழன் காலத்திலிருந்து, 12 ஆவது நூற்றாண்டு வல்லபபாண்டியன் 13 ஆவது நூற்றாண்டு மாறவர்மன் சுந்தரபாண்டியன், குலசேகர பாண்டியன் கல்வெட்டுகள் எல்லாம் இங்கே இருப்பதை, நான் கவனத்திற்குக் கொண்டுவரவிரும்புகிறேன். அந்தக் கல்வெட்டுகளில்கூட தேவிக்கு அமுது கொடுக்கவேண்டும் என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. ஆக இந்தச் சான்றுகளை வைத்து பார்க்கிறபொழுது இது தமிழகத்திற்குச் சொந்தமானது என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை என்பதை நான் இங்கே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இதே நேரத்திலே கேரள அரசாங்கம் இது அவர்களுக்குத்தான் சொந்தமானது என்று வாதாடிக் கொண்டிருக்கிறார்கள்.

விவாதம் நடைபெற்று நாம் ஆதாரங்களை எல்லாம் எடுத்து வைத்தோம். 1883 ஆம் ஆண்டு வெள்ளைக்காரன் காலத்திலே வண்ணாத்திப்பாறை எஸ்டேட்டுக்குள்ளே தமிழகத்திற்குச் சொந்தமான இந்த மங்களதேவிக் கோயில் இருக்கிறது என்று அந்த நோட்டிபிகேசன், வரை படங்கள், அதைப்போலவே கல்வெட்டின் படிமங்கள், அதனுடைய வாசகங்கள்–இவைகள் எல்லாம் கேரளத்திலே தான் நடைபெற்றது என்று நான் கருதுகிறேன். அந்த மீட்டிங்கிலே 2 மாநிலத்தைச் சேர்ந்த சர்வேயர்களும் கலந்து கொண்டார்கள். ஆனால் வேடிக்கை என்னவென்று கேட்டால் அவர்கள் அதை வாக்அவுட் பண்ணி விட்டு, கேரளாவிலே இருக்கக்கூடிய சர்வே அதிகாரிகள் மினிட்டிலே கையெழுத்துப் போடாமல் நிராகரித்துவிட்டுப் போயிருக்கிறார்கள் என்ற ஒரு தகவல் தரப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10–10)

1976–லே திராவிட முன்னேற்றக் கழக அரசு கலைக்கப்பட்ட பிறகு, திரு. சுகாதியா அவர்கள் கவர்னராக இருந்தபோது, அவர்கள் இந்தப் பிரச்னையை எடுத்துக்கொண்டு, மத்திய அரசாங்கத்திற்கு கடிதம் எழுதினார்கள். அதற்கு உள்துறை அமைச்சகத்தில் இருந்து பதில் எழுதப்பட்டு இருக்கிறது. அந்த பதிலில் சொல்கிறார்கள். The Director General of Central Archaeology, the Deputy Surveyor General and the State Revenue Secretaries of both States—மாநிலத்தினுடைய ரெவின்யூ அதிகாரிகளும், தொல்பொருள் ஆய்வு இயக்குனரும், டெபுடி சர்வே ஜெனரலும் உட்கார்ந்து இந்தப் பிரச்னை பற்றி பரிசீலிக்க வேண்டும் என்று 1976 ஆம் ஆண்டு உள்துறையில் இருந்து ஒரு கடிதம் வந்து இருப்பதாகத் தெரிகிறது. ஆனால், இதிலே மத்திய சர்க்கார் இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாநில சர்க்காரும் இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு அக்கறை எடுத்து, விரைவு காட்டி, இதிலே முடிவு எடுக்கும் சூழ்நிலையில் இருப்பதாகவும் தெரியவில்லை. இன்றைக்கு நம்முடைய கையை விட்டு அந்த கண்ணகிக் கோயில், அந்த இடம் போய்விடும் சூழ்நிலை இருந்து கொண்டு இருக்கிறது. இது வருத்தத்திற்குரியது.

இன்னும் சொல்லப்போனால், நம்முடைய தமிழகத்திற்குச் சொந்தமான நிறைய இடங்கள் நம் கையைவிட்டுப்போய் இருக்கின்றன. கச்சத் தீவு நம்முடைய கையை விட்டுப் போய் விட்டது. தேவிகுளம் பீர்மேடு கேரளாவிற்குப் போய்விட்டது. திருத்தணியைக் கூட நாம் போராடித்தான் பெறவேண்டியிருந்தது. அதைப்போலவே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூட கொச்சி மாநாட்டிலே அதைப்பற்றிக்கேட்ட போது நமக்கு உரிமை இருக்கிறது என்று சொல்லாமல், தெய்வம் எல்லோருக்கும் சொந்தம் என்ற வகையில்தான் சொல்லியிருக்கிறார்கள். இது மிகவும் வருந்தத்தக்கது. அது நமக்கு உரிய இடம். அந்த இடத்தை நாம் எப்படியாவது பெற்றாகவேண்டும். இது தமிழர்களின் மானப்பிரச்னை. அந்த இடத்தை யாரும் எடுத்து பிறருக்கு தாரை வார்த்துக் கொடுக்க

முடியாது. ஆகவே, இதிலே கட்சி வேறுபாடு இல்லாமல், அரசியல் வேறுபாடு இல்லாமல், இதிலே $4\frac{1}{2}$ கோடி தமிழ் மக்களின் உணர்வும், உணர்ச்சியும், பாதிக்கும் சூழ்நிலையை உடைய பிரச்னையாக இருப்பதால், இது மிகவும் அவசியம் வாய்ந்த பிரச்னை என்பதால், இது குறித்து விவாதிக்க சபையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கனவே சொல்லப்பட்ட விவரங்களைத் திரும்பத்திரும்பச் சொல்லாமல், அடுத்து பேச இருக்கின்ற உறுப்பினர்கள் சுருக்கமாகப் பேசவேண்டும்.

**திரு. என். வரதராஜன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களை அவைமுன் வைக்க விரும்புகிறேன். சமீபத்திலே மதுரை மாவட்டம், உத்தமபாளையம் அருகில் இருக்கும் மங்களதேவி கோவிலில் இருக்கும், கண்ணகி சிலையை எடுத்து விட்டு, துர்க்காதேவி சிலையை வைத்து இருப்பதாகத்தகவல் வந்துள்ளது நமக்கு மிகவும் கவலை அளிப்பதாக இருக்கிறது. இதன் காரணமாக இரண்டு மாநில மக்களிடையே ஒரு பெரிய பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். இது மக்களிடையே மிகுந்த உணர்ச்சிகளையும், உணர்வுகளையும் தட்டி எழுப்பக்கூடிய ஒரு சம்பவமாக இருக்கிறது. மக்கள் வழிபடக்கூடிய கோயில்கள் பல நம் எல்லைக்குள் இருக்கின்றன. பல நம் எல்லைதாண்டி இருக்கின்றன. சமீபத்தில் நம்முடைய நாட்டில் எழுந்த பல்வேறு மாறுதல்கள் காரணமாக அவ்வாறு பல கோவில்கள் எல்லைமாறி இருக்கின்றன அல்லது அந்தக்கோவில்களை வழிபடுகின்ற மக்கள் பல மாநிலங்களில் வசிக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது.

தமிழ் நாட்டிற்குச் சொந்தமான கச்சத்தீவை இன்னொரு நாட்டிற்கு நாம் கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டு இருக்கிறது. இன்றைக்குகூட தமிழ்நாட்டில் உள்ள மக்கள், அந்த இடத்தில் வழிபடுகிற வழக்கத்தைக்கொண்ட மக்கள், அங்கே திருவிழா வருகிற நேரத்தில் அந்தக் கச்சத்தீவிற்குச் செல்வதை நாம் பார்க்கும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இது வரலாற்று ரீதியாக அமைந்த மாறுதல் என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இன்னொன்றையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். சமீபத்தில் பெங்களூரில் தென் மாநில முதலமைச்சர்களின் மாநாடு நடந்து இருக்கிறது. அதிலே மத்திய அரசு மாநிலங்களுக்கு உரிமைகளை அதிகமாக்கவேண்டும் என்று கோரப்பட்டது மட்டுமல்லாமல், அண்டை மாநிலங்களின் இடையே உள்ள பிரச்னைகளையும் ஜனநாயக உணர்வுகளோடு......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவை முன் உள்ள கண்ணகி கோவில் பற்றிய பிரச்னையைப் பற்றி மட்டும் பேசவேண்டும். தென்மாநிலங்களின் முதல் அமைச்சர்கள் மாநாடு பற்றிய விவாதம் நாளைக்கு வர இருக்கிறது, அப்போது இதைப் பற்றி பேசிக்கொள்ளலாம்.

திரு. என். சங்கரய்யா : கண்ணகி கோவிலைப் பற்றிப் பேசுகிறபோது, இதிலே எங்களின் கண்ணோட்டம் எப்படி இருக்கிறது என்பதை நாங்கள் விளக்க விரும்புகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தற்போது அவைமுன் கண்ணகி கோவில் பற்றிய பிரச்னை மட்டும்தான் உள்ளது. தென்மாநிலங்கள் முதலமைச்சர் மாநாடு பற்றி திரு. உமாநாத் அவர்கள் கொடுத்துள்ள தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறபோது, திரு. உமாநாத் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் அவர் சொல்கிற கருத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்தாகச் சொல்லலாம்.

திரு. என். சங்கரய்யா : இரண்டு மாநில மக்களிடையே உள்ள பிரச்னையாக இது இருப்பதால், அந்த தென் மாநில முதலமைச்சர்கள் எந்தவிதத்தில் இந்தப் பிரச்னையை அணுக வேண்டும் என்பதற்காக எங்களுடைய கண்ணோட்டத்தை இங்கே விளக்க விரும்புகிறோம்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, இதிலே கோவில் மட்டுமல்ல. இரண்டு மாநில மக்களுடைய உணர்வு களையும் வளர்ப்பதிலே நம்முடைய தென் மாநில முதலமைச்சர் மாநாடு தீர்மானம் எடுத்திருக்கிறது. ஆகவே இதிலே ஒரு பதட்ட நிலையை ஏற்படுத்தினால் அந்த முடிவுக்கு பாதகம் ஏற்படும் என்று பார்க்க வேண்டியிருக்கிறது. ஆகவே, அந்த மாநிலத்திலே யார் இந்த தவறை செய்தாலும் கண்டிக்கத் தக்கது என்று சொல்லுகிறோம்.

அதைப்போன்று நாமும் இன்றையதினம் ஏற்பட்டிருக்கக் கூடிய மாறுதலை கவனிக்க வேண்டுமென்று இந்த அவையிலே வற்புறுத்த விரும்புகிறேன். நீண்டகாலமாக நம்முடைய மக்கள் பெரும் போராட்டத்தை நடத்தி, மொழிவாரி அடிப்படையில் எல்லைக் கமிஷனை அமைத்து, மாநிலங்களைப் பிரித்திருக் கிறோம். அந்த டிப்படையில் நிலைமைகளை ஏற்றுக்கொண் டிருக்கிறோம். மீண்டும் மீண்டும் அந்தப் பிரச்சனைபற்றி தொடர்ச்சியாக நாம் விவாதித்துக்கொண்டிருந்தால் இரண்டு பகுதி மக்களுக்கும் அது பதட்ட நிலையை ஏற்படுத்தும். நம்முடைய சபையில் பீர்மேடு, தேவிகுளம் பிரச்னை வந்து, அங்கே பல சிக்கல்கள் ஏற்பட்டு, அதன் காரணமாக இந்த துர்க்கை சிலையை அமைத்தார்கள் என்று செய்தி வந்திருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையை ஏற்படுத்தக்கூடாது. இரண்டு மாநிலங்களுக்கும் ஒற்றுமையை ஏற்படுத்தி, நம்முடைய மக்கள் உரிமைகளை பாதுகாக்கின்ற வகையில் இந்தப் பிரச்னையை கவனிக்க வேண்டும். இப்போதுகூட பேச்சுவார்த்தை நடத்தலாம்.



இன்றைக்கு வரலாற்று நாயகி கண்ணகி சிலையை அப்புறப் படுத்தியிருப்பதைக் கண்டிப்பதோடு அந்த சிலைக்குப் பதிலாக துர்க்கை சிலையை வைத்து சதிசெய்திருப்பது பற்றி பேச்சு வார்த்தை தொடர வேண்டும். அந்தக் கோவிலைப் பற்றி தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி, தகுந்த முறையில் பிரச்சி னையை அணுக, இதுபற்றி மேலும் விரிவாக விவாதிக்க சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

திரு. ஆர். டி. கோபாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கண்ணகி கோவில் பிரச்சனை என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட பிரச்சனை. அதுபற்றி நானும் மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியம் அவர் களும் 54—வது விதியின்கீழ் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் 54-வது விதியின்கீழ் கவன ஈர்ப்புக் கொடுத்திருந்தீர்கள். அதே பிரச்சினை குறித்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டதால் அதை எடுத்துக்கொள்ளவில்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, இந்த அரசைப் பொறுத்தவரை அண்டை மாநிலங்களுடன் நட்புற வோடு இருக்க வேண்டுமென்று விரும்புகிறது. அதைப்போன்று தான் அண்டைய மாநிலங்களும் நம் மாநிலத்துடன் நட்புறவோடு இருக்க வேண்டுமென்று விரும்புகின்றன என்ற இந்த நல்ல எண் ணத்தை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

நட்புறவோடுதான் இருக்க வேண்டும். மனித சமுதாயம் வாழ வேண்டுமென்றால், வளர வேண்டுமென்றால் நட்புறவு முக்கியம் என்பதை இந்த அரசு நிச்சயமாக எண்ணிப்பார்க்கிறது. அதைப்போன்று எப்போதும் எந்தக் காலத்திலும் தமிழக அரசு இன்றைக்கு இருக்கிற அரசும் அண்ணா தி.மு.க. அரசும் முதல மைச்சர் அவர்களும் யாருடைய வம்புக்கும் போக விரும்பவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போன்று நம்முடைய எல்லைப் பிரச்சினை வரும்போது முதலிலே மாநிலங்களை மொழிவாரி அடிப்படையில் பிரிக்கும் போது எல்லைகள் எப்படி, யார் யாருக்கு எந்தெந்த எல்லை என்று வரையறை செய்யப்பட்டதோ அந்த வரையறைக்கு உட் பட்டு எல்லையை விட்டுக்கொடுக்க இந்த அரசு நிச்சயமாக சம்மதிக்காது என்பதை அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துக்கொள் கிறேன். அது மட்டுமல்ல, நம்முடைய எல்லையைக் காப்பாற்று வது நம்முடைய உரிமையைக் காப்பாற்றுவதற்கு சமமானது என் பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வரதராஜன் அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். பீர்மேடு, தேவிகுளம் வேண்டுமென்று இங்கே சொன்னது அங்கே ஒரு பிரச்சினையாக உருவாகியது என்று சொன்னார்கள். ஆனால் அங்கே அப்படிப் பேசவில்லை. அங்கே தமிழ்நாடு எந்தெந்த பகுதியை விடுவதற்குத் தயாராக இருக்கிறது, அல்லது விடப்போகிறது என்ற கேள்வியைக் கேட்டபோது விடவேண்டியவை விட்டாகிவிட்டது; பீரிமேடு தேவிகுளம் போய்விட்டது; இனிமேல் எதையும் விடுவதற்கு இந்த அரசு தயாராக இல்லை என்று தெரிவித்தேன். அதைக் கிளீயராகத் தெரிவித்திருக்கிறேன். செய்தியும் அப்படித்தான் வந்திருக்கிறது. ஆகவே ஏதோ நான் சொன்னதால்தான் இந்தப் பிரச்சினை வந்திருக்கிறது என்று வியாக்கியானம் செய்வது சரியல்ல.

அதைப்போன்று அருமை சகோதரர் நெடுமாறன் அவர்கள் பல்வேறுபட்ட சான்றுகளை, ஆதாரங்களை எடுத்துக்காட்டி, இது நமக்குச் சொந்தம், இந்த எல்லை நமக்கு சொந்தம் என்பதை எடுத்துக்காட்டினார்கள்.

(முற்பகல் 10–20.)

அதேபோல நம்முடைய அருமை சகோதரர் ரகுமான்கான் அவர்களும் அந்த இடம் நமக்குத்தான் சொந்தம் என்ற வகையில் அவருக்கு முன்னாள் பேசியவரைப் பின்பற்றி, அதற்கான ஆதாரங்கள் சிலவற்றை எடுத்துக் காட்டினார்கள். திரு. வரதராஜன் அவர்களும் அப்படியேதான் சொன்னார்கள். நமது எல்லையை விட்டு விடக்கூடாது என்று எடுத்துச்சொன்னார்கள். நமது எல்லைக்குள்ளேதான் அந்தக் கண்ணகி கோவில் இருக்கிறது என்பதற்கு பல ஆதாரங்கள் இருக்கின்றன. அவற்றில் சிலவற்றை நீங்கள் எல்லோரும் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறீர்கள். இதிலே எந்தவிதமான சந்தேகமும் இங்கே இருப்பவர்களுக்கு இல்லை. இருக்க முடியாது. மற்ற மாநிலங்களிலே இருப்பவர்களுக்கும் இல்லை என்றுதான் கருதுகிறேன். இருந்தாலும் ஏனோ தெரியவில்லை கேட்கிறார்கள்.

அந்தக் கோவில் தமிழ்நாட்டின் எல்லையிலேதான் இருக்கிறது என்பதற்கு கிட்டத்தட்ட 10. 15 சான்றுகள் இருக்கின்றன. அவற்றில் பல சான்றுகளை மாண்புமிகு உறுப்பினர்களே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதனாலே நான் அவை பூராவையும் இங்கே மறுபடியும் சொல்லவேண்டும் என்பது இல்லை. இருந்தாலும் ஒன்றிரண்டைச் சொல்கிறேன்.

(1) 1883-1886 ஆம் ஆண்டிற்கான நில அளவை ஆவணங்கள் இக்கோயில் தமிழ்நாட்டிற்குள்ளேயே அமைந்திருப்பதைக் காட்டுகின்றன.





(2) இந்த எல்லையைப் பற்றிய 1893 ஆம் ஆண்டு இந்திய நில அளவை—வன வரைபடம் மற்றும் 1916 ஆம் ஆண்டு இந்திய சர்வேயர் ஜெனரரின் வரைபடம் ஆகியவை இக்கோயில் ஆனது தமிழ்நாட்டிற்குள்ளேயே அமைந்துள்ளதை தெளிவாகக் காட்டுகிறது.

(3) 1927, 1952, 1957 மற்றும் 1959ம் ஆண்டுகளில் இம் மாநில அரசால் வெளியிடப்பட்ட வட்ட வரைபடங்களும் இந்தக் கோயில் தமிழ்நாட்டு எல்லைக்குள்ளேயே இருப்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன.

1927 என்றால்—before Independence சுதந்திரம் பெறுவதற்கு முன்னால், அப்போது வெளியிடப்பட்ட அந்த வரைபடத்திலேயே இதற்குச் சான்று இருக்கிறது.

(4) அடுத்து 15–11–1883 அதாவது இப்போது 1983 இன்றைக்கு 100 வருஷங்களுக்கு முன்னால், வெளியிடப்பட்ட புனித ஜார்ஜ் கெஜட்டில் 719–721 ஆம் பக்கங்களில் பிரசுரமான வெளியீடு பிரிவு 25இல் வண்ணாத்திப்பாறை ஒதுக்கப்பட்ட காடுகள் என்று அழைக்கப்பட்டதாகவும், மற்றும் அக்காட்டில் உள்ள மங்கலதேவி கோயில் போன்றவைகள் எல்லாமும் தமிழ் நாட்டுக்கு சொந்தம் என்று 100 வருஷங்களுக்கு முன்னாள் இங்கேயிருந்து வெளியிடப்பட்ட ஆதாரங்களில் இருக்கின்றன.

அதேபோல 1934-இல், இதுவும் before Independence வெளியிடப்பட்ட மதுரை மாவட்ட கெஜட்டில் உள்ள வெளியீடு மேலே குறிப்பிட்டக் கோயிலானது தமிழ்நாட்டின் எல்லைக்குள்ளேயே அமைந்திருப்பதைக் காட்டுகிறது. மேலே குறித்த வெளியீடு இக்கோயில் மதுரை மாவட்டம், பெரிய குளம் வட்டம், வண்ணாத்திப்பாறை ஒதுக்கப்பட்ட காட்டில் உள்ளது என்பதையும், மற்றும் பெரியகுளம் வட்டத்தைச் சார்ந்த கூடலூர் கிராமவாசிகளுக்கு மங்கல தேவி கோயிலுக்கு செல்ல வழிபடுவதற்கு 12 அடி அகலமுள்ள வழித்தடத்திற்கு உரிமை அளிக்கப்பட்டது என்பதையும் காட்டுகிறது.

அதேபோல அரசு ஆணை எண். 183 (பொது அரசியல்) தேதி 1–5–1918இல் before Independence சென்னை மற்றும் திருவிதாங் கூர் அரசுகள், இவ்விருமாநிலங்களுக்கும், மதுரை, திருவிதாங்கூர் இடைப்பட்ட மாநில எல்லையானது ஆற்றுப் பள்ளதாக்குக்கு ஏற்ப அமைவதை ஏற்றுக் கொள்கின்றது. அது மட்டுமல்ல, இன்னும் ஆதாரங்கள் இருக்கின்றன. இந்தப் பகுதியானது தமிழ் நாட்டிற்குள்ளேயே படிப்படியாக சரிந்து சமவெளியாகிறது. ஆனால் கேரள மாநிலத்தில் செங்குத்தாக கீழ் அமைந்து பள்ளத்தாக்காக உள்ளது. ஆகையினால் இக்கோயில் எப்போதும் கேரள மாநிலத்தில் ஒரு பகுதியாக இருந்ததில்லை.

[திரு. எஸ்.டி. சோமசுந்தரம்] [1983 மார்ச் 28

இராஜராஜ சோழன்-1,2,3, என்று சொல்லி இங்கே சில மேற்கோள்களைக் காட்டினார்கள். அதிலேகூட குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், 1ஆம் இராஜராஜசோழன் காலத்திலே ஏற்படுத்தப்பட்டதுதான் அங்கேயிருக்கும் அந்தக் கல்வெட்டு. அந்தக் கல்வெட்டு எண். 283லேகூட அது 1965 ஆம் ஆண்டு இந்திய நிலவளத் துறையினர், இந்தியக் கல்வெட்டுகளின் ஆண்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது—கண்ணகியின் மாமனார் கோவலன்.... (குறுக்கீடு) முழுவதும் சொல்லிவிடுகிறேன். கண்ணகியினுடைய மாமனார்கோவலனின் தந்தை மாசாத்துவான் என்பவரின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல. முன்னாள் நிலவள ஆணையாளரும் மற்றவர்களும் அதைப் பார்த்து அது நமக்குத்தான் சொந்தம் என்பதை முடிவு செய்திருக்கிறார்கள். இதைப்பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் சொன்னபடி இதற்கு வேண்டிய ஏற்பாடுகளை நமது நில ஆய்வுத் துறையினர் மேற்பார்வையிட்டு வேண்டிய நடவடிக்கைகளை எல்லாம் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதை எல்லாம் சொன்னால் நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்டார்கள். இப்படி இந்த எல்லைத் தகராறு பற்றி நாம் எவ்வளவுதான் சொன்னாலும் கேரள அரசு அதை ஏற்றுக்கொள்ள மறுத்தது. இதற்கிடையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உலகத் தமிழ் மாநாட்டில் இக்கோயிலைப் பற்றி எடுத்துக்கூறி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தியப் பிரதமருக்கு ஒரு நேர்முகக் கடிதம் எழுதி கேரள அரசோடு ஒரு சுமுகமான முடிவு ஏற்படுவதற்கு அவர்களுடைய நல்லுணர்வையும், அதிகாரத்தையும் பயன்படுத்திச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது கடிதம் நம்பர் ஒன்று.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் அன்றைக்கு உள்துறை அமைச்சராக இருந்த திரு. ஜெயில்சிங் அவர்கள் 16-5-1981அன்று நமது முதலமைச்சருக்குக் கடிதம் எழுதி கேரள அரசும் இக் கோயிலுக்கு உரிமை கொண்டாடுகின்றது, எனவே இரு அரசுகளும் சேர்ந்து ஒரு முடிவை எடுக்கவேண்டும் என்ற உணர்வை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இதற்குப் பதிலளிக்கின்ற வகையில் இரண்டாவது கடிதமாக நமது தமிழக முதல்வர் அவர்கள் மத்திய உள்துறை அமைச்சருக்கு இக்கோயில் தமிழ்நாட்டுக்குத்தான் இருக்கின்றது என்பதற்கான ஆதாரங்களையும், வரைபடங்களையும் அனுப்பி கேரள அரசு தமிழ்நாட்டின் எல்லைக்குள் புகுந்து சாலை போடுவதாலே மட்டுமே உரிமை கொண்டாடுவது ஏற்புடையதாகாது என்று 28-7-1981—ல் ஒரு கடிதம் எழுதி இருக்கிறார்கள். இதை அடுத்து 20-10-1981 அன்று உள்துறை அமைச்சர் ஒரு கடிதம் எழுதினார்கள். இந்தக் கோயில் தமிழ் நாட்டு எல்லையில் உள்ளது, இதைப்பற்றி கேரள முதலமைச்சர் ஒரு கடிதம் எழுதியுள்ளார்கள், ஆகவே இரு அரசுகளும் பேச்சு வார்த்தை மூலமே ஒரு சுமுகமான முடிவை எடுத்துக்கொள்ளலாம் என எழுதினார்கள். அதை அடுத்து கேரளாவில் ஆளுநர் ஆட்சி



1983 மார்ச் 28] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

இருந்ததால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு வந்தபின் பேச்சு வார்த்தை நடத்தலாம் என்று முடிவு செய்யப்பட்டது. அடுத்து 5—5—1982 அன்று கண்ணகி கோயிலுக்கு வழக்கம் போல் சித்திரா பவுர்ணமி திருவிழா கொண்டாடச் சென்ற யாத்திரீகர்களைக் கேரளஅரசின் பார்நிலை அலுவலர்கள் கைது செய்தனர். இது விரும்பத் தகாதது என்றும் சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினரை மரியாதையின்றி நடத்துகிறார்கள் என்று செய்தி வந்திருக்கின்றது என்றும் இத்தகைய நிகழ்ச்சிகளை உடனே நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று கேரள ஆளுநருக்குத் தமிழக முதல்வர் புரட்சித்தலைவர் அவர்கள் தந்தி மூலமாகச் செய்தி அனுப்பினார்கள் என்பது குறிப்பிடத் தகுந்தது. இதற்குக் கேரள அரசிடமிருந்து ஒருவிதமான பதிலும் நாளது வரையில் வரவில்லை. அதன்பின்னால் தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள் 3-2-1983 அன்று மத்திய உள்துறை அமைச்சருக்கு, கேரளாவில் உள்ள சிலர் இக்கோயிலைப் புதுப்பிக்கும் பணியினைத் தொடர முயற்சிக்கிறார்கள் என்றும், இக்கோயில் 10 நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டிற்குச் சொந்தம் என்ற வகையில் கல்வெட்டுக்கள் இருப்பதாகவும், இக்கோயிலை அவர்கள் புதுப்பித்துவிட்டால் இந்தப்பிரச்சினை பற்றி சுமுகமான முடிவுகள் எடுக்க முடியாது என்று கடிதம் எழுதியுள்ளார்கள்.

(முற்பகல் 10-30)

அதேபோல் முன்பு சித்திரா பவுர்ணமி அன்று அங்கே யாத்ரீகர்கள் சென்றிருந்த போது தகராறு வந்தது என்பதற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கேரள முதலமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அதாவது 26-4-1983—ல் சித்திரா பவுர்ணமி திருவிழா வருவதால் சென்ற ஆண்டு நடந்த விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் போல் இவ்வாண்டு நடைபெறக்கூடாது என்பதற்காக அக்கோயிலுக்குச் செல்கின்ற தமிழ்நாட்டு மக்களுக்குத் தக்க பாதுகாப்பு உதவி செய்யுமாறு ஒருகடிதத்தைத் தமிழகமுதல்வரவர்கள் எழுதி இருக்கிறார்கள். இதற்கு மறுமொழியாக 11—3—1982-ம் தேதியன்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. சேத்தி அவர்களுக்கும், கேரள மாநில முதலமைச்சர் திரு. கருணாகரன் அவர்களுக்கும் ஒரு கடிதம்எழுதி அதனுடைய நகலை நம்முடைய முதலமைச்சருக்கு அனுப்பியிருக்கிறார்கள். இக்கடிதத்தில் மத்திய உள்துறை அமைச்சரவர்கள் கூறிய ஆலோசனைப்படி இரு மாநிலமும் பேச்சு வார்த்தை மூலம் இந்தப் பிரச்சனையைத் தீர்க்கும் வரையில் இந்தக் கோவிலில் எந்த மாறுபாடும் செய்யக்கூடாது என்பதை அக்கடிதத்தின் மூலம் வலியுறுத்தியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கிடையில்தான் 15—3—1983 அன்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் சொல்லிடபடி அங்கேயிருக்கிற பஞ்சாயத்துத் தலைவர்களும் மற்றவர்கள் எல்லோரும் அங்கே 151 பேர்களுக்கு மேலாக ஊர்வலமாகச் சென்று அங்கே இந்த துர்க்கையை வைத்து இருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். இது 15—3—1983ம் தேதி நடந்தது. இச் செய்தி பத்திரிகையில் வந்தது. உடனே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கேரள முதலமைச்சர் திரு. கருணாகரன் அவர்களுக்குத்

தந்தி அனுப்பியிருக்கிறார்கள். 24-3-1983 அன்று தந்தி அனுப்பப்பட்டது. அதேபோல் மத்திய உள்துறை அமைச்சருக்கும் தந்தி அனுப்பப்பட்டது. இவ்விதமாக சுமார் 10 கடிதங்கள் மற்றும் தந்திகள் இங்கிருந்து முதலமைச்சர் அவர்களால் தமிழக மக்கள் சார்பாக மத்திய உள்துறை அமைச்சருக்கும், பிரதம அமைச்சருக்கும், கேரள முதலமைச்சருக்கும், முன்னாள் கவர்னருக்கும் ஆகிய எல்லோருக்கும் அனுப்பப்பட்டது. நான் முதலில் குறிப்பிட்டவாறு எல்லைப் பிரச்சனையில் எல்லையை காப்பாற்றவேண்டும். அந்த எல்லையைக் காப்பாற்றுகிறபோது தொல்லை இல்லாமல் காப்பாற்றவேண்டும். அவர்களுக்கும் தொல்லை வேண்டாம். நமக்கும் தொல்லை வேண்டாம். எல்லையும் போகக்கூடாது. அதற்குத் தக்க நடவடிக்கை இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆகவே அவையின் இதர அலுவலை ஒத்திவைத்து இதை வாதிடத் தேவையில்லை என்று என்னுடைய விருப்பத்தை அரசின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப்பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத்தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

### 4. அறிக்கை அளித்தல்

#### விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை 106-வது விதியின் கீழ் மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் பேரவைக்கு ஒரு அறிக்கையை அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 106-ஆவது விதியின்கீழ் கீழ்க்கண்ட அறிக்கையை இந்த அவையின் முன் வைக்கிறேன். விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு இந்த அரசு செயற்படுத்தி வருகின்ற ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் பெறுகிறவர்களின் ஆண்டு உச்ச வருமானம் ரூபாய் 5 ஆயிரமாக வரையறுக்கப்பட்டு அது இப்போது அமுலில் இருந்து வருகிறது. அருகி வரும் ஒரு தலைமுறையைச் சார்ந்தவர்கள் இந்த விடுதலைப் போராட்ட வீரர்கள் என்பதை இந்த அரசு பரிவுடன் கருத்தில் கொண்டு இதுகாறும் பல சலுகைகளைத் தொடர்ந்து வழங்கி வந்துள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். மேற்கூறிய வருமான உச்ச வரம்பு காரணமாக இந்த அரசு வழங்கி வரும் ஓய்வு ஊதியத்தை மேலும் பல விடுதலைப் போராட்ட வீரர்கள் பெற வாய்ப்பு அற்று இருப்பதை இந்த அரசு பரிவுடன் மறுபரிசீலனை செய்து வருமான உச்ச வரம்பை அறவே நீக்கிவிட முடிவு செய்துள்ளது. இதற்கான ஆணை விரைவில் வெளியிடப்படும். இந்தச் சலுகையை மாண்புமிகு உறுப்பினர்களும், விடுதலைப் போராட்ட வீரர்களும் மகிழ்ச்சியோடு வரவேற்பார்கள் என நான் கருதுகிறேன்.



### 2. தகவல் கோரல்

#### (அ) பேரவை நடக்கும்போது கொள்கை அறிவிப்பை அமைச்சர் வெளியே தெரிவிப்பது—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நேற்றையதினம்

''All India Bakers' Manufacturers Association''

சார்பில் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்டு அந்த மாநாட்டைத்துவக்கி வைக்கிறபோது நான் பேசிய பேச்சைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் இங்கே ஒழுங்கு பிரச்சினை மூலம் பிரச்சனையை எழுப்பியிருக்கிறார்கள். அதற்கு என்னுடைய விளக்கத்தைத் தெரிவிப்பதற்குக் கடமைப் பட்டுள்ளேன். நேற்றையதினம் இந்த மாநாட்டைத் துவக்கி வைத்துப் பேசுகிறபோது நான் பேசியது பத்திரிக்கைகளிலும், டி.வி.யிலும், ரேடியோவிலும் அப்படியே வந்து இருக்கிறது. பத்திரிகைகள் மூன்றும் தவறாகப் போடவில்லை. நான் பேசியது உண்மைதான். அங்கே அவர்களுடைய பல்வேறு பிரச்சினைகளைப் பற்றிச் சொல்கிற நேரத்தில் என்ட்ரி டாக்ஸ்—ஆல் அவர்களுக்கு வருகிற கஷ்டத்தை எடுத்துச் சொன்னார்கள். நான் அங்கே பேசுகிறபோது சொன்னேன், இங்கே நான் மட்டுமல்ல, அந்த துறையினுடைய அமைச்சராக இருக்கிற மாண்புமிகு நிதி மைச்சர் நாவலர் அவர்கள் இங்கே வந்து இருந்தால் கூட இங்கே உடனடியாகப் பதில் சொல்லமுடியாது, சொல்லவும் கூடாது, ஏனென்றால் சட்டசபை நடக்கிற காரணத்தால் நாளை காலையில் இது பிரிவில்லேஜ் ஆகவோ, பாயின்ட் ஆப் ஆர்டராகவோ வந்துவிடும் என்று அப்படியே பேசியிருக்கிறேன், அதற்குப் பின்னால் இப்படி வந்திருக்கிற கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு சிலவற்றுக்கு ஏற்கனவே அரசு விலக்குக் கொடுத்து இருக்கிறது, சட்டமன்றத்திலே அறிவிக்கப்பட்டிருக்கிறது, நீங்கள் சொல்கிற பிரச்சினைகளையும் சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்திலேயும் மாண்புமிகு நிதியமைச்சரிடத்திலேயும் முதலமைச்சரிடத்திலேயும் நான் எடுத்துச் சொல்வேன் என்று சொல்லி அதை அரசு எக்ஸாமின் பண்ணும் என்று சொன்னேன். அதிலே எந்தத் தவறும் இல்லை. ஒரு மாநாட்டிலே கலந்துக் கொள்கிறபோது ஒரு கோரிக்கையை அங்கே வைக்கிறபோது ஒரு அமைச்சர் என்ற முறையிலே அதை அரசு பரிசீலிக்கும் என்று சொல்வதிலே, எக்ஸாமின் செய்யும் என்று சொல்வதிலே எந்தத் தவறும் இல்லை. அந்த அதிகாரம் நிச்சயமாக ஒரு அமைச்சருக்கு உண்டு என்று நான் மனப்பூர்வமாகக் கருதுகிறேன். அதை எக்ஸாமின் செய்யும் என்று சொன்னேனே தவிர கன்ஸிடர் என்று கூட சொல்லவில்லை. கன்ஸிடரேஷன் என்பது வேறு, டெஸிஷன் என்பது வேறு, எக்ஸாமினேஷன் என்பது வேறு. அதை அரசு எக்ஸாமின் செய்யும் என்று சொன்னேன். அது மட்டுமல்லாமல் மாண்புமிகு திரு. உமாநாத் அவர்களுக்கும் மற்ற உறுப்பினர்களுக்கும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் இருக்கிற இடத்திலே நானும் 3 ஆண்டுக்காலம் இருந்தேன். அமைச்சருடைய உரிமை, மன்றத்

தினுடைய உரிமை, உறுப்பினர்களுடைய உரிமை இவைகளை நான் அறியேன். மன்றத்தின் உரிமைக்கு மாறாக உறுப்பினர்களின உரிமையைப் பாதிக்கிற விதத்திலே நிச்சயமாகப் பேசமாட்டேன் என்பதைத் தெரிவித்து இதிலே மன்னிப்புக் கேட்கிற பிரச்சினை எழவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: பேப்பரிலே வந்ததை சரி என்று....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கம் கொடுத்தாகிவிட்டது, எக்ஸாமின் பண்ணுவதாகத்தான் சொல்லியிருக்கிறேன் என்று சொல்லிவிட்டார். (குறுக்கீடு) பத்திரிக்கையிலே படித்ததைத்தான் நீங்கள் சொல்கிறீர்கள். எக்ஸாமின் பண்ணுவதாகச் சொன்னேனே தவிர கன்ஸிடர் பண்ணுவதாகக்கூடச் சொல்லவில்லை என்று சொல்லிவிட்டார்.

திரு. ரா உமாநாத்: அமைச்சர் சொல்கிறபோது பத்திரிக்கையிலே வந்ததை கன்பர்ம் பண்ணுவதாகச் சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: நான் பார்த்ததில் பத்திரிக்கையில் தவறாகப் போடவில்லை. எக்ஸாமின் பண்ணும் அல்லது ஆய்வு செய்யும் என்றுதான் பத்திரிக்கையிலே வந்திருக்கிறது.

திரு. ரா. உமாநாத்: பத்திரிக்கையிலே வந்ததை விட்டுவிட்டு அவர்கள் எக்ஸ்பிளனேஷனைக் கொடுத்திருந்தால் பிரச்சினை வராது. ஆனால் பத்திரிகையிலே கரெக்டாகத்தான் வந்தது. ரேடியோவிலே, டி.வியிலே கரெக்டாகத்தான் வந்தது என்று சொல்லியிருக்கிறார். உங்களுடைய டிமாண்ட்ஸைப் பரிசீலனை செய்வதற்கு சீப்மினிஸ்டரோ, மற்றவர்களோ நிதியமைச்சரோ கன்ஸிடர் பண்ணுவார்கள் என்று சொன்னால் பிரச்சினையில்லை. ஆனால்,

The Government was examining to remove certain other commodities from the proposed entry tax Octroi

என்று ஸ்பெஸிபிக்காகச் சொல்லப்பட்டிருக்கிறது. நாங்கள் எல்லாம் ஆக்ட்ராயை எடுக்க வேண்டுமென்று சொல்லக்கூடியவர்கள்தான். It is specifically examining the removal of certain other commodities also என்று வந்திருக்கிறது. அது கரெக்ட் என்று சொல்லியிருக்கிறார், அதைத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகையிலே வந்தது அல்ல. அமைச்சர் நம்முடைய விளக்கத்திலே, நான் எக்ஸாமின் பண்ணுகிறேன் என்றுதான் சொன்னதாகச் சொல்லியிருக்கிறார். அதோடு நிற்கவேண்டுமே தவிர பத்திரிகையிலே வந்ததை வைத்து விவாதங்களை நடத்துவது நல்லதல்ல.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: வந்த பிரச்சினையே என்ட்ரி டாக்ஸை ரிமூவ் பண்ணுவதுபற்றிதான். என்ட்ரி டாக்ஸை ரிமூவ் பண்ணுவதாகவோ கேபினட் டெஸிஷனாகவோ அமைச்சரவையின் முடிவாகவோ நான் சொன்னதாக எந்தப் பத்திரிகையிலும் வரவில்லை. வேண்டுமானால் பத்திரிகையைத் திருப்பிப் படித்துப் பார்க்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதோடு அது முடிந்துவிட்டது.





5. பேரவைக்குக் கொடுக்கப்பெறும் மனுக்கள்

தொழிற்சங்க அமைப்புகளின் மனுவைப் பேரவைக்கு அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து பேரவைக்கு மனுக்கள் அளித்தல். பேரவை 301(2)வது விதியின்கீழ் உறுப்பினர்கள் பேரவைக்கு மனுக்கள்அளிப்பார்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு பல்வேறு தொழிற்சங்க அமைப்புகளினுடைய தலைவர்களான தொழிலாளர் முன்னேற்றச் சங்க பேரவையின் தலைவர் திரு செ. குப்புசாமி, தமிழ்நாடு எ.ஐ.டி.யு.சி.யின் பொதுச்செயலாளர் திரு. ஏ. எம். கோபு, டி.என். டி.யு.சி.யின் பொதுச்செயலாளர் திரு. கே. எஸ். நாராயணன், சி.ஐ.டி.யு.வின் துணைத் தலைவரான திரு. வி.பி.சிந்தன், இந்திய எம்ப்ளாயீஸ் யூனியன் செயலாளர் திரு. ஆர். ராஜகோபாலன், டி.சி.எல்.எப் அதனுடைய செயலாளர் எஸ். ராதாகிருஷ்ணன் ஆகியோர் சார்பாக தங்கள் மூலமாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நேரப்படுகிற இந்த மனுவை நான் தங்களிடத்திலே வழங்குகிறேன்.

(முற்பகல் 10–10)

திரு. கு. ரமணி: மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாடுசட்டமன்றப் பேரவைக்குத் தமிழகத்திலேயிருக்கிற தொழிலாளர்கள் தங்களுடைய தொழிற் சங்கங்களின் சார்பில் அளிக்கவேண்டிய மனுவை என் மூலமாக அளித்திருப்பதை இந்த மன்றத்திற்குச் சமர்ப்பிக்கிறேன்.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உழைக்கக்கூடிய மக்களின் சார்பாக, பாட்டாளிகள் சார்பாக இந்தப் பேரவைக்கு அவர்கள் ஏ.ஐ.டி.யு.சி., சி.ஐ.டி.யு., முன்னேற்றப்பேரவை மற்றும் இதர தொழிற்சங்க அமைப்புகளின் சார்பாகக் கையழுத்திட்டுக் கொடுத்திருக்கிற இந்தமகஜரைப் பேரவைக்குத் தங்கள் மூலமாக நான் சமர்ப்பிக்கிறேன்.

திரு. பழ. நெடுமாறன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு சகல தொழிற்சங்கங்களும், அடங்கிய தொழிலாளர்கள் சார்பாக அளிக்கப்பட்டிருக்கிற இந்த, மனுவைத் தங்கள் மூலமாக இந்தப் பேரவைக்கு நான் சமர்ப்பிக்கிறேன்.

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு தலைவரவர்களே தொழிற்சங்கங்களின் சார்பாகக் கொடுக்கப்பட்ட மனுக்களைத் தங்கள் மூலமாக இந்தப் பேரவைக்கு சமர்ப்பிக்கிறேன்.

திரு. ஏ. சாகுல் ஹமீது: மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தமிழகத்தினுடைய அத்துணை தொழிற்சங்கங்களைச் சார்ந்த தொழிலாளர் தலைவர்கள் தங்களுடைய கோரிக்கைகளை வற்புறுத்தி என் மூலமாகக் கொடுத்திருக்கிற மனுவை நான் தங்கள் மூலமாக அவைக்குச் சமர்ப்பிக்கிறேன்.

[1983 மார்ச் 28

மாண்புகு பேரவைத் தலைவர்: நம்முடைய பேரவைச் செயலாளர் அவர்கள் மனுவின் சாராம்சத்தை பேரவை விதி 302 இன் கீழ் அவைக்குத் தெரிவிப்பார்கள்.

பேரவைச் செயலாளரால் அவைக்குத் தெரிவிக்கப்பெற்ற மனுக்களின் சாராம்சம்:

"தமிழகத்திலுள்ள பாட்டாளிகள் சம்பந்தமான பொது முக்கியத்துவம் வாய்ந்ததும், பேரவையின் அதிகார வரம்பிற்குள் அடங்கியதுமான பொருள்கள் பற்றி பல தொழிற்சங்க மையங்களையும், தொழில் சம்மேளனங்களையும் சேர்ந்த நாங்கள் கூட்டாக சமர்ப்பிக்கும் மனு:

1. வேலை நிறுத்தம் என்பது தொழிலாளர்கள் பெற்ற அடிப்படையான உரிமையாகும். அதைப் பறிக்கும் நடவடிக்கைகளை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. 1981-ல் வெளியிட்ட வேலை நிறுத்த அவசரச் சட்டம் தற்போது பொறுக்குக் குழுவின் முன் உள்ளது. மேற்படி சட்ட முன்வடிவு திருப்பப் பெறப்பட வேண்டுமென்று கோருகிறோம்.

2. மின்சார வெட்டின் விளைவாக தொழிலாளர்கள் லே-ஆப் செய்யப்பட்டிருக்கின்றனர். அவர்கள் எல்லோருக்கும் முழுச் சம்பளம் கொடுக்க வேண்டும்.

3. குடிநீர்ப் பஞ்சத்தைத் தீர்க்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. அத்தியாவசியப் பொருட்கள் நியாய விலையில் அனைவருக்கும் கிடைக்க வேண்டும்.

5. தொழிற் தகராறுகள் நிர்வாகத்தினருக்கு ஆதரவாகவும் தொழிலாளர்களுக்கு பாதகமாகவும் போலீஸ் தலையிட அனுமதிக்கக்கூடாது.

6. தொழிலாளர்கள் நடத்திய இயக்கத்தையொட்டி போடப்பட்டுள்ள ஏராளமான வழக்குகளை—கிரிமினல் வழக்குகளை கைவிட வேண்டும்."

எல்லா மனுக்களும் ஒரே மாதிரியாக இருக்கின்றன.

### 6. ஒழுங்குப் பிரச்னை.

#### உறுப்பினர்கள் 'பாட்ஜ்' அணிந்து வருவது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். உறுப்பினர் திரு அம்பிகாபதி அவர்கள் ஏ.ஐ.டி.யு.சி. பாட்ஜ் அணிந்து வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறார். விதிகள் அதை அனுமதிக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இங்கு பாட்ஜ் எல்லாம் குத்திக் கொண்டு வருவது மரபல்ல. ஏ.ஐ.டி.யு.சி. மட்டுமல்ல, (குறுக்கீடு) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களானாலும், ஆளுங்கட்சியாக இருந்





தாலும், எல்லோருக்கும் ஒரே பதில்தான். பாட்ஜ் அணிவது போன்றதையெல்லாம் வெளியேதான் வைத்துக்கொள்ள வேண்டும். இங்கே டெமான்ஸ்டிரேட் செய்யக் கூடாது.

திரு. மு அம்பிகாபதி: சரி ஊர்வலத்திற்குப் போகிறேன்.

### 7. கவன ஈர்ப்புகள்

#### வட ஆற்காடு மாவட்டத்தில் பயிர் ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் நட்டயீடு வழங்குவது

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, "வடாற்காடு மாவட்டத்தில் கூட்டுறவு மத்திய வங்கியின் தொடர்புடன் பயிர் ஈட்டுறுதித் திட்டம் நடைமுறைப்படுத்தப் பெற்று நட்டமடைந்த விவசாயிகளுக்கு நட்டயீடு வழங்காதது" குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

#### அறிக்கை.

தமிழ்நாட்டில் பயிர் ஈட்டுறுதித் திட்டம் நெல் பயிருக்கு மட்டும் முதல் மற்றும் இரண்டாம் பருவங்களில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. விவசாய ஆண்டு 1979–80-ல் நெல் இரண்டாம் பயிருக்குத் துவங்கிய இத்திட்டம், 1980–81-ல் நெல் முதல் மற்றும் இரண்டாம் பயிர்களுக்கும், 1981–82-ல் நெல் முதல் மற்றும் இரண்டாம் பயிர்களுக்கும் மற்றும் 1982–83-ல் நெல் முதல் மற்றும் இரண்டாம் பயிர்களுக்கும் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்டபடி நெல் பயிருக்கு இதுவரை ஏழு பருவங்களில் பயிர் ஈட்டுறுதித் திட்டத்தை 42 வட்டங்களில் நடைமுறைப்படுத்தியதில் 20,460 விவசாயிகள் 39,036 ஏக்கர் நிலப்பரப்பிலுள்ள பயிர்களை 251.42 இலட்ச ரூபாய்க்கு இன்சூர் செய்தனர். அவர்கள் செலுத்திய பிரிமியத் தொகை 9.20 இலட்ச ரூபாயாகும்.

2. பயிர் ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் ஒரு கிராமத்திற்கு இரண்டுபயிர் அறுவடை பரிசோதனைகள் என ஒவ்வொரு வட்டத்திலும் 16 பயிர் அறுவடை பரிசோதனைகள் நடத்தி அதன் விளைவுகளின்படி சராசரி விளைச்சல் கணிக்கப்படுகிறது. இந்த சராசரி விளைச்சல் ஏற்கனவே சென்ற பத்தாண்டுகளில் பயிர் அறுவடை பரிசோதனைகளின் மூலம் சராசரி விளைச்சல் கணிக்கப்பட்டு அதில் நிர்ணயிக்கப்பட்ட ஈட்டளவைவிட குறைந்தால் எந்த அளவுக்குக் குறைகிறதோ அந்த அளவுக்கு நட்டஈடு வழங்குவதை பொதுகாப்பீட்டுக் கழகம் நிர்ணயிக்கிறது. அதில் 75 சதவிகித நட்ட ஈட்டை மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு பொதுக் காப்பீட்டுக் கழகம் வழங்குகிறது. மீதமுள்ள 25 சதவிகித நட்ட ஈட்டைத் தமிழக அரசால் நிர்ணயிக்கப்பட்ட பயிர்ப் பாதுகாப்பு நிதியிலிருந்து மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

3. பயிர் ஈட்டுறுதித் திட்டம் 1979–80 ஆம் ஆண்டு நெல் இரண்டாம் பயிருக்கும், 1981–82 ஆம் ஆண்டு நெல் இரண்டாம் பயிருக்கும் வடஆற்காடு ம வட்டத்திலுள்ள வாலாஜா வட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த இரண்டு பயிர்களுக்கும் வாலாஜா வட்டத்தில் பயிர் அறுவடை பரிசோதனைகள் நடத்தியதில் விளைச்சல் குறிப்பிட்ட அளவைவிட குறையாததால் ஈட்டுறுதி வழங்கப்படவில்லை. இதுவரை 7 பருவங்களில் நெல் பயிருக்கு பயிர் ஈட்டுறுதித் திட்டம் நடைமுறைப் படுத்தியதில் 5 பருவங்களுக்கு அறுவடை பரிசோதனைகள் நடைபெற்று அதில் 4 பருவங்களில் 9 தாலுக்காக்களிலுள்ள 4,582 விவசாயிகள் 6.10 இலட்ச ரூபாய் நட்ட ஈடாகப் பெற்று பயனடைந்துள்ளார்கள்.

4. பயிர் ஈட்டுறுதித் திட்டம் நெல் முதல் பயிருக்கு 1982–83-ல் 25 வட்டங்களில் நடைமுறைப் படுத்தியபோது வடாற்காடு மாவட்டத்திலுள்ள ஆரணி, திருவண்ணாமலை, செய்யார், வந்தவாசி மற்றும் போளூர் வட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மாத்தம் 3,294 விவசாயிகள் 6,499 ஏக்கர் நிலங்களிலுள்ள பயிர்களை 53·32 இலட்ச ரூபாய்க்கு இன்சூர் செய்தனர். இவர்கள் செலுத்திய பிரிமியத் தொகை 1.56 இலட்ச ரூபாயாகும். இதில் வடாற்காடு மாவட்டத்திலுள்ள ஆரணி, திருவண்ணாமலை, செய்யார், வந்தவாசி மற்றும் போளூர் வட்டங்களில் மட்டும், 72 விவசாயிகள் 1,505 ஏக்கர் நிலங்களிலுள்ள பயிர்களை 8.99 இலட்ச ரூபாய்க்கு இன்சூர் செய்தனர். இவர்கள் செலுத்திய பிரிமியத் தொகை ரூ. 22,806.25 ஆகும்.

5. பயிர் ஈட்டுறுதித் திட்டத்தை 1982–83 ஆம் ஆண்டு நெல் இரண்டாம் பயிருக்கு 22 வட்டங்களில் நடைமுறைப்படுத்திய போது, வடாற்காடு மாவட்டத்தில் போளூர், ஆரணி மற்றும் செய்யார் வட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மொத்தம் 5,[illegible]38 விவசாயிகள் 2,512 ஏக்கர் நிலங்களிலுள்ள பயிர்களை 42.13 இலட்ச ரூபாய்க்கு இன்சூர் செய்தனர். இவர்கள் செலுத்திய பிரிமியத் தொகை 1.23 இலட்ச ரூபாயாகும். இதில் வடாற்காடு மாவட்டத்திலுள்ள போளூர், ஆரணி மற்றும் செய்யார் வட்டங்களில் மட்டும் 387 விவசாயிகள் சேர்ந்து 1,055 ஏக்கர் நிலங்களிலுள்ள பயிர்களை 6 இலட்ச ரூபாய்க்கு இன்சூர் செய்தனர். இவர்கள் செலுத்திய பிரிமியத் தொகை ரூ. 21,069.50 ஆகும்.

6. 1982–83 ஆம் ஆண்டில் நெல் முதல் மற்றும் இரண்டாம் பயிர்களுக்கு புள்ளிவிவரத் துறை மற்றும் விவசாயத்துறைகளால் நடத்தப்படும் அறுவடை பரிசோதனைகள் பூர்த்தி பெறாமையால் கொடுக்கவேண்டிய நட்ட ஈடு நிர்ணயம் செய்யப்படாமல் உள்ளது. வடாற்காடு மாவட்டத்தில் நெல் முதல் மற்றும் இரண்டாம் பயிர்களுக்கு பயிர் ஈட்டுறுதித் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்ட வட்டங்களில் அறுவடை பரிசோதனைகளில் விளைச்சல் குறிப்பிட்ட அளவைவிட குறைந்தால் அந்[illegible]

வட்டங்களில் உள்ள பயிர் இன்சூர் செய்த விவசாயிகட்கு
அவர்கள் பயிர் இன்சூர் செய்த அளவுக்கு ஏற்றாற்போல் நட்ட
ஈடு வழங்கப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தமிழ்நாட்டில் பயிர் ஈட்டுறுதித் திட்டம் நெற்பயிருக்கு
மட்டும் முதல், இரண்டாவது பருவ காலங்களில் செய்யப்படுகிற
பயிர்களுக்கு அமல்படுத்தப்பட்டிருப்பதாக அரசாங்கம் சொல்லி
யிருக்கிறது. 1979-ம் ஆண்டு முதல் தமிழகத்தில் 42 வட்டாரங்
களில் இதைச் செயல்படுத்தியுள்ளதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.
இதில் ஒரு வட்டாரத்தை எடுத்துக்கொண்டு ஒரு கிராமத்திலே
இரண்டு அறுவடை வீதம் 16 அறுவடை செய்து, அதனுடைய
சராசரி மகசூலைக் கணக்கிட்டு, அதற்குக் குறைவாக எந்த
விவசாயிகளுக்கு வருகிறதோ இந்தத் திட்டத்திலே சேர்ந்தவர்
களுக்கு அதனுடைய குறைகின்ற மகசூலைத்தான் நட்டயீடாகத்
தருவதாக இந்தத் திட்டம் செயல்பட்டுள்ளதாக அறிக்கையில்
சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு அறுவடை என்பதை
எப்படி, யார் தேர்ந்தெடுக்கிறார்கள்? அதுவும் ஒரு கிராமத்திலே
பல்வேறு வயல்கள் இருக்கும், அதிலே சில வயல்களின் மகசூல்
அதிகமாகக் கிடைக்கின்ற வாய்ப்பிருக்கலாம், சில வயல்களில்
குறைவாக மகசூல் கிடைக்கின்ற வாய்ப்பிருக்கலாம். இதை
எப்படி கணக்கெடுக்கிறார்கள்? அந்த வயல்களைத் தேர்ந்தெடுப்
பவர்கள் யார்? அதனுடைய விவரங்களை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய வினாவுக்குப்
பதிலாகத்தான் கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையிலே சராசரி
என சொல்லப்பட்டிருக்கிறது. சராசரி என்று சொல்கிறபொழுதே
ஒரு வட்டத்திற்கு 16 பயிர் அறுவடைப் பரிசோதனைகளை
நடத்துகிறபொழுது, 16 விதமான இடங்களில் பண்ணைகள்
ஆராயப்படுகின்றன. சில இடங்களில் கிணற்று நீர்ப் பாசனமாக
இருக்கலாம்; சில இடங்களில் ஆற்றுப் பாசனமாகக்கூட
இருக்கலாம்; முப்போகம் விளையக்கூடிய நிலமாகக்கூட
இருக்கலாம்; ஒரு போகம் நிலமாகக்கூட இருக்கலாம். எல்லா
வற்றையும் கணக்கில் கொண்டு மண்ணினுடைய தராதரம் என்ன
என்பதைப் பற்றியெல்லாம் கணக்கில் கொண்டுதான் இது
ஆராயப்படுகிறது. அந்த அடிப்படையில்தான் அது சராசரி என்று
முடிவெடுக்கப்படுகிறது. ஜீ.ஐ.சி.யினுடைய அனுமதியோடும்,
அதுமட்டுமல்லாமல் மைய அரசினுடைய அமைப்பு ஒன்றினுடைய
அணுகுமுறையும் நடைமுறைப்படுத்துகிற பொழுதுதான் இந்த
வழிமுறை நடைமுறைப்படுத்தப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து. இரண்டாவது க...
ஈர்ப்புத் தீர்மானம். திருவாளர்கள் என். கிட்டப்பா ...
இராசமாணிக்கம் ஆகியோர்........

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, நான் ஒரு கேள்விதான் கேட்டேன். வழக்கமாக இன்னொரு கேள்வி கேட்க அனுமதிப்பது உண்டு. ஆகவே, இன்னொரு கேள்வி கேட்க அனுமதி தாருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக் குழுவிலே அப்பழக்கத்தை நிறுத்தியாயிற்று. ஒரு கேள்விதான்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : எங்களுக்கு அது பற்றித் தெரியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவரையோ அல்லது துணைத் தலைவரையோ அதுபற்றி கேட்டுக் கொள்ளுங்கள்.

(ஆ) மயிலாடுதுறையில் சைக்கிள் ரிக்ஷா, ஆட்டோ, வாடகைக் கார் ஓட்டுநர்களிடையே மோதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் என். கிட்டப்பா, இரெ. இராசமாணிக்கம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, "மயிலாடுதுறையில் சைக்கிள் ரிக்ஷா, ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகைக் கார் ஓட்டுநர்களுக்கிடையே நடந்த மோதலினால் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்பட்டு மக்களிடையே நிலவும் கவலை குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறையில் 17–3–1983 அன்று காலை 11 மணிக்கு ஒரு மாட்டு வண்டி மீது திரு. குருமூர்த்தி என்பவர் ஓட்டிச் சென்ற ஆட்டோ ரிக்ஷா மோதியதைத் தொடர்ந்து ஏற்பட்ட தகராறினால்



அங்கிருந்த சைக்கிள் ரிக்ஷா தொழிலாளர்கள் இருவரையும் சமாதானப்படுத்தினர். வண்டிக்குச் சேதம் அதிகம் இல்லை. சுமார் ரூ. 25 மதிப்புக்கு சேதம் இருக்கலாம். 20–3–1983 அன்று இரவு, மாட்டு வண்டிக்காரர் ஒருவர் சைக்கிள் ரிக்ஷா தொழிலாளர் திரு. நாகரத்தினம் என்பவருடன் வந்து ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர் திரு. குருமூர்த்தியைச் சந்தித்து 17–3–1983 அன்று நடந்த தகராறினை சுமுகமாக முடித்ததற்காகப் பணம்கேட்டனர். திரு. குருமூர்த்தி பணம் கொடுக்க மறுத்துள்ளார். குடிபோதையிலிருந்த நாகரத்தினம் குருமூர்த்தியிடம் சண்டைக்குப் போகவே குருமூர்த்தி நாகரத்தினத்தை அடித்து விட்டார். அங்கிருந்த சைக்கிள் ரிக்ஷா தொழிலாளர்கள் நாகரத்தினத்தை ஆதரித்து குருமூர்த்தியை அடித்து விரட்டினர். இதைத் தொடர்ந்து ஒரே சங்கத்தைச் சேர்ந்த வாடகை கார், ரிக்ஷா ஓட்டுநர்கள் ஒன்று சேர்ந்து அங்கேயிருந்த சில சைக்கிள் ரிக்ஷாக்களைச் சேதப்படுத்தினர். திரு. மணி என்கிற ஒரு சைக்கிள் ரிக்ஷா தொழிலாளரைத் தாக்கினர். இது குறித்து மயிலாடுதுறை காவல் நிலையத்தில், இ.பி.கோ. 147, 148, 307, 327 பிரிவுகளின்கீழ் குற்ற எண்கள் 191/83 மற்றும் 193/83 என்று இரு வழக்குகள் பதிவு செய்யப் பட்டுள்ளன.

(முற்பகல் 10.50)

காவல் துறையினர் 21–3–83 அன்று இச்சம்பவம் குறித்து அமைதி ஏற்படுத்த முயற்சித்தனர். அன்றே சேகர் மற்றும் 6 ரிக்ஷா தொழிலாளர்கள் தனது ஆட்டோ ரிக்ஷாவை ரூ. 2,000 மதிப்பிற்குச் சேதப்படுத்தி விட்டனர் என்று அப்துல் ஹமீது என்பவர் புகார் கொடுத்துள்ளார். இது குறித்து மயிலாடுதுறை காவல் நிலையத்தில் இ.பி.கோ. 147, 341, 427 பிரிவுகளின்கீழ் குற்ற எண் 197–ன் கீழ் 83–ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப் பட்டுள்ளது. அன்று மாலை 4.00 மணிக்கு திரு, சிவமணி மற்றும் அவரது நண்பர் சக்தி, நமசிவாயம் ஆகியோரை திரு சின்னசேகர் மற்றும் 4 ரிக்ஷா தொழிலாளர்கள் ஆயுதங்களால் தாக்கியதாக, திரு. சிவமணி புகார் கொடுத்ததன் பேரில் மயிலாடுதுறை காவல் நிலையத்தில் இ.பி.கோ. 147, 148, 324 பிரிவின் கீழ் குற்ற எண் 198–ன் கீழ் 81–ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. 21-3-83 அன்று மாலை மயிலாடுதுறையில் நடந்த கோட்டாட்சியர் நடத்திய கூட்டத்தில் இரு சாராரும் சம்பவத்தை மேலும் தொடர வேண்டாமென்றும், வாகனங்கள் வழக்கம்போல் ஓட்டவேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்து, ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் ஏற்றுக்கொண்டபடி வாகனங்கள் ஓட்டப்படவில்லை. மறுபடி 22–3–83 அன்று கோட்டாட்சியர் மயிலாடுதுறையில் இரு சாராரையும் பேச்சு வார்த்தைக்கு அழைத்ததில் சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்கள் கலந்து கொண்டனர். டாக்சி, ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் கலந்து கொள்ளவில்லை. 23–3–83 அன்று எல்லா சைக்கிள் ரிக்ஷாக்களும், சில டாக்சிகளும் மட்டும் ஓடின. ஆட்டோ ரிக்ஷா ஓடினால், ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் கைது செய்யப்படுவார்கள் என்ற தவறான எண்ணத்தின் அடிப்படையில் ஆட்டோ ரிக்ஷாக்கள் ஓடவில்லை என்று தெரிகின்றது. இன்று

காலை கிடைத்த தகவலின்படி 25-3-83 அன்று தஞ்சை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஓட்டுநர்களை அழைத்து பேச்சு வார்த்தை நடத்தி இருக்கிறார். இதன் பிறகு அன்று மாலை 6 மணியளவில் அவர்கள் வண்டிகளை ஓட்ட விருப்பம் தெரிவித்து, அதன்படி இப்போது ஓட்டி வருகிறார்கள்

மேற்கண்ட சம்பவங்கள் குறித்து, திரு ஜயபபிரகாசம் மற்றும் 16 ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்களும், கணேசன் மற்றும் 16 சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்களும் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப் படடுள்ளனர். மேலே குறிப்பிடட குற்ற எண்கள் 197-ன் கீழே 83, 198-ன் கீழ் 83 ஆகிய இரு வழக்குகளில் சம்பந்தப்பட்ட இரு நபர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப் பட்டுள்ளார்கள். மயிலாடுதுறை நகரில் பலத்த காவல்துறை கண்காணிப்பு போடப்பட்டுள்ளது. தற்போது நிலைமை அமைதியாக உள்ளது,

திரு. என். கிட்டப்பா : தயவு செய்து நீங்கள் என்னை அனுமதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மயிலாடுதுறை நகரில் மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப் பிட்டதைப் போல் அல்லாமல் ஒரு வேளை அவர்களுக்குக் கிடைத்த தகவல் அப்படி இருக்கக் கூடும். 20-3-83 அன்று இரவு 250 சைக்கிள் ரிக்ஷாக்கள் ஓட்டுநர்களுக்கும், அவர்களுக்கு எதிராக 20 ஆட்டோ ரிக்ஷாக்காரர்களுக்கும் மற்றும் 150 'டி. போர்டு' டாக்சி ஓட்டுநர்களுக்கும்—இதிலே கொஞ்சம் வித்தியாசம் இருக்கக்கூடும்—கலவரம் ஏற்பட்டதன் விளைவாக 21-3-83-ல் 23 ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி டிரைவர்கள் இ.பி.கோ. அவர்கள் சொன்ன பிரிவின்படி, நான் கேள்விப்பட வில்லை—உண்மைக்குப் புறம்பாகச் சொல்வதாக நினைக்கக் கூடாது. நான் கேள்விப்பட்டது, உண்மையென நான் நம்புவது 307 ஆவது பிரிவின்படி சங்கத்திற்குச் சார்பற்ற மயிலாடு துறையின் ரிங் லீடர்ஸ் என்று கருதப்படுகிற ஞானசேகரன், துரைக்கண்ணு, நந்தா, நந்தா சொக்கலிங்கம், பண்ணைச் சொக்கலிங்கம், எந்தப் பண்ணைக்கோ எனக்குத் தெரியாது— ஆகியோரின் கைகாட்டுக்கு இணங்கியும், நமது பெருமதிப்பிற் குரிய, ஆர். டி. ஓ. அவர்கள், சூப்பரின்டென்ட் ஆப் போலீஸ் அவர்கள், ஒத்துழைப்பின் பேரிலும் அங்கே பல பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். மயிலாடுதுறை காவல் துறையினர் இந்தத் துறையைப் பற்றி எதுவும் அறியாத அப்பாவிகள் மீது கொலை செய்ய முயலுகிறார்கள் என்ற குற்றஞ்சாட்டி, கைது செய்து காவலில் வைத்துள்ளார்கள். மாண்புமிகு மரியாதைக் குரிய எனது அன்புக்கும் மரியாதைக்கும் உரிய நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் சென்று கொஞ்சம் சிரமத்தைப் பாராமல், ஒரு பெரிய பிரச்சினையாக அங்கே உள்ள நிலைமையை நேரில் கண்டறியவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். துப்பாக்கி முனையைக் காட்டி நீங்கள் எல்லாம் சங்கத்தைப் பிரிக்காவிடடால் இந்தச் சங்கத்திலே அதாவது சைக்கிள் ரிக்ஷா, டாக்சி ஓட்டுநர்கள், அவர்கள் எல்லாம் அடங்கிய சங்கத்தைப் பிரிக்காவிட்டால் நாங்கள் உங்களுடைய லைசென்ஸ்களை பிடுங்கி விடுவோம், நாவலர் இன்னும் அழுத்தம் திருத்தமாகச் சொல்





வார்கள். பிடுங்கிவிடுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். வேடிக்கைக்காக சொல்லவில்லை. உடன் R.D.O. அவர்கள் இருந்திருக்கிறார்கள். R.T.O. அவர்களும் இருந்திருக்கிறார்கள். சூப்பிரன்டென்ட் ஆப் போலீஸ் அவர்கள் இருந்திருக்கிறார்கள். டி.எஸ்.பி. அவர்கள் இருந்திருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் ஒருங்கிணைந்து, சேர்ந்து அவர்களை எல்லாம் கைது செய்து உள்ளே வைத்திருக்கிறார்கள். இந்த நிலை மாற்றப்படுவதற்காக அங்கே உள்ளவர்கள், என்னிடத்திலே தொகுதி சட்டமன்ற உறுப் பினர் என்ற முறையில் நிலைமையை எடுத்துச் சொல்ல வேண்டு மென்று, இந்த நிலையிலேயும்கூட நீங்கள் எப்படியாவது எடுத்துச் சொல்லவேண்டும் என்று சொன்னபோது அதை நான் ஏற்றுக் கொண்டேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இங்கே பதிலிலே வேறுவிதமாக சொல்லியிருக்கிறார்கள். இது உண்மையா என்பதைக் கண்டறிவதற்காக நாம் எது எதற்கோ 45 நிமிடங்கள் என்று ஒதுக்கக்கூடிய நீங்கள் இதற்கும் ஒதுக்கவேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். இன்றையதினம் மயிலாடு துறையில், அந்த நகரத்திலே ஓடிக்கொண்டிருக்கிற சைக்கிள் ரிக்ஷாக்கள் பக்கத்திலே ஆயுதம் தாங்கிய போலீசோடு அவர்கள் ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள். இதை யாரும் மறுக்க முடியாது. எனவே நேரில் பார்ப்பவர்களுக்குத்தான் தெரியும். வேண்டு மானால் அமைச்சர் அவர்கள் செல்லுகின்ற நேரத்தில் அதை மாற்றிவிடுவார்கள் பிளீச்சிங் பவுடர் போட்டு மாற்றுகிறார்களே, அதைப்போல். (குறுக்கீடு). அமைச்சர் அவர்கள் வருகின்ற நேரத்தில், அதிகமாக மயிலாடுதுறைக்கு அவர்கள் வருவதில்லை. எனவே இந்த நேரத்தைப் பயன்படுத்தி, நாங்கள் அதைச் செய்தோம், அல்லது செய்து கொடுக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கைது செய்யப்பட்டவர்களைக் கூட ஜாமீனிலே விடவில்லை. அவர்கள் நிபந்தனையற்ற ஜாமீனிலே விடுவதற்கும் அவர்கள் மீது தொடரப்பட்ட சைக்கிள் ரிக்சாவாக இருந்தாலும், ஆட்டோ ரிக்சாவாக இருந்தாலும், டாக்சியாக இருந்தாலும்கூட, யார் டிரைவராக இருந்தாலும், பாரபட்சம் காட்டாமல், எல்லோரையும், அதிலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள், அதைப் போல இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக் கிறார்கள். எனவே இப்படிப்பட்டவர்கள்தான் தினம் தினம் என்னை வந்து கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? இதைப் பற்றி ஏன் நீங்கள் முயற்சி எடுக்கவில்லை என்று என்னைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த வழக்குகளை எல்லாம் வாபஸ் பெற. மீண்டும் சகஜ நிலை உருவாக்க வேண்டும், அதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக இந்த ரவுடிகளைக் கைது செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரே ஒரு ரவுடியைப் பற்றித்தான் இங்கே குறிப்பிட்டார்கள். என்னிடத்திலே லிஸ்ட் இருக்கிறது. ஒரு ரவுடியினுடைய பெயரைத்தான் இங்கே குறிப்

பிட்டிருக்கிறார்கள். ஆனால் பல ரவுடிகள் இருக்கிறார்கள். அத்தகைய ரவுடிகளைக் கைது செய்துவிட்டால் நிலைமை உடனடியாகக் கட்டுக்குள் வந்துவிடும். போலீஸ்காரர்கள் தேவையில்லை. போலீஸ்காரர்கள் எப்போதும் குடியிருந்து குடித்தனம் நடத்தமுடியாது. எனவே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சகஜ நிலைமையை உருவாக்க, அங்கே சென்று பார்த்து, வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அளித்த அறிக்கையிலேயே அங்கே ஏற்பட்டுவிட்ட சூழ்நிலையைப் பற்றி குறிப்பிட்டுக்காட்டியுள்ளேன். இதிலே கட்சி மாச்சர்யமோ, கொள்கையோ அல்லது வேறு பல நிலைமைகளோ வரவில்லை. அங்கே வன்முறைச் செயல்களும், சட்டம் ஒழுங்கு மீறிய செயல்களும், வேண்டத்தகாத, விரும்பத்தகாத சூழ்நிலைகளும் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. ஒரு பக்கம் ஆட்டோ, டாக்சி டிரைவர்களும், மற்றொரு பக்கம் சைக்கிள் ரிக்ஷாக்காரர்களும பிரிந்து எவ்வளவோ சமாதானப்படுத்தியும் கூட, மீண்டும் மீண்டும் கலவரத்தில் ஈடுபட்டதன் காரணமாக, அவரவர்கள் கொடுத்த புகார் மனுக்களின் அடிப்படையில்தான் வழக்கு பதிவு செய்யப்பட்டது. அப்படி வழக்கு பதிவு செய்யப்பட்ட பின்னாலேதான் அதற்கு உரியவர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டு இருக்கிறார்கள். அந்த வகையிலேதான் வழக்குகள் போடப் பட்டு உள்ளன.

அதிலே ஒரு வழக்கிலே இ.பி.கோ. 147, 148, 324, 307 அடிப்படையிலும், மற்றொன்றிலே, 147, 341 மற்றும் 427 அடிப்படையிலும் வழக்குகள் பதிவு செய்யப்புட்டுள்ளன. நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி ஜெயப்பிரகாஷ் மற்றும் 16 ஆட்டோ ஓட்டுனர் மீதும், கணேசன் மற்றும் 16 சைக்கிள் ரிக்ஷா ஓட்டுனர் மீதும், வழக்கு போடபட்டு, கைது செய்யப்பட்டு அவர்கள் காவலில் வைக்கப்பட்டு இருக்கிறார்கள். அதிலே அவர்கள் அந்தந்த வழக்குகளின் தன்மையின் அடிப்படையில் ஜாமீன் பெற்று வெளியே வர முடியுமோ அவர்கள் வெளியே வரலாம். ஜாமீன் பெற்று வரமுடியாத ஒரு வழக்கு இருக்குமானால் அது வழக்கு மன்றத்தின் மூலமாக தீர்க்கப்படவேண்டும். சுமுகமான சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்பதற்காக கோட்டாட்சித் தலைவர் அவர்கள் இரண்டு நாட்கள் அவர்களைக் கூப்பிட்டு வைத்து பேசியும்கூட அவர்களை மீறி அவர்கள் செயல்பட்டதால் சிலபல ரௌடிகள் அங்கே இருக்கக்கூடும்— அவர்களுடைய தூண்டுதலின் காரணமாக இப்படிப்பட்ட செயல்கள் நடைபெற்றிருக்கக்கூடும். அவர்களைக் கைது செய்துள்ளதாக அவர்கள் எடுத்துச்சொல்லி இருக்கிறார்கள். அதற்குப் பிறகு மாவட்ட கண்காணிப்பாளர் 16 ஆம் தேதி வந்து எல்லோரையும் கூப்பிட்டு வைத்துப்பேசி எல்லா வண்டிகளும் ஓடும்படி செய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்கள் அங்கே ந்து



கோட்டாட்சித் தலைவருடன் இருந்து, இரு சாராரையும் சமாதானப்படுத்தி, எதிர்காலத்திலே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் வராது என்கிற வகையில் உத்தரவாதம் தருகின்ற அளவிற்கு வருமானால், அப்படிப்பட்ட சூழ்நிலையில் வழக்குகள், மற்றவைகள் மேலும் தொடராமல் இருக்கலாம். ஆனால் வழக்குகள் பதிவு செய்யப்பட்டபிறகு அதற்கு மேல் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. அங்கே சமாதான சூழ்நிலை ஏற்பட்டு, அப்படிப்பட்ட நிலைமைகள் எதிர்காலத்தில் மீண்டும் வராது என்று இரு தரப்பினரும் சமாதானமாகிவருவார்களானால், யாரையும் கொடுமைப்படுத்தவேண்டிய அவசியம் இல்லை. வாட்டி வதைக்கிற அவசியம் இல்லை என்று வேண்டுமானால், அரசு அதற்குத் தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளலாம். ஆகவே, அப்படிப்பட்ட நிலைமைகளுக்கு அங்கேயிருக்கிற சட்டமன்ற உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்கள், அங்கேயுள்ள கோட்டாட்சியரோடு கலந்து பேசி, ஒரு முடிவு செய்யலாம். அதற்கு அரசு உறுதுணையாக இருந்து, அவர்கள் எண்ணுகிற எண்ணம் ஈடேறும் வகையில் ஒரு சுமுகமான சூழ்நிலை உருவாக்க எதையெதைச் செய்யவேண்டுமோ அதையதைச் செய்ய அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(8) வரவு-செலவுத் திட்டம், 1983-84, வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு
இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,78,77,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் உள்ள கோவில்களில் அதிகமாக கடவுளின் சிலைகள் அடிக்கடி திருடும் அவலநிலையை அறவே ஒழிக்கவேண்டிய அவசியத்தைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,78,77,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

**THIRU N.S.V. CHITTAN;** Sir, to discuss about the need to include at least one person conversant in the agamas, upanishads,

and vedas as a Trustee of the Temples in the State, I move—

'That the sum of Rs.2,78,77,000 under Demand No. 12 Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959, be reduced by Rs.100/-'

கோரிக்கை எண். 25—சின்கோனா.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 25—சின்கோனா என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,75,76,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்''.

திரு. பாபு ஜனார்த்தனன்: தலைவர் அவர்களே, சின்கோனாவில் பணிபுரியும் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு செய்யாமை குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 25—சின்கோனா என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,75,76,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

திரு. கே. கல்லன் : தலைவர் அவர்களே, சின்கோனா துறையில் உள்ள ஆய்வுக்கூடத்தை விரிவுபடுத்துவதைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 25—சின்கோனா என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,75,76,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்''.

திரு. ஏ. டி. கருப்பையா : தலைவரவர்களே, சின்கோனாவில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வீட்டுமனைகள் கட்டிக் கொடுக்காதது பற்றிய கோரிக்கையின் மீது விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 25—சின்கோனா என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,75,76,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்''.

கோரிக்கை எண். 45—காட்டுவளத் துறை.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 45—காட்டுவளத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 10,19,57,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''





திரு. சு. பாலன் : தலைவரவர்களே, காடுகளில் வளரும் விலை மதிக்கத்தக்க மரங்களைத் திருட்டுத்தனமாக வெட்டி எடுத்துச் செல்வதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்காதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 45—காட்டுவளத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,19,57,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்''.

திரு. சி. பழனிமுத்து : தலைவரவர்களே, பெரியகல்ராயன் மலைப்பகுதியிலுள்ள மலைவாழ் மக்களின் நிலங்களில் வனத் துறையினர் மேற்படி நிலங்களில் மரம் நடுவதை நிறுத்தி அம் மக்களுடைய நிலங்களை அவர்களுக்கு ஒப்படைக்க செய்ய வேண்டியதன் அவசியத்தைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 45—காட்டுவளத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,19,57,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்''.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, காடுகளை அநியாயமாக அழிப்பதைத் தடுக்கத்தக்க நடவடிக்கை மேற்கொள்ளாமலிருப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 45—காட்டுவளத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,19,57,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்''.

கோரிக்கை எண். 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,48,86,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, குத்தாலம் தொகுதியில் கவிச்சக்கரவர்த்தி கம்பன் பிறந்த தேரழுந்தூரில் கம்பருக்கு நினைவாலயம் கட்ட வேண்டியது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 47—செய்தி, சுற்றுலா, திரைப் படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,48,86,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

THIRU N.S.V. CHITHAN: To discuss about the need to fix lower rates of charges for stay in the rest houses run by the Tamil Nadu Tourism Development Corporation (Rest Houses) to enable poorer sections of the people to avail such facilities, I move—

'That the allotment of Rs.2,48,86,000 under Demand No. 47 Information, Tourism and Film Technology, be reduced by Rs.100/-'

திரு. டி. மணி: தலைவரவர்களே, பேச்சிப்பாறை பகுதியை சுற்றுலா பகுதியாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்காதது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 47—செய்தி, சுற்றுலா, திரைப் படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,48,86,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

கோரிக்கை எண். 55—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 55—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 16,04,24,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

திரு. சு. பாலன்: தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 55—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16,04,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

THIRU S. RAJARAMAN: To discuss about the need to set up a Committee of public men not connected with the Government to examine the expenditure incurred on the purchases made by the Forest administration, I move—



600 008
136019

'That the allotment of Rs.16,04,24,000 under Demand No. 55 Capital Outlay on Forests, be reduced by Rs.100/-'

திரு. டி. மணி: தலைவரவர்களே, காட்டுவளத்தைப் பாதுகாக்கப் போதுமான நடவடிக்கை எடுக்காததைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 55—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16,04,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, இங்கே மானியக் கோரிக்கைகளை முன்வைத்து, இந்தத் துறைகளைப்பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் *மாண்புமிகு மன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் தமிழ் குறிப்புகளிலே உள்ள கருத்துக்களை நான் இந்த அவையிலே பேசியதாகக் கருதி, அவைக் குறிப்பிலே இடம்பெறச் செய்ய வேண்டுமென்று தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லுகின்ற கருத்துக்களை ஒட்டி, இறுதியிலே நான் அளிக்கவேண்டிய விளக்கத்தைத் தெரிவிக்கிறேன் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு அவையின் நிகழ்ச்சிகளைப் பிற்பகல் ஒன்றரை மணிக்கு முடிக்க வேண்டும். ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் அருள்கூர்ந்து, நேரத்தை அனுசரித்து, கருத்துக்களைச் சுருக்கமாக எடுத்துச்சொல்லி, விவாதத்தைக் குறிப்பிட்ட நேரத்திற்குள் முடிக்க உதவியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. மு. அரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சரவர்களால் அளிக்கப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கைகள் 12, 25, 45, 47 மற்றும் 55 ஆகியவைகள்மீது என்னுடைய கருத்துக்களை இந்த அவையிலே கூறுவதற்கு வாய்ப்பளித்ததற்காக தங்களுக்கு என்னுடைய நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

*288-396-ம் பக்கங்களில் இணைப்புகளாக அச்சிடப்பெற்றுள்ளது.

(முற்பகல் 11-10)

காட்டுவளம்தான் நாட்டு மக்களுக்கு வளம். இந்த நாடு நலம் பெற வேண்டுமென்றால் காடு வளர்ச்சியுற வேண்டும். அந்த வகையில் காட்டுவளத்திற்கு பாதுகாப்பு வேண்டும் காடு அழிந்து, பருவமழை பொய்க்கின்ற காரணத்தால் நாடு பாதிக்கப்படுகிறது. மரங்கள் அதிகமாக வெட்டப்படுகிற காரணத்தால் மழை பெய்வதில்லை. மழை இல்லாததினால் மக்கள் வாழ்வதற்கு மிக இன்றியமையாத குடிதண்ணீர் கூட நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிற நிலைமையிலே நாம் இருக்கிறோம். நீலகிரி மாவட்டத்திலும் அந்தப் பிரச்னைகள் உள்ளன. அங்கே முன்பெல்லாம் காடுகளின் அடர்த்தி அதிகமாக இருக்கும். ஆனால் தற்போது அந்த அடர்த்தியான காடுகளை ஆங்காங்கே வெட்டிக் கொண்டே வருவதால், மழைக்காலங்களில் நிலச்சரிவு, மண்சரிவு போன்ற அபாயங்கள் ஏற்படுகிற நிலை உண்டாகிறது. இதுபோன்ற அபாயங்கள் தடுக்கப்பட வேண்டு மானால் காடுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை நான் வலியுறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இல்லையென்றால் இனிமேல் நீங்கள் நீலகிரியில் மரங்களையே பார்க்க முடியாது, வெறும் மலைகளைத்தான் பார்க்க முடியும். அத்தகைய அபாயம் நீலகிரி மாவட்டத்தை கொஞ்சம் கொஞ்சமாக பீடித்துக் கொண்டே வருகிறது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

இப்போதே நீலகிரி மாவட்டத்திலே முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு குடிதண்ணீர் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. இப்படி குடிதண்ணீருக்குப் பஞ்சம் ஏற்பட்டு வரும் நேரத்தில், குடி தண்ணீர் வசதியில்லாமல் எப்படி மலர்க் கண்காட்சிகளையும் கோடை விழாக்களையும் நடத்தப்போகிறீர்கள் என்ற உணர்வு கேள்வியாக எழுந்து எல்லோர் மனத்திலேயேயும் கேட்டுக் கொண்டிருக்கிறது. காரணம், உதகை போன்ற இடங்களில் ஓட்டல் களிலே கூட உணவுக்கும் குடிப்பதற்கும் தண்ணீர் கிடைக்காத நெருக்கடி இருப்பதால், இந்தக் கோடை விழாவினையும் மலர்க் கண்காட்சியினையும் வருகிற செப்டம்பரில்—அதாவது அடுத்த சீசனில் வைத்துக் கொண்டால் மிக நல்லதாக இருக்கும். அதைத் தான் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்வதை, நான் என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

அதேபோல, நீலகிரி மாவட்டத்திலே மரங்கள் மிகமிக அதிகமாக வெட்டப்படுகின்றன. இங்கு அங்கு என்று குறிப்பிட்டுப் சொல்ல முடியாத அளவுக்கு எல்லாப் பகுதிகளிலேயும் வெட்டப் படுகின்றன. பெரும் உயர்ந்த மரங்களாக இருக்க வேண்டிய நிலையில் அல்லாமல், எல்லா மரங்களுமே கழுத்துக்குக்கீழே போய் விடுமோ என்ற வகையிலே வெட்டப்படுகின்றன. அப்படிப்பட்ட



நிலையிலும் கூட சமைப்பதற்காக வாங்குகின்ற விறகுகளின் விலை 10 கிலோவுக்கு ரூ.4.20 என்ற நிலையில் விலை இருக்கிறது. ஆனால் வெட்டப்படும் இத்தகைய பெருமரங்கள் வேறு மாவட்டங்களுக்கும் மாநிலங்களுக்கும் கொண்டு செல்லப்படுகின்றன.

3, 4 மாதங்களுக்கு முன்பு இப்படிப்பட்ட நிலையைப் பற்றி, துணை மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே ஒரு புகார் மனு கொடுக்கப்பட்டது. பெரிய பெரிய மரங்கள் வெட்டப்பட்டு, அவை லாரிகளிலே கொண்டு செல்வதைப்பற்றி அவருக்குத் தெரிவிக்கப்பட்டது. மாவட்டத் துணை ஆட்சித் தலைவரே ஆக்ஷன் எடுத்து, அவைகளைப் பிடிக்கச் சென்றபோது, அந்த மரங்கள் எல்லாம் வெட்டப்பட்ட விறகுகளாகத்தான் காண முடிந்தது. இப்படி எந்தப் பகுதியில் மரங்கள் வெட்டப்பட்டு, கடத்திச் செல்லப்பட்டாலும், அதைப்பற்றிய தகவல் கிடைத்து, அதிகாரிகள் போய் அவற்றைப் பிடிக்கும்போது, அவை பாதி யாகவோ காலாகவோ அல்லது விறகாகவோ மாறிவிடுகின்றன.

அந்த அளவுக்கு ஒட்டு மொத்தமாக ஒரு கூட்டமே இதில் திட்டமிட்டு செயல்பட்டு மரங்களைக் கடத்திக்கொண்டுவருகிறது. இவற்றைத் தடுப்பதில் அரசு தீவிரமாகக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோத்தகிரி பகுதியிலேயும் இந்த நிலை இருக்கிறது. கீழ் கோத்தகிரி பகுதியிலே அடர்த்தியான மரங்களையே பார்க்க முடியாத வகையில் மரங்கள் அதிகம் வெட்டுப்படுகின்றன. சாலை ஓரங்களில் போகும்போது பார்த்தால், வரிசையாக தென் படும் அடர்த்தியான மரங்களைக் கண்டு, மரங்கள் வெட்டப்படுவ தில்லை, அப்படியேதான் இருக்கின்றன என்கிற ஒரு எண்ணம் நமக்கு ஏற்படும். ஆனால் அந்தக் காடுகளின் மத்தியப் பகுதியில் போய் பார்த்தால்தான் தெரியும் எந்த அளவு மரங்கள் வெட்டப்பட்டு, அந்தப் பகுதிகள் அனேகமாக மொட்டையாக காட்சியளிக்கும் நிலைமை இருக்கிறது என்பது.

இப்படி வெட்டப்படும் மரங்களைக் கையிலே கொண்டுபோக முடியாது, பையிலே கொண்டு போக முடியாது, தலையிலேயும் சுமந்து செல்ல முடியாது. அந்த அளவு அடர்த்தியான, கனமான மரங்கள் அவை. ஆகவே, அவைகள் லாரிகள் மூலமாகத் தான் கொண்டு செல்லப்படுகின்றன என்பது உறுதி. ஆகவே, அப்படிப்பட்டலாரிகளைக்கண்டுபிடித்து, அந்த மரங்களை வெட்டி கடத்துபவர்களுக்கு கடுமையான தண்டனையை அளிக்க அரசு முன்வரவேண்டும். வெறும் அபராதம் மட்டும் போட்டால் போதாது. அபராதம் போட்டால் கட்டிவிட்டு போய்விடுவார்கள்.

ஆகவே அபராதமும் போடவேண்டும், பொருள்களைப் பறி முதலும் செய்யவேண்டும். அதோடு சிறைதண்டனையையும் அவர்களுக்கு அளிக்கச் செய்தால்தான் இப்படிப்பட்ட நடவடிக் கைகளைத் தடுக்க முடியும். வருங்காலத்திலாவது இதுபோன்ற கடும் நடவடிக்கைகளை எடுத்து, நீலகிரியில் உள்ளமரங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 'மலைகளிலும் தனியார் காடுகளிலும் மரங்கள் பெருமளவில் கட்டுப்பாடின்றி வெட்டப்படுவதைத் தவிர்த்து, காடுகளைப் பாதுகாக்கும் பொருட்டு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அக்குழுவில் மாவட்ட ஆட்சித் தலைவர், வனத்துறை, வருவாய்த்துறை, மண் வளப் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் உள்ளனர். காடுகளை அழிவினின்று பாதுகாக்க அரசு உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க இக்குழு உதவுகிறது' என்று குறிப்பேட்டிலே போடப்பட்டுள்ளது. இந்தக் குழு உண்மையாகவே காடுகளைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபடுகிறதா என்றால் இல்லை என்றுதான் கூறவேண்டும். இதன் முடிவுகளை அந்தந்த மாவட்டத் தலைநகரங்களில் எடுப்பதில்லை, கோவையிலேயும் சென்னையிலேயும்தான் அந்த முடிவுகளை எடுக்கிறார்களே தவிர, மாவட்டத் தலைநகரங்களில் கூட்டி, அங்குள்ள அதிகாரிகளை அழைத்துப் பேசி பிரச்னைகளை ஆராய்ந்தால்தான் தெரியும். அங்குள்ளவர்களுக்குத்தான் அந்தந்த பிரதேச நிலைமைகள் சரியாகத் தெரியும். எந்தெந்த மரங்களை வெட்டலாம். எவைகளை முக்கியமாகப் பாதுகாக்க வேண்டும், என்னென்ன மரங்கள் அங்கே விளைகின்றன போன்ற விவரங்கள் அந்தந்த மாவட்டங்களில் உள்ளவர்களுக்குத்தான் தெரியுமே தவிர, இங்கே சென்னையிலும், கோவையிலும் உட்கார்ந்து கொண்டு முடிவு செய்யும் அதிகாரிகளுக்குத் தெரியாது. ஆகவே, அந்த அடிப்படையில், அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த மக்களை நேரில் சந்தித்து உரையாற்றி நடவடிக்கை எடுக்கும் வகையில், அந்தக் குழு செம்மையாகச் செயல்படும் வகையில் அவற்றை இனியாவது சரியாக இயக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக குன்னூர்–காட்டேரி ரோட்டிலே ஒரு செக் போஸ்ட் இருந்தது. மரங்கள் கடத்தப்படுவதைத் தடுப்பதற்காக அந்த செக் போஸ்ட் இருந்தது. ஆனால் கடந்த ஓராண்டுக் காலமாக அந்த செக் போஸ்டைக் காணவில்லை. ஒருவேளை கடத்துகிறவர்களுக்கு அனுகூலமாக அது எடுக்கப்பட்டிருக்கிறதா என்பது தெரியவில்லை. எனவே செக் போஸ்ட்களை ஆங்காங்கே அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வாட்டில் பாக் என்ற சீகைப் பட்டை வனத் துறையில் அதிகமாக உற்பத்தியாகின்றது. அதனுடையவிலை வெளியே 1500 ரூபாய் என்ற அளவுக்கு வனத்துறையில் விற்கின்றது. ஆனால் டேன் இந்தியா என்ற கம்பெனிக்கு அது 700, 800 ரூபாய் என்ற அளவுக்குக் கொடுக்கப்படுவதாகத் தெரிகின்றது. அதேபோன்று தின்னிங் பட்டை என்பதும் வெளியே 700 ரூபாய் என்ற அளவில் விற்கின்றது. ஆனால் அதுவும் அந்த டேன் இந்தியா கம்பெனிக்கு கிட்டத்தட்ட [illegible]0 ரூபாய் என்ற அளவுக்குத்தான் கொடுக்கப்படுவதாகத் தெரிகின்றது. எனவே அவற்றை எல்லாம் பொது ஏலத்தில் விட்டால் பல வியாபாரிகள் வந்து வாங்குவார்கள். அதனால் வன இலாகாவிற்கும் நல்ல இலாபம் கிடைக்கும். (மணியடிக்கப் பெற்றது.)





அடுத்து நீலகிரியிலே உயர்ந்த மரங்களான வேங்கை இளிஞ்சி, நாகம் போன்ற மரங்கள் வளருகின்றன. அந்த மரங்கள் எல்லாம் தற்போது அழிந்துகொண்டிருக்கின்றன. அவற்றை எல்லாம் காப்பாற்றவேண்டும். அந்த வகையில் வாக்கி–டாக்கி என்ற சாதனம் அமைக்கப்படவேண்டும். தற்போது ஒரு பாதையில் தான் அது அமைக்கப்பட்டுள்ளது. எனவே மலைச்சரிவில் பல பகுதிகளிலும் வாக்கி டாக்கி கருவிகளை அமைத்தால் அந்த மரங்கள் கடத்தப்படுவதை ஓரளவுக்குக்கட்டுப்படுத்த முடியும்.

அடுத்து சின்கோனாவைப் பொறுத்தவரையில் 4,030 பணியாளர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால் அவர்களில் 2000பேர் தான் நிரந்தரப் பணியாளர்கள். மீதி 2,030 பேர் தற்காலிகமாகப் பணியாற்றுகிறார்கள். நாகரீக உலகிலே இவ்வளவு அதிகமான பேர் தற்காலிக ஊழியர்களாகப் பணியாற்றுவதை யாருமே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எனவே அந்த நிறுவனத்திலே இவ்வாறு அதிகமான பேர் தற்காலிக ஊழியர்களாகப் பணியாற்றுவது வேடிக்கையாகவும் வினோதமாகவும் இருக்கின்றது. எனவே அங்கே உள்ள தொழிலாளர்களைநிரந்தரமாக்கவேண்டும். அவர்களுக்குத் தற்போது 9 ரூபாய் 78 காசுதான் கூலியாகத் தரப்படுகின்றது. அவர்களுக்குக்குறைந்தபட்சம் 15 ரூபாயாவது கூலி தர வேண்டும். மேலும் அவர்களுக்கு போனஸ் தரவேண்டும்.

அடுத்து நீலகிரியிலே கற்பூரத் தைலம் ஆங்காங்கே சிறு சிறு முறையில் தயாரிக்கப்படுகின்றது. சின்கோனாத் துறையில் அதை அதிகமான அளவில் உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். நீலகிரிக்கு யார் வந்தாலும் என்ன பொருளை வாங்கிச் செல்வது என்றால் கற்பூரத் தைலத்தை வாங்கிச் செல்வது என்று சொல்கின்ற அளவுக்கு மதிப்பு வாய்ந்தது அந்தத் தைலம். எனவே அங்கே தைலம் தயாரிக்கின்ற தொழிற்சாலையைப் பெரிய அளவில் நடத்த வேண்டும்.

அடுத்து அங்கே உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு, சின்கோனாத் துறையில் வேலைவாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும்.

அடுத்து, நீலகிரி என்பது மலைராணியாக விளங்குகின்றது. அப்படிப்பட்ட இடத்திற்கு சுற்றுலாப் பயணிகள் அதிகம் பேர் வருகிறார்கள். எனவே மதுரையில் நுழைவாயில் அமைக்கப்பட்டிருப்பது போன்று அங்கேயும் நுழைவாயில்கள் அமைக்கப்பட வேண்டும். லேம்ஸ்ராக், பகாசுரமலை, கோத்தகிரிபகுதியில்உள்ள கோடநாடு என்ற கேத்தரின் வாட்டர் பால்ஸ்என்றஇடங்களுக்கும் சுற்றுலா பயணிகள் அதிகம் வருவதால் அங்கே அவர்கள் வந்து தங்கிச்செல்வதற்குஏற்றவகையில் ஏற்பாடுகளைச்செய்யவேண்டும்.

அடுத்து குன்னூரிலே 100 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஒரு சிறு விநாயகர் கோயில் இருக்கின்றது. 1978 ஆம் ஆண்டு வந்த பெரும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு அது தற்போது இடிந்து விழும் நிலையில் இருக்கின்றது. இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட வந்து பார்த்திருக்கிறார்கள், மாண்புமிகு

முதலமைச்சர் அவர்களும் வந்து பார்த்திருக்கிறார்கள். எந்த நேரத்தில் அந்தக் கோயில் இடிந்து விழுமோ என்று அச்சப்படுகின்ற நிலைமை இருக்கின்றது. அந்தக் கோயிலை உடனடியாகப் புதுப்பித்துத் தரவேண்டும். அடுத்து அங்கே ஒரு கல்யாண மண்டபம் கட்டும் பணி 10 ஆண்டுகளாக நடந்து வருகின்றது. அதை விரைவில் கட்டித்தர ஏற்பாடு செய்யவேண்டும். அந்த வினாயகர் கோவிலுக்குச் சொந்தமான ஒன்றேகால் ஏக்கர் பூமி இருக்கின்றது. அந்த இடத்தில் சினிமா தியேட்டர் கூட இருக்கின்றது. அந்த சினிமா தியேட்டரிலிருந்து அந்தக் கோயிலுக்கு சரியாக வாடகை கூட கொடுக்கப்படாத நிலைமை இருக்கின்றது. எனவே அந்தக் கோயிலில் நாள்தோறும் பூசைகள்நடத்துவதற்குக் கூட வழியில்லாமல் இருக்கின்ற நிலைமை இருக்கின்றது. எனவே அந்தக் கோயிலின் வருமானத்தைப் பெருக்கி அந்தக் கோயிலையும் புதுப்பித்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்
(மணியடிக்கப்பெற்றது.)

(முற்பகல் 11–20)

திரு. ஆர். ரங்கசாமி: மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்களே, மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள மானிய கோரிக்கைகளான அறநிலையத்துறை. சின்கோனா, காட்டுவளம். செய்தி சுற்றுலா ஆகிய மானிய கோரிக்கைகளைவரவேற்று எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அறநிலையத்துறையைப் பொறுத்தவரையில் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற பேரறிஞர் அண்ணாவின் லட்சியத்தை கொள்கையாகக்கொண்டு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அரசு இயங்கி வருகிறது. அதே நேரத்தில் மத நம்பிக்கை உள்ளவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் இந்த அரசு சிறந்து விளங்குகிறது. அந்த அடிப்படையில்தான் இந்து மதத்தின் லட்சியங்களை, கோட்பாடுகளை சிறப்புகளை, வரலாற்றுகளை பேணிக் காப்பது இந்த அறநிலையத்துறையின் கடமையாகும். புரட்சித் தலைவர் அவர்கள் அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்றதற்கு பின்னால்தான் பல சாதனைகளை நிகழ்த்தி இருக்கிறார்கள். ஒருவன் கால் போன போக்கில் அவசியம் இன்றி கட்டுப்பாடின்றி சுற்றிக்கொண்டு இருந்தால் பொறுப்பின்றி கோவில் மாடு போல் சுற்றி கொண்டிருக்கிறானே என்பார்கள். அதைப்போல ஒரு காலத்திலே இந்தத்துறை கேட்பாரற்று கிடந்தது என்று சொல்வதில் தவறில்லை. தமிழ் நாட்டில் கோயில்களுக்குச் சொந்தமாக 5 லட்சம் ஏக்கர் நிலம் உள்ளது என்று கூறப்பட்டு இருக்கிறது. 28 கோடி ரூபாய் இந்த ஆண்டு வரை குத்தகை பாக்கி உள்ளது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

குத்தகை பதிவேடு சட்டம் குத்தகைதாரரை வெளியேற்றுவதற்கு வேண்டுமானால் பாதுகாப்பு கொடுக்கலாமே தவிர குறைந்த குத்தகை தருகின்ற அந்தக்குத்தகை பணத்தைக் கூட 28 கோடி ரூபாய்வரை அவர்கள் கொடுக்காமல் வைத்து இருப்பதை அரசு கண்டிப்பாக அனுமதிக்கக்கூடாது என்பதை இந்த





நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த 5 லட்சம் ஏக்கர் நிலம் ஒரு தனி மனிதருடைய நிலம் அல்ல. இந்த நாட்டு மக்கள் எல்லாம் வணங்குகின்ற இந்து அறநிலையத்துறையின் ஆண்டவனுக்குச் சொந்தமான நிலம். அது அனைவருக்கும் பயன்படவேண்டுமே தவிர தனிப்பட்ட ஒரு சிலருடைய கையில் அது இருக்கக்கூடாது என்பதை இந்த நேரத்தில் நான் தெரியப்படுத்த விரும்புகிறேன். ஆகவே குந்தகை பதிவேடு சட்டத்திலிருந்து கோவில் நிலங்களுக்கும், சத்திரங்களுக்கும் விலக்கு அளித்து அரசு சட்ட திருத்தம் கொண்டு வரவேண்டும் என்று என்னுடைய பணிவான வேண்டுகோளை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்களும், திருமடங்களுக்குச்சொந்தமான நிலங்களும் சொத்துக்களும் பெருமளவு தவறாகப்பயன்படுத்தப்பட்டு வருகின்றன. முன்பு இருந்த அரசுகள் எல்லாம் அதைக்கவனிக்காமல் இருந்த தவறின் காரணமாக பல பேருடைய பிடியில் சிக்கிவிட்டது என்ற குற்றச்சாட்டை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்தக் குற்றங்களை கண்டுபிடிக்க இந்தத் துறை சிறப்புப்பிரிவு ஏற்படுத்தி விசாரணை செய்து வருவது புரட்சிகரமான ஒரு செயலாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உதாரணமாக தென் ஆற்காடு மாவட்டம் சிதம்பர அருள்மிகு சபாநாயகர் கோவிலுக்கு 2 ஆயிரம் ஏக்கர் நிலம் இருப்பதாக சொல்லப்படுகிறது. 187 ஏக்கர் நஞ்சை நிலமும், 244 ஏக்கர் புஞ்சை நிலமு குத்தகைக்கு விடப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது. ஆண்டு குத்தகை ரூ. 39,157 என்று சொல்லப்பட்டிருக்கிறது.ஒரு ஏக்கர்நஞ்சை நிலத்திற்கு 90 ரூபாய் ஆண்டுக்கு குத்தகை என்பது எவ்வளவு பெரிய மோசடி என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அதேநேரத்தில் 431 ஏக்கருக்கு கணக்கு வந்து இருக்கி து. 1569 ஏக்கர் என்ன ஆனது என்ற கணக்கு இங்கே காட்டப்படவில்லை. தீட்சதர்கள் இந்த 39,157க்கு கணக்கு காட்டாமல் ரூ. 3215-க்கு மட்டுமே இது வரையில் கணக்கு காட்டி வந்துள்ளார்கள் என்பது கண்டிப்புக்குள்ளானது. இதில் இருந்து கோவில் சொத்துக்கள் எப்படி எல்லாம் தவறாக தனிப்பட்ட சிலரால் சீரழிக்கப்படுகிறது என்பதை நாம் புரிந்துகொள்ள முடிகிறது இந்த அரசு எடுத்திருக்கிற முயற்சி புரட்சித் தலைவருடைய அரசின் புனிதமான ஆட்சிக்கு புகழ் சேர்க்கும் செயலாகும். பொது தீட்சதர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்கள். உயர்நீதிமன்றம் அரசின் ஆணைக்கு தடை ஆணை விதித்துள்ளதை அரசு நீதிமன்றத்தில் உண்மை நிலைமை நியாயத்தை ஆண்டவன் சொத்தை நீதிமன்றத்திற்கு எடுத்துக்காட்டி தடையை நீக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால்தான் ஆலயப் பணியாளர்களுக்கு பணிப் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டது. அர்ச்சகர்கள், பூசாரிகள், சுமார் 82,600 பேர்களுக்குப் பணிப் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆலய வருவாயில் நாற்பது சதவீதம் வரை பணியாளர்களுக்கு சம்பளமாகக் கொடுக்கலாமென்ற உத்திரவை புரட்சித் தலைவர் அரசு போட்டுள்ளது. ஆலய வருவாயில் ஆலயப் பணியாளர்கள் நாற்பது சதவீதம் வரை சம்பளம் பெற முடியும் என்ற இந்த உத்திரவு கோயில் சொத்துக்களைச் சுரண்டுகிறவர்களை தவறாகப் பயன்படுத்துபவர்களை அரசுக்கு அடையாளம் காட்டவேண்டுமென்ற ஆர்வம் ஆலயப் பணியாளர்களுக்கு வரும் என்பதில் சந்தேகமில்லை.

இந்து மக்களின் ஆலய வழிபாட்டில் சிறப்பான பல மாறுதல்களை அரசு செய்துள்ளது. வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயங்கள் எல்லாம் கேட்பாரற்றுக் கிடந்தன. அப்படிப்பட்ட ஆலயங்களை சுமார் 3 கோடி ரூபாய் செலவில் செப்பனிட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதற்கு துறையின் மூலம் நிதி உதவியும் ஆலோசனையும் வழங்கப்படுகிறது.

ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் சமமே என்ற அடிப்படையில் ஆதிதிராவிடர்கள், பிற்பட்டவர்கள் தகுதியின் அடிப்படையில் அர்ச்சகர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். இதன் மூலம் ஆலய வழிபாட்டில் சமத்துவத்தை உருவாக்கிக் காட்டியுள்ள புரட்சித் தலைவர் அரசு தாழ்த்தப்பட்டவர்களுக்கு பிற்பட்டவர்களுக்கு திருமணம் செய்து வைப்பது ஆலய நிதியில் ஆயிரம் ரூபாய் ஒரு திருமணத்திற்குச் செலவு செய்வதன் மூலமாக அவர்களுக்கு சம உரிமை வழங்கியிருக்கிறது.

சுதந்திரத் திருநாளில் சிறப்பு வழிபாடும் விருந்தும் நடத்தி அனைவரும் சமமாக அமர்ந்து வழிபடுகின்ற வாய்ப்பை அரசு ஏற்படுத்தியிருக்கிறது அது மட்டுமல்ல இந்தத் துறை கல்வித் துறைக்கு சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் நிதியில் கலைக் கல்லூரி, மகளிர் கலைக் கல்லூரி, தொழிற் பயிற்சி பள்ளி ஆடவர் மகளிர் ஆகியவர்களுக்கு நடத்தப்படுகிறது. இப்படி 19க்கும் மேற்பட்ட கல்லூரிகள் வேத ஆகம பாடசாலைகள் முதியோர் இல்லங்கள் அன்பு இல்லங்கள் சித்த மருத்துவம் போன்றவை நடத்தப்பட்டு வருகின்றன வருவாய் உள்ள அனைத்து ஆலயங்களிலும் கல்லூரிகளையும் மருத்துவமனைகளையும் நலிவுற்ற மக்களுக்கு உதவி செய்கின்ற முறையில் ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சிகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தொகுதியான சத்தியமங்கலத்தில் அருள்மிகு பண்ணாரியம்மன் திருக்கோயில் உள்ளது, அங்கே சுமார் 10 லட்ச ரூபாய் ஆண்டுக்கு வருமானம் வரும். அந்தக் கோயிலில் அன்பு இல்லத்தைத் துவக்குவதற்காக ஆண்டுக்கு 10 லட்சம் ரூபாய் அனுமதித்து வழங்கியிருப்பதற்காக நான் அமைச்சர் அவர்களையும் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களையும் மனதார வாழ்த்துகிறேன், நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



இந்த ஆலயத்தின் மூலம் ஒரு தொழில் நுட்பக் கல்லூரி பாலிடெக்னிக் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டுமென்பதுஎன்னுடைய பணிவான வேண்டுகோள் ஆகும். அதை ஏற்படுத்தக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த ஆலயத்தின்மூலம் ஒரு மருத்துவ மனையையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வனத்துறையைப் பொறுத்தவரையிலும் காடுகளில் கிடைக்கும் வருவாயும் காடுகள் தொடர்பான செலவுகளும் 1982—83 ஆம் ஆண்டில் காடுகளில் ரூ. 19.34 கோடி வருவாய் கிடைக்குமென மதிப்பிடப்படுகிறது. 1983—84 இல் அது 21.41 கோடியாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வருவாயில் பெரும் பகுதி சந்தன மரம் காடுகளை அடிப்படையாகக்கொண்டு இயங்கி வரும் தொழில்களுக்கு மூலப்பொருட்கள் மூலம் கிடைக்கிறது. கடந்த சில ஆண்டுகளாக சந்தனக் கட்டைகளை ஏற்றுமதி செய்வதை மத்திய அரசு தடை செய்ததின் காரணமாக சந்தன மரத்தில் கிடைக்கும் வருவாய் பாதியாகக் குறைந்துள்ளது. மாநில அரசு கடுமையாக முயற்சிகள் செய்து வருவாய் ஈட்ட முயற்சித்தாலும் மத்திய அரசு தடையாக உள்ளது வருந்தத்தக்க செய்தியாகும், மத்திய அரசை நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்வது எல்லாம் வாழு, வாழவிடு என்பதுதான். இந்த அரசு இந்தத் துறைக்கு ஆண்டுக்கு ஆண்டு அதிக நிதி ஒதுக்கி வருகிறது 1981—82 இல் 19.76 கோடி 1982—83 இல் 23.82 கோடி 1983-84 இல் அது 25.78 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது. காடுகளில் மரங்கள் உற்பத்தியைப் பெருக்க இந்தத் தொகை செலவு செய்யப்பட்டிருக்கிறது. இதன்மூலமாக காட்டுவளம் பெருகும்.

(முற்பகல் 11-30)

காடுகள் சில சமூக விரோதிகளால் வெட்டி அழிக்கப் படுவதைத் தடுக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வனப்பரப்பை அழிய விடாமல் தடுக்க இந்த அரசு வனப் பாதுகாப்பிற்காக பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. கடந்த ஆண்டு 21.89 லட்சம் எக்டேராக இருந்த வனப்பகுதி இந்த ஆண்டு 21.95 லட்சம் எக்டேராக அதிகரிக்கப்பட்டுள்ளது. காட்டு வளத்தைப் பெருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது. வனப் பாதுகாப்பு பணியில் புரட்சித் தலைவர் அரசு வந்தபிறகு தான் அதிக அக்கறை காட்டி வருகிறது. வனப் பாதுகாப்பு படை அமைத்தல், சோதனை சாவடிகள் ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் அனுமதியின்றி மரங்களை கடத்துதல், காட்டில் தீயிட்டு அந்த கரிகளை கடத்தி விற்பனை செய்தல் இவைகளை சமூகவிரோதிகள் செய்வது தடுக்கப்பட்டு வருகிறது. இந்தப் பணிகளை மேற்கொள்ள நவீன முறையில் செய்தி தொடர்பு சாதனம், வாக்கி டாக்கி அமைக்க ஆய்வுகள் முடிந்துள்ளது. அது மிகவும் பயனுள்ள திட்டமாகும். பல லட்சக்கணக்கான ஏக்கர்களில் ஒரு குறிப்பிட்ட சில ஊழியர்கள் பணியாற்றுகிறார்கள். அங்கு சிலஇடங்களில் 10 ஆயிரம் ஏக்கர், 20 ஆயிரம் ஏக்கர் என்று நிலப்பரப்பு இருக்கிறது. இந்த சூழ்நிலையில் காட்டில் நடக்கிற தவறுகளை எப்படி தனியாகச்சென்று கண்டறிய

முடியும்? ஆனால் இதுபோன்ற வாக்கிடாக்கி முறையை ஏற்படுத்தினால் அவர்கள் இருக்கிற இடத்திலேயே இருந்து அங்கே ஏதேனும் தவறு நடந்தது என்று சொன்னால் உடனடியாக தகவல் கொடுத்து அதை பிடிப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். தனியாகச் செல்கின்றவர்களுக்குத் துப்பாக்கிப் போன்ற கருவிகளை அளித்து உதவ வேண்டுமென்று என்னுடைய பணிவான கோரிக்கையைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

திரு எஸ். இராசாராமன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கோரிக்கைகள் எண் 15. 25, 47, 55 மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைய தினம் தமிழகத்தில் இருக்கிற மக்கள் அதிகப்படியாக சினிமாவில் மோகம் கொண்டிருக்கிற நிலையில், அத்தனை சினிமா தியேட்டர்களிலும் காலை, பகல், இரவு என்று எல்லா வேளைகளிலும் சினிமாக்காட்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதனால் கல்லூரிகளில், பள்ளிகளில் படிக்கிற மாணவர்கள் கல்வி நிலையங்ளுக்கு சரியாக செல்வதில்லை. அதன் காரணமாக படிக்கின்ற மாணவர்கள் தங்களுடைய படிப்பை பாழாக்கிக்கொண்டு வருகிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் சினிமாவில் நடிக்கவேண்டுமென்ற மோகம் அவர்களை ஆட்டிப்படைக்கிறது. ஆகவே நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வது, அரசாங்கம் பள்ளிகள், கல்லூரிகள் நடக்கின்ற நேரங்களில் திரையிடப்படும் சினிமா காட்சிகளை தடை செய்ய வேண்டும். மேலும் கல்லூரி, பள்ளிகளுக்கு அருகில் சமீப காலங்களில் சினிமா ஷூட்டிங்குகள் அதிகமாக நடைபெறுகின்றன. குறிப்பாக நம்முடைய மெரினா கடற்கரையில் அண்ணா சமாதியிலிருந்து' அகில இந்திய வானொலி நிலையம் வரையில் இருக்கிற பகுதிகளில் கடந்த ஒரு வார காலமாக அதிகமான அளவில் சினிமா ஷூட்டிங்குகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த பகுதியில் அதிகமான கல்லூரிகள் இருக்கின்றன. குறிப்பாக பெண்கள் கல்லூரிகூட அங்கே இருக்கிறது ஆகவே அந்தப் பகுதியில் சினிமா ஷூட்டிங்குகள் எடுப்பதை தடைசெய்ய வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் கல்லூரிகளில், பள்ளிகளில் காம்பவுண்ட் சுவர்களில் ஆபாசமான சினிமா போஸ்டர்களை அச்சடித்து ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள். இவைகள் எல்லாம் காம்பவுண்ட் சுவர்களில் ஒட்டக்கூடாது என்ற தடைச் சட்டத்தை இந்த அரசு போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு சினிமா போஸ்டர்கள் அச்சடிப்பதற்கு ஒரு சென்சார் போர்டு நியமிக்க வேண்டும், அந்த சென்சார் போர்டு அனுமதி பெற்று போஸ்டர்களை அவர்கள் ஒட்டுவதற்கு வழி செய்ய வேண்டும். அப்படி அனுமதித்தால்தான் ஆபாசமான போஸ்ட்டர்களை ஒழிப்பதற்கான வாய்ப்பு ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



காட்டிலே இருக்கிற பல்வேறு மரங்களை இன்றையதினம் அந்த பகுதிகளில் இருக்கிற மக்கள் திருடி விடுகிறார்கள் அல்லது வெட்டிவிடுகிறார்கள். அதன் காரணமாக அந்தப் பகுதியிலே இருக்கிற காடுகள் அழிக்கப்படுகின்றன, தமிழகத்தில் ஒரு காலத்தில் மும்மாரி பெய்து கொண்டிருந்தது போய் இன்றைய தினம் வறட்சியாக ஆக்கப்பட்டிருக்கிறது என்பதை அரசு உணரும். ஆதலால் காட்டு மரங்களை வெட்டுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, உரிய அளவுக்கு தண்டிக்க, சட்டத்தைத் திருத்தகூடிய விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

காட்டிலே இருக்கின்ற மிருகத்தை இப்பொழுது பலபேர்கள் தெரியாமல் காட்டுக்குள்ளே சென்று வேட்டையாடி, சுடுகின்ற அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், காட்டிலே இருக்கிற மான், புலி போன்ற மிருகங் களுடைய தோல்களை அன்னிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் தடைசெய்யவேண்டும். இதன்மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இந்திய திருநாட்டிலேயே, தமிழகத்தில்தான் புனிதமான கோயில்களை நிறைய வைத்திருக்கிறோம். இந்த ஆலயங்களில் வருகின்ற வருமானத்தை வைத்து, கோயிலை நிர்வாகம் செய்ய முடியவில்லை. குறிப்பாக, ஆலயத்திலே இருக்கிற நிலங்களுக்குக் குடியானவர் பாதுகாப்புச் சட்டம் இருக்கிற காரணத்தினால், ஆலயத்திற்குச் சொந்தமான நிலங்கள் இப்பொழுது பாதிக்கப் படுகின்றன. குறிப்பாக, தஞ்சை மாவட்டத்திலே பல்வேறு கோயில்களிலே இருக்கிற நிலத்தைக் குத்தகைக்கு வைத்திருக் கின்ற குத்தகைதாரர்கள் நிலத்தினுடைய குத்தகையைச் சரியாகக் கொடுப்பதில்லை. இதன் பயனாக அங்கேயிருக்கிற பல்வேறுகோயில்களுக்கு வேண்டிய பூஜைகள் இன்றைக்குச் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த அரசு உணர வேண்டும்.

அதோடு மட்டுமல்லாமல், அங்கேயிருக்கிற ஊழியர்களுக்குச் சம்பளம்கூட கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிற காரணத்தினால் குடியானவர் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து கோயில்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலே உள்ள ஆலயங்களில் அறங்காவலர்களைச் சென்ற ஆண்டுக்கு முன்பு நியமித்தார்கள். இப்பொழுது பல்வேறு ஆலயங்களில் அரங்காவலர் குழுவே நியமிக்கப்படவில்லை. குறிப்பாக, அதற்குப் பதிலாக கர்த்தாவை நியமிக்கிறார்கள். ஒருவரே அந்த நிர்வாகத்தை எடுத்துச் செயல்படுகிற காரணத்

தினால், நல்ல விதத்திலே செயல்படுவதற்கு உறுதுணையாக இல்லை. சர்வாதிகாரிபோல் ஒரு கர்த்தா நியமிக்கப்படுகிற காரணத்தினால் அவர் வைத்ததுதான் சட்டம் என்ற நிலை ஏற்படுமே தவிர, அனைத்து ஆலயங்களிலும் ஒரு குழுவை நியமிக்கவேண்டும், அப்படி குழுவை நியமிக்கும்போது ஆளுகின்ற கட்சியை சேர்ந்தவர்களை இப்பொழுது நியமித்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலே அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களை தாழ்த்தப்பட்டவர்களை டிரஸ்டிகளாக நியமிக்க வேண்டும். அப்படி நியமித்தால்தான் நிச்சயமாகத் தவறு ஏற்பட உறுதுணையாக இருக்காது என்று சொல்லிக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன்

ஊழல்கள், ஒழுங்கீனங்கள் காரணமாக, 3 ஆண்டுகளாக பதவி நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு இன்றைக்கு கர்த்தா பதவி அளிக்கப்படுகிறது. உதாரணமாக, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த சுவாமிமலையில் ஒரு கர்த்தா நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். நீதிமன்றம் அவரை நீக்கியிருக்கிறது. ஆனாலும்கூட அவரைக் கர்த்தாவாக நம்முடைய அரசு நியமித்திருக்கிறது. அதனுடைய மர்மம் என்ன என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், சுவாமிமலையிலிருந்து யானையை ரூ. 21 ஆயிரத்திற்கு ஏலம் விட்டிருக்கிறார்கள். அந்தத் தொகை ஆலயத்தினுடைய கணக்கிலேயே இருக்கிறது. புதிதாக அவர்கள் யானை வாங்கவில்லை.

அவர்கள் யானை வாங்காவிட்டாலுங்கூட, யானை வாங்குவதாகச் சொல்லி, ஆலயத்திற்கு வருகின்ற பல நபர்களுடத்தில் பணம் வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, செகந்தராபாத்திலேயிருந்து ஒரு நபர் ஆலயத்திற்கு சாமி தரிசனத்திற்கு வந்திருக்கிறார்கள் அவரிடத்திலே ரூ 5,000 பணத்தைப் பெற்றிருக்கிறார்கள். இதுவரையிலும் கோவிலுக்கு வேண்டிய யானை வாங்கப்படவில்லை யென்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 11-40]

திருமணத்திற்காக, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும் சரி, காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலும் சரி, ரூ. 30 வசூல் செய்து கொண்டிருந்தார்கள். இப்பொழுது அதை ரூ.50 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். ரூ. 30 வசூல் செய்த காலத்தில் அங்கு திருமணங்களுக்கு வேண்டிய அத்தனை சடங்கு சாமான்களும் கொடுத்தார்கள். இப்பொழுது ரூ. 50 வசூலித்தாலும் கூட, அவைகளை இலவசமாகக் கொடுக்கவில்லை. அதோடு மட்டுமல்ல, ரூ. 1000/-க்கு கீழே வருமானமுள்ள அனைவர்க்கும், இலவசமாக திருமண மண்டபத்தில் திருமணம் செய்து கொள்வதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். ஆந்திராவிலே லட்சம் ரூபாய் வருமானமுள்ள





கோயில்களுக்கெல்லாம் ஒரு உதவியாளர் போஸ்ட் போடுகிறார்கள். ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், அந்த ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன் மாதத்திற்கு ஒரு கோயிலுக்கு ரூ. 1 லட்சம் வருமானம் வருகின்ற பல்வேறு கோயில்கள் தமிழ்நாட்டிலே இருக்கின்றன. அந்தக் கோயில்களுக்கு எல்லாம் நிச்சயமாக ஒரு ஏ.சி. கிரேட் உள்ள அதிகாரிகளை நியமிக்க வேண்டும். அப்படி நியமித்தால்தான் தவறுகள் நடைபெறாமல் இருக்க ஏதுவாக இருக்குமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

திரு. செ. செம்மலை: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, அறநிலையத்துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த 5 மானியக் கோரிக்கைகளை ஆதரித்து, வனத்துறையைப் பற்றியும், அறநிலையத்துறையைப் பற்றியும் ஒரு சில கருத்துக்களை இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன்.

இன்றைக்கு நாட்டினுடைய வளமே காட்டினுடைய வளத்தைப் பொறுத்துத்தான் இருக்கிறது என்ற அந்த ஒரு அடிப்படை உண்மை இன்றையதினம் நாம் உண்மையிலேயே அனுபவபூர்வமாக உணர்ந்திருக்கிறோம். இன்றைக்கு நாட்டிலே பெரும் வறட்சி என்று சொன்னால் காரணம் மழை இல்லை; உணவு நிலைமை சரியில்லை என்று சொன்னால், அதற்குக் காரணம் மழை இல்லை; இன்னும் சொல்லப் போனால், மின்சாரம் நீர் நிலை மின் நிலையங்களில அதிகமாக உற்பத்தி ஆகவில்லை என்று சொன்னால் அதற்குக் காரணம் மழை இல்லை. மழை ஏன் பெய்யவில்லை என்ற ஒரு கேள்வி எழுப்பப்படுகிறபோது, நமக்கு விடையாகக் கிடைப்பது காடுகள் அதிகமாக வளர்க்கப்படவில்லை, வளர்க்க வேண்டுமென்ற ஒரு பதில்தான் இன்றைக்கு நம்மாலே பெற முடிகிறது. இன்றைக்கு நாட்டினுடைய நிலப்பரப்பில் 3-ல் ஒரு பாகம் காடுகளாக இருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான், நம்முடைய நாட்டைப் போன்ற சீதோஷ்ண நாடுகளுடைய பருவ நிலை சரியாக அமையும் என்பது இன்றைக்கு ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்படுகின்ற உண்மையாக இருந்து வருகிறது. எனவே நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் 33 சதவிகிதப் பரப்பளவிற்கு காடுகள் வளர்க்கப்படுகிற சூழ்நிலையில், இன்றைக்கு நம்முடைய கைவசம் இருப்பது 16 சதவிகிதமாக மட்டுமே இருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்கிறபொழுது இன்னும் நம்முடைய நாட்டில் எந்த அளவிற்கு காடுகள் பாதுகாக்கப்படவேண்டும், என்ற அந்த உண்மையை நாம் உணர்ந்தாக வேண்டும் இப்படிப்பட்ட 16 சதவிகிதம் உள்ள இந்த காட்டினுடைய நிலப்பரப்பிலுள்ள மரங்கள்தான் நாம் வீடு கட்டுவதற்குத்தேவையான மரங்களாகவும், விறகு எரிப்பதற்கான மரங்களாகவும் மற்றும் தொழிற்சாலைக்கு வேண்டிய கச்சாப்பொருளாகவும், இன்றைக்கு நாம் பெறவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே இந்த தேவைகளைப் பயன்படுத்திக் கொண்டு மேலும் மேலும் மரங்களை வளர்க்க வேண்டிய

கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். எனவே அந்த அடிப்படையில் தான் மாண்புமிகு புரட்சித் தலைவர் முயற்சி காரணமாகவும்' மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் முயற்சியின் காரணமாகவும் இன்றைக்கு ஸ்வீடன் நாட்டினுடைய உதவியைக்கொண்டு 'சிடா' 10 ஆண்டுகளுக்கான ரூ. 100 கோடித் திட்டத்தை இன்றைக்கு சமுதாயக் காடு வளர்ப்பு என்ற அந்த திட்டத்தின் அடிப்படையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகிறார் என்பதை இந்த நேரத்தில் நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோல இன்றைக்கு சமூக வளர்ப்புக் காடுகளை செயல் படுத்திக் கொண்டுவருகிற நேரத்தில், இன்றைக்கு உள்ள பிரச்சினை அந்த மரங்களை நடுவதற்குரிய நிலப்பரப்புகள் நமக்கு கிடைக்கவில்லை என்ற ஒரு குறைபாடு நமக்கு இருக்கிறது. அதற்கான காரணத்தை நாம் ஆராய்ந்து பார்க்கும்பொழுது, இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்கிற இதே நேரத்தில், மற்றைய இதற்கு முன்னாலேயிருந்த அரசுகள் 10,15 ஆண்டுகளுக்கு முன்னாலே அந்த முயற்சியிலே ஈடுபட்டிருப்பார்களேயானால், நிச்சயமாக இன்றைக்கு காடுவளம் நல்ல முறையிலே வளர்க்கப்பட்டு, செல்வாக்கோடு, செழிப்போடு, இருந்திருக்கும் என்ற அந்த உண்மையைத்தான் நாம் உணரமுடிகிறது. எனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாக இருந்தாலும் சரி, காங்கிரஸ் ஆட்சியாக இருந்தாலும் சரி, ஏழைகளுக்கு பட்டாக்களை கொடுக்கிறோம் என்ற அந்த அடிப்படையில் பட்டாக்களைக் கொடுத்தார்களே தவிர, அப்படிப் பட்ட பட்டாக்களைக் கொடுக்கிற நிலங்கள்தான் காடுகளை வளர்க்கத் தேவையான இடங்கள் என்று அவர்கள் எண்ணிப் பார்க்கத் தவறியதன் காரணமாக மரங்கள் வளர்ப்பதற்குக்கூட நிலப்பரப்பு நமக்குப்போதியஅளவு இல்லைஎன்கிறஅந்த ஒருநிலை தான் இருக்கிறது. அப்படிப்பட்ட பட்டாகொடுத்த நிலங்களும், வேளாண்மையைவளர்க்கக்கூடியவனவாக இல்லை என்பதும் இந்த நேரத்தில் நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். எனவே மாண்புமிகு அமைச்சரவர்களின் மேலான கவனத்திற்கு நான் கொண்டு வருவதெல்லாம், இன்றைக்கு அப்படிப்பட்ட மரங்கள் வளர்க்கப்படுகிற நேரத்தில், அந்த கட்டாயத்தை நம்பி இருக்கிற நேரத்தில் மரங்கள் வளர்க்கப்படுவதற்கு,-மற்ற சாலைகள் போடுவதற்கும், தொழிற்சாலைகள் கட்டுவதற்கும் எப்படி நிலம் ஆர்ஜிதம் செய்வதை போல, மரங்களை வளர்ப்பதற்காகவே நிலங்களை ஆர்ஜிதம் செய்யவேண்டும் ஒரு சட்டத்தைக்கூட நாம் கொண்டு வந்தால் நன்றாக இருக்குமென்று நான் என்னுடைய கருத்துக்களை சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன்.

அதைப்போல புறம்போக்குகளை நாம் பட்டா செய்கிறபோதுகூட அந்தப் புறம்போக்கை அனுபவித்துக்கொண்டு இருப்பவர்கள், மரங்கள் நடுவார்களானால் அந்த நிலப்பரப்பிலே மரங்களை நட அவர்கள் விருப்பப்படுவார்களானால், அப்படிப்பட்ட விருப்பத்தின் அடிப்படையிலே அந்த ஏழைகளுக்கு நிலப் பட்டா கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல் இன்றைக்கு இந்தோனேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளிலே, மலைச்சாரல்களிலே அவர்கள் சொந்த நிலமாக இருந்தாலும் சரி, அல்லது அரசு நிலமாக இருந்தாலும் சரி, அங்கே கட்டாயமாக மரங்கள் வளர்க்கப்பட வேண்டும் என்று ஒரு கடுமையான சட்டத்தைக்கூட அந்த நாட்டிலே கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட சட்டத்தை, தேவைப்பட்டால் நம்முடைய நாட்டிற்கும் கொண்டுவர அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏதோ இப்படி மரங்களை வளர்ப்பதினாலே நிலப்பரப்புகள் குறைந்து, அதனால் விவசாயம் பாதிக்கப்படும் என்று நாம் அஞ்சத் தேவையில்லை. காரணம் இப்போது விவசாயம் செய்து கொண்டிருக்கிற நிலப்பரப்பிலே நாம் விவசாயத்தை இன்னும் 10 சதவீதம் கூட்டினால், விவசாயத்தை மேலும் செழிக்க வைக்கமுடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல இன்றைக்கு பல நதிகள் உயிரற்ற நதிகளாக ஓடிக்கொண்டிருக்கின்றன. எனவே நதிகளின் நீரோட்டத்தை அதிகப்படுத்த அந்த நீர்ப்பிடிப்புகளில் அதிக மரங்களை நடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். காரணம் மரங்கள் அடர்ந்த பகுதியிலே பாய்கின்ற நீர் நிலத்தடி நீராக கீழே சென்று நிலத்தடி நீரை வளர்த்து உயர்த்துகிற காரணத்தாலே இந்த முயற்சிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புவது எல்லாம், இன்றைக்கு ஒரு லட்சம் ஏழைகள், தலைச்சுமை விறகை நம்பி வாழ்க்கை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் இன்றைய தினம் குற்ற உணர்வோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் மற்றவர்களால் திருடர்கள் என்ற பட்டம் சூட்டப்பட்டு, அவர்கள் ஒரு குற்ற உணர்வோடு தங்களது வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். எனவே இது ஒரு பெரிய சமூகப் பிரச்சனையாக இருக்கிறது. எனவே அவர்களைப் பயன்படுத்தி இந்த காடு வளர்ப்பதற்கு எந்த வகையிலே அவர்களைப் பயன்படுத்த முடியுமோ அப்படி அவர்களைப்பயன் படுத்திக்கொண்டு, அவர்களுடைய பொருளாதாரத்தை முன்னேற்றும் வகையிலே வழிவகைகளைச் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு சந்தன ஏற்றுமதிக்குக்கூட மத்திய அரசை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வலியுறுத்திவருவதாக கொள்கைக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி ஏற்றுமதி மூலம் நமக்கு வருவாய் அதிகரித்தாலும், இன்றைக்கு நம்முடைய பகுதியிலே அதனுடைய கச்சாப் பொருள்களைப் பயன்படுத்தி சந்தனத் தைலம், பொம்மைகள், அகர்பத்தி

வாசனைத் திரவியங்கள் போன்ற தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதன் மூலமாக நம்முடைய அரசுக்கு வருவாய் ஏற்படுத்தித் தரத்தக்க அளவிலே, தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கத்தக்க அளவிலே முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில் ஓரிரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன், இன்றைக்கு அறநிலையத் துறையைப் பொறுத்தவரை சட்டங்கள் தெளிவாக இல்லை. அமைச்சர் அவர்களுடைய நோக்கங்கள் நல்லதாக இருந்தாலும், அவர்கள் பல்வேறு சீர்திருத்தங்கள் செய்ய வேண்டும் என்ற அந்த எண்ணம் இருந்தாலும், இன்றைக்கு இருக்கிற சட்டங்கள் தடையாக இருக்கின்றன, சட்டத்தை சாதமாக்கிக்கொண்டு, இன்றைக்கு மாண் மிகு அமைச்சர் அவர்கள் எவ்வளவோ முயற்சிகளை மேற்கொண்டாலும், பலர் சந்துபொந்துகளிலே நுழைந்துகொண்டு, தங்களுக்குப் பாதுகாப்பு பத் தேடிக்கொள்கிறார்கள். இதற்கு உதாரணமாக ஒன்றிரண்டு கருத்துக்களை நான் சொல்ல விருப்புகிறேன். உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், அறநிலையத்துறையைப் பொறுத்தவரையிலே செக்ஷன் 34-ன்படி இன்றைக்கு ஒரு கோயில் நிலத்தை குத்தகைக்கோ, அடமானத்திற்கோ, அல்லது விலைக்கு விற்பதாக இருந்தாலும் கூட, 5 ஆண்டுக்கு மேல் என்று சொன்னால், இன்றைக்கு ஆணையாளருடைய அனுமதி வேண்டும் என்று சொல்கிறார்கள் ஆனால் இந்தச் சட்டத்திலே அனுமதியைக் கொடுத்துவிட்டு, ரிஜிஸ்ட்ரேசன் சட்டத்திலே இது பற்றி எதுவும் சொல்லவில்லை எனவே அப்படிப்பட்ட குத்தகைக்கு விடும்போதோ, அல்லது அடமானம் வைக்கும் போதோ; அங்கே ரிஜிஸ்ட்ரார் ஆபிசிலே அதைத் தடுக்கச் சொல்ல முடியவில்லை எனவே அப்படிக் கோயில் நிலத்தை அடமானம் வைப்பதோ, அல்லது விலைக்கு விற்பதோ, அல்லது குத்தகைக்கு விடுவதோ என்று சொன்னால், ஆணையாளருடைய அனுமதி வேண்டும் என்று இருக்கிறது. அந்த ஒரு பிரிவை ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டிலும், அந்தச் சட்டத் திருத்தத்தை கொண்டுவரவேண்டும் என்றும் இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில் செக்ஷன் 101-ன்படி, ஒரு அறங்காவலர் குழுவை நியமித்து நாம் அவரிடத்திலே பொறுப்பை ஒப்படைக்க வேண்டும் என்று சொன்னால் இன்றைக்கு கோயில் சொத்துக்களை ஒப்படைப்பதற்கு முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டினுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தவேண்டியிருக்கிறது. அப்படிச் செய்வதன் மூலம், வீண் கால தாமதம் ஏற்படுகிறது எனவே அப்படிப்பட்ட இந்தச் சட்டச் சிக்கலின் காரணமாக அவர்கள் தன்னுடைய பொறுப்பை ஏற்றுக்கொள்வதிலேகூட அதிக காலதாமதம் ஏற்பட்டு, பதவி ஏற்காமல் போய்விடுகிற சூழ்நிலை இருக்கிறது. எனவே அப்படிப்பட்ட செக்ஷன் தேவையில்லை எனவே, அதற்கான உரிய சட்டத் திருத்தத்தைக் கொண்டுவரவேண்டும்.



அதேபோல் செக்ஷன் 116-ன்படி ஒரு கோயிலுக்கு உண்டியல் வைக்கவேண்டும் என்று உத்தரவு போட்டோமே ஒழிய, அதை யார் வைப்பது என்று தெளிவாக இல்லை. அப்படி உண்டியல் வைக்க பரம்பரை அறங்காவலர்களோ, மற்றவர்களோ, மறுப் பார்களானால், அந்த அதிகாரம் கமிஷனருக்கு இல்லை. எனவே அப்படி அவர்கள் மறுக்கிற நேரத்தில ஆணையாளர் அவர்கள் பாதுகாப்போடு அந்த உண்டியலை கோயிலிலே வைக்கவேண்டும் என்ற அந்த வகையிலே சட்டத் திருத்தங்கள் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது அறநிலையத்துறையிலே பல்வேறு சீர்திருத்தங்களை அமைச்சர் அவர்கள் செய்யவேண்டுமென்று விரும்பினாலும்....
(மணியடிக்கப்பெற்றது.)

(முற்பகல் 11.50)

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கும் மானியக்கோரிக்கைகள் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை நான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

முதலாவதாக இந்த செய்தி, தகவல், ஒலிபரப்பு மானியக் கோரிக்கை மீது ஒரு விஷயத்தை நான் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். உங்களுக்கு எல்லாம் தெரியும். ஏற்கனவே பத்திரிகைகட்டுப்பாடு சட்டம் பீகாரில் கொண்டு வரப்பட்டு, 1-2 மாநிலங்களில் அதைப் பின்பற்றிக் கொண்டு வந்து, நம்முடைய தமிழக மாநில அரசாங்கமும் அதைப்பற்றி ஒரு சட்டம் கொண்டு வந்த, அது சரியல்ல என்று நாங்கள் எல்லோரும் இங்கே கண்டனக் குரல் எழுப்பியதன் காரணமாக ஒரு குழு அதற்காக அமைக்கப்பட்டு, அதனுடைய அறிக்கையை இந்த அரசு எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறது என்று குறிப் பிடப்பட்டுள்ளது. இதற்கு இடையில் என்ன நடந்தது என்று சொன்னால், இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக்கொண்டு வரவிரும்பிய பீகார் அரசு அந்தச் சட்டம் செத்துப்போய் விட்டது, என்று அவர்களாகவே அதைச் சவப்பெட்டியில வைத்து விட்டார்கள். இது எப்படி இருக்கிறது என்று சொன்னால், மலையைக் கில்லி எலியைப்பிடித்தார்களாம். அப்படிப் பிடித்த எலியும் செத்துப்போன எலியாம். ஆகவே, சீ வேண்டாம் என்று தூக்கிப்போட்டு விட்டார்களாம். ஆகவே தமிழக அரசும் அதைக் கைவிடவேண்டும் என்று நான் மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, சினிமா என்பது நம்முடைய பட்டியலில் இருக்கும் அதிகாரம்; அதை மத்திய அரசாங்கம் பறித்துக் கொள்ளும் நடவடிக்கை எடுத்து வருகிறது. அதற்கு நமது தமிழக அரசு கொஞ்சம்கூட செவி சாயக்கக் கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன். இப்படிச் செய்தால் நமக்கு இருக்கும்

கொஞ்ச நஞ்ச அதிகாரத்தையும் பிடுங்கும் முயற்சியாகும். அதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன். நேரம் அதிகம் இல்லாததால் ஓரிரு கருத்துக்களை மட்டும் சொல்கிறேன்.

கோவில் நிலங்களைப் பற்றி சில கருத்துக்களை நான் சொல்லவிரும்புகிறேன். தமிழ்நாட்டில் சுமார் 5 லட்சம் ஏக்கர் நிலம் இந்து சமய நிறுவனங்களுக்குச் சொந்தமாக உள்ளது. இருப்பினும், அவர்களிடமிருந்து குத்தகை வசூலிக்க முடியவில்லை. பணம் வசூலிக்க முடியவில்லை என்று சொல்லப்பட்டு இருக்கிறது 28 கோடி ரூபாய் வரைக்கும் நிலுவை உள்ளது என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அதன் காரணமாக பல வேலைகள் நடைபெறாமல் இருக்கின்றன. ஆகவே, அதை வசூலிக்க என்ன செய்யலாம் என்பதைப்பற்றியெல்லாம் பாலிசி நோட்டில் இருக்கிறது. உங்களுக்கு எல்லாம் தெரியும்.

இப்போது வறட்சி பல ஆண்டுகாலமாக இருக்கிறது. இந்த வறட்சியின் காரணமாக பல்வேறு குத்தகை பாக்கிகள் ரத்து செய்யப்பட்டு இருக்கின்றன. அரசே அதற்காக சட்டம் கொண்டு வந்து இருக்கிறது. அதையெல்லாம் தள்ளுபடி செய்து இருக்கிறது. இப்படிப்பட்ட நேரத்தில் கோவிலுக்கு இருக்கும் நிலங்களில் இருந்து மட்டும் நாம் கறாராக வசூலிக்கவேண்டும் என்று சொல்வது சரியாக இருக்குமா என்பதை தமிழக அரசு சிந்திக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதை வைத்துத்தான் கோவில்களில் செய்யப்படவேண்டியவைகளை செய்யவேண்டும் என்பது அல்ல. பெரும்பகுதியாக கோவில்களில் பக்தர்கள் அள்ளி அள்ளி கொடுக்கிறார்கள். அதை வைத்துக்கொண்டு எதையும் செய்யமுடியும். ஆகவே, இதை வசூலித்துத்தான் அந்தப் பணிகளை நிறைவேற்ற வேண்டும் என்பது அல்ல, உயிருள்ள சாமிகளால் பாக்கியைச் செலுத்த முடியவில்லை. பரிதாபகரமான முறையில் கஷ்டமான நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் செலுத்தவேண்டியவற்றை வஜா செய்வதில் அரசு, அமைச்சர் அவர்கள் முன் உதாரணமாக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால், நிலச் சீர்திருத்தம் வேண்டும் என்று சொல்கிறோம். பினாமி நிலங்களை எடுப்போம் என்று சொல்கிறோம். அதையெல்லாம் எடுத்து நிலமற்ற விவசாயிகளுக்கு கொடுப்பது எங்கள் கொள்கை என்று சொல்கிறோம். அப்படிப்பட்ட நிலையில், கோயில்களுக்கு 200 ஏக்கர், 300 ஏக்கர் 400 ஏக்கர் என்று நிலம் இருக்கிறது. ஆகவே, அந்த நிலங்களையெல்லாம் எடுத்து நிலமற்ற விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் சாமி ஒன்றும் கோபப்படாது, பழம் கிடைக்கவில்லை என்பதற்காக பழனிக்குப் போனது எல்லாம் பழைய கதை. இப்போது எல்லாம் சாமி நிலைமைக்கு ஏற்றவாறு மாறிவிட்டார். அவர்கள் தப்பாக நினைத்துக்கொள்ள





மாட்டார்கள். இன்னும் சொல்லப்போனால் முன்பெல்லாம் கணவனைச் சொன்னால், மனைவிக்குக் கோபம் வரும்; மனைவியைப் பற்றிச் சொன்னால், கணவனுக்குக் கோபம் வரும். ஆனால் இப்போது கோவிலில் என்ன நடக்கிறது என்று சொன்னால், சிவகிரியில் உள்ள சுப்பிரமணிய ஆலயத்தில் உள்ள தெய்வயானையை யாரோ தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள். சாமி எனக்கு வேண்டாம் எடுத்துக்கொண்டு போ என்று சொல்லி விட்டார் போலும். அவ்வளவு தூரம் தாராளமாக சாமிகள் இருப்பதால் கோபித்துக் கொள்ள மாட்டார்கள். ஆகவே, கோவில் நிலங்களை எடுத்து விவசாயிகளுக்கு கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த கோவில்களுக்கு என்று சில கட்டிடங்கள், நிலங்கள் இருக்கின்றன. கட்டிடங்களின் வாடகையை உயர்த்தப் போவதாக உங்களுடைய பாலிசி நோட்டிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். நடுத்தர மக்கள், ஏழை எளிய மக்கள் தான் அதிகமாக அந்த கட்டிடங்களிலே கடை வைத்து, வியாபாரம் செய்து, வாழ்க்கை நடத்துகிறார்கள். வாடகையை உயர்த்தினால் அவர்கள் எல்லாம் பாதிக்கப்படுவார்கள். ஆகவே வாடகையை உயர்த்தக்கூடாது, அவர்கள் மீது அனுதாபம் காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்:

அடுத்து நம்முடைய மடங்கள் பிரச்னை இருக்கிறது. இப்போது இருக்கிற மடங்களுக்கு இருக்கிற சொத்துக்கள் எல்லாம் அவர்களால் சேர்த்து வைக்கப்பட்டவை அல்ல. ஏற்கெனவே பலரால் கொடுக்கப்பட்டவை. இருக்கிற சொத்துக்களை நல்லமுறையில் பராமரிக்க வேண்டும். அந்தச் சொத்துக்களை பற்றி இந்த மன்றத்திலே அதைப் பற்றி பலரும் பல தடவை சொல்லியிருக்கிறார்கள். மடத்தை நிர்வகிக்கிறவர்கள் சொல்கிறார்கள் நாங்கள் முற்றும் துறந்த முனிவர்கள் என்று. வெளியிலே, மொட்டை போட்டுக்கொள்கிறார்கள், பட்டை போட்டிருக்கிறார்கள். கழுத்திலே கொட்டை அணிந்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் சொத்துக்களை நாங்கள் பராமரிக்கிறோம் என்று சொல்லி, அங்கே பல மோசடிகள் நடக்கின்றன. அதை தடுத்து நிறுத்த வேண்டும்.

ஊழலைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால் அவர்கள் உடனே கோர்ட்டுக்கு ஓடுகிறார்கள். கோர்ட்டுக்கு ஓடி ஸ்டே வாங்குகிறார்கள்; மேலும் ஊழல் நடக்கிறது. அரசாங்கம் அதிலே கவனம் செலுத்தி, ஊழலைத் தடுக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசாங்கம் ஒரு உத்தரவு போடுகிறது, குத்தகை வாரச் சட்டம் 75–25 என்று போடுகிறது. அது செல்லாது என்று ஹைகோர்ட்டுக்குப் போகிறார்கள். திருவாவடுதுறை ஆதீனத்தில் பெரிய ஊழல் நடந்திருக்கிறது. அதுபற்றி சட்டமன்றத்தில் விவாதம் நடந்திருக்கிறது. அவர்கள் ஹைகோர்ட்டுக்குப் போய் அதை தடுத்து நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அந்த சாமியார்கள்

எல்லாம் பற்றற்றவர்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால் ஒவ்வொரு சாமியாருக்கும் எத்தனை குழந்தை இருக்கிறது, மனைவி இருக்கிறார்கள் என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. பல தவறுகள் நடைபெறுகின்றன. அந்த தவறுகளைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

பரம்பரை ட்ரஸ்டிகளை வைத்திருப்பதால் பல கோளாறுகள் அங்கே நடைபெற வாய்ப்பு ஏற்படுகிறது. பரம்பரை ட்ரஸ்டிகளை ஒழிக்க சர்க்கார் முயற்சி செய்ய வேண்டும். அதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்கும்போது அவர்கள் ஹைகோர்ட்டுக்குப் போய் தடுத்து நிறுத்துகிறார்கள். அதனால் புதிய அறங்காவலர் குழுவை போட முடியவில்லை; நிர்வாகத்தை சீர் செய்ய முடியவில்லை. ஊழலைத் தடுக்க, தவறுகளைப் போக்க அதை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காடு பற்றிய பிரச்னை வரும்போதெல்லாம் ஏற்கெனவே பல தடவை இங்கே பேசப்பட்டிருக்கிறது. வனத்துறையின் வருமானம் குறைந்து கொண்டிருக்கிறது. கிடைக்கிற வருமானத்தை நாம் நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை. சந்தன மரம் ஏற்றுமதியை மத்திய சர்க்கார் தடுத்து வைத்திருக்கிறது. அதைப்போன்று சின்கோனா ஏற்றுமதியையும் மத்திய சர்க்கார் தடுத்திருக்கிறது. அதனால் நமக்கு போதுமான வருமானம் வரவில்லை; அந்நியச் செலாவணி கிடைக்கவில்லை. தொடர்ந்து போராடி, நாட்டு வருமானத்தைப் பெருக்க, நமக்குள்ள ஏற்றுமதி உரிமையைப் பெற பாடுபட வேண்டும். அதற்காக அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு நாங்கள் உறுதுணையாக இருப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ரப்பர் வாரியம் அமைப்பது பற்றி சொல்லி இருக்கிறார்கள். அதை நல்லமுறையிலே அமைத்து செயல்படுத்த அரசாங்கம் முன்வரவேண்டும். ரப்பரைப் பயன்படுத்த இங்கே ஒரு ரப்பர் தொழிற்சாலை உருவாக்க முயற்சி செய்யவேண்டும்.

காடுகளிலே வெட்டி வைக்கப்படுகின்ற மரங்களுக்கு தகுந்த பாதுகாப்பு இல்லாத காரணத்தால் சில மரங்கள் அழிந்து போகின்றன; பல இடங்களில் காணாமல் போய்விடுகின்றன. தேக்கு மரங்கள் வைக்கப்பட்டிருந்த பல இடங்கள் இன்றைக்கு காலியாக இருக்கின்றன. அதன் காரணமாக அரசுக்கு பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது. அதை அரசாங்கம் கவனித்து, ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக கோவில் ஊழியர்கள் பற்றி ஒரு விஷயத்தை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் பல கோரிக்கைகள் கொடுத்திருக்கிறார்கள். பெரிய கோவில்களுக்கு சொத்துக்கள் நிறைய இருக்கின்றன. நிறைய வருமானம் வருகிறது. வருமானம் குறைவாக இருக்கிறபோது எப்படி அவர்களுக்கு அதிகமான சம்பளம் கொடுக்க முடியும் என்று நீங்கள் கேட்பீர்கள். பராமரிப்பு சரியாக இருந்தால் நல்ல வருமானம் கிடைக்கும்.





பழநி, திருச்செந்தூர் கோவில்கள் பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். பல கோடி ரூபாய் சொத்துக்கள் இருக்கின்றன. அதைப்போன்று பல இடங்கள் இருக்கின்றன. அங்கே உள்ள ஊழியர்கள் பிரச்னை எப்படி இருக்கிறது என்பதை ஒரே ஒரு உதாரணத்தின் மூலம் எடுத்துக்காட்டுகிறேன்.

திருச்செந்தூரில் இரண்டு விடுதிகள் இருக்கின்றன. செந்தில் ஆண்டவர் விடுதி, தேவலன் விடுதி என்று இரண்டு விடுதிகள் இருக்கின்றன. இரண்டு விடுதிகளிலும் வேலை செய்யும் ஊழியர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய சம்பளத்தில் பெருத்த வித்தியாசம் இருக்கிறது. இரண்டு விடுதிகளிலும் பணியாற்றும் ஊழியர்கள் ஒரே மாதிரியான வேலையைத்தான் செய்கிறார்கள். ஆகவே, இந்த வித்தியாசம் இருக்கக்கூடாது. ஒரே மாதிரியான சம்பளம் கொடுக்க வேண்டும். அதுமட்டுமல்ல, அவர்களுக்கு நியாயமான சம்பளம் கொடுக்க வேண்டும். அதன் மூலம் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டும்.

சென்ற தடவை இங்கே ஒரு வாக்குறுதி கொடுத்தார்கள். அவர்களுக்கு எல்லாம் இன்ஷூரன்ஸ் திட்டம் பற்றிச் சொன்னார்கள். ஆனால் அது இன்னும் பல இடங்களில் அமுல்படுத்தப்படவில்லை. அதை எல்லாம் எல்லா இடங்களிலும் அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

(நண்பகல் 12-00)

திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் 83–84 ஆம் ஆண்டுகளுக்கான மானியக் கோரிக்கைகளை கிட்டத்தட்ட 5 மானியக்கோரிக்கைகளை — இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் நேரம் மிகவும் நெருக்கடியாக இருக்கிறது. ஒவ்வொரு மானியத்தைப் பற்றியும் விரிவாகப் பேசுவதற்கு நேரம் இல்லாத காரணத்தால், சுருக்கமாக என்னுடைய கருத்துக்களை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சொல்லிக் கொள்ள நான் விரும்புகிறேன்.

பத்திரிகை சம்பந்தப்பட்ட வரையில் எடுத்துக் கொண்டால், அந்தப் பத்திரிகைகளை நடத்துவதற்கு சுதந்திரம் வேண்டும். பத்திரிகைகளின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். பீகார் சர்க்கார் கூட, பத்திரிகைகளின் உரிமைகளை பறிக்கும் சட்டத்தினை எதிர்த்து ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தச் சட்டத்தைப் போன்ற ஒரு சட்டத்திருத்தத்தினை, தமிழக சட்டசபையில் பத்திரிகைகளின் உரிமைகளையும், பத்திரிகைகளையும் பாதுகாக்கும் வகையில் கொண்டு வரவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அறநிலையத்துறை சம்பந்தப்பட்ட வரையில்' தமிழகத்தில் கோயில்களின் பெயரால் 5 லட்சம் ஏக்கர் நிலம் இருப்பதாகக் குறிப்பேட்டிலே சொல்லப்பட்டிருக்கிறது. வாய்விட்டு பேசக் கூடிய ஏழைத் தெய்வங்களுக்கு நிலம் கிடையாது. பேசாத இந்த தெய்வங்களுக்கு 5 லட்சம் ஏக்கர் நிலங்கள் சொந்தமாக இருப்பதாக சொல்லப்பட்டிருப்பதைக் கண்டு உண்மையிலேயே வேதனைப்படுகிறேன்.

ஆகவே, கோயில்களின் பெயரால் இருக்கும் இந்த 5 லட்சம் ஏக்கர் நிலங்களை குத்தகைக்கு எடுத்து பயிரிட்டுக் கொண்டிருக்கிற சாதாரண ஏழை எளிய விவசாயிகளுக்கு, அரிசன, தாழ்த்தப்பட்ட பின்தங்கிய ஏழை சமுதாய மக்களுக்கு, அந்த நிலங்களை கொடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டும் அல்ல, தமிழகத்திலே இருக்கும் பெரும் புள்ளிகள் ஆயிரக்கணக்கான பினாமி நிலங்களை தங்களுடைய கைவசம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள், அந்த பினாமி நிலங்களை எடுத்து, நிலமற்ற ஏழை எளிய விவசாயிகளுக்கு, அரிசனங்களுக்கு கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே மிகத் தாழ்மையோடு வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக சின்கோனா சம்பந்தப்பட்ட வரையில் ஒரு சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். சின்கோனா துறை ஆரம்பிக்கப்பட்டு, கிட்டத்தட்ட 122 ஆண்டுகள் ஆகி அது நடைமுறையில் இருந்து கொண்டிருப்பதாக மாண்புமிகு அறநிலைய துறை அமைச்சர் அவர்கள் தம்முடைய கொள்கை விளக்க குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அதைப் பரிபூரணமாக ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அப்படி 122 ஆண்டுகள் முடித்த அந்த சின்கோனா துறை, இன்றைக்கு இருக்கும் நிலைமை என்ன ஏற்கனவே கடன் வாங்கி போட்ட மூலதனத்திற்கு ஒவ்வொரு ஆண்டுக்கும் லட்சக் கணக்கான ரூபாய் வட்டியாக கட்டிக் கொண்டிருக்கிறோம் என்று கொள்கை குறிப்பேட்டிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அதே நேரத்தில் அங்கே உற்பத்தி எப்படி நடக்கிறது என்று பார்த்தால், நான் வேதனையோடு சொல்கிறேன்—அங்கேயுள்ள பணியாளர்கள் திறம்பட பணி புரிவதில்லை. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் இதைச் சற்று கண்காணிக்க வேண்டும்.

அந்த சின்கோனா துறையில் இருக்கும் நடைமுறை பழக்க வழக்கங்கள், வேலை முறைகள் தொடர்ந்து இப்படியே நடைபெறும் என்றால், எங்கே அந்த துறையே விரைவில் மூடப்பட்டு விடுமா என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டுள்ளது. அங்கே இருக்கக் கூடிய அதிகாரிகள் என்ன செய்கிறார்கள் என்றால், தம்முடைய சொந்த வேலைகளைத்தான் செய்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் துறை முன்னுக்கு வரவேண்டும்; உற்பத்தி



பெருக வேண்டும், தொழிலாளர்கள் இன்றைக்கு வாங்கக்கூடிய 9.75 பைசா என்ற சம்பள விகிதத்தைவிட அதிகமாக பெறவேண்டும். துறைக்கும் அதிகமாக லாபம் வரவேண்டும்—அதன் மூலம் சம்பளம் உயரவேண்டும் என்று அவர்கள் யோசிப்பதே கிடையாது. நான் குறிப்பாகச் சொல்லுகிறேன், ஒவ்வொரு அதிகாரியும் தங்களுக்கு வீடுகளிலே வேலை செய்வதற்காக வைத்திருக்கக்கூடிய ஊழியர்களின் எண்ணிக்கையை மட்டும் கணக்கிட்டுப் பார்ப்பீர்களேயானால் 400, 500 என்ற எண்ணிக்கைக்கு மேல் வரும். அவர்களுக்கெல்லாம் தங்களுடைய வீட்டில் வேலைகளை வாங்கிக் கொண்டு, துறை மூலமாக சம்பளம் கொடுக்கின்ற நிலை இருக்கிறது. அதன் காரணமாகவே அந்தத் துறையை நட்டத்திற்கு உள்ளாக்கிக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை மிக வேதனையோடு இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் துறை மீது அதிக கவனம் கொண்டவர் என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, அவர்களே இதில் நேரிடை கவனம் செலுத்தி, அங்கிருக்கும் ஊழல்களை களையவேண்டும். அந்த ஊழல்களுக்கு காரணமானவர்களை கண்டுபிடித்து தண்டிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டும் அல்ல. அந்தத் தொழிலிலே தொழிலாளர்கள் மிகவும் அருமையான உயிருக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடிய மிகவும் தேவையான மருந்துகளை எல்லாம் உற்பத்தி செய்துக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, மிகவும் அருமையான வாசனைத் தைலங்களையெல்லாம் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். அது மட்டும் அல்ல, ஆண்டவனுக்கு எதிராக, கர்ப்பத் தடை மாத்திரைகளையும் உற்பத்தி செய்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு எவ்வளவு சம்பளம் தெரியுமா, ஒரு நாளைக்கான கூலி' பஞ்சப்படி எல்லாம் சேர்த்து ரூ. 9.75 காசு. இது நியாயம் தானா? இதிலே அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து, அவர்களுக்கு இருக்கக்கூடிய நடைமுறைச் சிக்கல்களை கஷ்ட நஷ்டங்களை உணர்ந்து, அவர்களுக்கு ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க. வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

காரணம் இப்போது வறட்சி ஏற்பட்டிருக்கின்றது. விலைவாசி மிக அதிகமாக இருக்கின்றது. உணவு நெருக்கடி இருக்கின்றது. இந்த மாதிரியான சூழ்நிலைகளில் அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளம் மிகவும் குறைவானது. இதை வைத்துக் கொண்டு அவர்கள் வாழ்க்கையிலே பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். எனவே அவர்களுடைய சம்பளத்தை உயர்த்தவேண்டும். அவர்களுக்கு போனஸ் கொடுக்கவேண்டும். (மணியடிக்கப்பட்டது) இன்றைக்கு எல்லா துறைகளிலும் தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்கப்படுகின்றது. போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு எல்லாம் போனஸ் வழங்கப்படுகின்றது. அது போன்று இவர்களுக்கும் கொடுக்கவேண்டும்.

சின்கோனாத் துறையில் வேலை பார்க்கின்ற தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் வருஷா வருஷம் கொடுக்கப்படுகின்ற கணக்கைப் பொறுத்தவரையில் 2000 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள் என்று கணக்கு கொடுக்கப்படுகின்றது. ஆனால் அந்த 2000 தொழிலாளர்கள் பெர்மனன்ட் தொழிலாளர்கள். மீதி 2030 பேர் தற்காலிகத் தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். அப்படி டெம்பரரியாக பணியாற்றக்கூடிய தொழிலாளர்களில் ஒரு 500 பேர்களையாவது பெர்மனன்ட் ஆக்கி அந்த வகையில் 2500 பேர் பெர்மனன்ட் தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள் என்ற வகையில் ஏற்பாடு செய்யப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் உற்பத்தி பெருகும். தொழிலாளர்களுக்கு நல்ல சம்பளம் கிடைக்கும்.

அடுத்து அங்கே பணியாற்றுகின்ற அதிகாரிகள் தங்களுடைய சம்பளம் போதவில்லை என்ற நிலைமையில்தான் அவர்கள் வேறு வகையில் சம்பாதிக்கின்ற நிலைமைகள் ஏற்படுகின்றன. அதைப் போக்குகின்ற வகையில் அவர்களுடைய சம்பளத்தையும் அதிகமாக்கிக் கொடுக்கவேண்டும்.

அடுத்து சின்கோனா துறையின் மூலம் பள்ளிக்கூடம் நடத்தப்படுகின்றது. அங்கே ஒரு அரசு மருத்துவமனை இருக்கின்றது, பள்ளிக்கூடங்களைப் பொறுத்தவரையில் அரசுப் பள்ளிகளுக்கும், தனியார் பள்ளிகளுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கின்றது. அந்தப் பள்ளிக்கூடங்களைப் பொறுத்தவரையில் மழைக் காலத்தில் பிள்ளைகள் போவதில்லை. மேலும் பிள்ளைகள் மலைக்கு அந்தப்பக்கத்திலிருந்து அந்தப் பள்ளிக்கு வரவேண்டி இருக்கின்றது. அங்கே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களின் குழந்தைகளும் அங்கே பணியாற்றுகின்ற அதிகாரிகளின் குழந்தைகளும்தான் அங்கே வந்து படிக்கவேண்டி இருக்கின்றது. அதற்குத் தான் அந்த உயர்நிலைப்பள்ளி......

(மணியடிக்கப்பெற்றது)

திரு. பெ. திருமாறன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நமது அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய அறநிலையத்துறை மற்றும் வனத் துறை சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகளின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

தமிழகத்தில் கோயில்களை செப்பனிடுவதைப் பொறுத்த வரையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசுதான் பல கோயில்களுக்கு அதாவது ஸ்ரீரங்கம் கோயில் போன்ற கோயில்களை எல்லாம் செப்பனிட்டு இப்படி பல திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது. அந்த வகையில் கோயில் நிலங்களை உழுபவர்களைப் பொறுத்தவரையில் புதிதாக அதற்கான சட்டங்களை கொண்டுவர இருக்கிறேன் என்று நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருப்பது பாராட்டத் தக்கது. நமது கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. சொரணம் அவர்கள் கோயில் நிலங்களைக் குத்தகைக்கு எடுத்தவர்கள் தர வேண்டிய பாக்கி தமிழகத்திலே 28 கோடி இருக்கின்றது என்றும்





அந்தப் பாக்கியைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் கூறுகிறார்கள். ஆனால் அந்தக் கோயில் நிலங்களை உழுபவர்கள் எல்லாம் பெரிய வசதி படைத்தவர்கள்தான். அவர்கள் எல்லாம் பெரும் பணக்காரர்கள்தான். அப்படிப்பட்டவர்கள் கொடுக்கவேண்டிய பாக்கியைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்று கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். இது கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கையினைப் பொறுத்தவரையில் எந்த அளவுக்கு ஒத்துக் கொள்ளப்படுகின்றது என்பது எனக்குப் புரியவில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாற்றுத் தலைவர் அவர்களே, பணக்காரர்களுக்குச் சலுகை கொடுக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. குத்தகைக்கு எடுப்பவர்கள் பெரிய பணக்காரர்களாக இருந்தாலும் உழுது பயிர் செய்கின்றவர்கள் விவசாயிகள்தான். அந்த விவசாயி கொடுக்க வேண்டிய பாக்கியைத்தான் தள்ளுபடி செய்யவேண்டும். மேலும் அந்த கோயில்களின் நிலங்களை எல்லாம் அரசாங்கம் எடுத்து நிலமற்ற ஏழை எளிய விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்பதுதான் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. திருமாறன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் புதிதாக ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிறேன் என்று சில தினங்களுக்கு முன்பு கேள்வி–பதிலிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த மாற்றுக் கட்சி உறுப்பினர்களும் ஒத்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். அந்த வகையில் கொள்கை அளவில் இந்த அரசு உறுதியாக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தக் கோயில் நிலங்களை உழுபவர்கள் பெரிய பணக்காரர்கள்தான். அந்தக் குத்தகை பாக்கியை உடனடியாகக் கொடுப்பதற்கு ஒரு சட்டத்தைப் புதிதாகப் போடவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 12–10)

அந்த வகையிலே புதுக்கோட்டை மாவட்டத்திலே பல கோயில்களை செப்பனிடப்பட்டு இருந்தாலும் இன்னும் சில கோவில்கள் புதுக்கோட்டையில் குறிப்பாக ஆவுடையார் கோவிலிலே நீண்ட காலமாக ஒரு வைரத்தேர் பழுதுப்பட்டு இருக்கிறது. அந்த வைரத்தேரை நமது அரசு செப்பனிட்டு தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் விராலி மலையில் மயில்கள் அதிகமாக இருக்கின்றன. அந்த மயில்களுக்கு ஒரு சரணாலயம் அமைத்துக் கொடுக்கும்படி இந்த அரசை கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக என்னுடைய தொகுதியில் திருவரங்கத்தில் ஒரு திருப்பணி வேலை துரிதமாக நடந்து வருகிறது. அதை உடனடியாக இந்த அரசு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் குலமங்கலம் ஐய்யனார் கோவிலை நம்முடைய அமைச்சர் அவர்கள் நேரிடையாக வந்து பார்த்தார்கள். ஆசியாவிலேயே மிகப்பெரிய குதிரை அந்த கோவிலில் உண்டு. அந்த குதிரையை பழுதுபார்த்து அதற்கு பெயின்டு கொடுக்கும்படி அமைச்சர் அவர்கள் உத்திரவிட்டு வந்தார்கள். அது இன்று வரையில் செப்பனிடப்படவில்லை. அதை செப்பனிட விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நகரத்தைச் சேர்ந்த சுப்பிரமணியசுவாமி கோவில் உள்ளது. அந்த கோவிலை செப்பனிட்டுக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வனத்துறையை எடுத்துக்கொண்டால் அதில் எல்லாவற்றையும் மத்திய அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. அந்தனை திட்டங்களையும், அவர்களுடைய நிர்வாகத்தையும் வனத்துறை எதை எடுத்தாலும் மத்திய அரசை அணுகவேண்டியிருக்கிறது. ரோடு போடவேண்டுமா, அணை கட்டவேண்டுமா இவற்றுக்கு எல்லாம் மத்திய அரசுக்கு கோரிக்கை அனுப்பி அவர்கள் ஏற்று கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். அதனுடைய பொறுப்புகளை மாநில அரசு கேட்டுப் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசு வந்து வனத்துறையை மிகவும் செம்மையாக்கி வருகிறது. அதைப்போல காடு வளர்ப்பு பணிகள் எல்லாம் மிகவும் நிறைமையாக நடந்து கொண்டு இருக்கிறது. எல்லா குளக்கரைகளிலும் பாரஸ்டு டிபார்ட்மெண்டு மூலம் மரங்கள் நடவேண்டும். அந்த காலத்தில் போட்ட மருத மரங்கள் எல்லாம் அழிந்து போய்விட்டன. இப்போது பனை மரங்கள், தென்ன மரங்களை நடவேண்டும். குளக்கரைகளில் எல்லாம் நடும் மரங்களை அந்த அந்த ஊராட்சிகள் இடத்தில் ஒப்படைக்கவேண்டும். அந்த ஊராட்சிகளிடத்தில் ஒப்படைத்தால் தான் அந்த மரங்களைப் பாதுகாக்க முடியும்.

அடுத்தபடியாக சட்டமன்ற உறுப்பினர்களை கேவலமாக சினிமாவில் எடுக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களை பற்றி சினிமா எடுப்பவர்கள் கேவலமாகவும், தரக்குறைவாகவும் எடுக்கிறார்கள். அதை சென்சார் செய்கின்ற பொறுப்பு மத்திய அரசிடம் இருப்பதால் அதற்கு தடை போடமுடியவில்லை. அந்த சென்சார் பொறுப்பை மத்திய அரசிடமிருந்து பெற்று மாநில அரசு பொறுப்பு ஏற்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஆவுடையார் கோவில் தேரை பழுதுபார்க்க வேண்டும் என்று முன்னாடியே சொன்னேன். அந்த தேரை இந்த அரசு காலத்திலேயே இப்பொழுதே ஓட்டவேண்டும் என்று நமது மாண்புமிகு பெரும் தொழில் அமைச்சர் கூட வாக்குறுதி கொடுத்து விட்டு வந்து இருக்கிறார்கள். ஆகவே அந்தத் தேரை ஓட்டுவதற்கு நமது மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் முன்னுக்கு வந்து நடத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





புதுக்கோட்டை மாவட்டத்திலே பல கோவில்கள் கேட்பார் அற்று இருந்த கோவில்களில் எல்லாம் ஒரு சில கோவில்கள் பழுது பட்டு இருந்தாலும் செப்பனிடப்பட்டு இருக்கின்றன. அதேபோல் இந்த அரசு வந்துதான் தாழ்த்தப்பட்ட குடிமகன் அரிசன மக்கள் அந்த அந்த பகுதிகளில் இருக்கின்ற அந்த மக்கள் அந்த சின்ன கோவில்களுக்கு இந்த அரசினுடைய மானியத்தைப்பெற்று கோவில்களை கட்டிக் கொண்டு இருக்கிறார்கள், இதற்கு முன்னாடி இருந்த அரசுகள் இடத்தில் எல்லாம் இந்த அரிசன மக்கள் இந்த கோரிக்கையை வைக்கவில்லை அந்த மானியத்தை பெறவில்லை. இப்போது எல்லா கிராமத்தில் உள்ள அரிசன மக்களும் அவர்களுடைய கோவில்கள் இந்த அரசினுடைய காலத்தில் தான் கட்ட முடியும் என்று எண்ணி இந்த அரசிடம் போராடி அந்த கோரிக்கைகளை பெற்று சில கோவில்களையும் கட்டிக்கொண்டு இருக்கிறார்கள். பொதுவாக தமிழகத்தில் வனத்துறை, அறநிலையத்துறை, செய்தித்துறையில் துரிதமான நடவடிக்கையை நமது அரசு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் . . . .
(மணியடிக்கப்பெற்றது)

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு தற்காலிக தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு இருக்கிற மானியக் கோரிக்கைகள் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இதை பார்த்த வுடனே 5 லட்சம் ஏக்கர் கோவில் நிலங்கள் இருப்பதாக இங்கே இருக்கிறது. அதை உழக் கூடியவர்கள், பராமரிக்கக்கூடியவர்கள் குத்தகைப்பணம் 28 கோடி ருபாய் இன்னும் கொடுக்காமல் இருப்பதாகவும் இங்கே இருக்கிறது. நான் ஒரு சமயத்தில் ஏரியா கமிட்டியில் இருக்கும் போது அப்போது தான் இந்த உண்மை நிலைமை எனக்கும் தெரிந்தது யார் யார் பெரிய நிலச்சுவாந்தர் களாக இருக்கிறார்களோ வசதிப் படைத்தவர்களாக இருக்கி றார்களோ அவர்களுடைய கையில் இந்த நிலங்கள் எல்லாம் வைக்கப்பட்டு இருந்தன. அப்படி இருந்த நிலங்களை அவர்கள் சப்லீஸ்க்கு விட்டு அந்த ஏழை வறுமை கோட்டுக்கு கீழே உள்ள அப்பாவி மக்கள் இவர்களுக்கு பயந்து தாங்கள் உழக்கூடிய அந்த குத்தகையை எல்லாம் கொடுத்து வருகின்றபோது கூட இவர்கள் வாங்கி வைத்துக்கொண்டு அதை கொடுக்காமல் அரசை ஏமாற்றிக் கொண்டு இருக்கிறார்கள், இந்த நிலைமை இருந்து வருகிறது. இதை நம்முடைய அமைச்சர் அவர்கள் கடுமையாக நடவடிக்கை எடுத்து இந்த பணத்தை வசூல் செய்ய வேண்டும். 5 லட்சம் ஏக்கர் நிலத்தில் எத்தனை ஏக்கர் நஞ்சை நிலம் இருக்கிறதோ அந்த நஞ்சை நிலத்தை எல்லாம் ஒரு சாதாரண நிலம் இல்லாத ஏழைகளுக்கு தலா ஒரு ஏக்கர் என்றும், புஞ்சை நிலத்தை ஒரு ஏழைக்கு 3 ஏக்கர் என்றும் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கோவில் சொத்துக்களை எல்லாம் யாரோ தின்று தின்று பெருக்க சூழ்நிலை இன்றைக்கு இருந்துக் கொண்டு இருக்கிறது. அதை மாற்றக் கூடிய வகையிலே நம்முடைய அரசும் அமைச்சர் அவர்களும் தக்க நடவடிக்கை எடுத்து ஒரு ஏக்கர் ஒருவருக்கு என்று அதை கிரையம் ஆகக்

கொடுத்து விட்டு அந்தப் பணத்தை கிஸ்தியின் மூலமாக வசூலிக்கக்கூடிய நிலைமை இருந்தால் சாலச் சிறந்ததாக இருக்கும், குறிப்பாக தஞ்சை ஜில்லாவிலே வலிவலத்திலே இருந்த கோயில் புறம் போக்கு நிலத்தை ஒரு பெரிய மிராசுதாரர் எடுத்து சொந்தமாக 99 வருஷத்திற்கு லீஸ்க்கு எடுத்து கட்டடம் கட்டி வாடகையை வாங்கக் கூடிய நிலைமை இருக்கிறது. இதையெல்லாம் மாற்றியமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்ய வேண்டும். அதோடு திருவாரூருக்குப் பக்கத்திலே உள்ள நிலங்களையும் தனிப்பட்ட நபர் பெரிய மிராசுதாரர் எடுத்துக் கொண்டிருக்கிறார். அதையும் எடுக்கக் கூடிய சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்க வேண்டும், கோயில் நிலங்களையெல்லாம் அரசே எடுத்து விதைப் பண்ணைகளை அமைக்கக் கூடிய திட்டம் இருக்கிறது. அப்படி விதைப் பண்ணை அமைக்க சிக்கலிலே நாம் 400 ஏக்கர் எடுத்திருக்கிறோம் அப்படி 400 ஏக்கரை எடுத்து இதுவரைக்கும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துக் கொண்டு இருக்கிறது. அதையெல்லாம் மாற்றி வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள ஏழைகளுக்கு துணிமணிகள் கொடுப்பதைக் காட்டிலும் வேறு ஏதாவது கொடுப்பதைக் காட்டிலும் அந்தக் குடும்பங்களுக்கு நிலத்தை கொடுத்தால் அவர்கள் வாழ வழி வகை செய்வதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

என்னுடைய தொகுதியிலே நிலக்கோட்டையிலே நடராஜர் கோயில் இருக்கிறது. அந்தக் கோயில் இடிந்து இருக்கிறது. அந்தக் கோயிலுக்கு நிலம் இருக்கிறது அந்த நிலத்திலே எந்த விதமான வருமானமும் வரவில்லை. அந்த நிலத்தை வீட்டு அடிமனையாகப் பிரித்துக் கொடுங்கள் என்று கடந்த 3 ஆண்டுகளாகச் சொல்கிறோம். ஒரு சேன்டிற்கு 5 0 ரூபாய்க்குக் குறையாமல் அவர்கள் கொடுத்து வாங்கிக் கொள்வார்கள் என்று அமைச்சர் அவர்களிடம் சொல்லி அவர்கள் எழுதி அனுப்பி இலாகாவிலே சென்று பார்த்தும் இதுவரைக்கும் எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை, அந்த நிலத்திலே எந்த விதமான வருமானமும் இல்லாமல் இருக்கிறது. இப்படி தமிழகத்திலே எங்கெங்கே இருக்கிறதோ அமைச்சர் அவர்கள் அதிலெல்லாம் கவனம் செலுத்தி ஏழை மக்களுக்கு விநியோகம் செய்து பணத்தைக் கைப்பற்றி கோயில் சொத்தாக வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பண்டைக் காலத்திலேயெல்லாம் அரசர்கள் அமைச்சர்களை அழைத்து மாதம் மும்மாரி பெய்கிறதா என்று கேட்பார்கள். அவர்கள் ஆமாம் என்று சொல்வார்கள், அடுத்தாற் போல் அவர்கள் ஆறுகால பூசை நடந்ததா என்று கேட்பார்கள். அவர்கள் ஆமாம் ஆறுகால பூசை நடந்தது என்று சொல்வார்கள் ஆகவே அப்படியிருக்கக் கூடிய நிலையிலே அந்த நாளிலே மாதம் மும்மாரி மழை பெய்தது ஆனால் நான் குறையாகக் சொல்ல வில்லை. இந்த இலாகாவில் 67 விக்ரகங்கள் பூசைக்கு வைக்கப் படாமல் இருக்கிறது என்பதை சுத்தமான இந்து என்ற முறையில் நான் வேதனைப்படுகிறேன். அப்படி பூசைக்கு



வைக்கப்படாத விக்ரகங்களை டெல்லியிலே கண்காட்சியிலே வைத்திருக்கிறார்கள். வைப்பது தவறு இல்லை யென்றாலும் கூட பூசை செய்யாமல் எந்தச் சிலையும் இருக்கக் கூடாது, அது நாட்டுக்கும் நல்லதல்ல சமுதாயத்திற்கும் நல்லதல்ல என்று நம்முடைய முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே எந்தச் சிலையும் பூசை செய்யாமல் இருக்கக் கூடாது என்பதில் அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி பூசை நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அது மாத்திரம் அல்லாமல் 36 43, கோடி ரூபாய மதிப்புள்ள சிலைகளை அங்கே கண்காட்சியிலே கொண்டு போய் வைத்தால் யாரு வேண்டுமானாலும் தொட்டுப் பார்ப்பார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தால் அது நல்லதா என்பதை அமைச்சர் அவர்கள் யோசனை செய்து பார்க்க வேண்டும்.

இன்றைக்குச் சமுதாய நலப்பணியிலே கல்யாணங்கள் செய்து வைப்பதில் 7 0 ரூபாய் இந்த அரசு கொடுத்து கல்யாணங்களை நடத்திக் கொண்டு வருகிறது. அது பாராட்டக் கூடியதாக இருந்தாலும் அதை ஆயிரம் ரூபாய்க்குக் குறையாமல் என்று வைத்தால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் இந்த இலாகாவிலே பணியாற்றுகிறவர்களுக்கு இறந்தால் 250 ரூபாய் கொடுப்பது பாராட்டக் கூடிய அம்சம். இறந்தால் 1 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும்.

கடைசியிலே பழனி தண்டாயுதபாணி தேவஸ்தானத்திலே கருணை மிகுந்த வள்ளல் அந்த ஆண்டவன் சந்நிதியிலே கோடிக்கணக்கான ரூபாய் வந்துக் கொண்டு இருக்கிறது. அங்கே நிறையப் பள்ளிகளை வைத்துக் கொண்டிருக்கிறோம். அனாதை விடுதிகள், உயர்நிலைப் பள்ளிகள், தொழில் நுட்ப பள்ளிகளை வைத்துக் கொண்டிருக்கிறோம், பழனியிலே மாத்திரம் வைப்பதைப் பற்றி நான் பொறாமைப் படவில்லை, வைக்கப்பட வேண்டும், ஆனால் அதைப் பரவலாக்கி எங்களை மாதிரி இருக்கிற ஏழையாக வாழ்ந்துக் கொண்டிருக்கின்ற நிலைக் கோட்டைப் பகுதியில் நான் தொழில் கல்வி கேட்கவில்லை. பெண்கள் ஐ. டி. ஐ பள்ளி ஒன்று அமைத்துத்தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களானால் எங்கள் தொகுதி மக்கள் சார்பிலே காலமெல்லாம் நன்றி தெரிவிப்போம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-2 )

வனத்துறையில் இன்றைக்கு ரோடுகளில் எல்லாம் மரம் வைக்க வேண்டும். ரோடுகளில் மட்டுமல்லாமல் வீடுகள் தோறும் மரங்களை வைக்க வேண்டும். அது சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஜமீன் காலங்களில் கண்மாய்கள் தனிப்பட்டவர்களிடமிருந்து பிறகு அரசிற்கு சொந்தமாக்கப்பட்டன. அதில் 1972-73 ஆண்டுகளில் சில பேர்களுக்கு பட்டா போட்டு கொடுத்தார்கள். அப்படி போடப் பட்ட பட்டாக்களை ரத்து செய்து அந்த இடங்களில் மரங்களை உண்டாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், கொடைக்

கானலில் 372 நாடுகளிலிருந்து குழந்தைகள் வந்து படிக்கின்றார்கள். தங்கள் குழந்தைகளைப் பார்க்க வரும் வெளிநாட்டுக்காரர்கள், கொடை ரோடு ரெயில்வே ஸ்டேஷனில் இறங்குகிற போது காபி கூட குடிக்க முடியாமல் இருந்துக் கொண்டிருக்கிறது ஆகவே அந்த கொடை ரோடு ரெயில்வே ஸ்டேஷன் பகுதியை சுற்றுலா மையமாக்க வேண்டும். அதோடு மட்டுமல்லாமல் அவர்கள் தங்கி செல்வதற்கு வசதிகளையும் செய்ய வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

*திரு. சி. கணேசன்: பெருமதிப்பிற்குரிய மாற்றுத் தலைவர் அவர்களே, பெருமதிப்பிறகுரிய அமைச்சர் அறநிலையத் துறை சார்பில் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கைகளில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

கடந்த பல நாட்களாக இந்த மன்றத்திலே பல்வேறு துறைகளைப் பற்றியெல்லாம் நாம் விவாதித்து கருத்துக்களை எடுத்து வைத்து நல்ல விதமான முடிவுகளை கண்டு கொண்டு வந்தோம். அதெல்லாம் நம்முடைய முன்னேற்றத்திற்காக தான் என்பதை நாம் எல்லோரும் அறிவோம், இவ்வளவு துறைகளிலும் பலவற்றை நாம் விவாதித்துக் கொண்டு வந்தோம். பணம்வேண்டுமென்று சொன்னோம் துணிமணி வேண்டுமென்று சொன்னோம் வசதி வேண்டுமென்று சொன்னோம் உடலுக்கு ஊட்டச் சத்து வேண்டுமென்று சொன்னோம். அவையெல்லாம் எதற்காக உடலில் உயிர் இருக்கிற வரைக்கும்தான் இவைகள் எல்லாவற்றிற்கும் மதிப்பு. சிறப்பு. ஆனால் இந்த உடலிலிருந்து உயிர் போன பிற்பாடு ஊட்ட சத்தும், துணிமணி அழகும் நமக்கு தேவையில்லை இன்றைக்கு எடுத்திருக்கிற மானியம் அறநிலையத் துறை, உடலிலே இருக்கிற உயிருக்குச் சமமான ஒரு துறையான அறநிலையத் துறையில் என்னுடைய கருத்துக்களை சொல்ல வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய ஆலயங்களில் இருக்கிற தேர்களிலெல்லாம் சாமிகளை வைத்து தேர் ஓட்டி, மரியாதை காண்பித்து சந்தோஷப்படுவார்கள். ஆனால் தமிழகத்தில் ஆவுடையார் கோவிலில் மனிதனை வைத்து இழுத்து மக்கள் சந்தோஷப் படுவார்கள். முற்றிலும் மாறான கருத்தாக இருந்தாலும், இதிலே மிகப் பெரிய உண்மை இருக்கிறது. ஆண்டவனின் தன்மைகளை நூல்களில் சிறப்பாக எடுத்துச் சொல்லப் பட்டிருக்கின்றன. மாணிக்க வாசகரை தேரில் வைத்து இழுத்த பெருமை தமிழ் மண்ணிற்குத் தான் உண்டு. ஆண்டவனே கூட சொல்லியிருக்கிறார். பக்திமானை, என்னுடைய பக்தனை யார் வணங்குகிறார்களோ அவர்கள் என்னை வணங்குவதாக அர்த்தம் என்று சொல்லியிருக்கிறார். அந்த காரணத்தினால் தான், தமிழக மக்கள் ஆண்டவனை நன்றாக புரிந்து கொண்டு மாணிக்க வாசகரை தேரில் வைத்து இழுத்து ஒரு பெரிய சரித்திரத்தையே படைத்திருக்கிறார்கள், அந்த சரித்திரம் மறைந்து போகக் கூடாது, என்பதற்காக இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அந்த தேரை ஓட்ட வேண்டுமென்ற ஆர்வம்



பெருமதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களுக்கும் இருக்கிறது. அதனால் தான் நான் சொல்கிறேன். அந்த தேரை ஓட்டினால் தமிழ் புலவனுக்கு மட்டுமில்லாமல், தமிழுக்கு மட்டுமில்லாமல் தமிழ் தாய்க்கே நீங்கள் தேரை ஓட்டுவதாக அர்த்தமாகும் என்பதை இந்த சந்தர்ப்பத்திலே நாம் மறந்து விடக் கூடாது. அதை செயல் படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மனித மனங்களிலே ஆலயங்களை ஏற்படுத்துவதனுடைய நோக்கத்தை நாம் அலட்சியப் படுத்தி விடக்கூடாது. நமக்கு அதிலே சிரத்தை இல்லாமல் இருக்கலாம். நமக்கு அதிலே பண்பாடு இல்லாமல் இருக்கலாம். நாம் அதனை ஏளனமாக கூட கருதலாம். அந்த ஆலயங்களின் அமைப்புகளை, ஆலயத்துறையில் ஏற்படுகிற முடிவுகளை நாம் அலட்சியப் படுத்திவிடக் கூடாது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இறை உணர்வு என்பதும் ஒழுக்கம், கட்டுப்பாடு நாவடக்கம். நல்ல பண்பாடு இவையெல்லாம் இந்த துறையின் மூலமாகத் தான் மக்களுக்கு உணர்த்த முடியும் என்பதை ஆலயங்களில் இருக்கிற பல்வேறு புத்தகங்களிலிருந்தும் தெரிந்து கொள்ள முடிகிறது நாம் விஞ்ஞானத்தில் முன்னேறி இருக்கலாம், பொருளாதாரத்தில் முன்னேறி இருக்கலாம். முன்னேறியிருக்கிற அமெரிக்கா ரஷ்யா போன்ற நாடுகளில் மக்கள் விதவிதமான முன்னேற்றத்தை கண்டிருந்தாலும் கூட அவை வாழ்க்கையில் அவை பலனளிக்கவில்லை. மன அமைதிக்காக அவர்கள் எங்கே போகிறார்கள் என்று கேட்டால் ஆலயங்களை நாடித்தான் அவர்கள் போகிறார்கள். இதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. இவ்வளவு பெரிய செல்வ செழிப்பான அமெரிக்காவில் மன அமைதிக்காக ஆலயங்களைத் தேடிச் செல்கிறார்கள் என்ற நிலைமை இருக்கிறது. இவ்வளவு முன்னேறி இருக்கிற அமெரிக்காவில் மக்களில் உயர்ந்த தலைவராக இருக்கிற ஜனாதிபதியைக் கூறி மக்கள் கொக்கு மாதிரி, குருவி மாதிரி சுட்டுத் தள்ளுகிற அநாகரீகமான கொடுமை மனித இனத்தில் இருப்பதைப் பார்க்கிறோம். அதற்கு என்ன காரணம்? வள்ளுவர் சொன்னார்

> 'அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
> மக்கட்பண்பு இல்லா தவர்'

என்று

என்னதான் அறிவாற்றலிலே உயர்ந்திருந்தாலும் மக்கள் என்ற பண்பு இல்லையென்று சொன்னால், அவன் வாழ்க்கை மோசமானது என்று சொன்னார். அரம் போன்ற கூர்மையான அறிவு அங்கிருந்தும் கூட, செல்வ செழிப்பு அங்கே இருந்தும் கூட, மக்கள் பண்பாடு இல்லையென்று சொன்னால், மனித வாழ்க்கையே வீணாகி விடும். இந்த மக்கள் பண்பாட்டை பெறுவதற்கான இடம் இப்பொழுது ஆலயம் ஒன்று தான் என்று நாம் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறோம். அதனாலே தான் மனிதர்களிலே இரண்டு வகைப்பட்டவர்கள் உள்ளார்கள் நல்லவர்கள் கெட்டவர்கள், உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்று சொல்வார்கள். இதையெல்லாம் மனப் போக்கை வைத்து தான், மனிதன் நடவடிக்கையை தைத்து தான், மனிதன் செயல்

குறிப்பை வைத்து தான் நல்லது கெட்டது என்று நாம் குறிப்பிடுகிறோம் அதனால்தான் பாத்திரம் அறிந்து பிச்சைக் கொடு கோத்திரம் அறிந்து பெண் எடு என்று சொன்னார்கள். எவ்வளவு தான் ஒருவன் படித்திருந்தாலும், எவ்வளவு தான் பொது மக்களிடத்திலே செல்வாக்கு வைத்திருந்தாலும், எவ்வளவு தான் ஒருவன் பட்டங்கள் பெற்றிருந்தாலும் எவ்வளவு தான் உயர்ந்த பதவிகள் பெற்றிருந்தாலும், மக்கள் பண்பு இல்லையென்ற ஒரே ஒரு காரணத்தினால், தேருக்கு ஒரு அச்சாணி சின்னதாக இல்லாத காரணத்தினால், அவன் சாதாரண சாக்கடையிலே தள்ளப்படுவான் என்பது தான் உண்மை. எவ்வளவு பெரிய படிப்பு படித்தவர்கள், பட்டங்கள் பெற்றவர்கள் மக்கள் செல்வாக்கு பெற்றவர்கள், படிக்காத, பட்டங்கள் பெறாத, பதவிகள் பெறாத சாதாரண மக்களிடத்திலே, பெண் எடுத்தோ, பெண் கொடுத்தோ சம்பந்தியானாலும் சரி, நான் சம்பந்தம் வைத்துக் கொண்டிருக்கிறேன், என்று பெருமை பேசினாலும் சரி, ஒழுக்கம் இல்லாததனால், பண்பு இல்லாததனால், மக்கள் பண்பு இல்லாததனால், அவன் சாக்கடையிலே தள்ளப்படுவான், அரசியல் செல்வாக்கு இருந்தாலும், பதவிகள் இருந்தாலும். பட்டங்கள் பல பெற்றாலும், நான் இந்த சாதாரண குடும்பத்தோடு சம்பந்தியாகி விட்டேன் என்று சொன்னால், இந்தப்பண்பு இல்லாத காரணத்தினாலே அந்த குடும்பமே ஆமை புகுந்த குடும்பமாக இன்றைக்கு அல்லோலகல்லோலப்பட்டு; நாசமாகக் கூடிய நிலைமையை நாம் பார்க்கிறோம்' அதற்கு என்ன காரணம்? தாய்க்கும் தாரத்திற்கும் வித்தியாசம் இருக்கக் கூடாது மருமகளுக்கும் தாரத்திற்கும் வித்தியாசம் இருக்கக் கூடாது என்று சொல்லும் பண்புகள் எல்லாம் ஒதுக்கி வைக்கப்படாததால் என்பதை நாமெல்லாம் மறந்துவிடக் கூடாது. நாம் அதைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். அந்த வித்தியாசம் இல்லாதவர் யாராக இருந்தாலும், மானம் மரியாதைப் பற்றி கவலைப்படாமல், கிரிமினல் வழக்குகளைப் பற்றி ஆராய்ந்து எவ்வளவு பெரிய, உயர்ந்த உச்சாணியிலே பறந்து கொண்டிருந்தாலும், சாக்கடையிலே பன்றிகள் மேய்வது மாதிரி தான் ஆன்மீகம் உணர்ந்த மக்கள் உள்ளங்களிலே நினைப்பார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆனால், மக்கட் பண்பு சாதாரணமாக வந்து விடாது. ஆலயங்கள் மூலமாக சத்தியம் என்பதும், சகோதரத்துவம். சமத்துவம் என்பதும், இரக்கம், ஈகை, பணிவு, நாவடக்கம், போன்ற இவைகள் தான் மக்கட் பண்புக்கு மூலதனமாக அமையும், இந்த மூலதனம் இல்லையென்று சொன்னால், எவ்வளவு பெரிய, கவர்ச்சியாகப் பேசியும் பலனில்லை ஒரு பெண் இருக்கிறாள், கோயில் கட்டுகிறாள், நன்றாகச் சேவைசெய்கிறாள், தர்மம் பண்ணுகிறாகள். ஆனால் மாலையானால் அவள் வேசியாக இருக்கிறாள் என்று சொன்னால், அத்தனையும் போய் விடும். அது போகாமல் இருப்பதற்கு நாம் அறநிலையங்களிலே இருக்கிற கருத்துக்களை, பரப்புவதற்கு உரிய முக்கியத்துவம் தர வேண்டும்.



1981—லே செப்டம்பர் மாதம் என்று நினைக்கிறேன். அமெரிக்காவிலே, சுவாமி விவேகானந்தர் அவர்கள்செல்லும்போது சொன்னார்கள். இந்த நாட்டிலே ஜாதிச் சண்டைகள் எதற்காக வருகின்றன? ஒருவரை ஒருவர் நாம அணுகிப் பார்ப்பதில்லை அதற்கு ஒரு கதை மூலமாகச் சொன்னார். கடலிலேயிருந்து ஒரு தவளை நகர்ந்து கொண்டு கிணற்றிலே வந்து விழுந்து விட்டது. அந்தக் கிணற்றுத் தவளை, கடல்தவளையைப்பார்த்து கேட்கிறது. நீ எங்கேயிருந்து வருகிறாய் என்று. 'கடல் தவளை, கடலிலேயிருந்து வந்ததாகச் சொல்கிறது அந்த கிணற்றுத்தவளை அந்தக்கிணற்றுக்குளளேயே, ஓரிடத்திலிருந்து குதித்து, கடல் என்ன இவ்வளவு பெரிதாக இருக்குமா எனக் கேட்டது. இதை விட ஆயிரம் பங்கு அல்லது கோடிக்கணக்கான பங்கு, அது பெரிது அதை கம்பேர் பண்ணவே முடியாது, என்று கடல் தவளை சொல்லியது, என்னுடைய கிணற்றை, நான் வசிக்கின்ற கிணற்றை—நீ வசிக்க இடம் கொடுத்தேன்; அந்தக் கிணற்றைத போய் குறை சொன்னாயா என்று அதற்கு அகங்காரம் வருகிறது, ஆணவம் ஏற்படுகிறது. அதை வாழ விடாமல் தடுக்கிறது: நான் என்ன சொல்கிறேன் என்றால், இந்த அறநிலையத் துறையின் மூலமாக, நீங்கள் பிரிவுத படுத்தி, மற்ற மதத்தவரை நீங்கள் உள்ளே கொண்டு வந்து விடுவதற்கு அனுமதி தந்து அதே மாதிரி, அந்த மதத்தவர் கோயில்களுக்கும் செல்ல ஏற்பாடு செய்து, உறவோடு பேச வேண்டும். எனக்கு பிடிக்காது என்று சொல்லக் கூடாது.

ஆளுக்கு ஆள் மதில் சுவர்களைக் கட்டிக் கொண்டு, நான் இருக்கிற ஜாதி தான் பெரிது. நான் இருக்கிற மதந்தான் பெரிது. என்று சொல்லி, அந்தப் பக்கத்திலே என்ன இருக்கிறது என்று பார்ப்பதற்குக் கூட மறுக்கிறார்கள். அதனாலேதான் ஜாதி சண்டைகள். அதனாலே தான் மத பூசல்கள். இவற்றை எல்லாம் அணைத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னால், சுவாமி விவேகானந்தர் அவர்கள் சொன்ன மாதிரி, எல்லோரும் கிணற்றுத் தவளைகளாக இருக்கக் கூடாது மத விஷயத்திலே என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

ஆன்மீகத் துறையிலே நம்முடைய தமிழகம் தழுவிய பாரத நாடு சாதாரணமானது அல்ல, ரஷியாவும், அமெரிக்காவும், மிக உயர்ந்த நாடுகள், வல்லரசுகளாக இருக்கின்றன. அந்த நாடுகளிலே கூட எவ்வளவு பெரிய உலகச் சண்டைகள் நடந்தாலும், இந்திய நாட்டைத்தான் ஆலோசனை கேட்கிறார்கள்.

பாரதத்திலே நாம் பார்த்திருக்கிறோம், தருமர் அமைதியாகத்தானிருப்பார். சத்தியம் அமைதியாகதானிருக்கும் உண்மை அமைதியாகத் தானிருக்கும். அர்ச்சுனனும் பீமனும் மிக வலுவுள்ளவர்கள். வில் வித்தையிலும், மல்யுத்தத்திலும், உலகத்தை ஆட்டிப்படைக்கக்கூடியவர்கள். அவர்கள்

இரண்டு பேரும் தருமத்திற்குமுன்னாலே வந்து தலை வணங்கி நின்று ஆலோசனை கேட்பார்கள். ஆகவே, அமெரிக்காவும், ரஷியாவும், மிக உயர்ந்த நாடுகளாக இருந்தாலும், பிரச்னைகள் எழும்போது, இந்திய மண்ணை நோக்கித்தான் ஆலோசனையை—தலை வணங்கி நின்று, உலக நாடுகள் கேட்டிருக்கின்றன. அதனாலே இங்கேயிருந்து சமாதானப் புறாக்கள் புறப்பட்டுப் போய், உலகத்திற்கே, ஆன்மீகச் சான்றுகள் தந்திருக்கின்றன என்பதை மறந்து விட முடியாது. அந்த ஆன்மீகச் சான்றுகளை மறக்காவண்ணம், நீங்கள் பயன் படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

திரு. கெ. சொக்கலிங்கம்: மாற்றுத் தலைவரவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு அற நிலைய, செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற, அறநிலையம், சுற்றுலா, காடு வளம், சிங்கோனா, சினிமா போன்ற மானியங்கள் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இன்றைய தினம் இந்த மானியத்தின் மீது இங்கே பல உறுப்பினர்கள் பேசினார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் இந்த அற நிலையத் துறை சார்பாக ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். இந்தக் குறிப்புப் புத்தகத்தில் நிர்வாக அதிகாரிகள் 1–1-83 உள்ளிட்ட 479 நிர்வாக அதிகாரிகளை இ. ஓ. அமர்த்திய தாகச் சொன்னார்கள். ஆனால் சில ஆலயங்களில் அந்த நிர்வாகிகள் ஒரு மாதத்திற்கு அல்லது இரண்டு மாதத்திற்கு ஒரு முறை இ. ஓ. க்களை அமர்த்துகிறார்கள். குறிப்பாக என்னுடைய தொகுதி திருப்போரூர் அருள் மிகு கந்தசாமி கோயிலில் இதுவரையில் 2. 3 நிர்வாகிகள் அங்கே அமர்த்தப் பட்டிருக்கிறார்கள். இதில் நான் சொல்வதற்குக் காரணம்—இந்தக் கோயிலைப் பற்றி நான் சென்ற முறை கூட, இந்த அறநிலையத் துறையிலே மாண்புமிகு அமைச்சரவர்கள் மூலமாகப் பேசி, நிதியும் பெற்றோம். ஆனால் 5 ஆண்டுகள் ஆகியும் கூட, அந்த திருப்போரூர் அருள்மிகு கந்தசாமி கோயில் தேவஸ்தானம் கோபுரத்தில் கட்டப்பட்ட கூரைகள் அப்படியே இருக்கின்றன. ஆனால் அங்கேயிருக்கிற பரம்பரை தர்மகர்த்தா, இங்கே கூட நமது சொர்ணம் அவர்கள் கூறியது போல் இந்த பரம்பரை தர்மகர்த்தாக்கள், திருப்போரூர்கோயிலில் மட்டுமல்ல, எல்லாக் கோயில்களிலுமுள்ள அந்தப் பரம்பரை தர்மகர்த்தகள் பெயரால்,—கோயில் சொத்துக்களைச் சூறையாடுகிறார்கள். அங்கே அந்த தர்மகர்த்தா, சிவஞானம் என்ற சாமியார் ஏற்கனவே ஒரு 6, 7 ஆண்டுகளுக்கு முன்னால் அவர் அந்தக் கோயிலுடைய சொத்துக்களை, இங்கே குறிப்பாக குறிப்பு புத்தகம் சொன்னது போல், 5,000 ஏக்கர் நிலங்களையும் குறிப்பாக திருப்போரூர் அருள்மிகு கந்தசாமி கோயில்



நிலங்களையெல்லாம் பெருச்சாளி போல் அங்கே உள்ள நிலங்களையும், அந்தக் சொத்துக்களையும் சூறையாடிக் கொண்டு வருகிறார். இது குறித்து ஏற்கனவே அப்போதிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் மறைந்த சிட்டிபாபு அவர்கள் கொடுத்த ஒரு புகாரின் பேரில் அந்த சாமியார் அதே சிவஞானம் கைது செய்யப்பட்டார். இன்றைய தினம் அந்த சிவஞானம் திருப்போரூர் அருள்மிகு கந்தசாமி கோவிலுக்கு வருகிறார். அதுமட்டுமல்ல, ஏற்கனவே அந்தக் கோவிலுக்கு நன்கொடையாக ஆனந்த விகடன் நிறுவனம் கிட்டத்தட்ட 1,000 காலண்டர்களை அன்பளிப்பாக கொடுத்தது. அந்த காலண்டர்களை, ஒரு காலண்டர் ரூ. 3/– வீதம் அந்த சாமியார் விற்றிருக்கிறார். எதெதற்கோ சட்டம் கொண்டு வருகிற நாம், இன்றைய தினம் அந்த சாமியாரை—அகற்ற முடியவில்லை. அந்த கோயிலை விட்டு அகற்றவில்லை. இங்கே குறிப்புப் புத்தகத்தில் கூட சொல்லப் பட்டிருக்கிறது. பல கோயில் நிலையங்கள் எல்லாம் செப்பனிடப்பட்டு, கும்பாபிஷேகம் நடைபெற்று இருக்கிறது ஆனால் திருப்போரூர் கந்தசாமி கோயிலோ அப்படியே முடங்கி இருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்று எனக்குப் புரியவில்லை. இதில் அமைச்சரவர்கள் உடனடியாக தலையிட்டு, நடவடிக்கை எடுக்க வேண்டும் அந்த ஆதினதர்மகர்த்தா, அந்த சாமியார் அங்கே இருக்கிற, கிளார்க் அதிகாரி முதற் கொண்டு கைவசப்படுத்திக் கொண்டு இந்தக் கோயிலை ஒரு குட்டிச்சுவராக ஆக்கிக்கொண்டிருக்கிறார், இந்த நிலைமை தொடர்ந்து வளர்ந்துக் கொண்டிருக்கிறது. இதில் அமைச்சரவர்கள் தலையிட்டு ஆவன செய்ய வேண்டும்படி கேட்டுக் கொள்கிறேன்.

சில இடங்களில் கருணை இல்லங்கள் என்று இருந்தன. அதை நீங்கள் ஏதோ அன்பு இல்லங்களாக மாற்றியிருக்கிறீர்கள். ஆனால் அன்பு இல்லங்கள் ஒழுங்காக நடக்கிறதா என்றால் இல்லை. சத்துணவுத் திட்டம் வந்தபிறகு குறிப்பாக இப்போது அன்பு இல்லங்கள் எல்லாம் நடைபெறவில்லை. அப்படிப்பட்ட அந்த இல்லங்களையெல்லாம் தொடர்ந்து இந்த அரசு நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக என்னுடைய திருப்போரூர் தொகுதியில் உள்ள கோயிலில் அறங்காவலர்களே இல்லை. ஏற்கனவே ஆதின தர்மகர்த்தாக்கள் வழக்கு மன்றத்திற்குப் போயிருக்கிறார்கள். இதிலே வழக்கு மன்றத்திற்குப் போய் அந்தச் சட்டங்கள் எல்லாம் முடங்கியிருக்கின்றன. எனவே அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தை விரிவாக, பொதுவாக எவ்வளவு சங்கடங்கள் வந்தாலும் எவ்வளவு இடர்பாடுகள் வந்தாலும் இந்த ஆதின தர்மகர்த்தாக்கள் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றவேண்டும். அரியலூரிலே கூட இப்படிப்பட்ட ஒரு நிலைமையிருக்கிறது. அங்கேயிருக்கிற பெருமாள்சாமி கோவில்

ஆதின தர்மகர்த்தாக்கள் கொள்ளை அடித்துக் கொண்டு இருக்கிறார்கள். எனவே அமைச்சர் அவர்கள் சட்டம் கொண்டு வந்து இப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நான் எற்கனவே சொன்னது போல் அரிஜனங்களையும் அர்ச்சகர்களாக ஆக்கவேண்டும் இதைப் பற்றி கூட இந்தக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் படித்துப் பார்த்தேன். இதிலே இருக்கிற குறிப்புப்படி பார்த்தால் சமஸ்கிருதம் படித்தால் தான் அர்ச்சகர்கள் தேர்வுக்கு வரமுடியும். இப்படி சமஸ்கிருதம் படித்துத்தான் வரவேண்டும் என்று சொன்னால், நிச்சயமாக தாழ்த்தப் பட்டவர்கள், பிற்பட்டவர்கள் வருவதற்கு கடினமானதாக இருக்கும். தமிழிலே கூட அப்ப்டிப்பட்ட போதனைகளைப் படிப்பதற்கு இந்த அரசாங்கம் முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த சுற்றுலா துறையைப் பற்றி சில வார்த்தைகள். இது ரொம்பவும் பின்தங்கி விட்டது. உதாரணமாக என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற மாமல்லபுரத்திலே தமிழ்நாடு சுற்றுலா வாரியத்திலே பணிபுரிந்த ஒரு சிலர் 1977 ஆம் ஆண்டு வேலை நிறுத்தம் செய்தார்கள். அவர்கள் எல்லாம் பழிவாங்கியிருக்கிறார்கள். அரசாங்கத் துறையிலே இருக்கின்ற சுற்றுலா துறை மட்டுமல்ல. தனியார் துறையிலே இருக்கின்ற சுற்றுலா துறையிலே கூட இப்படிப்பட்ட சம்பவங்கள் நடக்கின்றன. உதாரணமாக இந்த சில்வர் சான்ட் மற்றும் பிஷ்ஷர்மேன்கோ போன்ற சுற்றுலாத்துறையிலே அவர்கள் தங்களுக்கு தேவை என்கிறபோது வேலைக்கு வைத்துக் கொள்கிறார்கள். வேண்டாத போது திடீரென்று நீக்கி விடுகிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கின்றசம்பளம் பற்றி கூட இந்தக் குறிப்பிலே சொல்லப் பட்டிருக்கிறது. எல்லோருக்கும் நிறைய சம்பளம் கொடுக்கிறோம் என்றுசொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு எவ்வளவு கொடுக்கிறார்கள் என்றால், 255 ரூபாய் கொடுக்கிறார்கள். இந்த 255 ரூபாய் எப்படி கொடுக்கிறார்கள் என்றால், அடிப்படை ஊதியம் 160 ரூபாய் அகவிலைப்படி 95 ரூபாய் ஆக 255 ரூபாய் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் அதுவும் ஒழுங்காகக் கொடுக்கிறார்களா என்றால் கிடையாது. அவர்கள் என்ன கோரிக்கை வைக்கிறார்கள் என்றால், இந்த 255 ரூபாய் சம்பளம் என்றாலும் பரவாயில்லை. ஒரு வேளை சாப்பாடு போட்டால் என்ன என்று கேட்கிறார்கள். ஓட்டல் நடத்துகிறவர்கள் ஒரு வேளை சாப்பாட்டை அந்த ஊழியர்களுக்கு போடும்படி இந்த அரசாங்கம் உத்தரவு போட்டு, அதன் மூலமாக அந்த ஊழியர்களுக்கு ஒருவேளை சாப்பாடு கிடைக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்தபடியாக சுற்றுலாத் துறையினுடைய நிலைமையைப் பறறி நாம் சொல்கின்றபோது, ஒரு குறிப்பை மட்டும் கொடுக்கிறேன். நம்முடைய சுற்றுலாத் துறையில் இருக்கின்ற ரிசப்சனிஸ்ட், அதாவது வரவேற்பிலே இருப்பவர்கள் யார் போனாலும் அங்கே ஒழுங்கான வரவேற்பு தருவது கிடையாது. இந்த அரசாங்கத்திற்கு ரொம்பவும் வேண்டியவர், அதாவதுநம்முடைய முதல்அமைச்சர் எம். ஜி. ஆர். அவர்களுக்கு வேண்டியவர். மணியன், அவர்கள் தன்னுடைய இதயம் பத்திரிக்கையிலே எழுதியிருக்கிறார்கள் என்ன எழுதியிருக் கிறார்கள் என்றால், இந்த சுற்றுலாதுறை ரொம்ப பின் தங்கிப் போய் விட்டது. அதை நான் நாசூக்காகத்தான் சொல்கிறேன். இதுசரியில்லை. என்று மணியன் அவர்கள் இதயத்திலே எழுதியிருக்கிறார்கள். உங்களுக்கு ரொம்பவும் வேண்டியவர், இந்த அரசாங்கத்திற்கு ரொம்பவும் வேண்டியவர், (குறுக்கீடு). அந்த மாதிரியாக இந்தத் துறையிலே இருக்கக் கூடிய வரவேற்பாளர்கள் நிலைமையிருக்கிறது,

அடுத்தப் படியாக காட்டு இலாகா பற்றி, என்னுடைய தொகுதியிலே வண்டலூர் என்ற பகுதியிலே எல்லா மிருகங்களும் வந்துவிட்டன அதற்காக நிதிகளைக் கூட ஒதுக்கியிருக்கிறார்கள் அமைச்சர் அவர்கள் அதற்காக நன்றி. இருந்தாலும் கூட தண்ணீர் பிரச்னை ரொம்பவும் அதிகமாக இருக்கிறது. அந்த மிருகக்காட்சி சாலையிலே தண்ணீரே கிடையாது எனவே அதற்கு முன்னுரிமை கொடுத்து அங்கே தண்ணீர் ஏற்பாடுகள் செய்ய வேண்டும். ஏற்கனவே சில யானைகள் செத்திருக்கின்றன- தண்ணீர் இல்லாமல் பறவைகள் சொத்துப் போய் விட்டன. எனவே அப்படிப்பட்ட நிலைமைகள் இனிமேல் இருக்கக் கூடாது என்ற அளவிலே தண்ணீர் பிரச்னையைத் தீர்ப்பதற்கு குறிப்பாக, ஓவர்ஹெட்டங்க் கட்டியும், ஆழ்கிணறுகள் தோண்டியும் தண்ணீர்ப்பிரச்னையைப் போக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த அரசாங்கம் சில ஈக்குலிப்டஸ் மரங்களை வளர்க்கிறார்கள். அதைப்பற்றி ஏற்கனவே உறுப்பினர் உமாநாத் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த மரம் வளர்ப்பதாலே மழையில்லை(மரம் வளர்ப்பதற்கு என்று ஒதுக்கிய இடத்திலே புல்லே வளரவில்லை. எல்லாம் காய்ந்து போயிருக்கிறது. எனவே மரம் வளர்ப்பதற்கு இந்த அரசாங்கம் நல்ல இடங்களை ........ (மணியடிக்கப் பெற்றது.

(பிற்பகல் 12—40)

திரு. கே. கல்லன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்து இருக்கிற 5 மானியக் கோரிக்கைகள் மீது இந்திய தேசிய காங்கிரஸ் சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். 5 நிமிடத்தில் 5 கோரிக்கைகளைப் பற்றிப் பேசச் சொல்வது அமைச்சர் அவர்களுக்கு நியாயமல்ல என்பது தெரியும். இதன் முக்கியத்துவத்தைப் பற்றிப் பேச ஏறக்குறைய 2,3 நாட்களாவது ஒதுக்கவேண்டும். ஆகவே மாண்புமிகு அமைச்சர்

அவர்கள் இதைக் கருத்தில் கொண்டு இனிமேலாவது அதிக நேரம் கொடுத்து பேச வாய்ப்பு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அண்மையில் சட்டசபையில் அதிகமாக உபயோகிக்கப்பட்ட வார்த்தை வறட்சி என்பதாகும். இந்த வறட்சிக்குக் காரணம் என்ன? இந்த வறட்சி நிலைமை எதனால் ஏற்பட்டது? எதிர்காலத்தில் இதனால் என்ன விளைவு ஏற்படும் என்பதை ஆழ்ந்து சிந்திக்கவேண்டிய நிலைமைக்கு நாம் உந்தப்பட்டு இருக்கிறோம். கொள்கை விளக்கக்குறிப்பில் முதல்பாராவில் காடுகளால் ஏற்படும் இன்றியமையாத நன்மையைப்பற்றி அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதைச் செயலுக்குக் கொண்டுவர முடியவில்லை. இதே ரீதியில் போனால் தமிழகம் இன்னும் கொஞ்ச நாளில் ஒன்றும் இல்லாமல் பாலைவனமாகப் போய்விடும் என்று ஒரு அறிஞர் அண்மையில் சொல்லியிருக்கிறார். டாக்டர் ராஷ்மி மயூர் என்பவர் experts arn cf Tamil Nadu and Kerala tu ning into desert'' என்ற தலைப்பில் ஒரு சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார். இந்த அளவில் நாம் காடுகளை அழித்துக்கொண்டு போனால் வெகுவிரைவில் தமிழ்நாடு பாலைவனமாக மாறி வருவதை நாம் தடுக்க முடியாது என்று அவர் சொல்லியிருக்கிறார். இந்த உண்மையை கவனமாகப் பார்த்து, சிந்தித்துச் செயல்படும்படி அமைச்சர் அவர்களை நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இந்தக் கொள்கை விளக்கப் புத்தகத்தில் ஏறக்குறைய 22 லட்சம் ஹெக்டேர் காடுகள் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அதை இன்னும் 2,3 ஆண்டுகளில் 50 லட்சம் ஹெக்டேர்களாக உயர்த்தவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன் இல்லையென்றால், நாம் மிகவும் மோசமான நிலைமையைச் சந்திக்கவேண்டிய நிலை வரும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

சமுதாய காடுகள் வளர்ப்புத் திட்டத்தில் நல்ல விதமாகப் பயனை ஏற்படுத்திக் கொள்ள முடியும். ஆனால் அந்த வேலைகளைச் செய்வதற்கு முட்டுக்கட்டையாக பஞ்சாயத்து, ரெவின்யூ பூமிகள் மற்றும் இதர அரசு இலாகா பூமிகள் இருப்பதால், பல முரண்பாடுகள், தகராறுகள் வருகின்றன. எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அது பெரிய இடைஞ்சலாக இருக்கிறது. அவற்றைப் போக்க சர்க்கார் ஒரு ஜி.ஓ. போடவேண்டும். எங்கெங்கே அரசாங்க காடுகள் காலியாக இருக்கின்றனவோ அவற்றிலெல்லாம் உடனடியாக மரம் நட வேண்டும் என்று ஒரு உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று இந்தத் தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரியைப் பொறுத்தவரையில், இங்கேயுள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மற்றும் உள்ளவர்களுக்கும் நன்கு தெரியும். 10 வருஷத்திற்கு முன்னால் பசுமையாக இருந்த நீலகிரி—மலைகள் ராணி—என்று அழைக்கப்பட்டது. இன்றைக்கு இளம்விதவையாகக் காட்சி அளிக்கிறது. அதைப்போக்க போர்க்கால நடவடிக்கை எடுத்தால் ஒழிய ஒன்றும் செய்ய முடியாது.





அரசு மரங்கள் இன்றும் களவாடப்பட்டு வருகின்றன. அண்மையில் கோத்தகிரியில் சப்கலெக்டர் அவர்கள் மரங்கள் கடத்துவதைக் கண்டுபிடித்து கேஸ் போட்டார்கள். மறு நாள் பெரிய லாக் இருந்த இடத்தில் பெரிய குச்சிகளை வைத்து அதை மறைத்து விட்டார்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள். அதனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. போன வருஷம் டைகர் ஹில் டீ பாக்டரியில் 1/2 லோட் டீக்கு எக்சைஸ் வரி கட்டவில்லை என்று கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் அதுக் குறித்து எந்த விதமான நடவடிக்கையும் சரியாக எடுக்கப்படவில்லை. இப்படிப் பட்ட நிலைமைகள் தொடர்ந்து இருப்பது தவிர்க்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சில்வர் ஓக்கை ஷெட்யூலில் கொண்டு வந்துவிட்டதால்' நீலகிரியில் சில்வர் ஓக்ஸ் இல்லாமல் செய்துவிட்டார்கள். ஒரு சில ஆன்டி சோசியல் எலெமென்ட்ஸ் 1,000 ரூபாய்க்கு கிடைக்க வேண்டியதை ரூ.200 ரூ. 250 என்று வாங்கி அங்கேயிருந்த மரங்களையெல்லாம் கடத்திச் சென்று விட்டார்கள். ஆகவே, 50-100 மரங்களுக்குச் சலுகைகளை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டு உபயோகத்திற்காகச் சொந்த பூமியில் போட்ட 1,2 மரங்களை வெட்டுவதற்கும் அனுமதி வாங்குவதில் கஷ்டம் இருக்கிறது. சொந்த உபயோகத்திற்கு மரங்கள் தேவைப்பட்டால், அதை வெட்டுவதற்கு உரிமங்களை உடனடியாக வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரியில் புளி மகசூலை கொடுக்கும்போது, 4,50 ரூபாய் அபராதம் கட்டிய ஒரு கூட்டுறவு பாக்டரிக்கு மட்டும் கொடுத்துவிட்டு, மற்ற சங்கங்கள் கேட்டபோதிலும் கொடுக்காமல் இருப்பது எங்களுக்கு விந்தையாக இருக்கிறது.

சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில் அதை ஒரு இன்டஸ்டிரியாகக் கருதி செயலாற்ற வேண்டுமென்று நாங்கள் பல ஆண்டுகளாக சொல்லிக்கொண்டு வருகிறோம். ஆனால் நீங்கள் இதுவரை செய்யவில்லை. உதாரணத்திற்கு ஒன்றை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சென்னை மாநகரிலே அண்ணா சிலைக்கு—அது உங்கள் தலைவருடைய சிலை—அங்கிருந்து வெல்லிங்டன் வரை அமைச்சரவர்கள் சென்று பார்க்கவேண்டும். உலகத்திலேயே இதைவிட மோசமான இடம் எங்கும் இருக்க முடியாது. அதை சீர்செய்ய உங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

*திரு. கே. உச்சி : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டுவரப் பட்டிருக்கிற சுற்றுலாத்துறை, காட்டுவளத்துறை போன்ற மானியக் கோரிக்கைகள்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு இந்தியா முழுவதிலிருந்தும் சுற்றுலாப் பயணிகளை வெகுவாக தமிழ்நாடு கவருகிறது என்றால் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள இயற்கை வளங்கள் தான் காரணம் என்பதை நாம் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம். அப்படிப்பட்ட இயற்கை வளங்கள் நிறைந்த பகுதிகளிலே, மலைப் பகுதிகளிலே முக்கியமாக இருப்பது நீலகிரி மாவட்டம். நீலகிரி மாவட்டத்திலும் குறிப்பாக உதகமண்டலத்தைச் சொல்லலாம். மலைப்பகுதிகளைச் சேர்ந்த இயற்கை வளம் நிறைந்து, சுற்றுலாப் பயணிகளை அதிகமாகக் கவருகின்ற இடங்கள் உதகமண்டலமும் கோடைக்கானலும் ஆகும். அதைப்போன்று வேறு பல இடங்களும் இருக்கின்றன. நீலகிரி மாவட்டத்தில் இருக்கிற முதுமலைக்காடு முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது.

கடந்த வருஷம் நீலகிரி மாவட்டத்தை சுற்றுலாத்துறை நன்றாகப் பேணி பாதுகாக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு அங்கே நடைபெற்ற மலர் காட்சியின்போது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு அறிக்கையை வெளியிட்டார்கள். கிட்டத் தட்ட உதகமண்டலத்தையும், அதைச் சுற்றியிருக்கிற பல்வேறு சுற்றுலாத் தலங்களையும் 2 அல்லது 25 கோடி ரூபாய் செலவில் உல்லாசப் பயணிகளைக் கவரும் வகையில் மேம்பாடு செய்யலாம் என்ற ஒரு திட்டத்தை வெளியிட்டார்கள். அதன்பிறகு நாம் பார்க்கும்போது இங்கே இந்த குறிப்பில் 25 கோடி ரூபாய் மட்டுமல்ல, 28 கோடி ரூபாய்க்கான திட்டங்கள் இங்கே அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டங்களை வெகு விரைவிலே செயலாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் திட்டங்களின் அடிப்படையில் முக்கியமாக குன்னூரிலும் கோத்தகிரியிலும் உல்லாசப் பயணிகள் இல்லங்கள், இளைஞர் இல்லங்கள் கட்டப்பட வேண்டும். தொட்டப் பெட்டாவையும் உதகையையும் இணைக்கிற முறையில் 'ரோப்வே' திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தைக் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் இந்தக் குறிப்பிலே முக்கியமாக அறிவிக்கப் பட்டிருக்கிற திட்டங்கள், உதகமண்டலத்திலுள்ள ஏரியையும் ஏ த் தோட்டத்தையும் மேம்படுத்துதல், ஏரியைச் சுற்றிலும் வண்ண விளக்குகள் அமைத்தல், ஏரியின் மேல் மிதவை அமைப்பிலான சிற்றுண்டிச் சாலை அமைத்தல், ஏரியைக் கடப்பதற்கு நடைப்பாலம் கட்டுதல், முதுமலையில் பார்வை மாடம் அமைத்தல், சுற்றுலாப் பகுதிகளை அழகுபடுத்துதல், சிறு பேருந்து, குழந்தைகள் தொடர் மின்வண்டி விடுதல், மான் பூங்கா அமைத்தல் போன்றவை முக்கியமான திட்டங்கள். இந்தத் திட்டங்களை எவ்வளவு வேகமாகச் செயல்படுத்த முடியுமோ அவ்வளவு வேகமாகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு உறுப்பினர் திரு. கல்லன் அவர்கள் சொன்ன போது சுற்றுலாத் துறையை ஒரு சுற்றுலா இன்டஸ்ட்ரீயாக மாற்ற வேண்டுமென்று சொன்னார்கள். அந்த அளவுக்கு மாற்றம் செய்ய அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இங்கே சின்கோனா பற்றி இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கிட்டத்தட்ட தமிழ் நாட்டிலே பாதி அளவு, உலக நாடுகளில் ஒன்றரை மடங்கு அளவுக்கு உயிர்காக்கும் மருந்துகள் தயாரிக்கப்படுவதற்கு முக்கியமாகப் பயன்படுவது சின்கோனா துறையிலிருந்து கிடைக்கும் கொய்னாவாகும். இதை ஏற்றுமதி செய்யவிடாமல் மத்திய அரசு தடை செய்திருக்கிறது அது சரியான ஒரு நடை முறையல்ல. அந்தத் தடையை ரத்து செய்ய நம்முடைய அரசு முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். கொய்னா மருந்து ஏராளமாக வெளிநாடுகளுக்குத் தேவை இருப்பதால் அதை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு நிரந்தரமாக அனுமதிக்க வேண்டும்; தடையை நீக்க வேண்டுமென்று நம்முடைய அரசு மத்திய அரசை வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

காடுகளைப் பொறுத்தவரையில், ஒரு சில விஷமிகள் காடுகளை அழிப்பதில் தீவிரப் பங்கு கொண்டிருப்பது ஓரளவு உண்மையே என்றாலும், அவைகளைக் கண்டுபிடித்து ஒழிக்கும் வகையில் நம்முடைய அரசு ஒரு பறக்கும் படையை ஏற்படுத்தி, நடவடிக்கை எடுத்து வருவதைப் பற்றி, நான் அமைச்சர் அவர்களையும், அரசையும் பாராட்டுகிறேன்.

சில்வர்வோக்ஸ் எனப்படும் மரங்கள் நீலகிரி மாவட்டத்திலே பல பகுதிகளில் வளர்க்கப்படுகின்றன. 50 ஆண்டுகள், 100 ஆண்டுகள் வரையில் அவை இருக்கும். குறிப்பாகச் சொல்லப் போனால், என்னுடைய தோட்டத்திலேயே எடுத்துக் கொண்டாலும், என்னுடைய தாத்தா காலத்தில் வளர்க்கப்பட்ட மரங்கள் தான் அங்கே நிறைய இருக்கின்றன. அதுபோன்ற சில இடங்களில் தனியார்களால் வளர்க்கப்படும் மரங்களை, அவர்கள் தங்களுடைய சொந்த உபயோகத்திற்காக, வீட்டு உபயோகத்திற்காக வெட்ட வேண்டும் என்றால் கூட அதற்கு அனுமதி தருவதிலே பல சிக்கலான சட்டங்கள் இருக்கின்றன அவைகள் சற்று தளர்த்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

ஆனால், அப்படியும் அனுமதி அளிக்கப்பட்ட சில இடங்களில் அவர்கள் 90 மரங்கள் அல்லது 100 மரங்களை வெட்டுவதற்கு உத்தரவு வாங்கிக்கொண்டு, அங்கேயுள்ள 500 மரங்களை வெட்டுகின்ற சூழ்நிலைகளும் இருக்கின்றன அப்படிப்பட்ட சமயத்தில் அதைத் தடுக்க நம்முடைய அரசு கண்டிப்பாக இருக்க

வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கடைசியாக என்னுடைய தொகுதியில் கோத்தகிரியிலிருந்து மேட்டுப் பாளையம் நீலகிரி செல்லும் வழியில் சாலை ஓரங்களில் ஓட்டல்கள் என போடப்பட்டுதான, சிறு தேநீர் விடுதிகள், துறைப் பணியாளர்களுக்கு கட்டித்தரவேண்டும் என்று கேட்டு, அதற்கென இத்துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையை இன்னும் சற்று அதிகரித்துத் தரவேண்டும் என்று கோரி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. **எஸ். என்.** இராமசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்துசமய அறத்துறையின் சார்பாக அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய மானியக் கோரிக்கைகள் மீது காந்தி காமராஜ் தேசீய காங்கிரசின் சார்பாக சில வார்த்தைகளை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

தென் பகுதியிலே சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம் ஒரு பெரிய தேவஸ்தானமாக இன்று இருந்து வருகிறது, அங்கே ஆண்டு ஒன்றுக்கு 3,4 திருவிழாக்கள் நடைபெறுகின்றன. மாதம் ஒரு முறை மாதாந்திர விழாவும் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அந்தக் கோயிலுக்கு யாத்ரீக மக்கள் அதிகமாக வருவதன் காரணமாகவும், அந்த தேவஸ்தானம் ஒரு வசதி படைத்த தேவஸ்தானமாக அங்கே இருப்பதன் காரணமாகவும் அந்த தேவஸ்தானமே ஒரு தங்கும் விடுதியை ஆரம்பித்து வைத்திருக்கிறது. தற்போது அங்கே அமைக்கப்பட்டுள்ள ரூம்கள், அங்கே வருகின்ற யாத்ரீகர்களுக்குக் காணாத நிலையில் இருப்பதால் இன்னும் புதிய ரூம்களை அதிக அளவில் அமைத்து, அங்கே வரும் யாத்ரீகர்கள் அனைவரும் அங்கே தங்கிச் செல்வதற்குரியவசதியாக ஏற்பாடுகளை அரசு ஏற்படுத்தித் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து தமிழக கிராமங்களிலே பல கோயில்கள் பெரிய பெரிய கோயில்களாக இருந்து கொண்டிருக்கின்றன. அந்தக் கோயில் களுக்குச் சொந்தமாக பல ஆயிரக்கணக்கில் நிலங்கள் இருந்தும், அது அங்கே வசிக்கக்கூடிய கிராம மக்கள் பலரின் கைகளிலே சிக்கிக்கொண்டு, அந்த சம்பந்தப்பட்ட கோயிலுக்கு எந்தவிதமான வருமானமும் கிடைக்க இயலாத நிலைமை இருந்துக் கொண்டிருக்கிறது. அறங்காவலர் ஊழியர்களின் மூலமாக, அந்தக் கோயில் களுக்கு கொடுக்க வேண்டிய நெல், பணம் போன்ற பாக்கிகளை நேரிடையாக சென்று கேட்டால் கூட கிராம மக்கள் அவர்களுக்குச் சரியாக பதில் சொல்வதில்லை; அதனால் அந்த அறங்காவலர் குழுக்களும் சரியான முறையில் அந்த நெல் போன்றவைகளை வாங்கி அந்தக்கோயிலை சரியான முறையில் பராமரிக்க முடியவில்லை. அந்த சூழ்நிலை பல கிராமங்களில் இருந்து கொண்டிருக்கிறது.



ஆகவே, அவைகளைச் சரி செய்யும் வகையில், எந்தெந்த கோயில்களுக்கு நிலங்கள் இருக்கின்றனவோ, அந்தக் கோவில் களில் உள்ள அறங்காவலர்களுக்கு, இங்கேயிருந்து அமைச்சர் மூலமாக நேரிடையாக ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும். அந்தக் கோயில் நிலங்களை 2,3 வருடங்களுக்கு ஒரு தரம் அந்தக் கிராமங்களிலே உள்ள விவசாய மக்களுக்கு குத்தகைக்கு ஏலம் விடும் முறையில் அளித்துவிட வேண்டும். இதற்கு முன்னால் குத்தகைக்கு விடப்பட்டு, பாக்கி வைத்திருப்பவர்களுக்கு, மறு படியும் அந்த நிலங்களைக் கொடுக்காமல், மற்றவர்களுக்கு கொடுத்து, அவைகளை நல்ல முறையில் வசூல் செய்து, அந்தக் கோவிலின் வருமானத்தில் சேர்ப்பிக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும் சேரிப் பகுதியிலே இன்று கன்றுகளை நடுவதற்கு வாய்ப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சேரிகளில் கன்றுகள் நடுவதை நானே நேரடியாகப் பார்த்திருக்கிறேன். அவ்வளவு அதிகமாகச் செலவிட்டு நட்டாலும் கூட அவற்றை அதிகமான அக்கறையோடு கவனிக்காத நிலைமை இருக்கின்றது. அவற்றிற்கு தண்ணீர் சரியாத விடப்படாத நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. என்னுடைய பகுதியில் சேரி அதிகமாக இருப்பதால் அங்கே பனை மரங்கள் மிகவும் அதிகமாக இருக்கின்றன. அந்தப் பனைகளிலிருந்து வருகின்ற வருவாயிலே பொது மக்களுக்கு அதிக லாபம் இல்லாமல் இருப்பதன் காரணத்தால் அந்தப் பனைமரங்களை வைத்து அங்கே பாம்கோலா ஃபேக்டரி ஏற்படுத்த வேண்டும். சாத்தான்குளம், சேதிங்கநல்லூர் போன்ற பகுதிகளிலே அப்படி ஃபேக்டரி ஏற்படுத்த வேண்டும். அப்படி ஃபேக்டரி நிறுவினால் அதனால் அங்கே உள்ள மக்கள் பயன்பெற முடியும்.

அடுத்து கோயில் நிலங்களைப் பற்றி நான் சொல்லி இருக்கிறேன். குரும்பூரிலே ஆதிநாராயணசாமி கோயில் என்பது பெரிய கோயிலாக இருக்கின்றது. அந்தக் கோயிலுக்கு கிட்டத் தட்ட 6½ ஏக்கர் நிலம் இருக்கின்றது. அந்தக் கோயிலைப் பொறுத்தவரையில் 43½ கோட்டை நெல் ஒவ்வொரு ஆண்டுக்கும் வரவேண்டியது. கடந்த 7 ஆண்டுக்காலமாக வரவில்லை. இது பற்றி நான் கேள்வியாகக் கூட கேட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்களிடத்திலே நேரடியாகச் சொல்வதற்கும் தயாராக இருக்கிறேன். திரு. கே. எஸ். பி. சண்முகவேல் நாடார் மற்றும் திரு. கிருபானந்தவாரியார் ஆகியோருடைய தலைமையில் ஒரு கமிட்டி அமைத்து அங்கே இருக்கக்கூடிய நிர்வாகஸ்தர்கள் சேர்ந்து பணத்தைப் பிரித்து சில பணிகளைச் செய்தோம், இன்னும் சரியாக அந்தப் பணி நடக்கவில்லை. எனவே இந்த நிதியாண்டிலே அந்த தேவஸ்தானத்திற்கு அரசாங்கத்தில் இருந்து நிதி ஒதுக்கிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஃபாரஸ்ட் என்பதைப் பொறுத்தவரையில் இயற்கையிலே இருக்கக்கூடிய மரங்களை நல்லமுறையில் நாம் வளர்த்தாலும் இரவு நேரங்களில் அவற்றைத் தனியார் வெட்டிக் கொண்டு சென்றுவிடுகிறார்கள். ஃபாரஸ்ட் துறையிலே இருந்து அவற்றைக் காவல் செய்பவர்கள் நல்லமுறையிலே காவல் புரிவதாகத் தெரியவில்லை. அரசாங்கத்திலே இருந்து இந்த ஃபாரஸ்ட் காவலர்களுக்கு ஜீப்புகள் ஒதுக்கி இருப்பதாக குறிப்பிலே இருக்கின்றது. ஆகவே அந்த ஜீப்புகளை எல்லாம் துரிதமாகக் கொடுத்து ஃபாரஸ்டை நல்லமுறையில் பாதுகாக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

தாமிரபரணி ஆற்று ஓரத்தில் தேக்கு, ஈட்டி, கோங்கு போன்ற நல்ல மரங்களை நட்டு அது பலன் தரக்கூடிய அளவுக்கு பெரிய மரங்களாக உண்டாகி இருந்தாலும் கூட அவற்றைத் தனியார் வெட்டி எடுத்துக்கொண்டு சென்றுவிடுகிறார்கள். அது பற்றி அரசாங்கம் தலையிட்டு உடனடியாக அதனை நிறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்....(மணியடிக்கப் பெற்றது)

அடுத்து என்னுடைய தொகுதியில் சாத்தான்குளம், சேதிங்க நல்லூர், வசவப்புரம், முரப்பநாடு. சென்னப்பட்டி போன்ற பகுதிகளில் கோயில்கள் அதிகமாக இருக்கின்றன. அந்தக் கோயில்களில் உள்ள ஐம்பொன் சிலைகள் எல்லாம் நல்லமுறையில் பராமரிக்கப்படாமல் இருக்கின்றன. இதுகுறித்து அரசாங்கம் தலையிட்டு அவற்றை நல்லமுறையில் பராமரிப்பு செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். (மணியடிக்கப்பெற்றது.)

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு நம்முடைய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் வகிக்கின்ற பல்வேறு இலாக்காக்களைத் திரட்டி இன்றைக்கு இந்த மாமன்றத்திலே வைத்து அதன்மீது ஒரு விவாதத்தை வைத்திருக் கிறார்கள். அதில் பல அங்கத்தினர்கள் பேசி இருக்கிறார்கள். பேசி இருக்கிறார்கள் என்று கூடச் சொல்லமாட்டேன். தலைப்புச் செய்திகளை வாசித்திருக்கிறார்கள். அவ்வளவு வேகமாக நீங்கள் மணியடித்திருக்கிறீர்கள். இப்படி பல்வேறு இலாக்காக்கள் இருப்பதன் காரணத்தால் குறைந்தபட்சம் ஓர் அங்கத்தினருக்கு 15 நிமிஷமாவது தந்திருக்க வேண்டும். பெரிய திருக்கோயில்கள் மற்றும் செய்தித்துறை, சினிமா ஆகியவற்றின் பெயர்களைச் சொல்வதற்கே 3 நிமிஷம் போய்விடும். அதன்பின்னர் சபைக்கு சலாம் சொல்வதற்கு இரண்டு நிமிஷம் போய்விடும். அப்படிப் பட்ட நிலைமையில் என்னுடைய ஒரு சில கருத்துக்களை எவ்வளவு விரைவாகச் சொல்ல முடியுமோ, அவ்வளவுவிரைவாகச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்வேறு இலாக்காக்கள் இருந்தாலும் முதலில் செய்தித்துறை, படத்துறையைப் பற்றி சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். செய்தித்துறை, திரைப்படத்துறை என்பது அரசாங்கத்தின் கையிலே இருக்கின்ற பவர்ஃபுல் வெப்பன். அது மக்களிடத்திலே ஒரு பிரமையை ஏற்படுத்துவதற்கு உபயோகப்



படுத்துகின்ற ஒன்றாகும். அதிலே சினிமா காட்டுவது என்பது மக்களின் மனதிலே பதியக்கூடிய ஒன்றாகும் பல்வேறு பத்திரிகைகளை எல்லாம் தனது வசத்திலே வைத்துக் கொண்டு தான் இடுகின்ற செய்திகளை மட்டும் போடவேண்டும் என்று கட்டாயப்படுத்துகின்ற விளம்பரம் என்ற ஒரு கடிவாளத்தை வைத்திருக்கிறீர்கள். நாங்கள் தருகின்ற செய்திகளை இப்படித் தான் போடவேண்டும், இப்படித்தான் தலைப்பிட்டு போட வேண்டும் இல்லாவிட்டால் நாங்கள் விளம்பரம் தரமாட்டோம், கடிவாளத்தை இழுத்துவிடுவோம் என்று கருதப்படுகின்ற வகையில் ஒரு ஆயுதத்தைக் கையில் வைத்துக் கொண்டிருக் கிறீர்கள்.

(பிற்பகல் 1—00)

நான் இந்தக் குறிப்பேட்டைப் படித்துப் பார்த்தேன். அந்த குறிப்பேட்டில் என்ன எழுதியிருக்கிறது என்றால் மக்களுக்கு 20 அம்ச திட்டத்தைப் பற்றியும் அரசாங்கம் எடுத்து இருக்கிற நல்ல பல காரியங்களைப் பற்றியும் நாட்டுமக்களுக்கு விளக்குவதற்காகத் தான் நாங்கள் இப்படிப்பட்ட செய்தி படங்களை வெளி யிடுகிறோம், நாட்டு மக்கள் இடத்திலே அதை தெரிவிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். எனக்கு அதிலே மாறுபட்ட கருத்து கிடையாது. பிரதமர் அவர்கள் வெளியிட்டு இருக்கிற 20 அம்ச திட்டத்தையோ அல்லது இந்த அரசாங்கம் செய்கின்ற மக்கள் நலனுக்காக ஆற்றுகின்ற பணிகள் குறித்தோ மக்களிடத்தில் அதனை எடுத்து விளக்குவதில் நான் மாறுபட்ட கருத்து கொண்டவன் அல்ல. ஆனால் எப்படிப்பட்ட செய்திகளை இங்கே படித்து மக்களிடத்திலே திணிக்கப்பார்க்கிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணத்தை நான் இங்கே சொல்கிறேன். செய்தி இயக்குநர் என்பவர் ஒருவர் இருக்கிறார். செய்தி, மக்கள் தொடர்பு இவைகளுக்கு எல்லாம் அவர்தான் இயக்குநர். அந்த இயக்குநர் அவர்கள் 31—3—82 அன்று எல்லோருக்கும் ஒரு சர்க்குலர் அனுப்புகிறார். எண். 6135/80, 6-ம் நாள் அனுப்பு கிறார்: கே. ஏ. சுந்தரம், இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு துறை என்பவர் அனுப்புகிறார்கள். அதன் பொருள் விளம்பரம், பின்தங்கிய மற்றும் மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதிகளிலே அரசின் திட்டங்களை விளம்பரப்படுத்துவதிலே அதற்கு நாங்கள் செய்தி படங்களை அனுப்புகிறோம் என்றார்கள். அப்படி என்ன என்ன படங்களை காட்டவேண்டும் என்று இதிலே சொல்லியிருக் கிறார்கள் என்றால் மாவட்டங்களில் பின்தங்கிய மற்றும் மலைவாழ் மக்களிடையே அரசின் ஆக்கப்பணிகள் குறித்து விளம்பரம் செய்வதற்காக தாங்கள் கருத்துக்களை இத்துறையின் மூலம் ஆய்வு செய்து கீழ்க்கண்ட அறிவுரைகள் வழங்கப்படுகிறது. யாருக்கு? அந்தப் படம் காட்டுபவர்களுக்கு. புகைப்படக் காட்சி காட்டுதல். அப்படி அந்த புகைப்படக் காட்சிகள் எப்படி காட்ட வேண்டும் என்றால் (2) படிப்பு இல்லாத இப்பகுதிகளில் 'அன்எஜுகேட்டடு பாப்புலேஷன்' நிறைந்த பகுதிகளில் திரைப் படங்களை நடத்தும்போது இம்மக்கள் புரிந்துகொள்ளும் அளவுக்கும் பயன்படும் நிலைக்கும் ஏற்றவாறு ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்கள் புரிந்துகொண்டு, தெரிந்து கொள்ளும்

[திரு. துரைமுருகன்] [1983 மார்ச் 28

அளவுக்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்த செய்தித் துறை ஒரு இன்பர்மேஷன் நோட்டீஸ் கொடுக்கிறது. அது எப்படிப்பட்ட செய்தி படமாக இருக்கவேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடித்த படங்களில் 16 எம்.எம். உள்ள படங்களை மாதம் ஒரு முறையாவது திரையிடவேண்டும். முதல்வர் அவர்கள் நடித்த படங்களை 16 எம்.எம்.லே போட்டு படிப்பு அறிவு இல்லாத—கரெக்டா போட்டு இருக்கிறார்கள் பாருங்கள் அந்த கிளாஸை—மலைவாழ் பகுதியில் வாழும் மக்களுக்கு மாதம் ஒரு முறையாவது நமது மாண்புமிகு முதல்வர் நடித்த படங்களை வெளியிட வேண்டும் என்று சொன்னால் மக்களுக்காக நாட்டுக்காக ஆற்றிய பணிகளை 20 அம்ச திட்டத்திற்காக நீங்கள் செய்த சாதனைகளை விளக்குவதற்காக இந்த செய்தித்துறை இருக்கிறதே தவிர முதல்வர் அவர்கள் நடித்த படங்களை 16 எம்.எம்.லே கொண்டு போய் மலைவாழ் பகுதியிலே கொடுப்பதற்காக இந்த நிறுவனம் இல்லை. அப்படி என்றால் சுயவிளம்பரத்திற்காக இந்த நிறுவனத்தை பயன்படுத்திக் கொண்டு இருக்கிறீர்கள், என்று பொருள். இட்லருக்கு பக்கத்தில் இருந்த கோயபல்ஸ் செய்த பிரசாரத்தை விட ஒரு மோசமான ஒரு பிரசாரத்தை இந்த செய்தித்துறை மூலமாக நீங்கள் செய்து இருக்கிறீர்கள். எனவே இது ஒரு கட்சி ஆட்சியாக உங்களுடைய தற்பெருமையை விளக்குவதற்காக, எந்த மக்கள் சினிமாவைப் பார்த்து ஏமாறுகிறார்களோ அந்த மலைவாழ் பகுதியிலே படிப்பு அறிவு இல்லாத மக்களிடத்திலே காட்டவேண்டும் என்று குறிப்பிட்டு இருக்கும் இந்த அரசை நான் மிக பலமாக கண்டிக்கிறேன். இது ஒரு பெரிய மோசடி என்பதை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

அடுத்து, வேலூரில் ஒரு திரையரங்கம் இருக்கிறது, அதேபோல் இங்கே கலைவாணர் அரங்கம் இருக்கிறது. திருச்சியில் ஒரு அரங்கத்தை வைத்து இருக்கிறார்கள். வேலூரில் உள்ள திரையாங்கத்தில் வாரத்திற்கு இரண்டு படம் காட்டுகிறோம் என்று மொட்டையாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். நீங்களே கூட ஒரு சட்டம் போட்டு இருக்கிறீர்கள். திரைப்படங்கள் வருடத்திற்கு இத்தனை வாரத்தில் தமிழ்ப்படம் காட்ட வேண்டும், அது எந்த திரையரங்கமாக இருந்தாலும். ஆனால் வேலூரில் இருக்கிற அண்ணா திரையரங்கத்தில் ஒரு ஆண்டுக் காலமாக தமிழ் படங்கள் காட்டப்படுவது இல்லை. என்ன காரணம்? ஏற்கனவே இந்த மாமன்றத்திலே சுட்டிக் காட்டியிருக்கிறேன். அந்த திரையரங்கத்தை ஆளும் கட்சியைச் சேர்ந்த சி நபர்களுக்கு வாரம் ஒரு முறை ஏலம் விடுவது, விஸ்வநாதன் என்று ஒருவர் அல்லது செல்வராஜ் என்று ஒருவர் அல்லது வேறு யாராவது காமாட்சி என்று ஒருவர் இவர்களுக்கு விடுவது. விட்டவுடனே அந்த ஆள் போய் அந்த வேலூரில் உள்ள டிஸ்ட்டிபூட்டர்களிடம் போய் கேட்பது நீ படம் போட்டுக் கொள்கிறாயா என்று கேட்பது. வடனே அவன் படம் போட்டுக்கொள்கிறேன் என்றால் ஒரு உாரத்தில் 7 நாட்களில் கிராஸ் கலெக்ஷன் 15 ஆயிரம் வரும்



1983 மார்ச் 28] [திரு. துரைமுருகன்]

என்றால் 10 ஆயிரம் தியேட்டருக்கு வரும். 5 ஆயிரம் டிஸ்ட்ரிபியூட்டருக்கு பாகும். இந்த 5 ஆயிரத்தில் இந்த இடைத் தரகர்களை நியமித்து இருக்கிறீர்களே அவர்களுக்கு ஒரு ஆயிரம் வெட்டவேண்டும். இப்படி ஒரு நிலைமை இருந்தது. வேலூரில் இருக்கும் டிஸ்ட்ரிபூட்டர்ஸ் அசோசியேஷன் சார்பில் நாங்கள் ஆயிரம் ரூபாய் தருவதற்கு தயாராக இல்லை தியேட்டருக்கு நீங்கள் ஆட்களை போட்டு இருக்கிறீர்கள் அந்த தியேட்டர்காரர்கள் மற்ற தியேட்டர்காரர்களை போல் எங்களை அணுகட்டும் நாங்கள் படம் தருகிறோம் என்று சொன்னார்கள். அது குறித்து அமைச்சர் இடத்திலே தெரிவித்து இருப்பதாக கேள்விப்படுகிறேன். ஆனால் இவர்கள் என்ன செய்தார்கள் போட்டால் தமிழ்படம் எல்லாம் மிடில்மேன் மூலமாகத்தான் போகவேண்டும் எங்கள் அண்ணா தி.மு.க.வினர் அதில் வாரம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் சம்பாதிக்க வேண்டும் என்று சொன்னார்கள். உடனே டிஸ்ட்டிபூட்டர்ஸ் அசோசியேஷன் ஒரு முடிவு எடுத்து அண்ணா திரையரங்கத்திற்கு தமிழ் படங்கள் கொடுப்பது இல்லை என்ற முடிவுக்கு வந்தார்கள். அப்படித் தப்பித்தவறி நம்முடைய சுந்தர்லால் நகாதா ஒரு முறை ஒரு படத்த அங்கே போட்டார். அப்படிப் படத்தைப் போட்டவுடனே-நான் கண்ட சொர்க்கம் என்ற ஒரு படத்தைத் தெரியாமல் கொடுத்துப் போட்டார்—உடனே செங்கற்பட்டு நார்த் ஆற்காட்டிலே பிலிம் அசோசியேஷன் சார்பில் இருக்கிற சிந்தாமணி முருகேசன் போன்றவர்கள் எல்லாம் வீம்புசெய்து பெட்டியைத் தூக்கிக்கொண்டு வந்தார்கள். பாக்கியவதி என்ற படம் கொடுக்கப் பட்டது. மறுநாளே அந்தப் படத்தைத் தூக்கிக்கொண்டு வந்தார்கள். நான் கேட்கிறேன், டந்த ஒரு ஆண்டுக்காலமாக தமிழ்ப்படங்களை வேலூர் அண்ணா கலையரங்கத்திற்கு எந்த டிஸ்ட்டிபியூட்டரும் தர மறுக்கிற காரணத்தாலே இன்றைக்கு ஆங்கிலப் படங்களைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே ஊருக்குத்தான் உபதேசம், நமக்கும் நீக்கும் லேதடி என்பதைப் போல் எல்லாத் திரை அரங்கக்காரர்களும் ஆண்டுக்கு இத்தனை வாரம் தமிழ்ப்படம் போட வேண்டும் என்று அறிவுறுத்துகிற, சட்டம் இயற்றியிருக்கிற இந்த சர்க்கார் தன்னுடைய ஆளுகையிலே இருக்கிற அண்ணா திரையரங்கத்திலே எந்த ஒரு தமிழ்ப்படமாவது காட்டப்படுகிறதா என்றால் கடந்த ஒரு ஆண்டுக் காலமாக காட்டப்படவில்லை. எது எப்படியிருந்தாலும் நம்முடைய கலைவாணர் அரங்கத்திலே, திருச்சியிலே இருக்கிற கலையரங்கத்திலே மிடில் மேன்கள் இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். அப்படியிருந்தால் அமைச்சர் அவர்கள் ஏன் மிடில் மேன்களை நியமிக்கிறீர்கள்? ஏன் நேரடியாக டிஸ்ட்டிபியூட்டரை அணுகவில்லை. அரசினுடைய திரை அரங்கத்திற்கு ஒரு படமும் டிஸ்ட்டிபியூட்டர்ஸ் அசோசியேஷன் தரமாட்டேன் என்கிறார்கள் என்றால் இதிலே எவ்வளவு ஊழல்கள் மலிந்திருக்கின்றன என்பதை நான் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் நீங்களே ஒரு பட டிஸ்ட்ரிபியூஷன் அமைக்கக் கூடாது? அண்ணா மூவிஸ் இருக்கிறது. தஞ்சாவூர் திருச்சிக்கு ஒரு டிஸ்ட்ரிபியூஷன் இருக்கிறது. இப்படி பல டிஸ்ட்ரிபியூஷன் ஆரம்பித்திருக்கிறீர்கள்.

நீங்களே கூட போடமுடியாது. ஏன் என்றால் அந்த
அசோசியேஷனுக்கு உட்பட்டவர்களாக இருக்கிறீர்கள் என்பதை
நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். எந்தப்
பத்திரிகையை வேண்டுமானாலும் பாருங்கள், அண்ணா பத்திரிகை
யானாலும் தமிழரசு பத்திரிகையானாலும் வேறு அரசாங்கத்
தினுடைய பத்திரிகையானாலும் எல்லாவற்றிலும் உங்களுடைய
அமைச்சர்களுக்குப் படங்கள், விளம்பரங்கள், எக்ஸிபிஷன்
போடுகிறீர்கள், எல்லோருக்கும் கட்அவுட்கள், ஒரே விளம்பர
மயமாக விளம்பர வெளிச்சத்திலேயே நாட்களை நகர்த்த வேண்டு
மென்று இந்த அரசு கருதிக் கொண்டிருக்கிறது என்று நான் குற்றஞ்
சாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்னொன்று, இந்த அறநிலையத்துறை. நான் 1971 ஆம்
ஆண்டிலே இந்த அவைக்கு வந்தேன். அதிலேயிருந்து நானும்
பேசிக்கொண்டிருக்கிறேன், இந்த அமைச்சருக்கு எவ்வளவு அத்து
படியோ அதிலே அரைக்கால்வாசி எனக்கு அத்துபடிதான். இங்கே
கொடுத்திருக்கிற கொள்கைக் குறிப்புகளிலே, நான் படித்துப்
பார்த்தேன். முக்கியமாக சொல்லப்பட்டிருப்பது மகராஜன்
கமிட்டி ரிப்போர்ட். அந்த ரிப்போர்ட்டில் இருந்து போன
வருஷமே பிட் பிட்டாக கொஞ்சம் எடுத்து கதைச் சுருக்கமாக
போட்டீர்கள், இந்த வருஷமும் கதைச் சுருக்கம் மாதிரி கொஞ்சம்
கொஞ்சம்போட்டிருக்கிறீர்கள். நான் கேட்கிறேன், எத்தனையோ
ரிப்போர்ட்கள் எல்லாம் இருக்கிறபோது இந்த மகராஜன் கமிட்டி
ரிப்போர்ட்டை ஏன் முழுக்க இந்த அவையில் அங்கத்தினர்களுக்கு
நீங்கள் தரவில்லை, கேட்டால் சொல்வீர்கள், கெஜட்டிலே
பப்ளிஷ் பண்ணிவிட்டோம் என்று, கெஜட்டிலே பப்ளிஷ்
பண்ணுவது அல்ல முக்கியம். இங்கே நீங்கள் வைத்திருக்க
வேண்டும். இந்த மாமன்றத்திற்கு ஒரு முக்கியமான பிரச்சினை
அது, எனவே முழுவதும் இதிலே நாங்கள் பார்க்க முடியாத
காரணத்தினாலே எந்த எந்த இடத்திலே என்னென்ன
வாசகங்களை உபயோகித்திருக்கிறார் என்பதையும் நாங்கள்
தெரிந்து கொள்ள முடியவில்லை. அதிலே கூட ஆங்கிலத்திலே
வந்திருப்பதற்கும் தமிழிலே வந்திருப்பதற்கும் நிறைய
வித்தியாசங்கள் இருக்கின்றன. ஆங்கிலத்திலே தரப்பட்டிருப்பதிலே
தேவாரம் திருவாசகம் என்று இருக்கிறது. தமிழிலே தரப்பட்டிருப்
பதிலே திவ்ய பிரபந்தங்கள் என்று இருக்கிறது. இப்படி மொழி
பெயர்ப்புத் துறையில் மேதாவிகள் இருப்பதாக நான் அறிகிறேன்.
ஒரு கமிட்டியைப் போடுகிறீர்கள், அந்தக் கமிட்டி அறிக்கையைத்
தருகிறது, ஏன் இந்த அவையிலே அதை வைக்கப் பயப்படுகிறீர்கள்?
இந்த மன்றத்திலே பலமுறை நான் கேட்டிருக்கிறேன், சென்ற
முறை அமைச்சர் உறுதியளித்தார். 1978 ஆம் ஆண்டு என்று
கருதுகிறேன். திருத்தணி சுப்ரமணியசாமி கோயிலில் அங்கே
இருக்கிற தங்க வேல் களவு போய்விட்டது, அப்படி களவு
போனது பற்றி இந்த அவையிலே நான் பேசினேன். அப்போது
மேல்வையிலே நண்பர் வீராசாமி அதுபற்றிப் பேசினார்கள்.
நாட்டிலே பல்வேறு இடங்களில் அது பேசப்பட்டது. அமைச்சர்



அவர்கள் யு. நடராசன் என்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியினுடைய
தலைமையிலே ஒரு கமிட்டி போடுகிறோம் என்று சொன்னார்கள்.
என்ன ஆயிற்று அந்த கமிட்டி? 78 போனது, 79 போனது, 80
போனது, 81 போனது, 82 போனது, 83 வந்துவிட்டது.
ஆறாண்டுக் காலமாகிவிட்டது. நான் கேள்விப்படுகிறேன். அந்த
கமிட்டி ரிப்போர்ட்டை அதன் தலைவர் யு. எஸ். நடராஜன்
அளித்திருக்கிறார் என்று எனக்கு வந்த தகவல் சொல்கிறது.
அதில் களவு போகவில்லை என்று கூட எழுதி இருக்கலாம். களவு
போனது என்று எழுதியிருக்கலாம். உங்களுக்கே சாதமாக
இருக்கலாம். கேட்கப்பட்டதோ கேள்வி, போடப்பட்டதோ
கமிஷன், தரப்பட்டதோ அறிக்கை ஏன் அவையிலே அதை வைக்க
நீங்கள் தயங்குகிறீர்கள்? நீங்கள் தயங்குவதைக் கண்டால் அதிலே
ஏதோ குளறுபடி இருக்கிறது என்று குற்றஞ்சாட்ட மாட்டேனா?
இந்த அவையிலேயே எவ்வளவோ தடவைகள் எடுத்துச் சொல்லி
யிருக்கிறோம். என்ன நடவடிக்கை எடுத்தீர்கள். நடவடிக்கை
கிடையாது. அச்சுகுட்டநாயர் எழுதிய உண்டியல் உடைத்த
சமாசாரம், திருத்தணியிலே இருந்துநான்டாகுமெண்டை கொண்டு
வந்து படித்தேன், என்ன நடவடிக்கை? இதுவரை ரயில் கிடையாது.

(பிற்பகல் 1–10)

அரை மணி நேரம் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள்.
நான்தான் வைண்ட்—அப் செய்து பேசுகிறேன். இன்னும் சிறிது
நேரத்தில் முடித்து விடுகிறேன். இதிலே ஒன்றை சொல்லியிருக்
கிறார்கள். தஞ்சாவூர் மாவட்டம் திருவிளக்குடி கிராமத்திலுள்ள
ஈஸ்வரன் கோவிலில் 20-12-1978 அன்று நடராஜர் சிலை களவு
போனது. அதை கண்டுபிடிப்பதற்காக என்னென்ன முயற்சிகள்
எடுத்தோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் ஒன்றை
அமைச்சர் அவர்களிடத்தில் கேட்கிறேன். இந்த ஊர்களில்
இருக்கிற திருடுகளை மட்டும் நடவடிக்கை எடுக்கிறீர்களே—
அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த பிறகு கோவில்
சிலைகள் போவது என்பது சர்வ சாதாரணமாகிவிட்டது. கோவில்
கொடியவர்களின் கூடாரமாக இருக்கக்கூடாது என்றுதான்
கலைஞர் அவர்கள் வசனங்களை எழுதினார்கள். ஆனால்
இன்றைக்கு கொள்ளை அடிக்கிறவர்களின் முகாம்களாக அவை
மாறிவிட்டன. அதிலேகூட பெரியார் மாவட்டத்தில் நாயனார்
ஊர் என்ற ஒரு ஊர். அதிலே மூன்று லட்சம் மதிப்புள்ள சிலை
திருடு போனது. அதை இங்கே குறிப்பிடக் காணோம். தாரமங்கலம்
கோவிலில் கொள்ளை நடைபெற்றதே; சிலை கொள்ளையடிக்கப்
பட்டதே; அந்த சிலையினுடைய விவகாரம் ஏன் இதிலே
குறிப்பிடப்படவில்லை? சென்னை மியூசியத்திலே மூன்று புத்தர்கள்
சிலைகள்—பல லட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ளவை—
பட்டப்பகலில் திருடியிருக்கிறார்கள் என்று பத்திரிகைகளில்
கட்டம் போட்டு எழுதியிருக்கிறார்களே; அதை பற்றி என்ன
நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்? திருவண்ணாமலையில் இருக்கிற
தேரினுடைய சிற்பங்கள் களவாடப்பட்டன. நான் ரத்னகிரியில்
இருந்தேன். கேள்விபட்டவுடனே ஆணையை பிறப்பித்தேன்;

ஐ.ஜி.யோடு பேசினேன் என்று இதே அமைச்சர் பேசினாரே; எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? திருவண்ணாமலைக் கோவில் தேரில் சிலைகள் பொருத்தப்பட்டனவா என்று கேட்கிறேன். ஏன் சொர்ணம் பேசினாரே, சிவகிரி கோவில் முருகன் இருக்கிறார்; பக்கத்திலே இருக்கிற தெய்வானையை பிடித்துக்கொண்டு போய் விட்டார்கள் என்று; அம்மன் சிலை களவு போனது என்று சொன்னார்களே; எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? வைத்தீஸ்வரன் கோவில் நகைகள் களவாடப்பட்டன. அது பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கமாக சொன்னார்களே; அந்த நகைகள் என்னவாயிற்று? எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? இதுவரையில் தெரியாது. என் கரத்தில் இருப்பது மட்டுமல்ல, இந்த பட்டியல் இன்னும் நீண்டுக்கொண்டிருக்கிறது. கோவில் சிலைகள் எல்லாம் கொள்ளையடிக்கப்படுகிற நிலைமையில் நாடு போய்க்கொண்டிருக்கிறது என்று இங்கே தெரிவிக்க கடமைப் பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல இன்றைக்கு கோவில் நிலங்கள், பெரம்பலூர் தொகுதியில், அருள்மிகு மதுரகாளியம்மன் கோவில் என்று சிறுவாச்சூரில் இருக்கிறது. 18-2-83 அன்று அந்த கோவிலுக்கு சொந்தமான மருத மரங்களை பெரம்பலூர் கோவில் அறங் காவலர்கள் போய் வெட்டி எடுக்கிறார்கள். எப்போது? இரவு இரண்டு மணிக்கு. வெட்டி எடுத்து எங்கே கொண்டு வருகிறார்கள்? பஞ்சாயத்து யூனியனுடைய ட்ரக்கிலே ஏற்றுகிறார்கள். ஏற்றுகிற போது ஒரு டயர் பஞ்சர் ஆகிவிடுகிறது. உடனே ஊர் ஜனங்கள் வந்து கூடிவிடுகிறார்கள். கூடிவிட்டதற்கு பிறகு அதிகாரியிடம் சொல்கிறார்கள். சிறுவாச்சூர் கோவிலினுடைய ஈ.ஓ.—வாக இருக்கிற சிவதங்கையனிடம் சொல்கிறார்கள் சிவதங்கையன், ஈ.ஓ. என்ன செய்கிறார்? நேராக போலீசிலே ரிப்போர்ட் செய்கிறார். போலீசில் ரிப்போர்ட் கொடுத்தது 18-2-83 அன்று; இன்று வரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எடுக்காததின் விளைவு என்னவாயிற்று என்று கேட்டால் அறநிலையத் துறையில் இருக்கிற டெபுடி கமிஷனர் அவர்கள் தங்கையனை கூப்பிட்டு போலீசிலே கொடுத்திருக்கிற ரிப்போர்ட்டை வாபஸ் வாங்க வேண்டுமென்று சொல்கிறார். அவர் மறுத்து விடுகிறார். மறுத்ததினுடைய விளைவு 16-3-83 அன்று திருச்சி டி.சி. அவர்கள் தங்கையனை சஸ்பெண்ட் செய்கிறார். ஏன் இந்த திருட்டிற்கு ரிப்போர்ட் கொடுத்தாய் என்று; உடனே ரத்னம் என்ற அறங் காவலர் குழு அரிசன தோழர் கேட்கிறார். நியாயம்தானே ஐயா செய்தார் அந்த அதிகாரி; அவரை ஏன் சஸ்பெண்ட் செய்தீர்கள் என்று கேட்டதற்கு அவருக்கு ஒரு ஷோ—காஸ் நோட்டீஸ் கொடுக்கிறார்கள். உன்னை ஏன் அறங்காவலர் குழுவிலிருந்து நீக்கக்கூடாது என்று? எப்படியிருக்கிறது. கோவில் மரத்தை வெட்டு பொறுப்பில் இருக்கின்றவர்கள், அவர்கள் அறங்காவலர்கள் என்று ஒரு கொள்ளைக் கும்பல்; ரிப்போர்ட் கொடுத்த அதிகாரி சஸ்பெண்ட் செய்யப்படுகிறார். இன்றைக்கு என்ன நிலைமை; நியாயம் கேட்கிற ஒரு அரிசன தோழருக்கு; ஏன் உங்களை டிஸ்மிஸ் செய்யக்கூடாது என்று நோட்டீஸ் கொடுக்கிறார்கள்; என்றால்





இன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மேய்ச்சல் காடாக அறநிலையத்துறை சொத்துக்கள் மாற்றப் பட்டதா? என்று நான் கேட்கிறேன். எங்கே பார்த்தாலும் உங்களுடைய ஆதிக்கங்கள் கொடிகட்டிப் பறக்கவேண்டுமா என்று தான் கேட்கிறேன்.

அதுமட்டுமா; சென்னையில் குக்ஸ் ரோடு என்று இருக்கிறது அந்த குக்ஸ் ரோட்டிலே செல்லப்பிள்ளையார் திருக்கோவில் என்று ஒன்று இருக்கிறது. அந்த திருக்கோவிலிலே ராமதாஸ் என்பவர் 17-ம் நம்பர் வீட்டில் இருக்கிறார். அந்த வீட்டிற்கு முன்னால் ஒரு காலி மனை இருக்கிறது. 1974-ம் ஆண்டிலிருந்து ஒரு அக்ரிமெண்ட் இருக்கிறது. அந்த அக்ரிமெண்ட் எல்லாம் இங்கே இருக்கிறது. அவருக்கு மாத வாடகைக்கு விடுகிறார்கள் அந்த அக்ரிமெண்டில்; அவர் 74 ஆம் ஆண்டிலிருந்து அந்தப் பகுதியை வைத்துக் கொண்டிருக்கிறார். அந்த 17-ம் நம்பர் வீட்டிற்கு பெரம்பூர் தொகுதி ஜெயராமன் என்ற அ.தி.மு.க. அமைப்பாளரோ அல்லது வேறு யாரோ ஒருவர் குடியேறுகிறார். குடியேறிய உடனே சொல்கிறார். அந்த வீட்டிற்கு முன்னாலே இருக்கிற அந்த நிலம் எனக்கு சொந்தம் என்று சொல்கிறார். ஐயா 74-லேயிருந்து நான் வைத்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் திடீரென்று வந்து இப்போது கேட்கிறீர்களே என்று கேட்டார். மறுப்பார்களா? உடனே என்ன செய்தார்? மாண்புமிகு அமைச்சர் திருநாவுக்கரசு அவர்கள் அங்கு சென்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கொடியை ஏற்றினார். உடனே போலீஸ் ஸ்டேஷனிலே பி. 2—விலே புகார்கொடுத்தார் பி 2—விலே எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர் ஒரு நோட்டீஸ் அடிக்கிறார். "மேற்கண்ட செய்தியை தமிழக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் பாதங்களில் என் குறையைச் சமர்ப்பிக் கிறேன். இதைப்பற்றி சம்பந்தப்பட்ட நிர்வாக அதிகாரிகள், மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்களுக்கும் இதன் மூலம் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள் கிறேன்" என்று சொல்லியிருக்கிறார். எனவே, இப்படி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. "ஏற்கனவே அக்ரிமென்ட் போட்டு அனுபவத்திலே இருப்பதை போய், நீங்கள் கொடி நாட்டிவிட்டு, ஏதோ வெற்றிப் பெற்றதைப்போல் நாங்கள் கொடி நாட்டி விட்டோம்; எங்களுக்குச் சொந்தம் என்று சொல்கிறீர்களே, இது எந்த வகையிலே நியாயம்? அதற்கு ஒரு அமைச்சர் போயிருப்பது எந்த வகையிலே நியாயம் என்று கேட்கிறேன்.

அறநிலையத்துறை என்பது, இங்கே ஒரு நண்பர் கூட பேசினார்கள். யார், யாரோ அறம் என்பது உள்ளத்திலே இருக்கிற மாண்பை, பண்பை வெளிப்படுத்துவது என்று. பண்பு என்று சொன்னால்,

'அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட் பண்பு இல்லா தவர்'

என்று வள்ளுவரைச் சுட்டிக்காட்டினார் எனக்குத் தெரியும், அதே வள்ளுவர் இன்னொன்று சொல்கிறார். என்ன சொல்கிறார்? ஒருவனுக்கு ஆண்மை வேண்டுமென்று சொன்னார். மாற்றான்

மனைவியை கூட்டிக் கொண்டு வந்துவிடக்கூடாது பிறன் தொட்டுத் தாலி கட்டிய மனைவியைக் கூட்டிக் கொண்டு வந்து வைத்துக்கொண்டு, 'என்னடா கூட்டிக்கொண்டு வந்துவிட்டாய்' என்று கேட்டால், 'நான் தங்கை மாதிரி பாவிப்பேன்' என்று நீதிமன்றத்திலே சொல்லிவிட்டு, அந்தத் தங்கை என்று சொன்னவளை தாரம் ஆக்கிக்கொள்ளக் கூடாது.

'பிறன்மனை நோக்காத பேராண்மை' என்று அப்படி சொல்லியிருக்கிறார். மாற்றான் மனைவியைக் கன்று பசுவோடு ஓட்டிக் கொண்டு வருவது எந்த வகையிலே மக்கட் பண்பாக இருக்க முடியும். இத்தகைய பண்புகளை அழிக்க வேண்டும், அக்கிரமங்களைப் போக்க வேண்டுமென்பது அறநிலையத் துறையினுடைய பண்பாக இருக்குமானால், அதை செய்திருக்கிறதா இந்து அறநிலையத் துறை என்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே ஒன்றை தெரிவித்திருக்கிறார்கள், நம்முடைய மகராஜன் கமிட்டி ரிப்போர்ட் பற்றி. அந்த ரிப்போர்ட்டிலே என்ன இருக்கிறது? பிராமணர்கள் இல்லாதவர்களிலே, தாழ்த்தப் பட்டவர்கள், சூத்திரர்கள் என்று கருதப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் இந்த மாநிலத்திலே, அவர்களும் ஆண்டவனுடைய பிள்ளைகள்தான்—அவர்களும் அர்ச்சகர்களாக வரமுடியும் என்கிற ஒரு தீர்மானத்தை 1974 ஆம் ஆண்டிலேயிருந்து இந்த மாமன்றத்திலே தொக்கியிருக்கிறது. கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில், யார் வேண்டுமானாலும் அர்ச்சகராக வரலாம் என்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். உச்ச நீதிமன்றத்திலே அது முடக்கப் பட்டது. அதற்குப் பிறகு, 1974 ஆம் ஆண்டு இதே மன்றத்திலே தீர்மானம் நிறைவேறிற்று.

இப்பொழுது மகராஜன் கமிட்டி போட்டார்கள்? அந்தக் கமிட்டி என்ன சொல்லியது? கான்ஸ்டிடியூஷனிலே இருக்கிற ஆர்ட்டிக்கில் 26-ஐ எப்படி மாற்றுவது என்பதற்கு ஒரு விளக்கத்தைக் கொடுத்திருக்கிறதே தவிர, வேறு என்ன சொல்லியிருக்கிறது? கடைசியாக என்ன நிலைமை என்று கேட்டால், இந்தியாவினுடைய அரசியல் சட்டம் மாற்றப்பட்டாலொழிய, இதற்கு விமோசனம் இல்லையென்று வருகிறது. இந்த மாமன்றத்தையே கூட்டி, இந்த மாமன்றத்திலே ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி, மத்திய அரசுக்கு 1974-லே திராவிட முன்னேற்றக் கழக அரசு அனுப்பியும், இதுவரையிலே மத்திய அரசு அதைக் கவனிக்கவில்லை. கவனிக்காது. மத்திய அரசு அவ்வளவு தூரம் வர்ணாஸ்ரமத்திலே தோய்ந்து போன ஒரு அரசு. அப்படிப்பட்ட ஒரு அரசானது, பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை, ஆண்டவன் பக்கத்திலே நெருங்க விடுமா? நெருங்க விடாது. எனவே, என்ன நிலைமையிருக்கிறது? நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக் கிறார்கள், முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார், என்று. "என்னப்பா, சாதாரண சாட்டையடிக்கே அசையாத மத்திய அரசு, சோதா சுண்டெலிக்கு நடுங்கப் போகிறதா?"



நடக்காது, எனவே, அப்படியென்றால், என்ன நிலைமை? மத்திய அரசு அரசியல் சட்டத்தைத் திருத்தினால்தான் இங்கே இருக்கிற எச். ஆர். அன்ட் சி. இ. ஆக்டை திருத்தக்கூடிய நிலைமையிலே நாம் இருக்கிறோம் என்று சொல்கிறீர்களே, அதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்? அதைத்தான் நான் கேட் கிறேன். இது உங்களுக்கு மட்டும் சொந்தம் அல்ல. நீங்களும் நாங்களும், இந்த மாமன்றத்திலே இருக்கிற அத்தனை பேரும், ஒரு புரட்சிகரமான திட்டத்தை உருவாக்கினால் ஒழிய இதற்கு ஒரு விமோசனம் ஏற்படாது. அந்த விமோசனத்தை இந்த மாமன்றத்திலே நிறைவேற்றியாக வேண்டும். இல்லாவிட்டால் ஒரு நாளைக்கு திறந்துவிட்டு, எல்லா கோயில்களிலும், பிற்பட்ட ஜனங்களும், அரிசனங்களும் உள்ளே போய், சாமி சிலையைத் தொட்டு பார்ப்போம். கண் அவிந்து போகிறதா என்று பார்க்க வேண்டும். எனவே, அறநிலையத் துறை உங்களுடைய ஆட்சிக் காலத்திலே சரியாக நடக்கவில்லை. நம்முடைய மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் புகழ்ந்தாரே, மொபைல் காட், 'நடமாடும் தெய்வம்' என்று, அந்த காஞ்சி காமகோடி அவர்கள் கூடச் சொல்கிறார்கள், இதைக் கன்கரன்ட் லிஸ்டிலேயிருந்து எடுத்து, சென்ட்ரல் லிஸ்ட்டிலே போட வேண்டுமென்று.......
(மணியடிக்கப்பெற்றது).

(பிற்பகல் 1-20)

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கைகள் மீது எல்லாக் கட்சிகளையும் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள், தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்ததற்காக முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அநேகமாக எல்லாக் கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களும், எதிர்கட்சியாக விளங்குகிற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் உட்பட, —ஆனால் மாண்புமிகு துரைமுருகன் அவர்களைத் தவிர—பொதுவாக இந்தத் துறைகளிலே ஏற்படுத்தப்பட வேண்டிய முன்னேற்றங்கள் அல்லது சீர்திருத்தங்களைப் பற்றி எடுத்துச் சொல்லி, தங்களுடைய தொகுதிகளிலே நடைபெற்றிருக்கின்ற சில விவரங்களை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு இந்த விவாதத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதிலே செய்தி சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரை, மாண்புமிகு கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள், பத்திரிகை மசோதாவினைப் பற்றி குறிப்பிட்டு, அதிலே ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்ற கருத்தை தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக அமைக்கப்பட்டிருக்கிற குழு விரைவிலே கூட இருக்கிறது என்றும், அந்தக் குழுவினிடத்திலே அரசாங்கத்தின் சார்பிலே சில வேண்டுகோள்களை வைத்திருக்கிறோம் என்பதையும், அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டு காரியங்களை நிகழ்த்துகின்றபொழுது, பத்திரிகையாளர்கள் என்ற பெயராலே சிலபத்திரிகைகள், பத்திரிகைகளுக்குத் தரப்பட்டிருக்கின்ற சுதந்திரத்தை பயன்படுத்திக் கொண்டு போடுகிற செய்திகள், தெரிவிக்கப்படுகிற கருத்துக்கள் எந்த அளவிற்குக் கட்டுப்படுத்தப்பட வேண்டும், எப்படி கட்டுப்

படுத்துவது, யார் கட்டுப்படுத்துவது, என்பது போன்ற சில விவரங்களை பொறுப்பு வாய்ந்த அந்த உறுப்பினர்களிடத்தி லிருந்து அரசு பெற்றுக்கொள்ள விரும்புகிறது என்ற கருத்தை தெரிவித்து, அவர்களுடைய கருத்தை எதிர்நோக்கியிருக்கிறோம். விரைவிலே அந்த குழு கூடி, அதனுடைய முடிவை அரசுக்குத் தெரிவிக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. என். சங்கரய்யா : துணைத் தலைவரவர்களே, பீஹார் மாநில அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து கடுமையான அனுபவத்திற்குப் பிறகு அவர்களே ரத்து செய்துவிட்டார்கள். அதுபோல தமிழ்நாடு அரசும் சட்டத்தை ரத்து செய்துவிட்டு, அதற்கப்புறம், ஆபாசமாக எழுதுகிறதோ மற்றவைகள் பற்றி என்ன செய்யலாம் என்பதை பத்திரிகை நிருபர்கள் சங்கங்க ளோடு பேசுவது ஒன்று, ஆனால் சட்டத்தை அப்படியே வைத்துக்கொண்டு, அதை ஒரு பயமுறுத்தலாக வைத்துக்கொண்டு பேசுவது சரியாக இராது. தமிழ்நாட்டிலுள்ள அரசாங்கம் இன்றைக்கு ஜனநாயக உரிமை, பத்திரிகைகளின் உரிமை பாதிக்கப் பட்டிருக்கிறது. ஆகவே அதைப்பற்றி அரசு அந்த முடிவுக்கு வருமா என்பதை கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அவர்கள் அந்தக் கட்சியின் சார்பில் பேசுவதற்கு நான் பதில் சொல்கிறேன். அப்புறம் எல்லாரும் கேட்க ஆரம்பித்தால் விவாதம் தொடர்ந்து விடும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எந்த கிளாரிபிகேஷன் இருந்தாலும் கடைசியில் கேளுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குழு போட்டு, பரிசீலிக்க இருக் கிறோம் என்று சொன்னார்கள். பத்திரிகையிலே அவதூறாக எழுதினால், ஏற்கனவே டிபமேஷன் வழக்கு போடுவதற்கு வழி இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் பீஹார் அந்தச் சட்டத்தை திரும்பப் பெற்றிருக்கிறது. எனவே இந்தியாவிலே உங்களைத் தவிர— வேறு எந்த மாநிலத்திலும் இந்தச் சட்டம் இல்லை. அண்ணாவினுடைய வழியிலே பத்திரிகை சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும். எனவே இந்த அவையிலேயே அதைப்பற்றி அறிவித்தால் உங்களை ஜனநாயகவாதியாக ஏற்றுக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்டம் ஏதோ அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கொண்டு வந்ததைப் போலவும், அதற்கு முன்னாலே திராவிட முன்னேற்றக் கழகத்திலே இந்தச் சட்டம் இல்லாதது போலவும், அதற்கு முன்னாலே காங்கிரஸ் ஆட்சியிலே இல்லாததைப் போலவும், ஏதோ ஒரு புதிய கதையை இங்கே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நீண்ட காலமாக



காங்கிரஸ் கட்சிதான் இந்த திருத்தத்தையே கொண்டு வந்தது. அதை மேலும் திருத்தியது திராவிட முன்னேற்றக் கழகம். அதற்கு மேலே ஒரு சிறு திருத்தத்தை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வந்திருக்கிறது. அதற்கு முன்னாலே ஒரிசா மாநிலத்திலும் இத்தகைய சட்டம் இருக்கிறது. பீஹார் பிரச்னை என்பதே வேறு. நான் அதற்குள்ளே நுழைய விரும்ப வில்லை. மீண்டும் விவாதத்திற்கு இடம் அளித்துவிடும். நம்முடைய சட்டத்திற்கும் அவர்கள் ஏற்படுத்திய சட்டத்திற்கும், இங்கே உள்ள நீதித்துறைக்கும் அங்கே உள்ள நீதியும் நிர்வாகமும் இணைந்திருக்கிற ஒரே முறைக்கும் பல அடிப்படை வேறுபாடுகள் இருக்கின்றன. இருந்தாலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகத் தெளிவாக சொல்லியிருக்கிறார்கள். பத்திரிகை சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகிற எந்த உணர்வோடும் இந்தச் சட்டம் கொண்டு வரப்படவில்லை என்பதை இந்த மன்றத்தின் மூலம் நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கருத்தை தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு குழுவை அமைத்து விவாதித்துக் கொண்டிருக்கிறோம். அந்த முடிவை வெகு விரைவிலே அறிவிக்
கிறோம் என்பதை மாத்திரம் இந்த நேரத்திலே தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர்கள் பேசி
முடிக்கட்டும். இது வாதமாகப் போய்க்கொண்டிருந்தால் நல்ல
தல்ல. (குறுக்கீடுகள்) கடைசியிலே பார்க்கலாம். (குறுக்கீடு)

THIRU A. RAHMANKHAN: I am on a point of order. I have got a right.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அவர்கள் பேசும்போது
அந்தக் கருத்துக்களைக் கொண்டு வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த டிபேட்டிலே
கலந்துகொண்ட உறுப்பினர்கள் தங்களுக்கு ஏதாவது சந்தேகங்கள்
இருந்தால் கடைசியாக கேட்கலாம். தங்களுடைய டவுட்டுகளை
பிறகு கேட்கலாம். (குறுக்கீடு) பாயின்ட் ஆப் ஆர்டர் டிபேட்டிலே
வராது. (குறுக்கீடு)

திரு. அ. ரகுமான்கான் : சில தவறான தகவல்கள் வந்துவிடக்
கூடாது என்பதற்காக பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, நேரம் வீணாகிக்கொண்டிருக்கிறது. அப்படி
ஏதாவது இருந்தால் கடைசியாகக் கேட்கலாம்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தின் துணைத்
தலைவர் அவர்களே, பத்திரிகைச் சட்டம் சம்பந்தமாக
கோர்ட்டிலே வழக்கு இருக்கிறது. கமிட்டி போட்டிருக்கிறார்கள்.
இது சப்ஜுடிஸ் ஆகாதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, நீதிமன்றம் இந்தச் சட்டத்திற்கோ,
சட்டத்தின் நடைமுறைக்கோ வேறு எதற்கோ குழு போட்டு
பரிசீலிப்பதில் எந்தவிதமான தடையையும் நீதிமன்றம்

ஏற்படுத்தாத ஒரு சூழ்நிலையில் இதை நடத்தலாம் என்பதை பரிசீலிப்பதற்காக கொஞ்சம் காலதாமதமானது. நீதிமன்றத்திலே வழக்கு போய்விட்ட காரணத்தாலே அந்தக் குழு பரிசீலிக்க வேண்டுமா, வேண்டாமா என்ற பிரச்னைகள் கூட வாதிக்கப்பட்டன. தாமதத்திற்கு இது ஒரு காரணம்.

திரு. என். சங்கரய்யா : நீதிமன்றத்திலே இருப்பதாலே அதற்காக நீங்கள் ரத்து பண்ணுவதை காலதாமதப் படுத்தவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அதனாலே குழு விரைவிலே கூடி அதைப் பற்றி ஒரு முடிவை அரசுக்கு அறிவிக்கும் என்று நான் தெரிவித்து இருக்கிறேன். மாண்புமிகு மற்ற உறுப்பினர்கள் எல்லாம் அநேகமாக செய்தி சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையிலே ஆங்காங்கே சில முன்னேற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்று பொதுவான கருத்தை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். சுற்றுலாத் துறை என்பது இந்திய அரசாங்கத்தாலே எந்த அளவிற்கு அது அதிக நிதி ஒதுக்கீடு செய்கிற துறையாக மதிக்கப்படுகிறது என்பதும் அதன் தொடர்பாகத்தான் மாநில அரசு நிதி ஒதுக்குகின்ற சூழ்நிலையிலே இருக்கிறது என்பதும் இன்னும் அது பிரையாரிட்டி செக்டார் என்ற அளவிற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை என்ற விவரங்களை எல்லாம் பல நேரங்களிலே இந்த மன்றத்திலே தெரிவித்து இருக்கிறேன். இப்போது நான் இந்த புள்ளிவிவரங்களை எல்லாம் தெரிவித்தால் அதிக காலதாமதம் ஆகும். இருந்தாலும் இந்த அரசைப் பொறுத்தவரையில் குறிப்பாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தச் சுற்றுலாத் துறையிலே அதிக கவனம் செலுத்தி எந்த அளவிற்கு உலகப்புகழ் பெற்ற சுற்றுலாத் தலமாக, தேசியப் புகழ் பெறுகின்ற மாநில அளவிலே புகழ்பெறுகின்ற சுற்றுலாத் தலங்களாக நாம் அபிவிருத்தி செய்யலாமோ அந்த அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும், நான் தெரிவித்துக் கொள்கிறேன். திருமதி பொன்னம்மாள் போன்றவர்கள் எல்லாம் அவரவர்கள் தொகுதியிலே சில காரியங்கள் நடைபெறவேண்டும் என்று தெரிவித்து இருக்கிறார்கள். அவைகள் தனித்தனியாக கவனிக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கடைசியாக மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள இந்தச் செய்தித் துறையைப் பொறுத்தவரையில் வழக்கமாக அவர்கள் பேச்சிலே கொஞ்சம் காரசாரம் இருக்கவேண்டும் என்று அந்த அடிப்படையிலே ஒரு குற்றச்சாட்டுக்களைப் போல, இங்கே இரண்டு, மூன்றைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதிலே அவர்கள் திரைப்படம், அதாவது 16 எம். எம். திரைப் படம் காண்பிப்பது சம்பந்தமாக ஒரு சுற்றறிக்கை நம்முடைய செய்தித்துறை இயக்குநர், முன்னாலே இருந்த இயக்குநர் அனுப்பிய அந்த அறிக்கையை இங்கே படித்துக் காட்டி முதல்வருடைய விளம்பரத்திற்காக அல்லவா இந்தத்துறை பயன்



படுத்தப்பட்டு வருகிறது என்று அவர்கள் சொல்லிக்கொண்டிருந்த போது, எனக்கு ஒரு 10, 12 ஆண்டுகள், இந்த தமிழகத்தினுடைய செய்தித்துறையைப் பற்றி வரலாறுகள் தெரியும் என்ற காரணத்தாலே நான் கொஞ்சம் மகிழ்ச்சியோடு அந்தப் பழைய கால நினைவுகளை எல்லாம் எண்ணி, அதை என்னுடைய மனத் திரையிலே கூட படமாக ஓடவிட்டுப் பார்த்துக்கொண்டிருந்தேன். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே நான் உங்கள் மூலமாக ஒரு செய்தியை மாத்திரம் இந்த மன்றத்திற்கும் நாட்டு மக்களுக்கும் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். இன்றைக்கு அரசினுடைய 16 எம். எம். திரைப்படக் கருவிகள் மூலம் திரைப்படத்தைக் காண்பித்துத்தான் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை இந்த தமிழக மக்கள் தெரிந்து கொள்வார்கள் என்று யாராவது கருதுவார்களேயானால் அவரை விட விவரம் தெரியாத சிறு பிள்ளைகள் வேறு யாரும் இருக்கமாட்டார்கள் என்பதை மாத்திரம் நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.) ஒருவேளை வயிற்றிலே இருந்து பிறக்கப் போகிற குழந்தைக்கு எம். ஜி. ஆர் என்ற பெயர் தெரியாமல் இருக்குமே தவிர பிறந்திருக்கிற குழந்தை அம்மா என்று அழைக்கிற அளவுக்கு தன்னுடைய மழலை மொழியை சொல்கிற குழந்தைகள் உட்பட இந்த மாநிலத்திலே மாத்திரம் அல்ல, இந்தியாவிலேயே புகழ்பெற்ற முதல் அமைச்சர் நம்முடைய முதல்வர் என்பதை நான் இங்கே பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.) இன்னும் ஒன்றை மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்களுக்கு நினைவுபடுத்தினால் அவர்களுக்கும் உதவியாக இருக்கும். இந்த மன்றத்திற்கும் உதவியாக இருக்கும். இன்றைக்கு பலபேர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நடிப்பதை நிறுத்தி 5½ ஆண்டுகள் ஆகியதற்குப் பிறகும்கூட அவர்கள் நடித்த பழைய படங்களை 10 ஆண்டுகளுக்கு முன்னால் நடித்த படத்தை, 15 ஆண்டுகளுக்கு முன்னால் நடித்த படங்களை வைத்துக் கொண்டுதான் கடன்களை எல்லாம் தீர்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற வாக்கு மூலங்கள் பொதுமக்கள் மன்றத்திலே தரப்பட்டிருக்கின்றன. இந்த மன்றத்திலே தரப்பட்டிருக்கின்றன, என்பதை நான் மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியுடன் பேரவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஆகவே, அரசின் செய்தித் துறை மூலம் முதலமைச்சர் படத்தைப் போட்டு விளம்பரப் படுத்தவேண்டும் என்ற அளவிற்கு அந்த செய்தித்துறை இல்லை. நடைபெற்ற விவரத்தைக் தெரிவிக்கிறேன்.

நான் சத்தியமங்கலம் பகுதியில் ஒரு வனத்துறை தொடர்பான நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறபோது அங்கே ஒரு சொசைட்டியிலே பங்கு பெற்று இருந்த மலைவாழ் மக்கள் எந்த அளவிற்கு அறியாமையில் மூழ்கியிருக்கிறார்கள் என்பதை

என்னால் காண முடிந்தது. அதிலே பல பேர் அந்த சொசைடியிலே
கூட்டுறவு சொசைட்டியிலே— டைரக்டர்களாக, பங்குதாரர்களாக
இருந்தார்கள். அவர்களிடத்திலே கேட்டேன். இந்த மாநிலத்திலே
எந்தக் கட்சி ஆட்சி நடைபெறுகிறது என்று. அவர்கள்
தெரியாது என்று சொன்னார்கள். யார் முதலமைச்சர் என்று
கேட்டேன். தெரியாது என்று பதில் வந்தது. அவர்கள்
வாக்களித்து இருக்கிறார்கள், இந்த நாட்டிலே ஆட்சி அமைக்கப்
படுவதற்கு. அவர்கள் கன்னடம் பேசுகிறார்கள். ஒருவேளை
கர்நாடகத்தைப் பற்றி கேட்டு இருந்தால் அவர்கள் பதில்
சொல்லியிருப்பார்களோ என்னவோ எனக்குத் தெரியாது.
அப்போது நான் மாவட்ட ஆட்சித் தலைவரை வைத்துக்கொண்டு,
அதிகாரிகளை வைத்துக்கொண்டு, இப்படி மலைவாழ் மக்களை
எந்தவிதமான விவரங்களையும் அறியாமல், அரசியல் நடைமுறை
விவரங்கள் தெரியாமல், ஆட்சியில் யார் இருக்கிறார்கள் என்பது
தெரியாமல் கூட இருக்கிறார்களே, இப்படி அவர்களை வைத்துக்
கொண்டு இருந்தால் எப்படி ஜனநாயகம் தழைக்கும், இவர்
களுக்கு அந்த உணர்வுகளை ஊட்டுவதை விட செய்தித்துறை
வேறு என்ன வேலை செய்கிறது. அரசாங்கத்திலே எடுக்கப்
படுகின்ற செய்திப்படங்களை ஏன் இவர்களுக்குப் போட்டுக்
காட்டவில்லை, அதை செய்து இருக்கலாம் அல்லவா என்று
கேட்டேன். அதை வைத்துத்தான் அந்தத் துறையிலே உள்ள
வர்கள் அனுப்பிய அறிவிப்பிலே அரசாங்கச் செய்திப்படங்களைப்
போடுங்கள் என்று தெரிவிப்பதற்கு பதிலாக தவறாக
முதலமைச்சர் சம்பந்தப்பட்ட படங்கள் என்று அறிவித்து
இருக்கிறார்கள்.

அந்த அறிவிப்பைக் கூட நம்முடைய எதிர்க்கட்சித்
தலைவருக்கு நம்முடைய செய்தித்துறையிலே உள்ளவர்கள்
மிகுந்த நம்பிக்கைக்குரிய வகையிலும், விஸ்வாசம் உள்ள
முறையிலும் கொடுத்து, அவர்கள் அதை முன்னாலேயே
பத்திரிகையில் வெளியிட்டார்கள். உடனே நாங்கள் நடவடிக்கை
எடுத்தோம். அப்படி முதலமைச்சர் படத்தைப் போடச்சொன்ன
அந்த அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று
முதலமைச்சர் அவர்களே ஆணையிட்டு இருக்கிறார்கள் என்பதை
இந்த மன்றத்திற்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.
என்னுடைய கருத்தைத் தவறாகத்தான் தெரிவித்தார்கள்.
என்னுடைய ஆணை பெறுவதற்கு வரவில்லை. அது
எங்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்து இருந்தால் தடுத்து
நிறுத்தி இருக்க முடியும். அந்த அதிகாரியும் இப்போது
நம்முடைய மாநில அரசிலே இல்லை. மத்திய அரசுக்கு மாற்றப்
பட்டு சென்று இருக்கிறார். அவரும், அவர் போட்ட உத்தரவின்
மூலம், சுற்றறிக்கையின் மூலம் ஏதோ அந்த சத்தியமங்கலம்
பகுதியில் இருக்கும் மலை வாழ் மக்களிடையே முதலமைச்சர்
அவர்களுக்கு பெருமைத்தேடித் தரவேண்டும் என்பது அல்ல.
மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் வாதத்திற்கு
வேண்டுமானால் இதைச்சொல்லி இருக்கலாமே தவிர, அவரது
நெஞ்சைத் தொட்டுப் பார்த்தால் தெரியும். நம்முடைய
முதலமைச்சர் அவர்களுக்கு நம்முடைய அரசு 16 எம். எம்



படத்தை விளம்பரப்படுத்தித்தான் பெருமை சேர்க்க முடியும்
என்ற நிலைமையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
ஆகவே, அது வேறு. இங்கே தவறு எதுவும் நிகழவில்லை
என்பதையும், அவர் தவறாகச் சுற்றறிக்கை அனுப்பியதன்
காரணமாக அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது
என்பதையும், குறிப்பாக முதலமைச்சர் அவர்களும் அந்தக்
கருத்தைத்தான் கொண்டு இருக்கிறார்கள் என்பதையும் நான்
தெரிவித்துக்கொள்கிறேன். திரையரங்குகளில் திரைப்படங்கள்
போடுவதைப் பற்றிக் கேட்டார்கள். (குறுக்கீடு)

திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே,
முதலமைச்சர் அவர்களுக்கு புகழ் இல்லையென்றோ, பெருமை
இல்லையென்றோ, அவர் நாட்டிற்குத் தெரியாதவர் என்றோ
நான் குறிப்பிடவில்லை. அரசு சாதனைகளை வெளியிடவேண்டும்
என்று, அதற்காக இருக்கும் ஒரு துறையில் முதலமைச்சர் நடித்த
படம் காட்டவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்களே அது
நியாயமா என்று கேட்டேன். அமைச்சர் அவர்கள் சொன்
னார்கள், அது தவறு என்று தெரிந்து, முதலமைச்சர் கூட
நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக்கிறார் என்று. அதை நான்
வரவேற்கிறேன். ஆனால் இப்படி அமைச்சர் அவர்கள் விளக்கம்
சொன்னபிறகும், இந்த ஆண்டு கார்த்திகை தீபத்தில்—திருவண்ணா
மலையில் முதலமைச்சர் நடித்த படங்கள்தான் போட்டுக்
காட்டப்பட்டனவே, அது சரியா? எனவே அமைச்சர் சொன்னது
உண்மைக்கு மாறாக இருக்கிறதே என்று தெரிவிக்க விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு துணைத்
தலைவரவர்களே, அரசின் சார்பிலே செய்தித் துறையின்
மூலமாக அந்தப் படங்கள் காட்டப்படுவதில்லை என்பதையும்
நான் முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். இன்று மாநிலம்
முழுமையுமே இந்தப் படங்களைப் போடுகிற முறை வளர்ந்திருக்
கிறது. திருச்செந்தூர் தேர்தலிலே கூட நமக்குத் தெரியும்.
இப்போது, சமீபத்திலே எடுக்கப்பட்ட ஒரு திரைப்படத்தை
அங்கே போடவேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரைக்
கேட்டதும், அவர் மறுத்ததும், அதன் பிறகு நீதிமன்றம்
சென்றதுமான விவரங்கள் எல்லாம் நம்மிடம் இருக்கின்றன.
ஆகவே யார் யார் படங்களைப் போடுகிறார்கள் அல்லது போடு
வதற்கு கேட்கிறார்கள் என்பதைப் பற்றி எல்லாம் நாம் இங்கே
விவாதித்துக்கொண்டிருக்க முடியாது என்பதை தெரிவித்துக்
கொள்கிறேன்.

அரசின் நிலையை நான் அழுத்தந்திருத்தமாகச் சொல்கிறேன்.
அரசின் சார்பிலே மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர்
அவர்களுடைய படங்களைப் போட வேண்டுமென்ற நிலையே
இல்லை. காரணம் அந்தப் படத்தை வைத்துக்கொண்டு பலபேர்
இன்றைக்கு பிழைத்துக்கொண்டிருக்கிறார்கள், வாழ்ந்துகொண்
டிருக்கிறார்கள். ஆகவே இலவசமாகக் காட்டுவதிலே அவர்களுக்
கெல்லாம் நஷ்டம் ஏற்படுகிறது. அதிலே புரட்சித் தலைவருடைய

பெருமைக்கும் புகழுக்கும் களங்கம் ஏற்படுகிற வகையிலேதான் போகிறதே தவிர அரசு இந்த ஓசி விளம்பரம் பெறுகின்ற நிலையிலே இல்லை; மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும் இல்லை என்பதை நான் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே கலையரங்குகள் பற்றி எல்லாம் சொன்னார்கள்' கலைவாணர் கலையரங்கம், வேலூர் கலையரங்கம், திருச்சி கலையரங்கம் பற்றி எல்லாம் சொன்னார்கள். என்னுடைய அருமை நண்பர் திரு. துரைமுருகன் அவர்கள் சில நேரங்களில் கொஞ்சம் ஆத்திரத்தோடு, ஏதாவது குற்றச்சாட்டுக்களைச் சொல்லித்தானே பேச்சைமுடிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு, ஆவேசத்தோடு பல விவரங்களைப் பெற்றுக்கொள்ளாமலே கூட இங்கே பேசியிருக்கிறார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். திருச்சியிலே இருக்கிற கலையரங்கிற்கும் தமிழக அரசுக்கும் செய்தித் துறைக்கும் சம்பந்தமே இல்லை. அது ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் பொதுமக்களைக் கொண்ட குழுவால் கட்டப்பட்டது. அவர்கள் அதை குத்தகைக்கு விடுகிறார்கள். ஆகவே அதற்கும் அரசுக்கும் சம்பந்தமில்லை என்பதை முதலிலே அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டும்.

அடுத்து வேலூர் கலையரங்கம் பற்றிச் சொன்னார்கள். வேலூர் கலையரங்கத்தைப்பற்றி இப்படிப்பட்ட புகார்கள் எல்லாம் வந்தன என்றுதான் நாங்கள் நேரடியாக யார் படம் போடுகிறார்களோ அவர்களுடைய படங்களைப் போடுங்கள்: இல்லை என்றால் போட வேண்டாம்; அப்படி தகராறு வருகிறது என்று தெரிந்தால் இப்படி கொடுத்த படத்தை அவர்கள் பிடுங்கிக்கொண்டு போய்விட்டார்கள் என்று தெரிந்ததற்குப் பிறகு அங்கே நம்முடைய என். எஃப். டி. சி. மூலமாக தருகிற ஆங்கிலப் படங்களை ஏற்கெனவே நாம் அரசாங்கத்தின் மூலம் ஒப்பந்தம் செய்திருக்கிற முறையிலே அந்தப் படங்களைப் போட வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருக்கிறோம். அதிலே யாரும் இடைத்தரகர்கள் என்ற பேச்சுக்கே இடமில்லை. மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் கூட நல்ல படம் இருந்தால் அவர்களும் ஒரு வாரம் போட்டுக்கொள்ளலாம், எங்கேயும் போட்டுக்கொள்ளலாம், அதற்கு விதிமுறைகள் வகுக்கப் பட்டிருக்கின்றன. இப்படி யாராவது கொஞ்சம் அதிக லாபம் கிடைக்கும் என்று வருவார்களோ என்று கருதி, இப்போது மினிமம் காரண்டி என்றுகூட நாங்கள் நிச்சயித்திருக்கிறோம். ஆகவே, இதில் யாருக்கும் சலுகை கிடையாது; யாருக்கு சாமர்த் தியம் இருக்கிறதோ அவர்கள் அந்த காரியத்தைச் செய்து கொள்ளலாம்; இதிலே வேறு எந்த விவகாரமும் இல்லை.

**திரு. துரைமுருகன்** : வேலூர் கலையரங்கிலே ஏன் தமிழ் படங்களைக் காட்டுவதில்லை?



**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்** : வேலூரிலே தமிழ் படங்கள் காட்டுவதிலே வந்த சிக்கல்கள் காரணமாக, அங்கே இருக்கிற ஒரு அசோசியேஷனுக்கும் அந்த படத் தக் சாட்டுகிற வர்களுக்கும் தகராறு வந்ததையொட்டி, அந்த அசோசியேஷன் படத்தைப் போட முன்வந்தால் நீங்கள் போடுங்கள் என்று நாங்கள் தெரிவித்திருக்கிறோம். இந்த வினாடியே போடுவதற்கு முன்வந்தாலும் போடுவார்கள். அதிலே தடை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர்கள் அதற்குப் பிறகு இந்துசமய அறநிலையத் துறைக்கு வந்து விட்டார்கள். நான் இந்த அறநிலையத்துறை பற்றிய விவரங்களை கொஞ்சம் கடைசியில் வைத்துக்கொள்கிறேன். இப்போது வனத்துறையைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் மிகுந்த கவலையோடு பேசினார்கள். நான் அந்த கவலையை புரிந்துகொண்டு இருக்கிறேன் என்பது மட்டுமல்ல. நம்முடைய அரசும் அந்த கவலையை புரிந்து கொண்டு தான் கடந்த ஐந்தாண்டு காலத்திலே இந்த வனத்துறை தொடர்பாக எவ்வளவு கடுமை தான நடவடிக்கைகளை, தீவிரமான நடவடிக்கைகளை கள்ளத் தனமாக மரங்களை வெட்டிச் செல்வதைத் தடுப்பதிலேயும் அழிந்திருக்கிற மரங்களை வளர்ப்பதிலேயும் மேற்கொண்டு, முனைப்போடு காரியங்கள் ஆற்றிக்கொண்டு வருகிறது என்பதற்கு நான் ஒன்றிரண்டு உதாரணங்களை மட்டும் மாண்புமிகு உறுப் பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு மாநிலத்தினுடைய, ஒரு நாட்டினுடைய நிலப்பரப்பிலே மூன்றில் ஒரு பகுதி காடாக இருக்க வேண்டும் என்பது உலகம் பூராவும் ஏற்றுக் கொண்டிருக்கிற திட்டமாகும். ஆனால் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் 16 சதவீதம் கூட இன்றைக்கு காடுகள் இல்லை. ஆகவே, இன்றைக்கு இந்திய அரசு மிகத் தீவிரமாக காடுகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதிலே கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அவர்கள் மத்திய அரசின் சார்பிலே ஒரு சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள் 1980 ஆம் ஆண்டிலே. அந்தச் சட்டத்தின்படி நாம் சில நிர்மாணத் திட்டங்களை, மக்களுடைய முன்னேற்றத்திற்கான திட்டங்களை நிறைவேற்றுவதற்குக் கூட அவர்களுடைய அனுமதியைப் பெற்றாக வேண்டும் என்ற சூழ்நிலையில் இருந்துகொண்டிருக்கிறோம். ஆனால் இந்த சட்டம் எல்லாம் வருவதற்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தெரிவித்த அந்த கவலையை மனதிலே கொண்டு இந்த அரசு எப்படி வனங்களை, காடுகளை பாதுகாத்திருக்கிறது என்பதற்கு ஒரு சிறிய புள்ளிவிவரத்தைத் தருகிறேன். அந்தப் புள்ளிவிவரத்தை நான் யாரையும் குறை சொல்வதற்கு அல்லது குற்றஞ்சாட்டுவதற்கு தரவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். நடந்ததை உங்கள் மூலம் இந்த மன்றத்திற்கு தெரிவிக்கிறேன்.

----

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1983 மார்ச் 28

1970-71 லேயிருந்து 1976-77 வரை, இந்த அரசு பொறுப்பேற்பதற்கு முன்னால், 7 ஆண்டுகளில் மரங்கள், கூப்புகள் என்ற பெயராலே, குத்தகைகாரர்களுக்கு வெட்டுவ தற்காக விடப்பட்ட பகுதிகள் 1 லட்சத்து 2 ஆயிரம் ஏக்கர். 7 ஆண்டுகளில் இவ்வளவு வெட்டப்பட்டிருக்கின்றன. இப்போது இந்த நாட்டிலே மரங்களை பாதுகாக்க வேண்டும் என்று பேசிக் கொண்டிருக்கிறோமே நாம். அப்போது எப்படி இதற்கு நம் மாமன்ற உறுப்பினர்கள் பேசாமல் இருந்தார்களோ தெரிய வில்லை.

(பிற்பகல் 1-40)

ஏழு ஆண்டுக் காலத்தில், காடுகளில் மரங்களை வெட்டுவதற்கு விறகுக் கூப்புகளாகவும், மரக் கூப்புகளாகவும் வெட்டப்பட விடப்பட்ட ஏக்கர்கள் மொத்தம் 1 லட்சத்து 2 ஆயிரம் ஏக்கர். ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு, 1977-78 ஆம் ஆண்டிலேயிருந்து இப்போது இந்த ஆண்டு-கடந்த ஆண்டு வரை—நாம் விட்டது 17 ஆயிரம் ஏக்கர்தான். அப்போது 7 ஆண்டுகளில் 1 லட்சத்து 2 ஆயிரம் ஏக்கர், இப்போது 6 ஆண்டுகளில் 17 ஆயிரம் ஏக்கர். அதையும் எப்படி படிப்படியாக குறைத்துக் கொண்டு வந்திருக்கிறோம் என்றால் 1977-78 இல் 2,467 ஏக்கர், 1978-79-ல் 1,579 ஏக்கர், 1979-80-லே 1,462 ஏக்கர், 1980-81லே 847 ஏக்கர், 1981-82-லே 527 ஏக்கர். சென்ற ஆண்டு 1982-83 லே குத்தகைக்கே விடவில்லை. இன்றைக்கு விறகு விலையின் கடுமையான நிலைமைகளின் காரண மாக சமுதாயத்தை எந்த அளவுக்கு அது பாதித்திருக்கிறது என்று தெரிந்ததற்குப் பிறகும், அதற்கான மாற்று ஏற்பாடுகளை யெல்லாம் செய்து, இந்த அரசு இன்றைக்கு 5 ஆண்டு காலத்தில் 6-ஆவது ஆண்டு எதையுமே வெட்டுவதற்கு விடாமல், மொத்தம் 6 ஆண்டுக் காலத்தில் 17 ஆயிரம் ஏக்கர் என்றால், 17 ஆயிரம் ஏக்கர் எங்கே, 7 ஆண்டுக் காலத்தில் 1 லட்சத்து 2 ஆயிரம் ஏக்கர் எங்கே, யார் காட்டை அழித்தார்கள்? யார் காட்டை அழித்ததை பார்த்துக் கொண்டிருந்தார்கள் என்பதை மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் இந்த மாமன்றத்திற்கு தெரியப்படுத்துகிறேன்.

அதே நேரத்தில் நாம் எப்படி விறகு தேவைகளை சமாளித் தோம். முன்பெல்லாம் தொழிற்சாலைகளுக்கு தரப்படுகிற மரங்களில் 'லாட்ஸ் அன்டு டாப்ஸ்' என்று சொல்லப்படுகிற கிளைகளை எல்லாம் வெட்டி எறிந்து போட்டுக் கொண்டிருந் தார்கள். அது இதுவரையில் யாருடைய கவனத்திற்கும் கொண்டுவரப்படவில்லை. யாருடைய கவனத்திற்காவது கொண்டு வரப்பட்டிருக்கும், ஆனால் நடவடிக்கை என்ற முறை யில் வரவில்லை. கடந்த 4 ஆண்டுக் காலத்திலேதான், இந்த விவரமும் கண்காணிக்கப்பட்டு சழிவு செய்யப்பட்ட வெட்டி விடப்பட்ட அந்த மரக்கிளைகளை ஒரு டன்னுக்கு 70 ரூ. 90 ரூபாய் என்று விற்று, அதை விறகுத் தேவைக்கு பயன்படுத்த ஏற்பாடுகள் செய்தோம். அதன்மூலம்,—இதுவரையில் இந்த வகையில் வருமானமே கிடைக்காமல்,—கழித்து விடப்பட்ட



1983 மார்ச் 28] [திரு. ஆர். எம். வீரப்பன்]

அந்த கிளைகளின் மூலமாக ஏறத்தாழ ஆண்டிற்கு 8, 9 லட்சம் ரூபாய் அளவில் இந்த அரசு தன் வருவாயில் சேர்த்துக் கொண்டிருக்கிறது.

எப்படி தீவிரமாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கி றோம் என்று ஒரு உதாரணத்திற்கு இதைச் சொல்ல விரும்பு கிறேன். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்று சொல்வார்கள். அந்த வகையில் சொல்வதானால் 1980-81-லே போடப்பட்ட வழக்குகள் 36,757, 1981-82-லே 39,942, வனத் துறையின் மூலமாக போடப்பட்டிருக்கின்றன. அது மட்டும் அல்ல, இந்த நேரத்திலே அலுவலர்கள் சரியாக நடந்து கொள்ள வில்லை என்றும் குற்றச்சாட்டுகளை சொன்னார்கள். நாங்கள் கஷ்டப்பட்டு குறிப்புகளை தந்திருக்கிறோம். அவற்றை உறுப்பினர்கள் படித்தார்களா இல்லையா என்று கூட தெரிய வில்லை. படித்துவிட்டு இப்படியெல்லாம் நடவடிக்கை எடுத்தி ருக்கிறீர்கள், பாராட்டுகிறேன், ஆனால் இன்னும் கூட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லியிருந்தால் எங்களுடைய கஷ்டத்திற்கும் பலன் உண்டு. உங்களுடைய ஆலோசனைகளையும் ஏற்றுக் கொள்ள நியாயம் உண்டு. அப்படிக் கொடுக்காமல் யார் யாரோ கொண்டு வந்து தருகிற விண்ணப்பங்களை கையிலே வைத்துக் கொண்டு பேசுகிறார்கள். அமைச்சர் அவர்களிடத்திலே தந்தால் சாதாரணமாக தீருகிற பிரச்னை. அவற்றை நேரிலேயே கொடுத்தால் நாங்கள் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் சட்ட மன்றம் என்றைக்கு நடக்கும், மானியக் கோரிக்கை விவாதம் என்றைக்கு வரும் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் வனத்துறை அதிகாரிமீது எடுத்த நடவடிக்கைகளை கூறுகிறேன். முதலிலே 80 ஆம் ஆண்டு முதல்... (குறுக்கீடு)

திரு. அ. ரகுமான்கான் : பாயின்ட் ஆப் ஆர்டர்.... நான் ஒரு பிரச்னையைச் சொல்ல வேண்டும்.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் கேட்பதற்கு முன்னால் அது என்னவென்று தெரியும். நேற்றோ, இன்றோ கூட மாண்புமிகு உமாநாத் அவர்கள் குறிப்பேடுகளை முன்ன தாக அனுப்பி வைக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதைத் தான் கேட்கப் போகிறீர்கள். (குறுக்கீடு) சில உறுப்பினர்கள் படிப்பார்கள், சிலர் படிக்க மாட்டார்கள். படித்துவிட்டால் சற்று உபயோகமாக இருக்கும். அதைப் பிரமாதமாக எடுத்துக் கொள்ள வேண்டாம்.

திரு. அ. ரகுமான்கான் : அதுவல்ல, வேறு பாயின்ட் ஆப் ஆர்டர், தயவுசெய்து அனுமதிக்க வேண்டும்.

~~மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே,~~ மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தருகின்ற உரையைக் கூட படிக்காமல் பேசுகிறார்கள் என்று சொன்னார்கள். சில விஷயங்களை

களை நேரிடையாகக் கொடுத்தால் சரியாக இருக்கும் என்று சொன்னார்கள். நான் அவர்களிடத்திலே கேட்கிறேன். * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது பாயின்ட் ஆப் ஆர்டரின் கீழ் வராது. இதை நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: அவர் சொல்லச் சொல்லி கேட்டார். நான் தந்துவிட்டேன்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தகவல் சொல்ல வேண்டும் என்றால் அவர்களே வந்து அலுவலகத்தில் சொல்லி இருக்கலாம். அல்லது நேரிலேயே சொல்லி இருக்கலாம். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மன்றத்து உறுப்பினர்கள் யாரையும் படிக்கவில்லை என்று சொல்லவில்லை. இப்படி எல்லாம் நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்கள், மேலும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் தெரிவித்திருந்தால் அவர்கள் படித்திருக்கிறார்கள் என்பதை நானும் தெரிந்து கொண்டிருக்க முடியும். மற்றவர்களும் தெரிந்து கொண்டிருப்பார்கள். ஆனால்......(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திடீரென்று இப்படி எழுந்து குறுக்கிடுவதை நான் அனுமதிக்க முடியாது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நண்பர் திரு. ரகுமான்கான் அவர்கள்

* * *

என்று ஒரு இன்ஃபர்மேஷன்தான் கேட்டார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை மறுக்கலாம், அல்லது அதை ஏற்றுக் கொள்ளலாம். அப்படி இருக்கும் போது சபாநாயகராக இருக்கின்ற தாங்கள் அதை எப்படி எக்ஸ்பஞ்ச் செய்ய முடியும்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திடீரென்று எழுந்து ஒன்றைக் கேட்டால் அமைச்சரால் எப்படி பதில் சொல்ல முடியும்? விளக்கம் கேட்பது என்றாலும் அதற்கு ஒரு முறை இருக்கின்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்று ஏதோ இங்கே சபையிலே

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பேசி, அவைக் குறிப்பிலே இருப்பதாகச் சொல்கிறார்கள். முன்பே ஒப்புக் கொண்ட ஒரு நிகழ்ச்சிக்காக நான் வெளியூர் சென்றிருந்தேன். எனவே அப்படி சபையிலே பேசி அந்தத் தகவல் அவைக்குறிப்பிலே இருக்குமேயானால் அதற்குக் அக்குவேறு ஆணி வேறாக இந்த அவையிலே நான் பதிலளிப்ப தற்குத் தயாராக இருக்கிறேன். ஆனால் இந்த மாமன்றத்தின் உரிமையைப் பயன்படுத்திக் கொண்டு........(குறுக்கீடுகள், குழப்பம்)

திரு. அ. ரகுமான்கான்: நான் குற்றச்சாட்டு சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவைக் குறிப்பிலே இருந்தால் நான் பதிலளிக்கிறேன் என்றுதான் அமைச்சர் அவர்கள் சொல்லி விட்டார்களே..... (குறுக்கீடுகள்) இப்போது முடியாது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: துணைத் தலைவர் அவர்களே, அதை எக்ஸ்பஞ்ச் பண்ணக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பாயின்ட் ஆப் ஆர்டர் என்கிற முறையில் இதுபோல ஓர் உறுப்பினர் எழுந்து பேசுவதை நான் அனுமதிப்பதற்கில்லை. குற்றச்சாட்டுகள் சொல்லக் கூடாது என்று இல்லை. சொல்வதற்கு முறை இருக்கிறது. திடீரென்று எழுந்து எதையும் சொல்ல முடியாது. எனவேதான் அது நீக்கப் பெற்றது.

(பிற்பகல் 1-50)

மாண்புமிகு திரு. ஆர் எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு உள்ள விவாதத்திலே அவர்களுடைய கட்சியினைச் சேர்ந்தவர்கள் மூன்று பேர் பேசி இருக்கிறார்கள். தகவல் இருந்தால் அவர்களிடத்திலே கொடுத்து அதைப் பேசச் சொல்லி இருக்கலாமே. எப்போதும், எதற்கும் அஞ்சுகிறவர்கள் அல்ல நாங்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எந்த குற்றச்சாட்டாக இருந்தாலும் நீங்கள் ஆதாரத்தோடு தெளிவாகத் தெரிவித்தால் அந்தக் குற்றச் சாட்டுகளை தூள் தூளாக உடைத்து எறிய நாங்கள் தயார். ஆகவே அதில் கொஞ்சம் கூட ஒளிவு மறைவே இல்லை. ஆனால் அதற்கு அவர்கள் விதிமுறைகளின்படி நடந்து கொள்ளவேண்டும். அதற்கு இது நேரம் இல்லை. விவாதங்கள் முடிவுற்ற பிறகு அவர்கள் முறையாக எடுத்துச்சொல்ல வேண்டும். (கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எதையும் முறையாகக் கொண்டு வரவேண்டும். இப்படி கூச்சல் போடுவது நல்லது அல்ல.

[1983 மார்ச் 28

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்த வரையில் எந்த இடத்தில் யார் மரங்களை வெட்டினாலும், அவர்கள் எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும் அவர்களை இந்த அரசு கண்டுபிடித்து தண்டிக்காமல் விட்டுவிடுவது இல்லை. விடாது என்பதை நான் இங்கே பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்த வரையில் இரண்டு விதமான சூழ்நிலைகளிலே இந்த வனத்துறை குற்றங்கள் நடப்பதாக பொதுமக்கள் இடத்திலே கருதப்படுகிறது. பலயிடங்களிலே இன்றைக்கு மரங்களை வெட்டிக் கொண்டு போகிறார்கள். அந்த மரங்கள் ரெவின்யூ துறைக்கு சொந்தமான இடங்களில் இருந்து வெட்டப்படுகின்ற மரங்கள். சில நேரங்களில் பட்டாவுக்கு சொந்தமான மரங்களை தனியார் வெட்டிக்கொண்டு போகிறார்கள். ஆகவே எங்கேயிருந்து மரங்களை வெட்டிக் கொண்டு போனார்கள். அவர்கள் முறையாக அனுமதி பெற்றுக் கொண்டு கூட போகிறார்கள். ஆனால் பாருங்கள் மரங்களை வெட்டிக்கொண்டு போகிறார்கள் என்று தெரிவித்த உடனே உடனடியாக நடவடிக்கை எடுத்து அது எந்த துறையை சேர்ந்த மரமாக இருந்தாலும் அதை கண்டுபிடித்து அந்த துறையோடு தொடர்பு கொண்டு தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று மிக தீவிரமாக அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் அவர்கள் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் இந்த சபை அனுமதித்தால் மாண்புமிகு அவைத் தலைவர் அவர்கள் அனுமதித்தால் இந்த இடத்திலே ஒரு விவாதத்தை நீங்கள் அனுமதித்தால், அலுவல் ஆய்வுக்குழு அனுமதித்தால் அதை முறியடிப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே வனத்துறையைப் பொறுத்த வரையில், இந்த அரசு இன்றைக்கு மிக தீவிரமாக நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களும், பொது மக்களும் இன்றைக்குத் தெரிந்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே அந்த வகையில் எந்தக் குறைகள் சொல்லப்பட்டாலும் எந்தக் குற்றச் சாட்டுகள் சொல்லப்பட்டாலும் அவைகளை நீக்குவதற்கும் அவைகளைத் தடுப்பதற்கும் இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் முறையோடு எல்லாவற்றையும் சொல்ல வேண்டும். நீங்கள் உட்காருங்கள். நான் விளக்கமாகச் சொல்கிறேன். அந்த ஒரு வரி இருப்பதால் அரசுக்கும் ஒன்றும் ஆகப்போவது இல்லை, அமைச்ச



1983 மார்ச் 28] [பேரவைத் துணைத் தலைவர்]

ருக்கும் ஒன்றும் ஆகப்போவது இல்லை, எனக்கும் ஒன்றும் ஆகப் போவது இல்லை. திடீர் என்று எழுந்து** என்று சொன்னதால் அது வேண்டாம் என்றுதான் நீக்கினேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறி வருகிறார்கள். அதில் சந்தேகம் ஏற்படுகிறபோது விளக்கம் கேட்பதற்கு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு, ஆனால் விளக்கம் கேட்பதற்கு மாறாக ஒழுங்குப் பிரச்சனை எனக்கூறி புதிய குற்றச்சாட்டை அதாவது Information is different from allegation புதிய குற்றச்சாட்டைச் சொல்வது மரபு அல்ல. அத்தகைய புதிய குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் இங்கே எழுந்து கூறிய போது தான் அது அவைக் குறிப்பில் இடம் பெறக் கூடாது என்று ஆணையிட்டார்கள். தயவு செய்து எதிர்க்கட்சியைச் சேர்ந்த திராவிட முன்னேற்றக் கழக மாண்புமிகு உறுப்பினர்களை நான் கேட்டுக்கொள்வது எப்படி மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் பேசுகிறபோது நாங்கள் பொறுமையோடு கேட்டுக்கொண்டு இருந்தோமோ அதைப்போல மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது அவர்கள் அந்த அளவுக்கு பொறுமையோடு அல்லது வேண்டுமளவுக்கு சகிப்புத் தன்மையோடு கேட்பதற்குரிய சக்தியை பெறுவது தான் எதிர்க் கட்சிக்கு அழகு எனக் கூறி முடிக்கிறேன். (கூச்சல்—குழப்பம்)

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வனம் சம்பந்தமாகப் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப் பதில் சொல்லிக்கொண்டிருக்கக்கூடிய சமயத்தில் திரு. ரகுமான்கான் அவர்கள் எழுந்திருந்து பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற விதத்தில் ஒரு இன்பர்மேஷனை பாஸ் செய்கிறார்கள். (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கொஞ்சம் இருங்கள், இந்த ரூலை படித்து விடுகிறேன். பிறகு நீங்கள் பேசலாம்.

Tamil Nadu Legislative Assembly Rules Rule 112 Clause (8):

"The Speaker may order expunction of any portion of proceedings of the House relating to any point af order. by the Members when in his opinion it is an abuse of the right of raising a point of order"

நீங்கள் கேட்கிறேன் என்று சொன்னீர்கள். ஆனால் திடீரென்று எழுந்து * என்றால் நான் அதை எக்ஸ்பஞ்ச் செய்யாமல் வேறு என்ன செய்ய முடியும்?

THIRU A. RAHMANKAN: It is already in the proceedings. It has allready been recorded.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

MY. DEPUTY SPEAKER: May be. But raising it unde th pre next of point of order is against th rules.

அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறுகிறது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: துணைத் தலைவர் அவர்களே, எனக்கு அந்த ரூல் நன்றாகத் தெரியும். திரு. ரகுமான்கான் சொன்னது ** என்ற சமாசாரம் தான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் வராது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: ஏன் இவ்வளவு சென்சிடிவ் ஆக அதை எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டும்? ஒரு வேளை அமைச்சர் அது இல்லை என்று சொல்லட்டும். அல்லது உண்மை என்று சொல்லட்டும். அவருக்கு விட்டுவிடுவதை விட்டுவிட்டு நீங்கள் ஏன் அதை நீக்கவேண்டு என்பதுதான் கேள்வி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ரூல்சிற்கு எதிராக இருந்தால் நான் எக்ஸ்பஞ்ச் செய்தேன். (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: திரு. துரைமுருகன் பேசுகின்றபோது சொல்லியிருந்தால் அது முறை. அமைச்சர் அவர்கள் அதற்கு பதில் தருகிறார்கள். ஆனால் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற முறையில் எழுந்து இந்த விவாதத்தில் கலந்து கொள்ளாத ஒரு உறுப்பினர்—விளக்கம் கேட்பது என்பது வேறு. அது கூட எதிர்க்கட்சிகளில் தலைவர்கள் முன் வரிசையில் இருக்கிறவர்கள் அந்த விளக்கத்தைக் கேட்கலாம் என்பது ஒரு மரபு. இருந்தாலும் பரவாயில்லை மாண்புமிகு உறுப்பினர் விளக்கத்தைக் கேட்கிறார். அப்படி இருக்கிறபோது விளக்கத்தைக் கேட்கிற பகுதிக்கு மாறாக அவர் திடீரென்று ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறார் என்றால் நாளைக்கு எந்த உறுப்பினரும் யார் பேசுகின்றபோதும் இடையிலும் எழலாம், குற்றச்சாட்டைச் சொல்லலாம் என்று ஒரு மரபு உருவாக்கப்படுமானால் மன்றத்தை நடத்துவது என்பது இயலாது. அதனால் தான் துணைத் தலைவர் அவர்கள் அதை நீக்கினார்களே, தவிர வேறு அல்ல. நேற்று இருந்தது என்றால் அந்தப் பேச்சுக்களிலே, அது இருந்திருக்கும்.

MR. DEPUTY SPEAKER: Tamil Nadu Legislative Assembly Rules; Rule 112-7 A member shall not raise a point of order—

"To seek clarification and introduce new points under the pre text of raising a point of orde.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



என்று இருக்கிறது. நீங்கள் பாயின்ட் ஆப் ஆர்டரிலே கிளாரிபிகேஷன் கேட்க முடியாது. (குறுக்கீடு) முடிந்து விட்டது. நாம் சுமுகமாக முடித்துவிடலாம் என்று நினைக்கிறேன். (குறுக்கீடு) அதை முறையாக எழுப்ப வேண்டும். இது ஒன்றுமே அவைக் குறிப்பிலே ஏறாது.

(பிற்பகல் 2-00)

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: துணைத் தலைவர் அவர்களே, காட்டுக்குள்ளே நுழைந்தாலே கொஞ்சம் சிக்கலான காரியம் தான். அதிலே நுழைந்து யாரும் வெளியே வர முடியாது. நாம் வெளியே வந்து இருக்கிறோம். அதனால் உள்ளே பதுங்கியிருக்கிறவர்களுக்குக் கொஞ்சம் பயமாக இருக்கும். நான் தங்கள் மூலம் இந்த மன்றத்திற்கும் நாட்டிற்கும் தெரிவித்துக் கொள்கிறேன். எந்தச் செய்திகளையும் இந்த அவையிலே எழுப்பி அதை குற்றச்சாட்டாக சுமத்தலாம் என்று யாராவது எண்ணுவார்களானால் **ருள் கூர்ந்து விதிமுறைகளின் படி இந்த அவையிலே எழுப்பப்படுகின்ற எந்தக் குற்றச்சாட்டையும் உடைத்தெரிய இந்த அரசு தயார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில் எல்லோரும் பல்வேறு கருத்துக்களை தெரிவித்திருக்கிறார்கள். அதிலே பெரும்பாலான உறுப்பினர்கள் இந்த அறநிலையத் துறையில் ஆலயங்கள் சிறப்பாக நடத்தப்பெற வேண்டுமென்பதைப் பற்றியும், சில சீர்திருத்தங்கள் வரவேண்டுமென்பதைப் பற்றியும், இங்கே கருத்து தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. இராசாராமன் அவர்கள் பேசுகின்றபோது எங்கேயோ ஒரு அறங்காவலர் குழுவை கலைத்ததற்கு பிறகு தண்டனை பெற்ற ஒருவர் தக்காராக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்ற கருத்தைச் சொன்னார்கள். அப்படி தண்டனைப் பெற்ற ஒருவர் தக்காராக நியமிக்கப்பட முடியாது. அவர் மூன்று ஆண்டு காலம் அறங்காவலர் குழுத் தலைவராக இருந்தவர். அதிலே ஒரு காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினரும் இருந்தார். ஆகவே மூன்று ஆண்டு காலமாக அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வரப்படவில்லை. ஆகவே அவர் சொல்கிற தகவல் தவறாக இருக்குமோ என்று நான் கருதுகிறேன். அப்படி உண்மையாக இருக்குமேயானால் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும். தக்கார் என்று இப்போது நியமிப்பதற்கு காரணம், மூன்று ஆண்டுகாலம் நியமிக்கப்பட்டிருக்கிற அறங்காவலர்களுடைய பதவிக்காலம் முடிந்து, புதிய அறங்காவலர்களை நியமிக்கப்படுவதற்கு முன்னால் போடப்படுகிறவர்களைப் பற்றி விசாரணை நடத்தி அரசிற்கும், அல்லது சம்பந்தப்பட்ட ஆணையர், துணை ஆணையாளருக்கு அறிக்கைகள் வருவதற்கு கொஞ்சம் காலதாமதம் ஆகிறது. அந்த இடைக்காலத்தில் நிர்வாகம் ஒரு மக்களுடைய பிரதிநிதியின் சார்பிலே நடைபெற வேண்டுமென்று கருதப்பட்டு, எவ்வித புகாரும் இராத

இடத்திலே எல்லாம் தக்கார்களாக நியமித்து இருக்கி
றோம். வெகு விரைவிலே தக்கார்கள் நீக்கப்படுவார்கள்.
அறங்காவலர் குழு அமைக்கப்படும். அதில் எல்லாக் கட்சிகளைச்
சார்ந்தவர்களும் அழைக்கப்படுகிறார்கள். அதில் அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகம் என்பதற்காக முன்னுரிமை
கிடையாது. இன்னும் சொல்லப்போனால், பேரறிஞர் அண்ணா
அவர்கள் சொன்ன அந்த உணர்வு எங்களுக்கு ஞாபகத்திலே
இருக்கிறது. நம்முடைய கட்சிக்காரர்களைப் போட்டால் இரண்டு
விதத்திலே நஷ்டம், என்று சொல்லியிருக்கிறார். ஒன்று;
அவர்கள் ஆலயத்திற்குள்ளே போவதன் மூலம், போகாமல்
இருப்பவன் போக ஆரம்பித்து விடுகிறான்; அது ஒன்று;
யாராவது ஒரு தவறு செய்து விட்டால் அது இவன் தலையில்
வந்து விழுந்து விடும்; அது கட்சிக்கு கெட்ட பெயர் என்று
அண்ணா அவர்கள் சொன்ன அறிவுரை முன்மாதிரியாக இருக்
கிறது. ஆகவே கட்சியை நாங்கள் பார்ப்பதில்லை. ஆனால்
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கிறார்
என்பதாலேயே அவர் பார்வியாகி விட மாட்டார். அவர்
சார்ந்திருக்கிற இயக்கத்தை ஆட்சி நடத்தலாம் என்று இந்த
நாட்டு மக்கள் தேர்ந்தெடுத்து இருக்கிறபோது, ஒரு ஆலயத்திற்கு
அறங்காவலர் குழு உறுப்பினராக இருப்பதற்கு நாட்டுமக்கள்
ஒன்றும் தடை விதிக்கவில்லை என்பதைச் சொல்லி, எந்த
கட்சியைச் சார்ந்தவர்களும், அருள்கூர்ந்து அவர்கள் கொண்டு
வந்து பெயரைத் தந்தால் அது பரிசீலிக்கப்படும் என்பதைச்
சொல்லிக் கொள்கிறேன்.

இங்கே பரம்பரை அறங்காவலர்களைப் பற்றி குறிப்பிட்டு
பேசினார்கள். அதுதான் இன்றைக்கு இருக்கிற மிகப்பெரிய
தலைவலி. பரம்பரை அறங்காவலர்கள் பெயரால் அவர்கள்
ஆடுகிற ஆட்டம் இந்த அறநிலையத் துறையையே துளைத்துக்
கொண்டிருக்கிறது. அவர்கள் எதற்கெடுத்தாலும் சட்டத்தின்
துணையை நாடி வழக்குமன்றத்திற்கு சென்று விடுகிறார்கள்.
இங்கே பக்கத்திலே இருக்கிற பெரியபாளையத்தம்மன் ஆலயத்தில்
ஒருவர் பரம்பரை அறங்காவலர் என்ற பெயரால் அறநிலையத்
துறையினுடைய உத்தரவுகளை எதிர்த்து ஏறத்தாழ 23 முறைகள்
நீதிமன்றங்களுக்கு போய் இருக்கிறார். மீண்டும் அவர் அங்கே
ஆட்சி செலுத்திக் கொண்டிருக்கிறார். மக்களுடைய குறைகள்
ஆயிரக்கணக்கில் வந்து கொண்டிருக்கின்றன. லட்சக்கணக்கில்
மக்கள் கூடுகிறார்கள். ஆனால் அதற்கேற்ற வசதிகளை செய்து
கொடுக்க அங்கே மறுக்கிறார்கள். ஆகவே இதையும் தீவிரமாக
சட்டத்துறையிலே பரிசீலிக்கச் சொல்லியிருக்கிறோம். மிக
விரைவில் இந்த பரம்பரை அறங்காவலர்களை ஒழிப்பதற்கான
சட்ட முன்வடிவை இந்த சட்டமன்றத்தில் கொண்டு வந்து
நிறைவேற்ற இருக்கிறோம். அது முன்பே ஒரு முறை கொண்டு
வரப்பட்டிருக்கிற சட்ட முன்வடிவு தான். அது வேறு பல
காரணங்களாலே நீதிமன்றங்களுக்குப் போய் அல்லது, நம்முடைய
இந்திய அரசிற்கு அது ஒப்புதலுக்கு அனுப்பப் போது வேறு
சில விதிகள் அதிலே இருந்த காரணத்தாலே, அந்த விதியைப்



புறக்கணித்த மத்திய அரசு இதையும் சேர்த்து நிராகரித்து
விட்டது. ஆகவே பரம்பரை அறங்காவலர்களை நீக்குவதற்கு
சட்ட திருத்தத்தை விரைவிலே கொண்டு வருவோம் என்று
சொல்லிக் கொள்கிறேன்.

அதைப்போல நிலங்களைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள்.
அதில் பல கருத்துக்கள் இங்கே பரிமாறப்பட்டன. ஒன்றை
மட்டும் சொல்கிறேன். 5 லட்சம் ஏக்கர் நிலம் என்றால்
ஆண்டவன் நிலச்சுவான்தாரைப் போல, மிராசுதாரைப் போல
வைத்துக் கொண்டிருக்கவில்லை. 1½ லட்சம் குத்தகைதாரர்கள்
தான் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த 1½ லட்சம்
குத்தகைதாரர்கள் உண்மையானவர்களா அல்லது பினாமிகளா
என்பது தான் கண்டுபிடிக்க முடியாமல் இருக்கிறது. இன்றைக்கு
நாட்டிலே மிகப் பெரும்பாலானவர்கள் கருத்து இந்த நிலங்
களிலே வருமானம் இல்லாமல், நித்திய பூஜைகளைக் கூட நடத்த
முடியாமல், சம்பளம் கொடுக்க முடியாமல், திண்டாடிக் கொண்டி
ருக்கிற நிலையை அரசு மாற்றவேண்டுமென்று வேண்டுகோள்
விடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அது மிகப் பெரும்பாலான
வர்களுடைய கருத்து. நம்மைப் போன்ற முன்னேற்றக் கருத்துக்
களைக் கொண்டிருக்கிறவர்களுடைய கருத்து, அவைகளை ஏழை
கட்கு நிலம் இல்லாதவர்களுக்குத் தர வேண்டுமென்பது. அந்தக்
கருத்தையும் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. எப்படி
என்றால், இந்த அறநிலையத் துறைக்கு, இந்த நிலங்களை
எடுத்துக் கொள்வதன் மூலம், எந்த விதமான நஷ்டமும்
ஏற்படுத்தாமல், அந்த நிலங்களிலேயிருந்து கிடைக்கின்ற 25%
குத்தகைத் தொகை அவர்களுக்கு உறுதிப்படுத்தப்பட்டு, அதை
ஒருவேளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டால், நிச்சயமாக அந்த
25 சதவீதம் குத்தகை போல், அந்த நிலங்களிலிருந்து அவர்களுக்கு
வந்து கொண்டிருக்கும் என்கிற உறுதியை தந்தால், அதற்கு
அரசு சம்மதித்தால், வருவாய்த் துறையும், நிதித் துறையும்
ஏற்றுக் கொண்டால், அதைப் பற்றி ஒரு முடிவு செய்யலாம்
என்கிற கருத்தை றநிலையத்துறை அரசினுடைய கவனத்திற்கு,
குறிப்பாக, மாண்புமிகு முதல்வருடைய கவனத்திற்குக் கொண்டு
போயிருக்கிறோம். அதுவரை, இன்றைக்கு நாம் இந்த விவசாயி
களை வெளியேற்றக் கூடாது என்கிற அந்தத் தடைச் சட்டத்தின்
மூலம், இதிலே நீங்களே குறிப்பிடுகிற அந்த பினாமிகள் எல்லாம்
நுழைந்து கொண்டு, இந்த 25 சதவீதத்தைக் கூடக் கொடுக்காமல்
ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதைப் பொறுத்தவரை,
ஏழை விவசாயிகளுக்குப் பாதகம் இல்லாமல், இந்தச் சட்டத்தி
லிருந்து, இந்த அறநிலையத் துறையைப் பொறுத்த வரையில்
விதிவிலக்கு அளிக்கலாம் என்கிற ஒரு முடிவையும் அரசு எடுத்
திருக்கிறது.

அதைப்போலவே, வீட்டு மனைகள் இருக்கிறதே, அதிலே
கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானம் உள்ள மனைகளை
இன்றைக்கும் தனியார் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1983 மார்ச் 28

அப்படி அனுபவித்துக் கொண்டிருக்கிற நிகழ்ச்சிகளிலே ஒன்று தான் நம்முடைய மாண்புமிகு துரைமுருகன் எடுத்துச் சொன்ன தாகக் கூட இருக்கலாம். அவைகளைப் பற்றி மிகத் தீவிரமான முயற்சிகள் எடுத்து, விரைவிலே சட்டத்தைக் கொண்டு வந்து, பல கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள ஆலய மனை களை, ஏழைகளிடத்திலே இல்லை—அதிலே பல இலட்சக்கணக் கான ரூபாய் பெறுமானமுள்ள பங்களாக்களைக் கட்டிக் கொண் டிருக்கிறார்கள்; அவர்கள் ரூ. 10, ரூ. 5, மனை வாடகை தந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு கிரவுண்ட் இன்றைக்கு ரூ. 5 இலட்சம் பெறுமானமுள்ள இடத்திலே, மனை வாடகை ரூ. 5. அப்படிப் பட்ட மனைகளை இன்றைக்குப் பிரித்து எடுத்து அதன் மூலம் பணத்தைச் சேர்த்தால், நாம் இந்த ஏழை விவசாயிகளுக் கெல்லாம் இந்த விவசாய நிலங்களைக் கூட—நாம் அவர் களுக்குச் சலுகைகளோடு கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்க முடியும். அதைப் பற்றியும் அரசு தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இரண்டு நாளைக்கு முன்பு தான் மாண்புமிகு ரெவினியூ அமைச்சர் பேசும்பொழுது உழுபவர்க்கே நிலத்தை ஒப்படைப்பதற்கு அரசாங்கம் சட்டம் கொண்டு வரும் என்று சொன்னார் இந்த 5 இலட்சம் ஏக்கரை யும் ஏழை விவசாயிகள் தான் உழுது கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு ஒரு சட்டம், இவர்களுக்கு ஒரு சட்டம் இருக்காது. பினாமிகளைக் கண்டு பிடிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அதை அரசாங்கம் கையிலேயிருந்து விடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து, மற்ற விவசாயிகளிடம் கொடுப்பதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யட்டும். ஆனால், இவர்களுக்கு 75, 25 வாங்க வழிவகை இருக்க வேண்டுமென்றும் நிலங்கள் சொந்தமாக்கப்பட வேண்டுமென்றும் எல்லா விவசாயிகளும் கோரிக்கை விடுத்திருக் கிறார்கள். இன்றைக்குப் பல மாநிலங்களிலே இந்த நிலங்கள் விவசாயிகளுக்குச் சொந்தமாக்கப்பட்டு, அவர்களிடத்திலே நஷ்ட ஈடு வாங்கப்பட்டு, அதன் மூலமாக, அந்த ஆலயங்கள் நடக்கின்றன. அதைத்தான் யோசிக்க வேண்டும்.

இன்னொன்று இந்த நிலங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். பெரிய பணக்காரர்கள், ரூ. 5 இலட்சம் பெறுமானமுள்ள நிலத்தை ஏமாற்றி மனையாக வைத்துக் கொண்டிருந்தால் அவர்களிடமிருந்து எடுத்துக் கொள்ளுங்கள்.

ஒன்று சொல்கிறேன். மதுரையிலேயே பூந்தோட்டம் என்ற இடத்திலே பழைய காலத்திலேயிருந்து கோயில்கள் நிலத்திலே, பல்லாயிரக் கணக்கான குடிசைகளில் மத்தியதர மக்கள் வாழ் கிறார்கள். ஆகவே, கொண்டு வரக்கூடிய சட்டம் அப்படிப்பட்ட



1983 மார்ச் 28] [திரு. என். சங்கரய்யா]

நிலங்களிலே குடியிருப்பவர்களைப் பாதிக்கக் கூடாது. அப்படிக் கொண்டு வந்தால், நாங்கள் கடுமையாக ஆட்சேபித்து, வெளி யேற வேண்டிய நிலைமையிலே அந்த முடிவை எடுக்க வேண்டி யிருக்கும் என்று நான் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. சங்கரய்யா அவர் களுக்கும் அவருடைய கட்சியினருக்கும் எவ்வளவு ஆர்வமும் அக்கறையும் ஏழைகளின் மீது, நடுத்தர மக்களின் மீது இருக்கிறதோ, அதைவிட எந்த அளவிலும் குறைந்த உணர்வுகள், அக்கறைகள், இங்குள்ள ஆளுகிற கட்சிக்கோ, ஆட்சிக்கோ இல்லை என்பதை அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக் கொள்கிறேன். கொண்டு வரப்படுகிற எந்தச் சட்டமானாலும் அது ஏழைகளைப் பாதிக்கிற சட்டமாக இருக்காது என்பதையும் இங்கே ஏழைகளின் பெயராலே, சுரண்டிக் கொண்டிருக்கிறார்களே, அந்தச் சுரண்டலை ஒழிக்கிற சட்டமாகத்தானிருக்கும். அந்தச் சட்ட முன்வடிவு வருகிறபொழுது அதிலே விவரமாகப் பேச முடியும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 2-10)

மகராஜன் கமிஷன் ரிப்போர்ட்டைப் பற்றிச் சொன்னார்கள். தமிழகத்தினுடைய வரலாற்றிலேயே இதுவரை இல்லாத அளவு இப்படிப்பட்ட ஒரு கமிஷனைப் போட்ட ஆட்சியே இந்த ஆட்சி தான் (மேசையைத் தட்டும் ஒலி). ஆயிரம், ஆயிரம் ஆண்டுகளாக இருந்த ஆன்மீகத் துறையைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு, அறிஞர்கள் கொண்ட ஒரு குழுவை, இந்த நாட்டிலேயே, இந்தியா விலேயே, எங்கேயும் போட்டதில்லை. ஆகமம் என்றால் என்ன? சாஸ்திரம் என்றால் என்ன? சம்பிரதாயம் என்றால் என்ன? என்று இருட்குகைக்குள்ளே இருந்த நிலைமையை மாற்றி, அதை வெளிச்சத்திற்குக் கொண்டு வருகிற மிகப் பெரிய பொறுப்பை, கடமையை, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்த அரசிலே செய்திருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் இன்றைக்கு சாதாரண மக்கள் தெரிந்து கொள்கிற வகையிலே இந்த அறிக்கையைத் தமிழிலே தான் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ ஆங்கில மொழியைப் பற்றிச் சொன்னார்கள். ஜஸ்டிஸ் மகராஜன் அவர்களுடைய கடைசிக் குறிப்பு ஆங்கிலத்திலே இருக்கிறதே தவிர, மொத்தமும் இந்த அறிக்கை தமிழிலே தரப்பட்டிருக்கிறது. நான் எல்லா உறுப்பினர்களையும், இங்கே கேட்டுக் கொள்கிறேன், இந்த அறிக்கையை ஒவ்வொரு வரும் படித்துப் பார்க்க வேண்டும். இந்த நாட்டிலே ஆன்மீகம் என்றால் என்ன? நம்முடைய முன்னோர்கள் எப்படி உருவாக்கி யிருக்கிறார்கள்? அது இன்றைக்கு கெசட்டிலே பதிப்பிக்கப்பெற்று அச்சடித்து கிடைத்துக் கொண்டிருக்கிறது. விரும்புகிற உறுப் பினர்கள் தாராளமாக பெற்றுக் கொள்ளலாம். ஒரு வேளை

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1983 மார்ச் 28

அவைத் தலைவர் அவர்கள் அனுமதித்தால், அவர்கள் கேட்டால்'
இந்த அவை உறுப்பினர்களுக்கும் நாங்கள் இந்த அரசின் மூலம்
தருவதற்குத் தயாராக இருக்கிறோம். ஆகவே அப்படிப்பட்ட
அந்த அறிக்கையிலே ஆகம விதிகள் அங்கே இடையூறாக இல்லை
என்பதை மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள் சாஸ்திரம்
உணர்ந்தவர்கள், சமஸ்கிருதம் கற்றவர்கள், எல்லா விஷயங்களை
யும் மூழ்கி ஆராய்ந்து அறிந்து தெரிந்திருக்கிறார்கள். குறுக்கே
இருப்பது அரசியல் சட்டம். அந்த அரசியல் சட்டத்தினுடைய
ஒரு ஷரத்து மாற்றப்படவில்லையானால், நீங்கள் சட்டம் செய்ய
முடியாது. சுப்ரீம் கோர்ட் கொடுத்திருக்கிற அந்த ஒரு தீர்ப்பைக்
கூட, பரம்பரை உரிமை அர்ச்சகர்களுக்குக் கிடையாது. ஆனால்
அந்தந்த ஆலயங்களிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிற முறை
களை அனுசரித்து ஆகவேண்டும் என்ற ஒரு குறிப்பு சொல்லி
யிருக்கிறார்கள். அந்த முறை தான் குறுக்கே மலையாக வந்து
நின்று கொண்டிருக்கிறது. எந்த முறையைப் பற்றியும்
கவலைப்பட வேண்டாம், என்கிற ஒரு அரசியல் சட்ட திருத்தம்
சட்ட திருத்தத்திலே வந்தாக வேண்டும். அதற்கு மாண்புமிகு
புரட்சித் தலைவர் அவர்கள் நமது பிரதமருக்குக் கடிதம் எழுதி
யிருக்கிறார்கள். இதை விட என்ன செய்யவேண்டுமென்று
அவர்கள் கருதுகிறார்களோ, எனக்குத் தெரியாது. முன்னாலே
இரு அவைகளிலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, அதை
மத்திய அரசுக்கு அனுப்பி, அதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டுக்குப்
போய், சுப்ரீம் கோர்ட் அதைத் தடுக்கவே' அதற்கு முன்னால்
இருந்தவர்கள் என்ன செய்தார்கள் என்று நான் கேட்டால்
அவர்களுக்கு ஒரு வேளை வருத்தம் வரலாம். ஆனால் நாங்கள்
என்ன செய்துகொண்டிருக்கிறோம் என்றால், நடைமுறையிலே
எப்படி அதை அனுஷ்டிப்பது, எப்படி அதை நடைமுறைப்
படுத்துவது என்பதற்காக நாங்கள் காரிய சாத்தியமான காரியங்
களிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். நடராஜன் என்ற
வருவாய் வாரிய உறுப்பினரைப் போட்டீர்கள். அது என்ன
வாயிற்று? என்றால் ஒன்றும் நடக்கவில்லை என்றுதான் அறிக்கை
தந்திருக்கிறார். அது எப்போது வேண்டுமானாலும் கேட்டுப்
படித்துக் கொள்ளலாம். அறிக்கைகள் எப்போது அவையிலே
வைக்கப்படும் என்றால், இந்த அவையிலே நாங்கள் உறுதிமொழி
கொடுத்து, இந்த அவையினுடைய அனுமதி பெற்று, ஒரு
கமிஷன் அமைத்தால் இந்த அறிக்கை அவையிலே வைக்கப்படும்.
நிர்வாக முறைப்படி நியமிக்கப்படும் எந்தக் கமிஷனும், இந்த
அரசினுடைய கவனத்திற்குக் கொடுக்கப்படும் கமிஷனுடைய
அறிக்கைகளை சட்டமன்றத்திலே வைப்பது, ஒன்றும் நடை
முறையிலே இல்லாததுதான். ஆனால் கேட்டால் அதையும்
நாங்கள் வைப்பதற்குத் தயாராக இருக்கிறோம். அது ஒரு
அதிகாரியின் மீது சாட்டப்பட்ட குற்றமே தவிர, அரசின் மீது
சாட்டப்பட்ட குற்றம் அல்ல. ஆனால் அனுமதி
பெறாமல் தங்கத்தை எல்லாம் அவர் உருக்கிவிட்டார் என்பது
குற்றச்சாட்டு. அதை அவர் தீர விசாரித்து அதில் ஒன்றும்
குற்றம் இல்லை. ஆனால் கமிஷனரிடத்திலே அவர் அனுமதி
பெறவில்லை என்கிற அந்தக் குறிப்பு மாத்திரமே தந்திருக்கிறார்.



1983 மார்ச் 28] [திரு. ஆர். எம். வீரப்பன்]

அதற்குள்ள விளக்கங்களை அந்த அதிகாரி இடத்திலே கேட்டிருக்
கிறோம் என்பதையும் சொல்லி, அதற்குப் பிறகு இந்த
சிறுவாச்சூரிலே நடந்ததை ஏதோ ஒரு பெரிய கதையாகச் சொன்
னார்கள். அங்கே இருக்கிற ஆலயத்திற்குச் சொந்தமான
மருத மரத்தை இன்னாரு ஆலயத்திற்காக தேர் செய்வதற்கு
அந்த அறங்காவலர் குழுவினர் தீர்மானம் போட்டு, இந்த அறங்
காவலர் குழுவினர் அதற்கு அனுமதித்து, தேர் செய்யத்தான்
மரம்வெட்டினார்கள். இதில் நடந்த திருவிளையாடல் என்ன
வென்றால் அங்கே இருந்த நிர்வாக அதிகாரி உள்ளே புகுந்து—
அவர் எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவரோ நமக்குத்
தெரியாது. ஆனால் இங்கே இருக்கிற நிர்வாக அதிகாரி
மூலம் அறங்காவலருக்குச் சொல்லி நீங்கள் வந்து வெட்டிக்
கொண்டு போங்கள் என்று தெரிவித்திருக்கிறார். காரணம்
அவர்களுக்கு திருவிழா வருகிறது. அந்தத் தேருக்குச் சக்கரம்
செய்தாக வேண்டும். அது அந்த மரத்தைத் தவிர வேறு
மரத்திலே செய்யமுடியாது. அதற்காகவே ஆலயங்களிலே அந்த
மரங்கள் வளர்க்கப்படுகின்றன அந்த மரத்தை வெட்டிக்
கொண்டு போங்கள் என்று சொல்லிவிட்டு, அந்த அப்பிராணி
அறங்காவலர்கள் இந்த அதிகாரி சொல்வதைக் கேட்டுக்
கொண்டு வந்து, வெட்டி டிராக்டரிலே வைத்து—— மரத்தை
என்ன இடுப்பிலே வைத்துக்கொண்டு போய் விடமுடியுமா
டிராக்டரிலே கொண்டு செல்ல வெட்டுகிறார்கள் என்று
சொன்னால், அது என்ன மறைக்கிற பொருளா அல்லது
யாரையாவது ஏமாற்றிக் கொண்டுபோகக்கூடிய பொருளா!
ஆகவே முறையாக அறங்காவலர் குழுவினர்கள் இடத்திலே
அனுமதி பெற்று வெட்டியிருக்கிறார்கள். அதை அந்த அதிகாரி,
இடையிலே இருந்து குழப்பம் செய்திருக்கிறார். அரசுக்கு இந்தத்
தகவல் வந்தவுடனேயே இதைத் தீர விசாரித்து. அதன்மீது
தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான்
இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து சிலைகள் கடத்தலைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள்.
நான் அதைத் தெரிந்துதான் ஒரு சிலைக் களவை மட்டும் அந்த
அறிக்கையிலே போட்டேன். காரணம் அதைப்பற்றி பேசு
வார்கள் என்று எனக்குத் தெரியும். (குறுக்கீடு). இப்போது
அவர்கள் சொன்னது ஏதோ இதற்கு முன்னாலே சிலைகள
களவு போகவில்லை என்பது போலவும், இப்போதுதான் சிலைகள்
களவு போய்க் கொண்டிருக்கிறது என்பதைப் போலவும் ஒரு....
(குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உதாரணத்திற்கு
நான் ஒன்று சொல்கிறேன். நீங்கள் அமைச்சர் அவர்கள் பேசிக்
கொண்டிருக்கும்போது குறுக்கேவந்து கேள்விகளைக் கேட்
கிறீர்கள் இது நாளைக்கு என்ன ஆகும் என்றால் இங்கே
இருப்பவர்கள் திருப்பிக்கேட்கும்போது அதே தீர்ப்பைத்தான்
கொடுக்க வேண்டும். (குறுக்கீடுகள்.) அமைச்சர் பேசி முடித்த
வுடன் கடைசியில் கேட்கலாம். (குறுக்கீடுகள்) பேச்சு முடிந்த
வுடன் நன்றாகக் கேட்கலாம்.

[1983 மார்ச் 28

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, நான் ஒன்றும் சம்பவத்தை மறுக்கவில்லை
வெட்டப்பட்டது வெட்டினார்கள் ஆனால் எந்த அடிப்
படையிலே வெட்டப்பட்டது என்பதற்கு விளக்கம் தந்து
கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்.) ஆகவே அதைப்பற்றி
கடைசியிலே கேளுங்கள். சிலை களவைப் பற்றி நானே......
(குறுக்கீடுகள்),

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்படி திடீரென்று
கேட்டால் எப்படி. நீங்கள் பேசும்போது விவரமாக பேசி
யிருந்தால் பிரச்னையில்லை. பேசும்போது லைட்டாக பேசி
விட்டு, இப்போது குறுக்கிட்டுக் கொண்டிருப்பது நல்லதல்ல.
(குறுக்கீடுகள்.)

திரு ஜே. எஸ். இராசு: மாண்புமிகு மன்றத்தின்
துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறி
வருகின்ற விளக்கத்திற்கு நான் மேலும் ஒளியூட்டுகின்ற
விதத்திலே ஒரு சிறிய விளக்கத்தைத் தரவிரும்புகிறேன்.
அவ்வளவுதான். சிறுவாச்சல் மதுரகாளியம்மன் கோயிலுக்குச்
சொந்தமான நிலத்திலேயிருந்த-இலப்பமரம் என்பது தவறு' இது
பிள்ளைமருது மரம்—அதப்பற்றி ஆட்சேபணையில்லை.
ஆனால் மரத்தை வெட்டுவதற்கு பெரம்பலூர் கோவில் தர்ம
கர்த்தாக்கள் பெர்மிஷன் கேட்டார்கள். சிறுவாச்சல் மதுர
காளியம்மன்கோவில் அறங்காவலர்கள் பெர்மிஷன் கொடுப்பதாக
தீர்மானம் போட்டார்கள். ஆனால் அந்த நிலத்திலே மரத்தை
வெட்டுவது முறையல்ல, நடைமுறையல்ல, இதற்குமேல்
ஏ.சி.யோ, டி.சி.யோ, அல்லது கமிஷனரோ ஆணை பிறப்
பித்தால்தான முறைப்படி சென்று அவர்கள் வெட்ட
வேண்டும். அந்த அடிப்படையிலே நீங்கள் தேர் செய்யவேண்டு
மென்பதற்காகவே, ஒரு மரத்தை without getting the permission
of the higher authorities வெட்டலாம் என்று நீங்கள் வாதிடுவ
தாகத் தெரிகிறது. கடவுள் பெயரைச் சொல்லி, இந்தக்
காரியத்திலே நீங்கள் துணைபோகவேண்டாம்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, அவர்களே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.
இந்த அறங்காவலர்கள் கேட்டார்கள், இந்த அறங்காவலர்கள்
கொடுக்கிறோம் என்று தீர்மானம் போட்டுவிட்டார்கள்.
இதற்குமேலே அனுமதியைப் பெற்றுத் தரவேண்டிய பொறுப்பு
அந்த நிர்வாக அதிகாரியினுடையது. அந்த நிர்வாக அதிகாரி
இடையிலே புகுந்து அந்த அறங்காவலர்களை அழைத்து நாங்கள்
தீர்மானம் போட்டுவிட்டோம், உங்களுக்கு சாதகன் ஆகிவிட்டது
நீங்கள் வெட்டிக் கொள்ளுங்கள் என்று அவர்கள் கண் ஜாடை
காட்டிவிட்டு, வெட்டியதற்குப் பிறகு, வேறு எந்த அடிப்படையை
வைத்துக்கொண்டு அவர்கள் வெட்டிக்கொண்டு போகிறார்கள்,
இவர்கள் தூண்டி அதை வழக்காகக் கொண்டு வந்து இவ்வளவு





வம்புக்கு கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த நிர்வாக
அதிகாரிக்கு, யாரிடத்திலே அக்கறை, எதற்காக அக்கறை.
இரண்டு அறங்காவலர்கள் குழுவும், தீர்மானம் போட்டு
அவர்கள் கேட்பதும்? இவர்கள் கொடுப்பதும் என்ற தீர்மானத்
திற்கு வந்த பிறகு இதற்கு மேலே ஒரு முத்திரைதான் குத்த
வேண்டும். காரணம் அந்த முறையிலே அந்த நிர்வாக அதிகாரி
என்ன தவறு செய்திருக்கிறார்கள் என்பதைத்தான் அந்த துணை
ஆணையாளர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்
கிறார்கள். (குறுக்கீடு). அதற்குப் பிறகு சிலைகள் களவு
போயிற்று. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன்
அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். அந்த சிலைகள் களவு
பற்றி. நான் இங்கே ஒரு குறிப்பிட்ட சம்பவத்தைப் பற்றி
அதுவும் அகில உலக புகழ்ப்பெற்ற ஒரு சம்பவத்தை இதிலே
குறிப்பிட்டேன். இது 19 8-ம் ஆண்டிலே சிலை
களவு போனது. ஆனால் களவு போனவுடனே
இந்த அரசாங்கம் கண்டுபிடித்து வழக்கு பதிவு செய்து
புலன் விசாரணை செய்து அது லண்டனுக்குப் போய்,
அமெரிக்காவிற்கு போனது கண்டுபிடிக்கப்பட்டது. இதற்கு
முன்னாலே சிவபுரம் நடராஜர் சிலை களவு பற்றி உலகப்
புகழ்பெற்ற ஒரு வழக்கு இருக்கிறது. 10 ஆண்டுகளுக்கு
முன்னாலே, இந்த மாநிலத்திலேயிருந்து, தமிழகத்திலேயிருந்து
அகற்றிக் கொண்டு போனார்கள். 10 ஆண்டுகள் கழித்து
இங்கிலாந்து நாட்டிலே இருந்து வந்தவன் நான் அதைக் கண்டு
பிடித்துச் சொன்னான். அதற்கு அன்றைக்கு இருந்த அரசு,
அறநிலையத்துறையோ, அமைச்சர்களோ இதைக் கண்டுபிடிக்க
வில்லை. நான் இதைச் சொல்வதற்குக் காரணமே இன்றைக்கு
பத்திரிகையிலே செய்திகள் அதிகம் வருகிறது. ஆனால் அடுத்த
நாளே அடுத்த வினாடியே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்
படுகின்றன, திருட்டுக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றதா,
அதிகமாகி விட்டதா என்ற பிரச்னை இல்லை. ஒரு காலத்திலே
திருடினார்கள், ஆனால் அது வெளியிலே தெரியாமல் எல்லோரும்
சேர்த்து மறைத்தார்கள். இன்றைக்கு திருடிவிட்டால், அது
உடனடியாக கண்டுபிடிக்கப்படுகிறது. சிவபுரம் நடராஜர் சிலை
களவு என்பது இன்டர்போல் மூலம் நடைபெற்ற உலகப்புகழ்
வழக்கு. ஆனால் சிலை எங்கே போயிற்று என்று இங்கே
இருப்பவர்கள் கண்டுபிடிக்கவில்லை. வெள்ளைக்காரன் வந்து
கண்டுபிடித்தான்.

(பிற்பகல் 2-20)

இன்றைக்கு 78 ஆம் ஆண்டிலே களவு போனது. உடனே
கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்தோம். இங்கிலாந்து என்ன.
அமெரிக்கா போனாலும் கொண்டு வந்து விடுவோம் என்று
அதற்குத்தான் கொள்கை குறிப்பிலே அந்த ஒரு நிகழ்ச்சியை
நான் போட்டு இருக்கிறேன் ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள்
மற்றவர்களுடைய கருத்துக்கள் அனைத்தையும் நான் மனதிலே
பதிய வைத்துக்கொண்டு இருக்கிறேன். தவறு இருந்தால் நிச்சய
மாக திருத்தப்படும். குற்றங்கள் இருந்தால் குற்றவாளிகள்

தண்டிக்கப்படுவார்கள். இங்கே நம்முடைய மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் இறுதியாகப் பேசுகிறபோது உச்சஸதாயில் வந்து, அந்த கிளைமாக்ஸ் கட்டத்தில் ஒரு குறிப்பை தெரிவித்துவிட்டுப் போய் இருக்கிறார்கள். ஆகவே, நான் அந்த கிளைமாக்ஸைப் பற்றி, அதே கிளைமாக்ஸிலே ஒரு கருத்தைச் சொன்னால் தான் கொஞ்சம் அவர்களுக்கு நிம்மதியாக இருக்கும். காரணம், அவர் எங்கெங்கோ போய் எதற்குள்ளோ போய் நின்று, இந்த அறநிலையத் துறையை எடுத்துக்கொண்டு, அதிலே பண்பைப் பற்றி யல்லாம் பேசியிருக்கிறார்கள்.

பண்பு எப்படியெல்லாம் சந்தி சிரித்துக்கொண்டு இருக்கிறது என்பதை நான் கடைசியாகச் சொல்லிவிட்டு, ஒன்றைத் தெரிவிக்கிறேன். இன்று அறநிலையத் துறையிலே எந்த நிலத்தில் இருந்தும் வருமானம் வரவில்லை. 28 கோடி ரூபாய் பாக்கி இருக்கிறது. இருந்தலும் நம்மாலே அதைப் பெறமுடியவில்லை. பல்வேறு சட்டங்கள் தடுக்கின்றன. பல்வேறு நீதிமன்ற ஆணைகள் தடுத்துக்கொண்டு இருக்கின்றன. அதனால் எவ்வளவு தொல்லைப் படுகிறோம் என்பதும் தெரிகிறது. அதே நேரத்தில் மற்ற பொதுமக்கள் தந்த காணிக்கை ஆலயங்களுக்கு வந்து வணங்குகிற மக்கள் தந்தகாணிக்கைகள் மூலம் நாம் வருமானத்தைப் பெருக்குவதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறோம். இங்கேயுள்ள சிலருக்கு அது மனக்கசப்பாக் கூட இருக்கலாம். இது என்ன பெரிய சாதனையா என்று நினைக்கலாம். இந்த நாட்டிலே இருக்கிற 5 கோடி மக்களிலே 4½ கோடி மக்கள் இதை மனதார வரவேற்பார்கள் என்று நம்புகிறேன். 30-6-1978-லே தமிழ்நாடு முழுவதிலுமாக சேர்ந்து, இத்தனை ண்டுகளாக சேர்த்த தொகை, வைப்பிலே வைத்திருந்த தொகை 1978-ஆம் ஆண்டு ஜூன் முடிய ரூ. 4,69 38,224.88 பைசா. ஆனால் அன்றைக்கு ஒரு 5 ஆண்டுகள் கழித்து பார்க்கிறபோது—கடந்த 31-12-82 முடிய கணக்குப் பார்க்கிறபோது உள்ள தொகை ரூ. 19,94,38,487 ரூபாய். கிட்டத்தட்ட 15 கோடி ரூபாய் நாம் இந்த நில வருமானம் இல்லாமல், 28 கோடி ரூபாய் பாக்கி இருக்கும் நிலையில், தமிழக வரலாற்றிலேயே ஆலயங்கள் பெயரால் இவ்வளவு தொகை சேர்க்கப்பட்டுள்ளது இதுவே முதல் தடவையாகும் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன்.

பண்பு, பண்பு என்று சொல்கிறார்களே, அந்த பண்பைப் பற்றி இந்த அரசு அறநிலையத் துறை எடுத்துக்கொண்டப் பணி, உண்மையோடு. சொந்தக் கொள்கை என்ன என்பதைப் பற்றிக் கவலைப்படாமல், இந்த நாட்டிலே மதத்தை நம்புகிற ஆன்மீகத்தை நம்புகிற, கடவுளை வணங்குகிற அவர்களுக்காக இதயசுத்தியோடு செய்யப்படுகிற பணி என்பதை இந்த நாட்டு மக்கள் பாராட்டிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் இதற்கு முன்னாலே அந்தப் பண்பைப் பற்றி ரொம்பவும் கவலைப்படாமல் ஆட்சியில் இருந்தபோது இருந்த ஒரு அறநிலையத் துறை அமைச்சராக இருந்தவரைப் பற்றி ஒரு உயர்நீதிமன்ற





நீதிபதி கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் தன்னுடைய கமிஷன் அறிக்கையிலே இரண்டு மூன்று வார்த்தைகள் சொல்லியிருக்கிறார்கள். அதை அவர்கள் நினைவுபடுத்திக்கொண்டால், அந்த பண்பை நினைப்பவர்களுக்கு பயன் உள்ளதாக இருக்கும் என்று சொல்லி. அந்த கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் கமிஷன் அறிக்கையின் முடிவுரையில் கூறியுள்ள வாசகங்களை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்,

''முதல் எதிர் மனுதாரரைப் பொறுத்தமட்டில், அவர் அப்போது இருந்த தி.மு.க அரசில் அறநிலையத் துறை அமைச்சராக இருந்து வந்து இருக்கின்றார். தமிழ் நாட்டில் உள்ள கோவில்களையும், மடங்களையும் நிர்வகிப்பதற்கு இத்தகைய ஒருவரை தெரிந்தெடுத்தது பரிதாபத்திற்குரியதாகும்'' இதை யார் சொல்கிறார்; உயர்நீதி மன்ற நீதிபதி கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் இத்தகைய தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். (கூச்சல்) அவர்களுடைய பண்பைப் பாராட்டியிருக்கிறார். அந்தப் பண்பை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை, இந்த நாட்டு மக்கள் விரும்புகிற பண்பை நாங்கள் ஏற்றுக் கொண்டு ஆட்சி நடத்திக்கொண்டு வருகிறோம் என்று சொல்லி மாண்புமிகு உறுப்பினர்கள் தந்து இருக்கின்ற வெட்டுத் தீர்மானத்தை திரும்பப்பெறவேண்டும் என்று கேட்டு, இந்த மானியக்கோரிக்கைகளை திரும்பப்பெற்று, இதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டு, அமைகிறேன். வணக்கம். (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

கோரிக்கை எண்.12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்.

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், என். எஸ்.வி. சித்தன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றனவாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

''மானியக் கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,78,77,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

[1983 மார்ச் 28

கோரிக்கை எண். 25—சின்கோனா

திருவாளர்கள் பாபு ஜனார்த்தனன், கே. கல்லன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றனவாக கருதப்பெற்றன.

திரு. ஏ. டி. கருப்பையா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:—

"மானியக் கோரிக்கை எண். 25. சின்கோனா என்ற தலைப்பின்கீழ் ரூ 2,75,76,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 45—காட்டுவளத் துறை

திருவாளர்கள் சு. பாலன், சி. பழனிமுத்து ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றனவாகக் கருதப்பெற்றன.

திரு. ரா. கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத்தீர்மானம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப்பெற்றுக்கொள்ளப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:—

"மானியக் கோரிக்கை எண். 45—காட்டுவளத் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,19,57,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.



1983 மார்ச் 28]

கோரிக்கை எண். 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்.

திருவாளர்கள் இரெ. இராசமாணிக்கம், என். எஸ். வி. சித்தன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றனவாகக் கருதப்பெற்றன.

திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:—

"மானியக் கோரிக்கை எண். 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,48,86,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 55—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு.

திருவாளர்கள் சு. பாலன், எஸ். இராசாராமன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றனவாகக் கருதப்பெற்றன.

திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்;** பேரவை முன்னுள்ள கேள்வி:—

"மானியக் கோரிக்கை எண். 55—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 16,04,24,000— க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 29-3-1983 காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.27 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

[1983 மார்ச் 28

## 10. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ). சட்டப் படிக்கான விதிகளும், ஆணைகளும்

214. தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர்புற—நாட்டுப்புற அமைப்பு திட்டச்சட்டத்தின் 10 (1) பிரிவின்கீழ் அவினாசியை உள்ளூர் திட்டப் பகுதியாக அறிவிப்பது குறித்த வீட்டுவசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 27–3–1980 ஆம் தேதியிடப் பெற்ற 400ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்) [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர–நாட்டுப்புற அமைப்பு திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

215. வேப்பேரி கிராமம் நி.அ.எண் 1269/4–ன் சென்னைப் பெருநகர் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது சம்பந்தமாக வீட்டுவசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 19–7–1982 ஆம் தேதியிடப்பெற்ற 639 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்) [தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு நகர–நாட்டுப்புற அமைப்பு திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

216. சென்னை பெருநகர்ப்பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி–நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 20-7–1982 ஆம் தேதியிடப்பெற்ற 662 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்) [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

217. சென்னை பெருநகர்ப்பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 20–7–1982 ஆம் தேதியிடப்பெற்ற 667 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்) [தமிழ்நாடு 1971–ஆம் ஆண்டு நகர—நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் எண் 35/1972) 123 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

218. 1981–82 ஆம் ஆண்டு தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி நிறுவனத்தின் 7–வது ஆண்டறிக்கை–ஆய்வறிக்கை1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–(ஏ) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.

### அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

120. கோரிக்கை எண். 12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்க குறிப்பு (தமிழ், ஆங்கிலம்)

121. கோரிக்கை எண். 25—சின்கோனா துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு. 1983–84 (தமிழ், ஆங்கிலம்).



1983 மார்ச் 28]

122. கோரிக்கை எண் 45—வனத்துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1983-84 (தமிழ், ஆங்கிலம்).

123. கோரிக்கை எண். 47—செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1983–84 (தமிழ், ஆங்கிலம்).

124. கோரிக்கை எண் 47—சுற்றுலா குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1983–84 (தமிழ், ஆங்கிலம்).

125. 1983–84ஆம் ஆண்டிற்கான சின்கோனாத் துறை பற்றிய சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).

126. 1983–84ஆம் ஆண்டிற்கான சின்கோனாத் துறை பற்றிய வணிக சம்பந்தமான வரவு–செலவுத் திட்டம் (ஆங்கிலம்).

127. 1983–84 ஆம் ஆண்டிற்கான வனத்துறை பற்றிய சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).

128. 1982–83ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான துணை மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும் (தமிழ், ஆங்கிலம்.)

129. 1982–83 ஆம் ஆண்டில் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கையின் அறிவிப்பு.

130. 1982–83 ஆம் ஆண்டு இறுதித் துணை மதிப்பீடுகள் பற்றிய மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் உரை (தமிழ், ஆங்கிலம்).

131. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள். 401 முதல் 650 வரை).

## இணைப்பு I.

152ம்..பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண்1.*78-க்கான விடையைக் காண்க

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் செப்டம்பர் 1982 முடிய உள்ள சொகுசு பேருந்துகள் 132. இவற்றுள் 118 பேருந்துகள் வழித்தடங்களில் இயக்கப்படுகின்றன. மீதம் 14

பேருந்துகள் உபரிப் பேருந்துகள். தடங்களில் இயக்கப்படும் சொகுசு பேருந்துகளின் விவரம் பின்வருமாறு.—

| வரிசை. | தடம் எண். | தடம். | இயக்கப்படும் பேருந்துகள் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 500 | சென்னை-பெங்களூர் | 5 |
| 2 | 500பி | சென்னை-பெங்களூர் (வழி சித்தூர்) | 2 |
| 3 | 503 | சென்னை-திருச்சி | 4 |
| 4 | 505 | சென்னை-சேலம் | 5 |
| 5 | 508 | சென்னை—நாகப்பட்டினம் | 2 |
| 6 | 508ஏ | சென்னை—மயிலாடுதுறை | 2 |
| 7 | 511 | திருச்சி-நாகர்கோவில் | 2 |
| 8 | 513 | கன்னியாகுமரி—திருவனந்தபுரம் | 1 |
| 9 | 514 | கன்னியாகுமரி—கோயம்புத்தூர் | 6 |
| 10 | 515 | திருச்சி—கோயம்புத்தூர் | 2 |
| 11 | 527 | கோயம்புத்தூர்—சென்னை | 4 |
| 12 | 530 | சென்னை—மதுரை | 4 |
| 13 | 536 | சென்னை-திருப்பதி | 2 |
| 14 | 540ஏ | கோயம்புத்தூர்—திருப்பதி | 2 |
| 15 | 546 | சென்னை—தூத்துக்குடி | 2 |
| 16 | 547 | சென்னை-கம்பம் | 2 |
| 17 | 551 | சென்னை—நாகர்கோவில் | 6 |
| 18 | 551ஏ | சென்னை—நாகர்கோவில் (வழி திண்டுக்கல்) | 2 |
| 19 | 552 | நாகர்கோவில்—பெங்களூர் | 2 |
| 20 | 555 | சென்னை—தஞ்சாவூர் | 5 |
| 21 | 553ஏ | சென்னை—கும்பகோணம் | 1 |
| 22 | 558பி | சென்னை-பட்டுக்கோட்டை | 1 |
| 23 | 565 | கோயம்புத்தூர்-திருநெல்வேலி | 2 |
| 24 | 575 | சென்னை—மண்டபம் | 2 |
| 25 | 576 | சென்னை—திருநெல்வேலி | 2 |
| 26 | 580 | மதுரை-பெங்களூர் | 6 |
| 27 | 583 | சென்னை—பாண்டிச்சேரி | 3 |
| 28 | 586 | சென்னை—போடிநாயக்கனூர் | 2 |
| 29 | 589 | சென்னை-கன்னியாகுமரி | 6 |
| 30 | 590 | சென்னை-திருவனந்தபுரம் | 4 |
| 31 | 594 | கோயம்புத்தூர்-பெங்களூர் | 2 |
| 32 | 600 | சென்னை-திருச்செந்தூர் | 2 |
| 33 | 602 | சென்னை-மன்னார்குடி | 2 |
| 34 | 604 | திருச்சி—உதகமண்டலம் | 1 |
| 35 | 621 | சென்னை-சிதம்பரம் | 1 |
| 36 | 622 | நாகப்பட்டினம்-பெங்களூர் | 2 |
| 37 | 623 | நாகப்பட்டினம்-பெங்களூர் (வழி நெய்வேலி) | 2 |
| 38 | 630 | கன்னியாகுமரி-உதகமண்டலம் | 2 |
| 39 | 631 | சென்னை-கோயம்புத்தூர் | 2 |
| 40 | 636 | வேளாங்கண்ணி—செங்கனாச்சேரி (வழி—பழனி) | 2 |

| வரிசை. (1) | தடம் எண். (2) | தடம். (3) | இயக்கப்படும் பேருந்துகள் எண்ணிக்கை. (4) |
|---|---|---|---|
| 41 | 648 | சென்னை-உதகமண்டலம் | 2 |
| 42 | 650 | சேலம்—குருவாயூர் | 2 |
| 43 | 653 | வேளாங்கண்ணி-திருவனந்தபுரம் | 2 |
| 44 | 654 | மதுரை—திருவனந்தபுரம் (வழி மண்டபம்) | 2 |
| 45 | 655 | சேலம்—உதகமண்டலம் | 1 |
| | | மொத்தம் .. | 118 |

## இணைப்பு II

[11-3-1983 அன்று பேரவையில் வினா எண். 375 விடையளிக்கப்பெறும்போது திரு. குமரி அனந்தன், எம்.எல்,ஏ., அவர்களின் துணை வினாவுக்கு மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அளித்த விடையையொட்டி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அவைமுன் வைக்கப்பெறுகிறது.]

ஒரு பகுதி ஆந்திரமாநிலத்திலும், ஒரு பகுதி தமிழ் நாட்டிலுமாக அமைந்துள்ள புலிகேட் ஏரியும் அதன் சுற்றுப் புறமும் தற்போது கடலின் உப்பங்கழியினால் சூழப்பட்டு உள்ளது. இப்பகுதிக்கு பக்கிங்காம் கால்வாயிலிருந்து வடக்கி லிருந்தும், தெற்கிலிருந்தும் ஆக இரண்டு உள்வாயில்கள் உள்ளன. மொத்த நீர்ப்பரப்பு பகுதியிலுள்ள நீரானது டொனிநீரு



குப்பத்தில் உள்ள சிறு கடற்கழியை அடுத்து கடலில் கலக்கிறது ஆண்டின் பெரும்பகுதி காட்களில் இதன் வெளிவாய் ஒரு மணல் திட்டினால் அடைபடுகிறது.

இந்த புலிகேட் ஏரி, ஆரணியார் கலங்கி மற்றும் சுவர்ணமுகி ஆறுகளின் மூலம் நீர் பெறுகிறது. இந்த ஆறுகள், மழையையே அவைகளில் மூலாதாரங்களாக நம்புயுள்ளன. ஆகையால் இவ வேரியின் நீர் அடிப்படையே வடகிழக்கு பருவ மழையின் தெளிவற்ற நிலையையும் மழைநீர் வாங்கு பரப்பையும், நீர் முறை சாபுகளையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது.

இந்த ஏரியின் பெரும்பான்மையான பகுதி ஆழமற்றதாகவும் அதன் அதிக பட்ச ஆழமான 14 அடி ஒரு சிறு பகுதியேயாகும் ஆகையால் ஏரியின் தேக்க நீரிலிருந்து ஆவியாதல் மற்றும் நீர்க் கசிவினால் ஏற்படும் நீரிழப்பு மிகவும் அதிகமாகும். இந்த ஏரியின் நீர்ப்பரப்பு ப்குதியின் ஏறக்குறைய மூன்றில் இரண்டு பகுதி ஆந்திர மாநிலத்தில் அமைந்துள்ளது. சென்னை நகர குடிநீர் வசதிக்காக இந்த ஏரியின் பரப்பை நீர்த்தேக்கத்திற்காக பயன் படுத்த ஆந்திர மாநிலத்தின் அனுமதி பெறவேண்டும்.

இந்த ஏரியின் முழு நீர்ப்பரப்பும் பல நூற்றாண்டுகளாக உப்பு நீருடன் கலந்துள்ளது. உப்பங்கழி மீன் பிடித்தல் மற்றும் உப்பு சம்பந்தப்பட்ட தொழில் நிறுவனங்களும் இதன் கரையில் அமைக்க உத்தேசத்தில் உள்ளது. இந்த ஏரியை ஒரு குடிநீர்த் தேக்கமாக பயன்படுத்துவதற்கு இதுகாறும் இதில் படிந்துள்ள உப்பினை வெளியேற்ற இதனை பல பருவங்களுக்கு நீர் வெள்ளோட்டம் செய்ய வேண்டும்.

புலிகேட் ஏரியை நீர்த்தேக்கமாக பயன்படுத்துவதாயின் பக்கிங்காம் கால்வாயின் வடக்கு, தெற்கு முனைகளில் நீர்ப் பூட்டுகள் அமைக்கப்படவேண்டும். தவிரவும் பக்கிங்காம் கால்வாய் படகு போக்குவரத்திற்காக தற்சமயம் உபயோகப் படுத்துவதால் இதற்காக மாற்று நீர்ப்பாதை வழி அமைக்க வேண்டி வரும். இதனைத் தவிர கடலோரப்பகுதியில் கடல் ஏற்றத்தினால்வரும் கடல் நீரை தடுப்பதற்காக ஒரு செயற்கை மண் திட்டை கடலோரமாக அமைக்கவேண்டிவரும். இந்த மண் திட்டும் புயல் காலங்களில் அலைகளினால் அரிக்கப்படலாம். இதனால் உயர் அலைகளினால் வரும் கடல்நீர் இவ்வேரியில் தேக்கப்பட்ட நீருடன் கலந்து மொத்த நீரையும் உப்பாக்கு வதுடன், அதை உபயோகமற்றதாக ஆக்கிவிடும்.

மேற்கண்ட பல முக்கிய அம்சங்களை உத்தேகித்தும் அவைகளை நிவர்த்திப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய பெருத்த நடவடிக்கைகளை உத்தேசிக்கும்போது புலிகேட் ஏரியை குடிநீர் தேக்கமாக அமைக்கும் ஆலோசனை சாத்திய மாகாத ஒன்று.

[1983 மார்ச் 28

## இணைப்பு III

[..59ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக் கட்டளைகள்
சட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு.

1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளை
கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 1960-ஆம் ஆண்டு
ஜனவரித் திங்கள் 1 ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வந்தது.
இச்சட்டத்தின்படி, ஆணையாளர் துறைத் தலைவராவார். அவ
ருடைய கட்டுப்பாட்டின் கீழ் 8 துணை ஆணையாளர்களும், 18
உதவி ஆணையாளர்களும் இருந்து உதவி புரிகின்றனர். மேற்
சொன்ன அதிகாரிகள் இச்சட்டத்தைச் செயல்படுத்துவதற்கு சட்
டப்படி நியமிக்கப்பட்ட அதிகாரிகளாவர். இவர்களைத் தவிர
நீண்ட காலமாக நிலுவையில் இருக்கும் வழக்குகளை விசாரித்து
விரைவில் முடிப்பதற்காக துணை ஆணையாளர் (நீதி) ஒருவரும்
பணியாற்றி வருகிறார்.

தமிழ்நாட்டிலுள்ள முக்கிய திருமடங்கள் தொடர்பாக ஆய்வு
மேற்கொள்வதில், ஆணையாளருக்கு உதவியாக, துணை
ஆணையாளர் ஒருவர், வட்டாரத் தணிக்கை அதிகாரி ஒருவர்,
தேவையான அலுவலகப் பணியாளர் ஆகியோர் 1-10-1980
முதல் பணியாற்றி வருகின்றனர். தமிழ் நாட்டிலுள்ள திரு
மடங்கள், அவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள சில குறிப்பிட்ட
அறக்கட்டளைகள் ஆகியவற்றில் ஏற்படும் முறைகேடுகள் தொடர்
பாக எழுந்துள்ள வழக்குகளை விரைவில் முடித்து வைக்கும் நோக்
கத்துடன், வட்டாரத் துணை ஆணையாளரிடம் ஒப்படைக்கப்
பட்டிருந்த அதிகாரங்கள், கடமைகள் ஆகியவற்றை துணை
ஆணையாளர் (ஆய்வு) செலுத்த வேண்டுமென்று அரசு கட்
டளையிட்டுள்ளது.

உதவி ஆணையாளர் பதவித்தரத்தில் சரிபார்ப்பு அதி
காரிகள் எண்மரும், அவர்களுக்குத் தேவையான துணைப் பணி
யாளர்களும் சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான திருவாபர
ணங்களையும், ஏனைய விலையுயர்ந்த பொருள்களையும் ஆய்வு
செய்து மதிப்பிடும் பணியை கவனித்து வருகின்றனர்.

அறநிலையத் துறையில் தலைமைத் தணிக்கை அதிகாரி ஒரு
வரும் அவருக்குத் தேவையான சார்நிலை அலுவலர்கள், பணி
யாளர்களுடன், ஒரு தணிக்கைப் பிரிவு இயங்கி வருகிறது. இத்
தணிக்கைப் பிரிவு, சமய நிறுவனங்களில் கணக்குகளைத்
தணிக்கை செய்து வருகின்றது.



1983 மார்ச் 28]

மேற்பார்வைப் பொறியாளர் ஒருவரின் தலைமையில் கோட்டப் பொறியாளர் ஒருவரும், தேவையான சார்நிலை அலுவலர்களும் கொண்ட பொறியியல் பிரிவு ஒன்றும் இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றது.

மாவட்டத் துணை ஆட்சியர் பதவித் தரத்தில் தனி அதிகாரி ஒருவரும் தனி வட்டாட்சியர் நால்வரும் அடங்கியவருவாய்த் தனிப்பிரிவு ஒன்று திருக்கோயில் நிலங்களை ஆய்வு செய்தல், பதிவேடுகள் தயாரித்தல் ஆகிய பணிகளை செய்து வருகின்றது.

### நிர்வாக அதிகாரிகள்.

நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்படாத ஆலயங்களில் நிருவாகக் குறைபாடுகள் உள்ளன என்றும், அதிலும், குறிப்பாக பரம்பரை அறங்காவலர்களின் கட்டுப்பாட்டிலிருந்து வரும் ஆலயங்களில் குறைபாடுகள் அதிகமாக உள்ளன என்றும் கண்டறியப் பட்டுள்ளது.

1982 ஆம் ஆண்டில் அறநிலையச் சட்டத்தின் 45 (1) ஆம் பிரிவின்படி 127 ஆலயங்களில் நிருவாக அலுவலர்களை நியமிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது. இவற்றில் 18 ஆலயங்கள் பரம்பரை அறங்காவலர்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் உள்ளன. கடந்த மூன்று ஆண்டுகளில் மேற்சொன்ன சட்டத்தின் 45 (1) பிரிவின்படி 113 ஆலயங்களில் நிர்வாக அதிகாரிகளை நியமிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது. 1-1-1983 ஆம் நாளன்றுள்ளபடி 1,686 ஆலயங்கள் ஒன்று முதல் நான்கு வரையிலான தரத்திலுள்ள 479 நிர்வாக அதிகாரிகள் பொறுப்பில் உள்ளன.

சென்னை உயர்நீதி மன்றமளித்த தீர்ப்பின்படி அறநிலையச் சட்டத்தின் 45 (1) பிரிவின்படி நிருவாக அதிகாரிகள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் பரம்பரை அறங்காவலர்களின் நிர்வாகத்திலிருந்த ஆலயங்களின் அறங்காவலர்களுக்கு அறிக்கை அனுப்பி விசாரணை நடத்தி முடிவெடுக்கப்பட வேண்டியுள்ளது. மேற்சொன்ன சட்டத்தின் 45 (1) பிரிவின்படி 1-1-1977 முதல் நிருவாக அதிகாரிகளை நியமித்தது தொடர்பாக சென்னை உயர் நீதி மன்றத்தில் 23 ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு அவை இன்னும் முடிவடையாமல் உள்ளன. மொத்தமுள்ள 33,765 ஆலயங்களில் 1,686 லயங்கள் மட்டுமே, 479 நிருவாக அதி

காரிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன. எனவே, சமய நிறுவனங் களின் மேன்மையான திறமையான நிருவாகத்திற்கு நிருவாக அதிகாரிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். இதற்கேற்ப, 1982 ஆம் ஆண்டில் நான்கு பத வித் தரத்திலும் 35 நிருவாக அதிகாரிகள் பதவிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

இம்மாதிரிகுறைகளை நீக்குவதற்காகவும் நிர்வாகத்தைசீரமைக் கவும் பரம்பரை அறங்காவலர் முறையை நீக்குவது குறித்து சட்டத் திருத்தம் கொண்டுவர அரசு பரிசீலித்து வருகிறது.

## மாநிலத்திலுள்ள சமய நிறுவனங்கள் பற்றிய விவரம்.

இந்து சமய அறநிலைய நிருவாகத் துறையின் பொறுப்பில் 33,765 சமய நிறுவனங்கள் உள்ளன. இவற்றுள் திருக்கோ யில்கள் 31,728, திருமடங்கள் 55, திருமடத்துடன் இணைக்கப் பட்டுள்ள கோயில்கள் 55, குறிப்பிட்ட அறக்கட்டளைகள் 1,721 சமண சமய நிறுவனங்கள் 17, மற்றும் அறக்கட்டளைகள் 189. இந்நிறுவனங்களில் 25,533 நிறுவனங்கள் உதவித் தொகை விதிக் கத்தக்க வருமானமுடையனவாகும். இந்நிறுவனங்களுக்கு உத வித் தொகை விதிக்கத்தக்க ஆண்டு வருமானம் சுமார் ரூ. 17·72 கோடி என்று மதிப்பிடப்படுகிறது. இத்தொகை சென்ற ஆண்டு ரூ. 16·64 கோடியாக இருந்தது. எஞ்சியுள்ள 8,232 கோயில்கள் சிறிய கோயில்களாகும். அவை, சட்டத்தின் 92-ஆம் பிரிவின் கீழ் உதவித் தொகை விதிக்கத் தக்கவையல்ல.

## தணிக்கை.

சில தணிக்கை அறிக்கைகளின் படிவங்களைத் திருத்தியமைத் தும், திருமடங்கள் மற்றும் அவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள கோயில்களின் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்கான தனிப்பட்ட நெறிமுறை குறிப்புகளைத் திருத்தியமைத்தும், துறைக் கட்டுப்பாட்டின் கீழ் வரும் சமய நிறுவனங்களையும் திருப்பணிக் கணக்குகளையும் தணிக்கை செய்யும் முறையை யும், மறு ஆய்வு செய்யும் முறையையும் மாற்றி அமைத்தும், பட்டியலில் சேராத சமய நிறுவனங்களின் கணக்குகளை தணிக்கை செய்வதற்கு உத்தரவிட்டும், சமய நிறுவனங்க ளிலுள்ள தணிக்கைப் பிரிவுகளைத் தணிக்கை செய்வதற்கான நடைமுறையை மாற்றியமைத்தும், மறுப்புரைகளுக்கு விரை வாகவும் உரிய வகையிலும் பதிலளிக்கச் செய்தும் தணிக்கை செய்யும் பணி மேம்படுத்தப்பட்டுள்ளது.



தணிக்கை பிரிவுக்காகும் செலவு தணிக்கை கட்டணமாகக் கிடைக்கும் தொகையைவிட அதிகமாகிறது. தற்போது இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தில் 92 (2) பிரிவின் கீழ் சமய நிறுவனங்களின் உதவித்தொகை விதிக்சத்தக்க ஆண்டு வரு மானம் மீது 1½ சதவீதம் என்ற ஒரே வீதத்தில் தணிக்கை கட் டணம் விதிக்கப்படுகிறது. இந்த வீதம் 1951 ஆம் ஆண்டிலிருந்து செயலிலுள்ளது. தணிக்கைப் பணியாளர்களுக்குக் குறித்த காலத்திற்கொருமுறை சம்பள வீதங்களைத் திருத்தியமைத்த தாலும் படிகள் உயர்த்தப்பட்டதாலும் செலவு உயர்ந்துள்ளது. இப்பற்றாக் குறையை ஈடுசெய்வதற்காக சமய நிறுவனங்களின் உதவித்தொகை விதிக்கதத்தக்க ஆண்டு வருமானம் மீது 3 சதவீதம் என்ற ஒரே வீதத்தில் தணிக்கை கட்டணம் விதிப்பது குறித்த செயற்குறிப்பை அரசு பரீசீலித்து வருகிறது.

## ஆலயப் பணியாளர்கள்

அர்ச்சகர்கள், பூசாரிகள் உட்பட சுமார் 82,600 பணி யாளர்கள் இந்து சமய நிறுவனங்களில் பணியாற்றி வருகின் றனர். பணியாளர்களின் சம்பளம், படி முதலியவற்றிற்காக கோவிலின் வருமானத்தில் உயரளவு 40 சதவீதத் தொகை செல விடப்படுகிறது.

பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி ஆலயத்தின் பணி யாளர்களுக்கு, அரசு ஊழியாகளுக்கு வழங்கப்படும் சம்பளங்களும் படிகளும் வழங்கப்படுகிறது. நிருவாக அதிகாரிகளாக உள்ள உதவி ஆணையர்களின் கட்டுப்பாட்டின் கீழுள்ள ஆலயங்களில் பணியாற்றும் ஆலயப் பணியாளர்களுக்கு ரூ. 650 வரை சம்பளம் பெறுபவர்களுக்கு சம்பளத் தொகையில் 42.5 சத வீதம் அகவிலைப்படியாகவும், ரூ. 650 ரூபாய்க்கு அதிகமாகச் சம்பளம் பெறுபவர்களுக்கு 31.875 சதவீதம் அகவிலைப்படி யாகவும் வழங்கப்படுகிறது. இதரத் திருக்கோயிலில் பணி புரியும் பணியாளர்களுக்கு ரூ. 400 வரை சம்பளம் பெறுபவர் களுக்கு ரூ. 85 அகவிலைப்படியும் ரூ. 400-க்கு மேல் சம்பளம் பெறுபவர்களுக்கு ரூ. 106 அகவிலைப்படியும் வழங்கப்படு கிறது.

ஆலயப் பணியாளர்களுக்கு ஆயுள் காப்புறுதித் திட்டத்தின் கீழ் 15-7-1982 ஆம் நாள் முதல் தொகுதிக் காப்புறுதித் திட் டம் செயல் படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி ரூ.100-க்கு மேற்பட்டு சம்பளம் பெறும் ஆலயப் பணியாளர்கள் இத்திட் டத்திற்காக பெயரளவிலான குறைந்த அளவுத் தொகையை

பிரிமியத் தொகையாகச் செலுத்த வேண்டும். ரூ. 100-க்குக் குறைவாகச் சம்பளம் பெறும் பணியாளர்கள் பிரிமியம் ஏதும் செலுத்த வேண்டியதில்லை. இத்திட்டம் செயலுக்கு வந்த பின்னர் இறந்த 13 ஆலயப் பணியாளர்கள் குடும்பத்திற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து காப்பீட்டுத் தொகையைப்பெற்று வழங்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பணியிலிருக்கும்போது இறந்துவிட்ட ஆலயப் பணியாளர்களின் இறுதிச் சடங்குகளை நிறைவேற்றுவதற்காக, உடனடியாக ரூ. 250 வழங்கப்படுகிறது. பின்னர் இத்தொகை அவர்களுக்குச் சேரவேண்டிய வருங்கால வைப்பு நிதியிலிருந்து வசூலிக்கப்பட்டு விடுகிறது.

ரூ. 500 அல்லது 2 திங்கள் அடிப்படைச் சம்பளம் இவற்றில் எது குறைவோ அத்தொகை ஆலயப் பணியாளர்களுக்குப் பண்டிகை முன் பணமாக வழங்கப்பட்டு 10 மாத சமதவணைகளில் வசூலிக்கப்படுகிறது.

ரூ. 10,000 ஆண்டு வருவாய் பெறும் 400 ஆலயங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஆலயமும், பணியாளர்களும், வைப்பு நிதிக்குத் தொகை செலுத்தும் வருங்கால வைப்பு நிதித் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

பெரிய ஆலயங்களில், விழாக்காலங்களில் அதிகப்படியான கூடுதல் மிகை நேரப் பணிபுரியும் ஆலயப் பணியாளர்களுக்கு ஒரு திங்கள் சம்பளத்திற்கு நிகரான தொகை சிறப்பு ஊதியமாக வழங்கப்படுகிறது. ரூ. 10,000 அல்லது அதற்கு மேல் ஆண்டு வருவாய் பெறும் ஆலயங்களில் 10 ஆண்டுகள் பணியாற்றிய அலுவலகப் பணியாளர் பணியிலிருந்து ஓய்வு பெற்றால் அவர் பணியாற்றிய ஒவ்வொரு முழு ஆண்டிற்கும் ½ திங்கள் சம்பளம் வீதம் பணிக்கொடை வழங்கப்படுகிறது. ஆனால், இவ்வாறு வழங்கப்படும் பணிக்கொடைத் தொகை பணியில் உள்ளவரின் 15 திங்கள் அடிப்படை சம்பளத்திற்கு மிகைப்படாமல் இருக்க வேண்டும்.

விலை மதிப்புள்ள திருவுருவச் சிலைகள் பாதுகாப்பு

தமிழ்நாட்டிற்குத் தனிப்பெரும் புகழும் பெருமையும் அளிக்கும் விலைமதிக்க முடியாத கலைப்பொருட்களான சிலைகளைப் பாதுகாக்க இவ்வரசு சிறப்பான நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.



வெண்கலச் சிலைகள், விக்கிரகங்கள் உருவச் சிலைகள்
ஆகியவற்றைக் கண்டறிவதற்காக, கதிர்வீச்சு இயல்
( Radio_ aphy ) தோற்றத்தையும் உலோகத்தையும்
படமெடுத்துக் காட்டும் முறை (Holo_aphy ) போன்ற
நவீன விஞ்ஞான முறைகளைப் பின்பற்றுவது அவசியமாயிற்று
ஒவ்வொரு வார்ப்படச் சிலையையும் ஐயத்திற்கிடமின்றி கண்
டறிய அழியாத கதிர்வீச்சு இயல் தொழில் நுட்ப உத்தியைப்
பயன்படுத்தி தமிழ்நாட்டு கோயில்களில் இருக்கும் சிலைகள்
குறித்த பதிவேட்டினை வைத்து வரலாமென்று மத்திய பாது
காப்புத்துறை அமைச்சரின் அறிவியல் ஆலோசகர் தெரிவித்தார்.
இக்கருத்தையொட்டி, கதிர்வீச்சு இயல், தோற்றத்தையும்,
உலோகத்தையும் படமெடுத்துக் காட்டும் முறை ஆகியவற்றின்
மூலம் வெண்கலச் சிலைகள் பற்றிய ஆவணங்களை வைத்து
வரலாம் என்று இந்த அரசு கருதியுள்ளது. முதன்முதலாக
சோமங்கலம் அருள்மிகு சோமநாத ஈசுவரன் திருக்கோயிலைச்
சேர்ந்த மூன்று ஐம்பொன் சிலைகள் சோதனை ஆய்வுக்காக
ஐதராபாத்திலுள்ள பாதுகாப்பு உலோகவியல் ஆராய்ச்சி ஆய்
வுக்கூடத்திற்கு அனுப்பப்பட்டன. இச்சோதனை பற்றிய ஆவ
ணங்கள் தற்போது வரப்பெற்று அவை சரிபார்க்கப்பட்டு
வருகின்றன. இம்மாதிரியான ஆய்வுகளைத் தொடங்க முடிவு
செய்யப்பட்டுள்ளது. அதற்காக தேவைப்படும் கருவிகளை
வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மாவட்டங்களில் நடைபெறும் திருவுருவச் சிலைத் திருட்டு
பற்றி புலன் விசாரணை செய்வதற்காகக் காவல்துறை பணி
யாளர்களின் எண்ணிக்கையை உயர்த்தும் செயற் குறிப்புகளை
அரசு பரிசீலித்து வருகிறது.

திருவுருவச் சிலைத் திருட்டுக் குற்றத்திற்குக் கடும் தண்
டனை விதிக்கும் வகையில் இந்தியத் தண்டனைத் சட்டக்
கோவையில் தக்க திருத்தங்கள்செய்வது பற்றி அரசு பரிசீலித்து
வருகிறது. திருவுருவச் சிலை திருட்டு, வெளிநாட்டிற்குத்
திருவுருவச் சிலைகளைக் கடத்திச் சென்றதன் தொடர்பாக
குறிப்பிடத்தக்க வழக்கு ஒன்று கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டம், திருவிளக்குடி கிராமத்திலுள்ள ஈசு
வரன் கோயிலில் 20–2–1978 அன்று நடராஜர் சிலை களவு
போனது. இச்சிலை கள்ளத்தனமாக இந்தியாவிற்கு வெளியே
கடத்தப்பட்டு தற்போது அமெரிக்காவில் டெக்ஸாஸ் மாநில
போர்ட்ஓர்த் டல்லாஸ் கிம்பல் கலைக்கூடத்தில் வைக்கப்பட்
டுள்ளது. இக்கலைக்கூடம் இச்சிலையை லண்டனில் உள்ள
எவரெஸ்ட் காலரியிலிருந்து 15–8–1979 அன்று 6 இலட்சம்
அமெரிக்க டாலருக்கு வாங்கியது.

திருட்டுப்போன திருவுருவச் சிலையை அமெரிக்காவிலிருந்து மீட்பதற்கு குற்றப் புலனாய்வுத் துறை, குற்றப் பிரிவைச சேர்ந்த டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரலையும், டெபுடி சூப்பிரண்டையும் இந்த அரசு அமெரிக்காவுக்கு அனுப்பியது. அவ்விருவரும் அமெரிக்கா சென்று புலன் விசாரணை செய்ததில் எவரெஸ்ட் காலரியைச் சேர்ந்த பெயனாகுல்சி, ஆல்பர்ட் அம்ரான் ஆகியோர் திருடிய சிலையை இக்கலைக்கூடத்துக்கு விற்றனர் என்று தெரியவந்தது. இந்த அரசு கேட்டுக்கொண்டதன்பேரில் மத்திய அரசு அச்சிலையைத் திரும்பப்பெறுவதற்கு, அமெரிக்க அரசுத்துறை மூலம் நடவடிக்கை எடுத்துள்ளது. கிம்பல் கலைக்கூடம் பார்வைக்காக 10 ஆண்டுகளுக்கு அச்சிலையை வைத்திருக்க அனுமதிக்கப்படலாம் என்றும், அதாவது 1989 ஆகஸ்ட் வரையில் வைத்திருந்து, அக்காலம் முடிவடைந்ததும், கலைக்கூடம் அதன் செலவில் சிலையைத் திருப்பி அனுப்பும் என்று கிம்பல் கலைக்கூடம் தெரிவித்த கருத்தை இந்த அரசு பரிசீலிக்கலாம் என்று வாஷிங்டனிலுள்ள இந்தியத் தூதரகம் கேட்டுள்ளது. இக்கருத்தினை ஒப்புக் கொள்ளாமல் சிலையை மீட்க இண்டர்போல் மூலம் துரித நடவடிக்கை எடுக்கலாமென்று காவல் துறையினர் பரிந்துரை செய்தனர். இக்கருத்தினை அரசு பரிசீலித்து வருகிறது.

## தலைநகரில் சிலைகள் கண்காட்சி

இந்திய அரசு விரும்பியவாறு, 1983 மார்ச் திங்களில் புது டெல்லியில் மண்டலக் கூட்டுசேரா நாடுகளின் மாநாடு நடக்கும் தருணத்தில் நடைபெறும் கண்காட்சியில் வைப்பதற்காகத் தமிழ்நாட்டிலுள்ள கோயில்கள், தஞ்சாவூர் கலைக்கூடம் மற்றும் சென்னை அரசு அரும்பொருட்காட்சியகம் ஆகியவற்றைச்சேர்ந்த புகழ்பெற்ற மற்றும் தற்பொழுது பூசையில் இல்லாத 67 வெண்கலச் சிலைகளை இந்த அரசு புது டில்லிக்கு அனுப்பியுள்ளது. மத்திய அரசு கலாச்சாரத்துறை, தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர், தமிழ்நாடு தொல்பொருள் துறை இயக்குநர், புதுடெல்லியிலுள்ள தேசீய அருங்காட்சியகத்தின் இயக்குநர் மற்றும் மத்திய அரசு தொல்பொருள் துறை இயக்குநர் கொண்ட ஒரு மதிப்பீட்டுக் குழுவை அமைத்து அக்குழு இந்தச் சிலைகளின் மதிப்பு ரூ. 36.43 கோடி என மதிப்பிட்டுள்ளது. இந்தத் தொகைக்கு மத்திய அரசு பொறுப்பேற்றுள்ளது. இந்த திருவுருவக்கண்காட்சி தமிழ்நாட்டிற்கு மட்டுமன்றி இந்தியக் கலாச்சாரத்திற்கும் அனைத்துலகத்தலைவர்களின் பாராட்டைப் பெற்றுத் தந்திருக்கிறது.

## கோயில் நிலங்களும் கட்டிடங்களும்.

தமிழ்நாட்டில் சுமார் 5 இலட்சம் ஏக்கர் நிலம் இந்து சமய நிறுவனங்களுக்குச் சொந்தமாக உள்ளது. பல்வேறு நிலச் சீர் திருத்த சட்ட நடவடிக்கைகளின் மூலமும் கடன் நிவாரணச் சட்ட நடவடிக்கைகள் மூலமும் குத்தகைதாரர்களுக்குப் பாது



காப்பு அளிக்கப்பட்டிருப்பதால் ரூபாய்28 கோடிக்கு குத்தகைத் தொகை நிலுவையாக உள்ளது. இதனால் கோயில்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

பல்வேறு நிலச் சீர்திருத்தச் சட்டங்களின் விதித்துறைகளைப் பரிசீலித்து குத்தகையை உரியவாறு வசூலிப்பதற்குத் தக்க வழி வகைகளைத் தெரிவிக்க மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் தலைமையில் உயர்மட்ட ஆலோசனைக் குழுவை அரசு அமைத்தது. இக்குழுவைச் சேர்ந்த துணைக் குழு தனது முதலாவது கூட்டத்தில், கோயில்களுக்குச் சொந்தமாகவுள்ள வேளாண்மை நிலங்களைப் பொறுத்தவரையில் பல்வேறு நிலச்சீர் திருத்தங்கள், குத்தகை பாதுகாப்புச் சட்டம் ஆகியவை செயலில் இருப்பதைக் கருதிப் பார்த்து கோயில்களுக்குச் சேர வேண்டிய குத்தகை பாக்கித் தொகையைத் திறம்பட வசூலிப்பதற்குச் சில பரிந்துரைகளைச் செய்துள்ளது. இவற்றை அரசு பரிசீலித்து வருகிறது.

## கட்டிடங்கள்.

1982 ஆம் ஆண்டில் 1935 இனங்களில் குத்தகைத் தொகை உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் ஆண்டுதோறும் கூடுதலாக ரூ. 3,41,324.80 வருமானம் கிடைக்கிறது.

தமிழ்நாடு நகர் குடியிருப்புதாரர் பாதுகாப்புச் சட்டம், ஆலய நிறுவனங்களின்காலிமனைகளைக்குத்தகைஎடுத்துள்ளவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது. இதனால் குத்தகைத் தொகையை மார்க்கெட் நிலவரப்படி நியாயமான நிலைக்கு உயர்த்தவோ குத்தகைதாரரை வெளியேற்றவோ ஆலய நிறுவனங்களால் இயலவில்லை. எனவே இச்சட்டத்திலிருந்து ஆலயங்களைப்பொறுத்து விதிவிலக்கு அளிக்க அரசு பரிசீலித்து வருகிறது.

## வருவாய்த் துறை சிறப்புப் பிரிவு மேற்கொண்ட விசாரணை.

கோயில் நிலங்கள் பற்றி விசாரணை செய்து அது குறித்து ஆவணங்களைத் தயாரிக்கும் பணியை மேற்கொண்டதனால் சமய நிறுவனங்கள் பெரிதும் பயனடைந்துள்ளன. இதன்பயனாக சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான பெருமளவு நிலங்கள், பல வீட்டு மனைகள், கட்டிடங்கள் ஆகியவற்றை அந்தந்தச் சமய நிறுவனங்கள் தம் வசம் மீண்டும் எடுத்துக்கொண்டுள்ளன. அதன் மூலம் கடந்த சில ஆண்டுகளில் அந்நிறுவனங்கள், கூடுதலாக ரூபாய் 13 இலட்சம் ஆண்டு வருமானத்தைப் பெற முடிந்தது.

தென் ஆற்காடு மாவட்டம் சிதம்பரத்திலுள்ள அருள்மிகு. சபாநாயகர் கோவில் சம்பந்தமா மேற்சொன்ன பிரிவு மேற் கொண்ட விசாரணை குறிப்பிடத்தக்கதாகும். இக்கோயிலுக்கும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட அறக்கட்டளை களுக்கும்சொந்தமாக 2,000 ஏக்கர்நிலம் இருப்பதாகத் தெரிய வருகிறது. இதில் 187.28 ஏக்கர் நஞ்சை நிலங்களும், 244 ஏக்கர் புஞ்சை நிலங்களும் ரூ. 39,157 ஆண்டு குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. இக்கோயில் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட அறக்கட்டளைகள் ஆகியவற்றுக்குச் சொந்தமான நிலம் முழுவதையும் மீண்டும் அதன் வசம் எடுத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திருக்கோயில்கள் செப்பனிடுதலும் திருப்பணிகளும்.

1-1-1982 முதல் 31-12-1982 வரை உள்ள கால அளவில் 214 திருப்பணிகளுக்கும் ஏனைய கட்டுமானப் பணிகளுக்கும் ரூ.3,45,94,647 செலவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2. ரூ.70,19,363 மதிப்புள்ள 143 இனங்களுக்கான திருப் பணியும் ஏனைய கட்டுமானப் பணிகளும் நிறைவேற்றி முடிக்கப் பட்டுள்ளன. ரூ 288.02 இலட்சம் மதிப்புள்ள பணிகள் நடந்தேறி வருகின்றன.

3. இம்மாநிலத்தில் உள்ள திருக்கோயில்களின்கீழ் 102 திருமண மண்டபங்கள் பராமரித்து வரப்படுகின்றன. ரூ.56,88,500 மதிப்புள்ள 28 புதிய திருமண மண்டபங்களைக் கட்டும் பணி நடந்தேறி வருகிறது.

பின்வரும் முக்கிய பெரும் திருப்பணியும் ஏனைய பணிகளும் நடந்தேறி வருகின்றன.

| | | மதிப்பீட்டுச் செலவு. (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | அருள்மிகு அரங்கநாத சுவாமி கோயில், ஸ்ரீரங்கம் (13 அடுக்குக் கோபுரம்). | 100.00 |
| 2 | அருள்மிகு சபாநாயகர் கோயில், சிதம்பரம் (38 பணிகள்). | 38.45 |
| 3 | அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக் கோயில், பழனி-வெளிப்பிரகாரச் சுவர் முதலியன. | 12.40 |
| 4 | அருள்மிகு சுப்பிரமணியசுவாமிகோயில், திருச் செந்தூர்—இராஜ கோபுரம், திருமதில் திருப்பணி, ஜெயந்திநாதர் விடுதி. | 24.35 |



| | | |
|---|---|---|
| 5 | அருள்மிகு கோட்டை மாரியம்மன் கோயில். சேலம், இராஜகோபுரம் பணி. | 18.00 |
| 6 | அருள்மிகு உத்திரகோசமங்கை வெளிப் பிரகாரம். | 9.50 |
| 7 | அருள்மிகு பாஷியக்கார சுவாமி ஆதிகேசவப் பெருமாள் கோயில், ஸ்ரீபெரும்புதூர் இராஜ கோபுரம் திருப்பணி. | 4.00 |
| 8 | அருள்மிகு சுவர்ணபுரிஸ்வரர் கோயில், பொன் னப்பூர். மண்டபத்தைப் புதுப்பித்தல். | 3.30 |
| 9 | அருள்மிகு நாகநாதேஸ்வரர் கோயில், கரிம் பேடு, செங்கற்பட்டு மாவட்டம். | 2.39 |
| 10 | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோயில். திரு விடைக்கழி, இராஜகோபுரத்தைப் பழுது பார்த்தல். | 2.10 |
| 11 | அருள்மிகு பூலாநந்தீஸ்வரர் கோயில், சின்ன மனூர் இராஜகோபுரம். | 2.05 |
| 12 | அருள்மிகு கங்காதீஸ்வரர் கோயில் புரசைவாக் கம்—இராஜகோபுரம் கட்டுதல். | 2.00 |
| 13 | அருள்மிகு மார்க்கபந்தேஸ்வரர் கோயில் விரிஞ்சிபுரம்—இராஜகோபுரத்தைப் பழுது பார்த்தல். | 2.32 |
| 14 | அருள்மிகு வரதராஜப் பெருமாள் கோயில், மாங்காடு, மண்டபம். | 2.00 |
| 15 | காஞ்சிபுரம், அருள்மிகு தேவராஜப் பெருமாள் கோயில்—கோயில் தேரைப் பழுது பார்த் தல். | 4.50 |
| 16 | குமார வயலூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயில், திருமண மண்டபம் கட்டுதல். | 4.10 |
| 17 | தஞ்சாவூர் மாவட்டம், தரங்கம்பாடி, அருள் மிகு வரதராஜபெருமாள் கோயிலைப் பழுது பார்த்தலும், திருப்பணியும். | 3.00 |
| 18 | தஞ்சாவூர் மாவட்டம், திருவெண்காடு அருள் மிகு சுவேதாரண்யேசுவரர் கோயில், இராஜ கோபுரத்தைப் பழுது பார்த்தலும், திருப்பணி யும். | 2.75 |
| 19 | தஞ்சாவூர் மாவட்டம், முத்துப்பேட்டை அருள் மிகு பெரியநாயகி அம்மன் கோயில், மேல் நிலைப்பள்ளியில் சோதனைக்கூடம் கட்டுதல். | 2.00 |
| 20 | தஞ்சாவூர் மாவட்டம், வேதாரண்யம், அருள் மிகு அரங்கநாதசுவாமி கோயிலில் மண்டபம் கட்டுதல். | 2.10 |
| 21 | திருப்பரங்குன்றம் அருள்மிகு முருகன் கோயில், 24 அறைகள் கட்டுதல். | 5.30 |

| | | |
|---|---|---|
| 22 | மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல். | 5.00 |
| 23 | மதுரை மேற்கு சித்திரைவீதி பிர்லா விஷாரத்தில் ஓய்வு இல்லம் கட்டுதல். | 6.50 |
| 24 | அழகர் கோயில் அருள்மிகு கள்ளழகர் கோயிலின் மேற்கூரையைப் பழுது பார்த்தல். | 2.16 |
| 25 | இராமநாதபுரம் மாவட்டம், தாயமங்கலம், அருள்மிகு முத்துமாரியம்மன் கோயில், குளத்தை அமைத்தல். | 4.0 |
| 26 | கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் அருள்மிகு நாகராஜா கோவில், திருமண மண்டபம் கட்டுதல். | 7.00 |
| 27 | பெரியார் மாவட்டம், சூரிபாளையம் அருள்மிகு ஆண்டவர் குல அய்யன்கோயில் திருமண மண்டபம் கட்டுதல். | 2.80 |
| 28 | அய்யம்பாளையம், அருள்மிகு வாழைத் தோட்டத்து அய்யன் கோயிலில் 6 வகுப்பு அறைகள் கட்டுதல். | 4.00 |
| 29 | சேலம் மாவட்டம், கொல்லிமலை அருள்மிகு அறப்பளீஸ்வரர் கோயிலில் திருப்பணிகள். | 3.88 |

தென்காசி அருள்மிகு காசி விஸ்வநாதசுவாமி கோயிலின் தற்போதைய கோபுரத்தின்மீது இராஜகோபுரம் ஒன்று கட்டுவதற்கான செயற்குறிப்பினை கிண்டி, நெடுஞ்சாலைகள் ஆராய்ச்சி நிலைய இயக்குநரைத் தலைவராகக் கொண்ட ஒரு குழு பரிசீலனை செய்தது. குழு இவ்வாலயத்திற்குச் சென்று விரிவான ஆய்வுகள் நடத்தியது. அதன்பின் தற்போதுள்ள ஆலய கல்காரம் இராஜகோபுரத்தைத் தாங்கும் திறனுடையது என அறியப் பட்டது ரூ. 80 இலட்சம் செலவில் கோபுரம் கட்டுவதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அது ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

### கோயில்களைப் பழுது பார்ப்பதற்கும் திருப்பணிகள் செய்வதற்கும் மான்யங்கள்.

1982–83 ஆம் ஆண்டில் கோயில்களின் திருப்பணிகளுக்கும் திரு உருவச் சிலைகள் முதலியவற்றைப் பாதுகாப்பதற்கும் அரசு ரூ.20 இலட்சம் அனுமதித்தது. ஆதிதிராவிடர் குடியிருப்புக் களில் உள்ள 11 கோயில்களில் அரசு அளித்த ரூ. 1,32,000 மான்யத்தைக் கொண்டு 1–1–1982 முதல் 31–12–1982 வரை யில் திருப்பணிகள் செய்யப்பட்டன. 1982–83–ம் ஆண்டில் கோயில்களில் திருப்பணிகளுக்காகவும், திருவுருவச் சிலைகள் முதலியவற்றைப் பாதுகாக்கவும் ஆணையரின் பொதுநல நிதியிலிருந்து ரூ.5,02,145 செலவிட அனுமதிக்கப்பட்டது.



### குடமுழுக்கு

இவ்வாண்டில் 70 கோயில்களில் குடமுழுக்கு விழா நடத்தப் பட்டன.

### சமுதாய நலப் பணிகள்.

### இந்து ஆதிதிராவிடர், பிற்பட்டவகுப்பினைச் சேர்ந்த இந்துக்கள் ஆகியோர் திருமணங்கள்.

இந்து ஆதிதிராவிடர் பிற்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த ஏழை இந்துக்கள் ஆகியோரின் திருமணத் தெவ்வொன்றிற்கும், அரசின் கொள்கைக்கிணங்க, நிதிவசதி படைத்த கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ. 750 லிருந்து ரூ. 1,000 வரை செலவிடப் படுகிறது 15–8–1981 லிருந்து சுமார் ரூ. 5,84,557 செலவில் இது வரை 746 திருமணங்கள் நடத்தப்பட்டன இதில் 453 திருமணங்கள் ஆதிதிராவிட மக்களுக்கு நடத்தி வைக்கப் பட்ட திருமணங்களாகும். சமயபுரம், திருத்தணி, திருவேற்காடு, திருவாரூர், இரத்தினகிரி, சோழிங்கர், கரூர் முதலிய இடங் களில் நடைபெற்ற திருமணங்களுக்கு மாண்புமிகு அற நிலையத் துறை அமைச்சர் அவர்கள் தலைமை வகித்தார்.

### சுதந்திர நாள் அன்று சிறப்பு வழிபாடும் பொது விருந்தும்.

ஆதிதிராவிட மக்கள் சமய நிறுவனங்களில் அதிக அளவில் கலந்துகொள்ளுவதற்கான வழிவகைகளை உருவாக்குமு பொருட் டும், ஆதிதிர விடர்களுக்கும் ஏனைய இந்து சமய மக்களுக்கும் இடையில் பேதங்களை ஒழித்து ஒற்றுமையை வளர்க்கும் நோக்குடன், தமிழகம் முழுவதும் 5,000–க்கும் அதிகமான கோயில்களில், சிறப்பு கூட்டு வழிபாடும் பொது விருந்தும் நடத்துவதற்கான திட்டம் முனைந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. 15–3–82 அன்று மாங்காட்டில் இச்சிறப்புமிக்க நிகழ்ச்சியை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். தமிழ்நாட்டில், 15–8–82-ல் மற்ற இடங் களில் நடைபெற்ற விழாவில், மற்ற அமைச்சர்களும், நாடாளு மன்ற உறுப்பினர்களும், சட்ட மன்ற உறுப்பினர்களும், மாவட்ட ஆட்சியர்களும் தலைமை வகித்தனர். இந்த நிகழ்ச்சி யில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டார்கள்.

### பொருட்காட்சி.

மாவட்டத் தலைமையிடங்களில் ஏற்பாடு செய்யப்பட்ட பொருட்காட்சிகளிலும், சென்னையில் நடைபெற்ற சுற்றுலா தொழில் பொருட்காட்சிகளிலும் சிறந்த முறையில் அரங்குகளை அமைத்து இந்து சமய அறநிலைய நிர்வாகத் துறை பல முதற் பரிசுகள் பெற்றுள்ளது. இதன் விவரம் வருமாறு:—

| | | |
|---|---|---|
| 1 | அகில இந்திய சுற்றுலா தொழில் பொருட்காட்சி, சென்னை. | 1982 ஜனவரி முதல் பரிசு |
| 2 | அரசினர் பொருட்காட்சி, கும்பகோணம். | 1982 ஜூன் ஜூலை முதற் பரிசு. |
| 3 | அரசினர் பொருட்காட்சி, திருநெல்வேலி. | ஷை |

## திருக்கோயில்.

இந்து அறநிலையத் துறையினரால் வெளியிடப்பட்டு வரும் திருக்கோயில் மாத இதழில் 5,000 பிரதிகள் அச்சிடப்பட்டு நமது நாட்டிலும் வெளிநாடுகளிலும் விற்பனையாகின்றன.

## பள்ளிகளும் கல்லூரிகளும்.

கல்வி, மருத்துவம், கலாச்சாரம், சமூகநலம் ஆகியவை பற்றிய கல்வி நிலையங்கள் பலசமய நிறுவனங்களால் நிர்வகிக்கப்படுகின்றன. விவரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 | கலைக் கல்லூரிகள் (ஆடவர்) | |
| 2 | கலைக் கல்லூரிகள் (மகளிர்) .. .. | 2 |
| 3 | பல்தொழிற் பயிற்சிப்பள்ளி (ஆடவர்) .. .. | 3 |
| 4 | பல்தொழிற் பயிற்சிப்பள்ளி (மகளிர்) .. .. | 1 |
| 5 | மேல்நிலைப் பள்ளிகள் .. .. | 1 |
| 6 | உயர்நிலைப் பள்ளிகள் .. .. | 5 |
| 7 | நடுநிலைப்பள்ளிகள் .. .. | 15 |
| 8 | தொடக்கப்பள்ளிகள் .. .. | 5 |
| 9 | மெட்ரிக்குலேஷன் பள்ளி .. .. | 3 |
| 10 | வேத ஆகம பாடசாலைகள் .. .. | 1 |
| 11 | தேவாரப் பாடசாலைகள் .. .. | 6 |
| 12 | தவில்-நாதஸ்வரப் பள்ளிகள் .. .. | 7 |
| 13 | காதுகேளாதோர்-ஊமையர் பள்ளி .. .. | 3 |
| 14 | முதியோர் இல்லம் (அன்பு இல்லம்) .. .. | 1 |
| 15 | நூலகங்கள் .. .. | 3 |
| 16 | சித்த மருத்துவ மருந்தகங்கள் .. .. | 202 |
| 17 | ஆங்கிலமுறை மருத்துவமனைகள் .. .. | 20 |
| 18 | முற்றிலும் கோவில் நிதியின் மூலம் .. .. | 2 |
| | அன்பு இல்லங்கள். நடத்தப்படும் .. | 7 |
| 19 | 25 சதவீதம் அரசு மானியத்துடன் நிர்வகிக்கப்படும் அன்பு இல்லங்கள். .. | 31 |



பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து ரூ. 48.5 இலட்சம் தொடரா செலவிலும் ரூ.4.92 இலட்சம் தொடர் செலவிலும் மகளிர்க்கான தொழில் நுட்பப் பள்ளி 2—10—81-ல் தொடங்கப்பட்டது. இந்த ஆண்டு ஆண்களுக்கான தொழில் நுட்பப் பள்ளி ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

## 25 சதவீத அரசு மானியத்தைக் கொண்டு அன்பு இல்லங்களைப் பராமரித்தல்.

கோயில்களின் ஆதரவில் 2,460 சிறார்களைக் கொண்ட (1,850 சிறுவர்கள், 610 சிறுமியர்கள்) 31 அன்பு இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த இல்லங்களை நடத்துவதற் காகும் தொடர் இனச் செலவில் 75 சதவீதத்தைக் கோயில்கள் ஏற்றுக்கொள்கின்றன. எஞ்சிய 25 சதவீதத்தை அரசு ஏற்கிறது. இப்பணிக்காக 1981–82-ம் ஆண்டில் 9.65 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது.

## தமிழ் இசை வளர்ச்சி.

தமிழிசை வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் நோக்கத்துடன் நாதஸ்வரத்திலும், தவிலிலும் ஒவ்வொரு துறையிலும் 5 மாணவர்களுக்கு நாதஸ்வரத்தில் மேற்பயிற்சி பெற திங்கள் ஒன்றுக்கு ரூ.5[illegible]0-ம், தவிலில் மேற்பயிற்சி பெற திங்கள் ஒன்றுக்கு ரூ.300-ம் வேலையில்லாத மூன்று ஓதுவார்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,000 உதவித் தொகை வழங்குவதற்கும் உரிய திட்டம் ஒன்றை அரசு நடைமுறைப்படுத்துகிறது.

இத்திட்டத்தின்கீழ் 1978-ல் நாதஸ்வரத்தில் பயிற்சிபெற ஒரு மாணவரும் தவிலில் பயிற்சி பெற ஒரு மாணவரும், 1979-ல் நாதஸ்வரத்தில் இரண்டு மாணவர்களும், தவிலில் இரண்டு மாணவர்களும், 1980-ல் ஒவ்வொன்றுக்கும் இரண்டு மாணவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றில் பயிற்சி பெற்று வருகின்றனர். அவர்கள் பயிற்சியுதவித் தொகையும் பெறுகின்றனர்.

## இந்துசமய நிறுவனங்களில் சாதி இன உட்பிரிவு அல்லாது பாகுபாடின்றி அர்ச்சகர்களை நியமித்தல்.

சாதி, இன உட்பிரிவு அல்லாது, பாகுபாடின்றி, தகுதிகளின் அடிப்படையில் மட்டுமே அர்ச்சகர்களை நியமிப்பது ஆகம கோட்பாடுகளுக்கு முரணாகாது என்றும், அத்தகைய நியமனம் இறை வழிபாட்டில் மக்களிடையே ஆர்வம் ஏற்படுத்துவதுடன் கோயில்களுக்கு அதிக பக்தர்களை ஈர்க்க உதவும் என்றும், சென்னை உயர்நீதி மன்றத்தின் முன்னாள் நீதிபதி (அமரர்) டாக்டர் எஸ் மகராஜன் அவர்கள் தலைமையில் அமைக்கப் பட்ட வல்லுநர் குழு பரிந்துரைத்தது. அர்ச்சகராக தேர்ந் தெடுக்கப்பட்டவருக்கு தீவிர கல்வி பயிற்சியும், செயல்முறை பயிற்சியும் அளிக்க வேண்டுமென்றும் அதற்க ... பயிற்

பாடத் திட்டம், தேர்வுத் திட்டம், பாடப்புத்தகங்கள் பாட சாலைகளில் சேர்க்கை விதிகள் முதலியன வகுக்க வேண்டு மென்றும் குழு பரிந்துரை செய்துள்ளது. இக்குழுவின் பரிந் துரைகளை கொள்கை அளவில் இவ்வரசு ஏற்றுக் கொண்டு உள்ளது. தனது ஆணை பல்வகை எண் 109, வணிகவரி மற்றும் அறநிலையத்துறை, நாள் 31-1-1983-ல் அரசு வல்லுநர் குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்துவதற்கும் பயிற்சி திட்டங்கள் முதலியன அமைப்பதற்கும் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டி, இந்து சமய அறநிலையத் துறை ஆணையருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன (இணைப்பு 2).

வல்லுநர் குழுவின் தலைவர் அர்ச்சகர் நியமன முறைபற்றி சட்டசம்பந்தமான குறிப்பு ஒன்று தந்துள்ளார்கள் (இணைப்பு 1). அதில் ஆகமங்களில் குறிப்பிட்டுள்ள இனங்கள் அல்லாத மற்ற எந்த இனத்தையும் சேர்ந்த ஒருவரை அர்ச்சகராக நியமிக்கும் படி அறங்காவலர்களுக்கு அதிகாரம் கொடுக்க தக்க ஒரு விதி செய்யப்பட்டிருக்குமானால் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 25, 26-வது உறுப்புக்களின்படியும், 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையக் கட்டளைகள் சட்டத்தின் 28-வது பிரிவின்படியும், உறுதியளிக்கப்பட்டுள்ள சமய செயல் முறைகளை மீறுவதாக விதி உள்ளது என்று நீதிபதிகள் கருதி யிருப்பார்கள். ஆகவே குழுவின் பரிந்துரைகளை செயல் படுத்துவதற்கும் முன்பே அரசியல் அமைப்புச் சட்டத்தின் 25-வது உறுப்பையும், 1959 ஆம் ஆண்டு இந்து சமய அற நிலையச் சட்டத்தின் 28-வது பிரிவையும் திருத்தி அமைக்க வேண்டும். அப்படி அமைத்துக் கொண்டால் குழு குறிப்பிடும் திட்டங்களை அரசியல் அமைப்புச் சட்டத்திற்கும் பொருந்தா தவை அல்லது சட்ட விரோதமானவை என்ற அச்சத்திற்கு இடமில்லாமல் செயல்படுத்த முடியும். இக்கருத்தின் அடிப் படையில் அரசியல் அமைப்புச் சட்டம் மற்றும் இந்து சமய அறநிலையச் சட்டப் பிரிவுகளுக்குத் திருத்தங்களில் வரை வுகளும் குழுத் தலைவர் தந்துள்ளார். இவைகளை பரிசீலித்த பிறகு அரசு இந்த கருத்தை ஏற்றுக்கொண்டு அரசியல் அமைப்புச் சட்டத்தில் 25-ஏ என்ற ஒரு புதிய பிரிவை சேர்க்க லாம் என்றும், மற்றும், அதற்கேற்ப ஒரு சட்ட முன்வடிவை நாடாளுமன்றத்தில் கொண்டு வரு தற்கான நடவடிக்கைகள் எடுக்குமாறு கேட்டுக்கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தியப் பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளார்கள். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 25 ஆம் பிரிவு திருத்தப் பட்ட பின்னர், இந்து சமய அற நிலையச் சட்டத்தின் 28 ஆம் பிரிவு திருத்தப்படலாம் என்று அரசு கருதியுள்ளது.

திருமடங்கள் நிர்வாகத்தை சீரமைக்க மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கைகள்:—

இம்மாநிலத்தில் உள்ள சில திருமடங்களின் நிர்வாகத்தில் உள்ள முறைகேடுகள் குறித்து பொதுமக்களிடமிருந்து புகார்கள் வரப்பெற்றதால், மடங்களின் அலுவல்களை இந்து



சமய அறநிலைய நிர்வாகத்துறை ஆணையாளர் செவ்விய முறையில் மேற்பார்வையிட்டு கண்காணிக்க இயலும் வகையில் தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைச் சட்டத்தின் சில விதித்துறைகளை திருத்த தமிழ்நாடு சட்ட மன்றத்தில் 1981-ல் அரசு சட்ட முன்வடிவு ஒன்றைக் கொண்டு வந்தது இச்சட்ட முன்வடிவின் (சட்ட முன்வடிவு எண். 61/81) நோக்கங்கள் வருமாறு:—

(1) தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 6 ஆம் பிரிவைச் சேர்ந்த (13) பகுதியின்படி, ''மடம்'' என்பது சொத்துக்கள் உடையதாயிருப்பதும், தலைவர் ஒருவரால் நிர்வகிக்கப்பட்டு வருவதுமான இந்து சமய அறநிலையம் என்று பொருள்படும். இப்பொருள் விளக்கத்தை மேலும் தெளிவுபடுத்த வேண்டி ''மடம்'' என்ற பொருள் விளக்கத்தில் ''சொத்துக்கள் உடைய'' என்பதற்கு பதிலாக '' சாத்துக்கள் உடையதாயுள்ள அல்லது இல்லாமலுள்ள'' என்பதையும் தேவையான பிற வரைவுத் திருத்தங்களையும் அமைத்துக் கொள்வதன் மூலம் அப்பொருள் விளக்கத்தை விரிவுப்படுத்துவ தெனக் கருதப்பட்டுள்ளது.

(2) தற்போதுள்ளவாறு, இச்சட்டத்தின் 23 ஆம் பிரிவின் வரம்பிற்குள் மடங்களும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள குறிப்பிடத்தக்க அறநிலையங்களும் சேர்க்கப்பட வில்லை. இப்பிரிவின் வரம்புக்குள் மடங்களையும், அதனுடன் இணைக்கப் பட்டுள்ள குறிப்பிடத்தக்க அறநிலயங்களையும் சேர்ப்பதற்கு மேற்சொன்ன பிரிவைத் தக்கவாறு திருத்துவ தன கருதப்பட் டுள்ளது.

(3) ஒரு சமய அறநிலையத்திற்கு குறிப்பிட்டதொரு நோக் கத்திற்காக ஒதுக்கக் கருதியுள்ள நிதி மொத்தத்தில் ஒரு லட்சம் ரூபாய்க்கு மேற்படும் நேர்விலும் மற்றும் குறிப்பிட்ட செயல் நோக்கத்திற்காக ஒரே நேரத்தில் ஒதுக்கக் கருதியுள்ள நிதி இருபத்தைந்தாயிரம் ரூபாய்க்கு மேற்படும்போதும் அதற்கு ஆணையர் அரசிடம் முன்னதாக இசைவு பெறவேண்டும் என்று வகை செய்யும் புதிய விதித்துறையைச் சட்டத்தின் தற்போதுள்ள 36 ஆம் பிரிவில் சேர்க்கக் கருதப்பட்டுள்ளது.

(4) இம்மாநிலத்திலுள்ள மடங்களில் நிர்வாகத்தைத் திறமையாக மேற்பார்வை செய்ய இந்து சமய அறநிலைய நிர்வாகத்துறை ஆணையாளருக்கு அதிக அதிகாரங்களை அளிக்கும்பொருட்டு, சட்டத்தில் தற்போதுள்ள 59 ஆம் பிரிவுக்குப் பதிலாக 59, 59-ஏ என்னும் புதிய பிரிவுகளையும். 60-ஏ என்னும் புதிய பிரிவையும் அமைத்துக் கொள்ளக் கருதப்பட்டுள்ளது. இதன் விளைவாக இச்சட்டத்தின் 60 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

[1983 மார்ச் 28

தமிழ்நாடு சட்ட மன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவு குடியரசுத் தலைவரின் இசைவிற்காக அனுப்பப்பட்டது. இது குறித்து தமிழ்நாட்டிலிருந்து சிலர் ஆட்சேபணை மனுக்கள் மத்திய அரசிற்கு நேராக அனுப்பினர். அவைகள் மீது மாநில அரசின் விளக்கங்களை மத்திய அரசு கோரியது. தமிழக அரசின் விளக்கங்கள் மத்திய அரசுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளன. இச்சட்டத்திற்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் வர வேண்டியதிருக்கிறது.

**அருள்மிகு சபாநாயகர் கோயில், சிதம்பரம்.**

சிதம்பரத்திலுள்ள அருள்மிகு சபாநாயகர் கோயில் இந்தியாவிலேயே மிகப் பழமையான புகழ்வாய்ந்த கோயிலாகும். இக்கோயில் இந்து சமய அறநிலைய நிர்வாகத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது. 1391ஆம் விளைச்சல் ஆண்டில் இக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ. 50,869 என்று மதிப்பிட்டதின் பேரில் இக்கோயில் அறநிலையத்துறைக்கு உதவித் தொகையும், தணிக்கைக் கட்டணமும் செலுத்த வேண்டுமெனக் கட்டளையிடப்பட்டது. ஆனால் தீட்சிதர்கள் இக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ. 3,215 மட்டுமே என்று கணக்குக் காட்டியுள்ளனர்.

பொது தீட்சிதர்கள் கோயில் சொத்துக்களைத் தொடர்ந்து நிர்வகித்து வந்ததன் காரணமாக, கோயில் நிர்வாகத்திலுள்ள பல்வேறு முறைகேடுகளைச் சுட்டிக்காட்டியும் இந்து சமய அறநிலையச் சட்டத்தின் 45ஆம் பிரிவின்கீழ் நிர்வாக அதிகாரியை நியமிக்குமாறு ஆணையிட்டும் ஆணையாளர் பொது தீட்சிதர்களின் செயலாளருக்கு அறிவிப்பு அனுப்பினார். பொது தீட்சிதர்கள், சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளனர். உயர்நீதிமன்றம் ஆணையரின் நடவடிக்கைக்குத் தடையாணை விதித்துள்ளது.

இந்து சமய நிறுவனங்களையும் அவைகளின் சொத்துக்களையும் நன்முறையில் நிர்வகிப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொண்டு நமது பண்டைய நாகரீகத்தையும் கலையினையும் பண்பாட்டினையும் எடுத்துக்காட்டும் கருவூலப் பெட்டகங்களாக, நம் முன்னோர்கள் உருவாக்கி விளங்கிக் கொண்டிருக்கும் கோயில்களைப் பேணிப் பாதுகாக்க அரசு அயராது பாடுபடும்.



1983 மார்ச் 28]

**அர்ச்சகர் நியமனமுறை பற்றி வல்லுநர் குழுத் தலைவர் தரும் சட்ட சம்பந்தமான குறிப்பு.**

1. சென்ற இரண்டு ஆண்டுகளாக இந்த வல்லுநர் குழுவின் தலைவனாயிருக்கும் சிறப்புரிமை பெற்றிருந்தேன். இந்தக் குழுவில் சிறந்த தமிழ் அறிஞர்களும், வரலாற்று அறிஞர்களும், அரசின் வருவாய்த் துறையில் மாவட்ட ஆட்சியாளராகவும், இந்து சமய அறநிலையத்துறையில் ஆணையராகவும் விரிந்த அனுபவம் பெற்றவர்களும், உறுப்பினராக இருந்திருக்கிறார்கள். இவர்களையன்றி இந்தக் குழுவில் சைவசமயத்தைச் சார்ந்த மூன்று சிவாச்சாரியார்களும், வைணவ சமயத்தைச் சார்ந்த இரு பட்டாசாரியார்களும் (வைகானசம்-பாஞ்சராத்திரம்) பணி புரிந்திருக்கின்றனர். இவர்கள் இந்து சமயத்தில் ஆகமக் கிரியைகளை ஆச்சார்யராக இருந்து நடத்தி வைக்க வல்லவர்கள் என்று தமிழ்நாடு முழுவதும் புகழ் பெற்றுள்ளவர்கள்; இவர்கள் அனைவரும் இந்து சமய பக்தர்கள். இப்போது தமிழ்நாட்டுக் கோயில்களில் நிலவுகின்ற கிரியைகளும் சடங்குகளிலும் வந்து மாறுதல் செய்வதையும் இவர்கள் சாதாரணமாய்ப் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள் என்பதும் கவனிக்கத்தக்கது

2. ஆயினும், இவர்கள் இந்து மதத்தை நன்கு பேணும் பொருட்டும், அழியாது காக்கும் பொருட்டும், ஆகமப்படி அமைக்கப்பட்டுள்ள சிவன் கோயில்களிலும், விஷ்ணு கோயில்களிலும் அர்ச்சகர் பதவிகளில் சாதியைக் கருதாமல் இந்துக்களாய் உள்ள அனைவருக்கும் இடம் கொடுக்கலாம் என்ற ஒருமித்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள். இதிலிருந்து இந்து மதத்தைச் சேர்ந்த எந்த மனிதனையும் அழைத்துக் கோயிலின் கருவறைக்குள் புகுந்து திருவுருவத்தைத் தீண்டி, அர்ச்சகர் செய்கின்ற பிற கிரியைகளையும் சடங்குகளையும் செய்ய இவர்கள் அனுமதிப்பார்கள் என்று பொருளாகாது. அர்ச்சகருடைய கடமைகளைச் செய்வதற்குத் தகுதியுடையவர்கள் என்று யாரையும் ஏற்றுக் கொள்வதற்குமுன், இவர்கள் குறிப்பிட்ட சில கடுமையான பூர்வாங்க நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தாக வேண்டும் என்று இவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

3. இந்த பூர்வாங்க நிபந்தனைகளை விவரிக்குமுன், திருநெல்வேலி மாவட்டம் மீனாட்சிபுரத்திலும், இந்தியாவில் வேறுபல இடங்களிலும் நடைபெற்றுள்ள சில நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டுவது பொருத்தம் என்று நினைக்கிறேன். இந்த நிகழ்ச்சிகள் இந்தியா முழுமையிலும் உள்ள சங்கராச்சாரியர்களுக்கும், மடாதிபதிகளுக்கும், பிற இந்து சமய தலைவர்களுக்கும், சமய உணர்வில் பெருத்த அதிர்ச்சியை உண்டு பண்ணியிருக்கின்றன. மீனாட்சிபுரத்தில் கீழ் வகுப்பைச்சேர்ந்தவர்களை, மேல்வகுப்பு இந்துக்கள் தாக்கி கொலைகளும், இரத்தக் களரிகளும், வன்முறைச் செயல்களும் செய்திருக்கிறார்கள். அவற்றின் விளைவாக கீழ்வகுப்பு இந்துக்கள் இஸ்லாம் மதத்திற்கு மாறிவிட்டார்கள். இந்தியாவில் வேறு சில இடங்களில் இந்து

மதத்தைச்சேர்ந்த ஐம்பது இலட்சம் மக்கள், இச்சமயத்தில் உள்ள
சாதிமுறைக்கொடு மக் காரணமாகத் தங்களுக்கு ஏற்பட்டிருந்த
இழிவைக் கண்டு மனக் கசப்பு அடைந்து, புத்த சமயத்துக்கு
மதம் மாறியிருக்கிறார்கள் என்று பத்திரிக்கைச் செய்திகள்
கூறுகின்றன. இந்த நிகழ்ச்சிகள் ஒரு புறம், அரபு நாடுகளிலிருந்து
வருகின்ற பணம் இன்னொரு புறம். இந்துக்கள் இஸ்லாம்
சமயத்திற்கு மாறுவதற்கு மேற்கண்டவை காரணங்கள் என்று
வதந்த உலவுகின்றது. இவை சாதியின் பெயரால் சில மக்கள்
மீது பழிப்பு முறையிலும் ஆத்திரம் ஊட்டத்தக்க முறையிலும்
விதித்திருக்கும் த டைகளைக் குறித்து வைதி மான இந்து சமயத்
தலைவர்களைப் புனராலோசனைப் பண்ணும்படி செய்துள்ளன.
ஆச்சாரிய சுவாமிகளில் ஒருவர், ஆகமத்திலும் வேத அத்தியனத்
திலும் கீழ்வகுப்பு இந்துக்களுக்கும் பயிற்சி அளிக்க ஒ பாட
சாலை தொடங்க முன்வந்திருக்கிறார்; இதன் மூலம் இவர்கள்
கோயில் அர்ச்சகர்களாக ஆவதற்கு இடமுண்டு. ஆதலால்
கோயிலில் அர்ச்சகர் பதவிகளை எல்லா இந்துக்களுக்கும் உரியன
வாக ஆக்க வேண்டும் என்றும் அவர்கள் ஓர் ஐந்து வருடகால
சமய போத னக்குரிய கடுமையான கட்டுப்பாட்டில் பயிற்சி
பெறுவதன் மூலம் கருவறைக்குள் புகுவதற்கும், உருவங்களுக்கு
அபிஷேகம், அலங்காரம், அர்ச்சனை முதலான பூசைச் சடங்கு
களைச் செய்வதற்கும் தகுதி பெறுபவர்கள க ஆகலாம் என்றும்
இந்தக் குழுவிலுள்ள சிவாச்சாரியர்களும், பட்டாச்சாரியர்களும்
பிற வைதீக மனமுடைய உறுப்பினர்களும் ஏகோபித்த முடிவுக்கு
வந்ததில் ஆச்சரியமில்லை.

4. இனி, அர்ச்சகராக நியமனம் பெறுவதற்கு ஒருவர்
தம்மைத் தகுதியுடையவராக ஆக்கிக் கொள்வதற்கு முன், அவர்
நிறைவேற்ற வேண்டிய கடுமையான பூர்வாங்க நிபந்தனைகளை
இப்போது பார்க்கலாம். இந்துவாய் உள்ள எவருக்கும் அர்ச்சகர்
பதவியை அளிக்கலாம் என்று சொல்வதற்கு முன், வேதத்திட்டங்
களோடுகூட, பின்வரும் திட்டங்களையும் ஏற்று கொள்ள
வேண்டும் என்றும், பின்னே குறிப்பிடும் தேவைகளை நிறை
வேற்றியாக வேண்டுமென்றும் எங்களுடைய ஆலோசனைக்
கூட்டங்களின் கடைசி நாளன்று ஒருமனதாக தீர்மானிக்கப்
பட்டது.

(அ) அர்ச்சகர் பதவிக்கு வர விரும்புவோருக்குச் சமஸ்
கிருதத்திலும், தமிழிலும் ஆகமங்கள், சைவத்திரு முறைகள்
திவ்யப் பிரபந்தங்கள் பிற சமய சாத்திரங்கள் ஆகியவற்றிலும்,
ஓரளவு நல்ல அறிவு ஊட்டுவதற்காக தமிழ் நாட்டின்
பொருத்தமான இடங்களில் அறநிலையத்துறை பல ஆகமக்
கல்லூரிகளை நிறுவ வேண்டும்.

(ஆ) இந்த ஆகம அறிவுக்கான பயிற்சித் திட்டம்
ஐந்தாண்டுக் காலம் நடைபெற வேண்டும்.

(இ) அர்ச்சகர் வேலைக்கு வருபவர் சைவ உணவு
கொள்பவராக இருத்தல் வேண்டும்; இந்த ஐந்து வருட கால
பயிற்சியில் அவர் அறிவுத் துறையில் பயிற்சியும், சமயத்



துறையில் பயிற்சியும் பெறுவது மட்டுமல்லாமல், உடலைத்
தூய்மையாக வைத்திருப்பதிலும், ஆசாரத்திலும், நல்லொழுக்கத்
திலும், நன்னடத்தையிலும் கூடப் பயிற்சி பெறவேண்டும்.

(ஈ) இந்தப் பயிற்சியில் சேர்க்கப்படுவோருக்கு அறநிலையத்
துறை ரூ. 250 உதவித் தொகையாக மாதந்தோறும் அளிக்க
வேண்டும்.

(உ) இந்தப் பயிற்சியை வெற்றிகரமாக முடித்த பிறகு,
இவர் பாடசாலையின் தலைவரிடமிருந்து பயிற்சியில் வெற்றி
பெற்றார் என்று ஒரு சான்றிதழ் பெறுவார்; அதன்மேல் இவர்
தகுதிவாய்ந்த ஆச்சாரியரிடமிருந்து உபதேசம் பெற்று, ஆகமங்
களில் விதித்துள்ள தீட்சையும் பெறவேண்டும்.

(ஊ) இவ்வாறு ஐந்தாண்டுக்காலப் பயிற்சியைத் திருப்தி
கரமாக முடித்துத் தகுதிவாய்ந்த ஆச்சாரியரிடமிருந்து உபதேசம்
பெற்றவருக்கு, அவருடைய பயிற்சிக்குப் பொருந்துமாறு, சைவ
சம்பிரதாயப்படியோ, வைணவ சம்பிரதாயப்படியோ, ஒரு
கோயிலில் அர்ச்சகராக நியமனம் தரப்படும் என்ற உறுதியும்
அளிக்கப்பெறுதல் வேண்டும்.

(எ) மேற்குறிப்பிட்ட முறையில் பயிற்சி பெற்றவர்,
அர்ச்சகராக நியமனம் பெற்ற பிறகு, அவருக்கு கௌரவமான
மாத சம்பளம் அளிக்கவேண்டும். பயிற்சி பெற்ற அர்ச்சகருக்கு,
கோயில் நிதியில் வசதியிருக்குமானால், மாதம் ரூ. 500 சம்பளம்
கொடுக்க வேண்டுமென்று ஒரு லட்சிய நிலையில் நாம் பரிந்துரை
செய்கிறோம்.

(ஏ) இதைப் பொறுத்த பிற விவரங்களை இந்து
அறநிலையத் துறை விரிவாகத் தயாரிக்க வேண்டும்.

5. ஆகம விதிப்படி, குறிப்பிட்ட ஒரு சாதி அல்லது சாதி
களைச் சேர்ந்தவர்களுக்கே கட்டுப்பாடாக உரியதாய் இருந்த
அர்ச்சகர் பதவியில் பிற சாதியினரையும் நியமிக்கலாம் என்று
தளர்த்தியபோது, மேலே குறிப்பிட்ட திட்டங்களின் அடிப்
படையில்தான் இந்தக் குழு இத்தளர்ச்சியை அனுமதித்திருக்
கிறது.

6. அடுத்தபடி சட்ட நிலைமைகளையும் நாம் ஆராய்ந்து
பொருள் சொல்லும் உச்ச நீதிமன்றத்தாரால் இது வரையில்
விளக்கப்பட்டிருந்த சட்டமானது, இந்து மதத்தைச் சேர்ந்த எந்தச்
சாதியினரையும் அர்ச்சகராக நியமிப்பதை அங்கீகரிக்குமா
என்பதைக் காண்போம். இதற்குச் சம்பந்தப்பட்ட வகை
முறைகளை இந்திய அரசியலமைப்பின் 25, 26 உறுப்புகளில்
காணலாம். 25 ஆவது உறுப்பில் இதற்குச் சம்பந்தப்பட்ட பகுதி
பின்வருமாறு:

25. (1) பொது ஒழுங்கு, ஒழுக்கநெறி, சுகாதாரம், ஆகிய
வற்றுக்கும் இந்தப் பகுதியில் பிற வகைமுறைகளுக்கும் உட்பட்டு,
ஆட்கள் அனைவரும் மனச்சாட்சிக்கும் சுதந்திரத்துக்கும் தடை
யின்றிச் சமய நம்பிக்கையை விளம்புவதற்கும் சமயத்தைப் பயில்
வதற்கும் பரப்புவதற்கும் சமமான உரிமையுடையவர் ஆவார்.

(2) இந்த உறுப்பில் எதுவும்

(அ) சமயப் பயிற்சியோடு சம்பந்தப்பட்டதாக இருக்கலாகும் பொருளாதார, நிதி, அரசியல் நடவடிக்கை, அல்லது சமயச் சார்பற்ற பிற நடவடிக்கை எதனையும் முறைப்படுத்துகிற அல்லது கட்டுப்படுத்துகிற

(ஆ) சமூக நலத்துக்கு மற்றும் சீர்திருத்தத்துக்கு அல்லது பொதுத்தன்மை வாய்ந்த இந்து சமய நிறுவனங்களை இந்துக்களின் எல்லாச் சமய நிறுவனங்களையும், இந்துக்களின் எல்லா வகுப்பினருக்கும் பிரிவினருக்கும் திறந்து விடுதலுக்கும் வகை செய்கிற தற்போதுள்ள சட்டம் எதனுடைய செயற்பாட்டையும் பாதித்தலோ, அல்லது அத்தகைய சட்டம் எதையும் அரசு இயற்றுவதைத் தடுத்தலோ, ஆகாது.

7. 25 (1) உறுப்பின்படி சமயத்தை அனுசரிப்பதற்கும், ஏற்று நடப்பதற்கும், பிரசாரம் செய்வதற்கும் உள்ள உரிமை பொது ஒழுங்கிற்கும், ஒழுக்க நெறிக்கும் சுகாதாரத்திற்கும் உட்பட்ட உரிமை என்பதைக் கவனிப்பது முக்கியமாகும். இந்திய சட்டத் தீர்ப்பறிக்கை 1951 பம்பாய் 775 ஆம் பக்கத்தில் (பம்பாய் அரசு எதிர் நரசு அப்பாமாலி) தலைமை நீதிபதி சக்ளா அவர்கள் பின்வருமாறு கருத்தைக் கூறினார்:—

"இப்போது சமயக்கொள்கை மற்றும் நம்பிக்கைக்கும் சமயச் செயல் முறைகளுக்கும் இடையில் திட்டமான ஒரு வேறுபாட்டை நாம் வகுத்துக் கொள்ள வேண்டும். அரசு பாதுகாப்பு அளிப்பது சமயக் கொள்கைக்கும் நம்பிக்கைக்குமே ஆகும். சமயச் செயல்முறைகள் பொது ஒழுங்கு, ஒழுக்கநெறி மற்றும் சுகாதாரத்திற்கு அல்லது அரசு நிறைவேற்றப் புகுகின்ற ஒரு சமூகக் கொள்கைக்கு மாறாக இருக்குமானால் அப்போது சமயச் செயல் முறைகள் கைவிடப்பட்டு நாட்டிலுள்ள அனைத்து மக்களின் நன்மைக்கே முதலிடம் கொடுக்க வேண்டும்."

8. இப்போது இரத்தக்களரி, கலகம் செய்தல், கற்பழித்தல் ஆகியன நாட்டு மக்களின் பொது ஒழுங்கு, ஒழுக்கநெறி மற்றும் சுகாதாரத்துக்கும் அரசு நிலை நாட்டப் புகுவதாகிய சாதியற்ற சமூகத்தையும், சமூக நலனையும் முன்நடத்திச் செல்லும் கொள்கைக்கும் மாறாக உள்ளன. இதன் விளைவாக இந்துக்களிடையே பல்வேறு சாதிகளிடையில் வேறுபாடு செய்கின்ற சமயச் செயல்முறையையும், இந்துக் கோயில்களில் அர்ச்சகர்



பதவியை சில மேல் சாதிகளைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே உரிய தாக்கும் நிலையையும் ஒதுக்கி வைத்து, பொது ஒழுங்கு, ஒழுக்கம் மற்றும் சுகாதாரம் இவற்றைப் பாதுகாப்பதற்கும், சமூக நலனைக் குறித்த அரசின் கொள்கையைச் செயல்படுத்துவதற்கும் முதலிடம் கொடுக்க வேண்டும். இந்துக்களில் குறிப்பிட்ட ஒரு சாதி அல்லது சாதிகள் கொண்டாடும் உரிமையானது, பொது ஒழுங்கு, ஒழுக்கநெறி, சுகாதாரம் இவற்றைப் பாதிக்கும் சூழ் நிலைக்கு இடங்கொடுத்து அந்தச் சூழ்நிலையில் மேற்சொன்ன உரிமையை அங்கீகாரம் செய்ய வேண்டிய வழக்கு ஒன்றும் உச்சநீதி மன்றத்தில் இதுவரையில் வந்ததில்லை. ஆயினும், தேவையான தகுதிகள் இருக்குமானால் இந்துக்களில் எல்லாப் பிரிவினரையும் இந்துப் பொதுக் கோயில்களில் அர்ச்சகர் பதவியில் நியமிக்கலாம் என்று இந்தக் குழுவின் பிரேரணை செல்லத்தக்கதென்று உச்ச நீதிமன்றத்தார் ஏற்றுக்கொள்வார்கள் என்று எந்த அளவு உறுதி யோடும் எதிர்பார்த்துச் சொல்ல முடியாது. ஆதலால் அற நிலையத் துறையினர் இந்தக் குழுவின் பிரேரணையை உடனடி யாகச் செயல்படுத்தத் தொடங்குவது ஆபத்தானது என்று நான் நினைக்கிறேன். ஏனெனில் இந்துக்களில் எல்லாப் பிரிவினருக்கும் அர்ச்சகர் பதவியில் இடங் கொடுக்கலாம் என்பதை, உச்சநீதி மன்றத்தார் சட்டத்திற்கு முரணானது என்று சொல்லி நிராகரித்து விடக்கூடும். ஆகவே, இந்தக் குழுவின் சிபாரிசுகளைச் செயலுக்கு கொண்டுவருவதற்கு முன், சட்டத்தின் சில திருத்தங்களை செய்து கொள்வது பொருத்தமாயிருக்கும்.

9. திருத்தங்களை நான் குறிப்பிடுவதற்கு முன்பு, தமிழ் நாட்டில் உள்ள இந்துப் பொதுக் கோயில்களில் அர்ச்சகருடைய நிலையைக் குறித்து உச்ச நீதிமன்றத்தில் வந்துள்ள சமீப காலத்துத் தீர்ப்பை நான் இங்கு குறிப்பிட எண்ணுகிறேன். அந்தத் தீர்ப்பானது அனைத்திந்திய தீர்ப்பறிக்கை 1972 உச்ச நீதிமன்றத்தாரின் தீர்ப்பு 1586 ஆம் பக்கத்தில் (எத்திராஜ ராமாநுஜ ஜீயர் முதலியோர் மனுதாரர், தமிழ்நாடு அரசு எதிர் மனுதாரர்) உள்ளது. அந்த வழக்கில் 1970 ஆம் ஆண்டு தமிழ் நாடு இந்து சமய அறநிலையத் திருத்தச் சட்டம் ஆட்சேபிக்கப் பட்டது. இந்தத் திருத்தச் சட்டம் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு 22 ஆவது சட்டமாகிய தமிழ்நாடு இந்து சமய அறநிலையச் சட்டம் ஆகிய மூலச் சட்டத்திற்குச் செய்த திருத்தமாகும். வழக்கின் இருபக்கத்தாரும் மூலச் சட்டத்தின் வகைமுறைகளை

தமிழ்நாட்டின் சைவக் கோயில்களுக்கும், வைணவக் கோயில்களுக்கும் பொருந்தும் என்று ஒப்புக்கொண்டார்கள். திருத்தச் சட்டம் செய்ததெல்லாம் குறித்த கோயில்களில் அர்ச்சகர் பதவிக்கு வாரிசு முறையில் வருவதற்கிருந்த உரிமையை நீக்கி விட்டதாகும். உச்ச நீதிமன்றத்தில் மாண்புமிகு நீதிபதிகள் கீழ்க் கண்ட முடிவுகளுக்கு வந்தார்கள் —

"பூசை செய்யும் அர்ச்சகர் எந்தக் காலத்திலும் ஒரு சமய நிறுவனத்தின் தலைவர் என்று கருதப்படவில்லை. அவர் நன்கு கற்றவராய்க் கோயிலில் செய்ய வேண்டிய கிரியைகளிலும் ஆகமங்களிலும் வல்லவராயும் இருக்கலாம். ஆயினும், ஒரு சமயத் தலைவருக்குரிய அந்தஸ்து அவருக்கு இல்லை. அறங்காவலர் அவரை நியமிக்கிறார்; அர்ச்சகர் கோயில் ஊழியராகிறார். ஒரு கோயிலில் பரம்பரை அர்ச்சகர் நிலை மகூட அறங்காவலரின் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்திற்கு உட்பட்ட ஊழியர் நிலையேயாகும் என்று கே. சேஷாத்திரி அய்யங்கார்—எதிர்—ரங்கபட்டர் (1912 ஐ. எல். ஆர். 35, சென்னை 631) வழக்கில் முடிவு செய்யப்பட்டுள்ளது. அறங்காவலர் அத்தகைய ஊழியரின் நடத்தை குறித்து விசாரணை நடத்தி தவறான நடத்தைக்காக அவரைப் பதவியிலிருந்து நீக்கலாம். மூலச்சட்டத்தின் திருத்தப்படாத படியுள்ள 56 ஆவது பிரிவில் ஏற்றுக் கொள்ளப்பட்டபடி அந்த ஊழியர் அறங்காவலரின் ஒழுங்கு நடவடிக்கைக்கும் மேல் விசாரணைக்கும் உட்பட்டவராவார் ....." அர்ச்சகருடைய அந்தஸ்த்தை ஆலோசித்த பிறகு, அர்ச்சகரின் நிலைமை இவ்வாறு இருத்தலினால், அறங்காவலர் செய்கின்ற அர்ச்சகர் நியமனம் என்ற செயலானது முற்றிலும் அடிப்படையில் சமயச் சார்பற்றது என்றும், சமயச் செயல் அல்ல என்றும், மேற்சொன்ன நீதிபதிகள் கருதியிருக்கிறார்கள்.

10. நியமனத்திற்குரிய விண்ணப்பதாரர் பதவியில் கடைசியக இருந்தவருக்கு வாரிசுமுறையில் அடுத்து வரக்கூடியவர் என்ற ஒரே காரணத்திற்காக அவரை நியமிக்க அறங்காவலர் கடமைப் பட்டவரல்ல என்றும் நீதிபதிகள் மேலும் முடிவு செய்திருக் கிறார்கள்.

11. இந்த கருத்துரைகளின்படி அர்ச்சகர் நியமனம் என்ற செயலானது சமயச் சார்பற்ற செயலாய் இருத்தலினால் சாதியைக் கருதாமல் அர்ச்சகரை நியமிக்க வழி செய்யும் எந்தச் சட்டத் தையும் அல்லதுவிதியையும் அரசியலமைப்புச்சட்டத்தின் 25ஆவது உறுப்பை அது மீறுகிறது என்ற காரணத்தினால் தள்ளிவிட முடியாது என்று வாதிடுவதற்கு உரிமை இருப்பதாக ஒருவர்



நினைக்கலாம். ஆனால், இதற்கு மாறான நிலையை உச்ச நீதிமன்றத்தின் சில கருத்துரைகள் தெரிவிக்கின்றன. எடுத்துக் காட்டாக மேற்படி தீர்ப்பில் 1594 ஆம் பக்கத்தில் நீதிபதிகள் பின்வருமாறு கருத்து கூறுகிறார்கள்:—

" திருத்தச் சட்டத்தின்படியும், அதற்குத் தெரிவிக்கப்பட்ட நோக்கத்தின் படியும் ஆகமத் தேவைகளைப் புறக்கணித்து, எல்லாக் கோயில்களிலும் ஒரே மாதிரியான அமைப்புடைய கிரியைகளை அரசு நிர்ணயிப்பதையும், ஆகமங்களில் அங்கீகரிக்கப்படாத இனங்களைச் சேர்ந்தவைகளான அர்ச்சகர்களைக் கோயில்களின் மீது திணிப்பதையும் தடுப்பதற்கு ஏதுமில்லை என்று மனுதாரர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இத்தகைய ஒரு மாறுதல், முன்னே சுட்டிக்காட்டியபடி, திருவுருவத்தின் புனிதத்தைக் கெடுப்பதில் வந்து முடிவது உறுதியாதலால், திருத்தச் சட்டத்தின்படி அரசு மேற்கொள்ளுகிற அதிகாரங்கள், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 25, 26 உறுப்புகளில் உறுதியளிக்கப்பட்டுள்ள சமய சுதந்திரத்தில் தலையிடுவனவாக முடியும். இவ்வாறு மனுதாரர்களின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளனவற்றின் சாரமானது அரசின் சார்பில் ஆசராகியுள்ள கல்விமிக்க தமிழ்நாடு தலைமை வழக்கறிஞராலும் உணரப் பட்டது."

12. 1959-ஆம் பக்கத்தில் உச்ச நீதிமன்றத்தார் பின்வருமாறு கொண்டிருக்கிறார்கள்:—

" மூலச் சட்டத்தின் 28 (1) ஆம் பிரிவு அறக்கட்டளையின் திட்டங்களை அனுசரித்து அல்லது குறித்த நிறுவனத்தின் பழக்க வழக்கத்தை அனுசரித்துக் கோயில் விவகாரங்களை அறங்காவலர் நிர்வகித்து வர வேண்டும் என்று உத்தரவிடுகிறது. சட்டத்தின் திருத்தப்பட்ட 55-ஆவது பிரிவின்படி அறங்காவலர் செய்கின்ற அர்ச்சகர் நியமனத்தை மேற்படி பிரிவு கட்டுப்படுத்தும் என்று கல்விமிக்க தலைமை வழக்கறிஞர் கருதுவதை நாங்கள் ஏற்றுக் கொள்வதில் சிரமமில்லை. ஒரு சைவ அல்லது வைணவக் கோயிலில் அக்கோயிலுக்கு விதி வகுக்குகின்ற ஆகமங்களில் சொல்லப்பட்ட விதிகளின்படி, அங்குக் குறிப்பிட்ட ஒரு இனம் சாதி அல்லது பிரிவிலிருந்து அர்ச்சகரை நியமிக்கவேண்டும். அவ்வாறு செய்யத் தவறும்பட்சத்தில் அச் செய்கை அந்தக் கோயிலின் பழக்க வழக்கங்களை அறங்காவலர் அனுசரித்து நடக்கவேண்டும் என்று விதிக்கின்ற மூலச் சட்டத்தின் 28 (1) ஆம் பிரிவுக்கு மாறாகப்போவதுமல்லாமல், அது ஒரு சமயச் செயல் முறையில் தலையிடுவதுமாகும். இத்தலையீட்டின் பயன் திருவுருவத்தின் புனிதத்தைக் கெடுப்பதில் வந்து முடியும் என்பது உறுதி."

13. சாதி, கொள்கை இனவேறுபாடற்ற அர்ச்சகர் பிரிவு ஒன்றை அமைப்பது மாநில அரசின் கொள்கையாயிருக்கின்ற காரணத்தால், இவ்வரசு அர்ச்சகர் பதவிக்கு உரிய தகுதிகளை ஆகமங்களுக்கு மாறாகவே நிர்ணயிக்கலாம் என்று மனுதாரர்கள்

அச்சம் தெரிவித்தார்கள். இந்த அச்சத்தை நீக்கும் முறையில்
உச்ச நீதி மன்றத்தார் பின்வருமாறு (1598 ஆம் பக்கத்தில்)
கூறினார்கள்.

"கோயில்களில் நடைபெற்றுவரும் கிரியைகளிலும் சடங்கு
ளிலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவது இந்தச் சட்டத்தின்
நோக்கங்களில் ஒன்று என்று எந்த இடத்திலும் குறிப்புத்
தரவில்லை. இதற்கு மாறாக மூலச் சட்டத்தின் 107 ஆவது
பிரிவானது, அரசியலமைப்புச் சட்டத்தின் 26ஆவது உறுப்பின்
படி, ஒரு சமய இனத்தினருக்கோ அல்லது அவர்களின் ஒரு
பிரிவினருக்கோ அளிக்கப்பட்டுள்ள உரிமைகளை மீறவல்ல எந்த
அதிகாரத்தைத் தருவதாகவும் அல்லது எந்தக் கடமையை விதிப்
பதாகவும் இந்தச் சட்டத்தில் கண்டதெதுவும கருதப்படமாட்
டாது என்று வலியுறுத்திச் சொல்லுகிறது. மேலும் கோயில்களில்
கிரியைகளில் வரும் சடங்குகளிலும் தலையிடுவதாகப் பொருள்
படக்கூடிய ஏதேனும் ஒரு விதியானது அரசினால் வகுக்கப்
பட்டால், கோயில் வழிபாட்டில் அக்கரையுடையவர்கள் அதை
ஆட்சேபிப்பதற்கு அது உள்ளாகும். அதனால் மனுதாரர்கள்
இப்போது வெளியிட்டிருக்கின்ற அச்சங்களை ஆதாரமற்றவை
என்றும், உரியதருணம் வருவதற்கு முன் கூறப்படுபவை என்றும்
நாங்கள் கருதுகிறோம்."

14. ஆகமங்களில் குறிப்பிட்டுள்ள இனங்கள் அல்லாத மற்ற
எந்த இனத்தையும் சேர்ந்த ஒருவரை அர்ச்சகராக நியமிக்கும்படி
அறங்காவலருக்கு அதிகாரம் கொடுக்கத் தக்க ஒரு விதி செய்யப்
பட்டிருக்குமானால் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 25, 26
ஆம் உறுப்புகளின்படியும், மூலச்சட்டத்தில் 28-ஆவது பிரிவின்
படியும் உறுதியளிக்கப்பட்டுள்ள சமயச் செயல்முறையை மீறுவ
தாக அந்த விதி உள்ளது என்று அதை நீதிபதிகள் தள்ளுபடி
செய்திருப்பார்கள் என்பது மேலே எடுத்துக்காட்டிய பல்வேறு
வாசகங்களிலிருந்து தெளிவாகும்.

15. ஆதலால் இந்தக் குழுவின் பரிந்துரைகளைச் செயல்
படுத்துவதற்கு முன்பே சில திருத்தங்களைச் செய்வது அவசியம்
என்று நான் கருதுகிறேன். இந்தியாவின் அரசியலமைப்புச் சட்
டத்தில் 25 ஆவது உறுப்பும் அதனுடன் சேர்ந்த 1, 2 விளக்
கங்கள் பின்வருமாறு உள்ளன:—

25. (1) பொது ஒழுங்கு, ஒழுக்க நெறி, சுகாதாரம் ஆகிய
வற்றுக்கும் இந்த பகுதியின் பிற வகைமுறைகளுக்கும் உட்பட்டு,
ஆட்கள் அனைவரும் மனசாட்சிக்கும், சுதந்தரத்திற்கும் தடை
யின்றிச் சமய நம்பிக்கையை விரும்புவதற்கும் சமயத்தைப் பயில்
வதற்கும், பாராட்டுவதற்கும் சமமான உரிமை உடையவர் ஆவர்.

(2) இந்த உறுப்பில் எதுவும்

(அ) சமயப் பயிற்சியோடு சம்பந்தப்பட்டதாக இருக்கரு
ள்ளகும் பொருளாதார, நிதி, அரசியல் நடவடிக்கை, அல்லது
சமயச் சார்பற்ற பிற நடவடிக்கை எதனையும் முறைப்
படுத்துகிற அல்லதுகட்டுப்படுத்துகிற,





(ஆ) சமூக நலத்துக்கு மற்றும் சீர்திருத்தத்துக்கு அல்லது
பொதுத் தன்மை வாய்ந்த இந்து சமய நிறுவனங்களை இந்துக்
களின் எல்லா வகுப்பினருக்கும், பிரிவினருக்கும் திறந்து விடுத
லுக்கும் வகை செய்கிற, தற்போதுள்ள சட்டம் எதனுடைய
செயற்பாட்டையும் பாதித்தலோ அல்லது அத்தகைய சட்டம்
எதையும் அரசு இயற்றுவதைத் தடுத்தலோ ஆகாது.

விளக்கம்—1: கிர்ப்பான்கள் அணிவதும் கொண்டு செல்வதும்
சீக்கிய சமய நம்பிக்கையை விளம்புவதில் உள்ளடங்கியனவாகக்
கொள்ளப்படுதல் வேண்டும்.

விளக்கம்—2 : (2)-வது கூறில் (ஆ) உட்கூறில் இந்துக்
கள் என்று குறிப்பிடும் சுட்டானது சீக்கிய, சமண அல்லது—
பௌத்த சமயத்தைப் பயிலும் ஆட்கள் என்று குறிப்பிடும்
சுட்டையும் உள்ளடக்குவதாகப் பொருள் கொள்ளப்படுதல்
வேண்டும். இந்து சமய நிறுவனங்கள் என்று குறிப்பிடும்
சுட்டும் அவ்வண்ணமே பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

16. அரசியலமைப்புச் சட்டத்தின் 25 ஆவது உறுப்பின்
(ஆ) உட்கூறில் விளக்கம் 3 என்பதைப் புதிதாகச் சேர்த்துத்
திருத்தம் செய்தல் நலம் என்று பரிந்துரை செய்கிறேன். நான்
இப்போது பரிந்துரை செய்யும் விளக்கம்-3 பின்வருமாறு
அமையும் :—

விளக்கம்—3 : இரண்டாவது கூறில் (ஆ) உட்கூறில் "இந்து
சமய நிறுவனங்களை இந்துக்களின் எல்லா வகுப்பினருக்கும்,
பிரிவினருக்கும் திறந்து விடுதலுக்கும்" என்ற வாசகத்தில்
"ஆகமங்களிலும் செய்ய வேண்டிய கிரியைகளிலும் போதுமான
அறிவைப் பெற்றுள்ள இந்துக்களின் எல்லா வகுப்பினருக்கும்,
பிரிவினருக்கும் அர்ச்சகர் பதவியைத் திறந்து விடுதல்" என்
பதும் அடங்குவதாகக் கொள்ளவேண்டும்.

17. இந்த விளக்கம் எளிமையானது ; அரசு தோற்றுவிக்க
எண்ணும் சாதியற்றசமூகம் என்ற கருத்துக்கு ஒத்தது. கோயிலில்
பணிபுரியும் பிற ஊழியர்களைப் பொறுத்த வரையில்
குறித்த ஒரு சாதியில் இருந்துதான் அவர்களை நியக்க
வேண்டும் என்று ஆகமம் கட்டுப்படுத்தவில்லை. இதனோடு
சார்ந்து (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு 22 ஆவது சட்டமாகிய)
1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து அறநிலையச் சட்டத்தின்
28 ஆம் பிரிவும் திருத்துவதற்குரியது. ஏனெனில் குறித்த
அறக்கட்டளையின் திட்டங்களை அனுசரித்தும் அல்லது
அந்த நிறுவனத்தின் பழக்க வழக்கங்களை யொட்டியும்,
கோயிலின் அறங்காவலர் கோயில் விவகாரங்களை நடத்தி
வரவேண்டும் என்று அந்தப் பிரிவு விதிக்கிறது; அன்றியும்

உச்ச நீதிமன்றத்தார் கருத்தின்படியும் அந்த நிறுவனத்தின்
பழக்கவழக்கம் என்பது, ஆகமங்களில் விதிக்கப்பட்டுள்ளபடி,
குறிப்பிட்ட இனத்திலிருந்தே அர்ச்சகரை நியமிக்கவேண்டும்
என்று பொருள்படும்.

18. ஆகவே 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலைய
சட்டத்தின் 28 ஆவது பிரிவில் பின்வரும் விளக்கத்தைப் புதி
தாய்ச் சேர்த்துத் திருத்திக் கொள்ளலாம் என்று யோசனை
கூறுகிறேன்:—

விளக்கம் : ''28 (1) ஆம் பிரிவின் அந்த நிறுவனத்தின்
பழக்க வழக்கம் என்பதைக் குறிக்கும்போது அந்தச் சமய
நிறுவனத்தின் உள்துறை ஊழியர்களின் சாதியை விலக்குவ
தாகக் கொள்ளவேண்டும்''.

மேற்குறிப்பிட்ட இரண்டு திருத்தங்களையும் அமைத்துக்
கொண்டால், இந்தக் குழுவினர் குறிப்பிடும் திட்டங்களை
அரசியலமைப்புச் சட்டத்துக்குப் பொருந்தாதவை, அல்லது
சட்ட விரோதமானவை என்று தள்ளிவிடக்கூடும் என்ற
அச்சத்துக்கு இடமில்லாமல் செயல்படுத்த முடியும்.

19. இந்தக் குறிப்பை முடிக்குமுன், இந்தக் குறிப்பிலுள்ள
அலுவல் சார்பற்ற உறுப்பினர்கள் செய்துள்ள மதிப்புயர்ந்த
கருத்துதவியை மிகவும் போற்றிப் பாராட்ட வேண்டியது
என் கடமையாகும். கூட்டங்களில் விவாதங்கள் நிகழ்ந்த
போது உறுப்பினர் மனம் திறந்து யாதொரு தடையும் இன்றிப்
பேசினார்கள். அந்த உறுப்பினர்கள், தெளிவில்லாத பல
பிரச்சினைகளைத் தெளியச் செய்தார்கள். இவர்கள் ஆக
மங்களில் எவ்வளவு பாண்டியத்தியம் உடையவர்கள் என்பது
அப்போது விளங்கிற்று. இந்த ஆலோசனைகள் நெடுகிலும்
அவர்கள் காட்டிய ஒத்துழைப்புக்கு என்னுடைய பாராட்டு
தலைத் தெரிவிக்கிறேன். இந்தக் குழுவின் அங்கத்தினரா
உள்ள திரு. மு. அருணாசலம் அவர்களுடைய உதவியைச்
சிறப்பாகக் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ், ஆங்கிலம்,
சமஸ்கிருதம் ஆகியவற்றில் தமக்குள்ள சிறந்த புலமை
யினாலும் தமிழருடைய பண்பாடு, இலக்கிய வரலாறு, சமயத்
துறை ஆகியவற்றில் ஊடுருவிப் பாயும் தம்முடைய உள்ளுணர்
வினாலும் இந்தக் குழுவின் அறிக்கைக்கு அவர்கள் ஒரு பேரி
லக்கியத்தின் மணத்தையே ஊட்டியிருக்கிறார்கள்.





1959-ம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையச் சட்டம்—
பரம்பரை அர்ச்சகர் முறைக்குப் பதிலாக இந்து
சமய நிறுவனங்களில் அர்ச்சகர்கள் மற்றும் உள்துறை
ஊழியர்களாக சாதி, இன உட்பிரிவு வேறுபாடின்றி இந்து
சமயத்தைச் சார்ந்த தகுதியுள்ள நபர்களை நியமித்தல்
சம்பந்தமாக—அரசால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு
—குழுவின் பரிந்துரைகள்மீது ஆணை பிறப்பிக்கப்
படுகிறது.

வணிகவரி மற்றும் அறநிலையத்துறை.

அரசாணை (பல்வகை) எண்: 109, நாள் 31-1-1983

தை 18, துந்துபி, திருவள்ளுவர் ஆண்டு 2014.

பார்வை :

அரசாணை (பல்வகை) எண்: 1573, வணிகவரி மற்றும்
அறநிலையத்துறை, நாள் 24-9-1979.

ஆணை

பரம்பரை அர்ச்சகர் முறை, இந்து சமய நிறுவனங்களில்
இருந்து வருவதை நீக்கவும், அதற்கு மாறாக தேவையான
கல்வித் தகுதிகளைக் கொண்டுள்ளவர்களை நியமிக்கவும்
1959-ம் ஆண்டு இந்து சமய மற்றும் அறக்கட்டளைகள் சட்டத்
திற்கு திருத்தம் ஒன்று 1970-ம் ஆண்டு தமிழ்நாடு சட்ட
மன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டத் திருத்
தத்தை எதிர்த்து சில மடாதிபதிகள் மற்றும் அர்ச்சகர்
களும் உச்ச நீதிமன்றத்தில் மனு செய்ததில், உச்ச நீதி
மன்றம் அம்மனுக்களை தள்ளுபடி செய்ததுடன், ஒரு திருக்
கோயிலின் ஆகமங்களில் குறிப்பிட்டபடிதான் அர்ச்சகர்
களை நியமிக்க முடியும், ஆகமத்திற்கு முரணாக அரசு கொண்டு
வரும் சீர்திருத்தம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்
26(1) பிரிவிற்கு முரண்பட்டதாகும் என்றும் கருத்து
தெரிவித்திருந்தது. மேலே கூறப்பட்டுள்ள கருத்தின் அடிப்
படையில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட
சட்டத் திருத்தத்தினை செயல்படுத்த முடியாது என்று
கருதப்பட்டதால் இந்திய அரசியலமைப்புச் சட்டம் தகுந்த
முறையில் திருத்தப்பட வேண்டும் என்று இந்திய அரசினை
தமிழ்நாடு அரசு வலியுறுத்தியது. அதற்காக இந்திய அரசிய
லமைப்புச் சட்டத்தில் 26-ஏ என்ற புதிய பிரிவினை சேர்க்க
வேண்டும் என்று 23-4-74-ல் சட்டமன்றத்தில் தீர்மானம்
நிறைவேற்றப்பட்டு, அவற்றினை இந்திய அரசுக்கு அனுப்பி
வைத்தது. இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்குத் திருத்தம்
கொண்டு வருவது குறித்து இந்திய அரசு சில ஆட்சேபணை
களை தெரிவித்திருந்தது. அந்த ஆட்சேபணைகளுக்கும்

பதில் கூறும் வகையில் தமிழ்நாடு அரசு கடிதங்கள் எழுதியும்
இந்திய அரசிடமிருந்து இது குறித்து முடிவான பதில் வராத
நிலையில், இது சம்பந்தமாக எடுக்கப்பட வேண்டிய
மேல் நடவடிக்கை குறித்து அரசு பரிசீலித்தது.

2. மேலும், அரசியலமைப்புச் சட்டத்தின் நோக்கமாக
சாதி பேதமின்றி எல்லோருக்கும் சமவாய்ப்பு அளிக்கப்பட
வேண்டுமென்று இருப்பதாலும் சமூக சீர்திருத்த நடவடிக்கை
யாக இந்து சமயத்தைச் சார்ந்த தகுதியுள்ளவர்களிடையே
யிருந்து, சாதி, இன உட்பிரிவு போன்ற வேறுபாடுகளின்றி
அர்ச்சகர்கள், பூசாரிகள் அல்லது ஏனைய உள்துறை
ஊழியர்கள் இந்து சமய நிறுவனங்களில் நியமிக்கப்பட வேண்டு
மென்று அரசு கருதுவதாலும் ஒரு வல்லுநர் குழு அமைத்து
அந்தக் குழு மேற்படி கருத்தை உச்ச நீதிமன்றத்தின் 14-3-72-ம்
நாளைய தீர்ப்பில் (நீதிப் பேராணை எண்கள் 70, 83, 437,
438, 439, 440, 441, 442, 443, 444, 13 மற்றும் 14/1971)
குறிப்பிட்ட விளக்கம், அரசியலமைப்புச் சட்டம் மற்றும் வேத,
ஆகம திருமுறை போன்ற தெய்வ வழிபாட்டு முறைகளுக்கு
உட்பட்டு எவ்வாறு செயல்படுத்துவது எனப் பரிசீலித்து
அரசுக்கு அறிக்கை தரவேண்டும் என அரசு முடிவெடுத்தது.

3. மேலே கண்ட முடிவிற்கேற்ப சென்னை உயர்நீதிமன்ற
முன்னாள் நீதிபதி திரு. எஸ். மகராஜன் அவர்களின் தலைமை
யின்கீழ், வேதம், ஆகமம், திருமுறை ஆகிய வழிபாட்டு முறை
களில் வல்லுநர்களாக உள்ள 8 பேர்களை வல்லுநர் குழுவின்
உறுப்பினர்களாக அரசு நியமித்தது. வல்லுநர் குழு தன்
அறிக்கையைத் தக்க பரிந்துரைகளுடன் சமர்ப்பித்துள்ளது.
அக்குழுவின் பரிந்துரைகளை அரசு கவனமாகப் பரிசீலித்த
பின், அதன் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டுள்ளது.

4. வல்லுநர் குழுவின் அறிக்கையில்
தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு, ஐந்தாண்டுக் காலம் தீவிரக்
கல்விப் - பயிற்சியும், செயல்முறைப் பயிற்சியும் அளிக்க
வேண்டுமென்றிருக்கிறது ;

மேலும், பயிற்சி சம்பந்தமாக சேர்க்கை விதிகள்,
பயிற்சிப் பாடத் திட்டம், தேர்வுத் திட்டம், பாடப் புத்த
கங்கள் முதலான அனைத்துக் காரியங்களையும் நிர்வ
கிப்பதற்கு, அறநிலையத்துறை ஆகம சபை ஒன்றை நிறுவ
வேண்டும் ;

இப்போது நடந்து வருகின்ற ஆகமப் பாடசாலைகள்
அனைத்தையும் ஒரே தரமான நிலைக்குக் கொண்டு வரும்
பொருட்டு அங்கு உள்ள சேர்க்கைமுறை கல்விமுறை தேர்வு
முதலியன அனைத்து அம்சங்களையும் முன்கூறிய ஆகம
[illegible] நிர்வகித்து வரவேண்டும் ;



செயல் திட்டத்தில் கூறியபடி வெற்றிகரமாகத் தேர்வை
முடித்து வருகின்ற அர்ச்சக மாணாக்கர்களுக்கு உடனே
வேலைக்கும் தகுந்த ஊதியத்திற்கும் உறுதியளித்து, பிற
எல்லா வசதிகளையும் செய்து தரவேண்டும் ;

அறநிலையத்துறை ஆகம நூல்களை உரையோடு வெளி
யிட்டு, மாணாக்கருக்குத் தேவையான புத்தகங்களையும்
அச்சிட்டுத் தரவேண்டும் ;

தமிழ் அர்ச்சனைப் பயிற்சியைக் கல்லூரிகளில் பாடத்
இட்டத்தின் பகுதியாகச் செயல்படுத்துவதோடுகூட, அற
நிலையத்துறை அஷ்டோத்தரம், சகஸ்ரநாமம் முதலிய
வற்றைத் தயாரித்து வெளியிட்டுக் கோயில்களில் கடைப்
பிடிக்கச் செய்யவேண்டும் ; மற்றும்

உள்துறை ஊழியர்களைப் பொறுத்தவரையில் முக்கிய
மாக பூசகர், பரிசாரகர் என்ற நிலையில் பணி புரிபவர்
களை, அவர்களுடைய பண்பாடு, பக்தி, ஆசாரம்
இவற்றை அனுசரித்துத் தேர்ந்தெடுக்கவேண்டும்;

ஆகமத்தில் சொல்லியபடி இவர்களுக்கும் தீட்சை அளிப்
பது அவசியம் என்றும் இக்குழு பரிந்துரை செய்திருக்கிறது.

எனவே, அறநிலைத்துறை ஆகம சபை நிறுவுவது, கல்விப்
பயிற்சி, செயல்முறை பயிற்சி அளிப்பது, பயிற்சிக்கான
சேர்க்கை விதிகள், பயிற்சிப் பாடத் திட்டம், தேர்வுத்
திட்டம், பாடப் புத்தகங்கள் முதலியவை சம்பந்தமாக்
தகுந்த வழிமுறைகளை வகுப்பதற்கு குழு ஒன்று அமைப்பது
அவசியமென்று அரசு கருதுகிறது. குழுவில் எத்தனை
பேர்கள் இருக்கவேண்டுமென்பதற்கும், இத்துறைகளில் சிறப்பு
அம்சம் பெற்றவர்களின் பெயர்களையும் இந்து சமய
அறநிலையத் துறை ஆணையர் அரசின் ஒப்புதலுக்கு அனுப்ப
வேண்டுமென்று கோரப்படுகிறது. இதுவன்றி வல்லுநர்
குழுவின் மற்றைய பரிந்துரைகளை செயல்படுத்துவதற்கு
தக்க நடவடிக்கைகள் எடுத்து, அரசின் அங்கீகாரம் வேண்டி
யிருப்பின், அவைகளுக்கு அங்கீகாரம் பெறலாம் [illegible]
ஆணையர் கோரப்படுகிறார்.

[1983 மார்ச் 28

## இணைப்பு IV

(59ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

1. முன்னுரை.

### சின்கோனாத் துறை.

### கொள்கை விளக்கக் குறிப்பு.

1.1. கடந்த 122 ஆண்டுகளாக, குனைன் சல்பேட், மற்றும் குனைன் ஹைட்ரோ குளோரைடு போன்ற கொய்னாப் பொருட்கள் குனிடின் சல்பேட், மருந்து மற்றும் நறுமணத் தைலங்கள் முதலியவற்றை உற்பத்தி செய்து வரும் முதுமையான சின்கோனாத் துறை, தமிழ்நாடு அரசின் ஒரு வணிக அமைப்பாகும். 2,000 நிரந்தரத் தொழிலாளர்களும், 2,030 தற்காலிகத் தொழிலாளர்களும் ஆக மொத்தம் 4,030 தொழிலாளர்கள் இத் துறையில் பணியாற்றி வருகின்றனர். இத்துறை தயாரிக்கும் பொருட்களுக்குத் தேவையான மூலப் பொருட்கள், நீலகிரி, கோயமுத்தூர் மாவட்டத்திலுள்ள ஆனைமலை, மதுரை மாவட்டத்திலுள்ள கொடைக்கானல் தாலூக்காவில் மேல் பழனி மலை ஆகிய இடங்களில் உள்ள இத்துறையின் தோட்டங்களிலேயே பயிரிடப்படுகின்றன. கோயமுத்தூர் மாவட்டம் ஆனைமலையிலுள்ள தொழிற்சாலையிலும் நீலகிரி மாவட்டம் நடுவட்டத்திலுள்ள தொழிற்சாலையிலும் அம்மூலப் பொருட்கள் பதனிடப்படுகின்றன.

1.2. துறையின் தொழிலாளர்களில், பெரும்பான்மையார் ஆதிதிராவிடர்கள் (60 சதவீதம்) (Adi D.:vida Sch:dul.d Cast s), பின்தங்கிய வகுப்பினர் (30 சதவீதம்) (B.ckwa·d Cl:ss s) ஆவர் என்பதைக் குறிப்பிடுவதில் இத்துறை பெருமையடைகிறது. சின்கோனாத் துறையின் நடவடிக்கைகள், இரு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. ஒரு பிரிவு மலேரியா நோயை ஒழிப்பதற்காக பயன்படுத்தப்படும் குனைன் சல்பேட் மருந்தையும், இதய நோய்களைக் குணப்படுத்த பயன்படும் குனிடின் சல்பேட் போன்ற உயிர் காக்கும் மருந்துகள் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. மற்றொரு பிரிவு, மருந்து மற்றும் நறுமணத் தைலங்களை தயாரிக்கிறது. மருந்து மற்றும் நறுமணத் தைல வகைத் தாவரங்களைப் பயிரிடும் பணியை, 1950 ஆம் ஆண்டு முதல் இத் துறை மேற்கொண்டுள்ளது. துறையின் பணிகளைப் பலதிறப்படுத்துவதற்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



[983 மார்ச் 28]

2. தயாரிப்பு :

சின்கோனாப் பொருட்கள் :

2.1. உலக நாடுகளின் தேவைகள், மற்றும் உள்நாட்டு தேவைகளுக்கேற்பச் சின்கோனாப் பொருட்களின் விற்பனை அமைந்து உள்ளது. இரண்டாம் உலகப் போரின்போது, இப்பொருள்களுக்கான தேவை அதிகமாக இருந்தது. போர் முடிந்ததும் இப் பொருள்களின் தேவை குறைந்து விட்டது. ஆனால் 1960 ஆம் ஆண்டிற்கும் 1970 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் இப்பொருள்களின் தேவை அதிகரித்தது. உலக நாடுகளில் கொய்னாப் பொருட்களின் விற்பனை சீராக அதிகரித்து வரும் நிலையில், நம் நாட்டில் மலேரியா நோய் மீண்டும் தோன்றி பரவி வருவதால், இந்திய அரசு, 1978 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் கொய்னாப் பொருட்களின் வெளிநாட்டு ஏற்றுமதிக்குத் தடை விதித்தது. மாநில அரசு பலமுறை வேண்டியதற்கிணங்க 1978–79, 1979–80, 1980–81, 1981–82 மற்றும் 1982–83 ஆண்டுகளில் மத்திய அரசு இப் பொருட்களை ஓரளவிற்கு ஏற்றுமதி செய்ய அனுமதித்தது. ஆனால் இத்தகைய உயிர்காக்கும் மருந்துகள் தடையேதுமின்றி நிலையாகக் கிடைக்க வேண்டுமென்று அனைத்து நாடுகளும் கருதுவதால் இவற்றை ஏற்றுமதி செய்வதற்குத் திடீரெனத் தடை விதிக்கப்பட்டதன் காரணமாக நீண்ட காலமாக நிலவிய அனைத்து நாடுகளுக்கான விற்பனை பெரிதும் பாதித்தது. மேலும் தொடர்ந்து ஏற்றுமதிக்குத் தடை விதிக்கப்பட்ட காலத்தில் அனைத்து நாடுகளிலும் விற்பனை செய்ய இயலாததால் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்வது கடினமாகிவிட்டது. எனவே கொய்னாப் பொருட்களின் ஏற்றுமதி மீதான தடையை முழுமையாக அகற்றிட மத்திய அரசை கேட்கப்பட்டுள்ளது.

[1983 மார்ச் 28

2.2. விற்பனை செய்யப்பட்ட கொய்னாப் பொருட்களின் அளவு, மற்றும் அவற்றின் மூலம் கிடைத்த வருவாய் ஆகியவற்றின் விவரம் பின்வருமாறு :—

| ஆண்டு. (1) | விவரம். (2) | | அளவு. (3) (கிலோ கிராமில்.) | வருவாய். (4) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|---|
| 1979–80 (உள்ளபடி) | உள்நாட்டு விற்பனை | .. | 2,828 | 23.39 |
| | வெளிநாட்டு விற்பனை | .. | 10,600 | 42.55 |
| | மொத்தம் | .. | 13,428 | 65.94 |
| 1980–81 (உள்ளபடி) | உள்நாட்டு விற்பனை | .. | 1,792 | 14.56 |
| | வெளிநாட்டு விற்பனை | .. | 1,600 | 17.42 |
| | மொத்தம் | .. | 3,392 | 31.98 |
| 1981–82 (உள்ளபடி) | உள்நாட்டு விற்பனை | .. | 1,746<br>*9,010 | 15.75 |
| | வெளிநாட்டு விற்பனை | .. | | .. |
| | மொத்தம் | .. | 1,746<br>*9,010 | 15.75 |
| 1982–83 (மதிப்பிடப் பட்டது) | உள்நாட்டு விற்பனை | .. | 2,200 | 18.00 |
| | வெளிநாட்டு விற்பனை | .. | 4,000 | 32.00 |
| | மொத்தம் | .. | 6,200 | 50.00 |
| 1983–84 (எதிர்பார்க் கப்படுவது) | உள்நாட்டு விற்பனை | .. | 2,200 | 18.00 |
| | வெளிநாட்டு விற்பனை | .. | 3,000 | 22.00 |
| | மொத்தம் | .. | 5,200 | 40.00 |

* சின்கோனா அல்கலாய்டு விற்பனை.



1983 மார்ச் 28]

2.3. கொய்னாப் பொருட்களின் விற்பனை விலையை, மருந்துகள் விலை கட்டுப்பாட்டு ஆணையின்படி இந்திய அரசு நிர்ணயிக்கிறது. இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட விலை, கொய்னாப் பொருட்களின் உற்பத்தி விலையை விட குறைவாக உள்ளதால், விற்பனை விலையை உயர்த்த வேண்டுமென்று மாநில அரசு இந்திய அரசைக் கேட்டுள்ளது. இது இந்திய அரசின் ஆய்வில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது:

| பொருட்களின் பெயர். (1) | | உற்பத்தி விலை. (2) | இந்திய அரசு நிர்ணயித்துள்ள விலை. (3) |
|---|---|---|---|
| | | (விலைகள் கிலோ கிராம் ஒன்றிற்கு ரூபாய்) | |
| 1. குனைன் சல்பேட் (Quinine Sulphate) | .. | 902·82 | 788·00 |
| 2. குனிடின் சல்பேட் (Quinidine Sulphate) | .. | 2,927·90 | 1,313·00 |
| 3. குனைன் ஹைட்ரோ குளோரைடு. (Quinine hydrochloride) | .. | 1981–82-ல் உற்பத்தி இல்லை. | 1,088·00 |
| 4. சின்கோனா பெப்ரிபியுஜ் (Cinchona febrifuge) | .. | 177·08 | .. |

மருந்து மற்றும் நறுமணத் தைலங்கள்:

2.4. மருந்து மற்றும் நறுமணத் தைலங்கள் ஆகியவற்றின் வாயிலாக கிடைக்கும் வருவாய் சீராக அதிகரித்து வருகிறது. தற்போதுள்ள நிலையிலேயே வருவாய் வீதத்தையும் அவற்றின் வளர்ச்சி வேகத்தையும் நிலைநிறுத்த முற்பட்டுவருகிறது:

| ஆண்டு. (1) | | விற்பனையின் அளவு. (2) (கிலோ கிராமில்.) | ஈட்டிய வருவாய். (3) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1980–81 (உள்ளபடி) | .. | 11,117 | 21·76 |
| 1981–82 (உள்ளபடி) | .. | 6,471 | 17·34 |
| 1982–83 (மதிப்பிடப்பட்டது) | .. | 12,180 | 31·05 |
| 1983–84 (எதிர்பார்க்கப்படுவது) | | 12,650 | 37·75 |

[1983 மார்ச் 28

மருந்து மற்றும் நறுமணத் தைலங்கள் உற்பத்தி விவரங்கள் வருமாறு :—

| பொருள்களின் பெயர். (1) | 1980–81 (உள்ள படி). (2) | 1981–82 (உள்ள படி). (3) | 1982–83 (திருத்திய மதிப்பீடு). (4) | 1983–84 (திட்ட மதிப்பீடு). (5) |
|---|---|---|---|---|
| | | (அளவுகள் கிலோ கிராமில்) | | |
| 1. யூகலிப்டஸ் தைலம் (சினியோல் அளவு) 70 சதவீதத்திற்கு மேல் (Eucalyptus oil Cineole content 70 per cent and above) | 632 | 1,393 | 1,500 | 1,500 |
| 2. யூகலிப்டஸ் தைலம் ஐ.பி. (Eucalyptus oil I.P.) | 939 | 2,056 | 2,500 | 2,500 |
| 3. ஜெரேனியம் தைலம். (Geranium oil) | 1,320 | 1,533 | 2,400 | 2,800 |
| 4. யூகலிப்டஸ் சிட்ரி யோடோரா தைலம் (Eucalyptus citriodora oil) | 4,430 | 3,304 | 3,500 | 3,500 |
| 5. ஜாவா சிட்ரோனெல்லா தைலம் (Java citronella oil) | 2,438 | 1,861 | 3,800 | 4,000 |
| 6. லெமென் கிராஸ் தைலம் (Lemongrass oil) | 103 | 45 | 45 | 30 |
| 7. பச்சோலி தைலம் (Patchouli oil) | 20 | 3 | 10 | 10 |
| 8. விண்டர்கிரின் தைலம். (Wintergreen oil) | .. | 30 | 40 | 40 |



1983 மார்ச் 28]

| பொருட்களின் பெயர் | 1980–81 (உள்ள படி) (1) | 1981–82 (உள்ள படி) (2) | 1982–83 (திருத்திய மதிப்பீடு) (3) | 1983–84 (திட்ட மதிப்பீடு) (4) |
|---|---|---|---|---|
| | | (அளவுகள் கிலோ கிராமில்.) | | |
| 9. சின்னமமம் தைலம் (Cinnamomum oil) | .. | 10 | 10 | 10 |
| 10. சினோமாஸ் களிம்பு. (Cinnomos) | 100 | 539 | 600 | 600 |
| 11. சின்ஸ்ப்ரே லிட்டர்களில். (Cinspray in litres) | 1,215 | 438 | 500 | 500 |
| 12. சின்பிரஸ் லிட்டர்களில். (Cinfresh in litres) | 25,850 | 33,500 | 40,000 | 40,000 |

பொதுமக்கள் விரும்புகின்ற சின்பிரஸ் சினோமாஸ் போன்ற புதிய பொருள்களை நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலைகள் மற்றும் விற்பனை நிலையங்கள் மூலமாக விளம்பரப்படுத்தி விற்பனையை விரிவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தனியார் ஏஜென்சி மூலம் விற்பனையைப் பெருக்க இயலுமா என்பதும் பரிசீலனையில் உள்ளது.

2.5. 100 கிராம் எடையுள்ள 56,000 குழாய்களில் ''சினோமாஸ்'' களிம்பு தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்திற்கு 1982–83 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது. மருந்து மற்றும் நறுமணத் தைலங்களின் தேவை மக்களிடையே ஓரே சீராக இருந்து வருகிறமையால் அப்பொருட்கள் மாநிலத்திலுள்ள, 55 தமிழ்நாடு காதி கிராப்ட் விற்பனை நிலையங்களில் 1–8–1982 முதல் 1983 பிப்ரவரி ஆரம்பம் வரை ரூ. 8,308.60-க்கு விற்பனை ஆகியுள்ளன.

மேலும் 1983 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் கண்காட்சியில் சின்கோனா பொருட்கள் ரூ. 17,935·25-க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

கற்பூரத் தைலம், கற்பூர வில்லைகள் தயாரிப்பு :

2.6. சின்கோனாத் துறையின் பல் திறத் திட்டத்தின் ஒரு பகுதியாக, நீலகிரி மாவட்டம் நடுவட்டம் என்னுமிடத்திலுள்ள மருந்து மற்றும் நறுமணத் தைலங்கள் தயாரிக்கும் தொழிற் சாலையில் 1980–81 ஆம் ஆண்டு முதற்கொண்டு கற்பூரத் தைலம் மற்றும் கற்பூர வில்லைகள் தயாரிக்கப்படுகின்றன. இவைகளின் உற்பத்தி நிறைவ்ளிக்கும் வ்கையில் உள்ளது. இதனை கீழ்வரும் அட்டவணையில் காணலாம் :

| பொருள் | 1980–81 (உள்ள படி). | 1981–82 (உள்ள படி). | 1982–83 (திருத்திய மதிப்பீடு) | 1983–84 (திட்ட மதிப்பீடு) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| கற்பூரத் தைலம் (கிலோகிராம்). Camphor oils | 31 | 57 | 140 | 150 |
| கற்பூர வில்லைகள் (எண்களில்). Camphor tablets. | 78,400 | 2,00,785 | 2,25,000 | 2,50,000 |

2.7. மாநிலமெங்கும் உள்ள திருக்கோவில்களுக்கு இத் துறையில் தயாரிக்கப்படும் கற்பூர வில்லைகள் விநியோகம் செய்யப்படுகிறது. துறையில் தயாரிக்கப்படும் இந்த இயற்கை கற்பூரம் நல்ல தரத்தைச் சேர்ந்தது.

3. மலைத் தோட்டங்கள் :

3.1. பல்வேறு உற்பத்தி பொருட்களைத் தயாரிக்கத் தேவையான மூலப் பொருட்களைப் பெற இத்துறையின் மலைத் தோட்டங்களில் அப்பயிர்களை பயிரிடுவதற்கு பல் வேறு பணிகளை இத்துறையே மேற்கொண்டுள்ளது. 2,051·03 ஹெக்டேர் பரப்புள்ள சின்கோனா நிலங்களையும் மற்றும் 1,493 02 ஹெக்டேர் பரப்புள்ள மருந்து மற்றும் நறுமணத் தைல வகைப்பயிர்கள் கொண்ட நிலங்களையும் இத்துறை தன்து நேரடி மேற்பார்வையில் கொண்டுள்ளது. அவற்றின் விவரம் பின்வருமாறு :—





| பயிர்கள். | நீலகிரி. | கோயம் புத்தூர் மாவட்டத் திலுள்ள ஆனைமலை. | மதுரை மாவட் டத்தி லுள்ள கொடைக் கானல். | மொத்தம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (நிலப்பரப்பு ஹெக்டேர்களில்) | | | |
| சின்கோனா | 477·32 | 1,573·71 | .. | 2,051·03 |
| மருந்து மற்றும் நறுமணத்தைலப் பயிர்கள் | 829.96 | 397·81 | 265·25 | 1,493.02 |
| மொத்தம் .. | 1,307·28 | 1,971·52 | 265·25 | 3,544·05 |

4. மலைத் தோட்டத் திட்டங்கள்.

4.1. 1981-82 ஆம் ஆண்டில் 134 ஹெக்டேர் நிலப் பரப்பில் புதிதாகவும், 20 ஹெக்டேர் நிலப்பரப்பில் பதியன் முறையிலும் சின்கோனா பயிரிடப்பட்டது. 1982-83 ஆம் ஆண்டில் அப்பயிர் 100 ஹெக்டேர் நிலப்பரப்பில் புதியதாகவும், 20 ஹெக்டேர் நிலப்பரப்பில் பதியன் முறையிலும் பயிரிடப்பட் டுள்ளது. இதே அளவில் 1983-84 ஆம் ஆண்டிலும் சின்கோனா பயிரிடப்படும். 1981 82 ஆம் ஆண்டில் 192·50 ஹெக்டேர் நிலப்பரப்பில் மருந்து மற்றும் நறுமணத் தைலப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டன. அது 1982–83 ஆம் ஆண்டில் 213·50 ஹெக்டேர் நிலப்பரப்பிலும் 1983-84 ஆம் ஆண்டில் 168 ஹெக்டேர் நிலப்பரப்பிலும் பயிரிடப்படும். மதுரை மாவட்டம் கொடைக்கானலிலுள்ள மேல்பழனியில் (பேரிஜம்) 65·25 ஹெக்டேர் பரப்பிலும், பெருமாள் மலையில் (பெரும் பள்ளம்) 200 ஹெக்டேர் நிலப்பரப்பிலும் ஜெரேனியம் பயிரி டப்பட்டுள்ளது, குறிப்பிடத்தக்கதாகும். 1982-83 ஆம் ஆண்டில் புதிதாக ஜெரேனியம் பயிரிடப்படும் குறியீட்டு அள வான 56 ஹெக்டேர் முடிக்கப்பட்டுள்ளது. இயற்கை நீர் நிலை சுற்றுப்புற பாதுகாப்புக் குழுவின் அறிவுரையின் படி, பேரிஜத்தில் புதிதாக பயிரிடும் வேலை மேற்கொள்வ தினால் பெரியகுளம் நகராட்சிப் பகுதிக்கு குடிநீர் வழங்கும் ஏரி அசுத்தம் அடைகிறது என்ற காரணத்தினால் பேரிஜத்தில் புதிதாக ஜெரேனியம் பயிரிடும் வேலை மேற்கொள்ள இயல

வில்லை. அக்குடிநீர் ஏரி அருகாமையில் ஜெரேனியம் பயிர் செய்யப்பட்டுள்ள 25 ஹெக்டேர் நிலப்பரப்பினை மீண்டும் வனத்துறைக்கே ஒப்படைக்க வேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளது. அவ்விடத்தில் தேவையான புதிய நிலங்கள் இத்துறைக்கு அளிக்கப்பட்டபின் மேற்கொண்டு ஜெரேனியம் பயிரிடும் பணி மேற்கொள்ளப்படும். எனவே பேரிஜத்தில் 40·25 ஹெக்டேர் ஜெரேனியம் நிலப்பரப்பை பராமரிக்கும் வேலை மட்டும் நடைபெறும்.

மேலும், மலைப்பகுதிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஜாவா சிட்ரோனெல்லா புல் என்னும் நறுமணத் தைலப்பயிர் சாகுபடி செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டம் 1979ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் ஆரம்பிக்கப்பட்டது. 1981–82ஆம் ஆண்டில் 15 ஹெக்டேர் நிலப்பரப்பிலும், 1982-83 ஆம் ஆண்டில் 20 ஹெக்டேர் நிலப்பரப்பிலும் இப்பயிர் பயிரிடப்பட்டுள்ளது. அது 1983–84 ஆம் ஆண்டில் 40 ஹெக்டேர் நிலப்பரப்பில் பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது.

5. ஆராய்ச்சி:

5.1. அதிக விளைச்சலைக் கொடுக்கக்கூடிய மருந்து மற்றும் நறுமணத் தைலப் பயிர்களையும் நோய் எதிர்ப்பாற்றலைக் கொண்ட சின்கோனா மரங்களையும் ஏனைய மருந்து மற்றும் நறுமண செடிவகைகளையும் வளர்க்கும் முறைகளை மேம்படுத்துவதில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சின்கோனா மருந்து மற்றும் நறுமணத் தைலப் பயிர்கள் ஆகியவற்றைக் குறித்து முறையான தீவிர ஆராய்ச்சிகள் நடத்த, ஆராய்ச்சி நிலையம் ஒன்று நிறுவ அரசு அனுமதித்துள்ளது. 1976 ஆம் ஆண்டு முதல் இவ்வாராய்ச்சி நிலையம் செயலாற்றி வருகிறது. 1—10—1982 முதல் ஆராய்ச்சி அலுவலர் அமர்த்தப்பட்டு பணியாற்றி வருகிறார். 1981-82 ஆம் ஆண்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து சின்கோனா மற்றும் மருந்து மற்றும் நறுமணத் தைலப் பயிர்களைப் பயிரிடுதல் குறித்து ஆராய்ச்சிகள் தொடங்கப்பட்டு அப்பணி முன்னேற்றமாக உள்ளது. இவ்வாராய்ச்சிப்பணிக்காக செலவிடப்படும் தொகையை, தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் சின்கோனாத் துறை ஆகிய இரு அரசு நிறுவனங்களும் சமமாக ஏற்றுக்கொள்ளும். குனைனிலிருந்து குனிடின் தயாரிப்பது பற்றிய ஆராய்ச்சிப் பணி லக்னோவிலுள்ள மத்திய மருந்தாய்வுக் கூடத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த மத்திய மருந்தாய்வுக்கூடம் மேற்சொன்ன ஆராய்ச்சிப் பணியை 1—6—1982 முதல் ஆரம்பித்துள்ளது.





6. தொழிலாளர் நலம் :

6.1. தொழிலாளர் இத்துறையின் உற்பத்திப் பணிகளில்
பெரும் பங்காற்றுகின்றனர். மலைத் தோட்டங்கள் அமைக்
கும் திட்டங்கள் ஆகிய செவ்விய வகையில் செயற்படுவதில்
நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்குமிடையே நல்லுறவு
நிலவுவதற்கும் தொழிலாளர் நலனைக் காப்பதற்கும் அதிக
கவனம் செலுத்தப்படுகிறது. ஆடவர் மகளிர் ஆகிய
இருபால் தொழிலாளர்களுக்குச் சமமான ஊதியம் வழங்கப்
படுகிறது. விலைவாசிப் புள்ளியின் அடிப்படையில் அகவிலைப்
படி வழங்கப்படுகிறது. வயது வந்த தொழிலாளர்களுக்கு
நாளொன்றுக்குக் கூலியாக ரூ. 9·78 வழங்கப்படுகிறது.
தொழிலாளர்களுக்காக 1,281 தொழிலாளர் குடியிருப்புகள்
உள்ளன. இத்துறையில் தொழிலாளர்களின் எண்ணிக்கை
உயர்ந்துள்ளமையால் புதிய குடியிருப்புக்களைக் கட்ட
வேண்டியதன் அவசியத்தையும் பழைய குடியிருப்புக்களைப்
புதுப்பிக்க வேண்டியதன் அவசியத்தையும் கருத்திற்கொண்டு
புதிய தொழிலாளர் குடியிருப்புக்கள் கட்டுவதற்கான திட்டம்
முறையாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. 50 தொழி
லாளர் குடியிருப்புகள் மற்றும் 2 பணியாளர் குடியிருப்புகள்
கட்டுவதற்காக ரூ. 10 இலட்சம் 1982-83 ஆம் ஆண்டில்
நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதுபோல 1983-84
ஆம் ஆண்டில் 50 தொழிலாளர் குடியிருப்புகள் கட்டுவதற்கு
ரூ. 10 இலட்சமும், 75 குடியிருப்புகளுக்கு மின்வசதி
பொருத்த ரூ. 2 இலட்சமும், 1983-84 ஆம் ஆண்டில்
பகுதி-2 திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
இதுவரை 366 தரமான தொழிலாளர் குடியிருப்புகளை
இத்துறை கட்டி முடித்துள்ளது. மேலும் 195 குடியிருப்பு
கள் கட்டும் பணி செவ்வனே நடைபெற்று வருகிறது. புதிய
தொழிலாளர் குடியிருப்புகளில் மின் வசதி, நீர்க் கழிப்பிட
வசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆகிய வசதிகள் செய்து
கொடுக்கப்பட்டுள்ளன. பல்வேறு பிரிவுகளிலுள்ள துறையின்
மருந்தகங்கள், மற்றும் ஆனைமலை பிரிவிலுள்ள அனைத்து வசதி
களுடன் கூடிய மருத்துவ மனை ஆகியவற்றின் வாயிலாக எல்லா
மருத்துவ வசதிகளும் இத்துறையின் தொழிலாளர்களுக்கு அளிக்
கப்பட்டு வருகின்றன. நீலகிரியில் கூடலூரிலுள்ள அரசு மருத்
துவ மனையில் சின்கோனாத் தொழிலாளர்களுக்கென்றே
5 படுக்கைகள் தனியாக ஒதுக்கப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றியங்
களிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடமாடும்
பிரிவு தொழிலாளர்களுக்குத் தேவையான நல்வாழ்வு மருத்துவ
வசதிகளைச் செய்து கொடுக்கின்றது.

7. துறையின் நிதி நிலைமை :

7.1. அனைத்து நாடுகள் அங்காடியில் விலை ஏற்ற இறக்கம் மற்றும் கொய்னாப் பொருட்களின் ஏற்றுமதிக்கு இந்திய அரசு விதித்த தடை ஆகியவற்றின் விளைவாக இத்துறையின் பொருளாதாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டது. 1980–81ஆம் ஆண்டில் மூலதனத்தின் மீதான வட்டித் தொகை ரூ 41.98 இலட்சம் செலுத்தப்பட்ட பிறகு ரூ. 5.02 இலட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது. 1981–82ஆம் ஆண்டிலும் மூலதனத்தின் மீதான வட்டி ரூ. 56.18 இலட்சம் செலுத்தப்பட்ட பிறகு ரூ. 15.59 இலட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது. 1982–83 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டின்படி மூலதனத்தின் மீதான வட்டி ரூ. 71.51 இலட்சம் செலுத்திய பின்னர் ரூ. 15 இலட்சம் (மதிப்பிடப்பட்டது) இழப்பாகவும், 1983-84ஆம் ஆண்டில் திட்ட மதிப்பீட்டின்படி மூலதனத்தின் மீதான வட்டி ரூ. 88.68 இலட்சம் செலுத்திய பின்னர் ரூ. 15 இலட்சம் இழப்பு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1981–82ஆம் ஆண்டில் ரூ. 1,04.66 இலட்சங்கள் தொழிலாளர்களுக்கு ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது. இது 1982-83 ஆம் ஆண்டு ரூ. 1,15.52 இலட்சமாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 1982ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாளின்படி நிலையான சொத்துக்கள் ரூ. 5.56 கோடி பண்டகசாலை இருப்புகள், முடிக்கப்பட்ட பொருள்கள், நடைபெற்று வரும் பணிகள், சில்லரை கடன்கள் ஆகியவற்றின் வாயிலாக ரூ. 3.29 கோடி உட்பட இத்துறையின் சொத்துக்கள் மதிப்பு ரூ. 8.85 கோடியாகும்.

8. இத்துறையின் வளர்ச்சித் திட்டங்கள் :

8.1. சின்கோனா பெப்ரிபியூஜிலிருந்து குனைன் சல்பேட் குனிடின்சல்பேட் ஆகியவற்றை தயாரித்தல், தேயிலை கழிவிலிருந்து '' காபின் '' (Caffine) தயாரித்தல் போன்ற பணிகள் இத்துறையின் அண்மைக்கால முக்கிய சாதனைகளாகும். 1982-83 ஆம் ஆண்டில் 1,000 கிலோ எடையுள்ள '' காபின் '' தயாரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. குடும்ப நலத் திட்டத்திற்காகத் தயாரிக்கப்படும் கருத்தடை மாத்திரைகளில் உள்ள கார்டிசோன் ஸ்டிராய்டு ஹார்மோன் போன்றவற்றைத் தயாரிக்கத் தேவைப்படும் மூலப்பொருளான '' டயஸ்ஜெனின் '' என்ற பொருளைத் தயாரித்தல், கொசுக்களை விரட்டும் ''சினோமாஸ்'' என்ற களிம்பையும், '' சின்ஸ்ப்ரே '' என்னும் தெளிப்பான் மருந்தையும் தரையைத் தூய்மையாக்கப் பயன்படும் கிருமிநாசினி '' சின்பிரஷ் '' என்ற தெளிப்பான் மருந்தையும் தயாரித்து விற்பனை செய்தல், ''சினோரமா'', '' தொட்டபெட்ட மிஸ்ட்'' ஆகிய வாசனை திரவியங்களைத் தயாரித்தல் போன்றவை, உற்பத்தியைப் பல்திறப்படுத்தும் இத்துறையின் பணிகளாகும்.



காதி மற்றும் கிராமிய விற்பனை நிலையங்களின் மூலமாகவும் இத்துறையின் பொருட்களை விற்பனை செய்ய 1982-83 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கப்பட்டுள்ளது. மாநிலமெங்குமுள்ள 55 காதி கிராப்ட் விற்பனை நிலையங்களில் இத்துறையின் பொருட்கள் விற்பனைக்கு உள்ளன. சென்னையிலும் மற்றுமுள்ள மாவட்டங்களில் நடைபெறும் கண்காட்சிகளில் பங்கெடுத்து, பொருட்களை விற்பனை செய்வதன் வாயிலாக இத்துறையின் நடவடிக்கைகள் மேலும் பரவ வழி செய்கிறது.

8.2. தற்போது கையிருப்பிலுள்ள கொய்னாப் பொருட்களின் அளவை கருத்திற்கொண்டு ஆனைமலையிலுள்ள கொய்னா தொழிற்சாலையில் சின்கோனாப் பட்டை பதனிடப்படும் பணி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இப்போது கையிருப்பிலுள்ள கொய்னாப் பொருட்கள் யாவும் விற்பனை செய்த பின்னர், உற்பத்திப்பணி மீண்டும் தொடரப்படும்.

இதற்கிடையில் நீலகிரி, கோயம்புத்தூர் மற்றும் பெரியார் மாவட்டங்களின் கிராமிய குழந்தைகளுக்கு இலவசமாக பல்பொடி வழங்குவதற்காக, பல்பொடி தயாரித்து வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. தற்போது 30 கிராம் எடையுள்ள 6 இலட்சம் பாக்கெட்டுகள் மாதந்தோறும் தயாரிக்கப்பட உள்ளன.

8.3. மேற்குறிப்பிட்டுள்ள பல்வேறு வளர்ச்சிப் பணிகள், மேம்பாட்டுத் திட்டங்கள், ஆகியவை திட்டப்பணிகளின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றின் விவரம் வருமாறு:—

மாநில திட்டப்பணிகள் :

(1) சின்கோனாப் பயிரை முனைப்புச் சாகுபடி மற்றும் பதியன் முறையில் பயிரிடுதல்.

(2) மருந்து மற்றும் நறுமணத் தைலச் செடி வகைகளை வாணிப முறையில் பயிரிடுதல்.

(3) மருந்து மற்றும் நறுமணத் தைலச் செடி வகைகளின் வளர்ச்சிக்காக, முனைப்பு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுதல்.

(4) இத்துறையின் தோட்டப்பிரிவுகளுக்கான அலுவலகக் கட்டிடம், மற்றும் தொழிலாளர் குடியிருப்புகள் கட்டுதல்.

(5) தொழிற்சாலையின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக, தொழிற்சாலைக்குத் தேவையான கருவிகள் வாங்குதல்.

(6) தேயிலை கழிவிலிருந்து ''காபின்,, தயாரித்தல்.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் .

இத்திட்டத்தின் கீழ் ஜாவா சிட்ரோனெல்லா புல் பயிரிட்டு அதனினின்று தைலம் எடுத்தல் பணி செயல்படுத்தப்படுகிறது. 1982-83ஆம் ஆண்டில் 40 ஹெக்டேர் நிலப்பரப்பில் இப்பயிர் பயிரிடப்பட்டுள்ளது.

மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம் :

மத்திய அரசு பொறுப்பேற்கும் மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சில பயனளிக்கும் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அவைகள் வருமாறு :

(1) டயஸ்கோரியா பயிரிடுதல், அதிலிருந்து ஆண்டொன்றுக்கு 3 டன் டயஸ்ஜெனின் தயாரித்து பதப்படுத்துவதற்குத் தொழிற்சாலை நிறுவுதல். இதுவரை 120·50 ஹெக்டேர் நிலப் பரப்பில் டயஸ்கோரியா பயிரிடப்பட்டுள்ளது. 1983-84ஆம் ஆண்டில் 20 ஹெக்டேரில் டயஸ்கோரியா பயிரிடப்படும். டயஸ்ஜெனின் உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலை விரைவில் நிறுவப்படும்.

(2) பேரிஜம், பெருமாள்மலை (பெரும்பள்ளம்) ஆகிய இடங்களில் ஜெரேனியம் பயிரிடுதல்.

9. திட்டப் பணிகளின் கீழ் செலவிடப்பட்டுள்ள மொத்த தொகையின் விவரம் வருமாறு :—

| ஆண்டு. | மாநிலத் திட்டப் பணிகள். | மலைப்பகுதி மேம் பாட்டுத் திட்டம். | மேற்கு மலைத் தொடர் மேம் பாட்டுத் திட்டம். | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1980-81 (உள்ளபடி). | 42.02 | 1.98 | 23.82 | 67.82 |
| 1981-82 (உள்ளபடி). | 67.65 | 4.17 | 32.28 | 104.10 |
| 1982-83 (திட்ட மதிப்பீடு). | 54.97 | 6.52 | 46.98 | 108.47 |
| 1982-83 (திருத்திய மதிப்பீடு). | 49.09 | 5.70 | 29.22 | 84.01 |
| 1983-84 (திட்ட மதிப்பீடு). | 56.23 | 5.21 | 48.83 | 110.27 |



10. வரவு-செலவுத் திட்டம் :

| விவரங்கள். | 1981-82 (உள்ளபடி). | 1982-83 வ.செ.தி. மதிப்பீடு. | 1982-83 திருத்திய மதிப்பீடு. | 1983-84 வ.செ.தி. மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| கோரிக்கை எண். 25—சின்கோனா— 320 தொழில்கள். | | | | |
| நெறிமுறை படுத்துதல். | 11.31 | 11.73 | 14.12 | 14.20 |
| மலைத் தோட்டங்கள் (நீலகிரி, ஆனைமலை). | 62.76 | 58.91 | 66.12 | 67.67 |
| தொழிற்சாலைகள் (மருந்து மற்றும் நறுமணத் தொழிற்சாலை நடுவட்டம்—அரசு கொய்னா தொழிற்சாலை. ஆனைமலை). | 11.38 | 14.30 | 13.32 | 14.57 |
| விற்பனை .. | 1.60 | 1.58 | 2.25 | 1.89 |
| திட்டங்கள் (ஆராய்ச்சி திட்டங்கள் மாநிலத் திட்டங்கள், மத்திய அரசுத் திட்டங்கள்). | 85.31 | 92.29 | 87.76 | 88.75 |
| வட்டி .. | 53.00 | 67.00 | 71.51 | 88.68 |
| மொத்தம் .. | 225.36 | 245.81 | 255.08 | 275.76 |

[1983 மார்ச் 28

கோரிக்கை எண். 55— 526. மூலதனச் செலவு.

| விவரங்கள். | 1981–82 (உள்ளபடி.) | 1982–83 வ.செ.தி. மதிப்பீடு. | 1982–83 திருத்திய மதிப்பீடு. | 1983–84 வ.செ.தி. மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| கட்டிடங்கள் | 27.19 | 37.80 | 18.76 | 44.00 |
| இயந்திர தளவாடங்கள். | 2.63 | 2.00 | 2.00 | 2.00 |
| மொத்தம் | 29.82 | 39.80 | 20.76 | 46.00 |
| பெரு மொத்தம். | 255.18 | 285.61 | 275.84 | 321.76 |



1983 மார்ச் 28]

## இணைப்பு V

(59-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### வனத்துறை

### கொள்கை விளக்கக் குறிப்பு

### 1983–84

1.1. புவியியல் அமைப்பிற்கு அணியாக அமைவது காடுகள். அவை பல்வேறு வழிகளில் நமக்கு உதவுகின்றன. மண் அரிப்பை குறைக்கின்றன. ஆற்றோட்டத்தை முறைப்படுத்துகின்றன. நிலத்தடி நீர்வளத்தை மேம்படுத்துகின்றன. வெள்ளத்தைக் கட்டுப்படுகின்றன. மண் வளத்தையும் ஈரத்தன்மையையும் பாதுகாக்கின்றன. தட்பவெப்ப நிலையை சீராக்குகின்றன. மழைக்கு ஆதாரமாக அமைகின்றன. பரந்த வகையிலான செடி கொடிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கின்றன. மக்களுக்கு உணவு, எரி பொருள் ஆகியவற்றை நல்குகின்றன. பல்வேறு தொழில்களுக்கு மூலப்பொருட்களை வழங்குகின்றன. மனித இனத்தின் மகிழ்ச்சிக்கு, வளர்ச்சிக்கு இணையிலா வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றன.

1.2. ஆனால் சமீப காலங்களில் மக்கட் தொகை பெருக்கத்தின் காரணமாக காடுகளிலிருந்து கிடைக்கும் வெட்டுமரம், விறகு, தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருள்கள் ஆகியவற்றின் தேவை அதிகரித்து வருவதும், பல ஆண்டு காலமாக பல்வேறு காரணங்களினால் காடுகள் குறைந்து வருவதும், உயிரின வாழ்க்கைச் சூழல் சுற்றுபுறச் சூழல் ஆகியவற்றைச் சீராக வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் நாளுக்கு நாள் வளர்ந்துவருவதும் இன்று அரசுக்குப் பெரும் பொறுப்பை ஏற்படுத்தியுள்ளன.

1.3 மலைகளிலும், தனியார் காடுகளிலும் மரங்கள் பெருமளவில் கட்டுப்பாடின்றி வெட்டப்படுவதைத் தவிர்த்து காடுகளைப் பாதுகாக்கும் பொருட்டு குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன. அக்குழுவில் மாவட்ட ஆட்சித் தலைவர், வனத்துறை வருவாய்த்துறை, மண் வளப் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் உள்ளனர். காடுகளை அழிவினின்றும் பாதுகாக்க அரசு உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க இக்குழு உதவுகிறது.

வனப் பரப்பு.

2. கடந்த ஆண்டு மொத்த வனப்பரப்பு 21.89 லட்சம் எக்டேராக இருந்தது. இது 1982–83 ஆம் ஆண்டில் 21,95 லட்சம் எக்டேராக உயர்ந்துள்ளது. காப்பு வனம், காப்பு நிலம் தனியார் காடுகள் ஆகியவற்றின் கீழ் உள்ள பகுதிகள் முறையே 18.12 லட்சம் எக்டேர், 3'33 லட்சம் எக்டேர்' 0.50 லட்சம் எக்டேர்களாகும்.

காடுகளிலிருந்து கிடைக்கும் வருவாயும் காடுகள் தொடர்பான செலவினங்களும்:—

3.1. 1982–83 ஆம் ஆண்டில் காடுகளிலிருந்து ரூ. 19.34 கோடி வருவாய் கிடைக்குமென மதிப்பிடப்படுகிறது. இந்த வருவாய் 1983–84 ஆம் ஆண்டில் ரூ.21,41 கோடியாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வருவாயின் பெரும் பகுதி சந்தன மரத்திலிருந்தும், காடுகளை அடிப்படையாகக் கொண்டு இயங்கிவரும் தொழில்களுக்கு மூலப்பொருட்களை வழங்குவதன் மூலமும்தான் கிடைக்கிறது.

3.2. காடுகள் என்பதன் கீழ் 1981–82 ஆம் ஆண்டில் ஏற்பட்ட செலவு ரூ.19.76 கோடியாகும். 1982–83 ஆம் ஆண்டில் வரவு செலவுமதிப்பீடு முதலில் ரூ.23.82 கோடி மேலும் திருத்த மதிப்பீடுபடி எதிர்ப்பார்க்கப்படும் செலவு ரூ. 26.06 கோடியாகும். 1983-84 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 25.78 கோடியாகும் இது திருத்திய மதிப்பீட்டில் மேலும் உயரலாம். செலவில் பெரும் பகுதி, காடுகளின் உற்பத்திப் பொருட்களை அதிகரிக்க வேண்டுமென்ற நோக்குடன் காடுகளின் மேம்பாட்டிற்காகச் செய்யப்படும் மூலதன முதலீடு குறித்ததாகும். வெட்டு மரம், விறகு மரம், தொழில்களுக்கான மரம், ஏனைய இன்றியமையாத உற்பத்திப் பொருள்கள் ஆகியவற்றின் தேவைகளை நிறைவு செய்ய, காப்பு வனங்களின் உள்ளேயும், வெளியேயும் பெருமளவில் மரங்கள் வளர்க்கும் பணிமேற் கொள்ளப்பட்டுள்ளது.

4. 2127 கி.மீ. பரப்பில் சாலையோரங்கள் நெடுகவும் கால்வாய் கரையோரங்கள் நெடுகவும், இருப்புப் பாதை நெடுகவும், மரங்கள் வளர்க்கப்படுவதுடன் பொது மக்களுக்கு வழங்குவதற்காக 270 லட்சம் மரக்கன்றுகள் வளர்க்கப் படுகின்றன. இத்துடன் 1983–84 ஆம் ஆண்டில் மொத்தம் 52,329 எக்டேர் பரப்பளவில் மரங்கள் வளர்க்கப்பட வேண்டுமெனத் திட்டமிடப்பட்டுள்ளது. காடு வளர்ப்பு என்பது நீண்டகாலத் திட்டமாகும். மரங்கள் முழுமையாக வளர நீண்ட காலம் பிடிக்கும். யூகலிப்டஸ், மிளாறு, கருவேல மரம் போன்ற



குறுகிய கால மர வகைகளை வளர்ப்பதற்காகக் கடந்த திட்ட காலங்களில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள், அரசு மேற் கொண்ட தனிக்கவனத்தாலும் மும்முர நடவடிக்கையாலும் நல்ல பலனை அளிக்கத் தொடங்கி உள்ளன.

திட்டப்பணிகள் செயல்படுத்தப்படுதல்.—

1983-84 ஆம் ஆண்டுக்கான திட்ட ஒதுக்கீடு வருமாறு.—

| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| மாநில அரசுத் திட்டப்பணிகள் — | .. | 1396.90 |
| மண்வளப் பாதுகாப்புப் பணிகள்— | .. | 75.77 |
| மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் | .. | 163.65 |
| மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டம் | .. | 105.15 |
| மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் | .. | 32.91 |
| | | 1774.38 |

வனப்பாதுகாப்பு.

6.1. வன வளத்தைத நன்முறையில் பாதுகாக்க வேண்டுமென்ற நோக்குடன், நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் வட்டத்தில், மாநில எல்லைப் பகுதியிலுள்ள பணியாளர்களுக்கு உதவும் வகையில், ஒரு வனப் பாதுகாப்புப் படை அமைக்கப்பட்டுள்ளது. இதில் வருவாய்த் துறை, காவல் துறைப்பணியாளர்களும் உள்ளனர். இவர்கள், காடுபடுபொருள்கள் கடத்தப்படுவதைத் தடுப்பதுடன், வனநிலங்களை ஆக்கிரமிப்பவர்களையும் கைது செய்வார்கள். இதைத் தவிர, இம்மாநிலத்தில் பரவலாக 9 வனப்பாதுகாப்புப் படைகள் ஒவ்வொன்றும் ஒரு உதவி வனப்பாதுகாவலர் தலைமையில் இயங்கி வருகின்றன. தவறுகள் நிகழ்வதற்கு அதிக வாய்ப்புள்ள முக்கியமான இடங்களிலும், முக்கிய வனப்பகுதியிலும் தற்போது 68 சோதனைச் சாவடிகள் உள்ளன.

6.2. தீ விபத்து, மரங்களை அனுமதியின்றி வெட்டிச் செல்லுதல், காடுபடு பொருட்களைக் களவாடல் முதலியவற்றினின்று வனங்களைக் காப்பதில் அரசு அதிக கவனம் செலுத்துகிறது. இயற்கைச் சீற்றங்களிலிருந்தும் ஏனைய வழியில் காடுகள் அழிக்கப்படுவதினின்றும் காடுகளைப் பாதுகாக்க, இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. காடுகளைத் தீயிலிருந்து நவீன முறையில் பாதுகாக்க, மேல் பழனியில் இருவழி செய்தி தொடர்புச் சாதனம் (Wakie Takie) அமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுப் பணி முடிந்துள்ளது. 1982–83 ஆம் ஆண்டில் ரூ. 32.46 லட்சம்

செலவில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். காடுபடு பொருட்கள் களவாடப்படுவதற்கு வாய்ப்பு இருக்கக் கூடிய பகுதியில் உள்ள பணியாளர்களுக்கு 24 ஜீப்புகளையும், சுடுபடைகலன்களையும் வழங்க அரசு அனுமதித்தது. இத்திட்டத்தின் கீழ் 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 14.57 லட்சம் செலவிடக் கருதப்பட்டுள்ளது. இதில் கோடைக்கானல் பகுதியில் தீயிலிருந்து வனங்களைப் பாதுகாக்க ரூ. 2.83 லட்சம் சலவில் எடுக்கப்பட இருக்கும் நடவடிக்கையும் சேரும். காடுபடு பொருட்களைத் திருடி எடுத்துச் செல்வதைத் தடுப்பதற்காக முக்கியமான இடங்களில் மேலும் 18 சோதனைச் சாவடிகளும் ஏற்படுத்தப்படும்.

6.3. சென்னையில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அதிகமாக உள்ளதால், மற்ற மாநிலங்களில் இருந்து பிடிக்கப் பட்ட பாம்புகளின் தோல்கள் சென்னைக்குக் கடத்தி வரப்பட்டு பதப்படுத்தப்படுகின்றன. 1982 அக்டோபரில் கடத்தப்பட்ட 12,406 பாம்புத் தோல்கள் வனத்துறைப் பாதுகாப்புப் படையினரால் சென்னையில் கைப்பற்றப்பட்டன. அவற்றின் விவரம் கீழ்வருமாறு: —

| | | |
|---|---|---|
| (1) இக் பால்டேனரி எருக்கஞ்சேரி சென்னை. | 2183 | (பச்சைப்பாம்புத் தோல்கள் சுண்ணாம்புத் தொட்டியில் இருந்தவை.) |
| (2) சுக்கூர் டேனரி, மாதவரம் | 4572 | (பச்சைப் பாம்புத் தோல்கள், சுண்ணாம்புத் தொட்டியில் இருந்தவை |
| (3) மணி டேனரி, எருக்கஞ்சேரி | 5651 | (பச்சைப் பாம்புத் தோல்கள் சுண்ணாம்பு தொட்டியில் இருந்தவை |
| மொத்தம் | 12406 | |

கடத்தப்பட்டவர்களிடமிருந்து இணக்கக் கட்டணமாக ரூ.13,500-ம் தோல்களை ஏலம் விட்டதில் ரூ. 62,030-ம் வனத் துறைக்கு வருவாயாகக் கிடைத்துள்ளது.

6.4. 1981-82 ஆம் ஆண்டில் சந்தனமரம் தொடர்பான 331 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இக்குற்றங்களில், கைப்பற்றப்பட்ட 61,899.330 கி.கி எடையுள்ள சந்தன மரங்களின் மதிப்பு ரூ. 19,88,605.60 ஆகும்.

6.5. ஏனைய விலை மதிப்புள்ள வெட்டு மரங்கள் தொடர்பான 278 குற்றங்கள் 1981-82-ஆம் ஆண்டில் கண்டு பிடிக்கப்பட்டன. இவ்வழக்குகளில் கைப்பற்றப்பட்ட வெட்டு மரங்களின் மதிப்பு ரூ 8,30,388 ஆகும்.



6.1 வனச்சட்டத்தை மீறியதாக 1980-81 மற்றும் 1981-22 ல் தொடரப்பட்ட வழக்குகள் பற்றிய விவரம் கீழ் வருமாறு:—

| வருடம். | வழக்குகளின் எண்ணிக்கை. | வசூல் செய்யப்பட்ட இணக்கக் கட்டணம். | நீதி மன்றத்தில் பதிவான வழக்குகளின் எண்ணிக்கை. | தண்டிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1980—81 | 36,757 | 22,34,012 | 7 334 | 2,283 |
| 1981—82 | 39,942 | 40,20,34 | 7,446 | 1,459 |

6.7. வனச் செல்வத்தை பாதுகாப்பதில் முறைகேடுகள் நடைபெற்றதற்கு பொறுப்பான வன அலுவலர் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 1980 ஆம் ஆண்டு முதல் 1982 டிசம்பர் திங்கள் முடிய மொத்தம் 3024 நபர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 1,149 அலுவலரைப் பொறுத்தவரை, தக்க தண்டனை வழங்கப்பட்டது. மீதியுள்ள 1,875 அலுவலர் மீது மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை பரிசீலனையிலுள்ளது.

## வனத்துறை நிலங்களில் ஏலக்காய் பயிரிடுதல்.

6.8. வனநிலங்களில் ஏலக்காய் பயிரிடுவதற்கு, 20 ஆண்டு காலத்திற்கு அதிகமான காலத்திற்கு முன்னாளில் குத்தகைக்கு விடப்பட்டது. இரண்டு தடவையாக தடவை ஒன்றிற்கு 20 ஆண்டு காலத்திற்கு புதுப்பிக்க அனுமதிக்கப்பட்டது. ஒவ்வொரு தனி நபருக்கும் 50 ஏக்கர் நிலத்தை ஏலக்காய் பயிரிட குத்தகைக்குக் கொடுக்கப்பட்டது. அதன் பிறகு தனி நபருக்கு 25 ஏக்கராகக் குறைக்கப்பட்டது. 1979-இல் ஏலக்காய் குத்தகைக் கொள்கையை நன்கு, பரிசீலனை செய்து குத்தகை காலத்தினை 15 ஆண்டுகள் எனவும் மேலும் 5 ஆண்டுகளுக்கு ஒரு புதுப்பித்தலுக்கும் வகை செய்யலாம் என முடிவு செய்தது. மேலும் ஏலக்காய் பயிரிடுவதற்கு குத்தகை நிலத்தின் அளவு 2 எக்டேருக்கு மேல் இருக்கக் கூடாது எனவும், ஏலக்குத்தகை தாரர் இறந்து போனல் குத்தகை நிலம் வரின் வாரிசுதாரருக்கு தானாக மாற்றப்பட்டு விடக்கூடாது என்றும், மூலக் குத்தகை தாரரின் வாரிசுதாரர் அந்தப் பகுதியிலேயே வசிப்பவரா என்றும் ஏலக்காய் பயிர் செய்தலையே முழுதொழிலாக கொண்டிருக்க வேண்டும் என்றும், இதே நிபந்தனைகள் குத்தகை புதுப்பித்தலுக்கும் பொருந்தும் என்றும் ஆணை பிறப்பித்து இருந்தது. மேற்படி ஏலக் குத்தகை ஆணையானது ஏலக்காய் பயிரிடுவதையே நம்பி இருக்கின்ற சிறு விவசாயிகளுக்கும் மற்றும் நிலமில்லாத ஏழைகளுக்கும் பெருமளவில் உதவியாக இருக்கும்.

மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் அரசின் புது

கொள்கைப்படி ஏலக்குத்தகைதாரர்களைத் தேர்ந்தெடுக்க கீழ்க் கண்ட நபர்கள் அடங்கிய குழு நியமிக்க தற்போது அரசு ஆணை பிறப்பித்துள்ளது.—

(1) மாவட்ட வன அலுவலர் (District Forest officer)
(2) வருவாய் கோட்டாட்சித் தலைவர் (Revenue Divisonal officer).
(3) வனச்சரசர் (Ranger)
(4) வட்டாட்சியர் (Tahsisdar)
(5) அரசால் நியமிக்கப்படும் மூன்று அலுவல் சார்பற்றவர்கள்.

ஏலக்காய் குத்தகைதாரர் சிறு விவசாயிதானா என்பதையும் அவர் அந்த பகுதியிலேயே வசிப்பவரா என்பதையும் வருவாய்த் துறை பிரதிநிதிகள் பதிவேடுகள் மற்றும் விசாரணை மூலம் ஆய்வு செய்து தகுதிய ஏலக்குத்தகைதாரர்களை தேர்ந்தெடுப்பர். அவ்வாறு இட ஒதுக்கீடு செய்யும்போது. மொத்த இடங்களில் 18 விழுக்காடு ஆதிதிராவிட மக்களுக்கும்/மலைசாதியினருக்கும் போதுமான எண்ணிக்கையில் தகுதியுள்ள மனுக்களுக்கு கொடுக்கப்படவேண்டும். என்றும், அவ்வாறு தகுதியுள்ள போதுமான மனுக்கள் ஆதிதிராவிட மக்கள்— மலைசாதியினரிடமிருந்து பெறப்படவில்லையானால், இந்த இட ஒதுக்கீட்டை மற்ற நபர்களுக்குக் கொடுக்கலாம் என்றும் தற்போது வெளியிட்டுள்ள அரசாணையில் அரசு கூறியுள்ளது. குத்தகைக்காலம் 15 ஆண்டுகளாகவும் அதனைத் தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு ஒரு புதுப்பித்தலுக்கும் வகை செய்யப்பட்டும் இருக்கும். முன்பு ஆணையிட்டதைப் போல ஏலக்காய் பயிரிட நிலத்தின் அளவு 2 எக்டேருக்கு மேல் இருக்கக் கூடாது

சிறு மற்றும் இடைநிலை விவசாயிகள் மற்றும் ஆதிதிராவிட மக்கள்/மலைச்சாதி வகுப்பினர் ஆகியோருக்கு ஏலக்காய் பயிரிட போதிய நிதி வசதி இல்லாமல் இருக்கக் கூடுமாதலாலும் ஏலக்காய் விளைச்சலின் வருவாய் 5 ஆண்டுகள் கழித்துதான் பலன் கொடுப்பதாலும் வர்த்தக வங்கிகள் மூலமாகவும், கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும் ஏலக் குத்தகை விவசாயிகளுக்கு ஏலக்காய் பயிரில் அதிக மூலதனம் செலுத்த, நிதி உதவி செய்யும்படி சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிறார்கள்.

வருவாய் தரும் மரங்கள்.

7.1. சந்தனமரங்களும், காடுபடு பொருள்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்களுக்கு அவசியமான மிலாறு வகை மரங்களும் மரக்கூழ் தயாரிப்பதற்கான மென் மரங்களும், ரப்பர் மரங்களும் இத்துறையின் வருவாயில் பெரும் பகுதியை ஈட்டித்தருகின்றன.

சந்தன மரம்.

7.2. சந்தனமரங்கள் இயற்கையாகப் பீட பூமிகளிலும், வடாற்காடு, சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர் மாவட்டங்களிலுள்ள மலைப் பகுதிகளிலும், நீலகிரி, தென் ஆற்காடு,



திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் குறைந்த அளவிலும் வளர்கின்றன. பட்டுப் போன சந்தனமரங்கள் மட்டுமே, மூன்றாண்டுகளுக்கொரு முறை வெட்டியெடுக்கப்படுகின்றன. வெட்டப்படும் சந்தன மரங்கள் கிடங்குகளுக்குக் கொண்டு வரப்பட்டு, சுத்தப்படுத்தப்பட்டு ஏலத்தில் விற்கப்படுகின்றன. சந்தன மரங்களை ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசு தடை விதித்ததின் காரணமாக, ஏலத்தில் விடப்படும் சந்தன மரங்களின் விலை குறைந்ததால் இத்துறைக்குக் கிடைக்க வேண்டிய வருவாய், பெருமளவு குறைந்தது. இவ்வரசு மத்திய அரசுக்கு இது குறித்து அடிக்கடி வேண்டுகோள் விடுத்தும், இது முடிவுறாமலுள்ளது. அயல்நாடுகளுக்குச் சந்தன மரங்களை ஏற்றுமதி செய்வதற்கு அனுமதியளித்து 1983—84 ஆம் ஆண்டில் ஏற்றுமதிக் கொள்கை மாற்றியமைக்கப்படுமாயின் இவ்வாண்டு அதிக அளவில் வருவாய் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

7.3. செயற்கை முறையில் சந்தன மரங்கள் வளர்க்கும் பணியும் ஆண்டுத் திட்டப் பணியில் மேற்கொள்ளப்பட்டது. 1982—83—ஆம் ஆண்டில், 140 எக்டேர் பரப்பளவில் சந்தன மரங்கள் வளர்க்கப்படும். திருப்பத்தூரில் சந்தனக் கட்டைகளை வைப்பதற்காக அமைக்கப்பட்ட கிடங்குகளில் பாதுகாப்புக்காக இரட்டைப் பூட்டு முறை அமுலில் உள்ளது. சேலத்தில் சந்தனக் கட்டைகளைச் சேமித்து வைப்பதற்கா கூரையுடன் கூடிய கிடங்கு ஒன்றையும் கட்டும் பணி இவ்வாண்டு மேற்கொள்ளப் படும். 1983—84 ஆம் ஆண்டில் 150 எக்டேர் பரப்பளவில் இயற்கை முறையிலும், செயற்கை முறையிலும் சந்தன மரங்கள் வளர்க்கப்படும்.

7.4. திருப்பத்தூர் கோட்டத்தில் சந்தனத் தைலம் தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வடாற்காடு மாவட்டம், வாணியம்பாடி வட்டத்திலுள்ள தெக்குப்பட்டு கிராமத்தில் மேற்குறிப்பிட்ட நோக்கத்திற்காக 9.25 ஏக்கர் பரப்பளவுள்ள இடம் கையகப் படுத்தப்பட்டுள்ளது. ஆயத்த நிலை அடிப்படையில் செயல் படுவதற்காக, இப்பணி 'டான்சி' நிறுவனத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

காடுபடுபொருட்களை அடிப்படையாகக் கொண்ட தொழில் களுக்கு மிலாறு வகை மரங்களும் மென் மரங்களும் வழங்குதல்.

7.5. காடுபடு பொருட்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்களுக்கு கற்பூரத் தைல மரங்கள், தைலமரங்கள் (யூகலிப்டஸ் கிராண்டிஸ்), (யூகலிப்டஸ் ஹைபிரிட்) பட்டை உரித்த மிலாறு மரங்கள், மிலாறுப் பட்டைகள், மூங்கில் முதலிய மூலப் பொருள்கள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. இத்தகைய மூலப்பொருள்களை வழங்குவதன் மூலம், அரசின் வருவாய் அதிகரித்துள்ளது. 1981—82 ஆம் ஆண்டில், மூலப் பொருட்களை விற்பனை செய்ததிலிருந்து கிடைத்த வருவாய் ரூ. 4.86 கோடியாகும்.

[1983 மார்ச் 28

7.6. 2,30,000 டன் மூலப்பொருட்களை வழங்கியதற்காக, 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 5.47 கோடி வருவாய் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1983-84 ஆம் ஆண்டில், வருவாய் சுமார் ரூ. 5.80 கோடியாக் இருக்கும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

7.7. தொழிற்சாலைகளில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் தேவையை ஈடுசெய்வதற்காக, மாநிலத் திட்டப் பணி, மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் கீழ் மரக்கூழ் தயாரிப்பதற்குரிய மரங்கள் வளர்க்கப்படுகின்றன. தொழிற்சாலைகளுக்குத் தேவையான மரங்கள் 1983-84 ஆம் ஆண்டில் 3,950 எக்டேர் பரப்பளவில் வளர்க்கப்படும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், அரசினர் ரப்பர் தோட்டங் களும், அரசினர் ரப்பர் தொழிற்சாலைகளும்.

8.1. வனவளம் நிறைந்துள்ளதும், இரு பருவ மழைகளினால் பெருமளவு மழையைப் பெற்று வளமாகத் திகழ்வதுமான கன்னியாகுமரி மாவட்டத்தில், 4,800 எக்டேர் பரப்பளவில் ரப்பர் மரங்களை அரசு பயிரிட்டுள்ளது. சுமார் 2,300 எக்டேர் பரப்பளவிலுள்ள ரப்பர் மரங்களிலிருந்து ரப்பர் பால் வடித்தல் பணி நடைபெற்று வருகிறது. 1981—82 ஆம் ஆண்டு வரை அரசு, சுமார், 15.00 கோடி ரூபாய் செலவிட்டு உள்ளது. ரப்பர் விற்பனை மூலம் கிடைத்த வருவாய் சுமார் 11.75 கோடி ரூபாயாகும். சில ரப்பர் மரங்கள், ரப்பர் பால் வடித்தெடுக்கும் நிலையை இன்னும் எய்தவில்லை.

8.2. கீரிப்பாறை, பெருஞ்சாணி ஆகிய இடங்களில் ரப்பர் தொழிற்சாலைகள் இரண்டு நடைபெறுகின்றன. கீரிப்பாறையிலுள்ள தொழிற்சாலையில், ரப்பர் ஷீட்டுகள், க்ரேப்பு ரப்பர்கள் (Crepe rubber) அடர்த்தியான ரப்பர் பால் (Concentrated latex) முதலிய ரப்பரால் செய்யப்படும் பல பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பெருஞ்சாணியிலுள்ள தொழிற்சாலையில், ரப்பர் பாளங்கள் (Rubber sheets) மட்டுமே உற்பத்தி செய்யப்படுகின்றன. கீரிப்பாறை தொழிற்சாலையின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்காக, அடர்த்தியான ரப்பர் பாலைத் (Concentrated latex) தயாரிக்கும் எந்திரம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. மற்றுமொரு கிரேப்பிங் பாட்டரியை (Battery) நிறுவும் பணி முடிவுறும் நிலையிலுள்ளது. இந்த எந்திரம் விரைவில் உற்பத்தியைத் தொடங்கும்.

8.3. மேற்கு ரப்பர் வட்டத்தில் அடர்த்தியான ரப்பர் பால் எடுக்கும் இயந்திரங்கள் (Latex Concentrato ) இரண்டு நிறுவ நடவடிக்கை எடுத்துள்ளோம் மத்திய அரசும் இந்த இயந்திரங்களை இறக்குமதி செய்யத் தேவைப்படும் ரூ. 15.30 லட்சம் அந்நியச் செலாவணியை அனுமதித்துள்ளது. இந்த இயந்திரங்கள் விரைவில் வாங்கி நிறுவப்படும்.



1983 மார்ச் 28]

8.4. ரப்பர் மரம் நடுதல், உற்பத்தி, நிர்வாகம் குறித்த நவீன தொழிற்நுட்பவியலுக்கேற்ப அரசு ரப்பர் தோட்டங் களையும், அரசு ரப்பர் தொழிற்சாலைகளையும் நல்ல முறை யில் பராமரிக்க, கோட்டயம் ரப்பர் வாரியத்தின் தேர்ச்சி பெற்ற பணியாளர்களைக் கொண்டு ஆலோசனைப் பணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

8.5. பெருமைக்குரிய இத்திட்டத்தில் சுமார் 2,500 தொழி லாளர்கள் உள்ளனர். அரசு ரப்பர் தோட்டங்களில் உள்ள தொழிலாளர்கள் அண்டை மாநிலமான கேரளத்தில் உள்ள ரப்பர் தோட்டத் தொழிலாளர்களைவிட அதிக ஊதியங்களைப் பெற்று வருகின்றனர். இத்தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி, மின்வசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர், பள்ளிக்கூடங்கள், மருத்துவ வசதிகள், குழந்தைகள் காப்பகங்கள், மருந்தகங்கள் முதலிய அடிப்படை வசதிகள் பலவற்றை அளித்துள்ளோம் என்பதையும், ஆண்டுதோறும் கட்டிடங்கள் முதலியவை கட்டு வதன் மூலம் மேலும் பல வசதிகளைத் தொடர்ந்து அளித்து வருகிறோம் என்பதற்காக நாம் பெருமை கொள்ளலாம். ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்காக இதுவரையிலும் 974 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

8.6. கடந்த ஆண்டில் பல வனத்துறை அதிகாரிகளும், தொழிலாளர்களும் இத்துறையில் பயிற்சி பெற்றுள்ளனர். ஆலோசனைக் குழுவின் மூலம் பயிற்சித் திட்டத்தை 1983-84ம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தத் திட்டமிடப்பட்டு உள்ளது.

8.7. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசின் ரப்பர் தோட்ட நிறுவனம் தன்னிச்சையாக செயல்படும் ஒரு கழகமாக அமைக்கப்பட வேண்டுமென்ற எண்ணம் சிறிது காலமாக அரசின் கவனத்தில் இருந்து வந்தது. தீவிர பரிசீலனைக்குப் பின்னர் அரசின் ரப்பர் தோட்டத்தினைத் தமிழ்நாடு ரப்பர் தோட்டக் கழகமென மாற்றி அமைக்க அரசு அண்மையில் ஆணைப் பிறப்பித்துள்ளது.

முந்திரி.

9. தென்னாற்காடு, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, ராம நாதபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள பெரும்பான்மையான முந்திரித் தோட்டங்கள் தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத் தைச் சேர்ந்தவையாகும். செங்கல்பட்டு, தென்னாற்காடு, திருச்சிராப்பள்ளி, ராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் உள்ள முந்திரித் தோட்டங்களில் ஒரு பகுதியை வனத்துறை பராமரித்து வருகிறது. வனத்துறைத் தோட்டங் கள், தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம், உழவர்கள் ஆகி யோருக்கு அதிக விளைச்சல் தரும் முந்திரி வகைகளை வழங்கு வதற்காக இத்துறை ஏற்படுத்திய பெரிய விதைபடா முந்திரி நாற்றங்கால் (Giant Cashew Clonal Nurse y) 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1 ஆம் நாள் முதல் தமிழ்நாடு வனத்

தோட்டக் கழகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. இக்கழகத்தின் கீழ் தற்சமயம் 23 243 எக்டேர் முந்திரி தோட்டமாக உள்ளது. 1975 இல் முந்திரி மகசூல் எக்டேர் ஒன்றுக்கு சராசரி 30 கிலோவாக இருந்தது. 1982 இல் சராசரி மகசூல் சுமார் 90 கிலோவாக உயர்ந்துள்ளது. இந்த உற்பத்தித் திறன் உயர்வுக்கு முக்கிய காரணங்கள் இக்கழகம் தீவிரமாக முந்திரி சேகரம் செய்ததும், மகசூலை நல்ல முறையில் பாதுகாத்து, வேளாண்மை செய்து வந்ததும் ஆகும்.

மரங்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு மழை நீரைத் தேக்கி மண் கரைகள் அமைத்தல், உரம் இடுதல், களைகள் வெட்டுதல், வேர் பறித்து அப்புறப்படுத்துதல், ஆகாசப் பதியன் கன்றுகளை நட்டு (air layering) தோட்டங்களை உருவாக்குதல் ஆகியவைகளைத் தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது. நம் கைவசம் உள்ள மொத்தப் பரப்பிலிருந்து 14, 00 எக்டேரில் முந்திரி காடுகளின் உற்பத்தியை 10 ஆண்டுகளில் எக்டேர் ஒன்றுக்கு 600 கிலோவாக உயர்த்தும் நிமித்தம், உலக வங்கியிலிருந்து கடன் வாங்கும் பொருட்டு ஒரு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டம் சரிவர நிறைவேற்றப் பட்டால் முந்திரியிலிருந்து கிடைக்கும் தற்போதைய வருமானம் சுமார் ரூ. 100 லட்சங்களாக இருப்பது 10 ஆண்டுக் காலத்தில் ரூ. 6 2 லட்சங்களாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விளைச்சலை அதிகரிக்க தற்போதுள்ள முந்திரி தோட்டங்களில் மும்முர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1981—82 இல் 219 எக்டேர்களில் முந்திரி பயிரிடப்பட்டது. 1982—83 இல் ரூ. 5.35 லட்சம் செலவில் 250 எக்டேர்களில் முந்திரி பயிரிடப்படும். 1983—84 இல் 1,117 எக்டேர்களில் ரூ 10.35 லட்சம் செலவில் மும்முர முந்திரி வளர்ப்புப் பணி மேற்கொள்வதுடன் 180 எக்டேர்களில் முந்திரி பயிரிடக் கருதப் பட்டுள்ளது.

காடுபடு சிறு பொருள்கள்.

10.1. பழங்குடியினர் மற்றும் வனங்களிலும் அதைச் சுற்றிலும் வாழும் மக்களின் பொருளாதார வளர்ச்சியில் காடுபடு சிறு பொருள் முக்கியப் பங்கு வகிக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு புளியமரம், செப்புக்காய் (Gallnut) சீயக்காய் மரங்கள் ஆகியான இத்திட்டத்தின் கீழ் வளர்க்கப் படுகின்றன. காடுபடு சிறு பொருள் கிடைக்கக்கூடிய காடுகளை வளர்க்க ஆறாவது திட்டத்தில் ரூ. 75.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 7) எக்டேர்களில் மும்முர வளர்ப்புப் பணிகளை மேற்கொள்வ டன் 1982—83 இல் 823 எக்டேர்களில் ரூ. 13.16 லட்சம் செலவில் மரம் வளர்க்கப்படும். 1983—84 இல் 960 எக்டேர்களில் ரூ. 13.78 லட்சம் செலவில் மரம் வளர்க்கக் கருதப்பட்டுள்ளது. இதில் 750 எக்டேர்களில் மேற்கொள்ளப்படும் மும்முர வளர்ச்சிப் பணியும் அடங்கும்.





காடுபடு சிறு பொருள் குறித்த குழு.

10.2. இத்துறையில் உள்ள ஒப்பந்த முறையைப் படிப்படி யாக நீக்கும் நோக்குடன் பல்வேறு காடுபடு பொருள் குத்தகை கள் தமிழ்நாடு வனத்துறை சட்டக் கோவையின் 130 ஆம் பிரிவைச் சேர்ந்த விதித் துறைகளின் கீழ் பெரிய அளவிலான பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கும், கூட்டுறவுச் சங்கங் களுக்கும் விடப்படுகின்றன. இதற்கான மற்றொரு நட வடிக்கையாக 1981-82 இல் மூங்கில் வெட்டுக் காடுகளை துறையே வெட்டி எடுப்பதற்கு அரசு ஆணைகள் பிறப்பித் துள்ளது. மூங்கில் வெட்டுக் காடுகள் பொது ஏலத்தில் விற்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது. பொருளாதார வகையில் சாத்தியமானவிடத்தும் இயன்ற இடங்களிலும் மூங்கில் வெட்டுப் பணிகளை துறையே மேற்கொள்கிறது.

10.3. பொதுவாக சிறு காடுபடு பொருள்களின் குத்தகைப் பெரிய அளவிலான பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் முதலிய வற்றிற்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஒதுக்கப்படுகின்றன. பெரிய அளவிலான பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது கூட்டுறவுச் சங்கங்கள் இக்குத்தகையை ஏற்றுக்கொள்ள முன் வராவிட்டால் அரசுக் வருவாய் இழப்பு ஏற்படுவதைத் தவிர்ப் பதற்கும் காடுபடு பொருள்கள் வீணாவதையும் அவற்றுக்குச் சேதமேற்படுவதையும், தடுப்பதற்கும் இவை பொது ஏலத்தில் விற்கப்படுகின்றன. சிறு காடுபடு பொருள் (Minor Forest produce) விற்பனை மூலம் வனத் துறைக்குக் கீழ்க்கண்டவாறு ஆண்டுக்கு ஆண்டு அதிக வருமானம் பெறப்படுகிறது—

| | |
|---|---|
| 1981–82 | ரூ. 69.57 லட்சம். |
| 1982–83 | ரூ. 92.00 லட்சம், |
| 1983–84 | ரூ. 112.00 லட்சம் (எதிர் பார்க்கப்படுகிறது.) |

சிறு காடுபடு பொருள்களிலிருந்து அரசுக்கு முழு வருவாயும் கிடைப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய அப்பொருள் களில் வணிகம் செய்வது தொடர்பான பல்வேறு முறைகளை விரிவாக ஆராய்வதற்கு அரசு, திருவாளர்கள் டி. ஏ. எஸ். பிரகாசம், இ.ஆ.ப., எஸ். பார்த்தசாரதி, இ. ஆ. ப., ஏ. எம். முகமது உசேன், இ. வ.ப.,எம். கணேசன் ஆகியோரைக்கொண்ட ஓர் ஆய்வுக் குழுவை அமைத்துள்ளது. ஆய்வுக் குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

10.4. காடுபடு பொருள்களை அனைத்தையும் எடுப்பதில் ஆந்திர பிரதேச வனத்துறை பின்பற்றும் முறை, நடைமுறை களை ஆராய்வதற்காக ஆந்திர பிரதேசத்திற்கு வனத்துறை உதவிப் பாதுகாவலர் ஒருவரையும், சரகர் ஒருவரையும், அனுப்பி, ஆய்வு நடத்தி அவர்கள் அளித்துள்ள அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

தேக்கு மற்றும் கடின மரங்கள்.

11. வெட்டு மரங்களில் மிக மதிப்பு வாய்ந்தது தேக்கு மரமாகும். இது பல்வேறு காரியங்களுக்கு அதாவது கட்டிடங்கள், மேசை நாற்காலிகள், பிளைவுட், ரயில் பெட்டிகள், கப்பல் கட்டுமானம் முதலிய வற்றிற்குப் பயன்படுத்தப்படுகிறது. இம் மாநிலத்தில் வன வளத்தைப் பெருக்க ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ் தகுந்த இடங்களில் தேக்கு மற்றும் ஏனைய கடின மரவகைகள் வளர்க்கப்படுகின்றன. தேக்கு மற்றும் ஏனைய கடின மர வகைகளின் வளர்ப்புக்காக ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 25 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1982-83 இல் ரூ. 6.28 லட்சம் செலவில் 480 எக்டேர் பரப்பில் மரங்கள் வளர்க்கப்படும். 1983–84 இல் ரூ. 7.69 லட்சம் செலவில் 480 எக்டேர் பரப்பில் மரங்களை வளர்க்கக் கருதப் பட்டுள்ளது.

மென்மரம்.

12. தற்போது இம்மாநிலக் காடுகளில் தீக்குச்சி தயாரிப் பதற்குத் தேவையான மென்மரம் மிகக் குறைவாகவே கிடைக்கின்றது. பெரும்பான்மையான மென்மரங்கள் அந்த மாணிலிருந்தும் மற்ற மாநிலங்களிலிருந்தும் தருவிக்கப் படுகின்றன. இம்மாநிலத்தில் பெரும்பான்மையான பகுதிகளில் போதுமான மழையின்மை காரணமாக மென்மர வகைகளை வளர்ப்பதற்கான வாய்ப்புகளும் குறைவு. எனினும், மென்மர வகைகளை அதிகமாக வளர்ப்பதற்கும், பிற மாநிலங்களை நம்பி யிருப்பதைக் குறைப்பதற்கும். மென்மர பணி திட்டத்தின் கீழ் இருக்கின்ற தகுதியான பகுதிகளில் தேர்ந்த தீக்குச்சி மரவகைகளை (மென்மரம்) வளர்க்கிறது. இத்திட்டத்தின் கீழ், 1982–83 ஆம் ஆண்டில் ரூ. 1.10 லட்சம் செலவில் 120 எக்டேர் பரப்பில் மரங்கள் வளர்க்கப்படும். 1983—84 ல் ரூ. 1.10 லட்சம் செலவில் 124 எக்டேர் பரப்பில் மரங்களை வளர்க்கக் கருதப்பட்டுள்ளது.

விறகு மரங்கள்.

13. மக்களின் அதிகரித்து வரும் விறகு மரத் தேவைகளை நிறைவு செய்வதற்காக இத்துறை ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ் வனப் பகுதிகளிலும், வனப் பகுதிக்கு அப்பாலும் விரைவில் வளரும் விறகு மரங்களை வளர்க்கிறது. இதற்காக ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 177.00 லட்சம் ஒதுக்கப்பட்டது. 1982–83இல் ரூ. 62.09 லட்சம் செலவில் 4,760 எக்டேர் பரப்பில் விறகு மரங்கள் வளர்க்கப்படும். 1983-84 இல் ரூ. 79.52 லட்சம் செலவில் 4,275 எக்டேர் பரப்பில் விறகு மரங்களை வளர்க்கக் கருதப்பட்டுள்ளது. விறகுகளுக்காக காட்டுப் பகுதிகளில் மரங்கள் வெட்டுவது நிறுத்தப் பட்டுள்ளது.



காகிதக் கூழ் மரங்கள்.

14. இம்மரங்கள் இம்மாநிலத்திலுள்ள மரம் சார்ந்த தொழிற் சாலைகளுக்குக் காகிதக் கூழ் வழங்குவதற்கென்று வளர்க்கப்படு கின்றன. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு மாநிலத் திட்டத்தின் கீழ் இத்திட்டத்திற்காக ரூ. 200 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

1982-83 ஆம் ஆண்டில், மாநிலத் திட்டப் பணியின் கீழ் ரூ. 44.48 லட்சம் செலவில், 1,574 எக்டேர் பரப்பளவிலும் மத்திய அரசுத் திட்டத்தின் கீழ், ரூ. 13.12 லட்சம் செலவில் 1,100 எக்டேர் பரப்பளவிலும் இவ்வகை மரங்கள் வளர்க்கப் படும். 1983–84 ஆம் ஆண்டில் இவ்விரு திட்டங்களின் கீழும் ரூ. 68.07 லட்சம் செலவில் 2,650 எக்டேர் பரப்பளவில் மரங்கள் வளர்க்கக் கருதப்பட்டுள்ளது.

சமூகக் காடு வளர்ப்பு.

15.1. முக்கிய சமுதாய வனத்திட்டம் சுவிடன், அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் (Swedish Internationol DeJelopment Authority) நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டப் பணியின் கால அளவு (1981–82 முதல் 1985–86 வரை) ஐந்தாண்டுகளாகும். இத்திட்ட மூலதனச் செலவு ரூ. 45 கோடியில், ரூ. 10 கோடி அடுத்து வரும் திட்டத்தின் முதலாவது ஆண்டிற்குச் செலவு செய்வதாக இருக்கும். 1982-83 ஆம் ஆண்டில் 34,670 எக்டேர் பரப்பளவில் செறிவாகவும், 1,775 கி. மீ. நீளத்திற்குச் சாலையோர நெடு கிலும் கன்றுகள் நடப்படும். 247 லட்சம் கன்றுகள் வளர்க்கப் பட்டு அளிக்கப்படும். இதன் வகையிலான செலவு ரூ. 796.34 லட்சமாகும். 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 846.86 லட்சம் செலவில் நிறைவேற்றக் கருதப்பட்டுள்ள பணிகள் வருமாறு—

(1) 27,530 எக்டேரில் செறிவாக நடுவது.

(2) 1,925 கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலையோர நெடுகில் நடுவது.

(3) 209 லட்சம் கன்றுகளை வளர்த்து வழங்குவது.

15.2. செறிவு நடுகையின் கீழ் உள்ள மொத்த நிலப்பரப்பு, 1982-83 ஆம் ஆண்டைக் காட்டிலும் குறைவானதென்றாலும், அந்த ஆண்டில் வளர்த்த மரங்களின் எண்ணிக்கையும் இந்த ஆண்டில் வளர்க்கும் மரங்களின் எண்ணிக்கையும் ஏறக்குறைய ஒரே அளவாகவே இருக்கும், ஏனெனில், ஒரு கன்றுக்கும் மற் றொரு கன்றுக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைப்ப தன் மூலம் நடவுப் பகுதிகளில் நடும் கன்றுகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தப்படவுள்ளது. சுவீடன் நாட்டு நிதி உதவியுடன் தமிழ் நாட்டில் செயல்படுத்தப்படும் மேற்படி சமூகக் காடு வளர்ப்புத் திட்டம் செயல்படும் முறையை ஆய்வு செய்யவும்,

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் உள்ள சிரமங்களைக் கண்டறியவும், முன்னேற்றத்தைக் காணவும், ஏழு பேர் கொண்ட சுவீடன் நாட்டுக் குழு, 1982 டிசம்பர் திங்களில் தமிழ் நாட்டில் சுற்றுப் பயணம் செய்தது. இத்திட்டத்தைச் செயல்படுத்தும் முறையும், கிராமங்களில் இத்திட்டத்திற்கு இருக்கக் கூடிய வரவேற்பு பற்றியும், ஆய்வு செய்யும் நிறுவனங்களுடனும், அரசு செயலர்கள் மற்றும் அலுவலரோடும் பின்னர் சென்னையில் விவாதங்கள் நடத்திய சுவீடன் நாட்டுக் குழு, இத்திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டில் இதுகாறும் செய்யப்பட்ட வேலைகளின் முன்னேற்றம் குறித்து திருப்தியும் பாராட்டுதலும் தெரிவித்துள்ளது.

15.3. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள சமூகக் காடு வளர்ப்புத் திட்டம், மக்கள் இயக்கமாக மாறினால்தான், வெற்றிபெற இயலும். சமூகக் காடு வளர்ப்புத் திட்டங்களின் கீழ் பொதுமக்களும் இத்திட்டத்தைச் செயலபடுத்துவதில் படிப்படியாக ஈடுபடுத்தப் படுகின்றனர். வேறு காரியங்களுக்குத் தேவைப்படாத கிராம சமுதாய நிலங்கள், சமூகக் காடு வளர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. கிராமப்புற மக்களின் தேவைகளான விறகு, சிறு மரங்கள், வேளாண்மைக் கருவிகள், கால்நடைத் தீவனம் ஆகியவற்றின் தேவையை இது நிறைவு செய்கிறது. தங்களுடைய சொந்த நிலங்களில் மரங்களை வளர்க்கும் பொது மக்களுக்கு இத்திட்டத்தின் கீழ் ஊக்கத் தொகை அளிக்கப்படுகிறது. காப்பு வனங்களுக்கு வெளியே மரங்களை வளர்ப்பதன் மூலம் காப்பு வனங்களையே நம்பி இருப்பதைக் குறைப்பதே இதன் நோக்கம் ஆகும். சாலையின் ஓரங்கள், கால்வாய் கரைகள், இருப்புப் பாதையை ஒட்டிய நிலங்கள் ஆகியவற்றிலும் ஏனைய காலி நிலங்கள் அனைத்திலும் மரங்கள் வளர்ப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். காடுகளை ஏற்படுத்தல், பராமரிப்பு, பாதுகாப்பு காடுபடு பொருட்களை விநியோகித்தல் ஆகிய பொறுப்புகளை நாளடைவில் துறையிடமிருந்து கிராமங்களிடம் ஒப்படைக்கக் கருதப்பட்டுள்ளது. கிராம மக்கள் நாளடைவில் இப்பொறுப்புகளை மேற்கொள்ள அவர்களுக்குப் படிப்படியாகப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். கிராம, வட்ட மாவட்ட, மாநில அள்வுகளில் சமூகக் காடு வளர்ப்புக் குழுக்கள் அமைக்கப்படவிருக்கின்றன. இத்திட்டத்தில் பொது மக்களைப் பங்கு பெறச் செய்யவும், ஆதரவு தேடவும், இத்திட்டத்தின் கீழ்ப் பணிக்கு அமர்த்தப்படும் தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு வளர்ச்சிப் பணிகளிலும், சமூக முறைகளிலும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்தக் காடுகளிலிருந்து கிடைக்கும் வருவாயை, சம்பந்தப்பட்ட ஊராட்சிகளும், அரசும் சமமாகப் பகிர்ந்து கொள்ளும். வருவாயைப் பெருக்குவதற்கும், பலத்த காற்றினின்றும் பாதுகாப்பு, காற்று அரிப்பினின்றும் பாதுகாப்பு. நீர் மட்ட பராமரிப்பு, நலமார்ந்த தட்பவெப்ப நிலையையும் நில வனப்பையும் மேம்படுத்தல் ஆகியவற்றுக்காக வெட்டு மரங்கள், நிழல் தரு மரங்கள், காற்றுத் தடுப்புகள் ஆகிய வகைகளில் மரங்கள் வள்ர்க்கப்பட்டு வருகின்றன. இத்துறை வழங்கும் விதைகளைக் கொண்டு, பொது மக்கள் வேளாண்மை பயிர் செய்வதோடு, மரங்களும் வளர்க்கப்படும். பண்ணை நிலங்கள்



வயல் வரப்புகள் முதலியவை போன்ற தனியார் நிலங்களில் உள்ள காடுகள், இம்மாநிலத்தின் நிலையான சொத்துக்களாக இருக்கும். இத்தகைய திட்டங்கள், அவர்களது தனிப்பட்ட தேவைகளை நிறைவு செய்வதோடு, உபரியாக உள்ள பொருட்கள் இத்திட்டத்தின்கீழ் வணிகக் காரியங்களுக்கும் பயன்படுத்தப்படலாம். பொதுமக்களுக்கு 500 கன்றுகள் வரையில் இலவசமாக வழங்கப்படுகிறது. 500 கன்றுகளுக்கும் அதிகமாகத் தேவைப்படுவோருக்கு அடக்க விலையில் அதாவது மிகக் குறைந்த விலையில், அவை விற்பனை செய்யப்படுகின்றன. தனியார் நிலங்களில் நடுவதற்கென்று அவ்வாறு இலவசமாக வழங்கப்பட்ட கன்றுகளில் முதலாவது, இரண்டாவது ஆண்டுகளில் எவ்வளவு கன்றுகள் பிழைத்துள்ளன என்பதைப் பார்வையிட்ட பின்னர், படிப்படியானதொரு திட்டத்தின் மூலம் பிழைத்துக் கொண்ட கன்றுகளின் அடிப்படையில், கன்று வளர்ப்போருக்கு ரொக்க ஊக்கத் தொகை கீழ்க்கண்ட விகிதத்தில் அளிக்கப்படுகிறது :—

| பிழைத்திருக்கும் மரக் கன்றுகள். | | மரக்கன்றுகளுக்கு ஊக்கத் தொகை விகிதம். | மொத்த ஊக்கத் தொகை. |
|---|---|---|---|
| (1) | | (2) | (3) |
| | | ரூ. | ரூ. |
| 1—10 | .. | 1.00 | 10.00 |
| 11—30 | .. | 0.50 | 10.00 |
| 31—100 | .. | 0.25 | 17.50 |
| 101—500 | .. | 0·10 | 40·00 |
| | | மொத்தம். | 77·50 |

15.4. புதிய இருபது அம்ச பொருளாதாரத் திட்டம்— மரம் நடுதல்.

பிரதமரின் புதிய இருபது அம்ச பொருளாதாரத் திட்டத்தினை நமது மாநிலம் முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. இவ்வாண்டு தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவ மழை பொய்த்திருப்பினும், 1982-83க்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 11 கோடி செடிகளில் 1983 பிப்ரவரித் திங்கள் முடிய 10.24 கோடி செடிகள் நடப்பட்டு உள்ளன. நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை அடைய அனைத்து முயற்சிகளும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிராமப் பகுதிகளில் விறகு மரம் வளர்க்கும் திட்டம்.

16.1 கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த சமூகக் காடு வளர்க்கும் திட்டம் ஒரு சிறந்த ஏற்பாடாக அமையும் சமூகக் காடு வளர்ப்பது... கிராமப் பகுதிகளில் விறகு மரம் வளர்ப்பது உள்பட மத்திய

அரசு பொறுப்பேற்கும் சமூகக் காடு வளர்ப்புத் திட்டம் 1980—81 ஆம் ஆண்டில், இம்மாநிலத்தில், விறகுமரப் பற்றாக்குறை பெரிதும் நிலவும் செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, மதுரை, தர்மபுரி ஆகிய தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. 1980—81 முதல் 1984—1985 வரையிலுள்ள ஐந்து ஆண்டுகளில் மேற்கண்ட மாவட்டங்களுக்காக ரூ. 541.47 லட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டச் செலவில் 50 சதவீதம் மத்திய நிதி உதவியாகும். இம் மாவட்டங்களில் உள்ள கிராமங்களிலும் கிராமங்களுக்கு அருகாமையிலும், தரிசு நிலங்களிலும், கிராமப் பொது நிலங்களிலும் சாலைகள், கால்வாய்கள், ரயில்வழித்தடங்கள் முதலியவற்றின் பக்கங்களில் விறகு மரங்கள் வளர்ப்பதற்கு இத்திட்டம் வகை செய்கிறது. உழவர்கள் தங்களது சொந்த நிலங்களில் மரங்கள் நடுவதற்கும் "ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு மரம்" என்கிற திட்டத்தின் கீழ் பள்ளி மாணவர்கள் மரம் நடுவதற்கும் கன்றுகள் இலவசமாக அளிக்கப்படுகிறது. இத்திட்டம், 1980—1981 ஆம் ஆண்டில், செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, தர்மபுரி, மதுரை ஆகிய மாவட்டங்களிலுமாக நான்கு வன விரிவாக்க கோட்டங்களைக் கொண்டு தொடங்கப்பட்டது. 1982—83ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் 7,000 எக்டேர் நிலப் பரப்பில் செறிவாகவும், 160 கி. மீ. நீளத்திற்கு சாலை நெடுகில் வரிசையாகவும் கன்றுகள் நடப்படும். இதைத் தவிர, ரூ. 122.23 லட்சம் செலவில், 40 லட்சம் கன்றுகள் வளர்க்கப்பட்டு பொது மக்களுக்கு வழங்கப்படும்.

16.2. 1983-84 ஆம் ஆண்டில் 5,800 எக்டேர் நிலப் பரப்பில் செறிவாகவும், 185 கி. மீ. நீளத்திற்கு சாலை நெடுகில் வரிசையாகவும் கன்றுகள் நடவும், இதைத்தவிர, 61 லட்சம் கன்றுகள் வளர்க்கப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்பட ரூ. 131.58 லட்சம் செலவில் இத்திட்டத்தை நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

16.3. மேற்சொன்ன நான்கு மாவட்டங்களுக்குக் கூடுதலாக தென்னாற்காடு, வடாற்காடு ஆகிய இரண்டு மாவட்டங்களை இத்திட்டத்தின் கீழ் கொண்டுவர இந்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. 1983—84 ஆம் ஆண்டு செயற்குறிப்பில் செறிவாகக் கன்று நடுதல், தென்னாற்காடு, வடாற்காடு மாவட்டங்களில் இப்பணிகளை நீடித்தல் ஆகியவை அடங்கும்.

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம்—வறட்சிப் பாங்கான பகுதித் திட்டம்.

17. ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நாற்றுப் பண்ணைகள் அமைக்கப்பட்டு, நாற்றுகள், உழவர்களுக்கு வழங்கும் பொருட்டு வட்டார வளர்ச்சி அதிகார மன்றத்துக்கு அளிக்கப்படுகின்றன.

18. மத்திய அரசுப் பொறுப்பேற்கும் திட்டமான வறட்சிப் பாங்கான பகுதித் திட்டம், தர்மபுரி, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் செயலாக்கப்பட்டு வருகின்றன. காடு வளர்ப்பு, மேய்ச்சல் நில மேம்பாடு ஆகியவையே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். 1982-83ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 66.82 லட்சம் செலவில் செயலாக்கப்படும். மேற்கூறிய இரு மாவட்டங்களிலும் மேற்கூறிய பணிகள் அதே நிலையில் 1983-84 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயலாக்கப்படும்.



19.1. திருச்சிராப்பள்ளி, தென்னாற்காடு, புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில், முந்திரி, கலப்பின ரக யூகலிப்டஸ் போன்ற வணிகப் பயிர்களும், நீலகிரி மாவட்டத்தில் தேயிலை தோட்டங்களும் முக்கியமாக இதன் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட கழகங்களால் அதாவது, தமிழ்நாடு வனத் தோட்டக் கழகப் (TAFCORN) தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் (TANTEA) ஆகியவற்றால் பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர்.

தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம்.

19.2. தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம், முந்திரி உயர்ரக யூகலிப்டஸ், சவுக்குத் தோட்டங்களை வனத்துறையிடமிருந்து, 1974இல் எடுத்துக் கொண்டது. 1982-83இல் இக்கழகம் 2,107 எக்டேர் பரப்பில் கலப்பின ரக யூகலிப்டஸ் மரங்களையும் 771 எக்டேர் பரப்பில் முந்திரித்தோட்டங்களையும் பயிராக்கியது 1982-83இல் 1,19,550 டன் கலப்பின ரக யூகலிப்டஸ் மரங்களை, இக்கழகம், தொழிற்சாலைக்கு வழங்கியது. இக்கழகம் 1982இல் இதுவரை இல்லாத அளவுக்கு 1,802.857 டன் முந்திரியைச் சேகரித்துள்ளது. கலப்பின யூகலிப்டஸ் மரம், முந்திரி, காடுபடு சிறு பொருள்கள், அரக்கு முதலியவற்றை விற்பனை செய்ததன் மூலம், இக்கழகம் ரூ. 193.51 லட்சம் வருவாய் ஈட்டியுள்ளது. 1983—84ல் 2,100 எக்டேர் பரப்பில் கலப்பின ரக யூகலிப்டஸ் மரங்களையும், 1,2 0 எக்டேர் பரப்பில் முந்திரித் தோட்டங்களையும் இக்கழகம் வளர்க்கக் கருதியுள்ளது. மேலும், தற்போதுள்ள முந்திரி விளைச்சலை அதிகரிக்கும் பொருட்டு, முந்திரி பயிராகும் 4,000 எக்டேர் பரப்பில், மும்முர தோட்டக் கலைப் பணிகளை (Intensive cul ural Operations மேற்கொள்ளும்.

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்கழகம்.

19.3. வனத்துறையிடமிருந்து 1976இல் சுமார் 945 எக்டேர் தேயிலைத் தோட்டத்தை எடுத்துக் கொண்ட தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், படிப்படியாக அமைந்த திட்டத்தின் கீழ், கூடுதல் பரப்பில், மேற்கொண்டும் தேயிலைப் பயிராக்கியுள்ளது. தற்போது, 2,394 எக்டேர் பரப்பில் தேயிலை பயிராகிறது. 1982-83இல் இக்கழகம், தேயிலைத் தூள் முதலியவற்றை விற்பனை செய்வதன் மூலம், ரூ. 495 லட்சம் வருமானம் ஈட்டும். வருவாய் தொடர்பான செலவுகள் சுமார் ரூ. 566 லட்சமாகும். 1983இல் சுமார் 100 எக்டேர் பரப்பில், தேயிலை பயிரிடப்படும். தேயிலைத் தோட்டங்களில் 1982-83 ஆம் ஆண்டிற்கான தேயிலைத் தளிர் உற்பத்தி 11,524 டன் ஆகும். தற்போது ஆண்டொன்றிற்கு சராசரியாக 27 லட்சம் கிலோகிராம் தேயிலைத் தூள் தயார் செய்யப்படுகிறது.

19.4. இக்கழகம், 30—9—1982 ஆம் நாளிலிருந்து அமெரிக்கா சுவிட்சர்லாந்து, கனடா போன்ற வெளிநாடுகளுக்கு நேரடியாகத் தேயிலையை ஏற்றுமதி செய்யத் தொடங்கியுள்ளது என்பதை, மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். இதுவரை ரூ. 9,38,342 மதிப்புள்ள 45,020 கி.கி தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. கூடலூரிலுள்ள சேரன் கோட்டில் ஒன்றும், குன்னூரிலுள்ள டைகர் ஹில்ஸ் (Tiger Hills ஒன்றுமாக, மொத்தம் இரண்டு தேயிலைத் தொழிற்சாலைகள் உள்ளன. சேரம்பாடியில் மேலும் ஒரு தொழிற்சாலை ரூ. 1.40 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது.

19.5 1982 டிசம்பர் வரையில், 2,325 ஸ்ரீலங்கா நாடு பெயர்ந்தோர் குடும்பத்தினருக்கு இக்கழகத்தில் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

பணியாளர்—தொழிலாளர் நலம்.

20.1. பணிபுரியும் சூழ்நிலை காரணமாக, வனப் பணியாளர்களும், தொழிலாளர்களும் போதிய வசதியின்மையால், பலவகைச் சிரமங்களுக்கு ஆளாக வேண்டியுள்ளது. ஆகவே, அவர்களுடைய ஆர்வத்தையும், உயரிய செயல் திறமையும் காக்கும் பொருட்டு, அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தர வேண்டியது மிகவும் அவசியமாகிறது. மருத்துவ வசதி, வீட்டு வசதி, அவர்களுடைய குழந்தைகளுக்கான கல்வி வசதி போன்ற அடிப்படை வசதிகளை இத்துறை, தொழிலாளர் பணியாளர் வசதித் திட்டத்தின் கீழ் வழங்குகிறது. இது வரையில், வனச் சரகர் நிலை வரையுள்ள பணியாளர்களுக்குச் சீருடைகளும், அரசு ரப்பர் தோட்டத்திலும், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திலும், கோலப்பள்ளி தேயிலைத் தோட்டப் பிரிவிலும் பணியாற்றும் பணியாளர், தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதிகளும் அளிக்கப்பட்டுள்ளன. அரசு ரப்பர் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கென்று, இத்துறை கன்னியாகுமரி மாவட்டத்தில் பள்ளிகளை நடத்தி வருகிறது. கோலப்பள்ளி, தேயிலைத் தோட்டப் பிரிவில் பள்ளிக் கட்டிடமொன்று கட்டப்பட்டு வருகிறது.

20.2. அரசு ரப்பர் தோட்டத்திலும், ஏனைய பகுதிகளிலும் பணிபுரியும் பணியாளர்கள், தொழிலாளர்கள் ஆகியோருக்கு வீட்டு வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. மலைத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டத்தின் விதிகளின்படி தேயிலை, ரப்பர் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு வசதிகள் செய்து கொடுக்கும் பணி படிப்படியாக நிறைவேற்றப் பட்டு வருகிறது.

பழங்குடியினர் மேம்பாடு.

21.1. வனப் பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்காக, வனத்துறை பல்வேறு நல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. வனத்துறை மேற்கொண்டுள்ள பல்வேறு நல நடவடிக்கைகள் பற்றிய விவரம் வருமாறு :



பயிரிடுவதற்காகவும் குமரி சாகுபடி செய்வதற்காகவும்
நிலம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. பழங்குடியினர் வசிக்கும்
பகுதிகளில் கால்நடைகளை மேய்ச்சல் நிலங்களில் இலவசமாக
மேய்ப்பதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.
வனத்துறையில் அவர்கள் தொழிலாளர்களாக நியமிக்கப்படு
கின்றனர். தகுதியுடைய பழங்குடியினர் வனப் பணியாளர்,
வனக் காப்பாளர், வனச் சேமக் காவலர், யானைப் பாகன்,
காவடிகள், ( Cavadies ) போன்ற பணிகளில் நியமிக்கப்படு
கின்றனர். அவர்களுக்குக் குடியிருப்பு வசதிகளும் அளிக்கப்
படுகிறது. வடாற்காடு, கோயம்புத்தூர் மாவட்டங்களில்
பழங்குடியினருக்காக 15 தொடக்கப்பள்ளிகளையும், 2 உயர்
நிலைப்பள்ளிகளையும் வனத்துறை நடத்தி வருகிறது. பழங்
குடியினர் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு நண்பகல் உணவு
சீருடைகள், புத்தகங்கள் எழுதுபலகைகள் முதலியன வனத்
துறையினரால் இலவசமாக வழங்கப்படுகின்றன. வடாற்காடு,
மாவட்டம், புதூர், ஜம்னாமரத்தூர் ஆகிய இடங்களில் பழங்
குடியினர் குழந்தைகளுக்குத் தங்கும் விடுதி வசதிகள் அளிக்கப்
பட்டுள்ளன. வனத்துறை நல்ல வசதிகள் செய்து கொடுப்ப
தினால், பழங்குடியினர் தங்கள் குழந்தைகளுக்குக் கல்வி பயிற்று
விக்க விரும்புகின்றனர் என்பது இந்த விடுதிகளில் தங்கிப்
பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை, புதூரில் 1978—79 இல்
50 ஆக இருந்தது. 1982—83 இல் 100 ஆக அதிகரித்துள்ளது என்
பதிலிருந்தும், ஜம்னாமரத்தூரில் 1961—62 இல் 20 ஆக இருந்த
மாணவர் எண்ணிக்கை, 1982—83 இல் 150 ஆக உயர்ந்துள்ளது
என்பதிலிருந்தும் தெளிவகிறது. வடாற்காடு மாவட்டத்தில்,
கல்யாணமந்தை, நெல்லிவாசல், பெரும்பள்ளி ஆகிய கிராமங்
களில் தங்கிப் பயிலும் விடுதி வசதிகள் செய்து கொடுப்பதற்காக
நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

டாப்ஸ்லிப், முதுமலை ஆகிய பகுதிகளில் மருத்துவ வசதி
கள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. காடுபடு சிறு பொருள்
பிரிவுகள், பழங்குடியினர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 10 சதவீத
சலுகை வீதத்தில் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.

பழங்குடியினருக்குப் பயனளிக்கும் வகையில் 19 தொழிலாளர்
கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. முதலமைச்சர்
சத்துணவுத் திட்டத்தின்கீழ் 5-லிருந்து 9 வயது வரையுள்ள குழந்
தைகள் அனைவருக்கும் வனத்துறையினரால் நடத்தப்படும்
பள்ளிகளிலும் சத்துணவு வழங்கப்படுகிறது.

21.2. பழங்குடியினர் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டப்
பணிகளின் கீழ் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் இத்துறை
பின்வரும் பணிகளை நிறைவேற்றி வருகிறது :—

1. மலைத் தோட்டங்களை வளர்த்தல்.
2. சாலைகள் போடுதல்.
3. பள்ளிக் கட்டிடங்கள் ஆசிரியர்களுக்கான குடியிருப்புகளைக் கட்டுதல்.

21.3. இவற்றைத் தவிர தென்னாற்காடு, வடாற்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி, தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் (வனப் பகுதிகளுக்கு வெளியே) சமூகக் காடுகள் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பழங்குடியினர் வனப் பணி துணைத் திட்டப் பிரிவில் இத்துறை நிறைவேற்ற இலக்கிட்ட பணிகளும் 1981–82 முதல் 1982–83 வரை நிறைவேற்றியுள்ள பணிகள் விவரம் வருமாறு:—

| ஆண்டு. | நிர்ணயிக்கப் பட்ட நிதி இலக்கு. | நிறைவேற்றப் பட்டவை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் லட்சத்தில்.) | |
| 1980–81 .. .. | 23.01 | 18.34 |
| 1981–82 .. .. | 32.02 | 33.77 |
| 1982–83 .. .. | 46.52 | பணி நடந்தேறி வருகிறது. |

21.4. 1983-84 ஆம் ஆண்டில் பழங்குடியினர் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்ட வனப் பணிப் பிரிவில் ரூ. 43.65 லட்சம் செலவில் பல்வேறு பணிகளை நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளது.

21.5. வனப் பணிப் பிரிவின் கீழ், பழங்குடியினர் மேம்பாடு, நலன் ஆகியவற்றிற்காக வனத்துறையால் சிறப்பிடம் அளிக்கப் பட்டு, கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டு வருகிறது.

சாலைகள்.

22. முன்னாளில், நமது வனப் பகுதிகளில் பெரும் பாலானவை மிகக் குறைந்த அளவு சாலைப் போக்குவரத்து வசதி களையே பெற்றிருந்தன. இதனால் வனங்களை நிருவகிப்பது பெரிதும் இடர்ப்பாடாக இருந்தது. தற்போது சாலைகள் படிப் படியாக அமைக்கப்படுவதால் இப்பிரச்சினை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. வனங்களில் சாலைகள் செம்மையாக அமைக்கப்படுவதினால், வன மேம்பாட்டுப் பணிகளைச் செவ்விய வகையில் நிறைவேற்ற இயலும். நல்ல போக்குவரத்து வசதி ளை ஏற்படுத்துவதால் வனங்களிலிருந் வருவாய் பெருமளவில் கிடைக்கும். மேலும் பொருளாதார மேம்பாடு அடையாத வனங்களின் மையப் பகுதிகளில் வாழும் பழங்குடியினர், பொருளாதார அளவில் நலிந்த பிரிவினர் ஆகியோரை அவர்கள் எளிதில் செல்லக்கூடிய வனப் பகுதிகளுக்கு வெளியே உள்ள வளர்ச்சி நிலைகளுடன் தொடர்பு கொள்ள வசதி ஏற்படுத்தி, நாட்டில் முன்னேற்றப் பாதையில் அவர்களையும் நடத்திச் செல்ல வகை செய்யப்படும். இக்கொள்கையின் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சாலைகள் அமைக்கப்பட்டு வருவதோடு



தற்போதுள்ள சாலைகளும் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. 1982–83 ஆம் ஆண்டில் ரூ. 36·78 லட்சம் மதிப்பீட்டில் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 1983–84 இல் ரூ. 36.68 லட்சம் செலவில் புதிய சாலைகள் அமைப்பதற்கும், தற்போதுள்ள சாலைகளை மேம்படுத்துவதற்கும், திட்டமிடப்பட்டுள்ளது.

செயல் திட்டம், ஆராய்ச்சி ஆதாரங்களை ஆய்வு செய்தல் திட்டமிடுதல், மதிப்பீடு செய்தல்.

23. செயல் திட்டங்கள், வனங்களை நிருவகிப்பதற்கு அடிப் படையாக அமைகின்றன. ஒவ்வொரு கோட்டமும் செயல் திட்டம் ஒன்றைக் கொண்டுள்ளது. அத்திட்டம் 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படுகிறது. காடுகளை மீண்டும் உருவாக்குதல், அவற்றைப் பயன்படுத்தல், வன நிர்வாகத்தின் ஏனைய அனைத்துக் கூறுகள் ஆகியவற்றுக்குக் குறிப்பிட்ட முக்கியத்துவத்தை இச்செயல் திட்டங்கள் அளிக்கின்றன. பல்வேறு தட்ப வெப்பநிலை, மண்வளம் ஆகியவற்றுக்கேற்ப வளர்க்கத் தக்க மரவகைகள் அவற்றை உற்பத்தி செய்வதற்கான தொழில் நுட்ப உத்திகளைக் கண்டறியும் நோக்குடன் காடு வளர்ப்பு, அது தொடர்பானவை குறித்து ஆய்வு நடத்த இத்துறையின் ஆராய்ச்சித் திட்டம் வகை செய்கிறது. 1982-83 ஆம் ஆண்டில் இத்திட்டங்களுக்காக ரூ. 7.40 லட்சம் செலவிடப் பட்டது. இப்பணி 1983–84 ஆம் ஆண்டில் ரூ. 6.68 லட்சம் செலவில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்,

அழிந்த காடுகளை மீண்டும் வளர்த்தல்.

24. பல ஆண்டுகளாக அழிந்துபட்டுள்ள காடுகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்தும் பொருட்டு 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 42.39 லட்சம் செலவிலான திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணி 1983-84 ஆம் ஆண்டிலும் ரூ. 45.50 லட்சம் செலவில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

வன சட்டில்மெண்ட்.

25. முன்னாள் ஜமீன் வனப் பகுதிகளைச் சேமக்காப்பு வனங் களாக அமைப்பதன் மூலம் வன வாயில்களை தொகுக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. இப்பணிக்கு 1982–83 ஆம் ஆண்டு திட்ட ஒதுக்கீடு ரூ. 4.47 லட்சமாகும். கூடுதல் பணியாளரை நியமிப்பதன் மூலம் இப்பணியைக் கொடைக்கானல் பகுதியில் விரைவாக மேற்கொள்ளக் கருதப்படுகிறது. ஏனெனில் அங்கு சேமக்காப்பு வனமாக அறிவிக்க முன்னாள் ஜமீன் வனப் பகுதி ஏராளமாக உள்ளது. இத்திட்டம் 1983–84 ஆம் ஆண்டில் ரூ. 7.84 லட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

பிரச்சாரம்.

26. பொதுமக்களுக்கு குறிப்பாக கிராம மக்களுக்கு காடு களைப் பாதுகாப்பது குறித்தும் மரங்களைப் பெருமளவில் வளர்ப்பது குறித்தும் சுற்றுப்புறத்தைத் தூய்மைக்கெடாமல்

வைத்திருப்பது குறித்தும் எடுத்துரைக்க வேண்டும். எனவே, திட்டமிட்டு பிரச்சாரம் செய்வதன் மூலமும், படக்காட்சிகள் மூலமும், வனத்துறையின் பணிகளைப் பரவலாக விளம்பரம் செய்ய வேண்டியுள்ளது. இத்திட்டத்திற்கு 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 2.85 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1983-84-ம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் வனவிலங்கு குறித்த புத்தகங்களை வழங்கவும், வண்ணப்படம் தயாரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 4.20 லட்சம் செலவிடக் கருதப்படுகிறது.

ஏனைய இனங்கள்.

27. வெட்டு மரங்களையும் காடுபடு பொருட்களையும் எடுத்துச் செல்ல நவீன போக்குவரத்து வசதிகளுக்கு வகை செய்தல். நவீன தொழில் நுட்ப உத்திகளையும் மரங்களை வெட்டும் பணிகளையும் மேற்கொள்ளுதல், வைகை நீர்த்தேக்கம், மேட்டூர் நீர்த்தேக்கத்தில் மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகியவை இத்துறை மேற்கொள்ளும் பிற பணிகளாகும். 1983-84 ஆம் ஆண்டில் இந்த இரண்டு நீர்த்தேக்கங்களின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் 4,000 எக்டேர் பரப்பில் ரூ. 75.77 லட்சம் செலவில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

நீலகிரி மாவட்டத்திற்கு வன வட்ட அலுவலகம் அமைத்தல்.

28. மரங்களை மூலப் பொருளாகக் கொண்டுள்ள தொழிற்சாலைகளுக்கு மரங்களை வழங்கும் முக்கிய வாயிலாக உள்ள நீலகிரியில் வனங்களைச் செவ்வனே பாதுகாக்கவும் கள்ளத்தனமாக மரங்கள் வெட்டப்படுவதையும் கூடலூர் பகுதியில் ஏராளமான மக்கள் ஆக்கிரமிப்பு செய்வதையும் தடுக்கவும், நீலகிரியில் செயல்படுத்தப்படும், மாநில, மத்தியத் திட்டங்களை மேற்பார்வையிடவும், உதகமண்டலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு நீலகிரி மாவட்டத்திற்காக வட்ட அலுவலகம் ஒன்றை அமைப்பது அவசியமெனத் தெரிய வந்தது. நீலகிரி மாவட்டத்திலுள்ள வனத்தின் மூலம் கிடைக்கும் ஆண்டு வருவாய் சுமார் ரூ. 2 கோடியாகும். கோயம்பத்தூரிலுள்ள தற்போதைய வனப் பாதுகாவலரின் ஆட்சி வரம்பு நிருவகிக்க முடியாத அளவுக்கு உள்ளது. பணிகளைத் திறம்பட மேற்பார்வையிடவும் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்தவும் நடப்பாண்டில் நீலகிரி மாவட்டத்திற்காக வட்ட அலுவலகம் ஒன்றை அமைக்க அரசு கருதியுள்ளது.

தமிழ்நாடு வனப் பணி பயிற்சிப்பள்ளி, வைகை அணை.

29. வைகை அணைக்கட்டு, தமிழ்நாடு வனப் பணி பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கையை உயர்த்தக் கருதப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் இப்பள்ளியில் 100 வனப் பணியாளர்களுக்கும் 120 வனக் காவலர்களுக்கும் வனப் பணியில் பயிற்சி அளிக்கப்படும். இப்பள்ளியில் பயில்பவர்களுக்காக ஒரு மாணவர் தங்கும் விடுதி ரூ. 20 லட்சம் செலவில் கட்டப்படுகிறது. இப்பணி விரைவில் முடிவு பெறும்.



வனவிலங்கு—இயற்கை எழில் பாதுகாப்பு

30. 1. நம் மாநிலத்தில் வனவிலங்கு உய்விடங்களும் பறவை உய்விடங்களும் முறையாகவும் அறிவியல் முறையிலும் நிருவகிக்கப்படுகின்றன. கிண்டியில் தேசிய பூங்கா ஒன்று அமைக்கப்பட்டிருப்பது குறித்து நாம் பெருமிதம் அடையலாம். சென்னை பெருநகரில் இது அமைந்துள்ளது. இத்தகைய உய்விடங்களை மேம்படுத்தி நிருவகிப்பதற்கு 1983—84 ஆம் ஆண்டில் ரூ. 20.16 லட்சம் செலவிடக் கருதப்பட்டுள்ளது. 1982—83 ஆம் ஆண்டில் சுமார் ரூ. 3.10 லட்சம் செலவில் மத்திய நிதி உதவியுடன் அனைத்திந்திய வனவிலங்குக் கண்காட்சி நடத்தப்பட்டது. கிண்டி தேசிய பூங்காவில் சுமார் ரூ. 25 லட்சம் செலவில் வனவிலங்கு அரும்பொருட் காட்சியகம் ஒன்றை நிரந்தரமாக அமைக்கக் கருதப்பட்டுள்ளது. இதற்காக 1983—84 ஆம் ஆண்டில் ரூ. 5.65 லட்சம் செலவிடப்படும். நடப்பாண்டில் ரூ 1.25 லட்சம் செலவில் வனவிலங்கு—வனவிலங்கு உய்விடங்கள் குறித்த வண்ணப்படங்களைத் தயாரித்து பள்ளிகள் கல்லூரிகளிலும், பொதுமக்களுக்கும் திரையிட்டுக் காட்ட கருதப்படுகிறது. இன்றைய குழந்தைகள் சுற்றுப்புறச் சூழல், அதனைப் பயன்படுத்துவது, சுற்றுப்புற சூழலினால் வனவாயில்களுக்கு ஏற்படக்கூடிய விளைவுகள் ஆகியவற்றைப் பற்றி அறிந்துக் கொள்ள வேண்டும் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் ஒப்புக் கொள்வர். இவை பற்றி குழந்தைகளுக்குக் கற்பிக்கும் எண்ணத்துடன், வனவிலங்கு, இயற்கைச் சூழல் பற்றிய புத்தகங்களைப் பள்ளி நூலகங்களுக்கு வழங்கவும் வனவிலங்கு பற்றிய படங்களைத் தயாரித்து பள்ளிச் சிறுவர்களுக்குத் திரையிட்டுக் காட்டவும் கருதப்பட்டுள்ளது. இயற்கை வளம், சுற்றுப்புறச் சூழல் பற்றி அனுபவ அறிவு பெற பள்ளிச் சிறுவர்கள் தொகுதி தொகுதியாக வனவிலங்கு உய்விடங்களுக்கு உல்லாசப் பயணம் அழைத்துச் செல்லப்படுவர். வனவிலங்கு உய்விடங்களும் பறவை உய்விடங்களும் மத்திய நிதியுதவியுடன் 1983-84 ஆம் ஆண்டில் பராமரிக்கபபடும்.

கோடிக்கரை பறவைகள் உய்விடம்.

30. 2, கோடிக்கரை பறவைகள் உய்விடம் (வேதாரண்யம் சதுப்பு நிலப்பகுதி) நிலப்பரப்பு பயன்பாட்டு திட்டத்தின் வளர்ச்சியினை மதிப்பீடு செய்வதற்கும், கண்காணிப்பதற்கும் தொடர்ந்து அத்திட்ட செயல்முறைகளை இயக்கவும், அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் பலவித நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்தவும், அக்குறிக்கோள்களை நிறைவேற்றும் பொருட்டு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அரசுக்கு ஆலோசனை வழங்க திரு. பி. விஜயராகவன், இ. ஆ. ப. அவர்கள் தலைமையில், அரசு ஒரு குழுவினை அமைத்துள்ளது.

வண்டலூர் விலங்ககம்.

30. 3. சென்னை மாநகரிலிருந்து விலங்ககத்தை வண்டலூருக்கு மாற்றும் திட்டத்தை ரூ. 3 கோடி செலவில் அரசு மேற்கொண்டுள்ளது. இந்த வன விலங்ககம் வனத்துறையால்

நிருவகிக்கப்படும். விலங்ககத்துக்குத் தேவைப்படும் நிலத்தில் ஒரு பகுதி அரசு வசம் எடுத்துக் கொள்ளப்பட்டு அங்கு மரங்கள் நடப்பட்டுள்ளன. ஏனைய கட்டிடப் பணிகளும் நடந்து வருகின்றன. புதிய விலங்ககம், தற்போதுள்ள விலங்ககம் போன்று இருக்காது. இந்த விலங்ககம் சுமார் 509 எக்டேர் நில பரப்பில் அமைக்கப்படுகிறது. இதில் 120 எக்டேர் பரப்பில் வன விலங்குகளுக்கு தீவனம் பயிர் செய்யப்படும் நிலப்பரப்பும் அடங்கும். அழகிய இயற்கை சூழல் மிக்க இப்பகுதி விலங்குகள் இயற்கையாக வசித்து வருவதற்கேற்ற சூழ்நிலையை ஏற்படுத்தும்.

30. 4. 1982–83 இல் மாநகராட்சி விலங்ககத்திலிருந்து நீர் யானை, வரிக்குதிரை, மான், சில பறவைகள் ஆகியவை வண்டலூர் விலங்ககத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு புதிய அடைப்புகளில் விடப்பட்டுள்ளன. மேலும், துறையைச் சேர்ந்த யானை முகாம்களிலிருந்து யானைகள் கொண்டு வரப்பட்டு வண்டலூர் விலங்ககத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

30.5. வண்டலூரில் விலங்ககத்தை அமைப்பதற்கு 1982, டிசம்பர் இறுதி வரையில் திட்டப் பணியின் கீழும், திட்டம் சேராப் பணியின் கீழும் ரூ. 49.43 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

30.6. 1983-84 ஆம் ஆண்டுக்கு ரூ. 66.05 லட்சம் ஒதுக்கட் பட்டுள்ளது.

திட்ட ஒதுக்கீடு.

31.1. மேற்குறிப்பிட்ட பல்வேறு திட்டங்கள் மாநில அரசுத் திட்டங்களாகச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. ஒரு சில திட்டங்கள் மத்திய அரசுப் பொறுப்பேற்கும் திட்டங்களாகும். கிராமப் பகுதிகளில் விறகு மரங்கள் வளர்க்கும் திட்டம், வறட்சிப் பாங்கான பகுதித் திட்டம் ஆகியவை மத்திய அரசுப் பொறுப் பேற்கும் திட்டங்கள் ஆகும்.

31.2. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நீலகிரியிங் காடு வளர்ப்புத் திட்டமும் சாலைப் போக்குவரத்துத் திட்டங்களும் மாநில அரசுத் திட்டங்களாக நிறைவேற்றப்படுகின்றன. 1983-84 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 32.91 லட்சம் செலவிடப்படும்.



31.3. இத்துறையின் பல்வேறு திட்டப் பணிகளுக்காகச் செலவிடப்பட்ட தொகையும் நிதி ஒதுக்கீடும் வருமாறு:—

| திட்டம். | 1981–82 (கணக்குகள்). | 1982–83 (வரவு செலவுத் திட்ட மதிப்பீடு). | 1982–83 (திருத்த மதிப்பீடு). | 1983–84 (வரவு செலவு திட்ட மதிப்பீடு). |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| 1. மாநிலத் திட்டம் .. .. | 943.20 | 1,312.75 | 1,472.78 | 1,396.90 |
| 2. மண்வளப் பாதுகாப்பு திட்டம் .. | 61.92 | 73.75 | 72.57 | 75.77 |
| 3. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள். | 101.91 | 137.31 | 164.93 | 163.65 |
| 4. மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம். .. .. .. | 98.56 | 85.30 | 98.21 | 105.15 |
| 5. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (மாநிலத் திட்டம்). .. .. | 21.30 | 27.04 | 31.10 | 32.91 |
| 6. ஸ்ரீலங்கா நாடு பெயர்ந்தோர் மறுவாழ்வுத் திட்டம்—ரப்பர் .. .. | 34.74 | 39.07 | .. | .. |
| மொத்தம் .. | 1261.63 | 1675.22 | 1839.59 | 1774.38 |

வரவு-செலவுத் திட்டம்.

வனத்துறையின் வரவு-செலவுத் திட்டம் விவரம் வருமாறு:—

| கணக்கின் தலைப்பு. (1) | 1981–82 (கணக்குகள்) (2) | 1982–83 (வரவு செலவுத் திட்ட மதிப்பீடு). (3) | 1982–83 (திருத்த மதிப்பீடு). (4) | 1983–84 (வரவு செலவுத் திட்ட மதிப்பீடு) (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்). | | |
| மானியக் கோரிக்கை—45. | | | | |
| 1. 259. பொதுப்பணிகள் .. | .. | 0.10 | 0.10 | 0.10 |
| 2. 288. சமூகப் பாதுகாப்பும் நலனும் .. | 40.82 | 11.72 | 30.66 | 15.79 |
| 3. 307. மண்வள நீர்வளப் பாதுகாப்பு .. | 20.31 | 16.55 | 19.28 | 18.75 |
| 4. 308. பகுதி மேம்பாடு .. | 0.68 | 6.59 | 8.10 | 8.91 |
| 5. 313. காடுகள் .. | 843.57 | 895.75 | 994.39 | 975.11 |
| 6. 320. சந்தன எண்ணைத் தொழிற்சாலை | 0.34 | 0.95 | 0.84 | 0.99 |



| | | | | |
|---|---|---|---|---|
| மானியக் கோரிக்கை—55. | | | | |
| 1. 488. சமூகப் பாதுகாப்பு நலன் குறித்த மூலதனச் செலவு. | 27.14 | 30.35 | 107.01 | 32.01 |
| 2. 506. சிறு பாசனம், மண்வளப் பாது காப்புப் பகுதி மேம்பாட்டு குறித்த மூலதனச் செலவு. | 78.84 | 85.86 | 86.84 | 90.47 |
| 3. 513. காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு. | 957.62 | 1311.07 | 1335.64 | 1416.47 |
| 4. 526. சந்தன எண்ணை தொழிற்சாலை நிறுவுதல் குறித்த மூலதனச் செலவு. | 7.10 | 22.60 | 23.60 | 19.29 |
| | 1,976.42 | 2,381.54 | 2,605.93 | 2,577.89 |

| கணக்குத் தலைப்பு. | 1981–82 கணக்குகள். | 1982–83 திருத்த மதிப்பீடு. | 1983–84 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| மொத்த மானியக் கோரிக்கை 45 .. | 905.72 | 1,053.37 | 1,019.65 |
| மொத்த மானியக் கோரிக்கை 55 .. | 1,070.70 | 1,552.56 | 1,558.24 |
| | 1,976.42 | 2,605.93 | 2,577.89 |



## முடிவுரை.

32.1. மரங்களும் வனங்களும் வளர்ந்து காய் காய்த்து நமக்கு பலனளிக்க நீண்ட காலம் ஆகுமென்பதை பண்டைய காலந் தொட்டே நாம் அறிந்து வந்துள்ளோம்.

32.2. வனங்களைத் திட்டமிட்டுச் செவ்வனே நிருவகித்து மாநிலத்தின் வனச் செல்வத்தை பெருக்கிட வளங்கெழு அரசும் வனத்துறையும் அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வருகின்றன. காடு வளர்ப்பில் மக்களையும் பங்கேற்கச் செய்து அவர்களுடைய நெருங்கிய ஒத்துழைப்புடன் காட்டு வளத்தை மேம்படுத்த இந்த அரசு தொடர்ந்து பாடுபடும் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## இணைப்பு VI

(.......59-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### கொள்கை விளக்கக் குறிப்பு—சுற்றுலாத்துறை

சுற்றுலாத் துறை பொதுவாக அந்நிய செலாவணியை ஈட்டித் தருவதில் மற்ற துறைகளைவிட மிக முக்கியமான பங்கு வகிக்கிறது. அதிலும் வளர்ந்து வரும் நமது நாட்டைப் பொறுத்த வரை அந்நியச் செலாவணி ஈட்டித் தருவதில் அதன் முக்கியத்துவம் மிக அதிகமாகிறது. வெளிநாட்டுப் பயணிகள் நம் நாட்டில் செலவிடும் அந்நிய பணத்தின் மூலமாக நமக்கு கிடைக்கும் அந்நிய செலாவணியை "மறைமுக ஏற்றுமதி வருமானம்" (invisible export) என்றும் நாம் குறிப்பிடுகிறோம். அவ்வாறு நமக்கு வருமானமாக கிடைக்கும் அந்நிய செலாவணி வேறு ஒரு முக்கியமான பொருளாதார பயனை நமக்கு கிடைக்கச் செய்கிறது. இதனை "பல பெருக்கு பலன்" (multipl er effect) என பொருளாதார வல்லுநர்கள் குறிப்பிடுகிறார்கள். அதாவது வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடமிருந்து கிடைக்கும் பணம், சுற்றுலாத் தொழிலுக்குக் கிடைப்பது போக அதனை சார்ந்த ஓட்டல் தொழில் ஊழியர்கள் பயண முகவர்கள் போன்ற பலர் பயனடைகின்றனர். இது இந்த பொருளாதார ஓட்டத்தின் இரண்டாவது கட்டமாகும். இந்தப் பல பெருக்கு பலன் மூலம் முதலில் வெளிநாட்டுப் பயணிகளிடமிருந்து பெறப்பட்ட பணம், பல கை மாறி, திரும்ப திரும்ப பல பொருளாதார நடவடிக்கைகளை பெருக்கும் மிக அத்தியாவசியமான நன்மையை அளிக்கிறது. மற்றைய துறைகளிலும் இதைப்போன்ற பலபெருக்கு பலன் உண்டு என்றாலும், சுற்றுலாத் துறையைப் பொருத்த வரையில் அதன் நன்மைகள் மிக சிறப்பு வாய்ந்தது. மற்றத் துறைகளில் அந்நிய செலாவணியை ஈட்டுவதற்கு நாம் பெரும் அளவில் இறக்குமதியாக அந்நிய செலாவணியை செலவிட வேண்டியுள்ளது. ஆனால், சுற்றுலாத் துறையைப் பொறுத்த வரையில் மிகக் குறைந்த அளவில் அந்நிய செலாவணி இறக்குமதிக்காக செலவிடப்படுகிறது. மேலும், சுற்றுலாத்துறை இன்று பல்வேறு தொழில் பணிகளை அடிப்படையாகக் கொண்டு வளம்பெற்ற தொழிலாக விளங்குவதால் பயிற்சி பெறாதவர்களுக்கும், பயிற்சி பெற்ற வல்லுநர் பலருக்கும் அ க வேலை வாய்ப்பை அளிக்கிறது. விற்பனை வரி வருமான வரி போன்ற நேரடி வரிகளாலும் சொத்து வரி போன்ற மறைமுக வரிகளாலும் சுற்றுலாத்துறை மிக அதிக அளவில் வருவாயை ஈட்டித் தருகிறது.

இவ்வாறு சுற்றுலாவின் மூலம் நேரடியாக பொருளாதாரப் பயன் கிட்டுவதோடு நாட்டிற்கும் சமூகப் பொருளாதார நன்மைகள் மலர சுற்றுலா துணை நிற்கிறது. கைத்திறத் தொழில் முதலிய பல உள்நாட்டுத் தொழில்களையும் சுற்றுலா ஊக்குவிக்கிறது. பல்வேறு நாட்டு மக்களிடையே சிறந்த முறையில் நட்புறவை வளர்த்துக் கொள்வதன் மூலம்





அனைத்து நாடுகளிடையே ஒருவரை ஒருவர் புரிந்து செயல்படும் நிலையையும் சுற்றுலா ஏற்படுத்துகிறது. நாட்டிற்குள் உரிய முறையில் சுற்றுலாப் பணியை வளர்ச்சியடையச் செய்வதன் மூலம் இந்நாட்டின் இளைஞர்களிடையே பண்பாடு தழுவிய தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்கவும் முற்பட முடியும். மேலும் இந்நாட்டின் இளைஞர்கள் விளையாட்டு, வீரதீரச் செயல்கள் ஆகியவற்றில் பங்கு பெற்றுப் புகழ்பெறும் வாய்ப்பையும் வழங்குகிறது. இயற்கை வள வாயில்கள் இல்லாத பகுதிகளில் புதிய வளர்ச்சி மையங்களை ஏற்படுத்தவும் சுற்றுலா வழி வகுக்கிறது. இந்நிலயில் சுற்றுலாவினால் பல திறப்பட்ட சமூக பொருளாதாரப் பயன்கள் மலர்வதை கருத்திற்கொண்டு சுற்றுலாப் பணிகளை மேம்படுத்த அனைத்து வகை நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்வது இன்றியமையாததாகவுள்ளது.

1980 ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு 8,00,150 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வந்தனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 1990 ஆம் ஆண்டிற்குள் 2 1 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிற்கு வருகை புரிவர் என எதிர்ப்பார்க்கப்படுகிறது, சுற்றுலாத் துறை தக்க வகையில் மேம்படுத்தப்பட்டால், இந்நாட்டிற்கு 1990-91 ஆம் ஆண்டிற்குள் சுமார் 3,000 கோடி ரூபாய் வருவாயை ஈட்டுதற்குரிய வள வாய்ப்புள்ளது. சுற்றுலாவினால் கிடைக்கப் பெறும் பயன்கள் அனைத்தையும் கிட்டும்படிச் செய்ய வேண்டுமெனில், சுற்றுலாவிற்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு திட்டமிட்டு மேம்படுத்த உடனடியாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

தமிழகத்தில் தனித்தன்மை வாய்ந்த சுற்றுலா இடங்கள் இருந்தபோதிலும் இந்தியாவிற்கு வருகை தரும் சுற்றுலா பயணிகள் பெரும்பாலோர் தமிழகம் வருவதில்லை. தமிழகத்தில் வனப்பு மிகுந்த கண்கவரும் இயற்கை கவின் நிறைந்த இடங்கள் பல உள்ளன. இவற்றோடு மிகச் சிறந்த பண்பாடு மரபையும் இம்மாநிலம் கொண்டுள்ளது. இம்மாநிலம் முழுவதும் அமைந்துள்ள திருக்கோயில்கள் கலைத்திறம் மிகுந்த சிற்பச் சிலைகள் ஆகியவை கலைக் கலஞ்சியங்களாக உள்ளன. வரலாற்றுச் சிறப்பு மிகுந்த மாமல்லபுரம் கற்கோவில் காஞ்சிபுரம், மதுரை இராமேஸ்வரம் ஆகிய திருத்தலங்களில் அமைந்துள்ள திருக்கோவில்கள், மெரீனா, இராமேசுவரம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் அமைந்துள்ள கவின் மிகுந்த கடற்கரைகள், உதகமண்டலம், கொடைக்கானல் போன்ற இயற்கைப் பொலிவார்ந்த குறிஞ்சித் திருநகரங்கள், வேடந்தாங்கள் முதுமலை ஆகிய வன விலங்கு பறவைகள் உய்விடங்கள் ஆகியவை இம்மாநிலத்தில் அமைந்தள்ள கவர்ச்சிமிகு இடங்கள் ஆகும். இவற்றோடு நன்முறையில் அமைந்துள்ள சாலை வசதிகள், நன்முறையில் செயற்படும் போக்குவரத்து வசதிகள், உணவக, விருந்தக வசதிகள் முதலியன சுற்றுலாவுக்கு உறுதுணையாக உள்ளன.

சுற்றுலா வளத்துக்கு உதவும் பல்வேறு துறைகள் அனைத்தையும் கருத்திற்கொண்டு; சுற்றுலாவிற்குரிய அடிப்படை வசதிகளை மேம்படுத்த கடந்த ஆண்டுகளில் அரசு முனைப்பான

[1983 மார்ச் 28

கவனம் செலுத்தி வருகிறது; இம்மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு இவ்வளவு வாய்ப்பை சுற்றுலா பயன்படுத்தப்படுகிறது. 1975–76 ஆம் ஆண்டில் சுற்றுலா மேம்பாட்டிற்கான வரவு–செலவுத்திட்ட முதலீடு ரூபாய் 2?.70 இலட்சமாக இருந்தது. 1983-84 ஆம் ஆண்டில் ரூபாய் 180.00 இலட்சமாக அதிகரிக்கப் பட்டுள்ளது.

அரசின் சுற்றுலாக் கொள்கை பற்றிய முக்கிய கூறுகள் வருமாறு—

1. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளையும், இந்நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து இம்மாநிலத்திற்கு வரும் பயணிகளையும் ஈர்க்கும் வகையில் அனைத்து நாட்டு, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்;

2. குறைந்த வருவாய் உடைய மக்களும், மாநிலத்திற்குள் சுற்றுலாப் பயணம் மேற்கொள்ள ஊக்குவிக்கும் வகையில் உள்நாட்டு முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலா மையங்களை மேம்படுத்துதல்;

3. பொதுவாகச் சுற்றுலாப் பயணிகளின் போக்குவரத்தை பெருக்கும் வகையில் சுற்றுலாத் தகவல், விளம்பரத்தை மேம்படுத்துதல்;

4. இடவசதி, போக்குவரவு வசதி முதலிய அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கும் குறிப்பாக குறைந்த வருவாயுடைய சுற்றுலாப் பயணிகளுக்கு மேற்கூறிய இவ்வசதிகள் கிட்டுமாறு செய்ய அரசின் நிறுவனமான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு தேவையான நிதி வசதியினை அளித்தல்,

1.தேசிய முதன்மை வாய்ந்த இடங்களை மேம்படுத்துதல்:

உதகமண்டலம், கன்னியாகுமரி, மாமல்லபுரம், இராமேசுவரம் போன்ற உன்னதமான சுற்றுலா மையங்களை தமிழ்நாடு தன்னகத்தே பெற்றுள்ளது. இந்த மையங்களை மேம்படுத்துவதற்கான பெருந்திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. இந்திய அரசுடனும், அண்டை மாநிலங்களுடனும் கலந்தாலோசித்து, திட்டமிட்ட முறையிலான மேம்பாட்டிற்கு சுற்றுலாப் பயண வட்டங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

இப்பெருந்திட்டத்தைச் செயற்படுத்த மொத்தம் சுமார் ரூபாய் 80.00 கோடி முதலீடு தேவைப்படுகிறது. இத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு கணிசமான நிதியுதவி அளித்திட இந்திய அரசை அணுகியுள்ளோம்.



1983 மார்ச் 28]

பன்னாட்டு உதவி
பெரும் திட்டங்களைச் செயற்படுத்துவதில் உள்ளடங்கும் பல்
வேறு பணிகளில் (அ) நேரடியாக வருவாயை ஈட்டித்தராத
அடிப்படை வசதிகளுக்கு வகை செய்தல், (ஆ) நேரடியாக
வருவாயை ஈட்டித்தரக்கூடிய ஓட்டல்கள் (Hot ls) போக்கு
வரத்து போன்ற வாணிக நடவடிக்கைகள் ஆகிய இருவகைபணி
களும் அடங்கும். பிந்திய வகைப் பணியானது, உலக வங்கி
போன்ற நிதியுதவி வழங்கும் பிற நிறுவனங்களிடமிருந்து உதவி
பெறத் தகுதியானதாகும். உலக வங்கியிடமிருந்து ரூபாய் 28.00
கோடி நிதியுதவி கோரும் திட்ட அடங்கல் செயற்குறிப்பொன்று
தயாரிக்கப்பட்டு ஒப்புதலுக்காக மத்திய அரசுக்கு அனுப்பி
வைக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசிடமிருந்தும் வெளி நிதியுதவி நிறுவனங்களிட
மிருந்தும் எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கப்பெறும் வரை
அரசின் பல்வேறு துறைகளின் வரவு-செலவுத் திட்டத்தில்,
இந்தப் பெருந்திட்டங்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட சில
திட்டங்களை மட்டும் இடம் பெறச் செய்ய முயன்று வருகிறோம்.
பிற துறைகளின் வரவு–செலவுத் திட்டத்தில் இடம் பெறச்
செய்ய இயலாத சில திட்டங்களைச் சுற்றுலாத் துறை மேற்
கொள்ள உள்ளது. பெருந்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பணிகளின்
முக்கிய இனங்களும் பல்வேறு துறைகளால் செயற்படுத்துவதற்காக
மேற்கொள்ளப்பட்ட திட்டங்களும் வருமாறு:—

I. மாமல்லபுரம் —

சுற்றுலா முதன்மைத் தலங்களின் வரைபடத்தில், மாமல்ல
புரம் தன்னிகரற்றதாகத் திகழ்கிறது. மாமல்லபுரம் மேம்பாட்டிற்
காக ரூபாய் 6 00 கோடி செலவில் தயாரிக்கப்பட்ட பெருந்
திட்டத்தில் (1) சுற்றுச் சாலை அமைத்தல், (2) போக்குவரத்து
முனைகளை அமைத்தல், (3) விற்பனைத் தொகுதிகளைக்
கட்டுதல், (4) எழில் வளாகம் அமைத்தல், (5) பொழுதுபோக்கு
வசதிகள் செய்தல் ஆகிய பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கும்
வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பின்வரும்
பணியினங்கள் மேற்கொள்ளப்பட்டு செயற்படத் தொடங்கி
யுள்ளன:—

1. திறந்தவெளி அரும்பொருட் காட்சியகம்.—தமிழகத்தின்
வளமார்ந்த பண்பாடுச் சிறப்புகளை நம்நாட்டாரும், வந்து
காணும் வெளிநாட்டாரும் அறிந்து மகிழத்தக்க வகையில் ஒரு
திறந்தவெளி அரும்பொருட்காட்சியகத்தை மாமல்லபுரத்தில்
நிறுவ அரசு திட்டமிட்டுள்ளது. இந்த அரும்பொருட்காட்சியகம்
சுற்றுலாப் பயணிகளுக்கு அரிய பொழுதுபோக்கு மையமாகவும்
விளங்கும். இத்திட்டத்திற்கான செலவு ரூபாய் 68.00 இலட்சம்
அளவில் இருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கென்று
அரசு அமைத்த உயர்நிலைக் குழு இந்தக் காட்சியகத்தில் இடம்
பெறும் பாறைகளில் செதுக்குவதற்கென்று 47 கருத்துப்பொருட்
களை தேர்வு செய்து, அரசின் ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது.
இப்பணிக்காக ஏற்கனவே ரூபாய் 27.09 இலட்சம் அனுமதிக்கப்
பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

2. இளைஞர் இல்லத்தை விரிவுபடுத்துதல் பயணியர் முகாமிடங்களை மேம்படுத்துதல்.—தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தி வருகிற இளைஞர் இல்லத்தை விரிவுபடுத்துவதற்கும், பயணியர் முகாமிடங்களை மேம்படுத்துவதற்குமான ஒரு திட்டம் 1982-83 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. இதற்கான மொத்தச் செலவு ரூபாய் 15.00 இலட்சமாகும். 1982-83 ஆம் ஆண்டில் ரூபாய் 5.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. தற்போது இப்பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்திற்காக 1983-84 ஆம் ஆண்டில் ரூபாய் 10.00 இலட்சம் செலவு செய்யப்படவுள்ளது.

3. ஒலி-ஒளிக் காட்சித் திட்டம்.—பெருந்திட்டத்தில் செய்யப்பட்ட பரிந்துரையை ஒட்டி, இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூபாய் 47.00 இலட்சமாகும். இதற்கான செலவு பின்வரும் முறையில் பிரித்துக் கொள்ளக் கருதப்பட்டுள்ளது:—

| | |
|---|---|
| சுற்றுலாத் துறை, இந்திய அரசு | ரூ. 20.00 இலட்சம் |
| சுற்றுலாத் துறை, தமிழ்நாடு அரசு | ரூ. 20.00 இலட்சம் |
| தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் .. .. | ..ரூ. 7.00 இலட்சம். |

இந்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் ஒப்புதல் கிடைக்கப் பெறாததால் இத்திட்டத்தைச் செயற்படுத்த காலத் தாழ்வு நேர்ந்துள்ளது. அதன் ஒப்புதலைப் பெறுதவற்கான முயற்சிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக, 1982-83 ஆம் ஆண்டில் ரூபாய் 10.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு 1983-84 ஆம் ஆண்டில் ரூபாய் 10.00 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

1982-83 ஆம் ஆண்டில் செயற்படுத்துவதற்காகப் பெருந்திட்டத்திலிருந்து முக்கியமாக, விளக்கு, போக்குவரத்து முனை, அங்காடி, அரங்கம் போன்ற சில அடிப்படை வசதிகளுக்கு வகை செய்யும், தெரிந்தெடுக்கப்பட்ட சில திட்டங்களை ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறை மேற்கொண்டுள்ளது. இதற்கான மொத்தச் செலவு ரூபாய் 17.00 இலட்சமாகும்.

II இராமேஸ்வரம்.

இந்தியாவிலுள்ள புகழ்வாய்ந்த திருத்தலங்களில் இராமேஸ்வரமும் ஒன்றாகும். இராமேசுவரத்திற்கென்று மொத்தம் ரூபாய் 28.00 கோடி செலவில் தயாரிக்கப்பட்ட சுற்றுலாப் பெருந்திட்டத்தின்கீழ் செயற்படுத்தக் கருதப்பட்டுள்ள பணிகளின் விபரம்:—

1. இடவசதிகள்—இளைஞர் இல்லம் அமைத்தல்;

2. குருசடைத் தீவில் தேசிய கடற்பூங்கா ஒன்றை அமைத்தல்;

3. துறைமுகத்தை மேம்படுத்துதல்;



4. இராமேசுவரத்திற்கும், ஸ்ரீலங்காவிற்கும் இடையே தனிப்படகுப் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்தல்;

5. அடிப்படைவசதிகள்—சாலை மேம்பாடு, விளக்குகளைப் பொருத்துதல்—அங்காடிகள், பேருந்து நிலையம், பொழுது போக்கு வசதிகள் முதலியவை.

இராமேசுவரத்தில் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ள முக்கியமான பணிகள் வருமாறு:—

(1) குடில்கள் கட்டுதல், படகுத் துறைகள் அமைத்தல்

இராமேசுவரத்திற்கு வெளிநாட்டுப் பயணிகளும். நமது நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், சமூகத்தின் பல நிலைகளிலும் உள்ளவர்களும் வருகின்றனர். இந்திய நாட்டின் ஒப்பற்ற புனித இடமாக அது இருப்பதால் குடும்பத்தோடு இங்கு வருவதை வாழ்வில் ஒரு பெரும்பேராக கருதி வரும் மக்கள் தொகை பல்லாயிரமாகும். இந்த நிலைமையில் குறிப்பாக குறைந்த வருமானமுடையோர், செலவு வரம்புக்குட்பட்ட சுற்றுலா பயணிகள் ஆகியோருக்கு இங்கு தகுந்த இடவசதி செய்து கொடுப்பது மிகவும் அவசியமானதாகும். எனவே, குறைந்த செலவில் குடில்களும், சிற்றுண்டிச் சாலையும் கட்டுவதற்கான செயற் குறிப்புக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதற்காகும் மொத்தச் செலவு ரூபாய் 40.00 இலட்சம். இது செயற்படுத்தப்பட்டு வருகிறது. சிற்றுண்டிச் சாலையும், குடில்களும் கட்டுவதற்கு 1982-83ல் ரூபாய் 20.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. பணி முடிக்கப்படுவதற்கு 1983-84—ல் ரூபாய் 20.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(2) இராமேசுவரத்தில் சுற்றுலா அலுவலகம்

இராமேசுவரத்திற்கு வருகிற எண்ணற்ற பயணிகளுக்கு உதவும்பொருட்டு, சுற்றுலா அலுவலகம் ஒன்றை அமைக்கக் கருதப்பட்டுள்ளது. இதற்காக 1983-84ல் ரூபாய் 0.58 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(3) மண்டபத்தில் முகாமிடம்

குறைந்த வருமானமுள்ளவர்கள், செலவு வரம்புக்குட்பட்ட சுற்றுலாப் பயணிகள் ஆகியோருக்கு குறைந்த செலவில் இடவசதி அளிக்க மண்டபத்தில் அவர்கள் தங்குவதற்கு ரூபாய் 42.75 இலட்சம் செலவில் கூடாரங்கள் அமைக்கக் கருதப்பட்டுள்ளது. 1983-84ல் ரூபாய் 5.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(4) பெருந்திட்டத்திலிருந்து செயற்படுத்துவதற்காக தெரிந்தெடுக்கப்பட்ட திட்டப்பணிகளை பின்வரும் துறைகளும் மேற்கொண்டுள்ளன:—

ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறை—விளக்குகள் பொருத்துதல், அங்காடிகள், ஓய்வுக் கொட்டகைகள், கழிப்பிடங்கள் போன்ற சில அடிப்படை வசதிகளுக்கு [illegible] ரூபாய் 22.50 இலட்சம் செலவிலான—[illegible] உள்ளாட்சித் துறை மேற்கொண்டுள்ளது.

போக்குவரத்துத் துறை.—இராமேசுவரம் துறைமுகத்தில் வசதி செய்து வருவதற்காகவென்று ரூபாய் 10லட்சம் செலவிலான திட்டங்களை மேற்கொண்டுள்ளது.

III. கன்னியாகுமரி

நமது நாட்டின் தென்கோடியில் கன்னியாகுமரி அழகுற அமைந்துள்ளது. முக்கடலும் கூடும் இடமிது. நித்தம் தவம் செய்யும் குமரி அம்மன் குடி கொண்டிருக்கும் இடமிது. எனவே நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் திரளான மக்கள் இவ்விடத்திற்கு வந்து செல்கின்றனர். புனிதப்பயணிகளின் தலமாகவும் இது விளங்குகிறது. இப்பகுதியின் மேம்பாட்டிற்காக வகுக்கப்பட்ட ரூபாய் 16.00 கோடி செலவிலான பெருந்திட்டம் இங்கு போதிய இடவசதி ஏற்படுத்தித் தருவதை வலியுறுத்துகிறது. பெருந்திட்டத்தில் குறிப்பிட்டுள்ள முக்கிய பணிகள் வருமாறு.

(i) இடவசதி.— இளைஞர் இல்லம் தங்குமிடம்;

(ii) கன்னியாகுமரியிலிருந்து வட்டக்கோட்டை வரையில் கடற்கரை நடுக சாலை அமைத்தல்;

(iii) கலையரங்குகள் நிறுவுதல்;

(iv) மீன் காட்சியகம் அமைத்தல்;

(v) சின்ன முட்டத்தில் மீன்பிடி துறைமுகம் அமைத்தல்;

(vi) கடல் அரிப்புத் தடுப்பு நடவடிக்கைகள்;

(vii) அடிப்படை வசதிகள்—விளக்குகள் பொருத்துதல்; அங்காடிகள், பேருந்து நிலயங்கள், பொழுதுபோக்கு வசதிகள். கன்னியாகுமரியில் சுற்றுலாத்துறை பின்வரும் திட்டங்களை ஏற்கெனவே மேற்கொண்டுள்ளது.

(1) இளைஞர் இல்லம்—தங்குமிடம்:— கன்னியாகுமரிக்கு வருவோரில் பெரும்பாலோர் நடுத்தர வருமானமுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவராவர் அவர்களில் பலர் மாலையில் கதிரவன் மறையும் எழிலார்ந்த காட்சியைக் கண்டுகளித்த பின்னர், இரவில் அங்கு தங்கி மறுநாள் பொழுது புலரும் வேளையில் காலைக் கதிரவன் கடல்மிசை எழும் காட்சியைக் கண்டு களிக்க விழைகின்றனர். ஆகவே, இங்கு குறைந்த செலவில் போதுமான இடவசதியை உடனடியாக அமைத்துத் தருவது அவசியமாகும். இதற்காக ரூபாய் 5.00 இலட்சம் செலவில் இளைஞர் இல்லம் கட்ட அனுமதிக்கப்பட்டது. இப்பணி நடந்தேறி வருகிறது இப்பணியை முடிப்பதற்காக 1983–84ல் ரூபாய் 10.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(2) கலையரங்கு நிறுவுதல்,—சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சியோடு பொழுதுபோக்க போதிய வசதிகள் இல்லை. கலை நிகழ்ச்சிகள், பொருட் காட்சிகள் நடத்துவதற்கு ஒரு கலையரங்கை அமைக்க ரூ. 15 இலட்சம் செலவில் கலையரங்கை நிறுவுதற்கு அளிக்கப்பட்டு 1983-84-ல் இதற்காக ரூபாய் இலட்சம் ஒதுக்கப்பட்டது.



(3) ஓய்வகம் அமைத்தல்.— சுற்றுலாப் பேருந்துகளில் எண்ணற்ற பயணிகள் கன்னியாகுமரிக்கு வருகின்றனர். கன்னியாகுமரியில் தற்போதுள்ள இடவசதி மிகக் குறைவாக உள்ளது. தங்குதல் என்பது மிகச் செலவுக்குட்பட்டுள்ளது. இட நெருக்கடியைக் குறைக்கவும், சுற்றுலாப் பயணிகள் சிலர் சில நாட்கள் தங்குவதற்கு மட்டுமே இங்கு வருவதைக் கருத்திற் கொண்டும் இந்து சமய—அறநிலையத் துறையின் உடனுழைப்புடன் ஓய்வு அகம்— பேருந்துகள் நிறுத்துமிடம் கட்டும் ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு சுற்றுலாத் துறை 1983–84-ல் ரூபாய் 5.00 இலட்சம் தொகை ஒதுக்கியுள்ளது.

(4) ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித்துறை விளக்குபொருத்துதல். பேருந்து நிலையம், அங்காடிகள், திரைப்பட அரங்கு, பொழுது போக்கு நிலையம், குழந்தைகள் பூங்கா, கழிப்பிடங்கள் முதலிய அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்கான பணிகளை 1982–83 ஆம் ஆண்டில் ரூபாய் 18.50 இலட்சம் செலவில் மேற்கொண்டுள்ளது.

IV. உதக மண்டலம்.

இந்நாட்டிலுள்ள முக்கிய மலைப்பகுதிகளில் உதக மண்டலமும் ஒன்றாகும். சுற்றுலாப் பயணிகளுக்கு வேண்டிய வசதிகளும், கருத்தரங்கு நடத்துவதற்கான வசதிகளும் உள்ள இடமாக உதகமண்டலத்தை மேம்படுத்த மொத்தம் ரூபாய் 28.00 கோடி செலவு மதிப்புள்ள பெருந்திட்டம் அண்மையில் வகுக்கப்பட்டுள்ளது. இப்பெருந்திட்டத்திலுள்ள கூறுகள் வருமாறு—

(i) இடவசதி—குன்னூரிலும், கோத்தகிரியிலும் இளைஞர் இல்லங்கள்—முதுமலையில் இளைஞர் இல்லமும், சிற்றுண்டிச் சாலையும்;

(ii) தொட்டபெட்டாவுக்கும், சாரிங் கிராசுக்கும் இடையே கம்பிவழிப்பாதை (Ropeway).

(iii) ஏரியையும், ஏரித் தோட்டத்தையும் மேம்படுத்துதல், ஏரியைச் சுற்றிலும் வண்ண விளக்குகள் அமைத்தல்;

(iv) மிதவை அமைப்பிலான சிற்றுண்டிச்சாலை அமைத்தல்;

(v) ஏரியைக் கடப்பதற்கு நடைபாலம் கட்டுதல்;

(vi) முதுமலையில் பார்வை மாடம் அமைத்தல்;

(vii) சுற்றுலாப் பகுதிகளை அழகுப்படுத்துதல்;

(viii) சிறு பேருந்து. குழந்தைகள் தொடர் மின்வண்டி;

(ix) மான் பூங்கா;

மத்திய அரசு நிதியுதவியுடன் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே சில திட்டப்பணிகள் உதகமண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன பின்வரும் முக்கியப் பணிகளை சுற்றுலாத்துறை மேற்கொண்டுள்ளது.

[1983 மார்ச் 28

1 இளைஞர் இல்லம்—சிக்கனமான குறைந்த வருமான முடைய சுற்றுலாப்பயணிகளுக்குக் குறைந்த செலவில் இடவசதி யளிக்கும் பொருட்டு, மொத்தம் ரூபாய் 10.00 இலட்சம் செலவில் உதகமண்டலத்தில் இளைஞர் இல்லம் கட்டி முடிக்கப்பட்டு விட்டது. 1983–84 ஆம் ஆண்டில் மொத்தம் ரூபாய் 12.00 இலட்சம் செலவில் இந்த இளைஞர் இல்லத்தில் மேலும் கூடுதலாக 64 படுக்கைகள் அளவிற்கு தங்கும் வசதியை அதிகரித்திடப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

முதுமலையில் மொத்தம் ரூபாய் 15.00 இலட்சம் செலவில் இளைஞர் இல்லம் கட்டும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக ஏற்கெனவே ரூபாய் 10.00 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

2. 1982-83 ஆம் ஆண்டில் பின்வரும் பணிகளை நிறை வேற்றுவதற்காக ரூபாய் 7.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது :—

(i) சுற்றுலாப் பகுதிகளை மேம்படுத்துதல்;

(ii) சிறு பேருந்துகள் விடுதல்;

(iii) சுற்றுலாப் பயணிகளுக்கு உதகமண்டலத்திலுள்ள முக்கிய இடங்களை சுட்டிக்காட்டி விளக்கிக்கூற பழங்குடி இளைஞர்களுக்கு சுற்றுலா ''வழிகாட்டி'' பயிற்சி அளித்தல்;

(iv) தோடர் இனத்தவரின் பண்பாட்டையும் வாழ்க்கையையும் விளக்கும் துண்டு வெளியீடுகளையும், ஏனைய விளம்பர வெளியீடுகளையும் அச்சிடுதல்;

(v) ஏரித்தோட்டத்தைப் பராமரித்தல்;

3. உதகமண்டலம் நகரத்திலிருந்து தொட்டபெட்டாவிற்குக் கம்பி வழிப்பாதை (Ropeway):—உதகமண்டலத்திலிருந்து தொட்டபெட்டா சிகரத்திற்குக் கம்பி வழிப்பாதை அமைப்பதற்கான செயற்குறிப்பு பரிசீலனையில் இருக்கிறது. இத்திட்டத்திற்கான சாத்தியக் கூறுகள் குறித்து ஆராய்ந்து அறிக்கை தயாரிக்கும்படி இப்பணியில் தொழில் நுட்பம் அறிந்த ஒரு நிறுவனம் கேட்கப்பட்டுள்ளது.

உதகமண்டல ஏரியை அழகுபடுத்த ரூபாய் 10.00 இலட்சம் செலவிலான திட்டமொன்றை பொதுப் பணித்துறை ஏற்று நிறைவேற்றி வருகிறது.

II. சுற்றுலா முதன்மை வாய்ந்த உள்ளூர்ப் பகுதிகளை மேம் படுத்துதல்.

(a) மாவட்டச் சுற்றுலா மையங்கள்.

தமிழ்நாட்டில் பயணிகளைக் கவரும் சுற்றுலாவிடங்கள் பரவலாக அங்கங்கு இருந்தும் அவற்றை இங்குள்ள மக்கள் போதுமான அளவில் சென்று கண்டு பயன்பெறவில்லை. எனவே, இவ்விடங்களை அவர்கள் காண வழிவகுக்க வேண்டுமென்று கருதப்பட்டது. மாவட்டங்களிலுள்ள அருமையான இடங்களை



1983 மார்ச் 28]

இளைய தலைமுறையினரும், திட்டமிட்ட செலவில் சுற்றுப் பயணம் செய்யும் பயணிகளும், சென்று காண ஊக்கமளிக்கும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ''இரண்டு சுற்றுப்பயண இடங்களை'' மாவட்ட உலாத்தலங்களாக மேம்படுத்துவதற்கான திட்டத்தினை இந்த அரசு செயல்படுத்த கருதியுள்ளது. இந்த திட்டங்களில். குறைந்த அளவு அடிப்படை வசதிகளை செய்து கொடுத்தால்தான் சிக்கனமாக சுற்றுலாப் பயணிகளும், மாணவர் களும் இவற்றைச் சென்று காண ஊக்கமளிக்க இயலும். போக்கு வரத்துக் கழகங்களின் உபரி நிதியைக் கொண்டு இப்பகுதிகளை மேம்படுத்த வேண்டும். சம்பந்தப்பட்ட போக்குவரத்துக் கழகத்தின் ஆட்சி வரம்பிலுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்டச் சுற்றுப்பயண இடங்களின் மேம்பாட்டிற்கு, ஒவ்வொரு போக்கு வரத்துக் கழகமும் ரூபாய் 3.00 இலட்சம் முதலீடு செய்யும். பெரும்பாலான மாவட்ட சுற்றுலாவிடங்களுக்குரிய திட்ட அறிக்கைகள் தயாரிக்க பட்டுவிட்டன. ஆனால் பெரும்பாலான போக்குவரத்துக் கழகங்கள் ஆதாயம் ஈட்டாததால் சென்ற இரண்டாண்டுகளில் தேவையான தொகையை ஒதுக்க முடிய வில்லை.

சுற்றுலாத் துறையும், போக்குவரத்துத் துறையும் இணைந்து நிலைமையை மீண்டும் ஆராய்ந்தன. தற்போது இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக 7 மையங்கள் தெரிந்தெடுக்கப் பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1 | பவானி கூடுதுறை | .. | (பெரியார் மாவட்டம்) |
| 2 | பிளவக்கல் | .. | (இராமநாதபுரம் மாவட்டம்) |
| 3 | பேச்சிப்பாறை | .. | (கன்னியாகுமரி மாவட்டம்) |
| 4 | கல்லணை | .. | (தஞ்சாவூர் மாவட்டம்) |
| 5 | ஏலகிரி மலைகள் | .. | (வடஆற்காடு மாவட்டம்) |
| 6 | கொல்லிமலை | .. | (சேலம் மாவட்டம்) |
| 7 | பூண்டி நீர்த்தேக்கம் | .. | (செங்கற்பட்டு மாவட்டம்) |

மையம் ஒவ்வொன்றையும் மேம்படுத்துவதற்கான மதிப்பீட்டுச் செலவு, போக்குவரத்துக் கழகங்கள் அளிக்கும் தொகையை விட அதிகமாக உள்ளது. எனவே எஞ்சிய திட்டங்களை, மாவட்ட ஆட்சியர்கள் செயற்படுத்திவரும் பல்வேறு திட்டங்களில் சேர்க்குமாறு மாவட்ட ஆட்சியர்களும், சம்பந்தப்பட்ட துறை களும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

1983–84 ஆம் ஆண்டில் மேம்படுத்துவதற்காக மேலும் எட்டு மையங்களை மேற்கொள்ளக் கருதப்படுகிறது. எல்லா போக்கு வரத்துக் கழகங்களும் 1983–84 ஆம் ஆண்டிலும் அவரவர் அதிகார வரம்பிலுள்ள பகுதிகளில் குறைந்தது ஒரு சுற்றுலா மையத்திற்காவது உதவி செய்ய முன்வரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களில் இயன்றவரை

இத்திட்டங்களைச் சேர்க்குமாறு மாவட்ட ஆட்சியர்களும், பல துறைத் தலைவர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர் போக்கு வரத்துக் கழகங்களும், மாவட்ட ஆட்சியர்களும், பலதுறைத் தலைவர்களும் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு உறுதுணையாக, சுற்றுலா மையம் ஒன்றுக்கு ரூ. 2.00 இலட்சம் என்ற வீதத்தில் ரூ. 10.00 இலட்சம் அளிக்க சுற்றுலாத்துறை கருதியுள்ளது. இளைஞர்களும், மாணவர்களும் பயணம் செய்ய இத்திட்டம் ஊக்குவிப்பதோடு புதிய இடங்கள் மேலும் வளர்ச்சிகளை பெற்று நாட்டின் வளவாழ்வுக்கு உதவ துணை நிற்கும்.

(b) ஏனைய முக்கிய சுற்றுலா மையங்கள் :

(i) சென்னை : சென்னை மாநகருக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டே வருகிறது. எனவே, சுற்றுலாப் பயணிகளுக்கு இட வசதி நெருக்கடி அதிகரித்துள்ளது. இதில் குறைந்த வருமான முள்ள சுற்றுலாப் பயணிகள் தாம் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். இடவசதி அளிக்கவும், குறைந்த வருமானமுள்ள சுற்றுலாப் பயணி களுக்கு உதவி செய்யவும், அவர்களை ஊக்கப்படுத்தவும், சென்னையில் மொத்தம் ரூபாய் 25.00 இலட்சம் செலவில் சுற்றுலா முகாம் அமைக்கும் திட்டம் ஒன்றை நிறைவேற்ற அரசு முடிவு செய்தது. 1982–83-ல் ரூபாய் 12.50 இலட்சத்திற்கு ஒப்புதலளிக்கப்பட்டது. இப்பணி தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. 1983–84-ல் ரூபாய் 12.50 இலட்சம் வழங்க கருதப்படுகிறது,

(ii) திருச்சி: சுற்றுலாப்பயணிகளை, குறிப்பாக, குறைந்த வருமானமுள்ள சுற்றுலா பயணிகளை அதிக அளவில்ஈர்ப்பதற்காக திருச்சியில் இடவசதியை அதிகரிக்க வேண்டியுள்ளது. எனவே, திருச்சியில் ரூபாய் 15.00 இலட்சம் செலவில் இளைஞர் இல்லம் ஒன்றைக் கட்ட முடிவு செய்யப்பட்டது. 1982–83-ல் ரூபாய் 10.00 இலட்சம் செலவிட ஒப்புதலளிக்கப்பட்டது. இப்பணியை முடிப்பதற்காக 1983–84-ல் ரூபாய் 5.00 இலட்சம் வழங்கக் கருதப்படுகிறது.

(iii) பூம்புகார் சுற்றுலாத் தொகுதி —பூம்புகார் சுற்றுலாத் தொகுதிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதி களைச் செய்து கொடுக்கும் பொருட்டு, பார்வையாளர் அமரிடத்தை மேம்படுத்துதல், மனையை சீரமைத்தல், கூடத்திற்கு அணுகு சாலை அமைத்தல், சுருள் கதவுகளை பழுதுபார்த்தல், தள்ளு கதவுகள் அமைத்தல் முதலிய பணிகளை மேற்கொள்ள கருதியுள்ளது. இதற்காக ரூபாய் 95,000 ஒதுக்கப்படும்.

(c) சுற்றுலா மையங்களை மேம்படுத்தல்.—

(a) பிச்சாவரம் : பிச்சாவரம் வனமும், கடற்கரை யோரமும், சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாக மேம் படுத்துவதற்கு உரிய இடமாக உள்ளன. பிச்சாவரத்தை நல்ல வண்ணம் முழுமையாக மேம்படுத்த தமிழ்நாடு அரசு முடிவு செய்தது இப்பணியை படிப்படியாக நிறைவேற்றும் பொறுப்பு





தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. தற்போது இத்திட்டம் முழு முனைப்பாகச் செயற் படுத்தப்படுகிறது. ஏற்கெனவே அரசு 1982-83 வரை ரூபாய் 17.50 இலட்சத்திற்கு ஒப்புதலளித்துள்ளது. 1983-84 இல் சிற்றுண்டிச் சாலையை அமைக்கவும் உல்லாசப் படகுகள் வாங்கவும் ரூபாய் 7.50 இலட்சம் ஒதுக்கப்படுகிறது. இயற்கை எழிலைக் காண வருவோரை கவர்ந்திழுக்கும் இடமாகவும் இயற்கை சூழ்நிலையை பாதுகாக்கவும், மாணவர்களும், விஞ்ஞானிகளும் ஆராய்ச்சி செய்வதற்கு வசதியாக தாவரங்கள், உயிரினங்களைப் பாதுகாக்கவும் பிச்சாவரத்தைத் தக்க வண்ணம் மேம்படுத்தும் பணி நடந்து வருகிறது.

(b) கொடைக்கானல் : கொடைக்கானலுக்கு வரும் சுற்றுலா பயணிகளுக்குப் போதிய இட வசதி அளிக்கும் பொருட்டு, சுற்றுலா வளாகம் ஒன்றை ஏற்படுத்துவதற்காக அதற்குத் தகுந்த இடத்தையும், கட்டிடத்தையும் வாங்க அரசு கருதியுள்ளது.

(c) குற்றாலம் : குற்றாலத்தில் சுற்றுலாப் பயணிகளுக்கு தங்கும் வசதிகளை அதிகரிக்கும் பொருட்டு, குற்றாலத்தில் சுற்றுலா வளாகம் ஒன்றை ஏற்படுத்துவதற்காக அதற்குத் தகுந்த இடத்தையும், கட்டிடத்தையும் வாங்க அரசு கருதியுள்ளது.

III. சுற்றுலாத் தகவல் கருத்துக்களை பரப்புதலும், மேம் படுத்தலும்

(a) விளம்பரங்கள் : உரிய விளம்பரங்களைச் செய்தல் சுற்றுலா வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும். சிறந்த பிரச்சாரத்தின் மூலம் இந்நாட்டில் பெருமளவுக்கு சுற்றுலாப் பயணிகளை கவர முடியும். வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணி களையும் இந்தியாவில் மற்ற மாநிலங்களிலுள்ள சுற்றுலாப் பயணிகளையும் கவர இம்மாநிலத்திலுள்ள சுற்றுலா மையங் கள் பற்றிய தகவல்களை மக்களை ஈர்க்கும் வகையில் எடுத்துரைக்கக்கூடிய ஏற்பாடு மிகவும் முக்கியமானதாகும். எனவே 1983–84-ல் இந்த வகையில் சில பணிகளை மேம்படுத்த கருதப்பட்டுள்ளது. துண்டு வெளியீடுகள், மடிப்பு வெளியீடு களைத் தயாரித்து வெளியிடுதல், செய்தி இதழ்கள், நாளேடு களில் விளம்பரம் செய்தல் ஆகியவை கருத்துப் பரப்புக்கு பெரிதும் துணை செய்யும். 1983-84-ல் இதற்காக ரூபாய் 5.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(b) பொருட்காட்சிகளும், விழாக்களும்: பொருட்காட்சிகள், விழாக்கள், கண்காட்சிகள் ஆகியவற்றை நடத்துவதன் மூலம் சுற்றுலாத்துறை தக்க விளம்பரம் செய்கிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மாநில அரசிடமிருந்து உதவி பெற்று கடந்த ஒன்பதாண்டுகளாக அகில இந்திய சுற்றுலாப் பொருட் காட்சி நடத்தி வருகிறது. இவ்வாண்டும் மாநில அரசிடமிருந்து பெருமளவில் தொகை பெறப்பட்டு பெரிய அளவில் பொருட் காட்சி நடத்தப்பட்டுள்ளது. இதில் பங்கு பெற்றவர்கள், அரங்கு களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கருதிப்பார்க்கையில் இந்த ஆண்டுதான் பொருட்காட்சி மற்ற எல்லா ஆண்டுகளைவிட

பெரிய அளவில் நடத்தப்பட்டது. இது தவிர தமிழக அரசும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும், ஏனைய மாநிலங்களில் நடத்தப்பட்ட பொருட்காட்சிகளில் பங்கு பெற்றன. அண்மையில், நாம் கர்நாடக அரசு நடத்திய பொருட்காட்சியில் பங்கு கொண்டு, நம்முடைய அரங்குக்காக இரண்டாம் பரிசைப் பெற்றோம். சுற்றுலாத்துறை ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர்கள் நடத்தும் பொங்கல் விழாவுக்கு உதவி செய்கிறது.

பொருட்காட்சி நடைபெறும் இடத்தை மேம்படுத்தி நிலையான பொருட்காட்சியாக அமைக்க அரசு கருதியுள்ளது. இத்தொகுதிக்கான வடிவமைப்பை முடிவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சுற்றுலாத் திடலில் திறந்த வெளி உணவுவிடுதி ஒன்று அமைக்கும் திட்டம் நிறைவேற்றப்படவுள்ளது. வழி நடையாளர்களுக்குக் கூவத்திற்கு குறுக்கே மூன்று பாலங்கள் கட்டவும் தீவுத் திடலில் குடிநீர் வசதி அளிக்கவும் 1983–84-ல் ரூபாய் 10.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(c) புதிய சுற்றுலா அலுவலகங்களை ஏற்படுத்தலும், தற்போதுள்ள சுற்றுலா அலுவலகங்களில் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்தலும்: 1982-83-ல் பம்பாய் நகரில் ஒரு சுற்றுலாத் தகவல் நிலையம் ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. தவிர 1983–84-ல் கல்கத்தாவில் புதிதாகச் சுற்றுலாத தகவல் நிலையம் ஏற்படுத்த கருதப்படுகிறது. இது தவிர, புது டில்லியிலுள்ள தற்போதும் இயங்கிவரும் தகவல் நிலையத்தில் உள்ள பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் உத்தேசிக்கப் பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் தற்போதுள்ள சுற்றுலா அலுவலகங்களில் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் பொருட்டு, தேவையான இடங்களில் இளநிலை உதவியாளர்கள் போன்ற குறைந்தளவுப் பணியாளர்களை நியமிக்கக் கருதப்படுகிறது. 1983–84-ல் இதற்காக ரூபாய் 70,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

(d) சுற்றுலா அலுவலர்களுக்குப் பயிற்சியளித்தல்:—சுற்றுலாத் துறை, பிரச்சாரம் மேம்பாட்டுக்காகத் திட்டங்கள் முதலியவைகளை நிறைவேற்றும்போது சுற்றுலா அலுவலர்கள் தங்கள் பணிகளைத் திறம்படச் செய்யவேண்டும். அவர்கள் உள்ளூர்ச் சுற்றுலா முகவர்கள் ஆட்சியர்கள் மாவட்டத்திலுள்ள ஏனைய அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ளவேண்டும். சுற்றுலா அலுவலர்கள் புதிய கருத்துக்களையும், அண்மையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகளையும் அறிந்து கொண்டால்தான் செவ்விய முறையில் செயல்பட முடியும். எனவே, சுற்றுலா அலுவலர்களுக்கு மறு பயிற்சியளிக்க கருதப்படுகிறது.

(e) சுற்றுலாத் துணைவர் பயிற்சித்திட்டம்: பல இடங்களில் குறிப்பாக திருச்சி, தஞ்சாவூர், மதுரை முதலிய வெளியூர்களில் உரியவாறு பயிற்சியளிக்கப்பட்ட போதுமான துணைவர்கள் இல்லை. எனவே, சுற்றுலா துணைவர்களுக்கு பயிற்சியளிக்கும் ஒரு திட்டத்தை நிறைவேற்ற அரசு முடிவு செய்துள்ளது. மத்திய அரசின் உடனுழைப்புடன் இப்பயிற்சி மதுரையில் நடத்தப் படுகிறது. திருச்சி, தஞ்சாவூர், மதுரை, கன்னியாகுமரி ஆகிய இடங்களிலுள்ள, 30 சுற்றுலா துணைவர்களுக்கு பயிற்சியளிக்கப்



IV. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு உதவி:—

சுற்றுலாத் துறையின் மூலம் வளர்ச்சி நடவடிக்கைகளையும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலமாக சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தலையும், இரு வகைப் பிரிவாகக் கொண்டு நமது அரசு சுற்றுலாத்துறையை மேம்படுத்தி வருகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அரசு நடத்திய சுற்றுலா மாளிகைகளை 1971–ல் எடுத்துக் கொண்டதன் மூலம் தன்னுடைய பணிகளைத் தொடங்கியது. இது தனியார் நிறுவனமாகப் பிரிவு செய்யப்பட்டு பத்தாண்டுகளில் பொது நிறுவனமாக மாற்றப்பட்டது. தற்போது இதன் பங்கு மூலதனம் ரூபாய் 2.26 கோடியாகும். பங்கு மூலதன உதவி தவிர அரசு மானியங்களையும், குறிப்பிட்ட காலக் கடன்களையும் வழங்கியுள்ளது. 1971–72–ல் இக்கழக வருமானம் ரூபாய் 4.58 இலட்சம். இந்த வருவாய் 1981-82-ல் ரூபாய் 201.17 இலட்சமாகவும், 1982-83-ல் ரூபாய் 265.00 இலட்சமாகவும் உயர்ந்தது. 1983–84-ல் ரூபாய் 300.00 இலட்சம் வருமானத்தைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தொடங்கியவுடன் 1971 ஆம் ஆண்டில் தமிழக அரசிடமிருந்து, 5 சுற்றுலா மாளிகைகளை எடுத்துக்கொண்டது. காலத்திற்கேற்ப தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், குறைந்த செலவில் நிறைந்த வசதிகளைத் துய்க்கும் வகையில் இந்த மாளிகைகளை ஓட்டல்களாக (Hotels) மாற்றியமைத்த பெருமை சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தையேசாரும். இன்று தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம், சுற்றுலா மையங்களில், கடற்கரைகளில், நெடுஞ்சாலைகளில் நீள் தொடர் அமைப்பாக ஓட்டல்களையும், மனமகிழ் விடங்களையும், பெருவழி விடுதிகளையும் சீரான முறையில் நடத்தி வருகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்திவரும் ஓட்டல்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| நட்சத்திர ஓட்டல்கள். | ஓட்டல்கள். | மனமகிழ் விடங்கள். | நெடுஞ்சாலை வழித்தட விடுதிகள். | முகாமிடம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| மதுரை<br>கோயம்புத்தூர். | சிதம்பரம்<br>கன்னியாகுமரி<br>மதுரை<br>இராமேசுவரம்<br>தஞ்சாவூர்<br>திருச்செந்தூர்<br>திருச்சி<br>கொடைக்கானல்<br>உதகமண்டலம்<br>ஏர்க்காடு. | ஒகேனக்கல்<br>மாமல்லபுரம் | இராணிப்பேட்டை<br>உளுந்தூர்பேட்டை. | மாமல்லபுரம். |

[1983 மார்ச் 28

1971 ஆம் ஆண்டில் இவற்றில் மொத்தப் படுக்கை எண்ணிக்கை 253 ஆக இருந்தது. தற்போது 1,463 ஆகப் பெருகியுள்ளது. இத்தகைய ஓட்டல்களில் மதுரையிலுள்ள ஒரு ஓட்டலும் கோயம்புத்தூரில் ஒரு ஓட்டலும், 3 நட்சத்திர ஓட்டல்கள் ஆகும். கிருஷ்ணகிரியில் மேலும் ஒரு பெருவழி விடுதி விரைவில் தொடங்கப்படும்.

குறைந்த கட்டண இல்லங்கள் ;

நடுத்தர வகுப்பினர், மாணவர்கள், இளைஞர்கள் ஆகியோரின் தேவைகளையும், அவர்கள் செலவிடும் திறனையும் கருத்திற்கொண்டு, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், இளைஞர் இல்லங்களைக் கட்டி முடிப்பதில் வெற்றி கண்டுள்ளது. இத்தகைய இளைஞர் இல்லங்கள் ஏர்க்காடு, ஊட்டி, மண்டபம், இராமேசுவரம் ஆகிய இடங்களில் ஏற்கெனவே நடைபெற்று வருகின்றன. கொடைக்கானலிலும், ஒகேனக்கல்லிலும் இளைஞர் இல்லங்கள் இரண்டு விரைவில் தொடங்கப்படும். பிச்சாவரம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் இளைஞர் இல்லங்கள் கட்டப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மாமல்லபுரத்தில் சுற்றுலா முகாம் ஒன்றை அமைத்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். மாமல்லபுரத்தில் சுற்றுலா பயணிகளுக்கான புதிய குடில்களும் கட்டி முடியும் தருவாயிலுள்ளன. பிச்சாவரம். முதுமலை, சென்னை ஆகிய இடங்களில் புதிய ஓட்டல்களையும், திருத்தணியில் பெருவழி விடுதியையும் 1983–84 ஆம் ஆண்டில் கட்டுவது குறித்து ஆய்வில் உள்ளது.

ஜனதா ஓட்டல் தொகுதிகள் : 1983–84 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம், இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் உடனுழைப்புடன் ஜனதா ஓட்டல் தொகுதியினை கட்டும் பணியை மேற்கொண்டுள்ளது. இது சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மற்றொரு பெரிய திட்டமாகும். இத்திட்டத்தின் மொத்த செலவு ரூபாய் 350.00 இலட்சம் ஆகும். இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகமும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் இணைந்து ஓட்டல் தொகுதிகளை நிர்வகிப்பதற்காக புதிய நிறுவனம் ஒன்றை தொடங்கக் கருதியுள்ளன. இந்நிறுவனத்திற்கு, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பங்குகள் 51 சதவீதமாக இருக்கும். இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பங்குகள் 49 சதவீதமாக இருக்கும். இவ்வாறு கட்டக் கருதியுள்ள தொகுதிகளில், இரண்டு ஓட்டல்கள் அதாவது 100 அறைகளுடன் கூடிய ஜனதா ஓட்டல் ஒன்றும், 100 அறைத் தொகுதிகளுடன் கூடிய 3 நட்சத்திர ஓட்டல்களும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஜனதா ஓட்டல் நிருவாகத்தை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும், 3 நட்சத்திர ஓட்டல் நிருவாகத்தை இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் ஏற்றுக்கொள்ளுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஓட்டல்களுக்கான நிலம் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானதாகும். இதனை தமிழ்நாடு அரசு இந்நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடும்.



1983 மார்ச் 28]

போக்குவரத்துப் பிரிவு:

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சொகுசுப் பேருந்துகளை இயக்கி வருகிறது. இவற்றை இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் தமிழ்நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனது வண்டிகளில் பல்வேறு சுற்றுலா மையங்களுக்கு அழைத்துச் செல்லவும், அந்தந்த இடங்களின் வரலாற்றுச் சிறப்புகளைச் சீராக எடுத்துரைக்கவும் ஏற்பாடுகள் செய்துள்ளது. இந்த ஏற்பாடு சுற்றுலா பயணிகளின் கருத்தைக் கவர்ந்துள்ளது. கீழ்க்காணும் சுற்றுலாக்களை இக்கழகம் நடத்துகிறது:

1. சென்னை மாநகரில் காணத்தக்க இடங்களான செயின்ட் ஜார்ஜ் கோட்டை, அரசு அரும்பொருட்காட்சியகம், வள்ளுவர் கோட்டம், பாம்புப் பண்ணை, காபாலீஸ்வரர் கோயில், மெரினா கடற்கரை ஆகிய இடங்களுக்கான சுற்றுலா;

2. காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம், மாமல்லபுரம், ஆகிய இடங்களுக்கான சுற்றுலா (நாள்தோறும் நடத்தப்படுவது);

3. தினந்தோறும் திருப்பதி சுற்றுலா;

4. தமிழ்நாட்டில், திருச்சி, ஸ்ரீரங்கம், கொடைக்கானல், மதுரை, கன்னியாகுமரி, சுசீந்திரம், திருச்செந்தூர், இராமேசுவரம், தஞ்சாவூர் ஆகிய இடங்களுக்கான ஏழு நாள் சுற்றுலா;

5. பெங்களூர், சோம்நாத்பூர், ஸ்ரீரங்கப்பட்டினம், பிருந்தாவனம் தோட்டம், மைசூர், முதுமலை வனவிலங்கு உய்விடம், உதகமண்டலம், குன்னூர். கோயம்புத்தூர், கொச்சி, ஒகேனக்கல், திருவண்ணாமலை ஆகிய இடங்களுக்கான 7 நாள் தென்னிந்திய சுற்றுப்பயணம்; மற்றும்

6. வேளாங்கன்னி, நாகூர், திருநள்ளாறு, சிதம்பரம், வைத்தீஸ்வரன் கோயில், பிச்சாவரம், புதுச்சேரி ஆகிய இடங்களுக்குச் சென்று வரக்கூடிய வார இறுதி சுற்றுப் பயணங்கள்.

பேருந்துகளைப் பொறுத்தமட்டில், இக்கழகம் சீர்வளி வசதியுடைய 3 ஊர்திகளை வைத்துள்ளது. இக்கழகத்தின் போக்குவரத்துப் பிரிவு 1972-ல் இரண்டு சொகுசுப் பேருந்துகளுடன் செயல்படத் தொடங்கியது. இப்போது 20 பேருந்துகள் இயங்கி வருகின்றன. ஐந்து சீர்வளி வசதியுடைய பேருந்துகளை ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்ய இக்கழகம் ஏற்கெனவே தேவைக் குறிப்புகளை அனுப்பியுள்ளது. போக்குவரத்துப் பிரிவிலிருந்து கிடைக்கும் வருவாய் 1972-ல் ரூபாய் 1.75 இலட்சமாக இருந்தது; இதுவே, 1981–82–ல் ரூபாய் 61.25 இலட்சமாக உயர்ந்தது. 1982–83 ஆம் ஆண்டில் ரூபாய் 65.00 இலட்சத்தை கடந்துவிட்டது. 1983–84 ஆம் ஆண்டில் மதிப்பிடப்படும் தொகை ரூபாய் 1.00 கோடியாகும். இந்த சுற்றுப் பயணங்கள் தம்முடைய ஆசிய நாட்டு மக்களிடையே பெரிதும்

[1983 மார்ச் 28

பிரபலமடைந்துள்ளன. இச்சுற்றுப் பயணங்கள் குறித்து விளம்பரம் செய்து, சுற்றுப் பயணிகளை ஈர்க்க தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சிங்கப்பூரிலும், மலேசியாவிலும் விற்பனை முகவரமைப்பைப் நியமித்துள்ளது. இதுபோன்ற ஒரு முகவரமைப்பை ஸ்ரீலங்காவிலும் நியமிக்க இக்கழகம் கருதி உள்ளது.

உள்ளங்கவரும் ஏனைய வசதிகள்:—

மலைப் பகுதிகளில் உள்ளங்கவரும் ஏனையவசதிகள் ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன், கொடைக்கானலிலும், ஏர்க்காட்டிலும் தொலை நோக்கி இல்லங்கள் Telescope House அமைக்கப்பட்டுள்ளன. உதகமண்டலத்தில் தொட்டபெட்டா சிகரத்தில் இக்கழகம் மேலும் ஒரு தொலைநோக்கி இல்லத்தை அமைக்கும் பணியை மேற்கொண்டுள்ளது.

உதகமண்டலத்திலும், ஏர்க்காட்டிலும் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் படகு இல்லங்கள் சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் கவர்ந்துள்ளன.

1980-ல் அமைக்கப்பட்டு இக்கழகத்தில் செயற்பட்டு வரும் நினைவு மலர் வெளியீட்டுப் பிரிவு, வடிவமைப்புகளையும், பட அட்டைகளையும், சுற்றுலா வரைபடங்களையும், சிறிய பணப்பை, கைப்பை போன்ற நினைவுப் பொருள்களையும் தயாரித்து வழங்குகிறது.

பொருட்காட்சிகள்:—

இக்கழகம் ஒவ்வொரு ஆண்டும் பொருட்காட்சித் திடலில் சுற்றுலாப் பொருட்காட்சியை நடத்துகிறது. இது பெருமளவிற்கு அனைவரையும் கவர்ந்துள்ளது. இந்தியாவிலுள்ள வேறு மாநிலங்களும் இதில் பங்கு கொள்கின்றன. 1982 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பொருட்காட்சி இக்கழகத்திற்கு ரூபாய் 12.40 இலட்சம் நிகர வருவாயாக ஈட்டித் தந்துள்ளதைப் பார்க்கும்போது, சுற்றுலாப் பொருட்காட்சிக்கு மக்களிடையே பெருமளவில் வரவேற்பு இருந்துவருவது தெரிகிறது. இம்மாநிலத்தில் சுற்றுலா வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்படவுள்ள நிலையான நடவடிக்கைகளில் ஒன்றாக இந்த 22 ஏக்கர் பொருட்காட்சிப் பகுதியில் நிலையான மையம் ஒன்றை ஏற்படுத்த இக்கழகம் கருதியுள்ளது.

பணியாளர் நலன்:

இக்கழகத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு நல்ல ஊதியம் அளிக்கப்படுகிறது. பல்வேறு சட்டங்களில் வரையறுத்துள்ள குறைந்த அளவைவிட அதிக ஊதியம் அளிக்கப்படுகிறது. அவர்களுடைய சம்பள விகிதம், மற்ற இடங்களில் இவர்களைப் போல் உள்ளவர்களுக்கு அளிக்கப்படுவதைவிட அதிகமாகவே அளிக்கப்படுகிறது. இக்கழகம் ஒரு பணியாளர்களுக்கு ஓர் ஆண்டிற்கு ரூபாய் 56/- பங்குத் தொகை செலுத்தி அதன் மூலம் உணவு தயாரிக்கும் பிரிவில் உள்ள பணியாளர்களுக்கு இக்கழகம் மருத்துவ வசதி வழங்கியுள்ளது. மலைப்பகுதிகளில் பணிபுரிபவர்களுக்கு மலைவாழ் படியும் அளிக்கப்படுகிறது. தமிழ்நாடு சுற்றுலா



1983 மார்ச் 28]

வளர்ச்சிக் கழகம் உணவகங்களிலும், போக்குவரத்துப் பிரிவுகளிலும் பணிபுரியும் பணியாளர்களுக்கு கடந்த இரண்டு ஆண்டுகளில் அப்பிரிவுகள் ஈட்டிய மொத்த வருவாயின் அடிப்படையில் உற்பத்தித் திறனுடன் இணைக்கப்பட்ட ஊக்க ஊதிய கொடை வழங்கும் திட்டத்தை கொண்டுவந்து இக்கழகம் தொழிலாளர்களுக்கு ஊக்கமளித்து வருகிறது. இக்கழகத்தின் பணியாளர்களும் தொகுதி காப்புறுதி திட்டத்தின் கீழ் வருகின்றனர். இது தொழிலாளர்கள் பணியிலிருக்கும் போது இறந்து விடுபவர்களின் வாரிசுக்கு ரூபாய் 10,000 ஒட்டு மொத்தத் தொகையாக கிடைக்க வகை செய்கிறது. இத்திட்டத்திற்கான பிரிமியத் தொகையை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமே செலுத்துகிறது. தொழிலாளர்கள் அவர்களுடைய பணிக்கொடை தொகையை எவ்வித இடர்பாடும், காலதாமதமும் இல்லாமலும் பெறுவதற்கு ஏதுவாக இருக்கும் வகையில் பணிக்கொடை பொறுப்பு நிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்கழகத்தின் கடைநிலை பணியாளர்களுக்கு தலைமை அலுவலகத்தில் இரண்டு ஜோடி டெரிகாட்டன் சீருடைகள் அளிக்கப்படுகின்றன. மலைப்பகுதியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு பருத்தி சீருடையுடன் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை கம்பளி சீருடைகளும் கொடுக்கப்படுறது.

சுற்றுலாத் துறையும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் ஒருங்கிணைந்து மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளினால் சுற்றுலாவிற்கான அடிப்படை வசதிகளை பெருக்க இயலும் எனவும், அதன் மூலம் கடந்த காலத்தைவிட தென்னகத்தைக் காணவரும் சுற்றுலாப் பயணிகளைப் பெரும் அளவில் ஈர்க்க இயலும் எனவும் கருதுகிறோம்.

## இணைப்பு VII.

(59 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)
கோரிக்கை எண். 47

### செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல் குறித்த கொள்கை விளக்கக்குறிப்பு.

மக்களாட்சி வடிவமைப்பில், அச்சாணியாக இருப்பது மக்கள் சக்தியாகும். செய்தித் துறை, மக்களாட்சி அமைப்பில் தலையாய இடத்தைப் பெற்று மக்களை எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்வு காண்பதில் தன்னுடைய பங்கை செம்மையாக ஆற்றி, பல்வேறு சாதனங்கள் வாயிலாக மக்களை ஈர்த்து ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபடுத்த வேண்டியுள்ளது. இதனை இத்துறை மிகுந்த கவனத்துடன் செய்து தன் கடமையை நிறைவேற்றி வருகின்றது. அரசின் பணிகளை மக்களுக்கு எடுத்துக்காட்டி மக்கள் சக்தியின் திறனைக் கொண்டு மேலும் ஆக்கபூர்வமான பணிகள் துரிதமான முறையில் நடைபெற இத்துறை தன்னுடைய பல பிரிவுகளையும் ஒருமுகப்படுத்தி சிறப்பாக இயங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும். ஒரு பக்கம் பத்திரிகைத் துறைக்கும், மறுபக்கம் மக்களிடையே நேரிடையான உறவும் தொடர்பும் கொண்டு தன் பணிகளை மேலும் மேலும் வேகமாக நிறைவேற்றுவதில் அக்கறை காட்டி வருகிறது.

அரசின் பல்வேறு துறைகளும், அரசின் பொறுப்பிலுள்ள பல்வேறு கழகங்கள், வாரியங்கள், நிறுவனங்கள் ஆகியவைகளும் தருகின்ற விளம்பரங்கள் அனைத்தும் இந்தத் துறையின் வாயிலாக வெளியிடப்படுகின்றன. செய்தி-மக்கள் தொடர்புத் துறையும் பல விளம்பரங்களைத் தானாகவே தயாரித்து அரசின் சார்பில் வெளியிடுகிறது. இந்த விளம்பரங்கள், பொதுவாக அரசின் கொள்கைகளையும் திட்டங்களையும் பொது மக்களுக்கு விளக்கும் முறையில் அமைகின்றன.

அனைத்து விளம்பர சாதன ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் ஒவ்வொரு மாத இறுதியிலும் மைய அரசின் சார்பில் சென்னையில் கூட்டப்பட்டு வருகிறது. புதிய 20 அம்ச திட்டத்தில் உள்ள பொருள்கள் பற்றி மேற்கொள்ளப்பட்ட சாதனைகள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, அந்த முடிவுகளின்மீது தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. செய்தி, மக்கள் தொடர்பு அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாகவும், புதிய 20 அம்ச திட்டப் பணிகளை அவ்வப்போது மாநிலத்திலுள்ள எளிய மக்களுக்கும், கிராம மக்களுக்கும் விளங்கக்கூடிய வகையில் இத்துறை விளம்பரம் செய்து வருகிறது. மேலும் புதிய 20 அம்ச திட்டத்தைப்பற்றிய பல கையேடுகள் தயாரித்து, எல்லா மாவட்டங்களுக்கும் அனுப்பி விளம்பரம் செய்ய ஏற்பாடு செய்கின்றது.

ஒவ்வொரு மாவட்டத்திலும், செய்தி, மக்கள் தொடர்பு அலுவலர்கள் மேற்பார்வையில் மாவட்டங்களிலுள்ள திரைப்பட ஓட்டுநர்கள் மாதம் ஒன்றுக்கு ஒவ்வொருவரும் சராசரியாக 20 படக்காட்சிகள் நடத்தி அரசின் கொள்கைகளை மக்கட்கு உதவும் வண்ணம் விளம்பரம் செய்கின்றனர், அரசின் திட்டங்களான மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, குடும்பநலம் மற்றும் சிறுசேமிப்பு போன்றவற்றை பொது மக்களுக்குத் தெரிவிக்க விளம்பரத் திட்டத்தின்கீழ் வில்லுபாட்டு, நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

இத்துறையின் செய்தித் தொடர்பு பிரிவில் அரசால் மக்களுக்குத் தெரிவிக்க வேண்டிய பொது முக்கியத்துவம் வாய்ந்த செய்திகள் செய்தி வெளியீடுகளாக வெளியிடப்படுகின்றன.

அரசின் பல்வேறு திட்டங்கள் சாதனைகள் குறித்து மக்களுக்குப் பத்திரிகைகள் மூலம் தெரிவிப்பதற்கு ஏதுவாக பத்திரிகையாளர்கள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் அழைத்துச் செல்லப்படுகின்றனர். கடந்த ஆண்டு ஜூலைத் திங்களில் தமிழகம் அடைந்துள்ள தொழில் முன்னேற்றம் குறித்து அறிந்து கொள்ளுவதற்காக பத்திரிகையாளர்கள் பயணம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் நடைபெறுவதை நேரில் கண்டு எழுதுவதற்காக இதேபோன்று பத்திரிகையாளர் பயணம் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் ஏற்பாடு செய்யப்பட்டது.





இந்த ஆண்டு பிப்ரவரி திங்களில் சென்னையைச் சார்ந்த பத்திரிக்கையாளர்கள் குழு ஒன்று குஜராத் மாநிலத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு நடைபெற்று வரும் பல்வேறு பணிகளைப் பார்வையிட்டது.

அரசின் பல்வேறு திட்டங்கள் பணிகள் பற்றி மக்கள் அறிந்து கொள்வதற்கு ஏதுவாக மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் அரசு செயலர்களுக்காக 'வளரும் தமிழகம்' என்ற தலைப்பில் மாதம் இருமுறை வானொலியில் உரையாற்ற இத்துறை ஏற்பாடு செய்கிறது.

அரசின் பல்வேறு ஆக்கப் பணிகள் மற்றும் அரசு விழாக்கள் ஆகியவற்றை மக்களுக்குத் தெரிவிக்கும் வகையில் தொலைக் காட்சி, திரைப்படம், புகைப்படமாக எடுத்து விளம்பரப்படுத்த இத்துறை ஏற்பாடு செய்கிறது.

வெளிநாட்டுப் பத்திரிக்கையாளர்கள் மற்றும் வெளிமாநிலப் பத்திரிகையாளர்கள் இந்த மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று அரசின் பணிகள் பற்றி தெரிந்து கொள்வதற்காக இத்துறை தகுந்த ஏற்பாடு செய்கிறது. மேலும் வெளிநாட்டுத் தொலைக்காட்சியினர் இம்மாநிலத்தின் பல்வேறு பகுதிகளையும் தொலைக்காட்சிப் படமாக எடுப்பதற்கும் இத்துறை தகுந்த ஏற்பாடு செய்கிறது.

சென்னை நகரிலுள்ள பத்திரிகையாளர்கள் மற்றும் மாவட்டத் தலைநகரிலுள்ள பத்திரிகையாளர்கள் செய்தி சேகரிப்பதற்கு உதவியாக இத்துறை அரசு சான்றிதழ் வழங்குகிறது.

விழாக்கள் :

நாட்டு மக்களுக்கு வரலாற்று நிகழ்ச்சிகளையும் மக்களுக்காகப் பாடுபட்ட தலைவர்களின் பெருமைகளையும் எடுத்து விளக்குவதற்காக விழாக்களையும் தலைவர்களின் பிறந்த நாள் விழா, நினைவு நாள் நிகழ்ச்சிகளையும் இத்துறை நடத்துகிறது.

1982–83-ம் ஆண்டில் சென்னையிலும் இதர மாவட்டங்களிலும் 24 விழாக்கள் தேசிய தலைவர்களின் பிறந்த நாளாகவும் நினைவு நாளாகவும் இத்துறை சார்பில் கொண்டாடப்பட்டன. அவை பின்வருமாறு :—

1. நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்த நாள்.
2. டாக்டர் அம்பேத்கார் பிறந்த நாள்.
3. சித்திரை முழுநிலவு நாள்.
4. பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாள்.
5. பண்டிதமணி கதிரேசனார் நூற்றாண்டு விழா.
6. வீரபாண்டிய கட்டபொம்மன் விழா.

7. காயிதேமில்லத் பிறந்தநாள்.
8. காமராஜ் பிறந்தநாள்.
9. பாவலர் செய்குத்தம்பி பிறந்தநாள்.
10. வல்வில் ஓரி விழா.
11. சுதந்திர தினம்.
12. திரு. வி. க. நூற்றாண்டு விழா.
13. வ.உ. சிதம்பரனார் பிறந்தநாள்.
14. மகாகவி பாரதியார் நினைவுநாள்.
15. பேரறிஞர் அண்ணா பிறந்தநாள்.
16. தந்தை பெரியார் பிறந்தநாள்.
17. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை நினைவுநாள்.
18. மகாத்மா காந்தி பிறந்தநாள்.
19. மாயூரம் வேதநாயகம் பிள்ளை பிறந்தநாள்.
21. நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார் பிறந்தநாள்.
22. முத்துராமலிங்கத் தேவர் பிறந்தநாள்.
22. மனித உரிமை நாள்.
23. இராஜாஜி பிறந்தநாள்.
24. ரசிகமணி டி. கே. சிதம்பரனார் நூற்றாண்டு நிறைவு விழா.

வரும் ஜூலைத் திங்களிலிருந்து ஓராண்டுக் காலம் பெருந்தலைவர் காமராஜரின் பிறந்த நாளைச் சீரும் சிறப்புமாகக் கொண்டாட அரசு திட்டமிட்டுள்ளது.

புதுடல்லியில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் 1982 ஆம் ஆண்டு நவம்பர் 19-ம் நாளன்றும் மற்றும் டிசம்பர் 4-ம் நாளன்றும், முறையே துவக்க மற்றும் நிறைவு நாள் நிகழ்ச்சியில் தமிழகக் கிராமியக் கலை, கலாச்சாரத்தை மக்களிடையே எடுத்துக்காட்டும் வகையில் 186 பேர்கள் அடங்கிய கலைக் குழுவை மத்திய அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க தமிழக அரசு அனுப்பியது. 19-11-1982 அன்று ஆசிய விளையாட்டுத் துவக்க விழாவில், அந்நிகழ்ச்சிகள் நடத்திட காவல்துறையைச் சேர்ந்த கரக, காவடி, கலைஞர்களையும் மாவட்ட இசைக்கலைஞர்களையும் கொண்டு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

4-12-1982 அன்று நிறைவு விழாவில் விலங்குகளின் ஆட்டம் ஒன்றில் (Animal Dance) காளை, மயில், பொய்க்கால் குதிரை நிகழ்ச்சிகள் மாவட்டத்திலுள்ள கலைஞர்களையும், காவல்துறைக் கலைஞர்களையும் கொண்டு நிறைவு விழா நடத்தப்பட்டது.





தமிழகக் கலாச்சாரப்படி தேசிய மாணவர் படையைச் சேர்ந்த 3 பெண்களுக்கு மூன்று விதமான மணப்பெண் அலங்காரம் செய்யப்பட்டு அவர்கள் மூலம் விளையாட்டில் வெற்றி பெற்றவர்களுக்குப் பதக்கங்கள் அளிக்கப்பட்டன.

திரு. நரேந்திர சிங், தேசிய மாணவர் படைத் தலைமை இயக்குநர் அவர்களும் மற்றும் தலைமைத் தளபதி ஜெனரல் திரு. கே. கிருஷ்ணராவ் அவர்களும் தமிழ் நாட்டின் கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற, உதவியாக இருந்த அனைத்துக் கலைஞர்களுக்கும் தமது பாராட்டுதல்களைத் தெரிவித்துள்ளனர்.

மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா.

மகாகவி பாரதி நூற்றாண்டு விழாவினைக் கொண்டாட வேண்டுமென்ற அரசின் முடிவின்படி தமிழ்நாடு முழுவதும் 1981 டிசம்பர் 11-ம் நாள் முதல் ஓராண்டிற்குக் கொண்டாடப் பட்டது. இந்நூற்றாண்டு விழா, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும், நகராட்சியிலும், மாவட்டத் தலைநகரிலும் நூற்றாண்டின் ஒவ்வொரு நாளும் ஏதேனும் ஓர் இடத்தில் நடைபெறும் வண்ணம், ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டது. இந்த நூற்றாண்டு விழா ஒரு சம்பிரதாய விழாவாக அமையாமல், மகாகவி பாரதியையும் அவரது கருத்துக்களையும் மக்கள் மனதில் பதியும் வண்ணம் அமையவேண்டுமென்பதில் அரசு ஆழ்ந்த அக்கறை எடுத்தது. பாரதியின் கருத்துக்கள் இளைய சமுதாயத்தினரிடையே பதியவேண்டுமென்பதாலும், பாரதி வலியுறுத்திய தேசிய ஒருமைப்பாட்டுக் கொள்கை, மற்றும் பொருளாதார சமுதாய சீர்திருத்தக் கருத்துக்கள் அவர்கள் மனதில் பதியவேண்டுமென்ற நோக்கத்திலும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கும், உடல் ஊனமுற்றோர்க்கும் பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டி பல்வேறு நிலைகளில் நடத்தப்பட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டன. மாநிலத்தில் நடைபெற்ற விழாக்களில் ஏதேனும் திட்டத்திற்கோ, கட்டிடத்திற்கோ பாரதியின் பெயர் சூட்டப்பட்டது. 1981-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற தொடக்க விழாவும், 1982-ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற நிறைவு விழாவும் தமிழக வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றவை. இவ்விரு விழாக்களிலும் ஆளுநர்கள், மத்திய அமைச்சர்கள், பிற மாநில முதலமைச்சர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சென்னையில் 1982 டிசம்பர் மாதம் 16 மற்றும் 17 ஆகிய இருநாட்களும் நிறைவு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. முதல்நாள் விழாவில் சிறப்புமிக்க ஒரு மாபெரும் பெண்கள் பேரணி தமிழகம் இதுவரை கண்டிராத வகையில் அனைவரும் போற்றத்தக்க வகையில் நடைபெற்றது. பல துறைகளில் முன்னேற்ற நிலையில் உள்ள பாரதியார் கண்ட புதுமைப் பெண்களான — நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், நிர்வாகத் துறையில் உள்ள அதிகாரிகள், அரசு அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், பொறியாளர்கள், வழக்கறிஞர்கள்

வங்கி ஊழியர் மற்றும் பல துறைகளில் பணிபுரியும் பெண்மணிகள் ஆகியோர் சரித்திரப் பிரசித்தி பெற்ற இந்தப் பேரணியில் ஆர்வமுடன் பங்கேற்று பாரதியாரின் முன்னேற்றக் கொள்கைகளைச் சுவரொட்டிகள் மூலம் தாங்கிக்கொண்டும், பாடல்கள் மூலம் பாடிக்கொண்டும் ஆர்வத்துடன் பெருமிதமாகச் சென்றனர். இந்தப் புகழ்பெற்ற காட்சியை தமிழ்நாடு ஆளுநர், பீகார் மாநில ஆளுநர், மத்தியக் கல்வி அமைச்சர் மற்றும் மாண்புமிகு தமிழக முதல்வர், அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் திரளாகக் கூடியிருந்த பொதுமக்களுடன் சேர்ந்து கண்டு மகிழ்ந்தனர். அன்று மாலை நடைபெற்ற விழாவில் பீகார் மாநில மேதகு ஆளுநர் அவர்கள் தொடக்கவுரையாற்றினார். மாண்புமிகு மத்தியக் கல்வி அமைச்சர் அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். இரண்டாவது நாள் 17–12–1982 அன்று முற்பகலில் பட்டிமண்டபமும் மாலையில் பிற மாநில அமைப்புகளின் கலை நிகழ்ச்சிகளும் சிறப்பு நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. சிறப்பு நிகழ்ச்சியில் தமிழ்நாடு மேதகு ஆளுநர், மாண்புமிகு மத்தியப் பாதுகாப்பு அமைச்சர், மத்திய விவசாய இணை அமைச்சர், மத்திய செய்தி ஒலிபரப்பு அமைச்சர், மற்றும் முதலமைச்சர், சட்டமன்ற மேலவைத் தலைவர், அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழக அறிஞர்களும் அயல்நாட்டிலுள்ள அறிஞர்களும் வழங்கியுள்ள படைப்புகளை உள்ளடக்கி பாரதி நூற்றாண்டு நினைவு மலர் ஒன்று தயாரிக்கப்பட்டு நூற்றாண்டு நிறைவு விழாவில் வெளியிடப்பட்டது. நூற்றாண்டு நிறைவு விழாவின் போது பாரதி சிறப்பு அஞ்சல் உறைகள் வெளியிடப்பட்டன. அஞ்சல் துறை சிறப்பு முத்திரையும் வெளியிடப்பட்டது.

மாண்புமிகு தமிழக முதல்வரின் வேண்டுகோளையேற்று கேரளா, மேற்கு வங்காளம், ஒரிசா, பீகார், அரியானா, இமாச்சல பிரதேச மாநில அரசுகள் பாரதி நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடின. கல்கத்தாவில் நடைபெற்ற மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலந்துகொண்டார்கள். நூற்றாண்டு விழாவின் ஒரு பகுதியாக, தமிழ்நாடு அரசு வழங்கிய பாரதியாரின் முழு உருவச்சிலை கல்கத்தாவில் வெசான்ந்தா பூங்காவில் நிறுவப்பட்டது. பாரதியாரின் மார்பளவுச்சிலை ஒன்றினையும் கௌகாத்தி நகரில் நிறுவிட தமிழ்நாடு அரசு தன் செலவில் அன்பளிப்பாகத் தயாரித்துக் கொடுத்தது. 10 அடி உயரமுள்ள மகாகவி பாரதியாரின் சிலையினைச் செய்து டில்லியில் விரைவில் நிறுவிட தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. வெளி மாநிலங்களில் நடைபெற்ற நூற்றாண்டு விழாவினையொட்டி தமிழக அரசின் சார்பில் கலைக்குழுக்கள் அனுப்பிவைக்கப் பட்டன.

பாரதியாரின் புகழினை வெளிநாடுகளில் பரப்பும் வண்ணம், லண்டன், மொரீஷியஸ், ஆஸ்திரேலியா, பிஜித் தீவுகள் மற்றும் மலேசியாவிற்கு பாரதியின் பாடல்கள் கொண்ட நிகழ்ச்சிகளை வழங்கும் கலைக் குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டன.



பாரதி நூற்றாண்டாகிய 1981–82ஐ தேசிய ஒருமைப்பாட்டு ஆண்டாக அறிவித்து அரசு ஆணையிட்டது. இவ்வரசின் வேண்டுகோளை ஏற்று வழக்கமாக ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 19 முதல் 25 வரை கொண்டாடப்பட்டு வரும் தேசிய ஒருமைப்பாட்டு வாரத்தினை மகாகவி பாரதியார் நூற்றாண்டினையொட்டி நவம்பர் 19 முதல் டிசம்பர் 11ம் நாள் வரை நாடு முழுவதும் கொண்டாடவேண்டுமென மைய அரசு ஆணை பிறப்பித்தது. தேசிய ஒருமைப்பாட்டினை வலியுறுத்தும் வண்ணம் பாரதியின் பிறந்த நாளான டிசம்பர் 11-ம் நாளை பாரதி நாளாக இனிவரும் ஆண்டுகளில் கொண்டாட வேண்டுமெனத் தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இந்நூற்றாண்டு விழாவினையொட்டி மக்களுக்குப் பயன்தரும் திட்டங்கள் பல தொடங்கப்பட்டன. ரூ. 15 இலட்சம் செலவில், பாரதி பிறந்து வாழ்ந்த ஊரான எட்டயபுரத்திற்குப் பல வசதிகள் செய்யப்பட்டன. பாரதி பெயரிலும் பெண்களுக்கென தனியாக ஒரு பல்கலைக்கழகம் தொடங்குதல், எட்டயபுரத்தில் ஒரு மகளிர் பாலிடெக்னிக் ஏற்படுத்துதல், பெண்களுக்கென பள்ளிகள் நிறுவுதல், எட்டயபுரத்தில் நூற்பாலை ஒன்று தொடங்குதல், பல்கலைக் கழகங்களில் பாரதி நிபுணத்துவம் ஏற்படுத்துதல், சென்னையில் பாரதிக்கு ஒரு நினைவாலயம் கட்டுதல், பாரதி வாழ்ந்த இடங்களில் நினைவுச் சின்னங்கள் ஏற்படுத்துதல், எல்லாப் பெண்கள் பள்ளிகளிலும் இசை ஆசிரியர்கள் நியமித்தல், இருபாலரும் இணைந்து கற்கும் பள்ளிகளில் மாணவிகளின் எண்ணிக்கை 100-க்கு மேல் இருந்தால் உடற்பயிற்சி ஆசிரியைகள் நியமித்தல், பாரதி வாழ்க்கை வரலாறு பற்றிய திரைப்படம் தயாரித்தல் போன்ற திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என்று எட்டையபுரத்தில் நடைபெற்ற தொடக்க விழாவின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இதனைச் செயல்படுத்தும் மேல் நடவடிக்கைகள் உரிய துறைகளில் எடுக்கப்பட்டு வருகின்றன. எட்டயபுரத்தில் ஒரு கலைக்கூடம் ஒன்றினை அமைக்கவும் அரசு முடிவெடுத்துள்ளது. பிற மொழிகளில் பாரதியாரின் குறிப்பிட்ட படைப்புக்களை வெளியிடும் பணியினைச் மதுரை காமராஜ் பல்கலைக் கழகமும், பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றினை வெளியிடும் பணியினைச் சென்னைப் பல்கலைக்கழகமும் மேற்கொண்டுள்ளன. பாரதி நினைவு மண்டபம் கட்ட பாட்னாவிலுள்ள தென்னிந்திய கலாச்சார மன்றத்திற்கு ரூ. 1 இலட்சம் மானியமாக இவ்வரசு வழங்கியுள்ளது. பாரதியாரின் மைத்துனிக்கு ரூ. 50 மாதாந்திரச் சிறப்பு ஓய்வூதியமாக வழங்க அரசு ஆணை பிறப்பித்து நான்கு மாதங்கள் அளித்தது.

### தந்தை பெரியார் நூற்றாண்டு விழா :

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாக்களின் தொடர்ச்சியாக அவரது வாழ்க்கையையும், கொள்கைகளையும் விளக்கும் ஒலி–ஒளி அரங்கக் காட்சிகள் சென்னையில், முதலில் நடத்தப் பட்டன. பெரியார் ஒலி–ஒளி அரங்கக் காட்சிகள் பல்லாயிரக் கணக்கான மக்களையும், பல்வேறு அறிஞர் பெருமக்களையும்

கவர்ந்து, பாராட்டுக்களைப் பெற்றுள்ளன. இதுவரை இக்காட்சிகள் சென்னை, திருச்சி, தஞ்சாவூர், வேலூர், திருநெல்வேலி, ஈரோடு ஆகிய இடங்களில் நடத்தப்பட்டுள்ளன. பெரியாரின் பொன்மொழிகள் அடங்கிய ''பெரியார் புரட்சி மொழிகள்'' என்ற புத்தகம் மலிவுப் பதிப்பாக வெளியிடப் பட்டுள்ளது. தந்தை பெரியார் நூற்றாண்டு விழாக்குழுவின் பரிந்துரைப்படி, அமைக்கப்பட்ட வல்லுநர் குழு, தந்தை பெரியார் வாழ்க்கை வரலாறு மூன்று பகுதிகளாக வெளியிடும் பொருட்டும், சிறுவர்களுக்கு விளங்கும் வகையில் அவரது வரலாற்றினை வரைபட வரலாற்று நூலாகவும் தயாரித்து வருகிறது. பிற மொழிகளிலும் அவைகளை வெளியிடுவது பற்றி அரசு ஆலோசிக்கும்.

1924 ஆம் ஆண்டில் கேரளத்தில் 'வைக்கம்' என்ற இடத்தில் பெரியார் அவர்கள் தீண்டாமைக்கு எதிராகப் போராடிய வரலாற்றின் நினைவாக வைக்கத்தில் 'பெரியார் வளாகம்' அமைக்கப்படும். இந்தப் பெரியார் வளாகத்தில் தந்தை பெரியார் சிலையும், நூலக அரங்கும், பூங்காவும், இளைஞர் விளையாட்டுத் திடலும் அமைக்கப்படும். இதனைக் கேரள அரசின் ஒத்துழைப்புடன் இவ்வரசு நிறைவேற்றும். கேரள மாநிலத்திலுள்ள வைக்கம் நகரில் பெரியார் வளாகம் அமைப்பதற்கு ரூ. 11·5 இலட்சம் செலவிட அரசு கருதியுள்ளது. வைக்கம் நகரில் பெரியார் நினைவு வளாகம் 91 சென்ட் நிலத்தில் அமைக்கப்பட உள்ளது. இந்நிலத்தினை இலவசமாக வழங்க கேரள அரசு சம்மதித்துள்ளது. இதற்காகக் கேரள அரசு ரூ. 5 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. நிலம் ஒப்படைப்பு செய்யப்பட்டவுடன் பெரியார் நினைவு வளாகம் அமைக்கும் பணி தொடங்கும்.

சென்னையில் பெரிய அளவில் மாநாட்டு அரங்கம் ஒன்றையும் அறிவியல் ஆய்வகம் ஒன்றையும் தந்தை பெரியார் நினைவாக அமைத்திட அரசு பரிசீலித்து வருகிறது.

பெரியார் வைக்கப்பட்டிருந்த சிறைகளில் நினைவுக் கற்பலகைகள் நிறுவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எல்லா மாவட்டங்களிலும், பெரியாரின் பொன் மொழிகளைக் கொண்ட பெரியார் நூற்றாண்டு நினைவுத் தூண்கள் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, இதுவரையிலும், திருச்சி, ஈரோடு, காஞ்சிபுரம், தஞ்சாவூர், திருநெல்வேலி, உதக மண்டலம், கோயம்புத்தூர், புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம், தர்மபுரி, சேலம், வேலூர் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டுள்ளன. தென் ஆற்காடு, கன்னியாகுமரி ஆகிய இடங்களில் நினைவுத்தூண் நிறுவிட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.



பொருட்காட்சிகள் :

மாநிலத்தில் அரசு பொருட்காட்சிகளை நடத்துவதுடன் பிற மாநிலங்களில் நடைபெறும் பொருட்காட்சிகளில் அரசின் சார்பாக இத்துறை பங்குபெற்று அரசின் பல்வேறு துறைகளின் செயற்பாடுகளையும் சாதனைகளையும் விளக்கும் பணியினை ஆற்றி வருகிறது.

அரசுக்கும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் சொந்தமான பொதுவிடங்களில் தனி நபர்களோ அல்லது தனி நிறுவனங்களோ பொருட்காட்சி நடத்த அனுமதி அளிப்பதில்லையென்று அரசு கொள்கை அளவில் முடிவெடுத்துள்ளது. எனினும், அரசின் முன்அனுமதி பெற்று பொது நன்மைக்காக உள்ளாட்சி நிறுவனங்களும், அங்கீகாரம் பெற்ற தொழில், வர்த்தக, கல்வித்தொண்டு நிறுவனங்களும் பொருட்காட்சிகளை நடத்த அனுமதிக்கப்படுகின்றன இத்துறை 1982-ல் வேலூர், திருச்சி, மதுரை, கும்பகோணம், திருநெல்வேலி, சேலம், கோவை போன்ற இடங்களில் பொருட்காட்சி நடத்தியது. அரசு நடத்தும் பொருட்காட்சிகள் அரசுக்கு வருமானத்தை ஈட்டித் தந்துள்ளது. பொதுமக்களுக்கு கல்வியூட்டும் வகையிலும் பொருட்காட்சிகள் நலன் அளித்துள்ளன.

1978 ஆம் ஆண்டு முதல் 1982 முடிய அரசு நடத்திய 16 பொருட்காட்சிகளில் நுழைவுக் கட்டணம், கடை வாடகை, முழுஉரிமை ஏலம், மின் இணைப்புக் கட்டணம் மூலம் கிடைத்த மொத்த வருமானம் ரூ. 206 05 இலட்சம். இதில் கட்டுமானச் செலவுகள், மின் செலவுகள், கலை நிகழ்ச்சிகள் செலவு மொத்தமாக ரூ 99·63 இலட்சம், பொருட்காட்சியில் பங்கு கொண்ட அரசுத் துறைகளின் மொத்த செலவினம் ரூ. 47·13 இலட்சம். ஆக அரசுக்குக் கிடைத்துள்ள நிகர வருமானம் ரூ. 59·29 இலட்சமாகும்.

இத்துறை தமிழ்நாட்டின் சார்பாக டில்லியில் அக்டோபர் மாதத்தில் நடைபெற்ற பூல்-வாலோன்-கி-சாயர் (மலர் ஊர்வலம்) விழாவிலும், டில்லியில் நவம்பர்-டிசம்பர் மாதங்களில் இந்திய உலக வர்த்தகப் பொருட்காட்சியில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு அரங்கிலும் பங்குகொண்டது. 'தமிழ்நாடு தினம்' கொண்டாடப்பட்டது.

செய்தி நிலையங்கள் :

சென்னை, மதுரை, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் மூன்று செய்தி நிலையங்கள் இயங்குகின்றன. அவை நூலகம், படிப்பகம கொண்டதாகவும் படக்காட்சிகள் நடத்திட வசதிகள் கொண்டதாகவும் உள்ளன. மக்களுக்கு எல்லாப் பொருள் குறித்தும் செய்திகளைக் கொடுக்க வசதிகள் இந்தச் செய்தி நிலையங்களில் உள்ளன. 1—4—1982 முதல் 28—2—1983 வரையிலான காலத்தில் இந்த மூன்று செய்தி நிலையங்களில் இயங்கி வரும் நூலகங்கள், படிப்பகங்கள் ஆகியவற்றில் படித்துப் பயன் பெற்றோர் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | பயன்பெற்றவர் எண்ணிக்கை. |
|---|---|
| செய்தி நிலையம், சென்னை .. .. | 1,02,520 |
| செய்தி நிலையம், மதுரை .. .. | 32,621 |
| செய்தி நிலையம், தஞ்சாவூர் .. .. | 14,400 |

**கலைவாணர் அரங்கம் :**

அரசினர் தோட்டத்தில் உள்ள கலைவாணர் அரங்கம் அரசு பராமரிப்பில் இயங்குகிறது. இந்தக் குளிர்சாதன அரங்கு அரசு விழாக்கள், தனியார் நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றிற்கு ஒதுக்கப்படுகிறது. தனியாருக்குக் கட்டணம் வசூலித்தும் அரசுத் துறைக்குச் சலுகை கட்டணம் வசூலித்தும் ஒதுக்கப்படுகிறது. தினந்தோறும் படக்காட்சிகள் இங்கு நடத்தப்படுகின்றன. ஒதுக்கீட்டுக்கான வாடகை வசூலிக்கப்பட்டு வருகிறது.

**அண்ணா கலையரங்கம், வேலூர் :**

வேலூரில் உள்ள அண்ணா கலையரங்கம் புதுப்பிக்கப்பட்டபின் 5-5-1978 அன்று மீண்டும் திறக்கப்பட்டது. தினசரி படக்காட்சிகள் இந்த அரங்கில் நடத்தப்பட்டு வருகின்றன. விழாக்கள் நடைபெறாத சமயங்களில் நாளொன்றுக்கு இரண்டு காட்சிகள் வீதம் திரைப்படம் நடத்த சில விதிகளின்கீழ் அனுமதிக்கப்படுகிறது. தனிப்பட்ட அமைப்புகளிடமிருந்து வாடகை பெறப்படுகிறது. அரசுத் துறைகளுக்குச் சலுகையில் அனுமதிக்கப்படுகிறது.

**நினைவகங்கள் :**

தமிழ்நாடு அரசைச் சார்ந்த நினைவகங்கள் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் நிர்வாகப் பொறுப்பில் இருந்து வருகின்றன.

சென்னை, அண்ணா சதுக்கத்துக்கு வருகைதரும் பொது மக்களுக்கு வசதிகளைப் பெருக்கும் வகையில், பசுங்கொடிப் பந்தலிட்ட நடைபாதை இருபுறமும் அமைக்கப்பட்டுள்ளது. அண்ணா சதுக்கத்தில் முன்புறம் இரண்டு குடிதண்ணீர்த் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன. நுழைவு வாயிற்பகுதியிலுள்ள கல்தளமும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. ஒரு நூலகக் கட்டிடம் அமைத்தல் மற்றும் சோடியம் வேப்பர் விளக்குகள் அமைத்தல் ஆகியவற்றிற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

சென்னை வள்ளுவர் கோட்டத்தை மேலும் அழகுபடுத்தும் வகையிலும், அங்கு வருகைதரும் பொதுமக்களுக்குப் புதிய வசதிகளை அளிக்கும் வகையிலும், அரசுக்கு வருவாயை



அதிகரிக்கும் வகையிலும் ரூ. 10 இலட்சம் செலவு மதிப்பீட்டில் அங்கு அங்காடிக் கட்டிடம் அமைத்தல், சுற்று மதிற்சுவர் கட்டுதல், மேற்தளத்தில் உள்ள தண்ணீர்த் தடாகங்களைச் சுற்றிலும் அழகிய கம்பிவேலி அமைத்தல் மற்றும் தோரண வாயிலின் எழிலை மேலும் பெருக்க பூங்கா முதலியன அமைத்து அழகுபடுத்துதல் போன்ற மேம்பாட்டுப் பணிகளை நிறைவேற்றும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது.

கன்னியாகுமரி காந்தி மண்டபத்தில் ரூ. 1·15 இலட்சம் செலவு மதிப்பீட்டில் சுற்று மதிற்சுவர் கட்டுதல், கண்ணைக் கவரும் பூங்கா மற்றும் அழகிய புல்வெளிகள் அமைத்தல் போன்ற மேம்பாட்டுப் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

ஜவகர்லால் நேருவுக்கு மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து சென்னை நகருக்கு வரும் வழியில் அமைந்துள்ள கத்திப்பாரா சந்திப்பில் ரூ. 11·25 இலட்சம் மதிப்பீட்டில் மாபெரும் நினைவுச் சின்னம் ஒன்றினை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நாகர்கோவிலில் செய்குத்தம்பி பாவலருக்கு ரூ. 4 இலட்சம் செலவு மதிப்பீட்டில் ஒரு நினைவு மண்டபம் அமைக்கும் திட்டம் செயலாக்கத்தில் உள்ளது. எட்டயபுரத்தில் உமறுப் புலவர் நினைவு நூலகக் கட்டிடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டு, இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குற்றாலத்தில் ரசிகமணி டி. கே. சிதம்பரனார் வாழ்ந்த இல்லம், திருச்சிராப்பள்ளியில் வ. வே. சு. ஐயர் வாழ்ந்த இல்லம், மற்றும் நாகர்கோவிலில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் வாழ்ந்த இல்லம் ஆகியவற்றை அரசு எடுத்துக் கொண்டு நினைவுச் சின்னங்களாகப் பராமரிக்க செயற் குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

நாகர்கோவிலில் ஜீவானந்தம் சிலை அமைத்தல், கன்னியாகுமரி மாவட்டம் அதங்கோட்டில் அதங்கோட்டாசான் சிலை அமைத்தல், சேலம் நகரில் பெருந் தலைவர் காமராசர், விஜயராகவாச்சாரியார் சிலைகளை அமைத்தல், செங்கோட்டையில் வாஞ்சிநாதன் சிலை அமைத்தல் ஆகிய பணிகள் விரைவில் முடிவுபெறவிருக்கின்றன.

புதுக்கோட்டையில் சத்தியமூர்த்தி சிலை அமைத்தல், தர்மபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டியில் சுப்பிரமணிய சிவா நினைவுத் தூண் அமைத்தல், காரைக்குடியில் கவியரசர் கண்ணதாசன் மணி மண்டபம் அமைத்தல் ஆகிய செயற் குறிப்புகளும் அரசின் ஆய்வில் உள்ளன.

தமிழரசு :

"தமிழரசு" (தமிழ்-ஆங்கிலம்) இத்துறை வெளியிடும் இதழாகும். 1970 ஆம் ஆண்டு சூலையில் இந்த இதழ் தமிழிலும் ஆங்கிலத்திலும் மாதம் இருமுறை வெளியீடாகவும், பின்னர் ஆங்கில இதழ் மாதம் ஒரு முறை வெளியீடாகவும் மாறி வெளிவருகின்றது. இந்த இதழ்கள் அரசின் செய்திகளையும் கொள்கைகளையும் அரசின் ஒருங்கிணைந்த திட்டங்களையும் பொதுமக்களுக்கு மத்தியில் பரப்புகின்றன. தமிழ் இதழ் 45,000 பிரதிகளும், ஆங்கில இதழ் 3,700 பிரதிகளும் அச்சிடப்படுகின்றன. இவை முகவர்கள், சந்தாதாரர்கள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் மூலம் விற்பனையாகின்றன. தமிழரசு இதழ்கள் தமிழக பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற பேரவை, மேலவை உறுப்பினர்கள், அரசுச் செயலர்கள், துறைத் தலைவர்கள் ஆகியோருக்கு இலவசமாக அனுப்பப்படுகின்றன. தவிர, ஆங்கில இதழ், குடியரசுத் தலைவர், பிரதமர், மத்திய அமைச்சர்கள், பிற மாநில ஆளுநர்கள், செய்தித் துறை அமைச்சர்கள் மற்றும் தலைமைச் செயலர்கள் ஆகியோருக்கு அனுப்பப்படுகின்றன.

தமிழரசு இதழ்களும் மற்றும் செய்தி, மக்கள் தொடர்புத் துறை வெளியிடும் பிரசுரங்களும் இத்துறையின் நிர்வாகத்திலுள்ள தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன. அறநிலையத் துறையின் "திருக்கோவில்", தொழிலாளர் துறையின் "உழைப்பவர் உலகம்", தமிழ்நாடு மின்சாரத் துறையின் "மின் குடும்பம்", கல்வித் துறையின் "தமிழகக் கல்வி", விளையாட்டுத் துறையின் "விளையாட்டு மடல்" இந்திய அரசின் வெளியீடான "திட்டம்" ஆகிய இதழ்களும், அரசின் அழைப்பிதழ்கள், சுவரொட்டிகள், சிறு வெளியீடுகள், விண்ணப்பங்கள் முதலியனவும் இந்த அச்சகத்தில் அச்சிடப் படுகின்றன.

திரைப்படங்களுக்கு உதவித் தொகை :

இம்மாநிலத்தில் திரைப்படத் தொழிலை எதிர்நோக்கியுள்ள பல இடர்பாடுகளில், கூடுதலான தயாரிப்புச் செலவு, படங்களின் தரக்குறைவு இவை இரண்டும் அடங்கும். தேசிய அளவில் மக்களின் நலத்தை அடிப்படையாகக் கொண்டு சமூக பொருளாதாரத்தை முன்னேற்ற உதவும் கருத்துக்களான மதுவிலக்கு, சாதி ஒழிப்பு, தீண்டாமை, நாட்டின் ஒருமைப்பாடு இவற்றைப் போன்ற ஏதாவது ஒன்றை மையக் கருத்தாக வைத்துத் திரைப்படம் தயாரிப்பவர்களுக்கு உதவுவதற்கான "நிதி உதவித் திட்டம்" பிப்ரவரி 1978-ல் அறிமுகப்படுத்தப் பட்டது இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் ஒரு படத்திற்கு ஒரு லட்ச ரூபாய் வீதம் தேர்வு செய்யப்பட்ட 5 படங்களுக்கு அரசு உதவித் தொகை அளித்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 1 ஆம் நாள் முதல் அடுத்த ஆண்டு மார்ச்சு 31 ஆம் நாள் வரையுள்ள காலவரம்பிற்குள் தயாரித்து, தணிக்கை குழுவினரின் சான்றிதழ் பெற்ற படங்களே தேர்வு செய்யத் தகுதி வாய்ந்த படங்களாக ஏற்றுக்கொள்ளப்



படுகின்றன. இத்தகைய திரைப்படங்களை தேர்ந்தெடுக்க அமைக்கப்பட்ட குழு அரசுக்கு ஆலோசனை நல்குகிறது. இத்திட்டத்தின்கீழ் 1980,81 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டு. தணிக்கைக்கு வந்த தமிழ்ப் படங்களுக்கு உதவித் தொகை அளிக்கப்பட்டது. 1981-82 ஆம் ஆண்டிற்கான நிதி உதவி அளிக்க அமைக்கப்பட்ட தேர்வுக்குழு இப்போது படங்களைப் பரிசீலனை செய்து வருகிறது.

சிறந்த திரைப்படங்கள்-கலைஞர்களுக்குப் பரிசுகள் :

உயர்ந்த கலைத் திறம், சிறந்த தொழில் நுணுக்கம் செறிந்த பாராட்டுக்குரிய சிறப்பான படங்கள் தயாரிப்பதை ஊக்குவிப்பதற்காக ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கும் திட்டம் 1978-79 ஆம் நிதி ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 1 ஆம் நாள் முதல் அடுத்த ஆண்டு மார்ச்சு 31 ஆம் நாள் வரையுள்ள கால வரம்பிற்குள் தயாரித்து, தணிக்கைக் குழுவினரால் சான்றிதழ் வழங்கப்பட்ட படங்களே தேர்வு செய்யத் தகுதி வாய்ந்தவைகளாகக் கருதப்படுகின்றன. இதற்காக அமைக்கப்பட்ட குழு இவைகளைத் தேர்ந்தெடுக் கின்றது.

சிறந்த படம், சிறந்த நடிகர், நடிகை, இயக்குநர், கதை ஆசிரியர், வசனகர்த்தா, ஒளிப்பதிவாளர், இசை அமைப்பாளர், பின்னணிப்பாடகர், பாடகி தேர்ந்தெடுத்தும், சிறப்புப் பரிசு (நடிகர், நடிகை), நகைச்சுவைப் பரிசு (நடிகர், நடிகை) மற்றும் ராஜா சாண்டோ நினைவுப் பரிசு ஆகியவையாகும், 1980-81 ஆம் ஆண்டுத் தயாரிப்புக்களுக்கான பரிசுகள் ரூ. 2,42,400 செலவில் அளிக்கப்பட்டன.

குழந்தைகள் திரைப்படங்களுக்கு உதவி :

இந்தியக் குழந்தைகள் திரைப்படச் சங்கத்தின் வேண்டுகோளின்படி சிறந்த குழந்தைகள் திரைப்படங்களைத் தமிழில் தயாரிக்கவும், சிறந்த மற்ற மொழிக் குழந்தைகள் திரைப்படங்கள் தமிழில் மொழி மாற்றம் செய்யவும் ரூ. 4 இலட்சம் உதவி செய்ய இவ்வரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதில் ரூ. 2 இலட்சம், குழந்தைகள் திரைப்படச் சங்கத்திற்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது.

அரசு இப்போது குழந்தைகளுக்கான சிறந்த திரைப் படத்திற்கு ரூ. 25,000 ரொக்கப் பரிசும், ரூ. 200 மதிப்புள்ள வெள்ளிப் பதக்கமும் அளிக்கும் திட்டத்தில் மாறுதல் செய்து ரூ. 5,000 மதிப்புள்ள மூன்று தங்கப் பதக்கங்கள் மற்றும் ரொக்கப் பரிசு ரூ. 10,000 இவற்றை இந்தியாவின் முதல் பிரதமர் ஜவகர்லால் நேரு அவர்களின் நினைவாக வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

திரைப்பட, தொலைக்காட்சி தொழிற் பயிற்சி நிறுவனம் :

திரைப்படத் தயாரிப்பில் பல பிரிவுகள், மற்றும் நடிப்பு இவற்றில் பயிற்சி அளிப்பதற்காக இந்நாட்டில் உள்ள இரு நிறுவனங்களில் ஒன்று சென்னையில் இருக்கும் தமிழ்நாடு

[1983 மார்ச் 28

திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில் நுட்பப் பயிற்சி நிறுவனம். 1948 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்நிறுவனம் கணிசமான வளர்ச்சி பெற்று வந்துள்ளது. திரைப்படத் தயாரிப்பு, தொலைக்காட்சி சம்பந்தப்பட்ட எல்லாப் பிரிவுகளிலும் பயிற்சி அளித்துத் தேர்வு நடத்தி, வெற்றி பெற்றோர்க்குச் சான்றிதழ் வழங்குவதுடன், திரைப் படத்திற்குள்ள ஆற்றலை மக்களுக்கு உணர்த்துதல், திரைப்படத் தொழில் பற்றிய ஆய்வு நிகழ்த்துதல் ஆகியவை இந்நிறுவனத்தின் குறிக்கோளாகும். படப் பிடிப்பு, ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு, படச்சுருள் கழுவுதல், திரைப்படம் இயக்குதல், திரைக்கதை வசனம் எழுதுதல், படத்தொகுப்பு, நடிப்பு, தொலைக்காட்சி இயக்குதல் ஆகியவற்றில் இங்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. மேற்கூறியவற்றில் நடிப்புப் பயிற்சி சான்றிதழ் பயிற்சியாகும். மற்றவை டிப்ளமோ பயிற்சிகளாகும். தமிழ் நாடு அரசின் மாநிலத் தொழில் நுட்ப பயிற்சிக் கல்விக் குழுவினரால் டிப்ளமோ தேர்வுகள் கடைசி ஆண்டில் நடத்தப்பட்டு, டிப்ளமோக்கள் வழங்கப்படுகின்றன.

1982-83 ஆம் ஆண்டில் பிரிவு வாரியாக மாணவர்களின் எண்ணிக்கை.

முதல் ஆண்டு

| | ஆண் | பெண் |
|---|---|---|
| ஒளிப்பதிவு .. .. .. | 15 | .. |
| ஒலிப்பதிவு மற்றும் ஒலிப் பொறியியல் .. | 10 | .. |
| படச்சுருள் கழுவுதல் .. .. | 10 | .. |
| படத்தொகுப்பு .. .. .. | 8 | 2 |
| இயக்குதல் .. .. .. | 8 | 2 |
| நடிப்பு .. .. .. | 14 | 6 |

இரண்டாம் ஆண்டு

| | ஆண் | பெண் |
|---|---|---|
| ஒளிப்பதிவு .. .. .. | 15 | .. |
| ஒலிப்பதிவு மற்றும் ஒலிப் பொறியியல் .. | 10 | .. |
| படச்சுருள் கழுவுதல் .. .. | 9 | .. |
| படத்தொகுப்பு .. .. .. | 6 | 3 |
| இயக்குதல் .. .. .. | 9 | .. |

மூன்றாம் ஆண்டு

| | ஆண் | பெண் |
|---|---|---|
| ஒளிப்பதிவு .. .. .. | 10 | .. |
| ஒலிப்பதிவு மற்றும் ஒலிப் பொறியியல் .. | 10 | .. |
| படச்சுருள் கழுவுதல் .. .. | 3 | .. |
| இயக்குதல் .. .. .. | 10 | .. |

மொத்தம் 161.



1983 மார்ச் 28]

பல்வேறு பிரிவுகளில் பயிலும் மாணவர்கள் பல குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவும் கல்வியாண்டில் செய்முறைப் பயிற்சியின் ஒரு பகுதியாக ஒரு சிறு கதைப்படமும், ஒரு கருத்து விளக்கப்படமும் தயாரிக்கின்றனர். மாணவர்களுக்குப் பல்வேறு பிரிவுகளில் பயிற்சி அளிப்பதை முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டு செயலாற்றுவதுடன், தொழில் முறையில் மற்றும் அரசின் படத் தயாரிப்பு வேலைகளையும் இந்நிறுவனம் ஏற்றுக் கொள்கிறது.

படப்பிடிப்புத் தளங்களும், திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரியிலுள்ள சாதனங்களும் விரும்புகின்ற தனிப்பட்ட திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு வாடகைக்குக் கொடுக்கப் படுகின்றன. இதனால் வருமானம் ஓரளவு கிடைப்பதுடன் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள புகழ் பெற்ற தொழில் நுட்பப் பணியாளர்களின் ஆற்றலை நேரில் கண்டு அவர்களோடு பணிபுரிய மாணவர்களுக்கு நல்ல வாய்ப்பும் கிடைக்கிறது. இந்நிறுவனத்தில் பயின்று வெற்றியுடன் திரும்பும் மாணவர் களுக்குப் பொதுத் துறையிலும் தனியார் துறையிலும் வேலை வாய்ப்புகள் நன்முறையில் உள்ளன. குறிப்பாக தொலைக் காட்சி நிலையங்களிலும் சினிமாப் படத் துறையிலும் இவர்களின் பணி சிறந்து விளங்குகிறது.

இந்நிறுவனத்திற்காகக் கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ. 12 இலட்சம் மதிப்புள்ள பல்வேறு கருவிகள் வாங்கப்பட்டன. இந்நிறுவனத்தின் பணிகளை மேலும் மேம்படுத்த இவ்வாண்டு குரல் மாற்றம் (டப்பிங்) அரங்கு அமைப்பதற்கும், புதிய கருவிகள் வாங்குவதற்காகவும் மாணவர் விடுதி கட்டுவதற்கும், மொத்தம் ரூ. 79 இலட்சம் செலவில் திட்டம் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது.

இது தவிர, உலக வங்கி மற்றும் ஜப்பான் நாட்டு உதவியைப் பெற்று இந்நிறுவனத்தை மேலும் விரிவுபடுத்தும் திட்டம் ஆய்வில் உள்ளது.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு :

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, மாநிலத்தில் நடைபெறும் அரசின் ஆக்கப் பணிகளையும் மக்கள் பங்கேற்கும் பொது நிகழ்ச்சிகளையும் தேர்ந்தெடுத்து படமாக்கி, செய்திப் படங்களாக மத்திய அரசின் திரைப்படப் பிரிவின் மூலம் வெளியிடுகிறது.

இத்துடன் அரசின் பல்வேறு துறைகளின் பணிகளையும் மக்களுக்குத் தேவையான செய்திகளையும் கருத்து விளக்கப் படங்களாக (டாகுமெண்டரி) எடுத்து இத்திரைப்படப் பிரிவு வெளியிடுகிறது. இப்படங்களும் (35 மில்லி மீட்டர் அளவில்) திரையரங்குகளுக்கு மத்திய அரசின் திரைப்பட பிரிவின் மூலம் வெளியிடப்படுகின்றன. 16 மில்லி மீட்டர் அளவில் அரசின் செய்தி, விளம்பரப் பிரிவுகளுக்கும் அனுப்பப்பட்டுப் பொது மக்களுக்குக் காட்டப்படுகின்றன.

[1983 மார்ச் 28

தமிழ்நாடு திரையரங்குக் கழகம், சென்னை :

தமிழ்நாடு திரையரங்குக் கழகம் பொறுப்பு வரையறுக்கப் பட்ட அரசு தனி நிறுவனமாகத் தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டில் பகுதி நிலைத் திரையரங்குகளைக் கட்டவும், அவற்றை நிலையான திரையரங்குகளாக மாற்றவும், புதிதாக நிலையான திரையரங்குகள், டூரிங் திரையரங்குகள், திறந்த வெளித் திரையரங்குகள் கட்டவும், திரைப்படக் கருவிகள் வாங்கவும் நிதி உதவி செய்வது இக்கழகத்தின் நோக்கமாகும். இதுவரை இக்கழகம் பகுதி நிலைத் திரையரங்குகள் கட்டவும், அவற்றை நிலையான திரையரங்குகளாக மாற்றவும் மட்டுமே கடனுதவி செய்துள்ளது. இக்கழகத்திற்கு அரசு முழுவதுமாகச் செலுத்திய மூலதனம் ரூ. 35 இலட்சம். மேலும் ரூ. 15 இலட்சம் நீண்டகாலக் கடனாக அரசு அளித்துள்ளது.

ஒரு திரையரங்கிற்கு அதிகபட்சம் அளிக்கும் தொகை ரூ. 1·20 இலட்சம் ஆகும். இக்கடன் தொகை ஆண்டு ஒன்றுக்கு 17 சதவீத வட்டி வீதம் 60 சமமான தவணைகளில் வசூலிக்கப் படுகிறது. இந்நாள் வரையில் 80 பேருக்கு ரூ. 92·03 இலட்சம் கடன் தொகை ஒப்பளித்துள்ளது. இவர்களில் 75 பேர் திரையரங்குகளைக் கட்டி முடித்துத் திரைப்படக் காட்சிகள் நடத்துகின்றனர். கட்டி முடிக்கப்பட்டு திரைப்படக் காட்சிகள் நடத்தப்பட்டு வரும் திரையரங்குகளின் மாவட்ட வாரியான எண்ணிக்கை :—

| மாவட்டம் | திரையரங்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| செங்கற்பட்டு .. .. . | 16 |
| கோயம்புத்தூர் .. .. .. | 4 |
| தர்மபுரி .. .. .. .. | 2 |
| மதுரை .. .. .. .. | 7 |
| வட ஆர்க்காடு .. .. .. | 14 |
| பெரியார் .. .. .. .. | 2 |
| புதுக்கோட்டை .. .. .. | 4 |
| இராமநாதபுரம் .. .. .. | 6 |
| சேலம் .. .. .. .. | 4 |
| தென் ஆர்காடு .. .. .. | 3 |
| தஞ்சாவூர் .. .. .. | 2 |
| திருநெல்வேலி .. .. .. | 6 |
| திருச்சிராப்பள்ளி .. .. .. | 5 |
| மொத்தம் .. | 75 |



1983 மார்ச் 28]

புதிதாகக் கடன் வழங்குவது பற்றி கொள்கை அளவில் மறு பரிசீலனையில் உள்ளது. முன்பே கொடுக்கப்பட்ட கடன்களை வசூலிப்பதில் கழகம் தற்பொழுது தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

ஏற்காடு நகரியத்தைச் சேர்ந்த கலைக்கூடக் கட்டிடம் மற்றும் மனை உட்பட 10 வருட இலவசக் குத்தகையின் பேரில் பகுதி நிலைத் திரையரங்கமாக மாற்றியமைக்க வேண்டி அரசு அனுமதியளித்துள்ளபடி ரூ. 1·20 இலட்சம் ரூபாயை ஒரு 35 எம். எம். திரைப்படக் கருவி மற்றும் இதர பாகங்கள் வாங்கிப் பொருத்தவும், திரைப்படக் கருவி நிறுவ அறை, திரைப்படச் சுருள் சுற்றும் அறைகள் சரி செய்து பூச்சு வேலைகள் செய்வதற்கும் செலவிடப்பட்டது. மேலும் ரூ 1·60 இலட்சம் செலவு செய்து அத்திரையரங்கம் திரைப்படங்களைக் காட்டுவதற்குண்டான வேலைகள் நடைபெற்று வருகின்றன. மேற்கூறிய திரையரங்கம் முழுவதுமாகக் கட்டிமுடிக்கப்பட்டபின் இக்கழகத்தின் சார்பாக நடத்தும் பொருட்டும் ஏற்காடு நகரியத்திற்கே மறு குத்தகைக்கோ அல்லது செலவிடப்பட்ட தொகையை 60 மாத தவணைகளில் திருப்பிச் செலுத்தும் படியாகவோ ஏற்பாடு செய்யும் கருத்துரு உள்ளது.

நகரப் பகுதிகளில் நிரந்தரமான திரைப்பட அரங்குகள் கட்டுவதற்குத் தேசிய திரைப்பட அபிவிருத்தி நிறுவனத்துடன் இணைத்துச் செயல்பட்டு, தனி நபர்களுக்கு நிதி உதவி அளிக்க தமிழ்நாடு திரையரங்குக் கழகம் ரூ. 25 இலட்சம் கேட்டு தமிழக அரசை அணுகியுள்ளது. மேற்படி திட்டத்தைச் செயல் படுத்துவதற்காக அடையாள ஒதுக்கீடாக ரூ. 1,000 மட்டும் 1983–84 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப் பட்டுள்ளது.

தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1955 மற்றும் தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குபடுத்துதல்) விதிகள், 1957.

திரைப்படத் தொழில் தமிழ்நாட்டு மக்களில் பெரும் பகுதியினருக்கு குறிப்பாக ஏழை, எளிய, நடுத்தர மக்களுக்கு ஒரு கேளிக்கைச் சாதனமாக இருப்பதோடல்லாமல் ஊராட்சி, நகராட்சிகளுக்கு வருவாய் தரும் ஒரு சாதனமாகவும் உள்ளது. அரசுக்கும் ஓரளவிற்கு வருமானத்தை அளிக்கிறது. திரைப்படத் தொழில் வளர்ச்சி அடைய ஊக்கமளிக்கும் வகையில் திரை அரங்குகள் அதிகப்படுத்தும் முயற்சியாக, விதிகளை எளிதாக்கி யுள்ளது. இதன் விளைவாகத் தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் எல்லாம், தரமான திரை அரங்குகள் குறிப்பிடத்தக்க அளவில் பெருகியுள்ளது. பொது மக்களுக்குப் பாதுகாப்பளிக்கும் வகையில் டூரிங் திரை அரங்குகளில் சுலபத்தில் நெருப்புப் பிடிக்கும் கூரைகளை அகற்றிவிட்டு, சுலபத்தில் நெருப்புப்

[1983 மார்ச் 28

பிடிக்காத கூரைகளை அமைக்க வேண்டும் எனவும் இன்னும் மற்ற பாதுகாப்புகளையும் ஏற்படுத்த வேண்டும் எனவும் டூரிங் திரையரங்குகள் கட்டுவதில் கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. அதனால் டூரிங் திரை அரங்குகளில் கட்டுமானச் செலவு பெரிய அளவில் உயர்ந்துள்ள நிலையில் உரிமக்காலத்தை ஐந்து ஆண்டுகளாக உயர்த்த வேண்டுமென்ற பரவலான கோரிக்கைகளை ஆழ்ந்து பரிசீலித்து ஐந்து ஆண்டுகளாக இப்பொழுது உயர்த்தப்பட்டுள்ளது. அதே சமயத்தில் இவ்வரசு திரைப்படங்களுக்குச் செல்லும் பொதுமக்களுக்குத் தேவையான எல்லா வசதிகளும் பாதுகாப்புகளும் கிடைக்குமாறு பார்த்துக் கொள்வதில் கண்டிப்பாக இருக்கிறது.

போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கக்கூடிய விளம்பரங்களை ஒழுங்குபடுத்த அல்லது தடை செய்யும் நோக்கோடு ஒரு சட்ட முன்வடிவு கொண்டுவர அரசு எண்ணியுள்ளது.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbian Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
Mohan Patnippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
Palaniappa Bros., Tiruchirappalli-2.
S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-2
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-1
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P Bagchi & Company, 286, B.B. Ganguli Street, Calcutta-17.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT PUBLISHED UNDER RULES 303 AND 306 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED UPTO 15TH NOVEMBER 1979) AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS

வெளியீடு 7-10-1983]

[Issued 7-10-1983

2702

S. No. 141/55(க)

இணையர்
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாறு ஆராய்ச்சி
9 ஏ ச 1983
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## அதிகாரப்பூர்வ அறிக்கை—OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, மார்ச் 29, 1983—தொகுதி XLVII எண் 3

Tuesday, 29th March 1983—Volume XLVII No. 3

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009

Legislative Assembly Department, Fort St. George
Madras-600009

விலை ரூ. 3-15 காசுகள்]

[Price Rs. 3-15 Paise

**29—3—1983**

**உள்ளடக்கம்**


| | | பக்கங்கள். |
|---|---|---|
| 1. | வினாக்கள்—விடைகள்: | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் .. | 253—284 |
| 2. | ஒத்திவைப்புத் தீர்மானம் : | |
| | இந்தியப் பிரதமரை வரவேற்க விமான நிலையத்திற்குச் சென்ற எதிர்க்கட்சித் தலைவர் காவல் துறை அதிகாரி ஒருவரால் தடுத்து நிறுத்தப்பெற்றது .. | 284—289 |
| 3. | கவன ஈர்ப்புகள் : | |
| | (அ) உருது மொழியில் பாடப் புத்தகங்கள் வெளியிடுவதிலுள்ள தாமதம் .. | 289—291 |
| | (ஆ) கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக பேருந்து ஒன்று நாகர்கோவில் அருகே தீயிடப் பெற்றது .. | 291—294 |
| 4. | அறிவிப்புகள் : | |
| | கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1982–83 (ஆ.இ.) .. | 295 |
| | (ஆ) நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1983 (ஆ.இ.) .. | 299 |
| 5. | கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1982–83 வாக்கெடுப்பு .. | 295—298 |
| 6. | அரசினர் சட்ட முன்வடிவு : | |
| | நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு 1983 .. | 299 |
| 7. | தென் மாநில முதல்வர்கள் மாநாட்டில் எடுக்கப்பெற்ற முடிவுகள் குறித்த அறிக்கை—விவாதம். .. | 299—372 |
| | திரு. ரா. உமாநாத் .. | 299—311 |
| | திரு. பி. முகமது இஸ்மாயில் .. | 311—314 |
| | திரு. ப. நெடுமாறன் .. | 314—323 |
| | திரு. எஸ். ஆண்டித் தேவர் .. | 323—326 |
| | திரு. இரா. கருப்பையா .. | 326—337 |
| | திரு. என். எஸ். வி. சித்தன் .. | 337—348 |
| | திரு. குமரி அனந்தன் .. | 348—353 |
| | டாக்டர். மு. கருணாநிதி .. | 353—372 |
| 8. | **பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்** .. | 373 |


128 45—1

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### செவ்வாய்க்கிழமை 1983 மார்ச் 29.

### பங்குனி 15, துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு 2014.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று."

அகத்தில் அன்பு இல்லாமல் வாழும் உயிர்வாழ்க்கை வளமற்ற பாலை நிலத்தில் பட்டமரம் தளிர்த்தாற்போன்றது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**வைகை கீழ்பவானி பைக்காரா போன்ற அணைகளில் மின்உற்பத்தி நிலையங்கள் அமைக்கும் திட்டம்.**

***வினா எண் 579—திரு. ப. வெங்கடசுப்பிரமணியன் :** மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைகை அணை, கீழ்பவானி அணை, பைக்காரா அணை போன்ற அணைகளில் மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டங்களுக்கு மத்திய அரசின் நிதி உதவி எவ்வளவாக இருக்கும் ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) இத்திட்டங்களுக்கு மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு தமிழ்நாடு மின்வாரியம் திட்டப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

(ஆ) இத் திட்டங்களுக்கு என்று தனியாக மத்திய அரசின் நிதி உதவி எதுவும் கிடையாது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மின்சாரப் பற்றாக்குறை அதிகமாக இருக்கிறது. அந்தக் குறையைப் போக்குவதற்கு ஏதேனும் தனித் திட்டங்களை அமைச்சர் அவர்கள் தயாரித்து அதை நடைமுறைப்படுத்தயிருக்கிறாரா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மின் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு, சிறுசிறு புனல் மின் திட்டங்களை மலை அருவிகளிலும், அணைக்கட்டிலேயும், கால் வாய்களிலேயும் உருவாக்கலாம் என்ற அளவில் திட்டங்களை பரிசீலனை செய்து, சுமார் 321 திட்டங்கள் மின்சார வாரியத் தால் கணிக்கப்பட்டுள்ளது. அவற்றின் மூலம் 326 மெகாவாட் நமக்கு கிடைக்கும். 1983 ஆம் ஆண்டு 20 சிறு புனல் மின் திட்டங்களை ஆய்வு செய்வதற்கு மின் வாரியம் திட்ட மிட்டுள்ளது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறப்பான திட்டங்களில் எத்தனை திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது, எத்தனை திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் இருக்கிறது? எவ்வளவு காலத்தில் அதை நடைமுறைப்படுத்த அரசு முனை யும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இத் திட்டங்கள் எல்லாம் சிறுசிறு புனல் மின் திட்டங்கள். ஒரு கோடி ரூபாய்க்குக் குறைவாக அதனுடைய மதிப்பீடு வருமே யானால் அதை மாநில அரசே அனுமதிக்கலாம். அதற்கு மேல் பணம் செலவாகும். என்றால்தான் மத்திய அரசு அனுமதிக்க வேண்டும் ஆனால், 27–8–1982 அன்று நடந்த மின்சக்தி அமைச் சர்கள் மாநாட்டில், இந்த ஒரு கோடி ரூபாய் என்ற வரையறை 1948-ல் நிர்ணயிக்கப்பட்டது. ஆகவே அதை 10 கோடியாக ஆக்க வேண்டும். மாநில அரசுகளே விரைவாக இத் திட்டங்களை நிறைவேற்ற அது வகை செய்யும். ஆகவே அந்த வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்கப்பட்டது.

ஆனால் அந்த ஒரு கோடி ரூபாயை வேண்டுமானால் 5 கோடி யாக ஆக்கலாமா என்று கேட்டு ஒரு கடிதத்தை 13–2–1983-ல் மத்திய அரசினர் அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் நான் சொன் னது இப்போது அந்த அதிகாரத்தை கூடுதலாக கொடுத்தால், இன்னும் 10 வருடங்களுக்கு மாற்ற மாட்டார்கள். ஆகவே, 5 கோடி என்பதைவிட 10 கோடியாகவே உயர்த்தி மாநில அரசுக்கு அதிகாரம் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக் கிறோம்.





தவிர, தமிழக அரசுக்கு ஏற்கனவே ஒரு திட்டத்திற்கு அனுமதி அளித்திருக்கிறது. பூனாச்சி மினி புனல் மின்திட்டம்— ஆளியாற்றுக்கு மேல் இதை அமைக்க வேண்டும் என்பது திட்டம். இந்திய அரசின் அனுமதியைக் கேட்டு சிறுவாணி சிறு புனல் மின் திட்டம் அனுப்பப்பட்டுள்ளது.

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை அணை, கீழ் பவானி அணை, பைக்காரா அணை போன்ற திட்டங்கள் ஆய்வில் இருப்பதாகச் சொன்னார் கள். அந்தத்திட்டங்களினுடைய எஸ்டிமேட் எவ்வளவு? ஒவ்வொரு திட்டத்திலும் எந்த அளவுக்கு, அதாவது எத்தனை கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த 3 திட்டங்களையும் நிறைவேற்ற 11·71 கோடி ரூபாய் செலவு ஆகும். பைக்காரா 2 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்டது. அதன் மூலம் ஒரு கோடி யூனிட்டுகள் கிடைக்கும். கீழ் பவானி 8 மெகாவாட் திறன் கொண்டது. அதன் மூலம் நமக்கு $3\frac{3}{4}$ கோடி யூனிட்டுகள் கிடைக்கும். வைகை 6 மெகாவாட் திறன் கொண்டது. அதன் மூலம் நமக்கு $2\frac{1}{4}$ கோடி யூனிட்டுகள் கிடைக்கும். இவற்றிற்கு அன்னிய நாட்டின் உதவி தேவைப்படு கிறது. ஜப்பான் நாட்டுடன் ஏற்கெனவே பேசி, அன்னிய நாட்டு உதவியையும் மத்திய அரசின் மூலம் நாம் பெற்றிருக்கிறோம். இப்போது இந்தத் திட்டம் அனுமதிக்கப்பட்டு விட்டது. இந்த அன்னிய நாட்டு இயந்திரங்களைப் பெறுவதிலேதான், அதற்கான ஸ்பெசிபிகேஷன் என்று சொல்வார்களே, அதற்கு இந்திய அரசின் ஒப்புதல் நமக்கு அளிக்கப்பட வேண்டும். அதிலேதான் தாமதம்.

## இரட்டணை கிராமத்திலுள்ள ஸ்ரீ ராஜராஜேஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான நிலங்கள்.

*வினா எண் 580—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதி இரட்டணை கிராமத்தில் உள்ள ஸ்ரீ ராஜராஜேஸ்வரர் ஆலயத்திற்கு சொந்தமான நிலங்களை தனியார்கள் கையகப்படுத்தியிருப்பது பற்றி பொதுமக்களிட மிருந்து அரசுக்கு ஏதேனும் புகார்கள் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அப்புகார் மனு மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

**மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் :** (அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**திரு. கே. எம். தங்கமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்று பொது மக்களுடைய. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் கள் கேள்வி தான் கேட்க வேண்டுமே தவிர சட்டமன்ற உறுப் பினராக தேர்ந்தெடுக்கப் பெற்றது பற்றி எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கவேண்டியதில்லை.

**திரு. கே. எம். தங்கமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் தொகுதி இரட்டணை கிராமத்தில் உள்ள ஸ்ரீ ராஜராஜேஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான நிலங் களை ஒரு தனி நபர் அனுபவித்து வருகிறார் என்பதைக் கருத்தில் கொண்டு அரசு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீ;ப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார்கள் வந்ததைத் தொடர்ந்துதான் இந்த ஆலயம் சமீபத்திலே அறநிலையத் துறை யின் ஆளுகைக்குள் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. அதுபற்றிப் பரிசீலித்ததில் அந்த கிராமத்திலே இருக்கின்ற பலர் ஒரு குழு வாகச் சேர்ந்து அந்த ஆலயத்தை நிர்வகித்து வந்ததாகத் தெரிகிறது. அந்த ஆலயத்திற்கு எந்தவிதமான நிலங்களும் இருப்பதாக ஆவணங்கள் கிடைக்கவில்லை. வருவாய்த் துறை ஆவணங்களிலும் அதுபற்றிய ஆதாரங்கள் கிடைக்கவில்லை. உதவி ஆணையர் அவர்கள் சென்று அறங்காவலர்கள் நியமிப்பதற் காக நடவடிக்கை எடுத்த நேரத்தில் யாரும் அறங்காவலர்களுக் கான விண்ணப்பத்தையே போடவில்லை. கடைசியாக அதனை நிர்வகிக்கின்ற குழுவினரிடத்திலே பேசி திரு. ஆறுமுக முதலியார் என்பவர் 26-5-1982 அன்று அறங்காவலராக நியமிக்கப்பட்டிருக் கிறார். இப்போது கிடைத்திருக்கின்ற விவரங்களிலிருந்து 25 சென்ட் நிலம்தான் அந்த ஆலயத்திற்கு உள்ளது என்று தெரி கின்றது. ஆனால், பரவலாக அந்த ஆலயத்திற்கு பல ஆண்டு களுக்கு முன்னாலே மிகப்பெரிய அளவில் நிலங்கள் இருந்ததாகச் சொல்லப்படுகின்றதே தவிர, அதுபற்றிய ஆவணங்களும் இல்லை, ஆதாரங்களும் இல்லை. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் முயற்சி செய்து தக்க ஆதாரங்களைத் தேடித் தந்தால் அவர்களுடைய புகார்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது போன்று தீவிரமான நடவடிக்கையை அறநிலையத்துறை மேற் கொள்ளும்.





**திரு. கே. எம். தங்கமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆலயத்திற்கு பல ஆண்டுகளுக்கு முன்பு ஏகப் பட்ட நிலங்கள் இருந்ததாக மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஒப்புக் கொண்டு இருக்கிறார்கள். அந்த நிலங்கள் பற்றிய விவரங் களை எல்லாம் இந்த அரசாங்கம் எப்படியாவது முயற்சி செய்து வெளியே கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யுமா ? கோயில் சொத்தை சாப்பிடுகிறவர்கள் குலநாசம் அடைவார்கள் என்று சொல்லப்படுகின்றது. ஆனால் அந்த நிலங்களை அனுபவிக்கிற வர்கள் எல்லாம் நல்ல வசதியுடன் தான் இருந்து வருகிறார்கள். எனவே, ஆண்டவன் பேசாமல் இருக்கிறார், அரசாங்கமாவது அந்த நிலத்தைக் கைப்பற்றி கோயிலுக்கு ஒப்படைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டவனுக்காக மக்கள் பேசிக் கொண் டிருக்கிறார்கள் என்பதற்குத்தான் ஆண்டவன் பேசாமல் இருக்கிறார். ஆகவே இதில் யார் பேசவேண்டும் என்பது இல்லை. அந்த ஆலயத்திற்கு சொத்துக்கள் இருக்கின்றன என்று நான் ஒப்புக் கொள்ளவில்லை. அப்படி சொத்துக்கள் இருந்ததாக அங்கே ஊரிலே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொல்து போல். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றை தெரிவித்துக் கொள்கிறேன். நான் உதவி ஆணையாளர் அவர்களை உங்களிடத் தில் வந்து சந்திக்கச் சொல்கிறேன். உங்களிடத்திலே தகவல்கள், ஆதாரங்கள் இருந்தால் உடனடியாக சேகரித்துக் கொடுங்கள். ஆனால் இது பற்றி அங்கே கேட்டால் ஏதாவது உள்ளூர் பகை வருமே என்று எண்ணி சட்டமன்றத்தில் ஒரு விவரமும் இல்லா மல் சொத்து இருக்கின்றது. சொத்து இருக்கின்றது என்று சொல்லிக் கொண்டிருந்தால் நாங்கள் எங்கே போய்த் தேடுவது ? எனவே உதவி ஆணையரை உங்களிடத்திலே வந்து சந்திக்கச் சொல்கிறேன். அப்போது தகவலைச் சேகரித்துக் கொடுத்தால் அப்படி அந்த நிலங்களை அனுபவித்துக் கொண்டிருப்பவர்களிடத் திலிருந்து அவற்றை கைப்பற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பார்கள்.

**அருள்மிகு மருதமலை ஆண்டவர் கோயிலுக்குச் சொந்தமான சொத்துக்கள்.**

*வினா எண். 581.—**திரு. கு. ரமணி :** மாண்புமிகு செய்தி அற நிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா.—

(அ) கோவை மாவட்டம், மருதமலை ஆண்டவர் கோயி லுக்கு நிலம், மற்ற சொத்துக்கள் என்ன உள்ளது ?

(ஆ) சொத்துக்களிலிருந்து வருமானம் என்ன ?

(இ) வருமானத்திலிருந்து கோவிலின் செலவுகள் போக வருடம் என்ன மிச்சம் ஏற்படுகிறது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : விவர அறிக்கை **அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கக்கூடிய விவரங்கள் எல்லாம் அசையாச் சொத்துக்கள் சம்பந்தப்பட்டவைதான். அதாவது கட்டடம் முதலியவற்றிலிருந்து கிட்டத்தட்ட 28,000 ரூபாய் வரையில் வாடகை வருகின்றது என்று சொல்லப் பட்டிருக்கின்றது. இது அசையாச் சொத்துக்கள். ஆனால் நான் பொதுவாக சொத்துக்கள் என்று கேட்டிருக்கிறேன். மருதமலை ஆண்டவனுக்கு அசையும் சொத்துக்கள் ஏராளமாக இருக்கின்றன. பெரிய பெரிய பட முதலாளிகள், ஏராளமான பக்தர்கள் அங்கே வந்து கொடுக்கின்ற காரணத்தால் இலட்சக்கணக்கான பணம் அங்கே வந்து சேர்ந்துகொண்டிருக் கின்றது. அதற்கு ஏதாவது கணக்கு உண்டா ? அதுபற்றி விவரம் ஏதாவது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—10)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொத்துக்கள் என்கிற தலைப்பிலே எடுத்துக் கொண்டால் அசையும் சொத்துக்கள் அசை யாத சொத்துக்கள் என்று பிரிக்கப்படுகின்றன. இங்கே அசையாத சொத்துக்கள் பற்றி சொல்லியிருக்கிறோம். அசையும் சொத்துக்கள் என்றால் அதற்கு இருக்கின்ற வாக னங்கள் அல்லது கார்கள்—இப்படிப்பட்ட சொத்துக்கள் தான் அசையும் சொத்துக்கள் என்று பெயர். அதைத் தவிர வேறு தொகையாக ரொக்கமாக இருப்பதற்கு அது நிகர சொத்து என்று வராது. அது ரொக்க இருப்பு என்று வரும். நீங்கள் அப்படிப்பட்ட கேள்வியைக் கேட்கவில்லை. அசையாத சொத்துக்களுக்கு தகவல் தந்து இருக்கிறோம். அசையும் சொத்துக்கள் என்றால் மாண்புமிகு உறுப்பினர் எதைக் கேட்கி றார்கள் என்பது என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. வாகனங்கள், மேஜை, நாற்காலி இவைகளைக் கேட்கிறார்களா என்று தெரியவில்லை. வேறு நீங்கள் கேட்கிற கேள்வியிலிருந்து

** 37ҕ—375-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற் றுள்ளது.





யார் யாரோ பெரிய பெரிய பட முதலாளிகள் எல்லாம் தருகி றார்கள்என்றால் அவர்கள் அங்கே திருப்பணி வேலையைச் செய்து கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய செலவில் அங்கே திருப்பணிவேலைகள் நடைபெறுகின்றன. இதில் வந்தி ருக்கிற வருமானத்திலிருந்து மிச்சப்படுத்தி ஏதாவது தொகை வைத்து இருக்கிறார்களா என்று கேட்டால் அந்த விவரத்தை தருகிறேன். 1—11—1981-ஆம் தேதி முடிய அவர்கள் வைப்புத் தொகையாக வைத்து இருக்கிற தொகை 30 இலட்சத்து 81 ஆயிரத்து 895 ரூபாயும் 80 காசும். இது ஒரு ஆண்டுக்கு முன்னால் உள்ள நிலைமை.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கிற பதில் ஓரளவுக்கு திருப்தி அளிக்கக்கூடியதாக இருக்கிறது.

. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரமணி அவர்கள் சொன்னது எல்லாக் கோவில்களுக்கும் பொருந்தும். மருதமலை கோவிலில் மட்டும்தான் பட முதலாளிகள் பணம் போடுகி றார்கள் என்று இல்லை. எல்லாக் கோவில்களுக்கும் பொருந்தும்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 30 லட்சத்துக்கு மேற்கொண்ட பணம் வைப்பு இருப்பது அந்தக் கோவிலினுடைய ஒரு நல்ல நிதி நிலையைக் காட்டுகிறது. அந்த ஆண்டவன் வறுமையில் இல்லையென்று நமக்குத் தெரிகிறது. அந்தக் கோவிலுக்குப் பக்கத்திலேயே ஹில் ட்ரைப்ஸ் அதாவது மலைவாசிகள் பலர் மிக ஏழைகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கு சில பள்ளிக்கூடங்களையும் இதர பல சமுதாய நலன்கள் செய்வதற்கு இந்தக் கோவில் பணத்திலிருந்து ஏதாவது உதவி செய்ய முடியுமா ? இப்படி பழனி ஆண்டவனுக்கு வரக்கூடிய வருமானத்திலிருந்து காலேஜ்கள் கட்டுவது போல் பள்ளிக்கூடங்கள் கட்டுவது போல், திருப்பதி கோவில் கட்டிக்கொடுப்பது போல் இங்கே குறைந்தபட்சம் அந்த ஹில் ட்ரைப்ஸ்க்கு கட்டிக்கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவு செய்து செய்து சொடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு மருதமலை ஆண்டவன் ஆலயத் தின் சார்பில் ஏற்கெனவே அங்கே பள்ளிக்கூடங்கள் எல்லாம் நடத்தப்பட்டு வருகின்றன, கட்டிடங்கள் கட்டப்பட்டு வரு கின்றன என்று அறிகிறேன். நான் நேரில் சென்றபோது அந்தக் கோவிலை ஒட்டிய மலைப்பகுதியில் வாழ்கிற மலைவாழ் மக்களைச் சந்தித்து பேசியிருக்கிறேன். அவர்கள் என்ன தேவை

என்று கேட்பார்களானால், அப்படி படிக்கின்ற வசதி இல்லை என்று கருதினால் அங்கே இருக்கின்ற பள்ளிக்கூடத்தில் அவர்களைச் சேர்ப்பதற்கான அந்த வசதிகளைச் செய்து தர முடியும். மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துக்களை கவனத்தில் எடுத்துக்கொண்டு அறநிலையத்துறை அந்த மலைவாழ் மக்களுக்கு அந்த ஆலயத்தின் பெயராலோ ஆண்டவன் பெயராலோ ஏதாவது உதவிகளைச் செய்ய முடியுமானால் அவைகளை செய்யும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருதமலைக் கோவிலில் 1981 வரை வைபபுத் தொகை 30 லட்ச ரூபாய் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது முந்தைய ஆண்டுகளைவிட அதிகமான வருமானம் என்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா ? இந்த நிலை தமிழகத்தில், அது நிலத்தின் மூலம் வருகின்ற வருமானம் ஆனாலும் சரி அல்லது உண்டியல் மூலம் வருகின்ற வருமானம் ஆனாலும் சரி கடந்த 5 ஆண்டுகளில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்ற பிறகு அதிகரித்து இருக்கிறதா ? அல்லது குறைந்து இருக்கிறதா ? என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாக ஒரு கேள்வியைப் போட்டால் இதைப்பற்றி விவரமாக பதில் சொல்லமுடியும். நேற்று நடைபெற்ற அறநிலையத்துறை மானியக் கோரிக்கையில் கூட இந்த விவரங்களை எல்லாம் சொல்லியிருப்பேன். ஆனால் அப்படி எல்லாம் சொல்லிவிடுவேனோ என்றுதான் சொல்லவிடாமல் எச்சரிக்கையாக தடுத்துக் கொண்டிருந்தார்கள் என்று கருதுகிறேன். ஆனாலும் இப்போது சொல்கிறேன். வருமானம் உயர்ந்து இருப்பது மாத்திரம் அல்ல, நேற்றையதினம் இந்த அவையில் நான் எடுத்துச்சொன்னது போல் 5 ஆண்டுக்கு முன்னால் தமிழகத்தில் இருக்கிற ஆலயங்கள் மொத்தம் சேர்த்துவைத்த வைப்புத் தொகையாக 4 கோடியே சொச்சம் வைத்து இருந்தார்கள். இந்த 5 ஆண்டுகளில் அதை சுமார் 20 கோடியாக உயர்த்தி இருக்கிறோம். அந்தப் பட்டியலுக்குள் தான் இந்த 30 லட்சத்து 81 ஆயிரமும் வருகிறது. இது ஒரு ஆண்டுக்கு முன்னால் இருந்த நிலைமை.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருதமலை ஆண்டவன் கோவிலுக்கு அமவாரத்தில் இருக்கின்ற பின்தங்கிய மக்கள், ஏழைமக்கள், எலைவாழ் மக்களை உடனடியாக காலி செய்யவேண்டும் என்று க்டிஸிகியூட்டீவ் ஆபீஸர் பயமுறுத்திக் கொண்டிருக்கிறார்கள்



அவர்கள் ஏழைகளாக இருப்பவர்களுக்கு—நம்முடைய அமைச்சர் அவர்கள் நிச்சயமாக கருணை உள்ளவர்கள் என்று எனக்குத் தெரியும்—அவர்களுக்கு பட்டா கொடுத்து அவர்கள் அங்கேயே குடியிருந்தால் பக்கத்திலுள்ள காடுகளில் அவர்கள் செய்ய வேண்டிய தொழிலுக்கு சௌகரியமாக இருக்கும். ஆகவே அதை அமைச்சர் அவர்கள் செய்வதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இது இந்த மூலக் கேள்விக்கு தொடர்பற்ற கேள்வி என்றாலும் அந்த மலைவாழ் மக்களை காலிசெய்யச் சொல்வது அறநிலையத் துறை அல்ல. அந்தக் கோவிலைச் சுற்றியிருப்பதெல்லாம் வனத்துறையைச் சேர்ந்த இடங்கள் ஆகும். வனத்துறை அந்த நடவடிக்கையை ஒருவேளை எடுத்திருக்கும். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்வது மலைவாழ் மக்கள் எந்த இடத்திலே குடியிருந்தாலும் அவர்கள் குடியிருப்பிற்கோ வாழ்க்கைக்கோ எந்தவிதமான பாதிப்பையும் அரசு எந்தத் துறையின் மூலமாகவும் செய்யாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## சென்னையில் தந்தை பெரியாருக்கு நினைவுத் தூண் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 582—திரு. செ. செம்மலை திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் தந்தை பெரியாருக்கு நினைவுத் தூண் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எங்கு, எப்போது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) இடம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இடம் குறித்து முடிவு செய்யப்பட்டபின் நிறுவப்படும்.

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்களுக்கு சென்னையில் அமைக்கப்படுகிற நினைவுச் சின்னம் மற்ற மாவட்டங்களில் அவரது பொன் மொழிகளைப் பொறிக்க நினைவுத் தூண் போல் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதா ? அல்லது வேறு வகையில் நினைவுச் சின்னம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதா ?

[1983 மார்ச் 29

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இங்கே கேட்கப்பட்டிருக்கிற கேள்வி தந்தை பெரியாருக்கு நினைவுத் தூண் அமைக்கும் செயற்குறிப்பைப் பற்றி கொடுத்து இருக்கிறார்கள். மாவட்டத் தலைநகரங்கள் முழுவதும் இத்தகைய நினைவுத் தூண்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அநேகமாக 1, 2 மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களில் அமைக்கப்பட்டு விட்டன. சென்னையிலே அவர்கள் வாழ்ந்த காலத்தை நினைவுபடுத்துகின்ற வகையில் 95 அடி உயரத்திற்கு நினைவுத் தூண் நிறுவலாம் என்று நம்முடைய டாக்டர் நாவலர் அவர்கள் தலைமையிலே அமைந்திருக்கிற பெரியார் நூற்றாண்டு விழாக் குழு அரசுக்குப் பரிந்துரை செய்தபடி அப்படி 95 அடி நினைவுத் தூண் நிறுவலாமா என்பதைப்பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. பெரியார் அவர்களுக்கு நினைவுச் சின்னமாக சென்னையில் அவரது பெயரால் மிகப் பெரிய மண்டபமாக அமைப்பதற்கும் மாநாடு போன்ற நிகழ்ச்சிகள் நடத்துகின்ற நூல் நிலையங்களை கொண்ட மண்டபமாக அமைப்பதற்குமான ஒரு கருத்து அந்த நூற்றாண்டு விழாக் குழுவால் அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதைத்தவிர கல்வித் துறை மூலம் விஞ்ஞான ஆராய்ச்சிக்கூடம் பெரியார் அவர்கள் பெயரிலே நிறுவுவதற்கு கல்வித் துறை நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறது. ஆகவே பெரியாருக்கு நினைவுச் சின்னங்கள் என்பது அப்படிப் பல்வேறு வகைகளிலே மக்களுக்குப் பயன்படுகிற வகையில் நிறுவ அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன அல்லது பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. இந்தக் கேள்வி நினைவுத் தூண் பற்றியது, அதற்குப் பதில் அளித்திருக்கிறேன்.

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்கள் வாழ்ந்த நூற்றாண்டில் நாமும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்ற அந்தப் பெருமையும், அவர்கள் வாழ்ந்த காலத்திலே நாமும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்ற அந்தப் பெருமையும் நமக்கெல்லாம் இருக்கிறது. அதைப்போல் எதிர்கால சந்ததியினர் அவரைப்பற்றி விரிவாக தெரிந்துகொள்ளத்தக்க அளவில் அவரது வரலாற்றைத் தொகுத்து ஏதேனும் ஒரு வகையில் வெளியிட அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை ஆண்டு முழுவதும் கொண்டாடி அதன் நினைவாக பல்வேறு திட்டங்களை அரசு மேற்கொண்டிருப்பதைப்பற்றி இதே மன்றத்திலே பலமுறைகள் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. தந்தை பெரியார் அவர்களுடைய பொன்மொழிகள் என்ற



1983 மார்ச் 29]

நூல் வெளியிடப்பட்டு வருகிறது. அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றைத் தொகுக்கின்ற பணி முன்னாள் பல்கலைக் கழகத்தினுடைய துணைவேந்தராக இருந்த திரு. சுந்தர வடிவேல் அவர்கள் தலைமையிலே அமைக்கப்பட்ட குழு இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. சிறுவர்களுக்குப் பயன்படுகிற வகையில் படங்கள்கொண்ட வாழ்க்கை நூல் ஒன்று தனியாக வண்ணத்திலே அச்சிடுவதற்கான நடவடிக்கையையும் அந்தக் குழு மேற்கொண்டிருக்கிறது. இவைகளையெல்லாம் பல்வேறு நேரத்தில் இந்த மன்றத்திலே எடுத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிற கருத்துக்கள்.

திரு. ஏ. எம். சேதுராமன் : தலைவர் அவர்களே, பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களுக்காக சென்னையிலே 95 அடி உயரத்திலே ஒரு நினைவுத் தூணை எழுப்புவதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்தத் தூணிலே அவர்கள் வரலாற்றையும் அல்லது தந்தை பெரியார் எந்த வழியைப் பின்பற்றி தமிழக மக்களுக்கு ஒரு ஆற்றலை எண்ணத்தை உருவாக்கினார்களோ அது ஏற்படுகிற வகையில் பின்னாலே வருகின்ற சந்ததியினர் படித்துப் புரிந்துகொள்கின்ற வகையிலே அவருடைய உரைகளை அதிலே பொறிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நினைவுத் தூண் அமைக்கவேண்டுமென்ற நூற்றாண்டு விழாக் குழுவினுடைய கருத்தை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்திருக்கிறேன். நிறுவுகிற முடிவை எடுக்கிற நிலைமையில் அவைகள் எப்படி அமைக்கப்படலாம், எப்படி அமைத்தால் மக்களுக்கு அது உதவியாக இருக்கும் என்பதைப் பரிசீலிக்கிறபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தையும் அரசு பரிசீலிக்கும்.

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்கள் பெயரில் கல்வித் துறையின் மூலம் ஆய்வுக்கூடங்கள் நிறுவுகிறபோது அது சென்னை மாநகரத்தில் மட்டும் நிறுவப்படுமா அல்லது ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் நிறுவப்படுமா? அதனுடைய செலவினை செய்தித் துறை ஏற்குமா அல்லது கல்வித் துறை ஏற்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1983 மார்ச் 29

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறை நிறுவ இருக்கிற அந்த அமைப்பு, விஞ்ஞான ஆய்வுக் கூடம் என்பது சாதாரணமாக சில லட்சங்களில் அமைகிற ஆய்வுக்கூடம் அல்ல ஆகவே மாவட்டங்களில் பலயிடங்களில் அமைக்கப்படுகிற வாய்ப்பு அதற்கு கிடையாது. தமிழகத்திற்கே பெருமை சேர்க்கிற வகையில், இந்தியாவில் இருக்கிற ஒன்றிரண்டு ஆய்வுக்கூடங்களை, காட்சியகங்களை முன்மாதிரியாக எடுத்துக்கொண்டு தமிழகத்திலே அப்படி ஒரு விஞ்ஞான ஆய்வுக் கூடம், தமிழகத்தின் தலைநகரிலே தந்தை பெரியார் அவர்கள் பெயரால் அமையவேண்டும் என்பது அரசினுடைய திட்டம். சில கோடிக்கணக்கான ரூபாய்களை உள்ளடக்கி நிறுவப்படுகிற திட்டம். அது கல்வித் துறையினுடைய ஆய்விலே இருக்கிறது என்பதையும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக ஒரு கேள்வி போட்டால் அந்தத் துறையின் அமைச்சர் அவர்கள் விவரமான பதிலை அளிப்பார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

### தமிழகத்திலுள்ள சிவில் நீதிமன்றங்கள்.

*** வினா எண் 583—திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்தில் சிவில் நீதிமன்றங்களின் பண மதிப்பு அதிகாரவரம்பு உயர்த்தப்பட்டதன் காரணமாக, நீதிமன்ற தொடர்புடைய மற்றைய சட்டங்கள் திருத்தப்படாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது திருத்தப்படும்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) மற்றும் (ஆ) : தமிழ்நாடு சிவில் நீதிமன்றங்களில் பணமதிப்பு, அதிகாரவரம்பு உயர்த்தப்பட்டதன் காரணமாக நீதிமன்ற தொடர்புடைய திருத்தப்படவேண்டிய சட்டங்கள் முறையே இந்திய வழியுரிமைச் சட்டம், 1925 (Indian Succession Act, 1925) மற்றும் தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணம் மற்றும் உரிமையியல் மதிப்பீடு சட்டம், 1955 (Tamil Nadu Court Fees and Suits valuation Act) ஆகும். இவற்றில் இந்திய வழியுரிமைச் சட்டத்திற்கு, 1982 ஏப்ரல் திங்களிலேயே திருத்தங்கள் செய்யப்பட்டு விட்டன. நீதிமன்றக் கட்டணம் மற்றும் உரிமையியல் மதிப்பீடு சட்டத்திற்கு திருத்தங்கள் செய்யும் செயற்குறிப்பு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

**திரு. எஸ். ஆண்டித்தேவர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கிற சிவில் நீதிமன்றங்களின் பண மதிப்பு அதிகாரவரம்பு உயர்த்தப்பட்டதன் காரணமாக



1983 மார்ச் 29]

முன்சீப் கோர்ட்டுகளில் 15 ஆயிரம் ரூபாய் வரை அவர்கள் விசாரிக்கலாம் என்று சொன்னதன் காரணமாக மேலேயிருக்கிற கோர்ட்களிலிருந்து அதிகமான வழக்குகள் மற்ற கோர்ட்களுக்கு அனுப்பப்பட்டு விட்டன. உயர்நீதிமன்றத்திலே தேங்கியிருந்த வழக்குகள் எல்லாம் மற்ற மாவட்ட நீதிமன்றங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இந்த சட்டத் திருத்தங்களைச் செய்யாத காரணத்தால் நீண்ட காலமாக அவைகள் அங்கே தேங்கியிருப்பதை அரசு அறியுமா? உடனடியாக சட்டத்திருத்தம் கொண்டு வந்து நாட்டு மக்களுடைய இன்னலைப் போக்க அரசுமுன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தியன் சக்ஸஷன் ஆக்ட் பற்றி ஏற்கெனவே சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. சூட் வேலுவேஷன் ஆக்டைப் பொறுத்தவரையில் உயர்நீதிமன்றத்தினுடைய கைட் லைன்ஸ்படி ஏற்கெனவே அதற்கு வழிவகை செய்யப்பட்டுவிட்டது

**திரு. பாபுஜனார்த்தனன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, சிவில் நீதிமன்றங்களில் 5ஆயிரம் என்று இருந்த அளவை15 ஆயிரம் ரூபாயாகவும், அதைப்போல மாவட்ட அளவிலே இருக்கிற அந்த மன்றங்கள் பொறுத்து15 ஆயிரம் ரூபாயிலிருந்து 50 ஆயிரம் ரூபாய் வரையில் உயர்த்தப்பட்டிருக்கிறது. மாவட்ட அளவில் இருக்கிற அந்தத் தொகையை சென்னை உயர்நீதிமன்றத்திற்கு நிர்ணயித்து இருக்கிற தொகை அளவிற்கு நிர்ணயித்தால் நல்ல பலன்கள் உண்டாகும். இப்போது இந்த அளவிற்குச் செய்திருப்பதை நாங்கள் வரவேற்கிறோம். ஆகவே உயர்நீதி மன்றத்திற்கு நிர்ணயித்திருக்கிற தொகையை மாவட்ட அளவிலே இருக்கிற நீதிமன்றங்களுக்கு நிர்ணயிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உயர்நீதி மன்றத்திற்கு கட்டணம் வசூலிக்கிற முறையில் ஏழைகளுக்கு அதிகம் பாதிப்பு இல்லாத விதத்தில் இருக்கவேண்டும்; உயர்நீதி மன்றம் நீங்கலாக இருக்கிற பகுதியைப் பொறுத்தவரையில் அட்வேலரம் என்ற முறையிலே வசூலிக்கிற காரணத்தால் கட்டணம் அதிகம் இருக்கிறது என்று குறிப்பிடுகிறார் என்று கருதுகிறேன். அதை அரசு தீவிரமாக ஆய்ந்து வருகிறது. மத்திய அரசும் கூட இதற்கு ஒரு சப்-கமிட்டியைப் போட்டிருக்கிறது. ஸ்டாம்ப் டியூட்டியைப் பொறுத்தவரையில் அதை அபாலிஷ் செய்வதா அல்லது ரேஷனலைஸ் செய்வதா – எந்தெந்த

இட்டங்களை அபாலிஷ் செய்யலாம், எந்தெந்த இட்டங்களை ரேஷனலைஸ் செய்யலாம் என்று ஆய்ந்து வருகிறது. விரைவில் இதற்காக தக்க நடவடிக்கை எடுக்க அரசு முடிவு செய்யும்.

### தமிழகத்திலுள்ள நீதிமன்றங்கட்கு போதுமான கட்டிட வசதிகள் ஏற்படுத்தும் திட்டம்

* **வினா எண். 584**—திரு.எம். சின்னசாமி: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள நீதிமன்றங்கட்கு போதுமான கட்டிட வசதிகள் இல்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அக்குறையைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) மற்றும் (ஆ): தமிழகத்திலுள்ள எல்லா நீதிமன்றங்களுக்கும் போதுமான கட்டிட வசதிகள் இல்லை என்கிற நிலைமை இல்லை. அவ்வப்போது மாநில நிதி வசதிக்கேற்ப நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டுவதற்கான ஆணையை அரசு பிறப்பித்து வருகிறது.

திரு. எம். சின்னசாமி: தலைவர் அவர்களே, இப்போது நிறைய கோர்ட்கள் திறப்பதற்கு அரசு உத்தரவு போடுகிறது. அப்படி கோர்ட்கள் திறப்பதற்கு அரசாங்கம் ஆணை பிறப்பிப்பதற்கு முன்பு கட்டிடத்தை உருவாக்கிட்ட பிறகு கோர்ட்ஸ் திறப்பதற்கு அரசு இனிமேலாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, அது உண்மையிலேயே நடக்காத காரியம். காரணம், கட்டடங்களைக் கட்டிவிட்டுத்தான் நீதிமன்றங்களைத் திறக்கவேண்டுமென்றால் கிட்டத்தட்ட 35 ஆண்டுக்காலம் கவனிக்கப்படாத காரியத்தை இரண்டு, மூன்று ஆண்டுக் காலத்தில் முடிக்க வேண்டுமென்றால் அதற்கு நிதி ஆதாரம் தடைக்கல்லாக இருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனவேதான் கட்டடங்களை அரசாங்கமே கட்டி பின்னர் நீதிமன்றங்கள் திறக்க வேண்டும் என்பதற்குப் ப்திலாக வாடகைக்கு உடனடியாக இடங்களை அமைத்து நீதிமன்றங்களை அவ்வப்போது உடனடியாகத் திறக்கவேண்டும் என்ற முறையில்தான் விரைவாக அரசாங்கம் செயல்பட்டுவருகிறது. நிதி ஆதாரங்களுக்கேற்ப பழுதடைந்த கட்டடங்களை புதுப்பிக்கிற பணியிலும் அரசு ஈடுபட்டு வருகிறது.



திரு. சு. பாலன்: தலைவர் அவர்களே, நீதிமன்றங்கள், இன்றைய தினம் ஜார்ஜ் டவுன் கோர்ட்டானாலும் சரி எக்மூரிலானாலும் சரி, சைதாப்பேட்டையிலானாலும் சரி அங்குள்ள நீதிமன்றங்கள் பல ஆண்டுகளுக்கு முன்னால் துவக்கப்பட்டவை. அந்தக் கட்டடங்கள் பழைய கட்டடங்களாக இருப்பதும் தெரியும். அன்றுள்ள மக்கள் தொகைக்கும் இன்றுள்ள மக்கள் தொகைக்கும், அன்று நீதிமன்றங்களுக்கு எவ்வளவு பேர்கள் வந்தார்கள் இன்று எவ்வளவு பேர்கள் வருகிறார்கள் என்பதும் நமக்குத் தெரியும். நீதிமன்றங்களில் வழக்குகள் விசாரணை நடக்கும்போது யார் குற்றவாளிகள் யார் பொது மக்கள் என்று தெரிய முடியாத நிலையில் ஒரே கூட்டமாக இருக்கிறது. ஆகவே ஒவ்வொரு கோர்ட்டிலும் இன்று இடவசதி இல்லாத நிலையைப் போக்கி மக்கள் தாராளமாக உட்காரவும் கைதிகளுக்கு குற்றம் குறித்து எடுத்துச் சொல்லவும் போதிய இடவசதி செய்து தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நீதிமன்றங்களில் போதிய இடவசதி இல்லாததும் கட்டடங்கள் பல இடங்களில் பழுதடைந்த நிலைமையில் இருப்பதும் உண்மைதான். ஆனால் நான் ஏற்கெனவே சொன்னதைப்போல் ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட அளவு நிதி ஒதுக்கி இந்தப் பிரச்னை கவனிக்கப்பட்டிருக்குமானால் இந்தளவிற்கு ஒரு நிலை தற்போது ஏற்பட்டிருக்காது. ஆனாலும் கூட நீதிமன்றங்களுக்குத் தேவையான கட்டட வசதி வேண்டும், வழக்குரைஞர்களுக்கும், நீதிபதிகளுக்கும், வழக்காட வருகிற மக்களுக்கும் தேவையான வசதிகள் வேண்டுமென்ற முறையில் பிரச்னைகளை அரசாங்கம் அணுகுகிறது. அந்த அடிப்படையில் மைய அரசு நீதிமன்றங்களுக்கு கட்டடங்களுக்காக அதிக நிதி ஒதுக்கவேண்டும் என்ற கோரிக்கை அவ்வப்போது மாநில அரசால் வலியுறுத்தப்பட்டும் அதற்கு செவிசாய்க்காமல் நான்-ப்ரயாரிட்டி என்ற முறையில் வைத்துவிடுவதால் பல இன்னல்கள் ஏற்படுகின்றன. தற்போது எட்டாவது பைனான்ஸ் கமிஷனிடம் நீதிமன்றங்களுக்கு வேண்டிய கட்டடங்கள் கட்ட, அதிக நிதி வேண்டும் என்ற ஒரு கோரிக்கையும் எழுப்பப்பட்டிருக்கிறது. இந்த நிலைக்கு இடையில்தான் அரசாங்கத்தின் நிதி ஆதாரம் குறைவாக இருந்தபோதும் கடந்த மூன்று ஆண்டுகளில் கிட்டத்தட்ட இரண்டு கோடி ரூபாய் அளவிற்கு ஒதுக்கி இந்தப் பிரச்னையை முடிந்த அளவிற்கு அரசாங்கம் தீர்த்து வருகிறது.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, நிதி ஆதாரத்தைப் பொறுத்து இந்தக் கட்டடங்களைக் கட்டுவது அல்லது பழுதுபார்பது செய்யப்படுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிச் செய்கிறபோது சில டிஸ்டிரிக்ட் ஆண்ட் செஷன்ஸ்

ஹெட்க்வாட்டர்ஸ் கோர்ட்டுகளில் இருக்கக்கூடிய, நாகைபோன்ற பல நகரங்களில் இன்று வழக்கறிஞர்கள் உட்காரக்கூட ரெஸ்ட் ரூம் இல்லாமல், ஜட்ஜ் சேம்பர் மழை பெய்தால் லீக்காகக் கூடிய நிலையில், புயல் அடிக்கிற நேரத்தில், அடுத்த புயல் அடிக்கிற நேரத்தில் அந்தக் கட்டடம் விழுந்துவிடும் என்ற நிலையில் இருக்கிறது. எனவே நான் கேட்கவிரும்புவது, நிதி ஆதாரம் என்று சொல்கிறபோது உடனடியாக இப்படிப்பட்ட நகரங்களில் கட்டடம் கட்ட ப்ரையாரிட்டி கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, இதுகுறித்து ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு உமாநாத் அவர்கள் ஒரு கோரிக்கை கொடுத்து அது நியாயமான கோரிக்கை என்ற அடிப்படையில் அதன்மீது நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கம் ஆவன செய்ய இருக்கிறது.

## மதுவிலக்கு குற்றங்களை விசாரிக்க விசேஷ நீதிமன்றங்கள் ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண் 585—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு மதுவிலக்கு குற்றங்களை விசாரிக்க விசேஷ கோர்ட்டுகளை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) எந்த ஊர்களில் ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ), (ஆ) மற்றும் (இ) தமிழகத்தில் உள்ள பல்வேறு நீதிமன்றங்களில் தீர்வு காணப் படாமல் நிலுவையாக இருந்த மதுவிலக்கு வழக்குகளுக்கு விரைந்து தீர்வு காணும் நோக்குடன், முதல் வகுப்பு குற்றவியல் நடுவரைக் கொண்ட 21 சிறப்பு நீதிமன்றங்களை அமைப்பதற்கான ஆணையை 1982 ஆம் வருடம், சனவரி திங்களில் அரசு பிறப்பித்தது. அதன்படி அச்சிறப்பு நீதிமன்றங்கள் கீழ்க்காணும் இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன :—



1. அரக்கோணம்
2. திருப்பத்தூர்
3. விழுப்புரம்
4. உளுந்தூர்பேட்டை
5. தாம்பரம்
6. காஞ்சிபுரம்
7. கோயம்புத்தூர்
8. திருப்பூர்
9. பொள்ளாச்சி
10. ஈரோடு
11. கோபிச்செட்டிபாளையம்
12. நாகர்கோவில்
13. உசிலம்பட்டி
14. திண்டுக்கல்
15. புதுக்கோட்டை
16. சிவகாசி
17. சேலம்
18. தஞ்சாவூர்
19. திருச்சிராப்பள்ளி
20. கரூர்
21. திருநெல்வேலி

(முற்பகல் 9-30)

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 21 நீதிமன்றங்களை புதியதாக ஆரம்பித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் அரக்கோணத்திலும், திருப்பத்தூரிலும் அமைக்கப் பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். அரக்கோணம் என்பது ஒரு பகுதியிலும், திருப்பத்தூர் என்பது ஒரு பகுதியிலும் இருப்பதால் பங்கு வந்து போவதற்கு பொதுமக்கள் அவதிப்படுவதை மனதிலே கொண்டு, வேலூர் ஒரு நீதிமன்றம் ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறப்பு நீதிமன்றங்கள் புரகிபிஷன் அண்டு எக்சைஸ் என்று சொல்லப்படுகின்ற மதுவிலக்கு சம்பந்தமான வழக்குகளை விசாரிப்பதற்காக நிறுவப்பட்டிருக்கின்றன. உயர்நீதி மன்றத்தைக் கலந்துதான் இந்த அரசு இதைச் செய்திருக்கிறது. உயர்நீதிமன்றம் அதிகப்படியான மதுவிலக்கு வழக்குகள் உள்ள உதகமண்டலம், நாகை, சங்ககிரி, திருச்செங்கோடு, தர்மபுரி, கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில், ஏற்கெனவே அறிவித்துள்ள 21 இடங்கள் அல்லாமல், நீடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும் கோரிக்கையை ஏற்பதற்கில்லை. காரணம், மதுவிலக்கு வழக்குகள் நிலுவையில் உள்ளதைப் பொறுத்துத் தான், இந்த அரசு உயர்நீதிமன்றத்தைக் கலந்து முடிவெடுக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் புதியதாக ஒவ்வொரு கோட்டத்திலும் நீதிமன்றத்தை ஆரம்பிக்கவில்லை என்றாலும், ஏற்கெனவே அரக்கோணத்திலே இருக்கின்ற நீதிமன்றம் வாரத்தில் 3 நாட்கள் ஒரு பகுதியிலும், 2 நாட்கள் மற்றொரு பகுதியிலும், அதேபோல் திருப்பத்தூரிலே உள்ள நீதிமன்றம் 3 நாட்கள் ஒரு பகுதியிலும், 2 நாட்கள் மற்றொரு பகுதியிலும், பொதுமக்கள் நலனை முன்னிட்டு பணியாற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் அந்தப் பகுதிகளிலே நிலுவையிலே உள்ள வழக்குகள் அதிகமாக இருக்குமானால், கேம்ப் கோர்ட் ஆங்கு நிறுவுவது பற்றி அரசு பரிசீலிக்கும்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் மட்டும் மதுவிலக்கு சம்பந்தமான வழக்குகள் 7,000-க்கும் மேலாக இருப்பதால், அரசு அத்தகைய வழக்குகளில் 500-க்கும் குறைவான அளவுக்குக்கூட இந்த வழக்குகளில் இதுவரையில் ஈடுபடாததால், அவர்கள் தண்டனையும் பெறாமல் விடுதலையும் அடையாமல் இருக்கிறார்கள். இந்த அவல நிலையைப் போக்க அரசு விரைவில் நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுகளாக இருந்துவரும் இந்த அவல நிலையைப் போக்கத்தான் இப்போது இந்த 21 சிறப்பு நீதிமன்றங்களை அரசு நிறுவியிருக்கிறது.



திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுவிலக்குக் குற்றங்களை விசாரிப்பதற்காக 21 இடங்களில் சிறப்பு நீதிமன்றங்களை அமைத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த மதுவிலக்குக் குற்றங்களைப் பொறுத்த அளவிலே, ஏற்கெனவே மதுக்கடைகள் ஏலம் விடுவதற்கு முன்னால் எப்படி இருந்ததோ, அதே போன்று இப்போது ஏலம் எடுத்ததற்குப் பின்னாலும் பல்வேறு இடங்களில் சட்டத்திற்குப்புறம்பாக இருக்கின்ற காரணத்தினால், இந்த 21 சிறப்பு நீதிமன்றங்கள் தொடர்ந்து இருப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 21 நீதிமன்றங்கள் ஏற்படுத்தியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். தொடர்ந்து இருக்கத்தான் போகிறது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து இருக்காது. நிலுவையிலே இருக்கின்ற வழக்குகள் முடிந்தபிறகு, படிப்படியாக ரெகுலர் கோர்ட்டுக்கு இந்தப் பணிகள் ஒப்படைக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற வழக்குகள் எல்லாம் புரகிபிஷன் அண்டு எக்சைஸ் ஆக்ட் அண்ட் தி ரூல்ஸ் பிரேம்ட் தேர் அண்டர் (Prohibition and Excise Act and the rules framed thereunder) இதிலே வருகின்ற வழக்குகள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, they are out lived by the writ jurisdiction என்ற காரணத்தால், இந்த நீதிமன்றங்களுக்கு வராது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மதுவிலக்குக் குற்றங்களை விசாரிப்பதற்காக 21 கோர்டுகள் அமைக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், கிராமங்களிலே கள்ளச் சாராயம் காய்ச்சி, ஒரு கையிலே அதை வாங்கி வைத்துக் கொண்டு, மற்றொரு கையிலே நீண்ட அறுவாளை வைத்துக் கொண்டு, கண்டபடி ரொம்ப கேவலமாகப் பேசுவது அரசுக்குத் தெரியுமா? அப்படியே அவர்களை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு போனால்கூட, 2 நாட்களுக்குள் திரும்பி வந்து விடுகிறார்கள். குறைந்தது 6 மாதங்களுக்கு அவர்களுக்கு கடுமையான தண்டனை கொடுக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் கோர்ட்டைப் பற்றிச் சொன்னார்கள். ஆனால், தாங்கள் தண்டனையைப் பற்றிச் சொல்லுகிறீர்கள். வழக்கு வந்தபிறகுதான், விசாரித்து கோர்ட் தண்டனை கொடுக்கும். முதலில் வழக்கைக் கொடுங்கள்.

[1983 மார்ச் 29

ஹோமியோபதி மருத்துவக்கல்லூரியில் ஆண்டுதோறும் சேர்க்கப்படும் மாணவர்கள் எண்ணிக்கை.

*வினா எண். 586—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தமிழ்நாடு அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியில் ஆண்டுதோறும் சேர்க்கும் மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : 21.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர்வர்களே, இந்த ஆண்டு ஹோமியோபதிக்காக அரசு ஒதுக்கிய தொகை எவ்வளவு? ஹோமியோபதி டாக்டர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, ரூ. 14·15 இலட்சம் இதற்காக ஒதுக்கியிருக்கிறோம். அது மட்டுமல்ல, இதில் 9·43 இலட்சம் non-plan expenditure என்றும் ரூ. 4·72 இலட்சம் plan expenditure என்றும் இதற்காகப் பிரித்து பணத்தை ஒதுக்கி வைத்திருக்கிறோம். இந்த ஆண்டு 7 பேர்களுக்கு புதிதாக டாக்டர் பதவி கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, பட்டிதொட்டிகளிலே பரந்து கிடக்கும் மக்களுக்காக, அரசு கஜானா காலியாகாமல், உலகின் உயிர் மூச்சுக் கொள்கையாக, குடும்பக் கட்டுப்பாடு திட்டங்களை நிறைவேற்ற, ஹோமியோபதி டாக்டர்களைப் பயன்படுத்திக்கொள்ள, அதற்கான அரசின் நோக்கத்தை வெளியிட அமைச்சரவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, பொதுவாக எல்லா வகையான மருத்துவர்களையும் இந்தப் பணிக்காகப் பயன்படுத்திக்கொள்ளக் கூடிய ஒரு நிலைமை தமிழக அரசிற்கு இருக்கிறது. ஹோமியோபதி டாக்டர்கள் இந்திய மருத்துவமனை டாக்டர்கள் ஆகிய எல்லா டாக்டர்களையும் இப்பொழுது பயன்படுத்திக்கொள்ள ஆரம்பித்திருக்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு எத்தனை ஆண்டுகள் ஆகின்றன? இதுவரை அதிலே தேர்ச்சிபெற்ற ஹோமியோபதி



1983 மார்ச் 29]

டாக்டர்கள் எத்தனை பேர்? அவர்கள் படிப்பதற்கு வேண்டிய உதவித் தொகை ஏதேனும் இப்போது அளிக்கப்பட்டு வருகிறதா? மற்றொன்று. அந்தக் கல்லூரியிலே படிக்கக்கூடிய ஆண்டுகள் எத்தனை என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. DR. H. V. HANDE: Sir, the number of students admitted—class-wise என்ற ஒரு விவரம் இருக்கிறது. இப்பொழுது I year எடுக்கப்படவில்லை. II year 27, III year 22, IV year 50. A stipend of Rs. 175 is being paid for the period of Internship Training to each student who undergoes Internship Training with the Government Homeopathy Medical College.

என்று ஸ்டைபண்ட் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். ஒட்டு மொத்தமாக இரண்டு வகையான டாக்டர்களிலேகூட இந்த முறைப்படி படித்து வரக்கூடிய டாக்டர்கள் இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, பொதுவாக ஏற்கனவே படித்தவர்களுக்கு நாம், ஒரு சட்டத்தின் கீழே அனுமதி கொடுத்துக்கொண்டிருக்கிறோம்.

தமிழ்நாட்டில் நடத்தப்படும் கருத்தடை அறுவைச் சிகிச்சை முகாம்கள்.

*வினா எண். 587—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மாவட்டந்தோறும், மாதந்தோறும் கருத்தடை அறுவை சிகிச்சை முகாம்களை மீண்டும் நடத்தும் செயற்குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது முதல் செயலுக்கு வரும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மற்றும் (ஆ) தமிழ் நாட்டில் மாவட்டந்தோறும் தனியார் மற்றும் தொண்டு நிறுவனங்களின் கூட்டுச் சேர்க்கையுடன் கருத்தடை அறுவை சிகிச்சை சிறு முகாம்கள் 1983 மார்ச்சு திங்கள் இறுதிவரையில் நடத்தி மாவட்ட குறியீட்டினை அடையும்படி மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆண்டு எத்தனை பேருக்கு குடும்பக்கட்டுப்பாடு செய்யவேண்டுமென்று அரசு இலக்கு வைத்துள்ளது. அந்த இலக்கை எட்டிவிட்டதா? இதுவரை எத்தனை பேருக்கு குடும்பக் கட்டுப்பாடு செய்யப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, கடந்த 4, 5 ஆண்டுகளிலே, சென்ற ஆண்டுதான் [illegible] இலக்கு வைத்து, 1,88,228-ஐ நாம் எட்டியிருக்கிறோம்.

100 சதவிகிதத்திற்கும் மேலே. இந்த ஆண்டு 2,92,000 இலக்கை மத்திய அரசாங்கம் வைத்திருக்கிறார்கள். 20-3-83 அன்று வரை, 2,52,499 பேருக்கு நாம் அறுவை சிகிச்சை செய்திருக்கிறோம். இந்த ஆண்டு முழுமையாக 100 சதவிகிதத்திற்கும் நம்முடைய இலக்கினை எட்டக்கூடிய வாய்ப்பிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, நமது நாடு ஏழை எளிய நாடு. குடும்பக்கட்டுப்பாடு செய்யும் பெண்களுக்கு ரூ.200 தான் கொடுக்கப்படுகிறது. ஆகவே அதை ரூ. 1 000 ஆக உயர்த்துவதற்கும், அதோடு ஏதாவது சில பொருள்களைக் கொடுப்பதற்கும், அரசு ஆவன செய்யுமா? இந்தக் குடும்பக் கட்டுப்பாடு பிரச்சாரம் செய்யும் இடங்களிலே நடிகைகளை வைத்து பிரச்சாரம் செய்தால், மக்கள் மத்தியில், மனதில் நன்கு பதியும். அதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடிகைகளை வைத்து நாடகங்களை நடத்திக்கொண்டு இருக்கிறோம். தங்கவேல் அவர்களை வைத்து ஏறத்தாழ 10, 12 குடும்பக் கட்டுப்பாடு நாடகங்களை நடத்திக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசிடமிருந்து பெற்ற அந்தத் தொகையை மானியமாகக் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், இந்தக் குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சையை ஏற்றுக்கொள்கிறவர்களுக்கு 105 ரூபாய் மானியமாக கொடுக்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் இப்போது புதிதாக மத்திய அரசினுடைய பரிந்துரையின் பேரில் 5 ஸ்டேட் லாட்டரி டிக்கெட்டுகள், அடுத்த டிராவிலிருந்து, அந்த அறுவைச் சிகிச்சையை ஏற்றுக்கொள்கிறவர்களுக்கு கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு குடும்பக் கட்டுப்பாடு மிக அவசியமான திட்டமாகும். ஆகவே 2 குழந்தைகள் பெற்ற அத்தனை பேருக்கும் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்வதற்கு அரசு உறுதியான ஒரு ஆணையைப் பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தின் சார்பாக எல்லா மாநிலங்களையும் ஒருங்கிணைந்து ஒரு திட்டத்தை ஏற்படுத்தி செயல்படுத்திக் கொண்டு வருகிறது, ஆகவே இதிலே தனியாக ஒரு மாநிலம் மட்டும் முடிவு எடுத்துக்கொள்ள முடியாது. மத்திய அரசாங்கத்தினுடைய பரிந்துரையின் பேரில் அவர்கள் ஆணையிடுகிறார்கள்





மானிட்டர் செய்கிறார்கள். எப்படி எல்லாம் இது நடக்கிறது என்பதைப் பார்ப்பதற்கு அதிகாரிகளை நியமித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே 3 குழந்தைகளுக்கு மேல் Three children are above. உள்ள அந்தத்தாய்மார்களுக்கு அல்லது பெற்றோர்களுக்கு அறுவை சிகிச்சை செய்வதற்கு நாம் திட்டமிட்டு வருகிறோம்.

கஞ்சனூர் ஊராட்சியிலுள்ள மருத்துவமனை.

*வினா எண். 588—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் திருப்பனந்தாள் ஒன்றியம் கஞ்சனூர் ஊராட்சியில் உள்ள மருத்துவமனைக்கு மருத்துவர் நியமிக்கப்படாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) உடன் மருத்துவர் நியமிக்கப்பட அரசு அனுமதி வழங்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) தகுதிபெற்ற மருத்துவர் கிடைக்காத காரணத்தால் இப்பதவியை இதுகாறும் நிரப்ப முடியவில்லை.

அய்யம்பேட்டை நகரில் பரவிவரும் யானைக்கால் நோய்.

*வினா எண். 589—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாபநாசம் ஒன்றியம் அய்யம்பேட்டை நகரில் யானைக்கால் நோய் அதிகமாகப் பரவி வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் நோயைத் தடுக்க அரசின் தீவிர திட்டம் என்ன?

(இ) இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை எவ்வளவு?

(ஈ) அதில் ஆண்கள் எத்தனை பேர்? பெண்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) மற்றும் (ஆ) தஞ்சை மாவட்டம் பாபநாசம் ஒன்றியப் பகுதியிலுள்ள அய்யம்பேட்டை பேரூராட்சி பகுதியில் யானைக்கால் நோய் பரவ வாய்ப்புள்ளதா என்று அறிய ஒரு ஆய்வு செய்யப்பட்டது. அதன்படி இந்நோயின் பாதிப்பு இரண்டு சதவிகிதம் என அறியப்பட்டது. எனவே, இந்நோயை கட்டுப்படுத்த வேண்டி ஆண்டொன்றுக்கு ரூ. 13,250 செலவில் பாபநாசம் ஒன்றியத்தால் செயல்படுத்த வேண்டிய ஒரு திட்டத்திற்கு அரசு ஒப்புதளித்துள்ளது. செலவில் மூன்றில் ஒரு பங்கை அரசு மானியமாக வழங்குகிறது. இத்திட்டத்தின்கீழ் இந்நோய் பரப்பும் கொசுக்களின் உற்பத்தியை தடுக்கவும், கொசுக்களை புழுப் பருவத்திலேயே அழிக்கவும் வேண்டி வாரம் ஒரு முறை மருந்து தெளிக்கப்படுகிறது.

(இ) பரிசோதனை செய்ததில் இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் 500க்கு 19 என்று அறியப்பட்டுள்ளது.

(ஈ) ஆண்கள்—10 பெண்கள்—9.

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எத்தனை பைலேரியா கண்ட்ரோல் யூனிட்டுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன? அந்த யூனிட்டுகள் எந்த வகையில் செயல்பட்டு வருகின்றன என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் 19 பைலேரியா கண்ட்ரோல் யூனிட்டுகளும் 33 பைலேரியா கிளினிக்குகளும் வைத்து செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். இவைகள் ஒவ்வொரு மாவட்டத்திலேயும், குறிப்பாக எந்தப் பகுதியிலே பைலேரியசிஸ் என்டமிக்காக, அதாவது நிரந்தரமாக ஏற்படக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது என்று கருதப்படுகிறதோ அந்த இடங்களிலே அந்த அடிப்படையிலே நாம் துவக்கி செயல்படுத்திக் கொண்டு வருகிறோம்.

திரு. டெ. கு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த யானைக்கால் தடுப்பு நிலையங்கள் நகரங்களில்தான் மத்திய அரசினுடைய திட்டத்தின்கீழ் நல்லமுறையில் பணியாற்றுகிறது என்று ஏற்கனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இப்போதுகூட சொல்லும்போது, பாபநாசம் பற்றிச் சொல்லுகின்றபோது சுமார் 13 000 ரூபாய் அளவிற்கு மதிப்பீடுகள் தயார் செய்து அந்த திட்டத்தை செயல்படுத்துவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கனவே



இந்த திட்டங்கள் ஊராட்சி ஒன்றியங்களிலே நல்லமுறையில் செயல்படவில்லை என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். என்னுடைய பகுதியிலேயும் அப்படி இருக்கிறது. இதுபோன்ற நிலைமைகள் வட ஆர்க்காடு மாவட்டம், திருவண்ணாமலை, பாபநாசம் போன்ற பகுதிகளில் இருக்கிறது. ஆகவே இந்த யானைக்கால் தடுப்புத் திட்டத்திலே கிராமங்களையும் சேர்த்து தீவிரத்திட்டமாக செயல்படுத்தி, இந்த வியாதி பரவாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் National Filaria Control Programme என்று ஒரு திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தை எல்லா மாநிலங்களும் செயல்படுத்திக் கொண்டு வருகின்றன. 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட With a population of 20,000 அந்தப் பகுதிகளுக்கு இந்த ஸ்கீம் கொண்டு வந்து, நிறைவேற்றப்படுகிறது. Micro Filaria Rate Yardstick 5% வைத்து இருக்கிறோம். அதற்கு மேற்பட்டு நிலைமை இருக்குமானால் National Filaria Programme இந்தத் திட்டத்தை நாம் கொண்டுவரலாம். அந்த வகையிலே கிராமப் பகுதிகளிலும் நீங்கள் சொன்ன மாதிரி பேரூராட்சிகள், ஊராட்சிகள் ஆகியவற்றிலும் National Filaria Control மேற்பார்வையில் இத்திட்டம் செயல்பட்டுக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Survey on the land slides in Nilgiris

*Q. No. 428—Thiru. N. KITTAPA: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any geological survey has been conducted on the land slides occured in the Nilgiris by the State and Central Governments; and

(*b*) If so; the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை ஒன்று ** அவையில் வைக்கப்பட்டுள்ளது.

---

** 376 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

## 1981-82 நிதி ஆண்டில் இலாபத்தில் இயங்கிய அரசுத்துறை நிறுவனங்கள்.

*வினா எண். 429—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981—82 நிதி ஆண்டில் இலாபத்தில் இயங்கிய அரசுத்துறை நிறுவனங்கள் எத்தனை?

(ஆ) அந்நிறுவனங்கள் மூலம் ஏற்பட்ட இலாபம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) தொழில்துறை கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் அரசுத்துறை நிறுவனங்களில் பத்து நிறுவனங்கள் 1981—82 ஆம் நிதி ஆண்டில் இலாபத்தில் இயங்கியுள்ளன.

(ஆ) இந்நிறுவனங்கள் மூலம் ஏற்பட்ட தோராய இலாபம் ரூ. 7·56 கோடி ஆகும்.

## ராசிபுரம் வட்டத்திலுள்ள குறிப்பிட்ட கிராமங்களை மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் இணைக்கும் திட்டம்.

*வினா எண். 590—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

சேலம் மாவட்டம், நாமக்கல் வட்டம், ராசிபுரம் வட்டம் பகுதியிலுள்ள வாழவந்திக் கோம்பை கிராமம், நடுக்கோம்பை கிராமம், முள்ளுக் குறிச்சி கிராமம், பெரப்பஞ்சோலை கிராமம், ஊனந்தாங்கல் கிராமம், கார்கூடல்பட்டி கிராமம் ஆகியவைகளை மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் இணைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: ஏற்கெனவே உள்ள திட்டப் பகுதியில் இக்கிராமங்கள் இணைக்கப்படவில்லை. எனினும் 1981-ம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கெடுப்பின் முழு விபரங்கள் வெளி வந்தவுடன் உறுப்பினர் கோரியுள்ள கிராமங்களுடன் அருகிலுள்ள கிராமங்களையும் இணைத்து ஒருங்கிணைந்த பழங்குடியினர் முன்னேற்றத் திட்டப் பகுதியாக அறிவிப்பதற்கான சாத்தியக் கூறுகள் பரிசீலிக்கப்படும்.



திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதிகளை மலைவாழ் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்ள ஏதாவது வரையறை வைத்துள்ளதா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் ஆணைப்படி அடுத்தடுத்து உள்ள கிராமங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் குறைந்தது 10,000 மக்கள் தொகை உள்ளதாக இருந்து, மொத்தம் உள்ள மக்கள் தொகையில் 50 விழுக்காடு ஆதித்திராவிடர் மக்கள் தொகை இருக்க வேண்டும் என்றும், அப்படி அந்தப் பகுதி இருக்குமானால் அதை ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் பகுதியாக அறிவிக்க நாம் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யலாம்.

திரு. சி. சிவப்பிரகாசம்: தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு கணக்கெடுப்பு அடிப்படையில் ஆதித்திராவிட மக்கள் வாழவந்திக்கோம்பை, நடுக்கோம்பை, முள்ளுக்குறிச்சி, பெரப்பஞ்சோலை, ஊரந்தாங்கல் ஆகிய கிராமங்களில் 50%-க்கு மேல் இருக்கிற காரணத்தால், அதை மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு அடிப்படையில் அங்கே வசிக்கக்கூடிய மக்கள் தொகை எண்ணிக்கை 5.2 லட்சமாக இருக்கிறது. உறுப்பினரவர்கள் கேட்டு இருக்கக் கூடிய அந்த கிராமப் பகுதிகளில் நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, அங்கே இருக்கக் கூடிய மக்கள் தொகை 10,000-க்கு மேற்பட்டு இருக்கவேண்டும் என்று வரையறுக்கப் பட்டுள்ளது. அதிலே 50% ஆதித்திராவிட மக்கள் இருக்க வேண்டும் என்றும் வரையறுக்கப்பட்டுள்ளது. அங்கேயுள்ள மொத்த எண்ணிக்கையான 12,721 மக்கள் தொகையில் ஆதித்திராவிடர்களின் எண்ணிக்கை 5,900 என்று இருப்பதால், அங்கேயுள்ள மக்கள் தொகையில் ஆதித்திராவிடர்களின் எண்ணிக்கை 50% என்பதற்குக் குறைவாக இருப்பதால், அதைச் சேர்க்கக் கூடிய நிலை இல்லை. 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு விவரங்கள் முழுமையாகக் கிடைத்தவுடன், அந்தப் பகுதியில் ஆதித்திராவிடர்களின் மக்கள் தொகை 50% க்கு மேலாக இருந்தால்

[1983 மார்ச்சு 29

அந்தக் கிராமப் பகுதிகளையும் அந்த ஒருங்கிணைந்த பழங்குடியினர் முன்னேற்றத் திட்டப் பகுதியாக அறிவிப்பதற்கான வசதி ஏற்படும்.

ஆதித்திராவிடர்களுக்கு வீட்டுமனைகள் வழங்க ஆர்ஜிதம் செய்யப்படும் நஞ்சை நிலம்.

*வினா எண் 591—திரு. க. பாரமலை; திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு ஆதித்திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்தில் அரிசனங்களுக்கு வீட்டுமனைகள் வழங்குவதற்கு நஞ்சை நிலம் ஆர்ஜிதம் செய்வதை அரசு நிறுத்தி வைத்திருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) மற்றும் (ஆ) விவசாயம் அல்லாத காரணங்களுக்காக நன்செய் நிலங்களைக் கையகப்படுத்துவதைத் தவிர்க்க வேண்டியது குறித்து அரசு அண்மையில் ஆய்வு செய்தது. நன்செய் நிலங்கள் கையகப்படுத்துவது குறித்து ஏற்கனவே உள்ள ஆணைகளே தொடர்ந்து செயல்படுத்தப்பட வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டது. இதன்படி நன்செய் நிலங்கள் கடைசி கட்டமாகத் தவிர்க்கமுடியாத நிலையில் கையகப்படுத்தப்பட்டு வருகின்றன.

(முற்பகல் 9–50)

திரு. க. பாரமலை : தலைவரவர்களே, இந்த நன்செய் நிலம் எடுப்பது கடைசி கட்டமாக வேறு வழியில்லை என்ற நிலை இருந்தால்தான் என்று சொல்கிறார்கள். இந்தக் கொள்கை பல ஆண்டுகளாக அரசினுடைய நடைமுறையில் இருந்து வருகிறது. வேறு புன்செய் நிலங்கள், அரசுக்குச் சொந்தமான நிலங்கள் இல்லாத நிலையில், அதுபற்றி மாவட்ட அதிகாரிகள் அரசுக்குத் தெரிவித்த பின்னால், அந்த நில ஆர்ஜிதத்தைத் தொடர்ந்து செய்ய, மந்திரிசபை கமிட்டி அதாவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இருக்கிற உயர்மட்டக் குழு ஒவ்வொரு நேர்வுகளையும் பரிசீலித்து அனுமதி வழங்குவதால்தான் காலதாமதம் ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது. உயர்மட்டக் குழு அல்லது ஆதித்திராவிட நல அமைச்சர், வருவாய்த் துறை அமைச்சர், முதலமைச்சர் ஆகியோர்தான் முடிவு எடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அதன் காரணமாக தாமதம் ஏற்படுகிறது. இந்தக் காலதாமதம் தவிர்க்கப்பட வேண்டும்.



1983 மார்ச் 29]

அதோடு 1981–82 மற்றும் 1982–83 ஆம் ஆண்டுகளில் எத்தனை நேர்வுகளை அவர்கள் எடுத்துக்கொண்டு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது? எத்தனை ஏக்கர் நன்செய் நிலம் அதிலே அடங்கியிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவ்வளவு பெரிய கேள்வியைக் கேட்டால் எந்த அளவுக்குப் பதில் வரும்? கொடுக்கும் பதிலைப் பெற்றுக்கொள்ளுங்கள். கேள்வியைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, நன்செய் நிலங்களைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல நன்செய் நிலத்தைத் தவிர வேறு நிலங்கள் இல்லை என்ற பகுதியில் அந்த நிலத்தை எடுக்க வேண்டும் என்பதில் அரசுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. அத்தகைய பகுதியாக இருந்தால் மாவட்ட ஆட்சித்தலைவர் நேரிலே சென்று பார்வையிட்டு, தனிப்பட்ட முறையிலே தன்னை திருப்தி செய்துகொள்ள வேண்டுமன்ற நிலையில் அவர்கள் அத்தகைய பகுதிக்குச் சென்று, பார்த்து, திருப்தியடைந்த பின்னால் அரசுக்கு எழுதுவார். அந்தக் குறிப்பு ஆதித்திராவிடர் அமைச்சர் மூலமும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் மூலமும் பரிசீலிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணையைப் பெற்று, அந்தப் பகுதியில் இருக்கக் கூடிய ஆதித்திராவிடர் மக்களுக்கு நன்செய் நிலத்தை கையகப்படுத்தி, விநியோகம் செய்து வருகிறோம். இதில் எந்த விதமான காலதாமதமும் இல்லை என்று கருதுகிறேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காலதாமதம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அவர்கள் சொல்வதைப் போல தற்போது இருக்கிற நடைமுறையில் காலதாமதம் இல்லை என்றும், இது அரசு மட்டத்தில் இருக்கிற முடிவு என்பதால் இதுவே தொடர்ந்து இருக்கலாம் என்றும் இந்த அரசின் கொள்கையாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, திருச்சி மாவட்டம், தஞ்சை மாவட்டம், நெல்லை மாவட்டத்தில் தாமிரவருணி ஆற்றுப் பாசனப்பகுதி போன்ற இடங்களில் புன்செய் நிலமே இல்லை. அங்கே புன்செய் நிலங்களே இல்லை என்பது நமக்குத் தெரியும். அப்படிப்பட்ட இடங்களிலேகூட பரிசீலனை செய்ய வேண்டுமென்று சொல்வதால்தான் இந்தமாதிரி காலதாமதம் ஏற்படுகிறது அதுமட்டுமல்ல. ஏற்கெனவே அப்படிப்பட்ட இடங்களில் நிலம் கையகப்படுத்த ஒதுக்கப்பட்ட பணத்தைக்கூட திருப்பி ஒப்படைத்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதுபற்றி அரசின் கருத்து என்ன என்று அறிய விரும்புகிறேன்.

[1983 மார்ச் 29

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, நன்செய் நிலத்தைத் தவிர வேறு நிலங்களே இல்லை என்று சொல்லப் படுகிற அந்தப் பகுதிகளில் அந்த விவரங்களை அதிகாரிகள் அரசுக்கு அனுப்புகிறார்கள். புன்செய் நிலங்களோ, அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலங்களோ இல்லை என்ற அடிப் படையில் நன்செய் நிலத்தை எடுக்கவேண்டிய நிலை இருந்தால் அரசு அதில் எந்தவிதமான தயக்கமும் இதுவரை காட்டியதில்லை. அது மட்டுமல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல தஞ்சை, திருச்சி போன்ற மாவட்டங்களில் புன்செய் நிலங்கள் இல்லை என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. அந்த வகையில் அந்தப் பகுதியிலிருந்து தெரிவிக்கிற குறிப்புகளின் அடிப்படையில் இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனை வழங்குவதிலே கடந்த ஆண்டிலே ஏற்கெனவே ஒரு சட்டம் போட்டு தடை விதிக்கப்பட்டது. அதைப்போன்று ஏற்கெனவே எமர்ஜன்சி கிளாஸ் போடுவோம் என்று சொல்லும்போது அதுவும் காமதப்படுகிறது. அல்லது வழக்குகள் போட்டு தடை செய்யப்படுகிறது. இப்படிப்பட்ட வழக்குகளை மேற்கொண்டு நடத்த, அப்பீல் செய்ய அல்லது துரிதப்படுத்த ஒரு ஏற்பாட்டை எந்த வகையில் இந்த அரசு செய்ய இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலேயிருக்கிற ஆதித்திராவிட மக்களுக்காக வீட்டுமனைகளை அளிக்கவேண்டும் என்ற உணர்வில், மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதைப் போல 1978 ஆம் ஆண்டு இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, ஒரு புதிய சட்டத்தினை கொண்டுவந்தது. விரைவாக நிலங்களை கையகப்படுத்தி, அவர்களுக்கு வழங்குவதற்கு அந்தச் சட்டத்தினை நாம் பயன்படுத்தினோம். ஆனால், மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதைப்போல, அந்தச் சட்டம் செல்லாது என்று தீர்ப்பு அளிக்கப்பட்டதன் காரணமாக, தற்போது இந்த அரசு பழைய சட்டத்தின்படி 1894 ஆக்டின்படி, அந்த நிலங்களை ஆதித்திராவிட மக்களுக்காக கையகப்படுத்திக் கொண்டு இருக்கிறது. புதிய சட்டம் செல்லாது என்று உயர்நீதி மன்றம் தீர்ப்பு அளித்திருக்கிற காரணத்தாலே, இந்த அரசைப் பொறுத்தவரையில், அதனை எதிர்த்து உச்ச நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்திருக்கிறது. அதனை எவ்வளவு விரைவாக எடுக்க முடியுமோ, அவ்வளவு விரைவில் எடுப்பதற்கு, இந்த அரசினுடைய அதிகாரிகள் உச்ச நீதிமன்றத்தோடு தொடர்பு கொண்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



1983 மார்ச் 29]

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, சில கிராமங்களில், ஆதிதிராவிட மக்களுக்கும், அரிசனங்களுக்கும் இவ்வாறு அரசு புஞ்சை நிலங்களை நில ஆர்ஜிதம் செய்கிறது என்பதைத் தடுக்கும் பொருட்டு. அங்கே யிருக்கிற வில்லேஜ் முன்சீபின் உதவியோடு, புஞ்சை நிலங்களை நஞ்சை நிலங்களாக மாற்றி வருவது அரசுக்குத் தெரியுமா? அத்தோடு, அந்த ஆதிதிராவிட மக்களின் மீதே நிலங்களை ஒப்படை. செய்து, இந்த நில ஆர்ஜிதங்களை தடுக்கிற வகையில் அவர்கள் செய்கிறார்கள் என்பதும் அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அப்படி என்றால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளிலே இருக்கும் நஞ்சை நிலங்களை அங்கேயிருக்கக்கூடிய அதிகாரிகளோடு சேர்ந்து புஞ்சை நிலங்கள் என்று சொல்லி பொய் சான்றிதழ்கள் பெற்று விடுவதினால், அரிசன மக்களுக்கு நிலம் கொடுக்க அதை கையகப்படுத்த முடியாமல் தடுக்கிறார்கள் என்று உறுப்பினர்கள் தான் தற்போது தெரிவித்திருக்கிறார்கள். அது போன்ற பிரச்சினை இதுவரையில் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினரோ அல்லது இந்த மன்றத்திலே உள்ள வேறு உறுப்பினர்களோ அது போன்ற நிலைமை தம்முடைய தொகுதியிலே இருப்பதாகக் குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால், இந்த அரசு கண்டிப்பாக அதன் மீது நடவடிக்கை எடுக்கும்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கு வீட்டுமனைகளை வழங்குவதற்காக புஞ்சை நிலங்கள்தான் கையகப்படுத்தப்படுகின்றன. நஞ்சை நிலங்களை கையகப்படுத்துவது குறித்து கடைசி கட்டமாக தவிர்க்க முடியாத நிலையில்தான் கவனிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நஞ்சை நிலங் களை எடுக்கக்கூடாது என்று சொல்வதற்குக் காரணம், அதிலே இருக்கக்கூடிய நல்ல விளைச்சல் குறைந்துவிடும் என்பதற்காகவா அல்லது வேறு ஏதாவது காரணம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புவதோடு, 1 ஆம் நெம்பர் நஞ்சை நிலமாக இருக்கக் கூடிய சில பகுதிகளில் பெரிய பெரிய ஜமீன்தார்களும் முதலாளிகளும், வீடுகளையும், தொழிற்சாலைகளையும் கட்டிக் கொண்டு வருகிறார்களே, அப்படி நிலைமை இருக்கும்போது, வீட்டுமனை இல்லாத இந்த ஏழை அரிசனங்களுக்கு, மனைகள் கொடுப்பதற்கு இதுபோன்ற நிபந்தனைகள் இருப்பது நியாயமா? ஆகவே அந்த நிபந்தனைகளைத் தளர்த்திவிட்டு, நஞ்சை நிலங்களையும் கையகப்படுத்தி, அந்த மனைகளை

[1983 மார்ச் 29

அவர்களுக்குக் கொடுக்க அரசாங்கம் துரிதமாக நடவடிக்கை எடுக்குமா அல்லது அது குறித்து ஆலோசனையாவது செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நஞ்சை நிலங்களை ஆதி திராவிட மக்களுக்கு கையகப்படுத்தித் தரவேண்டும் என்பதில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல, விவசாயம் கூட இதனால் பாதிக்கப்படும் என்ற எண்ணத்தை அரசு கொண்டிருக்கிறது. அந்த நிலைமையை ஆதித்திராவிட மக்களுக்கு மட்டும் என்று இந்த அரசு எண்ணவில்லை. எல்லாவிதமான பணிகளுக்கும் பொதுவாக நிலங்களைக் கையகப்படுத்துகிறபோது, இந்த எண்ணத்தை மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும் என்ற உறுதியைத்தான் இந்த அரசு கொண்டிருக்கிறது.

தவிரவும், ஆதித்திராவிட மக்களுக்கு அவர்களுடைய குடியிருப்புகளுக்குப் பக்கத்திலேயே வீட்டுமனைகளைக் கொடுக்க வேண்டும் என்கிற ஒரு எண்ணத்தையும் இந்த அரசு கொண்டிருக்கிற காரணத்தால், பொதுவாக நஞ்சை நிலங்கள் குடியிருப்புகளுக்கு மிகத் தொலைவில் இருப்பதாலும் அதை எடுத்துக் கொள்வதில்லை. ஆகவே, அந்த வகையில் இந்த இரண்டு காரணங்களை அடிப்படையாகக் கொண்டு நிலைமைகளை அரசு கவனித்து வருகிறபோது, இவைகளை எல்லாம் ஆராய்ந்து அதன்படி தக்க முடிவை எடுத்துக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி யிடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10-50)

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

**இந்தியப் பிரதமரை வரவேற்க விமான நிலையத்திற்குச் சென்ற எதிர்க்கட்சித் தலைவர் காவல் துறை அதிகாரி ஒருவரால் தடுத்து நிறுத்தப்பெற்றது.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 54 ஆவது விதியின் கீழ் கவன ஈர்ப்பு ............(குறுக்கீடு)

**திரு. மு. அம்பிகாபதி :** தலைவர் அவர்களே, நான் என்ன சொல்கிறேன் என்பதைக் கொஞ்சம் கேளுங்கள்.



1983 மார்ச் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்றைக்கு எந்தவிதமான பாயிண்ட் ஆஃப் ஆர்டரையும் அனுமதிப்பதற்கு இல்லை. தலைவர் கள் எல்லாம் பேச வேண்டி இருக்கின்றது. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக அமர வேண்டும்........ (குறுக்கீடுகள்)

***திரு. க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் காலையிலே ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் தங்களுக்கு அனுப்பி இருக்கிறேன். அந்தத் தீர்மானத்தைத் தங்களுக்கு அனுப்பியதற்குக் காரணம் ஏற்பட்டுப்போன நிகழ்ச்சி யினால் வெளியிலே ஏற்பட்டிருக்கின்ற கடுமையான உணர்வை இந்த அவையின் மூலமாக ஓரளவுக்கு வெளிப்படுத்த வாய்ப்பு ஏற்படவேண்டும் என்பதற்காகத்தான். அதனால்தான் அந்தத் தீர்மானத்தைத் தங்களுக்கு நான் அனுப்பினேன்.

நேற்றைய தினம் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் சென்னைக்கு வருகின்ற அந்த நேரத்தில் அவர்களை வரவேற் பதற்காக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு வந்து வரவேற்க அழைப்பு அனுப்பப் பட்டிருந்தது. அந்த அழைப்பை ஏற்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விமான நிலையத்திற்கு வரவேற்புக்காக வந்திருந் தார்கள். அப்படி வந்திருந்தபோது ஆளுநர் குரானா அவர்களிடத்திலே உரையாடிக் கொண்டிருந்தார்கள். எனவே, அவர்கள் இருந்தது அங்கே உள்ளவர்களுக்குத் தெரியாது என்றோ காவல் துறையினருக்குத் தெரியாது என்றோ யாரும் சொல்ல முடியாது. அவர்களோடு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இருந்தார்கள். திருமதி இந்திராகாந்தி அவர்கள் வந்து இறங்குகின்ற நேரத்தில் அவர்களை வரவேற்பதற்காக எதிர்க் கட்சித் தலைவர் என்ற அந்த உரிமையோடு மட்டுமல்ல, ஒரு கட்சியின் தலைவர் என்பதற்காக மட்டுமல்ல, முன்னாள் முதல் அமைச்சர் என்ற தகுதியோடு இன்னாள் முதலமைச்சரோடும், ஆளுநரோடும், மற்றவர்களோடும் அவர்கள் உள்ளே செல்கின்ற போது ஒரு காவல் துறை அதிகாரி— பெயரை வேண்டுமானாலும் நான் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன்—முன்கூட்டியே அவரிடத்திலே வரக்கூடாது என்று அறிவித்திருந்தால் அது வேறு ....(குறுக்கீடு) முதலில் பதில் சொல்லாவிட்டால்கூட பரவாயில்லை, எப்பொழுதேனும்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் காலையிலே வந்தவுடன் அதுபற்றிக் கேட்டேன். அது குறித்து விசாரித்துச் சொல்லுகிறேன் என்று சொல்லிவிட்டார்கள்.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, விளக்கம் சொல்வது என்பது வேறு. விதாயம் சொல்வது வேறு. இதைப்பற்றி பரிசீலிக்கிறார்கள் என்ற கருத்தாவது மக்களுக்குத் தெரிந்தாக வேண்டும். எனவே இதனுடைய முக்கியத்துவத்தைக் கருதித் தான் நான் ஒத்திவைப்புத் தீர்மானம கொடுத்தேன். ஆனால் பொதுவாக எதையும் நானே ஒத்திவைத்துக் கொண்டு செல்வேனே தவிர இங்கே ஒத்திவைப்புத் தீர்மானம் தருவதில்லை. அவ்வாறு தீர்மானம் தந்ததற்குக் காரணம் இதனால் ஏற்பட்டிருக்கின்ற உணர்வு எளிதாகத் தீர்சகப்படக்கூடிய உணர்வு அல்ல. அரசாங்கத்திலிருந்து அழைப்பே வராமல் இருக்குமேயானால் அந்த வரவேற்புக்கு முயற்சித்து அவர் விரும்பினால் வந்திருக்க லாம் அல்லது வராமல் இருந்திருக்கலாம். ஆனால் அழைப்பு ஒன்று வந்து உள்ளே செல்கின்றபோது 'தாங்கள் உள்ளே அனுமதிக்கப்படவில்லை' என்று அறிவிக்கப்பட்டு இருக்குமே யானால் அனுமதிப்பதற்கு என்ன வழி என்றாவது யோசிக்கலாம். ஆனால் ஒரு முன்னாள் முதலமைச்சர் உள்ளே ஏற்கெனவே சென்றும் இருக்கிறார். இன்னொரு முன்னாள் முதலமைச்சர் உள்ளே செல்கிறபோது அவரிடத்திலே ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் அரசாங்கத்தினுடைய கருத்து இன்னது என்று தெரிவிக்காமல் ஒரு அதிகாரி—அவர் எவ்வளவு பெரிய அதிகாரி யாக இருந்தாலும் அவருடைய தகுதி என்ன என்பது எனக்குத் தெரியும். முதலமைச்சராக இருக்கின்றபோது அவரிடத்திலே எப்படிப்பட்ட முறையிலே நடந்துகொண்டவர்கள் இன்று முதலமைச்சராக இல்லை என்று சொன்னவுடன்—முதலமைச் சராக இல்லை என்று சொன்னாலும்கூட எதிர்க்கட்சித் தலைவரை ஒரு முன்னாள் முதலமைச்சரைத் திடீரென்று கையைப் பிடித்து இழுக்கின்ற அளவுக்கு ஒரு அதிகாரிக்குத் துணிச்சல் வருமேயானால் அவருடைய எண்ணம் என்ன? மனப்பான்மை என்ன? அப்படி இருக்கின்றபோது இரண்டொரு நாடாளுமன்ற உறுப்பினர்கள், காங்கிரஸ் கட்சியினுடைய நாடாளு மன்ற உறுப்பினர் திரு. கே. டி. கோசல்ராம் உட்பட முன்னாள் முதலமைச்சரை ஏனய்யா இப்படிக் கையைப் பிடித்து இழுக்கிறாய், இப்படியா நடப்பது என்று கேட் கின்ற அளவுக்கு ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. கையைப்பிடித்தபோது பிரதமர் இந்திராகாந்தி அவர்களை வரவேற்கச் செல்கிற அந்த கட்டத்தில் வழியில், கலைஞரின் கையைப் பிடிக்கிறபோது இன்னொரு பக்கம் இந்நாள முதலமைச்சர் உள்ளே போய்க் கொண்டிருக்கிறார்கள். பக்கத்தில்தான் சற்று முன்னால். ஆகவே அந்த நேரத்தில் கையை உதறிக்கொண்டு கையை உதறுகிற காரணத்தால் கையை இழுப்பவர் கையை முறுக்கிற நிலைமை ஏற்பட்டு சட்டை உள்பட முழுவதும் முறுக்கப்பட்ட அந்த லையிலே முன்னாள் முதலமைச்சர் அவர்கள், எதிர்க்கட்சித் நிலைவர் இன்னும் சொல்லப்போனால் ஜனநாயக முறையில்



கட்டாயமாக மதித்து தீரப்படவேண்டிய நிலையில் உள்ள ஒருவர் ஒரு அதிகாரியால் இந்த நிலைமைக்கு ஆளாக்கப் பட்டார் என்று சொன்னால் அதற்குக் காரணம் 'மேலிடத்து உத்திரவு' என்று அந்த அதிகாரி தெரிவித்ததாக, கேட் பவர்களுக்கு 'மேலிடத்து ஆணை' என்று சொன்னதாகத் தெரிகிறது. இதைவிட ஒரு அசம்பாவிதமான, பொறுப்பு அற்ற இன்னும் ஒரு அடிப்படையில் சொல்லப்போனால் அற்பத் தனமாக எதிர்க்கட்சித் தலைவரை அவமானப்படுத்த முயற்சிக்கிற ஒரு காரியம் வேறு நடக்கமுடியாது. மேலும் ஏற்கெனவே இப்படி ஒரு முறை நடைபெற்றது. அதை இங்கே சட்டமன்றத்திலே வந்து விவாதிப்பது சாதாரணமாக அறியாமல் செய்து இருக்கக்கூடிய தவறுகளை நாம் பெரிது படுத்துவதாக ஆகிவிடும் என்ற காரணத்தால் முன்னர் ஒரு முறை நடைபெற்ற இப்படிப்பட்ட செயலைப் பத்திரிக்கையில் வந்த அளவோடு விட்டுவிட்டோம். எனவே இதற்குத் தகுந்த பரிகாரத்தை உரிய நடவடிக்கையை அல்லது மேலிடம் என்பது எந்த மேலிடம் என்பதை அரசாங்கத்தின் சார்பாகத் தெரிவிக்க வேண்டிய கடமை இருக்கிறது. உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அதற்கு அரசு பொறுப்பு ஏற்றுக் கொள்ளுமானால் அந்த அளவில் அந்தப் பிரச்சனையை எதிர்க் கட்சித் தலைவருக்கு இழைக்கப்பட்ட அவமானத்தைப்பற்றித் திராவிட முன்னேற்றக்கழகம் மேற்கொண்டு எப்படி இந்த பிரச்சனையை அணுகுவது என்பதை ஆராயும். எனவே அந்த அடிப்படையில் நான் சபாநாயகர் அவர்களை இதனால் ஏற்பட்டு இருக்கிற பதட்டமான நிலைமையை இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் மூலமாக, நாளையதினம் இதை எடுத்துக் கொள்வதன் மூலமாகவாவது இந்தப் பதட்டமான நிலமை பத்திரிகையில் வந்து இருக்கிற செய்தியால் ஏற்படக்கூடிய விளைவுகளைத் தீர்க்கமுடியும் என்ற காரணத்தாலே, மிக அவசரம் என்ற காரணத்தாலே இந்தப் பிரச்சனையை நான் எழுப்பியிருக்கிறேன். அரசாங்கம் முழு அளவுக்கு விசாரித்து பதில் சொல்லாவிட்டாலும் உடனடியாகச் சொல்லத்தக்க பதிலை அளிக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்கள் நேற்று விமானக் கூடத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு ஏற்பட்டுவிட்ட ஒரு நிகழ்ச்சியை இங்கே சுட்டிக் காட்டினார்கள். காலையிலே செய்தித்தாட்களிலே பார்க்கிற பாதுதான் அந்த நிகழ்ச்சியையும் அது பற்றி மாண்புமிகு தேிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியிருக்கிற கூற்றையும் நான் எகண்டேன். ஆக இதைப் பொறுத்தவரையிலும் மாண்புமி

எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்கள்இந்தப் பிரச்சனையைக் கொண்டு வந்துஇருப்பதன் காரணமாக இந்தப் பிரச்சனையை விசாரிப்பது அவர்கள் எடுத்துச்சொல்வது மாதிரி அதற்கான நடவடிக்கை எடுக்க அரசு ஆயத்தமாக இருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். என்றாலும் ஒரு எதிர்க் கட்சித் தலைவர் ஒரு போலீஸ் அதிகாரியால் பிடிக்கப் படுகின்ற அளவுக்கு அல்லது தடுக்கப்படுகின்ற அளவுக்கு இருப்பதை இந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் ஏற்பட்டுவிட்ட நிலைமைகளை நாம் சொல்கின்றபோது நான் அங்கே அதற்கு முன்னால் அந்த விமானக்கூடத்தில் மாண்புமிகு பிரதமர் அவர்களை வரவேற்பதற்காகக் கூடியிருந்த கூட்டத்தில் இருக் கின்றபோது—எப்போதும் இப்படி பிரதமரோ அல்லது மற்றவர்களோ வருவார்களானால் வரிசையாக பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், நீதிபதிகள் மற்றவர்களை நிறுத்தி வைத்து அவர்களுக்கு அறிமுகப்படுத்தும் ஒரு முறை இருந்தது. அந்த முறை உண்டா என்று நான் கேட்டபோது இப்போது வேண்டாம் என்று சொல்லிவிட்ட உடனே அந்த முறைகள் விடுக்கப்பட்டு விட்டன. விமானத்திற்கு அருகில் யார் யார் போகவேண்டும் என்று—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வராத நிலையில் நான் இருந்தபோது—தலைமைச் செயலாளர் வந்து என்னைக் கேட்டபோது ஆளுநர் அவர்கள் விமானத்திற்கு அருகில் செல்லட்டும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கே விமானத்திற்கு அருகில் செல்லட்டும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விமானத்திற்கு அருகில் செல்லட்டும், எதிர்க்கட்சியான காங்கிரஸ் தலைவரான திரு. ஹாஜாசெரீப் அவர்கள் விமானத்திற்கு அருகில் செல்லட்டும், இந்த 4 பேர் மட்டும் அங்கே போகட்டும். மற்றவர்கள் எல்லாம் இங்கே நின்றுகொள்ளலாம். அம்மையார் வரும்போது பார்த்துக்கொள்ளலாம் என்றுதான் தலைமைச் செயலாளரிடம் தெரிவிக்கப்பட்டது. ஆளுநர், மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு திரு. ஹாஜாசெரீப் இந்த 4 பேர் மட்டும் வேண்டுமானால் மாலையிடுகின்ற அளவுக்கு அந்த அந்தக் கட்சிகளின் சார்பாக விமானத்திற்கு அருகில் போகலாம் என்றுதான் என்னைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு இன்ஸ்ட்ரக்ஷன் கொடுத்து இருந்தேன். அது எப்படி மாறியது, இந்த நிலைமை ஏன் இப்படி வந்தது என்று எனக்குத் தெரியவில்லை பிறகு பத்திரிக்கையில் வந்தது.

(முற்பகல் 10 – 10)

ஆகவே இதைப்பற்றி உள்ளபடியே அரசு வருந்துகிறது என்றாலும் இப்படிப்பட்ட நிலைமைகளை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் முதலமைச்சர் அவர்களிடம் அங்கேயே





எடுத்துத் தெரிவித்ததாகவும் அதைப்பற்றி கவனிப்பதாகவும் செய்தித்தாளிலே வந்திருக்கிறது. இந்தப் பிரச்னையை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் எழுப்பியிருக்கிற காரணத் தினாலேயும் மாண்புமிகு உறுப்பினர் யாராக இருந்தாலும் அவருக்குரிய மரியாதை காப்பாற்றப்படவேண்டுமென்பது மட்டுமல்லாமல் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நானே சொல்லி இருக்கிறேன், விமானம் வரும் செல்வதற்கு இந்த நான்கு பேர்களுக்கும் அனுமதி தாருங்கள், மற்றவர்கள் நின்றுவிடலாம் என்று, நான்கூட நின்று விட்டேன். ஒரு காங்கிரஸ் எம். பி. வந்துதான் நீங்கள் ஏன் இங்கே நின்று கொண்டிருக்கிறீர்கள், நீங்களும் வாருங்கள், மற்றவர்கள் எல்லாம் உள்ளே போய்இருக்கும்போது நீங்கள் ஏன் இங்கேயே நின்றுகொண்டிருக்கிறீர்கள் என்று என்னையும் அழைத்துக்கொண்டு போனார். ஆகவே பிரச்சினை கவனிக்கப் படவேண்டிய ஒன்று என்பதும் முதலமைச்சர் அவர்களிடத்திலே இங்கே தெரிவிக்கப்பட்ட உணர்வைத் தெரிவித்து அதன்மீது தக்க நடவடிக்கையை நாம் எடுப்பதற்கான முயற்சியை மேற் கொள்வோம் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால் இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

### 3. கவன ஈர்ப்புகள்.

#### (அ) உருதுமொழியில் பாடப்புத்தகங்கள் வெளியிடுவதிலுள்ள தாமதம்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, ''தமிழ்நாட்டில் உருதுமொழியைத் தாய்மொழியாகக் கொண்டு படிக்கும் மாணவர்கள், அம்மொழியில் பாடப்புத்தகம் இல்லாமையால் பாதிக்கப்பெற்றுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் 1—10 வகுப்புகளுக்கு தமிழ் மொழியில் வெளியிடும் கணிதம், அறிவியல், புவியியல், வரலாறு ஆகிய பாடநூல்களை உருது மொழியாக்கம் செய்து வெளியிடுகிறது.

[திரு. செ. அரங்கநாயகம்] [1983 மார்ச் 29

2. உருது பாடநூல்கள் மற்ற சிறுபான்மை மொழி நூல்களைப் போல அச்சுக் கோர்த்து அச்சிடப்படுவதில்லை. காலி கிராபி என்னும் முறையில் கையினால் வரிவடிவில் எழுதி, அச்சிடுவதால் மற்ற மொழி நூல்களைவிட உருது மொழி நூல்கள் அச்சிடுவதில் சற்று கால நீடிப்பு ஏற்படும். இதற்குக் காரணம் தயாரிக்கப்பட்ட பாடத் திட்டத்தோடும் ஒத்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. காலி கிராபி வரி வடிவ முறையில் எழுதப்பட்ட பாடங்களையும் ஒத்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. மேலும், 9 ஆம் வகுப்பு கணக்கு நூலுக்குண்டான எழுத்துக் கருத்துக்கள் காலி கிராபி முதலில் தயாரிக்கும்போது ஏற்பட்ட தவறு காரணமாக மறுபடியும் காலி கிராபி வரி வடிவம் சரியான முறையில் தயாரிக்கப்பட்டு அச்சிட வேண்டியிருந்தது.

3. எனவே, மறுபடியும் காலி கிராபி வரி வடிவங்களைத் தயாரிக்க நேரிட்டதால், நூல் உரிய காலத்தில் வெளியிட முடியாதபடி தாமதமாகியுள்ளது. கணக்கு நூல்களில் குறியீடுகள் போன்றவை வருவதால் மற்ற நூல்களைவிட அச்சிடுவதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இந்நூலினை விரைவில் வெளியிட அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப் பட்டுள்ளன.

4. உருது நூல்கள் வழக்கமாக மூல தமிழ் நூல்கள் அச்சிட்ட பின்னர் அந்நூலினை மொழி பெயர்ப்பாளருக்கு அனுப்பி, மொழி பெயர்க்கப்பட்டு அச்சிடப்பட்டு வந்தது. இதில் ஏற்படும் கால தாமதத்தைத் தவிர்க்க, தற்போது மூல நூல்கள் வெளியிடும்போது பெறப்படும் கையெழுத்துப் படியைக் கொண்டே உருது நூல்களை மொழிபெயர்த்து காலந் தவறாமல் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, குறிப்பாக என்னுடைய சேப்பாக்கம் தொகுதியிலேயும் தமிழகத்திலேயும் வாழக்கூடிய தக்னி என்று சொல்லக்கூடிய உருது மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட முஸ்லீம் பிள்ளைகள் படிக்கிற பள்ளிகளிலே இதுவரைக்கும் டெக்ஸ்ட் புக்ஸ் இல்லாததற்கு என்ன காரணம்? இனிமேலாவது அந்த டெக்ஸ்ட் புக்ஸ் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே' இப்போது 9 ஆம் வகுப்பு கணக்கு நூலுக்கு உண்டான எழுத்து கருத்து தயாரிக்கும்போது ஏற்பட்ட தவறு காரண



1983 மார்ச் 29] [திரு. செ. அரங்கநாயகம்]

மாக மறுபடியும் தயாரித்து அச்சிடப்படவேண்டியிருந்தது. அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இப்படிப் பட்ட தாமதத்தைத் தவிர்ப்பதற்காக இனிமேல் நூல்களை வெளியிடும்போது அச்சிட்ட பின்னர் மொழிபெயர்ப்பாளருக்கு அனுப்புவதற்குப் பதிலாக அந்தக் கையெழுத்துப் பிரதி வந்த வுடனே மொழிபெயர்ப்பு வேலையையும் செய்யச்சொல்லி தாமதத்தைக் குறைப்பதற்கான முயற்சியில் பாடநூல் நிறுவனம் ஈடுபடும்.

### (ஆ) கட்டபொம்மன் போக்குவரத்துக்கழக பேருந்து ஒன்று நாகர்கோயில் அருகே தீயிடப்பெற்றது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் டி. மணி, கே. ஆர். சுந்தரம், ஜே. ஹேமச்சந்திரன், எம். செல்லமுத்து, என். வரதராஜன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், தி. கா. நல்லப்பன், மு. அப்பாதுரை, சோ. அழகர் ாமி, இரா. தாமரைக்கனி, ப. வெங்கடசுப்பிரமணியம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத் துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

திரு. டி. மணி: தலைவர் அவர்களே, "நாகர்கோயில் அருகேயுள்ள கல்படியில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த பேருந்து தீவைத்துக் கொளுத்தப் பெற்றதால் ஒருவர் இறந்தும் மற்றும் சொத்துக்கு சேதம் ஏற்பட்டதும் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சரின் சார்பாக பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றைவைக்கிறேன்.

அறிக்கை.

7-3-1983-ஆம் தேதியன்று கட்டபொம்மன் போக்கு வரத்துக் கழக பேருந்து எண். எ. 448 (டி. எம். எண் 2565) நாகர்கோவிலிலிருந்து திங்கள்சந்தைக்கு இரவு 10.00 மணி ட்ரிப்பில் சென்று கொண்டிருக்கும்போது, 10.40 மணியளவில்

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1983 மார்ச் 29

கல்படி கிராமத்தை அடைந்தபோது, ஊர்தி ஓட்டுநர், சாலை
பெரிய கற்களால் அடைக்கப்பட்டிருப்பதைக் கண்டார்.
பேருந்தை நிறுத்தியவுடன் சுமார் 15, 20 ஆட்கள்
அறிவாள் மற்றும் கம்பு போன்ற பயங்கர ஆயுதங்களுடன்
பேருந்தை நோக்கி ஓடி வந்தனர். பேருந்தின் கண்ணாடிகளை
அவர்கள் கற்களால் அடித்தனர். பேருந்தின் பக்கவாட்டிலும்
அடித்து பீதியை உண்டாக்கினர். விளக்கை அணைக்கும்படி
ஓட்டுநரை மிரட்டினர். அவ்வமயம் பேருந்தில் சுமார் 60
பயணிகள் இருந்தனர். அச்சத்தினால் அவர்கள் அனைவரும்
இறங்கி ஓடிவிட்டனர். முன்பக்க இறங்கும் வழிக்கு அவர்கள்
தீ வைத்தனர்.

2. திரு.ஏ.தர்மராஜ், ஓட்டுநர் மற்றும் திரு. டி. குஞ்சுபிள்ளை,
நடத்துனர் ஆகிய இருவரும் அருகிலுள்ள ஒரு வீட்டிற்கு
ஓடிச் சென்று காவல் துறையினருக்கும் திங்கள்சந்தை கிளை
மேலாளருக்கும் தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்தனர்.
தீ அணைப்பு இயந்திரம் வருவதற்குள் பேருந்து முழுவதும்
எரிந்து விட்டது. இப்பேருந்தின் வயது 2 ஆண்டும் 8 மாதங்
களுமாகும். இச்சேதத்தின் விளைவாக கட்டபொம்மன்
போக்குவரத்துக் கழகத்திற்கு ஏற்பட்ட இழப்பு ரூ. 1.4
இலட்சம் ஆகும். மணவாளக்குறிச்சி காவல்துறை துணை
ஆய்வாளர் அவர்கள் இ.பி.கோ. 147. 148, 341, 332, 435
மற்றும் 307 மற்றும் தமிழ்நாடு பி.பி.சட்டம் 24/1982-ன்படி ஒரு
வழக்கினை குற்ற வழக்கு எண் 26/83-ல் பதிவு செய்துள்ளார்.

3. மேற்கொண்டு எந்தவித சச்சரவும் ஏற்படாமலிருக்க
8-3-1983 காலை 6-00 மணிக்கு முன்னதாக இப்பேருந்து
அவ்விடத்தைவிட்டு அகற்றப்பட்டது.

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, இங்கே தந்திருக்கிற
விவர அறிக்கையினைப் பார்க்கிறபோது ஒரு பஸ் கொளுத்தப்
பட்டு ஏற்கெனவே அரசுக்கு ஒரு லட்சத்திற்கும் அதிகமான
நட்டம் ஏற்பட்டு இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஒரு
வழக்கைப் பதிவு செய்ததாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால்
அந்த வழக்கிலே சம்பந்தப்பட்டவர்கள் எத்தனை பேர்களை
கைது செய்தார்கள். எந்த எந்த நபர்கள் நாகர்கோவில்
வட்டாரத்திலே 13 ஆம் தேதி நடந்த நிகழ்ச்சிக்குப் பின்னால்
கல்படியிலே நடந்த நிகழ்ச்சி மட்டுமல்ல—நாகர்கோவிலைச் சுற்றி
இருக்கிற பல்வேறு பகுதிகளிலே இதுபோன்ற போக்குவரத்து
கழகத்தைச் சேர்ந்த பஸ்களை கொளுத்தியிருக்கிறார்கள்.
பெரிய நஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதற்கு காரண



1983 மார்ச் 29] [திரு. டி. மணி]

மாக இருந்து செயல்பட்டவர்கள் * * * *
என்று கூறப்படுகிறதே, அதற்காக ஒரு கடுமையான நடவடிக்
கையை மேற்கொள்வதற்கு அரசாங்கத்திற்கு ஏதாவது தயக்கம்
ஏற்பட்டிருக்கிறதா? ஏனென்றால் விவர அறிக்கையில் கூறப்
படுகிறபோது இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை நாங்கள் பார்க்க
முடியவில்லை. ஆகவே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் மீண்டும்
நடக்காமல் இருப்பதற்கு, மீண்டும் * * * *

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் சொல்லப்பட்டிருப்
பதைப் போல, இது ஏற்கெனவே நடந்து முடிந்த மத
சம்பந்தமான பிரச்னையை ஒட்டி அதற்கு பின்னாலே எழுந்த
பிரச்னையாகும். ஐந்து பேர்கள் கைதுசெய்யப்பட்டு காவல்
துறையின் கண்காணிப்பில், ரிமாண்டில் இருந்து வருகிறார்கள்,
இப்போது அந்த பகுதியில் எந்த பிரச்னையும் இல்லாமல்
அமைதியாக இருக்கிறது. எனவே இந்த சூழ்நிலையில் அதில்
யார், யார் ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற விவரத்தையெல்
லாம் சொன்னால் மீண்டும் அமைதியாக இருக்கிற அந்த
பகுதியில் வேறு எந்த பிரச்னையும் வரவேண்டாம் என்பதாலே
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை—எத்தனை
பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றால் ஐந்து
பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை மட்டும்
வைத்துக்கொள்ளலாம் * * * *
என்பதையெல்லாம் நீக்கிவிட்டால் மேலும் அந்த பகுதியில்
பதட்டம் ஏற்படாமல் இருப்பதற்கு உதவியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் யார் யார் ஈடுபட்டிருக்
கிறார்கள் என்றும், * * * *மீது சொல்லப்பட்ட குற்றச்
சாட்டுகளும் அவைக்குறிப்பிலே இருந்து நீக்கப்படுகின்றன.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, எரிக்கப்பட்ட அந்த பேருந்திற்கு இரண்டு ஆண்டு
கள், எட்டு மாதங்கள் ஆகிறது என்று அறிக்கையில் கூறப்
பட்டிருக்கிறது. மேலும் அந்த பேருந்து 1.4 லட்சம் பெறு
மானமுள்ளது என்றும் கூறப்பட்டிருக்கிறது. அந்த பஸ்ஸிற்கு
தீ வைத்தவர்கள் பேரில் போடப்பட்ட செக்ஷன்களை மட்டும்
குறிப்பிட்டு, கைது செய்யப்பட்டவர்களின் விவரம் இல்லை.
அதற்கான காரணம் என்ன? அமைச்சர் அவர்கள் பதில்
சொல்லுகிறபோது ஐந்து பேர்களை மட்டும் கைது செய்
திருப்பதாகச் சொன்னார்கள். அவர்களுடைய பெயர்கள் என்ன
என்பதைப் பற்றி சொல்லவில்லை.

* *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்
றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் வேண்டாம் என்பதற்கான காரணத்தை சொல்லியிருக்கிறார்கள். அதற்கு பின்னாலும் அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்காதீர்கள்.

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, பேருந்தின் மதிப்பு 1.4 லட்சம் ரூபாய் அல்ல; சேதம் ஏற்பட்டதின் மதிப்பு 1.4 லட்சம் ஆகும். ஏற்கெனவே நான் சொன்னதைப் போல ஐந்து பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் யார், யார், எந்த பிரிவினைச் சார்ந்தவர்கள். எந்த கட்சியைச் சார்ந்தவர்கள் என்பதையெல்லாம் சொல்லி நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, அமைதியாக இருக்கிற அந்த பகுதியில் புதிய பிரச்னை எழ வேண்டாம். ஐந்து பேர்கள் என்று மட்டும் இருக்கட்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். யாரும் விடுதலை செய்யப்படவில்லை. அவர்கள் காவல்துறையின் கண்காணிப்பில், ரிமாண்டில் இருந்து கொண்டிருக்கிறார்கள். விசாரணை தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, போராட்டங்கள், கலவரங்கள் வந்தால் அரசாங்க சொத்தான பஸ்ஸைதான் சமூகவிரோதிகள் கொளுத்துகிறார்கள். அதனால் பஸ்ஸில் பயணம் செய்கிற பயணிகள் பாதுகாப்பாக பயணம் செய்வதற்கும், பேருந்தின் பாதுகாப்பிற்கும், ஆயுதம் தாங்கிய போலீசை ஓட்டுநர் பக்கத்தில் இருக்கச்செய்தால் உதவியாக இருக்கும். அரசு இதற்கு ஆவண செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கவனஈர்ப்புத் தீர்மானம் வந்திருப்பதே இப்படி பொது சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கக்கூடாது என்ற முறையில்தான் வந்திருக்கிறது. எனவே எல்லா கட்சிக்காரர்களும் அதில் ஒன்றாக இருக்கிறார்கள். பாதுகாப்பைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வரவிருக்கிற காவல்துறை மானியத்திலோ அல்லது போக்குவரத்துத்துறை மானியத்திலோ ஆலோசனை தெரிவித்து பேசும்படி கேட்டுக்கொள்கிறேன்.



# 4. அறிவிப்புகள்

(அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1982-83 (ஆ.இ)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1932-83 ஆம் ஆண்டில் கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து, ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது:—

In pursuance of Article 203, Clause 3 of the Constitution of India, I, Sunderlal Khurana, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the demands for further grants for the year 1982-83.

5. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள். 1982—83 வாக்கெடுப்பு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"1982-83 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 26-3-1983 தேதியிடப் பெற்ற அறிவிப்பில் 2 ஆவது வரிசையில் குறிப்பிடப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும், அவற்றின் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகை அந்தந்த இனங்களுக்கு 1982-83 ஆம் ஆண்டிற்குக் கூடுதல் செலவுகளுக்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

நிறைவேற்றப்பெற்றவை.

1982—83 ஆம் ஆண்டில் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்.

A. வருவாய்க் கணக்கில் செலவு.

(ரூபாய் ஆயிரத்தில்.)

| | | |
|---|---|---|
| கோரிக்கை. | 1—நில வரித் துறை | 1 |
| ஷை | 2—மாநில ஆயத் தீர்வைத் துறை | 23,70 |
| ஷை | 3—மோட்டார் வண்டிகள் குறித்த சட்டங்கள்—நிர்வாகம். .. | 24,14 |

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

| | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| கோரிக்கை | 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம். | 85,33 |
| ஷ்டி | 6—பத்திரப் பதிவு .. .. .. | 70,61 |
| ஷ்டி | 7—மாநிலச் சட்ட மன்றம் .. .. | 25,17 |
| ஷ்டி | 8—தேர்தல்கள் .. .. .. | 18,89 |
| ஷ்டி | 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் .. .. .. .. | 97,66 |
| ஷ்டி | 10—பால் வழங்கு திட்டங்கள் .. | 13,15 |
| ஷ்டி | 11—மாவட்ட நிர்வாகம் .. .. | 11,18 |
| ஷ்டி | 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் .. .. .. | 32,65 |
| ஷ்டி | 13—நீதி நிர்வாகம்.. .. .. | 93,99 |
| ஷ்டி | 14—சிறைச்சாலைகள் .. .. | 35,18 |
| ஷ்டி | 15—காவல்துறை .. .. .. | 2 |
| ஷ்டி | 16—தீயணைப்புப் பணிகள் .. .. | 4,23 |
| ஷ்டி | 17—கல்வி .. .. .. .. | 30,24,47 |
| ஷ்டி | 18—மருத்துவம் .. .. .. | 9,09,21 |
| ஷ்டி | 19—பொதுச் சுகாதாரம் .. .. | 30,37,71 |
| ஷ்டி | 20—வேளாண்மை .. .. .. | 71,17 |
| ஷ்டி | 21—மீனளம் .. .. .. | 1,13,17 |
| ஷ்டி | 22—கால் நடை வளர்ப்பு .. .. | 44,99 |
| ஷ்டி | 23—கூட்டுறவு .. .. .. | 70,23 |
| ஷ்டி | 24—தொழில்கள் .. .. .. | 3,38,97 |
| ஷ்டி | 25—சின்கோனா .. .. .. | 25,34 |
| ஷ்டி | 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும் | 14,61,20 |



A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

| | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| கோரிக்கை | 27—கதர்த் தொழில் .. .. | 33,35 |
| ஷ்டி | 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் .. | 59,71,31 |
| ஷ்டி | 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் .. .. .. | 79,20 |
| ஷ்டி | 30—சமூக நலன் .. .. .. | 3,15,77 |
| ஷ்டி | 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் .. .. | 3,63,23 |
| ஷ்டி | 32—பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் .. .. .. .. | 17,12 |
| ஷ்டி | 33—வீட்டு வசதி .. .. .. | 2,80,52 |
| ஷ்டி | 34—நகர்ப் பகுதி வளர்ச்சி .. .. | 1 |
| ஷ்டி | 35—நுகர்பொருள் வழங்கல் .. | 3 |
| ஷ்டி | 36—பாசனம் .. .. .. | 7,30,64 |
| ஷ்டி | 37—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் .. | 2,23,98 |
| ஷ்டி | 38—பொதுப் பணிகள்-பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும் .. | 3 |
| ஷ்டி | 39—சாலைகளும் பாலங்களும் .. | 11,69,66 |
| ஷ்டி | 40—சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும் .. | 26,97 |
| ஷ்டி | 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு .. .. .. | 41,66 |
| ஷ்டி | 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் .. .. .. | 8,72,90 |
| ஷ்டி | 43—பல்வகை .. .. .. | 3 |
| ஷ்டி | 44—எழுதுபொருள்-அச்சுத் துறை .. | 12,40 |
| ஷ்டி | 45—காட்டுவளத் துறை .. .. | 1,95,69 |
| ஷ்டி | 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் .. | 31,20 |
| ஷ்டி | 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் .. | 1,34,77 |
| | மொத்தம்—A. வருவாய்க் கணக்கு .. | 2,1,32,84 |

B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு.

| | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| கோரிக்கை | 48–வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. .. .. | 1 |
| ஷ் | 49–தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு .. .. .. .. | 1,40,44 |
| ஷ் | 50–பாசனம் குறித்த மூலதனச் செலவு | 2,45,33 |
| ஷ் | 51–பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு .. | 4 |
| ஷ் | 52–சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு .. | 40,21 |
| ஷ் | 53–சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு .. .. .. | 1 |
| ஷ் | 54–காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு .. .. .. .. | 1 |
| ஷ் | 55–பல்வகை மூலதனச் செலவு .. | 9,27,71 |
| | மொத்தம்—B. மூலதனக் கணக்கு .. | 13,53,76 |

C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பி கொடுத்தலும்.

| | | |
|---|---|---|
| கோரிக்கை | 56–மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் .. .. .. | 14,03,24 |
| | பெரு மொத்தம் .. | 2,28,99,84 |



4. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(ஆ) நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு, 1983 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவை தெரிவித்துள்ளார்கள்.

6. அரசினர் சட்ட முன்வடிவு

நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1983

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: "தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

7. தென் மாநில முதல்வர்கள் மாநாட்டில் எடுக்கப்பெற்ற முடிவுகள் குறித்த அறிக்கை—விவாதம்.

திரு. நா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: "1983 ஆம் ஆண்டு மார்ச் மூன்றாவது வாரத்தில் பெங்களூரில் நடைபெற்ற தென் மாநில முதல்வர்கள் மகாநாட்டில் எடுக்கப் பட்ட முடிவுகளை ** இப்பேரவை வரவேற்கிறது, ஆதரிக்கிறது. இப் பேரவை தமிழக அரசைக் மேற்படி முடிவுகளை விடா முயற்சியுடன் அமல்படுத்த கேட்டுக்கொள்கிறது".

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சோரணம் : தலைவரவர்களே, இதை நான் வழிமொழிகிறேன்.

திரு. நா. உமாநாத் : மாண்புமிகு தலைவரவர்களே, பெங்களூர் கூட்டத்தின் முடிவுகளைக் கண்டு மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி மகிழ்ச்சியடைகிறது. அதற்கு பிரத்யேக

** 377—382ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

மான காரணங்கள் உண்டு. தோன்றியதிலிருந்து மாநில சுயாட்சி இயக்கத்தை நடத்தி வந்த கட்சி மார்கிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி. மேற்கு வங்கத்தில் 1977 ஆம் ஆண்டு தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டபின், டிசம்பர் முதல் தேதியன்று, எங்கள் மார்கிஸ்டு கம்யுனிஸ்டுகட்சியின் கூட்டணியினுடைய அமைச்சரவை கூடி, மாநில சுயாட்சியை ஸ்தூலப்படுத்தி, ஒரு மெமோரண்டம், இப்படிப்பட்ட மெமோரண்டத்தை அச்சடித்துக்கொண்டு, அதை எல்லா மாநில முதலமைச்சர்களுக்கும். நாட்டிலே இருக்கக்கூடிய அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் அனுப்பி, நாடு தழுவிய ஒரு சர்ச்சையை திரட்டியது மார்கிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி. அதே போல் இருக்கும் அதிகாரங்களையும் மைய அரசு ஆக்கிரமித்தபோது, அவ்வப்போது மேற்கு வங்கம், கேரளம், திரிபுரா போன்ற மாநிலங்களில் அதை எதிர்த்து மக்களை திரட்டியும், பந்த் நடத்தியும், செய்தது மார்கிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி. 1976 ஆம் ஆண்டில் தி.மு.க. அமைச்சரவையை டிஸ்மிஸ் பண்ணும்போதும் 1980 ஆம் ஆண்டில் அண்ணா தி.மு.க. அமைச்சரவையை டிஸ்மிஸ் பண்ணும்போதும் அந்த மையஅரசினுடையஆக்கிரமிப்பை எதிர்த்துத் தொடர்ந்து கண்டித்து வந்தது மார்கிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி. சமீபபத்திலே கூட, மாநில அரசின் அதிகாரத்திலிருந்த 5 விற்பனை வரி இனங்களை மத்திய அரசினுடைய அதிகாரத்திற்குட்பட்ட எக்சைஸ் துறைக்கு மாற்றுகிறபோது, தேசிய அபிவிருத்திக் கௌன்சில் கூட்டத்தில் தன்னந்தனியாக நின்று, அதை எதிர்த்து, வாக்களித்த முதலமைச்சரைக் கொண்டிருக்கக் கூடிய கட்சி மார்கிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி. ஆகவே தான் தென்னக முதல்வர்களுடைய கூட்டமும், முடிவுகளும் கௌன்சில் அமைப்பும், ஆகியவற்றை மிக்க மகிழ்ச்சியோடு நாங்கள் வரவேற்கிறோம். இந்த முடிவுகள் They are of far reaching importance என்று கூறுவேன். எதிர்காலத்தில் பல பிரதிபலிப்புகள், நல்ல பிரதிபலிப்புகளை உண்டாக்கக் கூடிய ஒரு முக்கியத்துவம் வாய்ந்த முடிவுகள் என்று நாங்கள் கருதுகிறோம். ஆகவே இப்படிப்பட்ட முடிவுகளை எடுத்துள்ள தமிழக முதல்வரையும், கர்நாடக முதல்வரையும், ஆந்திர முதல்வரையும், புதுவை மாநில முதல்வரையும் நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

இந்த முடிவுகள் விரிவாக விரிவாக இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது. பத்திரிகையிலேயும் வந்துள்ளது. ஆகவே அதனுடைய பாயின்ட்ஸ்க்குள்ளே நான் மறுபடியும் ரிப்பீட் பண்ணி இங்கே கூறவிரும்பவில்லை. நான் இந்த அவையைக் கேட்டுக்கொள்வதெல்லாம் இந்த முடிவுகளை மேலும் செழுமைப் படுத்த யோசனைகள் பல நம்மில் பலருக்கு இருக்கலாம்.



உதாரணமாக இந்த முடிவுகளில், நடுத்தரத் தரகர்களுடைய
கொள்கையை ஒழிக்க, விவசாயிகளின் ஸ்தாரனங்களுக்கு
பொருள் விற்பனை செய்வதற்கும், ஏற்றுமதி செய்வதற்கும்
அதிக வாய்ப்புகள் அளிக்கவேண்டும் என்ற, இந்த முடிவு
களிலே ஒரு முடிவாக இருக்கிறது. நடுத்தரகர்களுடைய
கொள்ளையை ஒழிக்க நாங்கள் கூறுகின்ற யோசனைகள்
என்னவென்றால், விவசாயிகளுக்கு கட்டுபடியாகும் விலைக்கு
நிர்ணயம் செய்து அந்த நெல்லை அந்த விலைக்கே அரசே
கொள்முதல் செய்து மொத்த வியாபாரத்தை அரசு ஏற்று
நடத்தவேண்டும் என்பது எங்களுடைய கருத்து. இப்படி
சில யோசனைகள் இருக்கும் இதை செழுமைப் படுத்துவதற்கு.
அது போல் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலங்களை மத்திய
அரசு டிஸ்மிஸ் செய்வதற்கும் சட்டசபைகளை களைப்பதற்கும்
அரசியல் அமைப்பில் உள்ள 356, 357 என்ற விதிகள் நீக்கப்பட
வேண்டும். இது ஒரு முக்கியமான விஷயம். அது இதிலே இடம்
பெறவில்லை. இப்படிப்பட்ட யோசனைகள் இருக்கும். அது மட்டு
மல்ல, உலக வங்கிகள், ஐ.எம்.எப். போன்ற நிறுவனங்கள் மத்திய
அரசுக்கு எந்த டெர்ம்ஸ் அடிப்படையிலே கடன் கொடுக்கிறார்
களோ, அதாவது வட்டி போன்ற ஏற்பாட்டை எல்லாம்
அதே அடிப்படையிலே கொடுக்கவேண்டும் என்று அவர்கள்
குறிப்பிட்டிருக்கிறார்கள். இது சரி, அதே டெர்ம்ஸ்படி,
இங்கே கொடுக்கவேண்டும், அங்கே $1\frac{1}{2}$ சதவீதம் வட்டி என்றால்
இங்கேயும் $1\frac{1}{4}$ பர்சென்ட் வட்டி என்ற மாதிரி இருக்க
வேண்டும். ஆனால் இந்த ஐ.எம்.எப். உலக வங்கி போன்ற
நிறுவனங்களில் நிபந்தனைகள் நமது நாட்டின் சாவரினிட்டி,
அரசு உரிமை (குறுக்கீடு) இறையாண்மை, அந்த அதிகாரத்
திற்கு பேரபாயம் என்ற உணர்வு இருக்கிறதா, அதனுடைய
கான்ஸ்ட்டிடியூசனாலிட்டி என்று இருப்பதாக, அந்த உணர்வு
இருப்பதாக இந்த முதல் அமைச்சர்களுடைய மாநாட்டு கூட்டத்
திலே, அதனுடைய டாக்குமென்ட்ஸ் படித்தால் அது தெரிய
வில்லை.

அதேபோல் நிதிநிலைமைகளை ஒழுங்காகப் பராமரித்து
மாநிலங்களுக்கு ஓவர் டிராப்ட் விதிகள் அநியாயம் விளை
விக்கிறது என்று இந்த முடிவுகளிலே குறிப்பிடப்பட்டுள்ளது.
அதாவது சரியாக பராமரிக்கூடிய மாநிலங்களுக்கு. அப்படிச்
சொன்னால் ஓவர் டிராப்ட் இருக்கும் மாநிலம் தன்னுடைய
நிதிப் பராமரிப்பை முறையாகச் செய்யவில்லை என்று பொருள்
படும். இது தவறு. மாநிலங்கள் நிதிப் பராமரிப்பில் ஒழுங்
கீனம் இருப்பதனால் அல்ல. இன்றைக்கு பல மாநிலங்
களிலே ஓவர் டிராப்ட் ஏற்படுகிறது. நான்கு முதல்வர்களும்
சரியாக கூறியபடி மத்திய அரசிலே உள்ள அதிகாரக்

குவியலும், மத்திய அரசிலே உள்ள நிதி
குவியலும்தான் இந்த ஓவர் டிராப்டுக்குப் ஆதாரக்
காரணமாகும். ஆகவே ஓவர் டிராப்ட் பிரதானமான
முதல்வர்களும் டிபன்சிலே விஷயத்திலே நான்கு
நாம் தற்காப்பிலே இருக்கவேண்டிய அவசியம் இல்லை.
மத்திய அரசை இருக்க வேண்டிய அவசியம் இல்லை.
நிமிர்ந்து கேட்க வேண்டியது. இந்த விஷயத்தைப் பற்றி நாம் தலை
1500 கோடி ரூபாய் 1983-84 பட்ஜெட்டில் நீங்களே
அது ஒரு வகையான பற்றாக்குறை வைத்து உள்ளீர்களே,
ஓவர் டிராப்டை ஓவர் டிராப்ட்தானே. இந்த 1500
அதுவும், என்ன சித்தரத்திலேயா வைப்பார்கள்.
கள், ஓவர்டிராப்ட்தான். பேங்கிலேயிருந்து வாங்குவார்
சொல்லி, அந்த மாதிரி எல்லாம் செய்வார்கள். அப்படி என்று
விஷயமே துணிச்சலாக நாம் மத்திய அரசை கேட்கவேண்டிய
தவிர We need not be defensive on the question of overdraft
இப்படி செழுமைப்படுத்த பல யோசனைகளை சொல்லலாம். பல
கட்சிகளிலே இருக்கும். ஒட்டுமொத்தமாக மாநில சுயாட்சி இயக்
கத்திற்கு அனைத்திந்திய ரீதியில் சதையும் ரத்தமும் சேர்ந்து
சரியான முடிவுகளாகி இந்த முடிவுகள் அமைந்துள்ள
படியால் இந்த முடிவுகளை, இந்தத் தீர்மானங்களை நாம்
அனைவரும் ஆதரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்
கொள்கிறேன். நாம் இந்த தீர்மானத்தை விவாதத்திற்கு
எடுப்பதற்குள், இந்தியப் பிரதமர் மத்திய மாநில உறவுகள் பற்றி
பரிசீலிக்க சர்க்காரியாக் கமிஷன் என்று சொல்லி, ஒன்றை
அமைத்திருக்கிறார்கள். நான்கு முதல் அமைச்சர்கள் செய்த
முடிவுகளுக்கு இந்திய நாட்டு பிரதமர் அவர்கள் எடுத்த இந்த
லேட்டஸ்ட் முடிவு.

It is a feather on the cap of the four Chief Ministers.

என்று நான் சொல்வேன். இந்த நான்கு மாநிலங்களுக்கு ஏற்
பட்ட ஒரு வெற்றி என்ற அடிப்படையிலே, ஆங்கிலத்திலே
சொல்வார்கள், ஒரு பெதர் இன் தி கேப் என்று சொல்வார்கள்
அந்த அடிப்படையிலே சொல்கிறேன். இது வெற்றி என்று
கூறுகிறபோது, சர்க்காரிய கமிஷன் அமைப்பு வடிவத்தையோ,
அதன் டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸையோ, நான் வெற்றியாக
கூறவில்லை. ஏன் என்றால் நான் வெற்றி என்று கூறுவது ஏது
என்று சொன்னால் நேற்றைய வரை மத்திய மாநில பிரச்னை
என்பது ஒன்று இல்லவே இல்லை என்று அடித்துக்கூறிய
நம்முடைய பிரதமர், பல்லாண்டுகளாக இந்தப் பிரச்சினை
உண்டு என்றும், எனவே இதை ஆய்வு செய்ய வேண்டியது
அவசியம் என்று அங்கீகரிக்க, நிர்ப்பந்தத்திற்கு உட்பட்டுள்ளதும்,
தென் மாநிலங்களின் முடிவுகளுக்கு கிடைத்த வெற்றி என்ற
அந்த முறையிலே தான் சொல்கிறேன்.



(முற்பகல் 10–30)

ஆனால் பல அரசியல் சட்ட நிபுணர்களையும், நிதி, பொருளா
தார நிபுணர்களையும் அந்தக் கமிஷனில் போடாமல் இருப்பது
சரியல்ல. கட்டாயமாக போட வேண்டும். ஏனென்றால், இந்தப
பிரச்னையில் பைனான்சியல் மேட்டர்ஸ், கான்ஸ்டிடியூஷனல்
மேட்டர்ஸ், அரசியல் சட்டத்திருத்தம் அடங்கிய பிரச்னை
இருப்பதால், அந்த நிபுணர்கள் இடம் பெறவேண்டியது அவசியம்
என்று வலியுறுத்திச் சொல்லிக்கொள்கிறேன்.

பெங்களூர் கூட்டம் மைய-மாநில அரசு உறவுகள் சீர்படுத்த
முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேற்ற பல அரசியல் சட்டத்
திருத்தங்கள் தேவை என பல பாராக்களில் அவர்கள் குறிப்பிட்டு
இருக்கிறார்கள். எட்டாவது பாராவில், இரண்டாவது டாகு
மெண்டில், எந்தெந்த அம்சத்தில் அரசியல் சட்டத்திருத்தம்
செய்வதற்கு ஆய்வு செய்ய வேண்டுமென ஸ்தூலப்படுத்தி, ஒன்று,
இரண்டு, மூன்று என்று வரிசைப்படுத்தி குறிப்பிடப்பட்டு இருக்
கிறது. அப்படி இருக்க, சர்க்காரியா கமிஷன் மைய, மாநில அரசு
உறவுப் பிரச்னையை, அரசியல் சட்டத்தின் கட்டுக்கோப்பிற்குட்
பட்டு ஆய்வு செய்யத்தான் பணிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே,
அந்தக் கமிஷனிலே யார் யார் இருக்க வேண்டும், அதிலே
என்னென்ன விஷயங்கள் ஆய்வு செய்யப்படவேண்டும் என்பதைப்
பற்றி மாநில அரசுகளைக் கலந்து முடிவு செய்யவேண்டும் என்று
வலியுறுத்திச் சொல்லவேண்டும். இது ஒரு முக்கியமான விஷயம்
என்று நாங்கள் கருதுகிறோம். இந்த யோசனையை மைய அரசு
ஏற்றுக்கொள்ளவில்லை என்றால்,—பைனான்சியல் எக்ஸ்பெர்ட்ஸ்,
கான்ஸ்டிடியூஷனல் எக்ஸ்பர்ட்ஸ், மாநில அரசுகள் கலந்து
கொண்டு டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ் கொடுக்கவில்லையென்றால்,
யார் யார் அதிலே இருக்க வேண்டும் என்பது நாங்கள் குறிப்
பிட்டவாறு ஏற்றுகொள்ளவில்லையென்றால், இந்த சர்க்காரியா
கமிஷன் என்பது வெறும் கண் துடைப்புதான் என்று நாம் கருத
வேண்டி இருக்கும் என்பதை மத்திய அரசாங்கத்திற்குச் சொல்ல
விரும்புகிறோம்.

அடுத்து, இந்த நான்கு முதல்வர்களும் திருப்தி மனப்பான்மை
யுடன் இருக்கக்கூடாது, அந்தக் கவுன்சில் அடிப்படையோடு
நின்றுவிடக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த
முடிவுகளுக்கு அநேகமாக அனைத்திந்திய கட்சிகள் மத்தியிலும்,
பல பிராந்திய கட்சிகள் மத்தியிலும் முழு ஆதரவும், வரவேற்பும்
கிடைத்து இருக்கிறது. இது உண்மையிலேயே சந்தோஷப்பட
வேண்டிய விஷயம். ஆனால் இந்த முடிவுகளையும், இந்த
நான்கு முதல்வர்களின் கவுன்சிலையும் சீர்குலைக்க மத்தியில்

[திரு. ரா. உமாநாத்] [1983 மார்ச் 29

ஆளும் கட்சி ஒரு பெரும் அபென்ஸ், ஒரு படையெடுப்பு, ஒரு ஆக்கிரமிப்பு. ஒரு அரசியல் தாக்குதல் தொடுத்துள்ளது என்பதை நான்கு முதலமைச்சர்களும் நினைவில் கொள்ள வேண்டும். இதைக் குறைத்து மதிப்பிடக்கூடாது என்று நான் சொல்லிக் கொள்கிறேன்.

மத்தியில் ஆளும் கட்சி is blowing hot and cold அதாவது அவர்கள் சாடவும் செய்கிறார்கள், மண்ணைத் தூவவும் செய்கிறார்கள்.

கேரள முதல்வர் கருணாகரனும், ஏ.ஐ.சி.சி. ஜெனரல் செக்ரடரி திரு. சி. எம். ஸ்டீபன் அவர்களும் இந்த நான்கு முதலமைச்சர்கள் மாநாடு முடிவுகள் தேசிய பார்வையில் இல்லை என்று சொல்கிறார்கள். அவர்கள் குற்றம் சாட்டுவது சரி என்று வைத்துக்கொள்வோம். நான் கேட்கிறேன், தேசியப் பார்வைக்கு மொத்த குத்தகை எடுத்த கேரள முதல்வர் அவர் களை அழைத்தார்களே, அதை அவர் ஏற்றுக்கொண்டு, அங்கே கலந்து கொண்டு, அவருடைய தேசிய பார்வை மூட்டையை அவிழ்த்து விடவேண்டியதுதானே அதை ஏன் செய்யவில்லை என்று நான் கேட்கவிரும்புகிறேன். அங்கே போய் யோசனை சொல்லியிருக்கலாம் அல்லவா? அதை ஏன் செய்யவில்லை? அப்படிச் செய்யாமல், தேசிய பார்வை இல்லை என்றால் என்ன அர்த்தம்?

நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். இதே கேரள முதல்வர் தென்னக சமூக நல அமைச்சர்களின் கூட்டத்தைக் கூட்டினார்களே, அது தேசிய பார்வையுடையதா? அவர்கள் கூட்டினால், அது தேசியப் பார்வை மற்றவர்கள் கூட்டினால் அது தேசத் துரோகமாம். இது தான் அவர்களுடைய லாஜிக்.

இன்றைக்கு நான்கு முதலமைச்சர்கள். நாளைக்கு இது 20 முதலமைச்சர்களாக மாறும். அப்படியானால் அது தேசிய அளவில் விவாதத்தை எடுத்துக்கொள்ளும் என்று அர்த்தம். இது எங்கள் பார்வை. நாட்டுப்பார்வையுடன் நாடு தழுவிய கவுன்சில் நல்லது தானே? ஆனால், காங்கிரஸ் கட்சிச் செயலாளர் திரு. சி. எம். ஸ்டீபன் அவர்கள் என்ன சொல்கிறார்? அவருடைய கருத்து 22—3—1983 'இந்து' பத்திரிகையில் வந்து இருக்கிறது.

Mr. C. M. Stephen, AICC (I) General Secretary, today said he did not see anything wrong in the meeting of the Chief Ministers of four Southern States. He, however, took exception to the reported remark of one of them "to-day we are four, tomorrow we may be 20". He saw dangerous portends in the remark.



1983 மார்ச் 29] [திரு. ரா. உமாநாத்]

இந்த நான்கு முதலமைச்சர்கள் கூடிப்பேசியதில் எனக்கு ஆட்சே பணை இல்லை. ஆனால் அதிலே ஒருவர் இன்றைக்கு 4 என்பது நாளைக்கு 20 ஆகும் என்று சொன்னது ரெம்பவும் அபாயமாக இருக்கிறது என்று அவர் சொல்கிறார். இந்த மாதிரி 'கான்ட்ர டிக்ஷன்ஸ்' அவர்களிடத்தில் இருக்கிறது. அவர்கள் கையில் இருக்கிற அதிகாரக் குவியல்கள் எங்கே குறைந்து விடுமோ என்ற அச்சத்தின் காரணமாக இந்த மாதிரி நிலைமைகள் வருகின்றன. இதைச் சொன்னால், மாண்புமிகு கேரள முதலமைச்சர் கருணாகரன் என்ன சொல்கிறார் என்றால், ஏன் ஜோதிபாசுவை அழைக்கவில்லை? கேரள முதலமைச்சருக்கு ஜோதிபசு மீது எப்படி திடீர் என்று பாசம் வந்தது என்பது நமக்குத் தெரிய வில்லை. சரி, வரட்டும். அதைப்பற்றி நாம் கேட்கவில்லை. ஜோதிபாசும் ஒரு கூட்டத்தை அரேஞ்ச் செய்ய முயற்சி செய்தார். அப்போதும் ஒரு குற்றச்சாட்டை சொன்னார்கள். காங்கிரஸ் அண்ட் நான் காங்கிரஸ் ஸ்டேட்ஸ் என்று ஜோதிபாசு பிரிக்கப்பார்க்கிறார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டினார்கள். இன்றைக்கு இது ஆல் இந்தியா லெவலில் வருகிறபோது அதற்கு முயற்சி செய்கிறபோது 'காங்கிரஸ் அண்ட் நான் காங்கிரஸ் சீஃப் மினிஸ்டர்ஸ் கான்ஃப்ரன்ஸ்' போடலாமா என்று கேட்கிறார்கள், ஆக இந்த இரட்டைப் பேச்சும் இரட்டை நிலையும் அவர்களுடைய பாசாங்கை அம்பலப்படுத்துகிறது.

அதுபோகட்டும். தென்னக முதல்வர் கூட்டம், பிரிவினைப் போக்கு என்று அவர் உண்மையிலேயே நம்பி இருந்தால் அழைத் தவுடனே இது தேச விரோதம், பிரிவினைப் போக்கு என்று சொல்லியிருப்பார். அவர் அப்படி சொல்வது ஒரு குற்றச்சாட்டு. அப்படி உண்மையிலேயே நம்பியிருந்தால் அழைத்தவுடனே இது தேசவிரோதமானது, ஆகவே நான் கலந்து கொள்ளவில்லை என்றுதானே கூறியிருப்பார். அப்படி சொல்லவில்லையே! "சட்டப்பேரவை அலுவல்கள் இருப்பதினால் இயலவில்லை என்றுதானே கூறினார். அதனுடைய அர்த்தம் என்ன? கேரள சட்டசபை கூட்டம் இல்லாமல் இருந்தால் கலந்து கொண்டிருப்பார் என்றுதானே அர்த்தம். அவர் அப்படி சொன்னதற்குப் பிறகு இரண்டு நாள் கழித்து, சட்டப்பேரவைக் கூட்டம் இல்லாமல் இருந்தால் கலந்து கொண்டிருப்பேன் என்று அர்த்தம் கொள்ளக்கூடிய முறையில் சொல்லிவிட்டு, இது பிரிவினை, தேசவிரோதம் என்று குற்றம் சாட்டுகிறார் என்றால் அது அவருடைய சொந்தச் சரக்கல்ல. அது

Voice of Delhi relayed on Karunakaran wave length. It is His Master's Voice.

[திரு. ரா. உமாநாத்] [1983 மார்ச் 29

அதாவது அது டெல்லியின் குரல் திரு. கருணாகரன் சிற்றலையில்-ரிலே பண்ணப்பட்டது.

நான் கேட்கிறேன். 4 முதல்வர்களின் முடிவுகள் நாட்டைப் பிரிக்கக் கூடியதா?

Boot is on the other leg.

35 ஆண்டுகளாக காங்கிரஸ் கட்சி கையாண்ட கொள்கைதான் அந்தக் குற்றச்சாட்டுக்குக் காரணம். அசாம் பிரியும் அபாயத் திலும், பஞ்சாப் பிரியும் அபாயத்திலும் கொண்டு சென்றுள்ளது. காங்கிரஸ் கட்சியின் கொள்கைதான் நம் கண் முன்னாலேயே இந்திய நாடு துண்டாடப்படும் திசையில் போய்க்கொண்டிருக் கிறது என்பதை மிகுந்த வருத்தத்தோடு எண்ணவேண்டியிருக் கிறது. இ பற்றி நம்முடைய முன்னாள் ஜனாதிபதி சஞ்சீவ ரெட்டி அவர்கள் மார்ச் 24-ந் தேதி சொன்னார்கள்.

Former President of India, N. Sanjiva Reddy has warned that disintegation of the country was imminent, with the turmoil in the North-Eastern States and Punjab, an outcome of "over centralisation" of power.

அப்படி என்று திரு. சஞ்சீவரெட்டி சொல்லியிருக்கிறார். யதார்த் தத்தை அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகவேதான் நான் கேட்கிறேன். பிரிவினைக்கு யார் காரணம்? பிரிவினைப் போக்கை ஊக்குவிப்பது காங்கிரஸ் கட்சியின் கொள்கைதான்.

ஆனால் பங்களூர் முடிவுகள் காங்கிரஸ் கட்டவிழ்த்து விட்ட நாட்டுப் பிரிவினைப் போக்கிற்கு பிரேக் போடுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். பிரிவினைப் போக்கை பின்தள்ளத்தான் அது உதவுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். சுருங்கச் சொன்னால் நால்வர் முடிவுகள்தான் மாநிலங்கள் மத்தியில் நம்பிக்கை ஊட்டி, ஒரு பலம் பொருந்திய ஒன்றுபட்ட இந்தியாவை உருவாக்கும் நம்பிக்கை நட்சத்திரமாக திகழ்கிறது. இதை நாம் நிச்சயமாகச் சொல்லலாம்.

அதைப்போன்று நான்கு முதல்வர்களின் முடிவு 'வடக்கு-தெற்கு' என்ற பாகுபாட்டை தூண்டுகின்றது என்பது ஒரு குற்றச்சாட்டு. அறிக்கையில் அவர்கள் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். அனைத்து முதல்வர்களின் கவுன்சில் அமைப்பதுதான் எங்கள் நோக்கம். முதல் படியாக தென் மாநிலங்களின் முதல்வர்கள் கூட்டத்தைக் கூட்டு கிறோம் என்று தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். இதிலே வடக்கு, தெற்கு எங்கே வந்தது? இத்தகைய நடவடிக்கை பிரிவினை, தேசத்துரோகம் என்று கூக்குரல் போடுகிறார்கள். 4 முதல்வர் களையும் பிளாக்மெயில் பண்ணுவதற்காகதான் இந்தக் கூக்குரல்



1983 மார்ச் 29] [திரு. ரா. உமாநாத்]

போடுகிறார்கள். 4 முதல்வர்களையும் இன்டிமிடேட் பண்ணு கிறார்கள், அச்சுறுத்துகிறார்கள். அதற்காகத்தான் இந்த அரசியல் தாக்கு என்பது தெளிவாகத் தெரிகிறது. 4 முதல்வர் களையும் 'பிரவுன் மிஸ்ப்' பண்ணுகிறார்கள். இது இந்த 4 முதல் வர்களின் ஒற்றுமை உணர்வைக் கலைக்கச் செய்யும் முயற்சி என்பதில் சந்தேகமில்லை. இந்த இடத்தில் நான் நம்முடைய முதலமைச்சரிடம் ஒன்றை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 10–40)

போன வாரம் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கேள்வியை கேட்டார்கள். 'நீங்கள் ஏன் மாநில சுய ஆட்சி கோருவது இல்லை' என்று கேட்டபோது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். 'மாநில சுய ஆட்சியை நாங்கள் எதிர்க்கவில்லை, ஆனால் அந்த வார்த்தையைக் கூறி னால், பிரிவினை என்ற தவறான எண்ணம் ஏற்பட்டுவிடுவதினால், அந்த வார்த்தையைத்தான் நாங்கள் எதிர்க்கிறோம்' என்று அவர் கள் கூறினார்கள். நான் நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர் களைக் கேட்க விரும்புவது, இந்த நான்கு முதல்வர்களின் கூட் டத்தின் முடிவுகளையும் பிரிவினை, தேசத் துரோகம் என்று முத் திரை குத்தியாகிவிட்டதே, இப்போது என்ன செய்வீர்கள்? அதற்கு ஏதாவது பெயர் மாற்றம் செய்யப்போகிறீர்களா? விஷயம் அந்த பெயரில் அல்ல. வார்த்தைகளில் அல்ல. மாநில சுய ஆட்சி என்றால் நம்முடைய இந்தியநாட்டு மக்களிடமிருந்தே பிரிவினை யாக, நம் மக்களும் கருத வில்லை, மைய அரசும் அப்படி கருதவில்லை. அவர்களுக்கு அதன் இம்பார்ட்டன்ஸும் அர்த்தமும் தெரியும். அதனுடைய கருத்தை அவர்கள் சரியாகத்தான் புரிந்து வைத்திருக்கிறார்கள்.

ஆனால் தங்கள் கையிலேயிருக்கும் அதிகாரக் குவியலையும், நிதி ஆதாரக் குவியலையும் சற்று தொடக்கூடிய எந்தக் குரல் எழுப்பப்பட்டாலும், அதற்கு பிரிவினை என்ற பட்டம் கட்டி கழுத்தை நெரித்துக் கொல்லும் சாகசம்தான் அது என்பது தவிர வேறு அல்ல. ஆங்கிலத்திலே சொல்வார்கள்—

Give the dog a bad name and kill it —என்று.

பக்கத்து வீட்டுக்காரனிடம் ஒரு நல்ல நாய் வைத்திருந்தால், அதன் மீது அடுத்த வீட்டுக்காரனுக்கு பொறாமை, அது அந்த வீட்டுக் காரனுக்கு பாதுகாப்பாக இருக்கிறதே என்று பொறாமை, அதனால் பைத்தியம் பிடித்த நாய் என்று சத்தம் போட்டால், வெளியிலே இருப்பவர்கள் எல்லாம் வந்து கல் எறிந்து அதைக் கொன்று விடு வார்கள். அந்த மாதிரியான ஒரு நடவடிக்கை தான் இந்திய அரசுக்கு, இந்த தென் மாநில முதல்வர்களின் மாநாட்டைப் பொறுத்த வரைக்கும்.

[திரு. ரா. உமாநாத்] [1983 மார்ச் 29

அவர்கள் கூறுகிறார்கள்—தென் மண்டல கவுன்சில் என்று இருக்க பங்களூர் கவுன்சில் எதற்கு, அது தேவையில்லை. இது அவர்கள் வாதம். நான் கேட்கிறேன், சவுத் ஸோனல் கவுன்சில் எங்கேயிருக்கிறது. அது காணாமல் போய் வெகு நாட்கள் ஆகிவிட்டதே. அது இருந்த வரைக்கும் கூட மைய அரசினுடைய கொலு பொம்மையாகத் தானே செயல்பட்டு வந்திருக்கிறது. அப்படியும் கடந்த காலத்தில் அந்த சவுத் ஸோனல் கவுன்சில் எடுத்த முடிவுகளில் எந்த முடிவினையாவது அமுல் படுத்தியிருக்கிறார்களா? இன்றைக்கு அந்த கவுன்சில் எங்கே இருக்கிறது என்றே தெரியவில்லை. பேப்பரில்தான் போடவேண்டும் சவுத் ஸோன் கவுன்சிலை காணவில்லை, கண்டு பிடித்துக் கொடுங்கள் என்று. நான் சேலஞ்ச் செய்து கேட்கிறேன், அந்த கவுன்சில் எடுத்த முடிவுகளில் ஏதாவது ஒன்றையாவது மைய அரசு அமுல் நடத்துவதற்கு எடுத்திருக்கிறதா? நிச்சயமா இல்லை.

அவர்கள் இன்னொன்றையும் கூறுகிறார்கள். உங்களுக்கு அதிக நிதிதானே தேவை, நிதிக் கமிஷனிடம் வாதாடி பெற்றுக் கொள்ளுங்களேன் என்று சொல்கிறார்கள். பைனான்ஸ் கமிஷன் இதிலே என்ன செய்ய முடியும் மைய அரசு ஒரு தலைப்பட்சமாக ஒதுக்குகின்ற பணத்தை பிரித்துக் கொடுப்பது தானே அதற்கு வேலை, பங்கு போட்டுக் கொடுக்கிற வேலைதான். அந்த லிமிட்டைத் தவிர, அவர்களுக்கு வேறு அதிகாரமே இல்லை.

இங்கே மாண்புமிகு ஹாஜா ஷெரீப் அவர்கள் சொல்லுகிறார்கள். பைனான்ஸ் கமிஷனிடம் உங்கள் தேவைகளைச் சொல்லி கேட்டு பெறுங்கள் என்கிறார்கள். ஆனால் அவர்கள் எதிலிருந்து கொடுப்பார்கள்? மொத்தம் 4 ஆயிரம் கோடியைத் தான் மாநிலங்களுக்கு என்று ஒதுக்கி மத்திய சர்க்கார் இந்த பைனான்ஸ் கமிஷனிடம் கொடுத்துவிடுகிறார்கள். அதற்குள்ளே தானே பங்கு போட்டுக் கொடுக்க வேண்டும்? அவற்றில் அதிகமாக கொடுங்கள் என்று நாம் மட்டும் அல்ல, எல்லா மாநிலங்களுமே தான் கேட்பார்கள். அப்படி இல்லாமல், மாநிலங்களினுடைய நிதி தேவையின் அடிப்படையில் முடிவு செய்து பிரித்துக் கொடுப்பதற்கு பைனான்ஸ் கமிஷனுக்கு அதிகாரம் இல்லை. Finance Commission க்கு beyond that லிமிட் கொடுப்பதற்கு அதிகாரம் இல்லை. Within the amount unilaterally decided by the Central Government அவர்களால் கொடுக்க முடியாது.



1983 மார்ச் 29] [திரு. ரா. உமாநாத்]

செப்டம்பர் கவர்ன்மெண்டில் இன்னொன்றையும் சொல்லுகிறார்கள். தேசிய அபிவிருத்தி கவுன்சிலைப் பற்றி. இந்த நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில் இது பற்றி முடிவு சாணலாமே என்று சொல்லுகிறார்கள். ஐந்தாண்டு திட்டங்களை எப்படி உருவாக்கலாம் என்பதும் பற்றி ஒரு வார்த்தையைக் கூட, அந்த நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலே சொல்வதற்கு மாநில முதலமைச்சர்களுக்கு வாய்ப்பில்லை. நேரடியாக மத்திய சர்க்காரே பார்த்து, அவர்களுடைய பிளான்களை உருவாக்கி, அதைக் கொண்டு வந்து, நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலே வைத்து, நீங்கள் இதன் மீது பிரசங்கம் செய்யுங்கள் என்று சொல்லிவிடுகிறார்கள், அந்த திட்டங்களை உருவாக்கக்கூட இந்தக் கமிஷனுக்கு வாய்ப்பில்லை. அவர்கள் உருவாக்கி தரும் திட்டங்கள் மீது இந்தக் கமிஷன் வெறும் பிரசங்கம் மட்டும் செய்கிறார்கள்.

இப்படி இது ஒரு அதிகாரம் இல்லாத கமிஷனாக இருக்கிறதே என்று, அந்த நிலைமையை மாற்ற ஜோதிபாசு அவர்கள் பல முயற்சிகளை எடுத்தார்கள். ஆனால் முடியவில்லை. நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில் என்பது என்றும்—National Development Council is a mere talking shop ஆகத்தான் செயல்படுகிறது. வெறும் பிரசங்கங்களை செய்து விட்டு ஊருக்குப் போகலாம். அவ்வளவுதான்.

அடுத்து லேட்டஸ்ட் வாதம் இப்போது என்னவென்றால், சர்க்கரியா கமிஷன்தான் அமைக்கப்பட்டாகிவிட்டதே, இந்த பெங்களூர் கவுன்சிலுக்கு என்ன வேலை, ஆகவே அதைக் கலைக்க வேண்டியதுதானே, இதுதான் அவர்களின் வாதம். இதை யாரும் ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று சொல்ல விரும்புகிறேன். தமிழிலே ஒரு பழமொழி இருக்கிறது. 'நரி செத்தாலும் அதன் பார்வை கோழியின் மீதுதான் அமைந்திருக்குமாம்' செத்த அந்தப் பிணத்தினுடைய பார்வை. அதைப்போல, ஆளும் காங்கிரஸ் கட்சிக்காரர்களின் வாதங்கள். அது பலமுறை தோற்றபின்னும் அதன் பார்வை சவுத் சீஃப் மினிஸ்டர்ஸ் கான்ஃபரன்ஸ் என்ற அந்த கோழியின் மீதுதான் இருக்கிறது.

இதில் முதல்வர் அவர்கள் ஏமாறக்கூடாது. சர்க்காரியா கமிஷன் வந்த பிறகுதான் இந்த முதல்வர்களின் கவுன்சிலுக்கு வேலையே ஆரம்பம். சர்காரியா கமிஷனின் அமைப்பும் டெர்ம்ஸ் ஆஃப் ரெஃபரன்ஸும் சம்பந்தமாக வற்புறுத்த

நான்கு மாநில முதல்வர்கள் ஒருமுகமான முடிவெடுத்து வற்புறுத்தவேண்டி இருக்கிறது. அதேபோல் சர்க்காரியா கமிஷன் முன்னால் எல்லா விஷயங்களிலும் ஒரே நிலை எடுத்து வலியுறுத்த மற்ற மாநில முதலமைச்சர்களைத் தொடர்பு கொண்டு ஓரணியில் திரட்டவேண்டிய அவசரக் கடமை உண்டு. ஆகவே நான்கு முதலமைச்சர் கவுன்சிலைக் கலைக்கும் பேச்சுக்கே இடம் இல்லை. ஆனால் இதைத் சிதரடிக்க விடாமுயற்சி நடக்கும். இந்த மாநிலங்களுக்கு இடையே உள்ள பிரச்சினைகளைத் தீர்க்கவிடாமல் தடுக்க அந்தந்த மாநில மக்களை உசுப்பிவிடுவார்கள். அதன்மூலம் இந்தப் பிரச்சினைகளில் முதல்வர்கள் நெளிவு சுளிவான நிலை எடுக்க விடாமல் தடுக்க முயற்சிப்பார்கள். இதில் நான்கு முதல்வர்களுக்கிடையே பகைமையை வளர்ப்பதன் மூலம் உடைக்கப்பார்ப்பார்கள். இதற்கு நான்கு முதல்வர்கள் இடம் கொடுக்காமல் இன்றைய முடிவுகளுடன், உங்களுடைய ஒருமைப்பாட்டை வளர்ப்பதுடன் இந்த ஒற்றுமையை நாடுதழுவிய முதல்வர்களின் ஒற்றுமையாக மாற்ற சுறுசுறுப்பாகவும், உறுதியாகவும் செயல்படவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இந்த முயற்சிக்கு மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சகல ஆதரவும் உண்டு. நாடாளுமன்றத்திற்குள் காங்கிரஸ் (இ) எம்.பி. இதைப் பிரிவினை முயற்சி என தாக்கியபொழுது அவரை எதிர்த்து நின்று நாங்கள் கூறுவதை நாடாளுமன்ற அவைக்குறிப்பில் ஏற்றுங்கள், நான்கு முதல்வர்களையும் நாங்கள் கங்ராசுலேட் பண்ணுகிறோம் என்று அறைந்தார்போல் இந்த கவுன்சிலை டிஃபன்ட் பண்ணியது கே.சி. ஹல்தர், சத்ய சதன் சக்கரவர்த்தி ஆகிய எங்கள் எம்.பி.க்கள்தான். எனவே இந்தியாவில் இந்த மாதிரி வளர்ச்சிப் போக்குகளை கணக்கில் எடுக்கவேண்டும்.

அதேபோல் தமிழகத்தின் அவசரமான அரிசித் தேவையை வற்புறுத்துவதற்கு அனைத்துக் கட்சிகளும் அவைக்குள் தர்ணா செய்வதற்கும் அமைச்சரின் போலி அறிக்கையைத் கிழித்தெறிந்து வெளிநடப்பு செய்யத் தலைமை தாங்கியது நம்முடைய மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தோழர் பி. ராமமூர்த்தி என்பதைப் பத்திரிகையில் பார்த்தோம். ஆகவேதான் உறுதியாக நில்லுங்கள், தென் மாநிலக் கூட்டம் நடத்தியதற்காக காங்கிரஸ் (இ) தாக்கியதற்கு, கர்நாடக முதலமைச்சர் ஹெக்டே அவர்கள் அளித்த பதிலை இந்த அவைக்கு நான் சமர்ப்பிக்கிறேன். சில காங்கிரஸ் உறுப்பினர்கள் குறுக்கிட்டிருக்கும்போது "I do not owe an explanation on the Conference to anyone, not even to the Prime Minister. I cannot be expected to behave like a Congress (I) Chief Minister"



என்று அடித்துச் சொன்னார். அதாவது 'இந்த முதல்வர்களின் மாநாடு பற்றி நான் யாருக்கும் விளக்கம் கூறக் கடமைப் பட்டவன் அல்ல, இந்தியப் பிரதமருக்குக் கூட சமாதானம் கூறக் கடமைப்பட்டவன் அல்ல, இந்திரா காங்கிரஸ் முதலமைச்சர் போல் நடந்துகொள்ள என்னை எதிர்பார்க்காதே' என்று கூறிவிட்டார். இப்படிப்பட்ட உறுதியோடு நான்கு முதல்வர்களும் நின்றால் இன்றைக்கு நம்முடைய நாட்டு மக்கள் மத்தியிலே ஒரு பெரிய ஃப்ரஸ்ட்ரேஷன் இருக்கின்றபோது ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக முன்னேற்றத்திற்கு இருக்கக்கூடிய முடிவுகளை டிஃபன்ட் செய்யவேண்டும், ஸ்பிரிட்டோடு டிஃபன்ட் பண்ணவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அந்த அடிப்படையிலே இந்த தீர்மானத்தை ஆதரிக்கவேண்டும் என்று நான் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. முகமது இஸ்மாயில் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள் முன்மொழிந்திருக்கின்ற தீர்மானத்தை வழிமொழிகிறேன். மாநில முதல்வர்களின் கூட்டம், அதாவது கவுன்சில் என்று அறிவித்திருப்பதை நான் முழுவதுமாக வரவேற்கிறேன். அப்படி அமைந்திருக்கின்ற கூட்டம் நான்கு முதல்வர்களின் கவுன்சிலாக மட்டும் நிரந்தரமாக நின்றுவிடாமல் அகில இந்திய அளவில் எல்லா மாநில முதல்வர்களையும் கொண்ட கவுன்சில் அமைக்கப் படவேண்டும் என்ற ஆசையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் தீர்மானத்தின் மூலம் எடுத்துக் காட்டி இருக்கிறார்கள். இத்தகைய அமைப்புக்கள் ஏற்படுவது இது தான் முதல் தடவை என்று நாம் எண்ணவேண்டாம். காங்கிரஸ் அல்லாத மாநில முதல்வர்கள் தங்களுடைய கோரிக்கையை வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்களோ என்றும் நாம் தவறாகக் கருத்து கொண்டிருக்கவேண்டாம். இதற்கு முன்னால் காங்கிரஸ் முதலமைச்சர்களும் இதைப்போன்ற கோரிக்கைகளைத் தந்திருக்கிறார்கள். 1978 ஆம் ஆண்டு நடைபெற்ற தென் மாநில முதல்வர்கள் மாநாட்டில் இதைப் போன்ற பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன. அப்போது இரண்டு மாநில முதலமைச்சர்கள்தான் காங்கிரஸ் அல்லாத கட்சியினைச் சேர்ந்த முதலமைச்சர்களாக இருந்தார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

(முற்பகல் 10–50)

இதற்கு எதிராக காட்டப்படுகின்ற குற்றச்சாட்டுகள் இது ஒரு செடிஷியஸ் குற்றச்சாட்டு ஆகிவிடுமோ என்ற ஐயப்பாட்டை காங்கிரஸ் முதலமைச்சர்கள், காங்கிரஸ் தோழர்கள் எழுப்பியிருக்கிறார்கள். இதைப்போல இதற்கு முன்னால் காங்கிரஸ் முதலமைச்சர்கள் கலந்துகொண்டு இது போன்ற

[திரு. பி. முகமது இஸ்மாயில்] 1983, மார்ச் 29

தீர்மானங்கள் இயற்றப்பட்டு இது அரசுக்கு எதிரான நடவடிக்கையாக கருதப்படவில்லை. இப்போது காங்கிரஸ் அல்லாத முதலமைச்சர்கள் கூடி விட்டபோது மட்டும் அது நாட்டுக்கு எதிரான நடவடிக்கையாக எப்படி ஏற்க முடியும் என்பதை மட்டும் எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இங்கே அமைக்கும் இருக்கிற கவுன்சிலில் காங்கிரஸ் அல்லாத முதலமைச்சர்கள் இருக்கிறார்கள். அதில் பல கட்சியைச் சேர்ந்த முதலமைச்சர்கள் இருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஜனதா கட்சி முதலமைச்சர் அங்கே இருக்கிறார். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தமிழகத்தின் முதலமைச்சர் அங்கே இருக்கிறார். பாண்டிச்சேரியைச் சேர்ந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த முதலமைச்சர் அங்கே இருக்கிறார். அதைப்போல தெலுங்கு தேச கட்சியைச் சேர்ந்த முதலமைச்சர் என். டி. இராமாராவ் இவர்கள் இதில் பங்கெடுத்து இருக்கிறார்கள். ஆகவே இந்த அமைப்பைப் பார்க்கும்போது ஏதோ ஒரு குறிப்பிட்ட கட்சி மத்தியில் இருக்கின்ற ஆட்சிக்கு எதிராக ஒரு சில திட்டங்களை தீட்டி வருகிறது என்ற குற்றச்சாட்டுக்கு அங்கே இடமே இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த கவுன்சில் தந்து இருக்கிற கோரிக்கைகள், மத்திய மாநில அரசுகளிடையே இருக்கின்ற உறவு முறைகள் சென்ற 35 ஆண்டு காலமாக நாம் பெற்று வரும் அனுபவத்திலிருந்து புனர்பரிசீலனை செய்ய வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையைத் தான் தந்து இருக்கிறார்கள். குறிப்பாக நிதி நிலைகளை பரிசீலனைச் செய்வதற்கு நிதி ஆதாரங்களை பங்கீடு செய்வதற்கு உரிய நிலைகளை பரிசீலனை செய்வதற்காக நிதி கமிஷன் அமைக்கவேண்டும், பிஸ்கல் கமிஷன் அமைக்கவேண்டும் என்று அவர்கள் தந்து இருக்கிற இன்னொரு கோரிக்கை. இப்போது இருக்கின்ற நிலையில் மாநிலங்கள் அதுங்களுடைய பொறுப்புகளை நிர்வகிப்பதற்கு போதுமான நிதி வசதி இல்லை என்ற குறைப்பாட்டை பல காலமாக மாநிலங்கள் வலியுறுத்தி வருகின்றன. வருவாய்த் துறை அமைத்தும் ஒட்டுமொத்தமாக மத்திய அரசின் கரங்களில் இருக்கின்றன. இன்கம் டாக்ஸ் முழுமையாக மத்திய அரசுக்குச் செல்கிறது. அதில் சிறுபகுதி மட்டும் மாநிலங்களுக்கு பகிர்ந்து தரப்படுகிறது. மத்திய அரசு கொடுக்கின்ற நிதி வசதிகளை மாநிலங்களுக்குத் தரமுடியாத அளவுக்கு இன்கம் டாக்ஸ் என்பதற்கு அதிகமாக நாம் விதிக்கின்ற சர்சார்ஜ் முழுமையாக மத்திய அரசு எடுத்துக்கொண்டிருக்கிற முறை இப்போது இருக்கிறது. இதை மாற்றி அமைப்பதற்கு தென் மாநில முதல்வர்கள் இப்போது சொல்லிக்கொண்டு இருக்கிறது என்ன—சர்சார்ஜ் என்பதை இன்கம் டாக்ஸ்வுடன் இணைத்து விடவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோல்



1983, மார்ச் 29] [திரு. பி. முகமது இஸ்மாயில்]

எக்சைஸ் வரியை, கார்ப்பரேஷன் டாக்ஸ் பங்கீடு முறையையும் மாற்றி அமைக்கவேண்டும் என்று கோரிக்கை தந்து இருக்கிறார்கள். இப்போது உள்ள நிலையை மாற்றி 60 சதவீதம் மத்திய அரசுக்கும் 40 சதவீதம் மாநில அரசுகளுக்கும் என்று இருக்கின்ற நிலையை மாற்றி மாநில அரசுகளுக்கு 60 சதவீதம், மத்திய அரசுக்கு 40 சதவீதம் என்று விகிதப் படுத்தப்பட்டு முறைப்படுத்தவேண்டும் என்று கோரிக்கையும் தந்திருக்கிறார்கள். மீண்டும் இப்போது மாநில அரசுகளுக்கு மிகத் தேவையாக இருக்கின்ற சில அதிகாரங்களை மாநில அரசுகள் பெற்றுக்கொள்கின்ற வகையில் அந்த உறவுகள் மாற்றி அமைக்கப்படவேண்டும் என்று கோரிக்கையும் தரப்படுகிறது.

விவசாயப் பொருள்களின் விலை நிர்ணயம் செய்வதில் இப்போது மாநில அரசுகளுக்கு எத்தகைய அதிகாரமும் இருப்பதாக தெரியவில்லை. மத்திய அரசு இதற்கான கமிஷனை அமைத்து விலைகளை நிர்ணயம் செய்கிறார்கள். மாநிலங்களைப் பொறுத்த அளவில் மத்திய அரசு நிர்ணயிக்கின்ற விலைக்கு அதிகமாக மானியம் வழங்குகின்ற முறையில் அதிகமான விலைகளை விவசாயிகளுக்கு தருகின்ற நிலை இப்போது இருக்கிறது. எனவே நான் கேட்டுக்கொள்வது மாநிலங்களுக்கு விலை பொருள்களின் விலையை நிர்ணயம் செய்வதற்குரிய அதிகாரம் இருந்தால் எந்த அளவுக்கு அவைகளுக்கு நிர்ணயம் செய்ய முடியும் என்று அவர்கள் உணர்ந்து அதற்கு ஏற்றபடி நிர்ணயம் செய்து தாங்கள் மானியமாக வழங்குகின்ற அதிகப்படியான சுமையை அவர்கள் மாற்றிக்கொள்வதற்கான வகை ஏற்படும் என்பதை நான் சுட்டிக்காட்ட விழைகிறேன். சில பொருள்களின் விலைகளை உயர்த்துகின்றபோது அதிகமாக பெறுகின்ற விலை மத்திய அரசுக்கு வருமானமாக சென்று கொண்டிருக்கிறது. இப்போது அமைந்த கவுன்சில் தருகின்ற ஒரு வேண்டுகோள் விலைகளை நீங்கள் அதிகமாக நிர்ணயிக்கின்றபோது அதிகமாக நிர்ணயிக்கின்ற அந்த பகுதியை எக்சைஸ் வரியாக பாகுபடுத்துங்கள். எக்சைஸ் வரியாக அது இருந்தால் அதில் பங்கு பெறுவதற்கு மாநில அரசுகளுக்கு உரிமை வரும். எனவே அது எக்சைஸ் வரியாக மட்டும் இருக்கவேண்டும் என்று சொல்லப்படுகிறது.

இப்போது சர்க்காரியா கமிஷன் அமைக்கப்பட்டு இருப்பதை நாங்கள் முழுமையாக வரவேற்கிறோம். காங்கிரஸ் முதலமைச்சர்கள், நடைபெற்றுவிட்ட தென்மாநில முதலமைச்சர்கள் மாநாட்டைப் பற்றி குறைப்பட்டுக் கொண்டிருந்தாலும் மதிப்பிற்குரிய பாரதப் பிரதமர் அவர்கள் அதின் நியாயத்தை உணர்ந்துகொண்டு சர்க்காரியா கமிஷன் அமைப்பதற்கு முன் வந்து இருக்கிறார்கள். ஒருநபர் கமிஷன் அமைத்து இருக்கிறார்கள். எத்தகைய நிபுணத்துவம் படைத்தவராக இருந்தாலும்

ஒரு-நபர் கமிஷன் எல்லா நிலைகளையும் முழுமையாக ஆராய்ந்து நல்ல முடிவுகளை தந்துவிட முடியும் என்ற நிலைமை இருந்தாலும் கூட நான் இந்தசந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்வது அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட கமிஷனாக இது அமையவேண்டும். அதற்கான வேண்டுகோளை இந்த மாமன்றம் மத்திய அரசிற்குத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 3 நபர்கள் அல்லது 5 நபர்கள் கொண்ட கமிஷனாக அது இருக்கவேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

ஒட்டுமொத்தமாக மத்திய மாநில அரசுகளின் உறவுமுறைகளைப்பற்றி பரிசீலனை செய்யவேண்டும். இப்போது இங்கே கொண்டு வந்து நிறைவேற்ற இருக்கின்ற தீர்மானம் வெறும் தீர்மானமாக மட்டும் நின்றுவிடாமல் முழுமையாக அமல் நடத்துகின்ற வகையிலே மாநில அரசு வற்புறுத்த வேண்டுமென்று தெரிவித்து அந்த நம்பிக்கையோடு நான் அமர்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை எங்களுடைய கட்சியின் சார்பில் நான் முழுமனதாக ஆதரிக்கிறேன். (இந்திய நாட்டின் அரசியலில் முக்கியமான திருப்பத்தினை பெங்களூரிலே மார்ச் மாதம் 20 ஆம் தேதி நடைபெற்ற தென் மாநில முதலமைச்சர்கள் மாநாடு ஏற்படுத்தியிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த மாநாடு என்ன நோக்கத்திற்காகக் கூட்டப்பட்டது என்பதைப்பற்றி அந்த மாநாடு என்ன முக்கியமான முடிவுகளை எடுத்தது என்பதைப்பற்றி அந்த 4 மாநில முதலமைச்சர்களும் வெளிப்படையாகத் தெரிவித்த பின்னாலும்கூட அதைப்பற்றிய வீணான சர்ச்சைகள் நம்முடைய நாட்டில் சிலரால் எழுப்பப்பட்டு வருவதை நான் மிக வன்மையாகக் கண்டிக்கிறேன். ஆண்டி-நேஷனல் என்றும் அது செடிஷியஸ் என்றும் மிகப்பெரிய வார்த்தைகளைப் போட்டு அந்த மாநில முதல்வர்களின் மாநாட்டை இந்திரா காங்கிரஸைச் சேர்ந்த சில முக்கியமான தலைவர்கள் குறிப்பிடுவது அவர்கள் இந்திய நாட்டின் வரலாற்றை அறியாமல் இருந்திருக்கிறார்கள் என்பதைத்தான் எடுத்துக்காட்டுகிறது.) முன்னாலே பேசிய நண்பர் திரு. முகமது இஸ்மாயில் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள், (1978 ஆம் ஆண்டிலே ஆந்திரம், கர்நாடகம், கேரளம், பாண்டிச்சேரி, தமிழகம் ஆகிய 5 மாநில முதலமைச்சர்களும் இதுபோல் ஒன்றுகூடிப் பேசினார்கள். அன்றைக்கு ஜனதா கட்சி மத்திய அரசாங்கத்தின் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்த வேளை. இந்தித் திணிப்பை எதிர்ப்பதற்காக 5 தென் மாநில





முதல்வர்கள் இங்கே கூடினார்கள். நம்முடைய முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அந்த மாநாட்டைக் கூட்டினார்கள். இந்திரா காங்கிரஸைச் சேர்ந்த மதிப்பிற்குரிய தேவராஜ் அர்ஸ் அவர்களும், சென்னாரெட்டி அவர்களும், பிரம்மானந்தரெட்டி காங்கிரஸிலே அன்றைக்கு இருந்த திரு. ஏ. கே. அந்தோணி அவர்களும் அந்த மாநாட்டிலே கலந்து கொண்டார்கள். இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தேவராஜ் அர்ஸ் அவர்களும் சென்னாரெட்டி அவர்களும் கலந்து கொண்டு இந்தித் திணிப்பை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றியது மாத்திரமல்ல, அவர்கள் செய்தியாளர்களிடத்திலே தெளிவாக அறிவித்தார்கள். 5 மாநிலங்களின் முதல்வர்களும் 10 கோடி மக்களின் உணர்வுகளையும் நாங்கள் பிரதிபலிக்கிறோம் என்று சொன்னார்கள். அன்றைக்கு டெல்லியிலே ஜனதா கட்சி ஆட்சியிலே இருந்த காரணத்தினாலோ இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் எப்படி அந்த இரண்டு மாநிலங்களின் முதல்வர்களும் அந்த மாநாட்டிற்குப் போகலாம் என்று கேட்டார்களா என்றால் இல்லை, மாறாக ஆதரித்து அறிக்கை விட்டார்கள். அது சரித்திரம். ஆகவே இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. ஸ்டீபன் அந்த சரித்திரத்தை மறந்துவிட்டு அல்லது வேண்டுமென்றே மறைத்துவிட்டு இன்றைக்கு செடிஷியஸ் என்பது போன்ற வார்த்தைகளைச் சொல்வார்களானால் அன்றைக்கு நடந்ததை என்ன வார்த்தைகளைப் போட்டு சொல்வது என்று நான் கேட்க விரும்புகிறேன். அது மட்டுமல்ல, இதற்கு முன்னாலே பல்வேறு கட்டங்களிலே இதுபோன்ற மாநாடுகள் நடைபெற்றிருக்கின்றன. 1952 ஆம் ஆண்டிலே கிழக்கு வங்காளத்திலே மிகப்பெரிய இந்து—முஸ்லீம் கலவரம் ஏற்பட்டு அதன் விளைவாக ஏராளமான இந்து அகதிகள் மேற்கு வங்காளத்திலேயும் பீகாரிலேயும் அசாமிலேயும் அடைக்கலம் புகுந்தபோது மேற்கு வங்க முதலமைச்சராக இருந்த திரு. பி. சி. ராய் அவர்கள் ஒரு மாநாட்டைக் கூட்டினார்கள்.

(முற்பகல் 11-00)

அந்த மாநாட்டிலே பீகார் முதலமைச்சரும், அஸ்ஸாம் முதலமைச்சரும் சேர்ந்து, ஆக மூன்று முதலமைச்சர்கள் கூடி இந்த பிரச்னைகளில் மத்திய அரசாங்கம் தலையிட்டு அகதிகளுக்குத் தேவையான அத்தனை உதவிகளையும் அளிக்கவேண்டுமென்று தீர்மானங்களை நிறைவேற்றினார்கள். பி. சி. ராய் ஆண்டி-நேஷனல் லீடர் அல்ல. அவர் செய்தது செடிஷியஸ் அல்ல. அவர் ஒரு மாபெரும் தேசியத் தலைவர்; நேருஜியின் தந்தை மோதிலால் நேருவிற்கு அவர் சகா; மகாத்மா காந்திக்கு அவர் வைத்தியர்; அந்த பி. சி. ராய் இந்த மாநாட்டைக் கூட்டியதை அன்றைக்கு காங்கிரஸ் கட்சியிலே இருந்த யாரும்

[திரு. ப. நெடுமாறன்] [1983 மார்ச் 29

அதை தவறு என்று கூறவில்லை; காரணம் அன்றைக்கு அவர்கள்
உண்மையான தேசியவாதிகளாக இருந்ததால் சொல்லவில்லை.
இன்றைக்கு தேசியத்தை மறந்துவிட்டவர்களாக பலபேர்கள்
அந்தக் கட்சியிலே இருப்பதால் இதுபோன்ற குற்றச்சாட்டுகளை
எடுத்துச் சொல்கிறார்கள் என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன்.
பெங்களூரிலே கூடிய தென்மாநில முதலமைச்சர்கள் அப்படி
என்ன ஆண்டி-நேஷனலாக, செடிஷியசாக தீர்மானங்களைப்
போட்டு விட்டார்கள்? மாண்புமிகு உமாநாத் அவர்கள் இங்கே
சொன்னதைப்போல அது இன்னும் முழுமையாக இருந்திருக்க
வேண்டும். என்பதுதான் என்னைப் போன்றவர்களுடைய அபிப்
பிராயம். ஆனாலும் கூட இந்த அளவிற்காவது அவர்கள்
வந்திருக்கிறார்கள் என்பதை நான் இதயபூர்வமாக பாராட்டு
கிறேன், அங்கே என்ன சொன்னார்கள்? அதில் சில முக்கிய
மானவைகளை மட்டும் இந்த அவையின் கவனத்திற்கு வைக்க
விரும்புகிறேன்.

ஆயத்தீர்வையிலே மாநில அரசுகளின் பங்கு 40 சதவீதமாக
இருப்பதை 50 சதவீதமாக உயர்த்தவேண்டும்: கார்ப்பரேஷன்
வரிகளில் மாநிலங்களுக்கு 60 சதவீதம் மாநிலங்களுக்கு பங்கு
வேண்டும். என்று கேட்கப்பட்டது ஆண்டி-நேஷனலா? அல்லது
செடிஷியஸா? இதை தைரியமாக இந்திரா காங்கிரஸைச் சேர்ந்
தவர்கள் சொல்ல முடியுமா? தமிழ் நாட்டிற்கு இந்த பங்கெல்
லாம் வேண்டாம் என்று சொல்கிறார்களா? இரண்டாவதாக,
நிதித் துறையில் மத்திய அரசின் விருப்பப்படி அமையா
மல், சட்ட ரீதியாக அமைய வேண்டும்; இதற்கான நெறிமுறை
களை இந்தியா முழுவதிலும் இருக்கிற முதலமைச்சர்களைக்
கொண்ட குழுவினால் நிர்ணயிக்க வேண்டுமென்று தென் மாநில
முதலமைச்சர்கள் முடிவு செய்தார்களே: இது செடிஷஸா?
ஆண்டி-நேஷனலா? மூன்றாவதாக திட்டங்களுக்கு மாநிலங்
களுக்கு அளிக்கப்படும் மத்திய நிதியுதவியில் கடன் பகுதியாக
அளிக்கபபடும் தொகையைக் குறைக்கவேண்டுமென்று சொல்வது
ஆண்டி-நேஷனலா? அதைப்போல வறட்சி நிவாரணப் பணிகள்
குறித்து நிதியுதவியிலே 75 சதவீதம் மானியமாகவும், 25
சதவீதம் கடனாகவும் கொடுக்கவேண்டும்; வெள்ளம்,
புயல், நிவாரண உதவிகளை நூற்றுக்கு நூறு சதவீதம்
மானியமாக மத்திய அரசு கொடுக்கவேண்டும் என்றுசொல்வது
ஆண்டி-நேஷனலா? செடிஷஸா? அதைப்போல உலக வங்கி,
சர்வதேச நிதி ஆகியவற்றிலே மத்திய அரசாங்கம் பெறும் கடன்
களில் எத்தகைய நிபந்தனைகள் அடிப்படையிலேஅந்த நிறுவனங்
களிடமிருந்து மத்திய அரசு பெறுகிறதோ, அதே நிபந்தனை,
வட்டி விகிதங்கள் அடிப்படையிலே மாநிலங்களுக்குத் தரவேண்டு
மென்று தென் மாநில முதலமைச்சர்கள் சொல்வதுஆண்டி-



1983 மார்ச் 29] (திரு. ப. நெடுமாறன்)

நேஷனலா? அடுத்தபடியாக பொதுப்பட்டியல், மாநிலப் பட்டியல்
சம்பந்தமான சட்டங்களை குடியரசுத் தலைவரின் அனுமதி பெறா
மல் மாநில சட்ட மன்றங்கள் சட்டம் இயற்ற வகை செய்வதுபற்றி
மத்திய அரசு பரிசீலிக்கவேண்டுமென்று சொல்வது செடிஷியசா?
உயர்நீதி மன்றத்திற்கு மத்திய அரசாங்கத்தாலே நியமிக்கப்படும்
நீதிபதிகள் மாநில மொழியை அறிந்தவர்களாக இருக்கவேண்டும்
என்று தென் மாநில முதலமைச்சர்கள் சொல்வதை இந்திரா
காங்கிரஸ் நண்பர்கள் எதிர்க்கிறார்களா? அது ஆண்டி-நேஷ
னலா? என்று அறிய விரும்புகிறேன். விவசாய விளைபொருட்
களுக்கு விலையை நிர்ணயிக்கிற அதிகாரம் மாநிலங்களுக்கு
வழங்கப்படவேண்டும் என்று சொல்வது தேசத் துரோகமா?
ஆகவே அவர்கள் சொன்னதிலே சிலவற்றை மட்டும் நான்
எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இந்த விஷயம் ஏதோ இந்த
நான்கு மாநிலங்களுக்கு மட்டும் அவர்கள் சொன்னார்கள்
என்பது மட்டுமல்ல. இந்தியா பூராவும் இருக்கிற எல்லா
மாநிலங்களுக்கும் சேர்த்து, இந்திரா காங்கிரஸ் ஆளுகின்ற
மாநிலங்களுக்கும் சேர்த்துதான் அவர்கள் இந்தத் தீர்மானங்
களை தேசபக்தி உணர்வோடு நிறைவேற்றி இருக்கிறார்கள்
என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்
உமாநாத் அவர்கள் சொன்னார்கள் எதற்காக தென் மாநில
கவுன்சில் ஏற்கெனவே தென் மண்டல சபை என்று ஒன்று
இருக்கிறதே? அதை ஏன் நீங்கள் கூட்டவேண்டுமென்று கேட்
டிருக்கக் கூடாது என்று இந்திரா காங்கிரஸை சேர்ந்தவர்கள்
கேட்ட கேள்விக்கு அவர் அழகாக பதில் சொன்னார். தென்
மண்டல சபை என்பது மத்திய உள்துறை அமைச்சராலே கூட்
டப்படுகிறது. அதற்கான அஜெண்டாவை அவரே நிர்ணயிக்
கிறார். சம்பந்தமில்லாத விஷயங்கள் இங்கே பேசப்படுகிறது.
சம்பந்தப்பட்ட மாநிலங்கள் எழுப்புகிற பிரச்னை அங்கே எடுத்
துக்கொள்வதில்லை. ஏதோ ஒரு அட்வைசரி கமிட்டியாகதான்
இதுவரையில் செயல்பட்டிருக்கிறது. எப்பொழுதோ இரண்டு
வருஷத்திற்கு, மூன்று வருஷத்திற்கு ஒரு முறைதான் அது கூடு
கிறதே தவிர, அது ஒரு நிரந்தரமான பரிகாரத்திற்கான அமைப்
பாக இல்லை.

அதைப் போலவே, தேசிய வளர்ச்சிக் குழுவைப் பற்றியும்
இங்கே இந்திரா காங்கிரசைச் சேர்ந்த தலைவர்கள் சொன்
னார்கள். ஏற்கனவே நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில்
இருக்கிறதே, அது இருக்கும்போது, இது தேவையா என்று
கேட்டார்கள். அவர்கள் வேண்டுமென்றே விஷயத்தை மறைத்
திறார்கள், நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில் வரலாறு
என்ன? தேசிய வளர்ச்சிக் குழுவிலே மாநில முதலமைச்சர்கள்
மட்டுமல்ல, மத்திய அரசாங்க அமைச்சர்களும் இருக்கிறார்கள்,
திட்டக் குழு உறுப்பினர்களும் இருக்கிறார்கள். இவ்வளவு

பெரிய சபையைக் கூட்டி வைத்துக்கொண்டு, அது வெறும் ஒரு ஆலோசனைக் குழுவாக இயங்க முடியுமே தவிர, அது எந்த முடிவையும் எடுக்கக் கூடிய குழுவாக இதுவரை இயங்க முடிய வில்லை. அது ஒரு இன்எஃபெக்டிவ் பாடியாக ஆகிவிட்டது என்பதை அனுபவ பூர்வமாக எல்லா முதலமைச்சர்களும் உணர்ந்து பல கட்டங்களிலே சொல்லியிருக்கிறார்கள்.

தேசிய வளர்ச்சிக் குழுவே எப்படி வந்தது? அரசியல் சட்டப்படி அரசியல் சட்டத்தின் 263-வது பிரிவிலே இண்டர் ஸ்டேட் கவுன்சில் அமைக்க வேண்டுமென்று சொல்லப்பட் டிருக்கிறது. அந்த இண்டர்ஸ்டேட் கவுன்சில் சர்வ அதிகா ரத்தையும் கொண்டது. மாநிலங்களுக்கிடையே ஏற்படக்கூடிய பிரச்னைகளை, மத்திய மாநிலங்களுக்கிடையே ஏற்படக் கூடிய பிரச்னைகளை எல்லாம் அது ஆராயும் பரிசிலனை செய்யும், ஒரு முடிவு எடுக்கும். அந்த முடிவை மத்திய அரசாங்க பரிசிலனைக்கு அனுப்ப வேண்டிய அவசியம் கிடையாது. அந்த முடிவை உடனடியாக ஜனாதிபதி அமுலுக்குக் கொண்டு வர வேண்டும். ஆக, இந்த சர்வ வல்லமை படைத்த இண்டர் ஸ்டேட் கவுன்சிலை இந்தியா குடியரசான 1950 ஜனவரி 26 ஆம் தேதியிலிருந்து, அரசியல் சட்டம் நிறைவேற் றப்பட்ட பின்னாலே, அரசியல் சட்டத்தின் 263-வது பிரிவிலே சொல்லப்பட்டிருக்கிற இந்த இண்டர்ஸடேட் கவுன்சிலை இதுவரை மத்திய அரசாங்கம் அமைக்கவே இல்லை, அதை அமைக்காதிருப்பதற்காகத்தான் தேசிய வளர்ச்சிக்குழு என்ற பெயராலே ஒரு ஆலோசனைக் குழுவை அமைத்து, அந்த இண்டர்ஸ்டேட் கவுன்சிலை அமைக்காமல் செய்துவிட்டார்கள். யானால், இதைப் போல் தென் மாநில முதலமைச்சர்கள் கவுன்சில் கூட வேண்டிய அவசியம் இல்லாமல் போயிருக்கும். ஆனால், அரசியல் சட்டத்திலே சொல்லியிருப்பதை, நம்முடைய அரசியல் சட்டத்தை வகுத்தவர்கள் என்ன நோக்கத்திற்காக இந்த இண்டர்ஸ்டேட் கவுன்சிலை அமைக்க வேண்டுமென்று சொன்னார்களோ அதை அமைக்காமல், இந்தியா சுதந்திரம் பெற்று 36 ஆண்டுகள் ஆகியும் அதை அமைக்காமல் யார் இருக்கிறார்களோ, அவர்கள்தான் தவறு செய்கிறார்களே தவிர தென் மாநில கவுன்சிலை அமைத்தவர்கள் எந்த வகையிலும் தவறு செய்யவில்லையென்பதை நான் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

அதே நேரத்திலே நம்முடைய முன்னாள் ஜனாதிபதி சஞ்சீவி ரெட்டிஅவர்கள், இந்த தென் மாநிலகவுன்சிலைப் பற்றிஅழகாகச் சொன்னார்கள். அதை இந்த அவையின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.



Mr. Reddy commenced the meeting of the four Chief Ministers of the Southern States to discuss their common problems and predicted that this would be the first of many such meetings to be held by other States.

அதோடு நிற்கவில்லை, அவர்கள் மங்களூரிலே போய் இன் னொன்றும் சொன்னார்கள்.

He referred to the four Southern Chief Ministers' recent conference at Bangalore and congratulated them for the "bold step". "What is wrong if the self-respecting Chief Minister's meet to discuss the problems confronting them", Reddy asked and said that only guilty people will have doubt about such a meeting, when States are being treated like municipalities.

என்று சொன்னார். சுய மரியாதை உள்ள முதலமைச்சர்கள் கூடி ஒரு மகாநாடு நடத்துகிறார்கள், அதிலே ஒன்றும் தவறில்லை. குற்ற உணர்வு கொண்டவர்கள்தான் இதை விமர்சனம் செய் வார்களே தவிர. மற்றவர்கள் விமர்சனம் செய்யமாட்டார்கள் என்று சஞ்சீவ ரெட்டி அவர்கள் சொன்னார்கள், சஞ்சீவரெட்டி என்ன ஒரு தேசிய விரோதியா? அல்லது சஞ்சீவ ரெட்டி என்ன தேச விரோதச் செயலைச் செய்தவரா? இந்தியாவில் உன்னத மான பதவிலே வீற்றிருந்த சஞ்சீவி ரெட்டி அவர்கள் ஒரு பெரிய தேசியத் தலைவராக இன்று வரைக்கும் விளங்கிக்கொண்டிருக்கிற சஞ்சீவரெட்டி அவர்கள் அதைப்பற்றி இப்படி சொல்லியிருக் கிறார்கள் என்பதையும் அந்த நண்பர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

(முற்பகல் 11-10)

கேரள மாநில முதலமைச்சர் மாண்புமிகு கருணாகரன் அவர்கள் இந்த தென்மாநில கவுன்சிலுக்கு வராதது மட்டுமல்ல. அது தவறு என்று விமர்சனம் செய்திருக்கிறார்கள். சொல்வ தற்கு அவருக்கு உரிமையுண்டு. இல்லையென்று நான் மறுக்க வில்லை. ஆனால், 'செடிஷன்' என்ற வார்த்தையை உபயோகப் படுத்தி, இது தேசத் துரோகக் காரியம் என்று சொல்லியிருக் கிறார். மத்திய அரசாங்கத்தை எதிர்ப்பதற்காக 4 மாநில முதலமைச்சர்கள் கூட வேண்டுமா, என்று அவர் கேட்கிறார். அவரை நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். அவருடைய மாநிலத்தில், அவருடைய ஆட்சியில் ஒரு கூட்டணி ஆட்சி நடத்து

(திரு. ப. நெடுமாறன்) [1983 மார்ச் 29

கிறது, அந்தக் கூட்டணியிலே அங்கம் வகிக்கிற கேரள காங்கிரஸ் (ஜே) என்ற கட்சி. மத்திய அரசாங்கம் கேரள மாநிலத்தை முழுறிலுமாகப் புறக்கணிக்கிறது என்று குற்றஞ்சாட்டி, நேற்றைய தினம் அந்த மாநிலம் பூராவும் தர்ணா நடத்தி இருக்கிறது. அவர் அமைச்சரவையிலே அங்கம் வகிக்கிற, அமைச்சர் உட்பட, அந்தக் கூட்டணியிலே அங்கம் வகிக்கிற கூட்டணியைச் சேர்ந்த கேரள காங்கிரஸ (ஜே) வைச் சேர்ந்த கட்சித் தோழர்கள் அந்த மாநிலம் பூராவும் மத்திய அரசாங்கத்தை எதிர்த்து, போர்க் கொடி உயர்த்தி இருக்கிறார்களே, அதைப் பற்றி கருணாகரன் அவர்கள் என்ன சொல்லுகிறார்? மத்திய அரசாங்கத்திற்கு விரோதமான நடவடிக்கையை அவருடைய மந்திரிசபையில் இருப்பவர்கள் செய்து இருக்கிறார்களே, அதைப் பற்றி அவர் என்ன கூறுவார் என்பதை இங்கே உள்ள இந்திரா காங்கிரஸ் நண்பர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, என்னுடைய பேச்சை முடிப்பதற்கு முன்னாலே ஒன்றை இங்கு நான் தெளிவாகத் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு இந்திய நாடு எதிர் நோக்கியிருக்கக்கூடிய பல்வேறு பிரச்னைகளை நீங்கள் பழைய கண்ணோட்டத்துடன் அணுகுவீர்களானால் அதற்குப் பரிகாரமே வராது. அது பஞ்சாப் பிரச்னையானாலும் அசாம் பிரச் னையானாலும் மாநிலங்களின் உரிமைகள் பற்றிய பிரச்னையானாலும் ஆமைக் கூட்டுக்குள் இருப்பதைப் போல், நீங்கள் உங்களை ஒரு குறுகிய வட்டத்திலே அடைத்துக் கொண்டு சிந்திக்க மறுப்பதனாலே, இந்திரா காங்கிரஸ் நண்பர்களுக்கு எந்தப் பயனும் இல்லை. தைரிய மாக வெளியே வந்து, நாட்டு நடப்பிலே யதார்த்த உண்மையை உணர்ந்து பார்த்து, இந்த தேசத்திலுள்ள சகல பகுதி மக்களும் எல்லா விதமான நன்மைகளையும் அடைவதற்கு எது வழியோ அதைச் சிந்திக்க வேண்டுமே தவிர, ஆமைக் கூட்டிலே ஒடுங்கிக் கொள்வதைப் போல, தயவு செய்து ஒடுங்கிக் கொள்ளத் தேவையில்லை.

எங்களுடைய கட்சி தோன்றிய நேரத்தில், 1981 ஆம் ஆண்டிலே எங்களுடைய முதலாவது மாநாட்டைப் பழனியிலே நாங்கள் கூட்டிய பொழுது, மாநிலங்களுக்குஅதிக அதிகாரங்கள் வேண்டுமென்ற குரலை நாங்கள் ஒலித்தோம். அப்பொழுது எங்களைப் பார்த்து, தேசியவாதிகளான நீங்கள், பிராந்திய வாதம் பேசலாமா என்று கூட அந்த நண்பர்கள் கேட்டார்கள் ஆனால் இன்றைக்கு என்ன ஆகி இருக்கிறது. நாங்கள் ஒலித்த குரல்தான் நியாயமான குரல் என்பதை மதிப்பிற்குரிய பிரதமர் இந்திரா காந்தி அவர்களும் உணர்ந்து, மத்திய மாநில உறவை



1983 மார்ச் 29] (திரு. ப. நெடுமாறன்)

ஆராய்வதற்காக சர்க்காரியா கமிஷனை அமைக்கக்கூடிய ஒரு நிலை வந்திருக்கிறது. பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் யதார்த்த நிலையை ஓரளவு உணர்ந்துவிட்டார் என்பதைத்தான் அந்த கமிஷன் நியமனம் இன்றைய தினம் எடுத்துக் காட்டு கிறது.

இந்தியாவின் அரசியலில் ஒரு காலகட்டத்திலே மொழிவழி யான மாநிலங்கள் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை எல்லா மாநிலங்களிலும் எழுந்த நேரத்திலே, பிரதம அமைச்ச ராக இருந்த மனிதர்குல மாணிக்கம் நேருஜி அவர்கள் அதை ஏற்க மறுத்தார். மொழிவழியாக மாநிலங்கள் பிரிந்தால் தேச ஒற்றுமைக்கு ஆபத்து வரும் என்ற சிந்தனை ஓட்டம் அவரிடம் இருந்த காரணத்தாலே மறுத்தார். ஆந்திராவிலே பொட்டி ஸ்ரீராமுலு அவர்கள் உண்ணாவிரதம் இருந்து உயிர்துறந்தார்கள். ஆந்திர மக்கள் கொதித்தெழுந்தார்கள். மகாராஷ்டிரத்திலே சம்யுக்த மராட்டியம் வேண்டுமென்ற கோஷம் எழுந்தது. குஜராத்திலே, மகா குஜ்ராத் அமைக்கப்பட வேண்டுமென்ற போராட்டம், கேரளத்திலும் போராட்டம் நடந்தது. ஆக மக்கள் விரும்புகிறார்கள் என்று உணர்ந்தவுடன் தன்னுடைய விருப்பு வெறுப்பை ஒதுக்கி வைத்து நேருஜி அவர்கள் மொழி வழியாக மாநிலங்களைப் பிரிப்பதற்கான சகல நடவடிக்கைகளை யும் எடுத்தார், பிரித்து கொடுத்தார். அதன் விளைவாக தேச ஒற்றுமைக்கு எந்த ஆபத்தும் வந்துவிடவில்லை இன்றைக்கு அதையேதான் இன்றைக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்ற ஒரு குரல் இந்தியா பூராவும் எல்லா மாநிலங்களிலும் எழுந்துவிட்ட பின்னாலே அதை நீங்கள் அலட்சியம் செய்வீர்களானால், அதை அடக்குமுறையினாலே ஒடுக்கிவிடலாம் என்று எண்ணுவீர்களா னால் தேச ஒற்றுமைக்கு நீங்கள்தான் உலை வைக்கிறீர்கள் என்று நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன். மதிப்பிற்குரிய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் நிர்வாகச் சீர்திருத்தத்திற்காக அமைத்த செதல்வாட் கமிஷன் இதைப்பற்றி என்ன சொல்லி இருக்கிறது என்பதை மட்டும் சொல்லி என்னுடைய உரையை முடிக்க விரும்புகிறேன்.

செதல்வாட் கமிஷன். இந்த மத்திய மாநில உறவுகளைப் பற்றி ஒரு நல்ல கருத்தினைச் சொல்லியிருக்கிறது. கூட்டாட்சி விஷயத்தில் பல குணாம்சங்கள் இந்திய அரசியல் சட்டத்தில் இல்லவே இல்லை என்று அது தெளிவாகச் சொல்லியிருக்கிறது. கூட்டாட்சித் தத்துவம் அதாவது ‘பெடரல் சட்டம்’ இருக்க வேண்டுமென்றால், என்னென்ன அம்சங்கள் அரசியல் சட்டத் திலே இருக்கவேண்டுமென்று அது சொல்லியிருக்கிறது.

(திரு. ப. நெடுமாறன்) [1983 மார்ச் 29

1. சுயாதிக்க உரிமையுள்ள மாநில அரசுகள் தங்கள் அதிகாரத்தில் ஒரு பகுதியை பொது நலனுக்காக மத்திய ஆட்சியிடம் ஒப்படைத்தல்.

2. எஞ்சியுள்ள அதிகாரங்களை (Residuary Powers) மாநில அரசுகளே வைத்துக்கொள்ளுதல்;

3. மத்திய ஆட்சியிடம் ஒப்படைக்கப்படாத அதிகாரங்கள் குறித்து ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனி அரசியல் சட்டம் இருத்தல்.

4. அரசியல் சட்டத்தின் மேலாதிக்கத்தையும் அதனுடைய மாற்றமுடியாத தன்மைகளையும் மாநில அரசுகளின் சம்மதத்துடன் திருத்துதல்;

5. தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவைகளை மத்திய அரசாங்கமும் மாநில முக்கியத்துவம் வாய்ந்தவைகளை மாநில அரசுகளுக்கும் பகிர்ந்து அந்த அடிப்படையில் அதிகாரப் பங்கீடு செய்து அவரவர்கள் தங்கள் நிலையில் சுதந்திரமாக செயல்பட அனுமதித்தல்;

6. மத்திய—மாநிலங்களுக்கு இடையே ஏற்படும் பிரச்
சினைகள் குறித்தும், மாநிலங்களுக்கிடையே ஏற்படும்
பிரச்சினைகள் குறித்தும், அரசியல் சட்டத்
திற்கு விளக்கம் தேடுகிற பிரச்சினைகள் குறித்தும்,
தேவையான எல்லா நடவடிக்கைகளையும் மேற்
கொள்ள நீதிமன்றங்களுக்கு அதிகாரம் வழங்குதல்;
என்பதை சொல்லி, இந்த 6-ம் எந்த ஒரு அரசியல் சட்டத்திலே
இருக்கிறதோ, அதுதான் 'Federal Constitution' இந்தியாவின்
அரசியல் சட்டத்தின் மேலே சொல்லப்பட்ட 6 குணாம்சங்களில்
ஒன்றைத் தவிர மற்றவை இல்லவேயில்லை. ஆகவே இந்திய
அரசியல் சட்டத்தை முக்கியமாக பரிசீலனை செய்யவேண்டு
மென்று மதிப்பிற்குரிய பிரதமர் இந்திரா காந்தி அம்மையார்
அவர்களால் நியமிக்ப்பட்ட செதல்வாட் கமிஷன் சொல்லியிருக்
கிறது.

ஆகவே, இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் தென்மாநில
முதலமைச்சர்கள் மாநாட்டில் எழுப்பியிருக்கக் கூடிய இந்த
கோரிக்கையை மத்திய—மாநில உறவுகளை மறு பரிசீலனை செய்ய
வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையை, அதுபோல் தமிழகத்திலே
இருக்கின்ற சகல கட்சிகளும் சேர்ந்து எழுப்புகிற அந்த
கோரிக்கையை, மேற்கு வங்கத்தில், சட்டசபையில் கூடி இந்தக்
கோரிக்கையை ஒரு தீர்மான வடிவத்திலே நிறைவேற்றியிருக்
கிறது. கேரள மாநில சட்ட சபையும் இந்த தீர்மானத்தை



1983 மார்ச் 29] (திரு. ப. நெடுமாறன்)

நிறைவேற்றியிருக்கிறது. ஆக இந்தியா பூராவும் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்ற குரல் எழுந்திருப்பதையொட்டி பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் சர்க்காரியா கமிஷனை அமைத்திருக்கிறார்கள். "ஒரு விஷயத்தை ஆறப்போடுவதனால் ஒரு கமிஷன் போடு என்ற பழமொழிக்கேற்ப, அது அமைக்கப்பட்டதா என்று எனக்குத் தெரியாது. இருந்தாலும் உண்மையிலே இந்த பிரச்சினையின் முக்கியத்துவத்தை, அவசரத் தன்மையை பிரதமர் இந்திரா அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். இந்தக் கமிஷன் முற்றிலுமாக சுதந்திரமாக செயல்படுவதற்கு அனுமதிப்பதோடு மட்டுமல்ல, அந்தக் கமிஷன் சிபாரிசுகளை அமல் நடத்துவதற்கு மத்திய அரசாங்கம் முன்வரவேண்டும். அவசியமானால், இந்த அரசியல் சட்டத்தை முற்றிலுமாக மறு பரிசீலனை செய்வதற்கு ஒரு அரசியல் நிர்ணயசபையைக் கூட்டுவதற்கு பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் முன்வரவேண்டுமென்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் கொண்டுவந்துள்ள தீர்மானத்தை முழு மனதோடு ஆதரிக்கிறேன், அதுபோன்று எல்லாக் கட்சித் தலைவர்களும் அதை ஏகமனதாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சி சார்பிலே முழு மனதோடு ஆதரிப்பதோடு, 20-3-1983 பெங்களூரிலே நடைபெற்ற தென்மாநில முதல்வர்களுடைய அந்தக் கருத்துக்களையும் ஆதரித்து, அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியினுடைய கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் சொன்னார்கள். வங்கத்திலே இருக்கிற முதலமைச்சர் ஜோதி பாசு அவர்கள் தீர்மான வடிவமாகக் கொண்டு மத்திய அரசுக்கு அனுப்பினார்கள் என்று சொன்னார்கள். அதிலே அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியும் பங்கேற்று, அங்கிருக்கிற அமைச்சர்களும் அந்தத் தீர்மானத்தை ஆதரித்து, அங்கே மத்திய அரசிற்கு அனுப்பினார்கள். என்பதையும் அந்த உணர்வோடு எங்களது இயக்கம் அகில இந்திய ரீதியில் ஒரு கொள்கை வைத்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீண்ட நெடுங்காலமாகவே எங்களது இயக்கத்தின் மாபெரும் தலைவர் நேதாஜி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

" There should be a strong Central Government ; at the same time the State should be Independent and Republic"

(திரு. எஸ். ஆண்டித் தேவர்) [1983 மார்ச் 29

அந்தக் கருத்திலேயிருந்து நாங்கள் என்றும் மாறுபடவில்லை. ஆகவே அந்த உணர்வோடு அந்த தென் மாநில முதல்வர்கள் மாநாட்டிலே எடுத்தக் கருத்தினை நான் ஆதரிக்க விரும்புகிறேன். அதோடு மட்டுமல்ல. இப்போது தென் மாநில முதல்வர்கள் மாநாட்டிலே பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே மத்திய—மாநில உறவுகள் நிதி ஆதாரத்தில் எப்படி இருக்கவேண்டும் என்றுகூறுகிறார்கள். அது கூறுகின்ற அந்தக்கருத்தினை ஆதரிப்பதோடு மட்டுமல்ல, பல்வேறு கோரிக்கைகளை விடுத்திருக்கிறார்கள். மாநிலங்களுக்கு பஞ்ச நிவாரண வகைகளுக்கு கொடுக்கிறபோது மத்திய அரசு 75 சதவீதம் கொடுக்கவேண்டுமென்றும். அதேபோன்று புயல் போன்ற நிவாரணங்களுக்கு கொடுக்கப்படும்போது 100 சதவீதம் என்ற நிதி ஆதாரங்களை கொடுக்கவேண்டும் என்றும், அதுபோன்று எப்படி நிதியினைப் பங்கிடவேண்டுமென்பதிலே ஒரு கார்ப்பொரேஷனை அமைக்கவேண்டுமென்றும் அந்த முதல்வர்கள் மாநாட்டில் முடிவெடுத்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, மத்திய—மாநில உறவு மாற்றி அமைக்கப்படவேண்டுமென்ற அந்த கருத்து மட்டுமல்ல; என்னுடைய நீண்ட நெடுநாளைய கருத்து, மத்திய அரசினுடைய அரசியல் சட்டம் மாற்றி அமைக்கப்படவேண்டுமென்று சொன்னால், இப்போது இருக்கிற அந்த மத்திய அரசு அந்த சட்டத்தை வைத்துக்கொண்டு மாநிலங்கள் அதிக அதிகாரங்கள் பெறமுடியாது.

(முற்பகல் 11-20)

ஏற்கனவே பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது போன்று மாநிலங்கள் முனிசிபாலிட்டிகளாக நடத்தப்படுகின்றன என்ற அந்த நிலைமையை மாற்றுவதற்குத் தென் மாநில முதல்வர்கள் கூடிய அந்த மாநாட்டிலே மத்திய அரசினுடைய சட்டங்களைத் திருத்தவேண்டுமென்ற குரலையும் சேர்த்து, இன்னும் தொடர்ந்து அந்தக் கூட்டங்களை நடத்துவதன்மூலம் இந்த நாட்டிலுள்ள நம்பிக்கை நட்சத்திரமாக இப்பொழுது நீங்கள் எடுத்த முடிவு இருக்கிறது. அது புத்துணர்வு ஊட்டும் வகையில், இந்தியா முழுவதும் பரப்பப்படுகின்ற வகையில், மாநில முதல்வர்கள் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உயர்நீதி மன்றத்திலேகூட மற்ற மாநிலமொழி தெரிந்தவர்கள், அந்தந்த மாநில மொழியைத் தெரியாதவர்களாக இருந்தால் நீதிபதியாக நியமிக்கப்படக்கூடாது என்ற அந்த நிலையை இதற்கு முன்னாலே கூட இந்த மன்றத்திலே நானும் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டுவந்து, நமது உயர்நீதிமன்றத்திற்கு வேறு மாநில நீதிபதி வந்தபொழுது அது தவறு என்று சுட்டிக்காட்டியிருக்கிறோம்.



1983 மார்ச் 29] (திரு. எஸ். ஆண்டித் தேவர்)

அது போன்று நல்ல கொள்கைகளை இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதே போல, இந்த 4 மாநில முதலமைச்சர்கள் கூடிய பிறகு, சர்க்காரியா கமிஷன் அமைத்திருக்கிறார்கள். மத்திய மாநில உறவுகளைப் பற்றி ஒரு அறிக்கை தரவேண்டுமென்று சர்க்காரியா தனி நபர் கமிஷன் போடப்பட்டிருக்கிறது. அந்த உணர்வைப் பாராட்டுகின்றபொழுது, இது மத்திய மாநில உறவுகளுக்கு உகந்ததாக அமையுமா அல்லது அந்த அம்மையார் சொல்கின்றதை எழுதுகின்ற கமிஷனாக அமையுமா என்பதைத்தான் இந்த நேரத்திலே பார்க்கவேண்டும்.

இப்படிப்பட்ட ஒரு எழுச்சிதான், மாநில முதல்வர்கள் கூடிவிட்டார்களே என்ற உணர்வோடு, அதை திசை திருப்புகிற வகையில் .இப்படி ஒரு கமிஷன் அமைத்திருக்கிறார்களே தவிர, மத்திய அரசினுடைய அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றுவதற்கு நிபுணர் குழுவைப் போட்டு, அந்த அரசியல் சட்டத்தை மாற்றுவதற்கு முயல்வார்களேயானால் அது நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இப்படி 4 மாநில முதல்வர்கள் கூடிவிட்டார்கள் என்று சொன்னவுடனே சில காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் அதை இராசத் துரோகக் குற்றம் என்று சொல்கிறார்கள், பிரிவினை வாதம் என்று பேசுகிறார்கள். ஆனால், நான் ஒன்றைச் சொல்கிறேன், இந்திரா காங்கிரஸ்தான் இந்தப் பிரிவினை வாதத்தைத் தூண்டியதன்காரணமாக, அசாமிலும், பஞ்சாபிலும் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடக்கின்றன என்பதை அரசியல் தெரிந்தவர்கள் நன்றாக உணர்வார்கள். காரணம் ஜனதா ஆட்சி டெல்லியிலே இருந்த காலத்திலே, பஞ்சாபிலே இன்றைக்கு தலைமை தாங்குகின்ற லாங்வெல் போன்றவர்கள், காங்கிரஸ் கட்சியிலே இருந்தவர்கள், மத்தியிலே இருந்த ஜனதா ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சிகளைத் தூண்டுகிற நிலையை எடுத்த, அந்த உருவம் இப்பொழுது அவர்களுக்கு எதிராகவே வந்துவிட்டது என்பதைத்தான் தெரிவிக்க விரும்புகிறேன். இங்கே அரசியலை மறைக்கிறார்கள், அசாம், பஞ்சாப் போன்ற மாநிலங்களிலே பிரிவினை வாதத்தை தூண்டியது காங்கிரஸ் கட்சிதான் என்ற கருத்தை நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். எங்களது இயக்கத்தின் சார்பிலே அப்படி ஒரு குற்றச்சாட்டை வைத்திருக்கிறோம். 4 மாநில முதல்வர்கள் மத்திய மாநில உறவு எப்படி இருக்கவேண்டுமென்பதைக் கூறினால், அது இராசத் துரோகம் என்று கூறும் அளவுக்கு மத்தியிலே இருப்பவர்கள் நினைப்பார்களானால் அது உகந்ததாக, இருக்காது. மத்திய மாநில உறவுகளை பார்ப்பதற்கு அவர்கள் எடுக்கின்ற நடவடிக்கைகள் அது போன்றுதான் அமையும்.

இப்பொழுது நான் கேட்கின்ற நியாயமான கோரிக்கை, 4 மாநில முதல்வர்கள் மாநாட்டிலே, உலக வங்கியிலே வாங்குகிற கடன்களுக்கு, உலக வங்கி கேட்கின்ற அந்த வட்டி வீதத்திலே தான் மாநிலங்களுக்குக் கொடுக்கவேண்டுமென்பது. அது எந்த விதத்தில் தவறாகும்? மத்தியிலே இருப்பவர்கள் ஒரு வட்டி வீதத்தில் வாங்கி மாநிலங்களுக்கு அதே வட்டி வீதத்தில் கொடுக்கவேண்டுமென்று அங்கே சொல்லப்படுவது எப்படி இராசத் துரோகமாகும். மத்திய அரசு என்ன வட்டிக் கடையா வைத்திருக்கிறார்கள்: இப்படிப்பட்ட நிலையில், எங்களது இயக்கத்தின் சார்பிலே நான் இந்த 4 மாநில முதலமைச்சர்கள் மாநாடுக் கருத்துக்களை வரவேற்பதோடு மட்டுமல்ல, மாண்பு மிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை ஆதரித்து, இந்த மாநாடு, ஒரு நாள் மாநாடோடு நின்றுவிடக் கூடாது, மத்தியிலே இருக்கிற அதிகாரக் குவியலை எதிர்த்து மறுபடியும் கூடி பல்வேறு கருத்துக்களை மத்திய அரசுக்கு வலியுறுத்தவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

திரு. இரா. கருப்பையா: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 20-3-1983 ஆம் தேதி பெங்களூரில் நடைப்பெற்ற தென் மாநிலங்களின் முதல் அமைச்சர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்டு இருக்கின்ற முடிவினையும் நிறைவேற்றப்பட்டு இருக்கின்ற தீர்மானங்களையும்வரவேற்று, அந்த அடிப்படையிலே நம்முடைய தமிழக அரசு தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று வற்புறுத்தக்கூடிய முறையிலே இத்தப்பேரவையின் உறுப்பினர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் துணைத்தலைவர் தோழர் உமாநாத் அவர்கள் கொடுத்து இருக்கின்ற அந்தக் தீர்மானத்தை நான் வரவேற்று இது சம்பந்தமாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கருத்துக்களைக் கூறுவதற்கு நான் விரும்புகிறேன்.

நம்முடைய நாட்டின் புனிதமானது என்று கூறக்கூடிய அரசியல் சட்டம் நிறைவேற்றப்பட்டு, 33 ஆண்டுகளை நாம் கடந்துவிட்டோம். இந்த 33 ஆண்டுகளில் நம்முடைய தேசத்தில் ஏற்பட்டு இருக்கக்கூடிய பல்வேறு நிலைகளையும், பல்வேறு நிர்ப் பந்தங்களையும், இன்றையதினம் இம்மாதிரியான நிலைகள் உருவாக்குவதற்கு, அப்படி உருவாகக்கூடிய நிலைமைகள் ஏற் படுத்தியிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையில் இருக்க வேண்டிய அதிகாரிகள் சம்பந்தப்பட்ட பிரச்னை. இது ஏதோ திடீரென்று இன்றையதினம் ஏற்பட்டுவிட்ட பிரச்னையாக யாரும் கருதமுடியாது. ஆனால், இது பல்வேறு காலங்களில்பல்வேறுருபங் களில் இது ஏற்பட்டிருக்கிறது என்பதையும் மத்திய அரசிடம் ஆளக் கூடிய பொறுப்பிலே, இருக்கின்ற சக்தி வாய்ந்த சகல அதிகாரங்





களையும், அரசியல் சட்டத்தின் அடிப்படையிலே பெற்றிருக்கிற மத்திய அரசாங்கம், இந்த நியாயமான மக்களுடைய உணர்வு களை மாநில அரசாங்கங்களுக்கு அதிக அதிகாரம் இருக்க வேண்டும் என்ற மக்களுடைய உணர்வை அவர்கள் அதை நிராகரித்தே வந்திருக்கிறார்கள் என்பதையும் குறிப்பிடவேண்டிய விஷயம். நாம் சமீபத்திலே ஏற்பட்டிருக்கின்ற தேர்தல் முடிவுகள் ஆந்திர மாநிலத்திலே, கர்நாடக மாநிலத்திலே இந்த ஆண்டுத் துவக்கத்திலே நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி தோற்கடிக்கப்பட்டு அந்த மாநிலங்களில் காங்கிரஸ் அல்லாத ஆட்சிகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நாம் அனைவரும் அறிவோம். இந்தத் தேர்தல் முடிவுகள் ஏதோ காங்கிரஸ் கட்சி யின் மீது மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற உணர்வு என்பது மட்டுமல்ல, காங்கிரஸ் கட்சி ஜனநாயக விரோதமாக சகல அதிகாரங்களையும் வைத்து மக்களுடைய பிரச்னைகளை முறைப்படி, தீர்க்கத் தவறிவிட்டார்கள் என்பது மட்டுமல்ல, அதன் காரணமாக மட்டும் இந்த நிலை ஏற்பட்டுவிட்டதுஎன்று யாரும் கூற முடியாது. ஆனால் அந்த மாநிலங்களிலே இருக்கின்ற மக்கள் பதார்ச்சியாக கடந்த 35 ஆண்டுகளாக அவர்களுடைய முன்னேற் றத்திற்காக எந்த அரசு, அதனுடைய கொள்கை தடையாக நின்றி ருக்கிறது என்பதை நடைமுறையிலே புரிந்துகொண்டு, அதிக மான அதிகாரத்தை மத்திய அரசு தன்னுடைய இடத்திலே குவித்து வைத்துக்கொண்டுமாநிலத்திலே அதிகமான மக்களுக்குத் தேவையான சேமநலத்திட்டங்களையும் மற்ற நடவடிக்கைகளையும் செயலாற்ற வேண்டிய மாநிலங்கள் ஒரு முனிசிபாலிட்டிகளாக, இருக்கவேண்டிய நிர்பந்தத்திற்கு அந்தஸ்திற்கு வந்திருகிறது என்று நம்முடைய மாண்புமிகு பாரதத்தின் முன்னாள் குடியரசுத் தலைவர் சஞ்சீவரெட்டி அவர்கள் சமீபத்திலே கூறியிருக்கிறார்கள். இது மாநிலங்கள் முனிசிபாலிட்டிகள் என்ற அளவிற்கு நடத்தக்கூடிய நிலைமைகள் சென்றுகொண்டிருக்கிறது. அது வளர்ந்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலைமைகள் இந்த நாட்டின் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கு, ஒற்று மையைப் பாதுகாப்பதற்கு உதவாது என்ற முறையிலே மிகப் பெரிய உயர்ந்த, பாரதத்தின் தலைவராக நின்று அந்தப் பொறுப்பை குடியரசுத் தலைவராக இருந்து முன்னாள் ஜனாதிபதி சஞ்சீவ ரெட்டி அவர்கள் இப்படி கூறக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே மத்திய அரசாங்கத்திலே குவிந்து இருக்கக்கூடிய அதிகாரங்கள் எல்லாம் அடியோடு மாற்றம் வேண்டும். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தேவை. மாநில மக்களுடைய அபிலாசைகளை எண்ணங்களை அவர்கள் சேம நலங்களைப் பூர்த்தி செய்யக்கூடிய முறையிலே அதற்கான அதிகாரங்களைக் கொண்டிருக்கின்ற மத்திய அரசு மாநிலங் களுக்கு அதிகமான அதிகாரத்தை, நிதி ஆதாரத்தை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய முறையிலே அரசியல் சட்டத்தில் திருத்தம்

செய்ய வேண்டும் என்ற அடிப்படையிலே அந்த மாதிரியான உணர்வுகளை, இந்தத் தேர்தல்களின் மூலம், ஆந்திர மக்களும், கர்நாடக மக்களும், சமீபத்திலே இன்றைய தினம் வெளியிட்டிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களை அவர்கள் தங்களுடைய வாக்குகளின் மூலயாக வாக்குச் சாவடிகளில் வாக்குகளை அளிப்பதன் மூலமாக ஒரு மாற்று அரசாங்கத்தை ஏற்படுத்தி அவர்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்தியிருக்கிறார்கள், என்பதை நான் கூற விரும்புகிறேன். இது ஏற்கனவே இந்த மாதிரியான நிகழ்ச்சிகள் நம்முடைய தேசத்தில் நடைபெற்றிருக்கின்றன. 1967 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்களில் 8 மாநிலங்களிலே காங்கிரஸ் கட்சி தோற்கடிக்கப்பட்டு, காங்கிரஸ் அல்லாத ஆட்சி ஏற்பட்டது என்பதும். அன்றைய தினம் இந்தப் பிரச்சனைகள் முன்னுக்கு வந்தது என்பதும் அனைவரும் அறிந்த விஷயம். இந்தப் பிரச்னை அனைறக்கும் வரும்போது மத்தியிலே காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்டது. 8 மாநிலங்களிலே காங்கிரஸ் அல்லாத ஆட்சிகள் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அதற்கான காரணங்கள் என்ன என்கிற புதிய அடிப்படையில், புதிய நிலைமைகளில் அந்த மத்திய மாநில உறவுகளைத் திருப்திபடுத்துவதற்கான நடவடிக்கைகளை அன்றைய தினம் எடுத்தார்களா என்றால் நிச்சயமாக இல்லை. ஆனால் அதே நேரததிலே அவர்களுடைய குறிக்கோளாக அவர்கள் கூறி வந்தது அட்மினிஸ்ரேட்டிவ் ரிபார்ம்ஸ் கமிஷன், அதாவது நிர்வாகச் சீர்திருத்த ஆணைக் குழு என்று மத்திய அரசாங்கத்தாலே ஏற்படுத்தப்பட்டு அந்தக் குழு அன்றைய தினம் இருக்கின்ற அரசியல் சட்டத்திலே எந்த விதமான மாற்றங்களும தேவையில்லை, இதை வைத்துக் கொண்டே சில மாற்றங்களை இந்த அரசியல் சட்டத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு ஏதாவது செய்து விடலாம் என்ற முறையிலே அந்த ஆணைக் குழுவினுடைய பரிந்துரைகளை வைத்து, இந்த மாதிரியான முழுமையான மாற்றம் செய்ய வேண்டும் என்று கருத்திற்கு தடை விதித்து நிறைவேற்ற மறுத்து விட்டார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 11–30)

1976 ஆம் ஆண்டிலே ஜனதா கட்சி ஆட்சி மத்தியில் ஏற்பட்டது. அதையும் நாம் அனைவரும் அறிவோம். இந்தச் சந்தர்ப்பத்திலே இந்தப் பிரச்னை வந்த நேரத்தில் ஏற்கனவே காங்கிரஸ் கட்சி என்ன கொள்கையைக் கடைபிடித்தார்களோ அதே பின்னணியில் அவர்களும் நிராகரித்து விட்டார்கள் என்பதைத்தான் நான் இந்தச் சந்தர்ப்பத்திலே அன்றைய தினம் பிரதம அமைச்சராக இருந்த மொரார்ஜி தேசாய் அவர்கள்



ஏற்கனவே இந்திரா காந்தி அவர்கள் என்ன காரணத்தைச் சொல்லி, என்ன வாதத்தைச் சொல்லி அதை நிராகரித்தார்களோ, அதையே சொல்லி நிராகரித்து விட்டார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இதன் விளைவுகளால் நம்முடைய தேசத்தில் என்ன ஏற்பட்டது என்பதை நாம் ஆழமாக இன்றைய தினம் சிந்திக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

குறிப்பாக, வடகிழக்கு மாநிலங்களில். வடகிழக்கு பகுதியில் ஏற்பட்டு இருக்கும் பல்வேறு சீர்குலைவு சக்திகளும், பிரிவினை வாதங்களும் அந்த அடிப்படையில்தான், அந்த காரணத்தால் தான் வளர்ந்து வந்து இருக்கின்றன. அந்த அளவிற்கு வளர்ச்சி பெற்று இருக்கின்றன என்பதற்கு அடிப்படையாக இது ஒரு காரணமாக அமைந்து இருக்கிறது, என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மாநில மக்களின் வளர்ச்சி மாநில மக்களின் தேவைகள், அவர்களுடைய முன்னேற்றம், அந்த அடிப்படையில் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் மத்திய அரசாங்கம் முழுமையான நிதி ஆதாரங்களையும் தன்னுடைய கையிலே வைத்துக்கொண்டு ஒரு மாநிலத்திற்கும் மற்றொரு மாநிலத்திற்கும் ஒவ்வொரு நிலைமை, கொள்கை என்ற அடிப்படையில், அவர்களுடைய வளர்ச்சிக்குத் தேவையான நிதியைக் கொடுத்து, அவர்களுடைய வளர்ச்சிக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்காததன் காரணமாக அந்த மாநிலத்தில் இன்றைக்கு ஏற்பட்டு இருக்கும் நிலைமைகள் எல்லோருக்கும் தெரியும். அதே மாதிரி பல்வேறு வடகிழக்குப் பகுதியில் இருக்கும் பல்வேறு மாநிலங்கள்—குறிப்பாக நாகாலாண்டு போன்ற மாநிலங்களில் உள்ள விவரங்களை நாம் அனைவரும் அறிவோம்.

அத்தகைய சீர்குலைவு சக்திகளும், பிரிவினை வாதங்களும் ஏற்படுவதற்குக் காரணம் மத்திய அரசாங்கம், அரசியல் சட்டத்தின் அடிப்படையில் அவர்கள் பெற்று இருக்கும் அரசாங்கத்தை வைத்துக்கொண்டு அவர்கள் மாநிலங்களின் அதிகாரங்களில் குறுக்கிடுவதும், தலையிடுவதும், மாநிலங்களுடைய உரிமையில் குறுக்கிடுவது மட்டுமல்ல, அவர்களுடைய நலனை வைத்து மாநிலங்களுடைய வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்து, அதிலே குறுக்கிடுவது ஆகியவை இதற்குப் பொறுப்பாக இருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் நம்முடைய சட்டமன்றத்திலேகூட இம்மாதிரியான எண்ணங்கள் உருவாவதற்கு ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழகம்— ஒரே கழகமாக இருந்து செயல்பட்ட

நேரத்திலே—அறிஞர் அண்ணா அவர்களுடைய காலத்திலே—திராவிட நாடு பிரிவினையைக் கைவிட்டு கூடுதல் அதிகாரம் வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து, சட்டமன்றத் தேர்தலில் பங்கு கொண்டு ஆளும் கட்சியாக இருந்த நிலைமையையும், அதைத் தொடர்ந்து பல்வேறு சூழ்நிலைகளில் ஏற்பட்டு, இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்று இருக்கும் நிலைமை இருந்தாலும் மத்திய அரசாங்கம் இம்மாதிரியான அதிகாரங்கள் பரவலாக்கித் தருவதிலே முன்வரவில்லை என்பதையும் நாம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். நம்முடைய மாநிலத்தில் நாம் அனுபவித்துக் கொண்டு இருக்கிற வறட்சி, உணவுப் பொருள்கள் தட்டுப்பாடு, மாநிலத்திற்குத் தேவையான தொழில்களை தொடங்குவதால் உள்ள இடற்பாடுகள், வரிவிதிப்பில் மத்திய அரசிடமிருந்து நாம் பெறும் பங்கு, நாம் வரி விதிக்கக்கூடிய பொருள்கள் மேலே அவர்கள் வரி விதிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்வது போன்ற பல்வேறு விஷயங்களின் காரணமாக நம்முடைய மாநிலத்தின் வளர்ச்சி, தேவை பாதிக்கப்படுகிறது என்பது யதார்த்தமான உண்மை என்பதை நாம் பார்க்க முடிகிறது. ஆகையால்தான் இன்றைய தினம் இம்மாதிரியான ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான முறையிலே நாம் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். இன்றைக்கு வளர்ந்திருக்கிற, மாறுபட்டிருக்கிற சூழ்நிலையில் மற்ற மற்ற, இந்திய நாட்டிலிருக்கிற, மாநில அரசுகளுடைய ஒத்த கருத்து உள்ள அரசாங்கங்களையும் சேர்த்து இணைத்து இந்த மாதிரியான நிலையை உருவாக்குவதற்கு ஒரு நடவடிக்கை தேவைப்படுகிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து நான் குறிப்பிட விரும்புவது, பல்வேறு விஷயங்களில் எந்த எந்த அதிகாரம் மாநிலத்திற்கு, எந்த எந்த அதிகாரம் மத்திய சர்க்காருக்கு, எந்த எந்த அதிகாரம் இரண்டும் சேர்ந்து இருக்கிறது என்று அரசியல் சட்டம் 7 ஆவது ஷெட்யூலில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த லிஸ்டுகளை எல்லாம் பற்றி முழுமையாகப் பேசுவதற்கு, குறிப்புகளைத் தெரிவிப்பதற்கு நேரம் இல்லை. ஆக இவை அனைத்தையும் எடுத்துக் கொண்டு பார்த்தால், 7 ஆவது ஷெட்யூல்படி பார்த்தால், மத்திய அரசுக்கு கொடுத்திருக்கிற அதிகார ஆணைக்கு உட்பட்டிருப்பது 97 ஐட்டங்கள்; மாநில அரசுக்கு 67; மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இரண்டுக்கும் சேர்ந்து இருப்பது 47. எதையும் விட்டு வைக்கவில்லை. அதற்கெல்லாம் மேலாக, கடைசியாக எல்லாவற்றுக்கும் மேலாக இருக்கிற ஒரு கடுமையான நிலை அரசியல் சட்டம் 356-வது சரத்தில் இருக்கிறது.

## தென் மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் எடுக்கப்பெற்ற 31 முடிவுகள் குறித்த அறிக்கை—விவாதம்.

1983 மார்ச் 29] (திரு. இரா. கருப்பையா)

ஒரு மாநில அரசை ஜனநாயக முறைப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாநில அரசை; ஒரு சட்டமன்றத்தை மத்திய சர்க்கார் கலைக்கின்ற அதிகாரத்தை 356-வது பிரிவில் வைத்திருக்கிறார்கள். அதனால் 1957 ஆம் ஆண்டிலேயே முதன் முதலாக கேரளத்தில் இ.எம்.எஸ். நம்பூதிரிபாட் தலைமையில் ஏற்பட்டிருந்த ஆட்சி டிஸ்மிஸ் செய்யப்பட்டது. அதற்குப் பிறகு மேற்கு வங்கத்தில் கொண்டு வந்தார்கள். அதன் பிறகு நம்முடைய மாநிலத்தில் 1980 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலை ஒட்டி கொண்டு வந்தார்கள்; அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசை டிஸ்மிஸ் செய்தார்கள். இப்படி டிஸ்மிஸ் செய்வதற்காக வைத்திருப்பதுதான் 356-வது ஷரத்து. அந்த வகையில் நாம் பார்த்தால், இன்றைக்கு எப்போதும் கத்தி தொங்கிக்கொண்டே இருக்கும்; எந்த நேரத்தில் தலையிலே அல்லது கழுத்திலே விழும் என்று தெரியாது. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தித்தான் மத்தியிலே இருப்பவர்கள் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தைக் கூட கலைக்கும் நிலை ஏற்படுகிறது. இது ஜனநாயக விரோதமான அம்சம் மட்டுமல்ல; சர்வாதிகார நடவடிக்கைக்கு இடம் கொடுக்கும் அம்சம். இப்படிப்பட்ட சட்டங்கள் நம்முடைய அரசியல் சட்டத்தில் இருக்கின்றன என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே இந்த அடிப்படையிலே, இப்படி இருக்கிற நிலைமையிலே மாற்று நடவடிக்கைகளைத் தொடர்ந்து பல்வேறு சந்தர்ப்பங்களில் மத்திய மாநில உறவுகள் சம்பந்தமாக ஆய்வு செய்து கண்காணிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

1978 ஆம் ஆண்டில் மேற்கு வங்கத்தில் இருந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஜோதி பாசு தலைமையில் அமைந்திருந்த இடதுசாரி ஆட்சியில் இந்த மாநில உறவுகள் சம்பந்தமாக புதிய ஆய்வு மேற்கொண்டு மாற்றங்கள் செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று முறையிட்டு அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் அன்றைக்கும் அவர்கள் காதிலே வாங்கிக்கொள்ளவில்லை.

நாம் இன்றைய தினம் தென் மாநில முதலமைச்சர்கள் மாநாடு என்ற அடிப்படையில் தமிழ்நாடு, ஆந்திரம், புதுச்சேரி மற்றும் கர்நாடகம் ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்கள் கூடி, இந்த முடிவை எடுத்திருக்கிறார்கள்.

(முற்பகல் 11—40)

இது குறித்து கேரள மாநிலத்திற்கும் அழைப்பு விடப்பட்டது என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் கேரளத்தில் இருக்கிற அரசாங்கம் அரசியல் காரணங்களை வைத்து அதைப் புறக்க

கணித்திருக்கிறது. இன்றைய தினம் அந்த மாநாட்டினுடைய முடிவுகள் ஏற்கப்படுமானால், கேரள மாநிலத்திற்கும் அதன் மூலம் அதிகமான உரிமைகளும், அதிகமான நிதி பங்கீடும் பெற்றுத் தரக்கூடிய ஒரு வாய்ப்பாக இது இருந்தபோதிலும், அரசியல் காரணங்களை வைத்து இன்றையதினம் அந்த மாநாட்டினுடைய முடிவுகளை சிறுமைப்படுத்தி, அதற்கு எதிராக போர்க்கொடி உயர்த்துகிற முறையிலே நடவடிக்கை எடுத்திருக்கிறது.

ஏதோ முதன் முறையாக இப்போதுதான் இதுபோன்ற தென் மாநில முதல்வர்களின் மாநாடு நடந்திருக்கிறது என்று யாரும் கருத வேண்டாம். 1978 ஆம் ஆண்டு ஜூலை 16 ஆம் தேதியன்று ஒரு மாநாடு இதுபோலவே நடைபெற்றிருக்கிறது. 6 மாநிலங்களினுடைய முதல்வர்கள் அந்த மாநாட்டிலே அன்றையதினம் கூடினார்கள். அதில் தென் பகுதியிலே உள்ள மாநிலங்களுக்கு அதிக நிதி ஆதாரங்கள் பெறுவதும், மற்றும் சில பிரச்சனைகளைப் பற்றியும் முடிவு செய்து, தீர்மானங்கள் எடுக்கப்பட்டு, அந்த முடிவுகளை நம்முடைய மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களே மத்திய அரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். அந்த மாநாடு நடைபெற்ற நேரத்தில், காங்கிரஸ் கட்சியின் ஆட்சியிலே கர்நாடகமும் இருந்தது, ஆந்திரமும் இருந்தது. ஆனால் அந்த இரண்டு மாநில முதல்வர்களும் அந்த மாநாட்டிலே கலந்துக் கொண்டு, அது எடுத்த முடிவுகளை ஒப்புக் கொண்டு, அதனை மைய அரசுக்கு அனுப்பி வைப்பதில் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தார்கள். அன்றைக்கு அது சரியாக இருந்தது. இன்றைய தினம் அது சரியில்லை என்ற முறையிலே எதிர்த்து பேசக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆகவே, அந்த அடிப்படையில் இன்றைய தினம் மைய, மாநில அரசுகளுடைய உறவுகள் சம்பந்தமாக, நிதி ஆதாரங்களை சேகரிப்பது சம்பந்தமாக, மைய அரசாங்கத்திற்கு எவ்வளவு நிதி வசதிகளை ஏற்படுத்த வேண்டும், எந்தெந்த வருமானங்கள் மூலமாக ஏற்படுத்த வேண்டும், மாநில அரசாங்கங்களுக்கு எந்தெந்த வருமானங்களைப் பெற்றுத் தரவேண்டும் என்பது சம்பந்தமாகவும், மத்திய அரசாங்கத்திற்குக் கிடைக்கக்கூடிய மொத்த நிதியிலே, மாநில அரசாங்கங்களுக்கு எவ்வளவு பங்கீடு கொடுப்பது என்பது சம்பந்தமாகவும், இந்த மாநாட்டில் முடிவுகள் எடுக்கப்பட்டன. ஏற்கெனவே இது குறித்து [illegible] கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அது போதாது.

அரசியல் சட்டத்திலே இது சம்பந்தமாக ஒரு தெளிவான முடிவை ஏற்படுத்தி அதை இடம்பெறச் செய்ய வேண்டும். [illegible] கமிஷன் என்பது மத்திய அரசாங்கம் பார்த்து



நியமிக்கின்ற ஒன்றாகி விட்டது. தற்போது சமீபத்திலே ஒய். பி. சவான் அவர்கள் தலைமையிலே 8—வது நிதி ஆணைக் குழுவினை நியமித்திருக்கிறார்கள். ஆனால் எப்போதுமே இந்த நிதிக் கமிஷனில் மாநிலங்களுக்கு பிரதிநிதித்துவம் கிடையாது. அவர்கள் என்ன [illegible] பகுகிறார்கள், என்ன செய்கிறார்கள், [illegible] பிரிக்கிறார்கள் என்றெல்லாம் மாநிலங்களுக்கு எதுவுமே தெரியாது. மைய அரசுக்கு வரக்கூடிய மொத்த நிதி ஆதாரங்களை மட்டுமே கணக்கில் வைத்துக்கொண்டு, மாநிலங்களினுடைய தேவைகளைப் புறக்கணித்துவிடக்கூடிய முறையிலேதான், அந்த நிதிக் கமிஷன் தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வந்திருக்கிறது.

ஏழாவது நிதிக் கமிஷனுக்கு நம்முடைய அரசாங்கம் ஏற்கெனவே நம்முடைய மாநிலத்திற்குத் தேவையானதைக் குறித்து அறிக்கை கொடுத்திருக்கிறது. வருமானத்தைப் பங்கீடு செய்வது சம்பந்தமாக, ஜனத்தொகை அடிப்படையிலே 20 சதவீதம், [illegible] அடிப்படையிலே என்று பல்வேறு முறைகளை வைத்து வருமானம் அடிப்படையிலே [illegible] அவர்கள் பிரித்துக் கொண்டு வருகிறார்கள். மீண்டும் இப்போது 8-வது நிதிக் குழுவிற்கு நம்முடைய மாநிலத்தின் சார்பிலே நம்முடைய கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலேதான், இந்த தென் மாநில முதல்வர்களுடைய மாநாடு கூடி, தென் பகுதியிலே இருக்கிற [illegible] 4 மாநிலங்களும் ஒரே கருத்தை வலியுறுத்தி முடிவுகள் எடுக்கப்பட்டு அந்த அடிப்படையிலே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. [illegible]

அந்த அடிப்படையிலே எடுக்கப்பட்ட முடிவுகளை நிறைவேற்றுவதன் மூலமாக நம்முடைய மாநிலத்திற்கு அதிகமான பலன்களைப் பெற்றுத் தரக்கூடிய வாய்ப்பும் வசதியும் ஏற்படும் என்று குறிப்பிட விரும்புகிறேன். மற்றொரு விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைய தினம் இருக்கக்கூடிய சூழ்நிலையில், இன்றைக்கு இருக்கிற அரசியல் சட்டத்தை வைத்து, அதை அடிப்படையாக வைத்து மட்டும் மாநிலங்களுக்குத் தேவையான நியாயம் கிடைக்காது. அதிகமான நிதி ஒதுக்கீட்டைப் பெற முடியாது என்ற நிலைமையும் இருக்கிறது. ஆகவேதான், தேவைப்பட்டால் அரசியல் சட்டத்தைத் திருத்தக்கூடிய அளவிலே, நிதிக் குழுவிலே மாநிலங்களுக்குப் பிரதிநிதித்துவம் ஏற்படக்கூடிய முறையிலே நம்முடைய கருத்துக்களை வைக்க வேண்டும். [illegible] அந்த அடிப்படையிலே, அந்த நிதிக் குழுவில் மாநிலங்களினுடைய பிரதிநிதிகள் இடம் பெறச் செய்ய வேண்டும் என்று வற்புறுத்துவதை நம்முடைய கருத்தாகவும், கொள்கையாகவும் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே அந்த அடிப்படையிலே நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். [illegible]

இதே போல இன்றையதினம் மாநிலங்களுக்கு சட்டம் இயற்றக் கூடிய அதிகாரம் இருக்கிறது. நடைமுறையிலே நடப்பது என்ன? பின்பு ஒழிப்புச் சட்டம் ஒன்றை நாம் நிறைவேற்றி பாராளுமன்றத்தில் ஒப்புதலுக்காக, ஜனாதிபதியின் ஒப்புதலுக்காக அனுப்பி வைத்தோம். ஆனால் அதற்கு ஒப்புதல் அளிக்கப் படாமல், அப்படியே அது திருப்பி அனுப்பப்பட்டிருக் கிறது. நிறைவேற்றப்படவில்லை. இது எல்லாம் என்ன காரியங்கள் என்று புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு ஜனநாயக நாட்டில் உருவாக்கப்பட்ட அரசியல் சட்டம் நியமிக் கின்ற ஜனநாயக ஆட்சியில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சிக்கு வந்திருக்கும் ஒரு மாநில ஜனநாயக அரசு, தன்னுடைய மாநிலத்திற்குத் தேவையான ஒரு சட்டத்தை உருவாக்கி அனுப்பி யிருக்கிறது; அந்த சட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க முடியாது என்ற முறையிலே திருப்பி அனுப்பப்படுகிறது.

எனவே நாம் விரும்பக்கூடிய ஒரு மாற்றத்தை, அதாவது மாநிலத் திலே இருக்கின்ற மக்களின் நலனைப் பேணிப் பாதுகாப்பதற்குத் தேவையான ஒரு சட்டத்தை உருவாக்குவது என்ற நேரத்தில் அதற்காக குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுவது தேவை யில்லை என்ற அடிப்படையில் அரசியல் சட்டத்திலே அமைக்க வேண்டும். ஆனால் இப்போது இந்த மாநிலத்தில் கொண்டு வரப்படுகின்ற சட்டங்களைப் பொறுத்த வரையில் ஒரு குறிப் பிட்ட வகையான சட்டங்களுக்கு எல்லாம் அவர்களுடைய ஒப்பு தலைப் பெற்றாக வேண்டும் என்று இருக்கின்றது. அப்படி இருக் கக்கூடாது......(மணியடிக்கப்பட்டது).. இந்த விஷயத்தில் பேசுவதற்கு சற்று அதிகமான நேரம் தரப்பட வேண்டும். மான்யக் கோரிக்கையிலே பேசுகின்றபோது மணி அடிப்பது போன்று அடித்துக் கொண்டிருக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்): மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே 22 நிமிஷம் பேசியாகி விட் டது. எனவே சீக்கிரம் முடித்துக் கொள்ள வேண்டும்.

திரு. இரா. கருப்பையா : மாற்றுத் தலைவர் அவர்களே, எங்க ளுடைய கட்சியின் சார்பாக நான் கருத்துக்களைச் சொல்கி றேன். ஆகவே சற்று அதிக நேரம் கொடுங்கள்.

சட்டம் இயற்றுகின்றபோது அவற்றுக்கு ஒப்புதலைப் பெற வேண்டும் என்று இருக்கின்ற நிலைமையிலிருந்து ஒரு மாற்றம் தேவை. அப்படி அதிகாரங்கள் மத்தியிலே குவிக்கப்பட்டிருப்பது என்பது தேவையில்லை. ஆகவே அதிகாரங்களைப் பொறுத்த



வரையில் அரசியல் சட்டத்திலே மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும். மாநிலங்களுக்கும், மத்திய அரசிற்கும் இருக்கக் கூடிய பிரச்சனைகள் சம்பந்தமாக 7-வது ஷெட்யூலில் இருப்ப தைப் பொறுத்த வரையில் முழுமையாகத் திருத்தி அமைக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். இதிலே பிரதான மாக நாங்கள் வலியுறுத்தக்கூடிய விஷயம் என்னவென்றால் மாநிலங்கள் தங்கள் மக்களுடைய தேவைகளை, சேமநலத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பிலே இருக்கின்றன. ஆகவே அதற் காக மாநிலங்கள் தேவையான நிதியைப் பெறுவதற்கான முறை யிலே அதற்கான ஆதாரங்களைச் செய்து கொடுக்கக்கூடிய முறை யிலே அரசியல் சட்டத்திலே தேவையான மாற்றங்கள் கொண்டு வர ஏற்பாடு செய்ய வேண்டும். இன்றைக்கு இருக்கக்கூடிய சட்டங் களின் பிரிவுகளின் அடிப்படையிலே பல்வேறு வகையிலே அது குறைக்கப்படுகின்றது. ஆகவே மக்களுடைய சேமநலன்கள் புறக்கணிக்கப்படுகின்றன என்பதை நான் குறிப்பிடுகிறேன்.

அடுத்து கடைசியாக நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தென் மாநில முதல்வர்கள் மாநாட் டிலே வரி விதிப்பு சம்பந்தமாகவும் மற்றும் மாநிலங்க ளுக்கு ஆயத் தீர்வை சம்பந்தப்பட்ட வகையிலே கிடைக்க வேண் டிய பங்கு சம்பந்தமாகவும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அது 40- லிருந்து 50 ஆக உயர்த்தப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட் டிருக்கின்றது. அந்த அடிப்படையில் மாற்றம் தேவை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து வறட்சியினாலே நாம் பாதிக்கப்பட்டிருக்கிறோம். ஆனால் இன்றைய தினம் வரையில் நம்முடைய திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யக்கூடிய நிதியிலிருந்து வறட்சி நிவாரணத்திற்குச் செலவு செய்து கொள்ளுங்கள் என்ற அடிப்படையில்தான் நிவாரணத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. ஆகவே அந்தக் கொள்கை மாற்றப்பட வேண்டும். அந்தக் கொள்கை கைவிடப்பட வேண்டும். நிவாரணம் சம்பந்தப்பட்ட வரையில் 75 சதவீதம் மானியமாக மத்திய அரசு கொடுக்க வேண்டும் என்று இந்த மாநாட்டிலே ஒரு முடிவு எடுக்கப்பட்டி ருக்கின்றது. வெள்ளம் சம்பந்தப்பட்ட வரையில் 100 சத வீதம் மானியமாகக் கொடுக்க வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட் டிருக்கின்றது. அதேமாதிரி திட்டங்களுக்கு செய்யப்படுகின்ற உதவி சம்பந்தமாக காட்கில் கமிட்டி செய்த முடிவின் அடிப்படை யிலேயே இன்றைக்கும் செய்வது என்ற நிலைமையில் இருப்பதை மாற்றியமைக்க வேண்டும். வருமானத்தைப் பெருக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். வேளாண்மை உற்பத்திப் பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்கின்ற அந்த அதிகாரம் மாநிலங்களுக்கு இருக்க வேண்டும் என்றெல்லாம் இந்த அறிக்கை

(திரு. இரா. கருப்பையா) [1983 மார்ச் 29

யிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அந்த அடிப்படையிலே எடுக்கப்பட்ட முடிவுகள் மாநிலத்தினுடைய [illegible] காரத்தைப் பெருக்கிக் கொள்வதற்கும் மாநில மக்களுடைய [illegible] நிலைகளைப் பூர்த்தி செய்வதற்கும் தேவையான [illegible] வகையில் இருக்கும் [illegible] கூறுகின்ற இதை நான் வரவேற்கின்றேன் [illegible] அமைப்பிலே மாற்றங்கள் [illegible] வேண்டும் [illegible]

[illegible]



1983 மார்ச் 29] [திரு. இரா. கருப்பையா]

அடிப்படையில் தேவையான மாற்றங்களைச் செய்வதற்கான முறையில் வழிவகைகளை ஏற்படுத்தக் கூடிய முறையில் அந்த சர்க்காரியா கமிஷன் டெம்ஸ் ஆப் ரெஃபரன்ஸ் இருக்க வேண்டும் என வலியுறுத்த வேண்டும். அது செய்யப்படுகின்ற வரையில் இந்தக் கமிஷன் நியமனம் [illegible] நின்றாது. ஏற்கெனவே [illegible] கமிஷன்கள் நியமித்து இருக்கிறார்கள்—ஆகவே அந்த அடிப்படையில்தான் இதனுடைய முடிவுகள் எதுவாக இருந்தாலும் இன்றைய [illegible] வளர்ந்து வந்து இருக்கின்ற 32 ஆண்டுகளுக்குப் பிறகு தேசம் குடியரசு ஆன பிறகு, நம்முடைய நாடு சுதந்திரம் பெற்ற பிறகு, நம்முடைய தேசத்திலே ஏற்பட்டு இருக்கின்ற மாற்றங்களை சரியான முறையில் புரிந்து கொண்டு நம்முடைய தேசத்தினுடைய தேசிய ஒருமைப்பாட்டையும், ஒற்றுமையையும் ஜனநாயகத்தையும் வலுப்படுத்தக்கூடிய முறையில் தேவையான மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்றால் முழுமையான மத்திய மாநில அரசுகளின் உறவுகள் சம்பந்தமாக அடிப்படையாக முழுமையான ஆய்வு செய்து மாநில அரசாங்கங்களுடைய நிதி ஆதாரங்களை மேலும் பெருக்குவதற்கான முறையில் அதற்கான நடவடிக்கைகளை எடுப்பது அவசியம் என்கிற அந்தக் கண்ணோட்டத்தோடு மாறுதல் செய்யப்பட வேண்டும் என்ற அடிப்படையில் செய்யக்கூடிய மாறுதல்கள் தான் இந்தியாவிலேயே ஒரு நிரந்தரமான தீர்வையும் பிரச்சினைக்கு முடிவையும் ஏற்படுத்தக்கூடிய முறையில் அமையும் என்ற காரணத்தினாலே இன்றைய தினம் பெங்களூரிலே கூடியிருக்கின்ற தென் மாநில முதலமைச்சர்கள் மாநாடு—அது ஏற்கெனவே கூடி முடிந்து விட்டது என்ற நிலையில் இல்லாமல் இந்த மாநாட்டின் தொடர்ந்து மேலும் நடவடிக்கைகளை எடுத்து இதே மாதிரியான கருத்துக்களை [illegible] மற்ற மாநிலங்களையும் [illegible] இணைத்து அனைத்து மாநில முதலமைச்சர்களையும் இந்தக் கருத்திற்கு இணக்கம் ஏற்படுத்தக்கூடிய முறையிலே ஒரு நிலையை எடுத்து நம்முடைய தமிழக அரசு செயல்பட வேண்டும் என்று வற்புறுத்தி, என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம். [illegible]

* திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு [illegible] தலைவர் அவர்களே, அண்மையில் பெங்களூரில் கூடிய [illegible] முதலமைச்சர்களுடைய மாநாட்டிலே ஏற்றுக் [illegible] கருத்துக்கள் [illegible] தொடர்ந்து [illegible] மன்றத்திலே வைக்கப்பட்ட குறிப்புகள் [illegible] பேரவையினுடைய 77-வது விதியின் கீழ் [illegible] திரு. உமாநாத் அவர்கள் கொண்டு வந்து இருக்கின்ற இந்த தீர்மானத்தின் மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் [illegible] என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். **
[illegible]

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1983 மார்ச் 29

இந்த விவாதத்திலே மேலும் பேசுவதற்கு முன்னாலே எங்கள் கட்சியின் சார்பிலே எடுத்த முடிப்பிலே இந்தத் தீர்மானத்தை நாங்கள் எதிர்க்கிறோம் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் தீர்மானம் இப்போது உள்ள சூழ்நிலையிலே தேவையற்ற ஒன்று, அவசியம் இல்லாத ஒன்று என்று நான் மேலும் குறிப்பிட விரும்பு கிறேன். மைய அரசு அண்மையிலே மாநிலங்களுக்கும், மத்தியில் இருக்கின்ற அரசுக்கும், இருக்கின்ற உறவுகளைப் பற்றி ஆய்வு செய் வதற்காக சர்க்காரியா அவர்கள் தலைமையிலே ஒரு கமிஷனை நிய மித்து இருக்கிறது. இந்த சூழ்நிலையிலே இந்தத் தீர்மானம் இப் போது கொண்டுவர வேண்டிய அவசியம் அவசரம் இல்லை என்று நான் தெரிவிக்கவிரும்புகிறேன். இந்த ஒரு நபர் கமிஷனிலே மேலும் ஒன்று இரண்டு உறுப்பினர்கள் மேதைகள், அறிஞர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் இந்தியாவின் பிற பகுதியில் இருந்து என்ற கருத்துக்கள் கூட இன்றைக்கு வந்திருக்கின்றன. இந்தத் தீர் மானத்தினை மொழிந்து பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் தனக்கே உரித்தான பாணியிலே பல வேறு கருத்துக்களை சொன்னார்கள். அதிலும் மத்திய அரசைப் பற்றி இன்னும் குறிப்பாக, காங்கிரஸ் பேரியக்கத்தைப் பற்றிக் கூறுகிற நேரத்திலே அவர்கள் மிக சாகஸமாக கடுமையான வார்த்தைகளைக்கூட உபயோகித்தார்கள் என்று கருதுகிறேன். கழுதையை நறிப்பதாகவும் நரி, கோழி கதையைக் கூட அவர்கள் சொல்லிவிட்டு ஏதோ எங்கோ இருக்கிற குரலின் பிரதிபலிப்பாக, ஒலிபரப்பாக ஹிஸ் மாஸ்டர்ஸ் வாயிஸ் என்று கூட அவர்கள் சொன்னார்கள் என்று நான் கருதுகிறேன். ** குரலாக இருப்பதைவிட டெல்லியின் குரலாக இருப்பதிலே நாங் கள் என்றைக்கும் பெருமைப்படுகிறோம் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. என். சங்கரய்யா: பாயின்ட் ஆப் ஆர்டர், இந்தியாவிலே, இருக்கக்கூடிய பிரச்சினைகளைப்பற்றி எங்கள் கட்சியைப்பற்றி அவர்கள் பேசினால் பரவாயில்லை. **பற்றிப் பேசினார்கள்** அடிப்படையான கையாட்கள், டாடா பிர்லாவின் கையாட்கள், இந்திய நிலப்பிரபுக்களின் கையாட்கள், ஆகிய பெரு முதலாளி களுடைய கட்சியாகிய காங்கிரஸ் கட்சியின் பிரதிநிதி என்று நான் சொல்வேன். (கூச்சல்—குழப்பம்).

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது** குரலாக நாங்கள் இங்கே பிரதிபலிக்கவில்லை. மத்தியிலே இருக்கிற நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட நம்முடைய அரசின் குரலை ஒலிப்பதிலே எங்களுக்கு ஒன்றும் தயக்கம் கிடை யாது என்று சொன்னால்** என்று சொன்னால் இவருக்கு ஏன் கோபம் வருகிறது என்று புரியவில்லை (கூச்சல்—குழப்பம்).

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1983 மார்ச் 29]

திரு. என். சங்கரய்யா : திரு. கருணாகரன் அவர்கள் அந்த மாநாட்டிற்கு வராமல் போனது டெல்லியிலிருந்து வந்த உத்தரவின்படிதான் என்று சொன்னார்கள். அதை இல்லை என்று அவர்கள் மறுக்கவேண்டும். அதற்கு எதற்கு வெளிநாட்டிற்குப் போகிறார் என்று கேட்கிறேன். அதற்கு நாங்கள் பதில் அளிக்கக் கடமைப்பட் டிருக்கிறோம். எதைப்பற்றியும் நாங்கள் பயப்படவில்லை. அவர்கள் திசை திருப்ப வேண்டாமென்று கேட்டுக் கொள் கிறேன். இங்கே மாநில சுயாட்சி பற்றி நான்கு மாநில முதல் வர்கள் மாநாட்டைப்பற்றி காங்கிரஸ் கட்சி எதிர்ப்பதற்கு வக்கு இருந்தால் எதிர்க்கட்டும். (கூச்சல்-குழப்பம்).

திரு. என். எஸ். வி. சித்தன்: நான் இதை வன்மையாகக் கண்டிக் கிறேன். பொதுவுடமைக் கட்சித் தலைவர் எதை வேண்டு மானாலும் பேசலாம், அதைக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டுமென்பதற்காக நான் இங்கு வரவில்லை. அவர்கள் பேசுகிறபோது மிகக் கடுமையான சொற்களைச் சொன்னார்கள். நாங்கள் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தோம். எதற் கொடுத்தாலும் தலையிடுவது என்றால் நாங்கள் வேறு முடிவு எடுக்க வேண்டி வரும். (கூச்சல்-குழப்பம்)

திரு. என். சங்கரய்யா : பாயின்ட் ஆப் ஆர்டர். எங்களைப் பற்றி **என்று சொன்னால் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை** என்று சொல்வதாகத்தான் அர்த்தம். ஆகவே நான் ஆட்சேபிக் கிறேன். அப்படிச் சொன்னால் அதற்குப் பதில் சொல்லவேண்டி யிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: அவர்கள் கட்சியினுடைய துணைத் தலைவர் இருக்கிறார். அவர் பதில் சொல்லட்டுமே. நீங்கள் சொல்கிறபோது நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கவில்லையா? (குறுக்கீடுகள்) வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி பற்றி நான் எதுவும் சொல்லவில்லை. இந்த நாட்டிலே இருக்கிற....

திரு. ரா. உமாநாத் : எனக்குப் பதில் சொல்வதற்கு அவர்க ளுக்கு உரிமை இருக்கிறது. ஆனால்**என்று சொன்னால் ** அது சரியல்ல. அதை எக்ஸ்பஞ்ச் பண்ண வேண்டும் (குறுக்கீடு)

திரு. என். எஸ். வி. சித்தன் : நான் ** என்று சொல்லவே இல்லை.

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்): அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலே இருக்குமானால் நீக்கப்படும்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாஷெரீப் : ** என்று சொல்லவில்லை. குற்றமுள்ள மனது குறுகுறுக்கும் என்று சொல்வார்கள். இவருக்கு ஏன் மனதிலே குறுகுறு என்று தோன்றுகிறது ?

(நண்பகல் 12-00)

(மாண்புமிகு பே. வைத் துணைத் தலைவர் தலைமை)

(கூச்சல்— குழப்பம்)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சித்தன் அவர்கள் அப்படிக் கருத்துப்பட சொல்லவே இல்லை; அப்படிப்பட்ட பொருளிலே குறிப்பிடவில்லை என்று குறிப்பிட்டதன் காரணமாக அந்த நாம் ஏற்றுக்கொள்ளலாம். மாண்புமிகு உமாநாத் அவர்கள் சொன்னதைப்போல, அவர் கதை சொன்னால் அந்தக் கதைக்குக் கதை சொல்லலாம். அதிலே தவறு ஒன்றும் கிடையாது. ஆனால் நோக்கம் கற்பிக்கக் கூடாது. அதில் நோக்கமில்லை என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே நோக்கத்தை விட்டுவிட்டு கருத்துக்களை பரிமாறிக் கொள்வதிலே தவறு இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கமானது இந்திய சமஷ்டி அரசியலில் மாநிலங்கள் நன்மையில், வளர்ச்சியில் முறையாக அக்கறை கொண்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் மீண்டும் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னாலே, தமிழகத்தின் மீது பல்வேறு காலக்கட்டங்களில் விசேஷ அக்கறை கொண்டிருக்கிறார்கள். நேற்றைய தினம் கூட வறட்சி நிலையைப் பார்ப்பதற்காக அவர்கள் ஓடோடி வந்திருக்கிறார்கள். நமக்குத் தெரியும். இந்தியாவில் நான்கில் மூன்று பங்கு பகுதியில் வறட்சி இருந்தாலும், தமிழக மக்கள் மீது அக்கறை கொண்டு நாம் கூப்பிட்ட குரலுக்கு வந்து, இங்கே பல்வேறு நல்ல அறிவிப்புகளைச் சொல்லியிருக்கிறார்கள்.

உலகத்திலே மிகப் பெரிய ஜனநாயக நாடு என்று நம்முடைய நாட்டிற்குப் பெருமை உண்டு. இந்தப் பெரிய ஜனநாயக நாட்டில் இருக்கிற மத்திய அரசாங்கம் ஒரு வலுவுள்ள அமைப்பாக இருக்க

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





வேண்டும். மத்திய அரசு பலவீனப்படுமேயானால், நம்மையெல்லாம் சேர்த்து காத்துக் கொண்டிருக்கிற மத்திய அரசு பலவீனப்படுமேயானால் நம்முடைய முயற்சிகள் வெற்றி பெறாமல் போவதோடு, நம் அண்டையிலே இருக்கிற அரசுகள், அண்டையிலே பல்வேறு நிலைகளில் இருக்கிற ஆட்சிகளின் முயற்சியினால் நாம் நம்முடைய முயற்சியில் வெற்றி பெறாமல் போவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன நாம் சமஷ்டி அரசியலில் இருக்கிறோம்; நம்மாலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மத்தியிலே ஆட்சியிலே இருக்கிறார்கள்; எனவே நம்முடைய எண்ணங்கள், வாதங்கள் எல்லாம் அந்த மத்திய அரசிற்கு வலுவூட்டுவதாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாடு துண்டாடப்படுகிற நிலையை, எந்த நிலையில் இருந்தாலும் சரி, எந்த ரூபத்தில் வந்தாலும் சரி, நாம் நிச்சயமாக அனுமதிக்க முடியாது.

பெங்களூரிலே கூடிய தென் மாநிலங்களின் முதலமைச்சர்கள் தங்கள் பிரச்சனைகளை மத்திய அரசின் முன்வைத்து, பேசுவதற்கு என்று சொன்னால் அது கடுமையாக இருக்குமாகையால், முன்னாலே வைத்துப் பேசியிருக்கிறார்கள். அந்த முடிவிற்கு வந்து தென் மாநில முதலமைச்சர்களின் கூட்டமைப்பாக ஏற்பட்ட வழிவகை இருக்கிறது; இந்தக் கூட்டத்திலே தமிழகம், ஆந்திரம், கர்நாடகம், பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களுடைய முதலமைச்சர்கள் பங்கு கொண்டிருக்கிறார்கள். கேரள மாநில முதலமைச்சர் இதிலே பங்கு கொள்ளவில்லை. இட்டத்தட்ட தென்னகத்து மாநிலம் என்று சொல்லப்படக்கூடிய மராட்டியம் மாநிலத்தின் முதலமைச்சர் அவர்கள் இதிலே பங்கு பெறவில்லை. அப்படிச் சொல்கிறபோது, எனக்கு முன்னாலே பேசியவர்கள் எல்லாம் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நாங்கள் என்னென்ன வாதங்களை வைக்க முடியுமோ, அதையெல்லாம் முன்னால் வைத்துப் பதில் சொல்லியிருக்கிறார்கள். சட்டமன்றப் பேரவை நடந்து கொண்டிருப்பதாலே அவர்கள் கலந்து கொள்ளவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதையே நாங்களும் சொல்கிறோம். இவ்வளவு அவசரமாக முதல்வர் கூட்டம் கூட்டப்பட வேண்டிய அவசியம் என்ன ? இன்னும் கொஞ்சம் அவகாசம் கொடுத்து பிற முதல்வர்களையும் அழைத்து என்ன பதில் சொல்கிறார்கள் என்று கேட்டிருக்கலாமே ? இவ்வளவு அவசரமாகக் கூட்டுவதற்கு அவசியம் என்ன வந்தது என்பதை எங்களுடைய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே கேட்க ஆசைப்படுகிறேன். இந்தக் கூட்டமைப்பு, முதலமைச்சர்களின் பூர்வாங்கக் கூட்டம் என்னும் ஒருமித்த கோட்பாடிலே இருப்பதைக் குறிப்பில் பார்க்கிறேன். முதலமைச்சர்களின் பூர்வாங்கக் கூட்டம் என்று சொன்னால் இந்தியாவில் இருக்கிற எல்லா முதலமைச்சர்களுக்கும் ஏன் அழைப்பு அனுப்பவில்லை ? அழைப்பு விடுத்து அவர்கள் கருத்து கேட்கப்பட்டிருந்தால் நாங்கள் பேசுவதற்கு நிறைய இ

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1983 மார்ச் 29

இருக்கும். அப்படியில்லாமல் மத்திய அரசிற்கு எதிராக நீங்கள்
தென்னகத்து முதலமைச்சர்கள் ஒன்றுகூடிப்பேசுகிறீர்களோ என்ற
ஐயத்திற்குதான் எங்களால் வரமுடிகிறது. இன்று காங்கிரஸ்
கட்சியினால் நடத்தப்படும் மத்திய அரசிற்கு முரணான எதிர்ப்பு
மனப்பான்மையில்தான் இதிலே கலந்து கொண்டிருக்கிறார்கள்
என்று நாங்கள் எண்ணுவதற்கு இடம் இருக்கிறது என்பதைச்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த முதலமைச்சர்களின் அணி
எதற்காகத் திரட்டப்பட்டிருக்கிறது என்பது தெரியும். நம்முடைய
அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி, முன்னாலே சொன்னதைப்
போல, நம்முடைய அரசு சமஷ்டி ஆட்சிக்கு உட்பட்டதாகும்.
இதிலே தமிழ்நாடு என்பது ஒரு பாகம்—ஆங்கிலத்தில் ஒரு யூனிட்
என்று சொல்வார்களே; அதைப்போல் ஆந்திரம், கர்நாடகம்,
பாண்டிச்சேரி, தமிழகம் சேர்ந்தது இந்தியாவினுடைய ஒரு பகுதி
என்று நாம் அறிவோம். இதில் தனிப்பட்ட மாநிலத்தின்
பிரச்சனையாக இருந்தாலும், ஒன்றிற்கு மேற்பட்ட மாநிலங்
களுடைய பிரச்சனையாக இருந்தாலும் சரி, இந்தியப் பொது
நலத்திற்கு, ஒருமைப்பாட்டிற்கு ஏற்ப முடிவு எடுக்க வேண்டுமே
தவிர, மத்தியிலே இருக்கிற அரசு ஏதோ வேண்டாத அரசு
போலவும், தீண்டத்தகாதவர்கள் என்பது போலவும் தென் மாநில
முதலமைச்சர்கள் கூடி பேசி முடிவு எடுத்தது எப்படி பொருத்
தமானதாக இருக்கும் என்று கேட்க விரும்புகிறேன். மத்திய
அரசினுடைய அனுமதி இல்லாமல், அல்லது மத்திய
அரசைக் கலக்காமலே, நம்முடைய தென்மாநில முதல்
அமைச்சர்கள் கூடி, ஆலோசனை செய்தார்களானால், பிரச்சனை
களுக்கு எப்படித் தீர்வு காணமுடியும் என்ற வினாவை என்னாலே
கேட்காமல் இருக்கமுடியவில்லை. பொதுப்பிரச்சனைகள் ஒரு
இல மாநிலங்களுக்கோ அல்லது பல மாநிலங்கள் சம்பந்தப்பட்டோ
இருக்கலாம் என்றாலுங்கூட, அவைகளுக்குத் தீர்வு காண
மத்திய அரசு இந்திய அரசியலமைப்பிலே 263-வது பிரிவின்படி
மத்திய மாநில கவுன்சிலை அமைக்க வேண்டுமென்று விதி
இருக்கிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலே மாநிலப்
பிரச்சனைகளுக்கும், மத்திய மாநிலப் பிரச்சனைகளுக்கும் தீர்வு
காண இன்டர் ஸ்டேட் கவுன்சில் அமைக்க வேண்டுமென்ற விதி
முறைகள் இருக்கும்போது, தனியாக மத்திய அரசைப் புறக்
கணித்துவிட்டு, ஒரு குழு அமைப்பது அரசியல் அமைப்புச்
சட்டத்திற்கு முரணானது. Ultra "vires of the Constitution—
Unconstitutional" என்று சொன்னால் அது தவறாகாது என்று
கருதுகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர்
பேசும்பொழுது கூடச் சொன்னார் இண்டர் ஸ்டேட்
கவுன்சில் எப்பொழுதோ ஒருமுறை கூடுகிறார்கள், ஏதோ



1983 மார்ச் 29] [திரு. என். எஸ். வி. சித்தன்]

தீர்மானம் போடுகிறார்கள், என்று. ஏன், அதைப் பயன்படுத்தி
இருக்கலாமே என்கிற வினாவை நான் உங்கள் முன்னால் வைக்க
விரும்புகிறேன். அதைக் கூட்டுமாறுச் சொல்லி, இருக்கக்கூடிய
பிரச்சனைகளைத் தீர்த்து வைக்க முயற்சிக்கலாமே, ஏன் அதைச்
செய்யக்கூடாது என்கிற வினாவை என்னாலே இந்த நேரத்திலே
கேட்காமல் இருக்க முடியவில்லை. இந்திய அரசியல் சட்டத்
திலே இடம்பெறாத விஷயங்களுக்காக நடவடிக்கை எடுக்கவோ
ஆணை பிறப்பிக்கவோ அல்லது முடிவு எடுக்கவோ, மத்திய
அரசினால்தான் முடியும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதைத்தான் 'ரெசிடுவரி பவர்ஸ்' என்று பிரிவு 248-ன்படி
நாம் கூறுகிறோம். அதுமட்டுமல்லாமல், ஸ்டேட் லிஸ்ட்,
யூனியன் லிஸ்ட், கன்கரன்ட் லிஸ்ட் ஆகிய இந்த மூன்றிலும்
இடம்பெறாத அதிகாரங்கள் விதி 97-ன்படி மத்திய அரசையே
சாரும். அப்படியிருக்க தென் பிராந்திய முதலமைச்சர்கள் எந்த
அதிகார அடிப்படையிலே இந்த அமைப்பை ஏற்படுத்தி இருக்
கிறார்கள். கூட்டு விவாதத்திற்காக இந்த அமைப்பை ஏற்படுத்த
வில்லை; மத்திய அரசாங்கத்தோடு மோதுவதற்காக அல்லது
மாண்புமிகு பாரதப் பிரதமர் இந்திராகாந்திக்கு எதிராகக்
கூட்டப்பட்ட கூட்டமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

ஏற்கனவே ஒரு Zonal Council இருக்கிறது. மத்திய உள்துறை
அமைச்சர் அவர்கள் அந்த கவுன்சிலின் தலைவராக இருக்கிறார்.
ஒவ்வொரு மாநில வளர்ச்சியின் முன்னேற்றத்தைக் கருத்தில்
கொண்டு அந்த சோனல் கவுன்சில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.
அரசியல் சட்டத்தின் 248-வது விதிப்படி அது செயலாற்றுகிறது.

தென் மாநில முதலமைச்சர்கள் பெங்களூரில் கூடியபொழுதுத்
தங்களுடைய பொதுப்பிரச்சனையை ஆராய்வதற்காகக் கூடியிருக்
கிறார்களா என்று நான் கேட்கிறேன். அப்படிக் கூடியிருக்கும்
நேரத்திலே நீண்டநாள் தீர்வு காணப்படாமல் இருக்கும் காவிரி
நதிப் பிரச்சனைபற்றி பேசினார்களா? அல்லது ஆந்திராவிலே
யிருந்து தமிழகத்திற்கு வரவேண்டிய கிருஷ்ணா நதி பற்றி பேசி
யிருப்பார்களானால் அது வரவேற்கத்தக்கதாக இருந்திருக்கும்.

ஒவ்வொரு ஆண்டிலும் பல முறை நேஷனல் டெவலப்
மென்ட் கவுன்சில் என்று கூறப்படும் முதலமைச்சர்கள் கூட்டம்
டெல்லியிலே பாரதப் பிரதமரால் கூட்டப்படுகிறது. மாநில
முதலமைச்சர்கள் தங்களுக்குள்ள பிரச்சனைகளைப்பற்றிக் கூடிப்
பேசி முடிவெடுக்க, இரண்டு சோனல் கவுன்சில்களும், ஒரு

என்.டி.சி. கவுன்சிலும் இருக்கிறது. அப்படி நிறைய வாய்ப்புகள் இருக்கும்போது, முதலமைச்சர்கள் கூடிப்பேச ஒரு தனி அமைப்பு தேவைதானா? நீங்கள் தென் மாநில முதலமைச்சர்கள் கூட்டம் என்று கூறிக்கொள்கிறீர்கள். அதையே முன் உதாரணமாகக்கொண்டு, நாட்டின் பல்வேறு பகுதிகளிலே இருக்கின்றவர்கள், அது மாதிரியாக, தனித்தனி அமைப்பாகக் கூட ஆரம்பிப்பார்களானால், இந்த நாட்டினுடைய ஒருமைப்பாடு, ஒற்றுமை சிதறுண்டு போகாதா என்று நான் கேட்க விரும்புகிறேன். அது மறைமுகமாகத் தேசப் பிரிவினைக்கு வித்திடுவதாக அமைந்து விடக்கூடாது என்ற காரணத்தினாலே நான் இதைச் சொல்ல விரும்புகிறேன்.

பெங்களூரில் கூடிய முதலமைச்சர்கள் மைய-மாநில உறவுகளுக்காக, மைய அரசியலமைப்பையே மாற்ற வேண்டுமென்று கருத்து தெரிவித்திருப்பதாக நான் அறிகிறேன். அரசியல் அமைப்பை மாற்றுவது என்பது வேறு. மத்திய மாநில அரசுகளுக்கிடையே உறவுகளைச் சீரமைப்பது என்பது வேறு. உண்மையிலே, அரசியலமைப்புச் சட்டப்படி, மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் அனைத்தும் மாநிலங்களின் நன்மைக்காகப் பயன்படுத்தப்பட்டு விட்டனவா என்பதை இந்த அரசு ஆய்வு செய்துள்ளதா என்று நான் கேட்க விரும்புகிறேன். இங்கே மத்திய அரசாங்கத்திடமிருந்து அதிக அதிகாரம், அதிக நிதி ஆதாரம் கேட்கின்ற இதே வகையில், இந்த அரசின் கீழே இருக்கிற ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், மாநகராட்சிகள் ஆகியவற்றிற்கு இந்த அரசாங்கம் தன்னுடைய கையிலே இருக்கிற அதிகாரம் எதையாவது பிரித்துக் கொடுத்திருக்கிறதா? தன்னிடம் இருக்கின்ற நிதி ஆதாரங்களை, அந்த உள்ளாட்சி மன்றங்களுக்காக அரசாங்கம் இன்றைக்கு முன்னாலே இல்லாத அளவிற்கு எப்போது அதிகமாக ஒதுக்கிக் கொடுத்திருக்கிறது என்ற கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-10)

பெங்களூரிலே கூடிய கூட்டம் மத்திய-மாநில உறவுகளை சீர்படுத்தவோ, புதுப்பிக்கவோ, சுமுகமான உறவுமுறை ஏற்படுத்துவதற்காகவோ கூட்டப்பட்ட கூட்டம் அல்ல. அவர்களுடைய செய்கை அந்தக் கூட்டத்திலே ஏற்படாது என்ற காரணத்தினாலேதான் கேரள முதலமைச்சர் அவர்கள் அந்த அமைப்பிலே கலந்து கொள்ளவில்லை என்று நாங்கள் கருதுகிறோம். இது மாநிலங்களிடையே உள்ள உறவுகளை, இணைப்புகளை, பிணைப்புகளை மேலும் உறுதிப்படுத்துவதற்காக கூட்டப்பட்ட கூட்டம் இல்லை என்பதை மீண்டும் நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



இந்தியா முழுமையும் ஒரு அமைப்பு என்ற கருத்திலே ஆழமான நம்பிக்கை உடையவர்கள் நாங்கள். எனவே மத்திய அரசு நம்முடைய அரசு. இந்தியாவிலுள்ள எல்லா பாகமும் வளர்ச்சியடைய வேண்டுமென்று நம்புவது பொருத்தமாக இருக்கும். வருமான வரி, மேல் வரி, ஆயத்தீர்வை போன்ற வருமானங்களிலே, இந்த மாநில முதல்வர்கள் கூடிய கூட்டத்திலே தன்னுடைய பங்கு அதிகமாக வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி ஒருமித்த கருத்து சொன்ன நேரத்திலே, மத்திய அரசாங்கத்திற்குப் பல்வேறு கடமைகள் இருக்கின்றன. எந்தக் கடமையைக் குறைத்துக்கொண்டு, அதன் மூலமாக நம்முடைய மாநிலத்திற்கு வரவேண்டிய பங்கை அதிகமாகப் பெறலாம், எந்தச் செலவுகளை மத்திய அரசாங்கம் எடுத்துக்கொள்ளலாம், மாநில அரசாங்கத்திற்கு எதைக் கொடுக்கலாம் என்ற யோசனையைச் சொல்லியிருப்பார்களேயானால், அது பொருத்தமாக இருக்கும். ஏதோ மத்தியிலே இருக்கின்ற அரசாங்கம் ஒவ்வொரு ஆண்டும் கூடி, உபரி பட்ஜெட் என்று போடுவதைப் போல, மத்திய அரசாங்கத்திடம் நிதியாதாரங்கள் நிறைய இருப்பதைப்போல, இன்றைக்கு மாநில அரசாங்கங்கள் தான் கஷ்டப்படுவதைப்போல, ஒரு நிலையைச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசாங்கமும் பற்றாக்குறை பட்ஜெட் போடுகிறார்கள், மத்திய அரசாங்கமும் உலக வங்கியிடமிருந்து கடன் வாங்க வேண்டியிருக்கிறது. மத்திய அரசாங்கம் பல நிதிக் கஷ்டங்களைப் பெறுகிற நிலையிலே, இப்படி மாநிலங்கள் அதிகமாகக் கேட்பதாலே, மத்திய அரசாங்கத்திற்கான எந்தெந்த முறைகளிலே செய்து கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருப்பார்களேயானால், அதை நாம் பரிசீலித்து இருக்கலாம் என்று நான் சொல்லவிரும்புகிறேன்.

அதைப்போலவே நம்முடைய அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குட்பட்ட அதிகாரங்களிலும், மாநில அரசாங்கத்திற்குட்பட்ட அதிகாரங்களிலும், மத்திய—மாநில அரசாங்கங்களுக்குட்பட்ட அதிகாரங்களிலும் அரசியல் அமைப்புப்படி பிரிவுகள் இருக்கின்றன. பேரவைத் தலைவரவர்களே, நான் உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புவது, நம்முடைய அரசாங்கம்—ஸ்டேட் லிஸ்டு என்று சொல்வார்களே—லிஸ்டு 2—வதிலே பிரிவுகள் 7, 9, 25, 27, 31, 37, மற்றும் 39 ஆகிய இனங்களிலே இன்னும் அதிக அதிகாரங்களைச் செலுத்துவதற்கான இடம் இருக்கிறது. ஆக நமக்கு இருக்கின்ற அதிகாரங்களை முழுமையாகப் பயன்படுத்தியிருக்கிறோமா? பக்கத்திலே இன்றைக்கு இருக்கின்ற ஆந்திர அரசாங்கத்திலே கூட, 3 ஆவது ஸ்டேட்மெண்ட் 34 பிரிவுக்கு ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படி நாம் இருக்கின்ற அதிகாரங்களை இன்னும் பயன்படுத்த

வேண்டியிருக்கின்ற நிலையிலே இன்றைக்கு மேலும் அதிகாரம் கேட்பது, அதை எந்த அளவிற்குச் செயல்படுத்தப் போகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. வறட்சியும், பற்றாக்குறையும் நிலவிக் கொண்டிருக்கிறது. அந்த வறட்சியும், பற்றாக்குறையும், இயற்கையினாலே வந்ததா அல்லது இந்த அரசாங்கத்தினுடைய இயலாமையாலே வந்ததா?....(குறுக்கீடு)....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வறட்சியில் மழை வராது...

திரு. என். எஸ். வி. சித்தன் : ஆக இந்த அரசாங்கத்தினுடைய இயலாமையாலே, தொலைநோக்கு இல்லாத காரணத்தாலே இன்றைக்கு விளைவுகள் வந்து கொண்டிருக்கிற நேரத்திலே, இவைகளையெல்லாம் சேர்த்து, நீங்கள்—மத்திய அரசாங்கம் பணம் கொடுங்கள், உதவி செய்யுங்கள் என்று கேட்பது எப்படி பொருத்தமாகும் என்று நான் கேட்டுக்கொண்டு 1952 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரை தமிழகத்திலே காங்கிரஸ் ஆட்சிப்பீடத்திலே இருந்தது. தமிழகத்தினுடைய பொற்காலம் என்று சொல்லக்கூடிய அளவிற்குப் பல்வேறு துறைகளிலே தமிழகம் முன்னேறியிருக்கிறது. தொழிலிலே, விவசாயத்திலே, மின்சாரத்திலே, பாசனத்திலே, நெடுஞ்சாலையிலே....(குறுக்கீடு)....

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 80 சதவிகித மின்வெட்டுக் காலத்தைப் பொற்காலம் என்கிறார். அப்படியானால் மற்ற காலத்தையெல்லாம் என்ன காலம் என்று பெயரிட்டு அழைக்கலாம் என்று மாண்புமிகு சித்தன் அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : அமைச்சர் தலையிடுவார் என்று தெரியும். அந்த 80 சதவிகித மின்சார வெட்டு எப்போது வந்தது. அதையும் சொல்லுங்கள் பார்க்கலாம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் வந்தது.

திரு. என். எஸ். வி. சித்தன் : அப்போது ஜனவரி மாதத்திலேயே வரவில்லை. ஆனால் இப்போது ஜனவரியிலேயே வந்துவிட்டது. ஆக மின்சாரத்தைப் பொறுத்த அளவிலே, அரசு நிர்வாகத்திலே இருந்த அக்கறையை, மின்சார உற்பத்தியிலே செலுத்தத் தவறிய காரணத்தாலே, இன்னும் ஓராண்டு என்ன, 5 ஆண்டுக் காலத்திற்கு, பற்றாக்குறை இருந்துதான் ஆக வேண்டும். அன்றைக்கு 1952லிருந்து 1967 வரை காங்கிரஸ் ஆட்சியிலே இருந்தது. பல்வேறு துறைகளிலும் நாம்



முன்னேறி இருக்கிறோம். அப்போது அவர்கள் அதிக அதிகாரம் கேட்கவில்லை. இருக்கின்ற அதிகாரங்களை வைத்துக்கொண்டு, இருக்கின்ற நிதி வகைகளை வைத்துக்கொண்டு, ஏனைய மாநிலங்களுக்கு முன்மாதிரியாக தமிழகம் அன்று நடந்து காட்டியிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; குறுக்கிடுவதற்காக பொறுத்தருள்வீர்கள் என்று எண்ணுகிறேன். அந்தக் காலத்திலேதான் மேற்கு வங்காளத்தைச் சார்ந்த பி. சி. ராய் அவர்கள் மிகக் கடுமையாகக் கேட்டார் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. என். எஸ் வி சித்தன் : எனக்கு அதுவும் தெரியும். ஆனால், இந்த அதிகாரங்களை வைத்துக் கொண்டுதான் அன்றைக்கு எந்தவிதமான குறையும் இல்லாமல் ஆட்சி நடந்தது என்று சொல்வதற்கு எனக்கு உரிமையிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்னும் எவ்வளவு அதிகாரம் குறைத்துக் கொடுத்தாலும் நீங்கள் எதுவும் கேட்க மாட்டீர்கள் என்பதும் எனக்குத் தெரியும்.

திரு. என். எஸ். வி. சித்தன் ; இதைவிட எவ்வளவு அதிகாரம் கொடுத்தாலும் நீங்கள் ஒன்றும் செய்யப் போவதில்லை என்பதும் எனக்குத் தெரியும். ஆக இன்றையதினம் அதிகாரங்களை அதிகமாகக் கேட்டுப் பெறுவதினாலேயோ, அல்லது கொடுத்துவிடுவதனாலேயோ, நாம் மக்களுக்கு நன்மைகள் செய்துவிட முடியாது. இப்போது இருக்கின்ற அதிகாரங்களை வைத்துக்கொண்டு — நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எத்தனையோ குற்றச்சாட்டு சொல்கிறார்கள், கோடிக் கோடியாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகையினாலே அதிக அதிகாரங்களைப் பெறுவது மட்டுமல்ல, பெறுகின்ற அதிகாரங்களை இன்றைக்கு ஆட்சியிலே இருப்பவர்கள் நல்ல முறையிலே செயல்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். மத்திய, மாநில அரசினுடைய உறவுகளை ஆய்வு செய்வதற்காக அன்னை இந்திரா அரசு சர்க்காரியா கமிஷனை நியமித்து இருக்கின்ற காரணத்தாலே இன்றைக்கு நாம் சொல்ல வேண்டிய கருத்துக்களை ஒரு விவாதமாக ஆக்கி, அரசியல் ஆக்கிவிடாமல் இது ஒரு நீண்ட நாளைய பிரச்னை, எதிர்காலத்தை பாதிக்கக் கூடிய பிரச்னையாக இருப்பதாலே நம்முடைய விழுமிய கருத்துக்களை அந்தக் கமிஷன் முன்னாலே சொல்லலாம். கமிஷன் முன்னாலே சொல்லி, அதனுடைய அறிக்கை வந்ததற்குப்பிறகு நம்முடைய கருத்துக்களைச்

சொல்லலாமே தவிர, கமிஷன் அமைத்ததற்குப் பின்னாலே இது மாதிரியான ஒரு தீர்மானம் இப்போது தேவையில்லை என்ற காரணத்தாலே இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பில் நாங்கள் இதை எதிர்க்கிறோம் என்று மீண்டும் கூறி அமர்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை முழுமனதோடு வரவேற்று என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தென் மாநிலங்களினுடைய முதல்வர்கள் எல்லாம் பெங்களூரிலே கூடி சில கருத்துக்களைப் பரிமாற்றம் நடத்தியிருக்கிறார்கள். அவைகளைப் பொறுத்த வரையில் அவைகள் எல்லாம் வரவேற்கத் தகுந்தது என்பது மட்டுமல்ல, அவைகள் எல்லாம் மேலும் மேலும் சிந்தனையைத் தூண்டுவதாகவும், செயல் வடிவம் பெறப்பட வேண்டியவைகளாகவும் இருக்கின்றன என்பதே பெருந்தலைவர் காமராஜ் தேசிய காங்கிரசினுடைய கருத்தாகும். இங்கே கொளுத்துகின்ற வெய்யிலானாலும், கொட்டுகின்ற மழையானாலும், வாட்டுகின்ற பனியானாலும், அதிலேயிருந்து துன்புற்றுக்கொண்டு இருக்கின்ற விவசாயிகள் விளைவிக்கின்ற அரிசிக்கு, நெல்லுக்கு விலை நிர்ணயிப்பதற்கு மாநிலங்களுடைய கருத்துக்கள் கேட்கப்படாமல் இருப்பது என்ன நியாயம் என்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஆகவே அந்தந்தப் பகுதியிலே எல்லாம் விளைந்து கொண்டிருக்கின்ற நெல்லுக்கு ஏற்ப, நிலத்திற்கு ஏற்ப அவர்கள் பலன் பெற வேண்டுமா, வேண்டாமா என்பதைப் பற்றி முடிவு செய்வதிலே மாநிலத்திலேயிருக்கின்ற அரசாங்கத்தின் கருத்துக்கள் கேட்கப்பட வேண்டும் என்பது மிக நியாயமான ஒன்று என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள்.

அதேபோல்தான் உலக வங்கியிலேயிருந்து கிடைக்கின்ற அந்தக் கடன் தொகையை, மத்திய அரசு எந்த விகிதாச்சாரத்திலே பெறுகிறதோ, எந்த விகிதாச்சார வட்டியிலே பெறுகிறதோ, அதைவிட சற்று அதிகமாக சர்வீஸ் சார்ஜ் என்ற அளவிற்கு மட்டும், அதிகப்படுத்திவிட்டு, மீதி எல்லாம் அந்த விகிதாச்சாரத்தோடு மட்டுமே இருக்க வேண்டும் என்று ஒரு கருத்தையும் தென் மாநில முதல் அமைச்சர்கள் வெளியிட்டு இருக்கிறார்கள். மத்தியிலே இருக்கின்ற அரசாங்கம் மாநில அரசாங்கத்தை நல்ல முறையிலே நடத்துவதற்கு உரிய சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமே தவிர மிக அதிகமான வட்டி விகிதாச்சாரத்தை அவர்கள் பெறுவதன் மூலம், உலக வங்கியிலிருந்து பெறுவதைவிட அதிகமாகப் பெறுவதன் மூலம் மாநில அரசாங்கம் தன்னுடைய நிதி நிலைமையிலே சுதந்திரமாக இயங்காது இருக்





கின்ற ஒரு சூழ்நிலை இருப்பதை அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

இதிலே மரியாதைக்குரிய மாண்புமிகு கேரளத்தினுடைய முதல் அமைச்சர் அவர்கள் வருவதும் வராததும் பற்றி இங்கே பேசப்பட்டது. கர்நாடக முதல் அமைச்சர் அவர்கள் தொலைபேசியிலே பேசுகின்ற நேரத்திலே, அது கூடாது என்றோ, அல்லது இது ஒரு தவறான முடிவு என்றோ, இப்படிப்பட்ட செயல்களில் எல்லாம் நாம் ஈடுபடுவது சரியல்ல என்றோ அவர்கள் சொன்னதாகத் தெரியவில்லை. அவர்கள் சொல்லியிருப்பது எல்லாம் எனக்கு வசதியிருந்தால் வந்து கலந்து கொள்கிறேன் என்ற அளவிற்கு முதலிலே நியாயமாக அவருடைய மனதிலே பட்டிருக்கிறது என்பதும் அந்த நியாய உணர்வோடு சொல்லப் பட்ட அந்தப் பதிலுக்குப் பின்னாலே அந்த நியாய உணர்வையும் மீறி நிர்ப்பந்தங்கள் அவருக்கு ஏற்பட்டிருக்குமோ என்று ஐயப் படுகின்ற ஒன்று என்ற அளவிற்குத்தான் இப்போது மாண்புமிகு கருணாகரன் அவர்கள் பேசி இருக்கிறார்களே தவிர, நியாயமான சிந்தனையிலேதான் அவர்கள் முடிந்தால் வருகிறேன் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள் என்று சொல்வதன் மூலம் இது இந்திரா அரசாங்கத்திற்கு எதிரான ஒன்று என்று கருதாமல், தென் மாநிலங்களுடைய, மக்களுடைய, எண்ணங்களை நிறைவேற்று வதற்கு, ஈடேற்றுவதற்குரிய ஒரு முயற்சியே என்று நாம் சிந்திக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், மற்ற முதல் அமைச்சர்களும் இதிலே கலந்து கொள்வதிலே தவறு இல்லை என்பதையும் நம்மைப் போன்றவர்கள் உணர்ந்தே இருக்கிறார்கள். இன்னொன்றையும் நாம் நினைத்துப் பார்க்கவேண்டும். மாநிலத்திலேயிருக்கின்ற அரசுகள் வளமாக இருந்தால்தான், மத்தியில் இருக்கின்ற அரசு பலமாக இருக்கும் என்பதை நாம் நினைவிலே கொள்ளவேண்டும். மத்தியிலே இருக்கின்ற அரசாங்கத்தைப் பலப்படுத்துவது இந்தியாவில் இருக்கின்ற ஒவ்வொரு குடிமகனுடைய கடமை. கன்னியா குமரியிலிருந்து காஷ்மீர் வரையில் வாழ்ந்து கொண்டு இருக்கின்ற ஒவ்வொரு குடிமகனுடைய கடமை என்று சொன்னால் ஒவ்வொரு மாநிலமும், பலமாகவும், வளமாகவும் இருக்கின்ற போதுதான் மத்தியிலே இருக்கின்ற அரசாங்கமும், வளமாகவும், பலமாகவும் இருக்கும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

(பிற்பகல் 12-20)

திட்டக் கமிஷனை நேரு அவர்கள் நியமித்தபோது அதற்குத் தலைவராக அவரே பொறுப்பேற்றதற்குக் காரணம், அதற்கு ஒரு சிறப்பும், மரியாதையும், கௌரவமும் வர வேண்டும் என்பதற் காகத்தான். பண்டித நேரு பெருமான் அவர்கள் இந்த நாட்டி

லுள்ள மக்களின் மிக நட்புக்குரியவராக — The darling of the
masses—என்று சொல்லப்படுகிற அளவிற்கு பண்டித நேரு அவர்கள்
அந்தத் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முன்வந்தார்கள்.
ஆனால் நாளாவட்டத்தில் அந்தத் திட்டக் கமிஷன் என்பது
மத்திய அரசாங்கத்தின் அங்கமாக மாறிவிட்டு இருக்கிறதோ
என்று ஐயப்படுகிற சூழ்நிலையில்தான் தென் மாநிலங்களின்
முதலமைச்சர்கள் அத்தனை பேரும் கூடி எங்களுடைய நிதி
ஆதாரங்களைப் பற்றியும், அவற்றைப் பகிர்ந்து கொள்வதைப்
பற்றியும் சிந்திக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்.
அப்படிப்பட்ட சிந்தனை வந்ததும் தவறு இல்லை. அதற்குக்
காரணங்கள் இருக்கின்றன.

உதாரணத்திற்குச் சொல்ல வருகிறேன். 1959 வரை
கம்பெனிகளிலே இருந்து வந்த வருமானத்திலே மாநிலங்
களுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டு இருக்கிறது. அந்தக் கம்பெனி
களிடமிருந்து இன்கம் டாக்ஸ் என்ற முறையிலே வந்த வருமா
னத்தில் மாநில அரசுக்கும் பங்கு என்று கொடுத்துவந்த நிலையை
மாற்றி அதற்கு கார்ப்பரேஷன் டாக்ஸ் என்று பெயர் வைத்து
மாநிலங்களுக்குப் பங்கு கொடுக்காமலேயே முழுவதுமாக மத்திய
அரசு எடுத்துக் கொண்டது. ஆகவே, ஏற்கனவே மாநில அரசாங்
கத்திற்கு 1959 வரை வந்துகொண்டிருந்த பங்கைக் கொடுக்காமல்
அந்த டாக்ஸ் பெயரை மட்டும் மாற்றியதன் காரணமாக மாநிலத்
திற்குப் பங்கு கொடுக்காமல் முழு வருமானத்தையும மத்திய
அரசாங்கம் மொத்தமாக எடுத்துக்கொண்டுவிட்ட காரணத்தாலே
ஒரு மாநில முதலமைச்சருக்கோ அல்லது ஒரு மாநிலத்திலே
உள்ள மக்களுக்கோ இது என்ன நியாயம் என்று கேட்கிற
சிந்தனை வருவதிலே தவறு இல்லை என்று கூறிக்கொள்ள ஆசைப்
படுகிறேன். அப்படிப்பட்ட சிந்தனை வருவதில் என்ன தவறு
இருக்கிறது என்றும் நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

அதைப்போலத்தான், தோல், சர்க்கரை, புகையிலை ஆகிய
வைகளின் மீது நாங்கள் அடிஷனல் எக்சைஸ் டியூட்டி போடு
கிறோம் என்று சொல்லி, அதிலே உங்களுக்குப் பங்கு கொடுக்
கிறோம் என்று சொல்லி, அந்த அதிகாரத்தை, அந்த உரிமையை
மத்திய அரசாங்கம் பெற்றுக்கொண்ட பின்னாலே அந்தக் கூடுதல்
எக்சைஸ் ட்யூட்டியை பல பொருட்களுக்குப் போடாமல் பேசி
எக்ஸைஸ் ட்யூட்டியைப் போட்டு அந்த வருமானம் முழுவதையும்
இப்போது மத்திய அரசு எடுத்துக்கொண்டிருக்கிற ஒரு சூழ்நிலை
யைப் பார்க்கிறபோது, மாநில அரசுகள் தங்களுடைய வருமான
ஆதாயங்களை யெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து
கொண்டிருக்கிறபோது நல்ல திட்டங்களை எப்படி நிறைவேற்று
வது என்கிற குழப்பத்தில் மாநில அரசுகள் இருப்பதால் இதைப்
பற்றி கவலைப்படக் கூடிய சூழ்நிலை எல்லோருடைய இதயத்
திலும் எழுகின்ற ஓர் எண்ணம்தான். இதிலே நான் இன்னொன்



றையும் சொல்வேன். முன்பெல்லாம், ரயில்வேயில் கட்டணங்
களைக் கூட்டுகிறபோது, அதிலே இந்த ஆண்டு இவ்வளவு வரு
மானம் வரும், இந்த மாநிலத்தில் இத்தனை கிலோ மீட்டர்
ரயில்வே தண்டவாளம் இருக்கின்ற காரணத்தால் அந்த அளவுக்குக்
கணக்கிட்டு மத்திய அரசு மாநிலங்களுக்குப் பங்கு கொடுத்து வந்
திருக்கிறது. இதற்கு முன்னாலே திரு. சி. சுப்பிரமணியம் நிதிய
மைச்சராக இருந்தபோது கொண்டுவந்த பட்ஜெட்டிலே—படித்துப்
பார்க்கிற நேரத்தில் இதையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள்
என்பதைப் பார்த்தேன். ஆனால், இப்போது மத்திய அரசாங்கம்
இவ்வளவு கோடி ரூபாய்க்கு ரயில்வே கட்டணம் உயர்த்தி இருக்
கிறபோது மாநில அரசாங்கத்திற்கு எவ்வளவு வரும். ஏன் அந்த
வரவு-செலவுத் திட்டத்திலே குறிப்பிடவில்லை என்று நான்
மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடத்திலே கேட்கிறபோது
அவர் சொன்னார் "இப்போது அதெல்லாம கொடுப்பது இல்லை"
என்று. இது ஏன் என்று சிந்திக்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிற
தல்லவா? இந்த அடிப்படையில்தான் ஒரு மாநிலத்திற்கும் மத்திய
அரசாங்கத்திற்கும் இடையே எத்தகைய உறவு இருக்கவேண்டும்
எனபதை நாம் பார்க்க வேண்டியிருக்கிறது.

அது மட்டுமல்ல, அட்மினிஸ்ட்ரேட்டிவ் ரிஃபார்ம்ஸ் கமிட்டி
என்ற பெயரிலே சதல்வாட் அவர்கள் தலைமையில் நம்முடைய
மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம், முன்னாள்
முதலமைச்சர் ஹிதேந்திர தேசாய், இன்னும் பலபேர் அதிலே
உறுப்பினர்களாக இருந்து ஒரு சிறப்புமிக்க வல்லுநர்களைக்
கொண்ட குழு போடப்பட்டது. அந்தக் குழுவின்
அறிக்கையிலே மத்திய மாநில உறவுகளைப் பற்றி
சொல்கிறபோது. இண்டர் ஸ்டேட் கவுன்சில் நிச்சயமாக
வேண்டுமென்று சொல்கிறார்கள். அதை நமது பாரதப் பிரதமர்
அவர்கள் இராஜ்ய சபையிலே மறுக்கிற நேரத்தில் சொல்கிறார்
கள், "இப்போது அரசியல் அமைப்புச் சட்ட ஆர்ட்டிகில்
263-ன்படி இண்டர் ஸ்டேட் கவுன்சில் அமைப்பது என்பது ஒரு
மாநிலத்திற்கும் இன்னொரு மாநிலத்திற்கும் இடையே தகராறு
இருந்தால்தான்". ஆனால், சதல்வாட் தலைமையில் போடப்
பட்ட குழு தெளிவாக சொல்கிறது, "வெறும் தகராறுக்காக
மட்டும் இண்டர் ஸ்டேட் கவுன்சில் போடவேண்டுமென்பதில்லை.
ஒருவருக்கொருவர் உறவு எப்படி வைத்துக்கொள்வது என்பது
மட்டும் அல்லாது ஒருவருக்கொருவர் இருக்கின்ற வளத்தை
எப்படிப் பகிர்ந்து கொள்வது, ஒருவருக்கொருவர் பிரச்னைகளை
எப்படிப் பேசித் தீர்த்துக் கொள்வது, அதன்மூலம் இரண்டு
மாநிலங்கள் அல்லது மூன்று மாநிலங்கள் அல்லது பக்கத்து
மாநிலங்களுடைய வளங்களை, நிதிகளை, செம்மைப்படுத்திக்
கொள்வது என்பதைப்பற்றியெல்லாம் பேசலாம். இன்னும்

சொல்ல போனால், ஹைக்கோர்ட் நீதிபதிகளைப் பற்றியும் பேசலாம்" என்று சதல்வாட் தலைமையில் போடப்பட்ட குழு சிபார்சு செய்திருக்கிறது.

இவைகளையெல்லாம் பார்க்கின்ற நேரத்தில் மத்திய மாநில உறவுகள் எப்படி இருக்கவேண்டும்; இன்னும் அதிகமான நிதி ஆதாரங்களைப் பெற வேண்டும்; இன்னும் இந்த மாநில அரசும், மற்ற அரசுகளும் சுதந்திரமாக இயங்கி மாநிலத்தை வளப்படுத்து வதன் மூலம் மத்தியையும் பலப்படுத்த வேண்டுமென்ற சூழ் நிலையை உருவாக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடுதான சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, இந்தச் சந்திப்பு நடந்திருக்கிறதே தவிர, தீய எண்ணத்தோடு நடந்திருப்பதாகக் கருதவில்லை. எனவே, அருமை நண்பர் மாண்புமிகு உமாநாத் அவர்கள் கொண்டு வந்த தீர்மானம் மாநிலத்திற்கு அதிக அதிகாரத்தைக் கோருகின்ற நோக்கத்தோடும் மத்திய அரசை வலுவுள்ளதாக ஆக்குகின்ற நோக்கத்தோடும் இருக்கிறது. அதைத் தொடங்கி வைத்த ஹெக்டே அவர்களே சொல்கிறார்கள்.

It is not against the Centre

என்று—அவர் சொல்லுகின்ற நேரத்தில் அதை ஏற்றுக்கொண்டு, அதில் இருக்கிற நல்லதை எல்லாம் எடுத்துக்கொண்டு, அந்த நல்லதை எப்படிச் செம்மைப்படுத்த வேண்டுமென்று சொல்லுகிற சூழ்நிலைகளை உருவாக்குவதுதான் மத்திய அரசினுடைய கடமையாக இருக்க வேண்டுமென்று நான் கருதுகிறேன்.

சர்க்காரியா அவர்களுடைய தலைமையிலே இன்று ஒரு கமிஷன் போடப்பட்டிருக்கிறது என்று சொன்னாலும், அவர் களுடைய மனதிலே அது நீண்ட நாளாக இருந்தது என்று மாண்பு மிகு பிரதமர் அவர்கள் சொன்னாலும் கூட அதை விரைவு படுத்தி வேகமாக அறிவிப்பதற்குக் காரணமாக இருந்தது இந்த தென் மாநில முதலமைச்சர்கள் சந்திப்பு என்பதை மறக்கவே முடியாது; மறுக்க முடியாது. அப்படி இருக்க, சர்க்காரியா அவர்கள் தலைமையில் போடப்பட்டிருக்கக் கூடிய இந்தக் குழு 'கான்ஸ்டிடியூஷனுக்கு' உள்ளேயே இருந்து இதை இதை செய்யு வாம் என்று சொல்வதற்குத் தான். ஆனால் அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்றி, மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் உறவை எப்படிச் செம்மைப்படுத்துவது என்று சிந்திப்பது நல்லது என்று சொல்லக் கூடிய அளவுக்கு இந்தத் தென் மாநில முதலமைச்சர் களுடைய சந்திப்பு நடந்திருக்கிறது.





இப்படிப்பட்ட சந்திப்பு சில மாநிலங்கள் என்று மட்டும் இல்லாமல் எல்லா மாநில முதலமைச்சர்களும் சந்திக்கின்ற அள வுக்கு சூழ்நிலைகளை உருவாக்கியிருக்க வேண்டும். அப்படி உரு வாக்குகின்ற நிலையை தென் பகுதியிலே இருந்து இந்த நல்ல கருத்து வந்து, எல்லோரும் ஒன்று என்று கருதுகின்ற, எல்லோரும் இந்த நாட்டு மக்கள் என்று சொல்லுகின்ற, கருதுகின்ற, எல்லோ ரும் வளத்தோடு இருக்க வேண்டுமென்று கருதுகின்ற நல்ல எண்ணத்தோடு இருக்கிற காரணத்தாலே இந்த சந்திப்பை வர வேற்பது மட்டுமல்லாமல், இதன்மூலம் கிடைக்கின்ற நல்ல காரியங்களை இந்த நாட்டு மக்களுக்குப் பயன்படுகின்ற வகையிலே செயல்படுத்துவது எப்படி என்று சிந்திக்கின்ற ஒரு காரியத்தை தொடங்கி வைக்கின்ற பெருமை இந்த முதலமைச்சருக்கும் இந்த மாநில சட்டசபைக்கும் இருக்க வேண்டுமென்று சொல்லி, இந்த சந்திப்பு நல்லது என்பதாலே மாண்புமிகு உமாநாத் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த தீர்மானத்தை நான் வர வேற்கிறேன் என்று சொல்லி, அமர்கிறேன்.

*டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய துணைத் தலைவர் அருமை நண்பர் உமாநாத் அவர்கள் முன்மொழிந்துள்ள தீர்மானத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நானும் வரவேற்று பாராட்டி, சில பல கருத்துக்களை இங்கே எடுத்துவைக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கு பேசப்பட்ட கருத்துக்கள் அனைத்தும் இன்றைய அரசியல் அமைப்புச் சட்டத்தினுடைய அடிப்படையை மையமாக வைத்து கூறப்பட்டன. அரசியல் சட்டத்தில் மாற்றங்கள் செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்ட கருத்துக்கள் ஆனாலும் சரி, உள்ளதே போதும் என்று காங்கிரஸ் கட்சியின் சார்பாக எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்கள் ஆனாலும் சரி, அரசியல் சட்டத்தை மையப்படுத்தி எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்கள் என்பதிலே மாறுபாடு இல்லை.

முதலிலே நம்முடைய அரசியல் சட்டம் எத்தகையது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். 1935-வது ஆண்டுச் சட்டம் இந்தியாவிலே உள்ள பல்வேறு மாநிலங்களிலே உள்ள சுதேசிகளை நம்பாமல் அன்றைக்கு இருந்த வெள்ளைக்காரர்கள் "1935 ஆக்ட்" என்ற இந்த சட்டத் தை உருவாக்கினார்கள். அதை வரிக்கு வரி. இளம் பிள்ளைகள் சொல்வார்களே 'ஈ அடித்தான் காப்பி' என்று. அதைப்போல கொண்டுவரப்பட்ட சட்டம்தான் இன்றைய அரசியல் அமைப்புச் சட்டம் என்று சொன்னால் மிகையாகாது.

[டாக்டர் மு. கருணாநிதி] [1983 மார்ச் 29 (பிற்பகல் 12—30)

அரசியல் சட்டம் உருவானபிறகு, மொழிவாரி மாநிலங்கள் தேவை என்கிற குரல் எழுப்பப்பெற்று, அது மதிக்கப்பட்டு, மொழிவாரியாக நிலப் பிரிவுகள் பிரிக்கப்பட்டு, அந்தந்த நிலப் பரப்பிலும், குறிப்பிட்ட தாய்மொழியைக் கொண்டவர்கள், தங்களுடைய தாய்மொழிக்கு செல்வாக்கு இருக்கவேண்டும், அந்த தாய் மொழிதான், அந்த மொழிவாரி மாநிலங்களிலே ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்ற அவசியம் உணரப்பட்டு 35 ஆண்டுக்காலமாக, ஒரு மாநிலப் பிரக்ஞை, அதாவது உணர்வு, ஆங்கிலத்திலே சொல்லவேண்டும் என்றால், State Conciousness என்கிற ஒரு மாநிலப் பிரக்ஞை ஏற்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறந்துவிட இயலாது. அந்த மாநில உணர்வைத்தான் State Conc ousness என்கிற அந்த உணர்வைத்தான், பிராந்திய உணர்வு என்றும், பிராந்திய வெறி என்றும் Chauvinism என்றும் கூட சிலர் வர்ணிப்பதை நாம் இன்றைக்கு காண்கிறோம்.

ஒரு உதாரணத்தை இங்கே சொல்லவேண்டும் என்றால். கனடா என்னும் நாட்டில். ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மொழி பேசுகிற மக்கள் இருக்கிறார்கள். அங்கே ஆங்கில மொழி, பிரெஞ்சு மொழி, ஆகிய இரண்டு மொழிகளும் ஆட்சிமொழி களாக இருக்கின்றன. ஆனால், பிரெஞ்சு மொழி அதிகம் பேசுகிற ஒரு மாநிலம் கனடாவில் இருக்கிறது. கியூபெக் என்பது அதனுடைய பெயர். அந்த கியூபெக் மாநிலத்தை ஆளுகின்ற, பிரெஞ்சு மொழி பேசுகின்ற, அந்த மாநிலத்தை ஆளுகின்ற மாநில கட்சி சுதந்திரமே கூட கேட்டது. கனடா நாட்டிலே இருந்து விடுபட்டு; பிரிந்து தனித்துப் போய்விட வேண்டும் என்கிற சுதந்திரக் குரலைக் கூட எழுப்பியது. எழுப்பியது மாத்திரம் அல்ல, அப்படித் தனித்துப் போகவேண்டும் என் பதற்காக ஒரு ரெஃபரெண்டம் கூட கொண்டு வந்தது. அப்படி வைக்கப்பட்ட அந்த ரெஃபரெண்டத்தில் அந்த மாநிலக் கட்சி தோற்றுவிட்டது. அதற்குப் பிறகு, அந்த மாநிலக் கட்சி தலையெடுக்கவே எடுக்காது என்று குறிப்பிட்ட போதிலும், அடுத்து நடைபெற்ற தேர்தலில் அதே மாநிலக் கட்சி பதவிக்கு வந்து, இப்போது கனடா நாட்டினுடைய ஒரு மாநிலமாக அந்த மாநிலம் இருந்தாலும் கூட, அந்த மாநிலக் கட்சியால் அது ஆளப்பட்டாலும் கூட, இன்னும் சுதந்திரக் குரலை அந்த மாநிலத்திலே உள்ள அந்தக் கட்சி எழுப்பிக்கொண்டே இருக்கிறது.

நான் அதை மேலும் விரிவாக ஒரு எடுத்துக்காட்டுடன் கூற வேண்டுமானால், ஜெரால்ட் பெல்லட்டியன் என்ற ஒரு நாடாளுமன்ற உறுப்பினர். கனடா நாட்டு பாராளுமன்றத்திலே



1983 மார்ச் 29] (டாக்டர் மு. கருணாநிதி)

உறுப்பினராக இருப்பவர், ஒரு பெரிய பத்திரிகையின் ஆசிரியரும் கூட, அவரை நிருபர்கள் சந்தித்துக் கேட்கிற நேரத்தில், தன்னுடைய கருத்தை அவர் வெளியிடும் விதத்தில் சொல்கிறார், 'நான் முதலில் பிரெஞ்சு சமுதாயத்தைச் சேர்ந்தவன், இரண்டாவதாகத்தான் நான் கனடா நாட்டுக்காரன்' இதை ஆங்கிலத்திலே சொல்லவேண்டும் என்றால், If I told you that I am firstly the Canadian and then my belonging to the French Community comes to second, that would be a shameful life. பிரெஞ்சு சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்பதை இரண்டாவதாக ஆக்கிவிட்டு, நான் கனடியன் என்பதை முதலாவதாக ஆக்கினால், அதைவிட வெட்ககரமான பொய் ஒன்று இருக்க முடியாது என்று, ஜெரால்ட் பெல்லட்டியன் என்ற கனடா நாட்டு பாராளுமன்ற உறுப்பினர் கூறியிருக்கிறார்கள்.

ஆனால் இப்படிப்பட்ட கருத்துக்களை, பிரிந்து போக வேண்டும் என்கிற ஒரு கட்சியினுடைய முழக்கம் இந்த நாட்டில், Chauvinism என்றோ, அல்லது தேசவிரோதம் என்றோ சொல்லப்பட்டு வருகிறது.

ஆனால், நாம் இங்கே தமிழ்நாடோ அல்லது ஆந்திரமோ, அல்லது கர்நாடகமோ அல்லது இந்த பெங்களூர் மாநாட்டிலே கலந்துகொண்ட, மற்ற மாநிலங்களில் ஒன்றான புதுவையோ, யாரும் தனியாக பிரிந்து போய்விட வேண்டும், அல்லது 4 மாநிலங்களும் சேர்ந்து தனியாகப் போய்விட வேண்டும் என்கிற எண்ணத்தோடு அல்லாமல், ஒற்றுமைக்கு, அந்த உணர்வுக்கு உள்ளடங்கிய, இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளைவிக்காத அளவில், மாநில உரிமைகளைக் கேட்பது எப்படி தேசவிரோதமாகும் என்பதுதான் எனக்குப் புரியவில்லை. இது தேசத்துரோகம் என்று வேறு சில மாநில முதலமைச்சர்கள் எல்லாம், அல்லது இன்று இங்கேயிருக்கிற மத்திய அரசாங்கத்தினுடைய ஆளும் கட்சியைச் சேர்ந்த பிரதிநிதிகள் எல்லாம், அவர்களுடைய தலைவர்கள் எல்லாம எடுத்துக் குறிப்பிடுவார்களேயானால், நான் அதை மிகமிக வன்மையாக மறுக்க விரும்புகிறேன்.

இது தேசத்துரோகம் அல்ல, ஒரு தேசத்திலிருந்து பிரிந்துச் செல்கிற ஒரு உணர்வையே கனடா போன்ற நாடுகளில் மதிக்கிற நேரத்தில் நாம் இங்கே பிரிந்துபோக விரும்பவில்லை. மாநிலங்களுக்கான உரிமைகள் கிடைப்பதாகாக, சுய ஆட்சித் தன்மையை ஒரு கூட்டாட்சி அமைப்புக்குள்ளேயே வழங்குங்கள் என்று கேட்பதற்கு, அரசியல் சட்டத்திலே திருத்தங்கள் தேவை என்று கூறுவது நாட்டு துரோகம் ஆகாது, பிரிவினை முழக்கம் ஆகாது என்பதை நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

ஆனால் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்· மொழியால் தமிழனாகவும், இனத்தால் திராவிடனாகவும், நாட்டால் இந்தியனாகவும், உலகத்தால் மனி னாகவும் இருக்கவேண்டும் என்று கொள்கை கொண்டிருக்கின்ற இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நான் வலியுறுத்திச் சொல் கிறேன். இந்தியாவிலே ஏறத்தாழ 20 க்யூபெக்குகள் இருக் கின்றன. கனடா நாட்டிலே இருக்கின்ற க்யூபெக்குகள் போல இந்தியாவில் இருக்கின்ற க்யூபெக்குகள் விடுதலை கேட்கின்ற க்யூபெக்குகள் அல்ல. அங்கே எப்படி பிரெஞ்ச் மொழி பேசு கின்ற சமுதாயத்தைச் சார்ந்தவன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை அடைகிறார்களோ அதைப்போல் வங்காள மொழி பேசுகின்றவன் என்று பெருமை கொள்கின்ற மேற்கு வங்கக் குடிமகனும், நான் தெலுங்கன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை அடைகின்ற ஆந்திர மாநில குடிமகனும். நான் கன்னடம் பேசுகின்றவன் என்று பெருமை கொள்கின்ற கர்நாடக மாநிலக் குடிமகனும். நான் மலையாள மொழிக்கு உரியவன் என்று பெருமை அடைகின்ற கேரள மாநிலத்தவனும் நான் தமிழன் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவன் என்று பெருமை அடைகின்ற தமிழ்நாட்டுக்காரனும் எப்படித் தங்கள் மொழி உரிமையைப் பேணி காக்கவேண்டும், மொழி உரிமையின் மீது பிறமொழி ஆதிக்கம், பிறமொழி படையெடுப்பு கூடாது என்று கருதுகின்றோமோ அதைப் போல க்யூபெக் அளவிலே இல்லாவிட்டாலும் கூட—மொழிவாரி மாநிலங்கள் என்ற அளவில் ஏறத்தாழ 20 க்யூபெக்குகள் இந்தியத் திருநாட்டிலே இருப்பதை நாம் மறந்துவிடக்கூடாது, அப்படிப்பட்ட உணர்வின் அடிப்படையில் நாம் மறுத்துப் பேசிவிடவும் இயலாது: அந்த அடிப்படையிலேதான் முதல் கடமையாக தென் மாநில முதல்வர்களுடைய மாநாடு கூட்டப்பெற்று இருக்கின்றது. அதைக் கூட்டுவதற்காக முயற்சி எடுத்துக் கொண்ட கர்நாடக முதலமைச்சர் திரு. ஹெக்டே அவர்களை நான் பாராட்டுகிறேன். அந்த மாநாட்டிலே கலந்துகொண்ட தமிழக முதலமைச்சரையும், ஆந்திர முதலமைச்சரையும், புதுவை மாநில முதலமைச்சரையும் நான் வாழ்த்துகிறேன். அவர்களைப் பாராட்டுகிறேன் ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், இப்போது நம்முடைய முதலமைச் சருக்குக் கிடைத்தது போன்ற நல்ல சூழ்நிலை அப் போது இருந்ததா என்றால் நிச்சயமாக இல்லை. காரணம் பக்கத்திலே ஆந்திராவிலே, கர்நாடகத்திலே வேறு கட்சிகளின் ஆட்சிகள், இந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்ள விரும்பாத கட்சிகளின் ஆட்சிகள் இருந்த காரணத்தால் எங்கோ தொலை தூரத்தில் உள்ள பஞ்சாப் மாநில முதலமைச்சர் குர்னாம்சிங் அவர்களோடு மாத்திரம் தொடர்பு கொண்டு மாநில



சுயாட்சிக் கொள்கையை, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்படக்கூடிய அளவுக்கு அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்ற அந்தக் கருத்தினை எடுத்துவைக்க முடிந்தது. ஆனால் இன்றைக்கு சூழ்நிலை மிகப் பக்குவமாகி இருக்கின்றது. நாங்கள் முதலிலே எடுத்துச் சொன்ன கருத்துக்கள். பல ஆண்டு காலமாகவே தமிழகத்திலே தழைத்துக் குலுங்கி இருக்கின்ற கருத்துக்கள், இன்றைக்கு கர்நாடகாவிலே காயாகிக் கனிந்து கொண்டிருக்கின்ற கருத்துக்கள், ஆந்திராவிலே அரும்புவிடுகின்ற கருத்துக்கள் என்ற ஒரு அற்புதமான சூழ்நிலை, வரவேற்கத்தக்க சூழ்நிலை இன்றைக்கு நம்முடைய முதலமைச்சருக்கு ஏற்பட்டிருக்கின்றது. இதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நண்பர் உமாநாத் அவர்கள் தீர்மானத்திலே எதுடுத்க்காட்டி இருந்தாலும் கூட இதை முற்றிலும் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றுதான் அவரோடு சேர்ந்து கழகத்தின் சார்பிலே நானும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பெங்களூரில் நடைபெற்ற மாநாட்டில் என்னென்ன கருத்துக்கள் கலந்தாலோசிக்கப்பட்டன என்பதை இந்த அவையிலே ஒரு அறிக்கையாக அரசின் சார்பிலே வைக்கப்பட்டதை அனைவரும் படித்துப் பார்த்திருக்கிறோம். இங்கே பேசிய பல்வேறு கட்சியின் தலைவர்களும் விளக்கமாக எடுத்துக் கூறி இருக்கிறார்கள். பெங்களூர் மாநாட்டில் அடிப்படை வருமான வரியோடு மேல் வரியை இணைத்து அப்படி இணைக்கப்பட்ட சூழ்நிலையில் மாநிலங்களின் பங்கினைத் தரவேண்டும் என்பது அந்த அறிக் கையிலே வருகின்ற ஒரு வாசகம். இதனைக் கழக ஆட்சியில் அமைக்கப்பட்ட ராஜமன்னார் குழு எந்த வடிவத்திலே விளக்கி இருக்கின்றது என்பதை இங்கே எடுத்துக்காட்டுவது ஏதோ இதற்கு முன்பே நாங்கள் செய்துவிட்டோம் என்பதற்காக அல்ல. பொருத்தமாக இருக்கும் என்பதற்காகச் சொல்கிறேன்.

(பிற்பகல் 12—40.)

ராஜமன்னார் குழு பரிந்துரை மேல்வரி வருவாயில் மாநிலங்கள் பங்குபெற முடியாமல் போனால் அதில் நியாயம் இல்லை. எனவே மேல் வரியை மாநிலங்களிடையே பகிர்ந்துகொள்ளும் வகையில் அடிப்படை வருமான வரி விதிக்கப்படுவதோடு மேல் வரி இணைக்கப்படவேண்டும் என பரிந்துரைக்கிறோம். இது ராஜ மன்னாருடைய பரிந்துரை. அதற்கு பிறகு செழியன், மாறன் குழுவினர் அதை ஆராய்ந்து அரசுக்கு, அரசு கட்சிக்கு அளித்த அந்த அறிக்கையின் அடிப்படையில் அமைச்சரவை பரிசீலித்த பிறகு இந்த அவையில் வைத்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் வருகிற வாசகம் போன்றதுதான் பெங்களூர் மாநாட்டிலே வருமான வரியோடு மேல் வரியை இணைத்து மாநிலங்களுக்கு பங்கு தர வேண்டும் என்ற கருத்துமாகும். ராஜமன்னார் கமிட்டியின்

சிபாரிசும் ஏறத்தாழ அதுதான். ஆனால் 1974-ம் ஆண்டு கழக அரசு நிறைவேற்றிய தீர்மானத்திலே மத்திய அரசினுடைய பட்டியலிலிருந்து வருமான வரியை மாநில பட்டியலுக்கு அப்படியே மாற்றிவிடவேண்டும் என்பது ஆகும். நம்முடைய அருமை நண்பன் சித்தன் அவர்கள் இப்போது கூட பிரதமர் வறட்சி நிவாரண நிதி வழங்குவதற்காக எவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டு தமிழ் நாட்டுக்கு வந்தார்கள்? இப்படி எல்லாம் மத்திய அரசுக்கு அக்கறை இல்லையா அதை நீங்கள் மறுக்கிறீர்களா என்று கேட்டார்கள். எங்களுக்குள்ள கஷ்டமே பிரதமருக்கு இந்த சிரமம் ஏன் என்பதுதான். இப்படிப்பட்ட சிரமங்களை அவர்கள் எடுத்துக் கொள்ளக்கூடாது என்பது தான். நிதி ஆதாரங்களை பெருவாரியாக ஒவ்வொரு மாநிலத்திற்கும் வழங்கி விடுவார் களானால் கையை ஏந்தி ஒவ்வொரு மாநிலமும் டெல்லியை நோக்கி பிச்சை எடுக்கின்ற அந்த தன்மை மாற்றப்பட்டு விடுமானால் ஏகப்பட்ட சிரமத்தை தாங்கிக் கொண்டு நம்முடைய பிரதமர் பகல் 3 மணிக்கு வேகாத வெயிலில் விமான நிலையத்தில் வந்து இறங்கவும், 3 மணி நேரம் 4 மணி நேரம், தமிழகத்தில் 2,3 பகுதிகளில் சுற்றிப் பார்க்கவுமான அந்த சிரமத்தைக்கூட அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இருக்காது. அந்த நேரத்தில் வெளிநாட்டு உறவுகள் பற்றி பல்வேறு விஷயங்களை அவர்கள் கலந்து பேசுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக்கொள்ள முடியும். எனவேதான் நிதி ஆதாரங்களை பொறுத்த மட்டிலே மாநிலங்களுக்கு அதிக வசதி வாய்ப்புகள் இருந்திட வேண்டும் என்பதற்காகத்தான் வருமான வரி கூட மாநிலப் பட்டியலுக்கு வரவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அப்படி ஆனால் மத்திய அரசு பணத்திற்கு எங்கே போகும் என்றால் நாங்கள் தருகிறோம் வாங்கிக்கொள்ளுங்கள். இது வரையில் நீங்கள் கொடுத்தீர்கள். நாங்கள் வாங்கிக்கொண்டோம். இனிமேல் நாங்கள் தருகிறோம் நீங்கள் வாங்கிக்கொள்ளுங்கள் என்கின்ற அந்த நிலை ஏன் வரக்கூடாது? ஏன் அப்படிப்பட்ட ஒரு பெருமை மாநிலங்களுக்கு ஏற்படக்கூடாது என்பதை தான் நம்முடைய நண்பர் சித்தன் அவர்கள் சித்தம் இரங்கி எண்ணிப்பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பெங்களூர் மாநாட்டிலே இன்னொன்று; அரசியல் அமைப்பிலே 256, 257 பிரிவுகள் மாநில பட்டியலிலும் குடியரசு தலைவருடைய சம்மதத்தை பெறும் அவசியமின்றி சட்டம் இயற்ற மாநில சட்டமன்றத்திற்கு அதிகாரம் இருக்கவேண்டும் என்பது குறித்து பரிசீலிக்கப்படவேண்டும். இது பெங்களூர் மாநாட்டு தீர்மானம் அல்லது அவர்களுடைய கருத்து. ராஜமன்னார் பரிந்துரையும் அதுவேதான். 256, 257, 339 (2) ஆகிய பிரிவுகள் அரசியல் அமைப்பு சட்டத்திலிருந்து



நீக்கப்படவேண்டும் இது ராஜமன்னார் பரிந்துரை. அந்த பரிந்துரை மீது 1974-ம் ஆண்டு கழக அரசு இங்கே கொண்டு வந்த தீர்மானம் ராஜமன்னார் பரிந்துரையை ஏற்று 256, 257, 339 (2) அத்துடன் 344 (6) ஆகிய பிரிவுகளை நீக்கவேண்டும் என்பதாகும். 256 என்றால் என்ன? மத்திய அரசு மாநில அரசுகளுக்கு கட்டளை பிறப்பிக்கின்ற அதிகாரம்; அது நீக்கப்படவேண்டும். 257 என்றால் என்ன? மாநிலத்தினுடைய சட்டங்களுக்கு மத்திய அரசு எந்த நேரத்திலும் தடங்கல் செய்யலாம் என்கின்ற அதிகாரம் அது நீக்கப் படவேண்டும். 339 (2) என்றால் என்ன? தாழ்த்தப்பட்ட மலைசாதி மக்கள் குறித்து மத்திய அரசு தான் கட்டளைகள் பிறப்பிக்கும் என்பது. தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களைப் பற்றி மாநில அரசுகளுக்கு கவலை கிடையாதா? மத்திய அரசுக்கு மாத்திரம் தான் அந்த கவலையா? எனவே அந்தப் பிரிவு நீக்கப்படவேண்டும். 344 (6) என்கின்ற பிரிவு என்ன? மொழி குறித்த கட்டளைகளை குடியரசுத் தலைவர் பிறப் பிப்பார். அது மிக மிக அபாயகரமானது. இந்திதான் தேசிய மொழி; ஆங்கிலம் அகற்றப்பட்டு விட்டது என்கின்ற கட்டளையைக் கூட திடீர் என்று ஒரு நாள் குடியரசு தலைவர் இந்த 344 (6) என்கின்ற பிரிவின் கீழ் கட்டளையாக பிறப்பித்து விட முடியும். எனவே தான் கழக அரசில் 1974-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலே 256, 257, 339 (2), 344 (6) ஆகிய பிரிவுகள் அறவே நீக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டது.

பெங்களூர் மாநாட்டில் இங்கே நம்முடைய கட்சித் தலைவர்கள் எல்லாம் எடுத்துக்காட்டியதைப் போல் மிக முக்கியமான ஆனால் ஒரே ஒரு வரியிலே ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த ஒரே வரிக் கருத்திலேதான் மாநில சுயாட்சியே அடங்கியிருக்கிறது. ''அரசியலமைப்பில் 7-வது விவர அட்டவணையை மாற்றியமைப்பது உட்பட சட்டமியற்றுவதற்கான அதிகாரம் மீண்டும் பரிசீலிக்கப்படவேண்டும்''. இது பெங்களூர் மாநாட்டினுடைய கருத்துரை அல்லது தீர்மானம். அரசியலமைப்பிலே உள்ள 7-வது விவர அட்டவணையை மாற்றியமைக்க வேண்டும். 7-வது விவர அட்டவணை என்ன? மாநிலங்களுக்கு என்ன என்ன அதிகாரங்கள், மத்திய ஆட்சிக்கு என்ன என்ன அதிகாரங்கள், பொதுப் பட்டியலிலே என்ன என்ன அதிகாரங்கள், இவைகள்தான் 7-வது அட்டவணை. அதை மாற்றியமைக்கவேண்டும்.

1974 ஆம் ஆண்டு கழக அரசு தீர்மானத்தில் வருகிற வாசகத்தை நான் படிக்க விரும்புகிறேன். ''அரசியலமைப்பின் 7-வது இணைப்பு குறித்து ராஜமன்னார் குழுவின் பரிந்துரைகளை கவனத்திலே கொண்டு, நாட்டின் பாதுகாப்பு, வெளிநாட்டுக்

(டாக்டர் மு. கருணாநிதி) [1983 மார்ச் 29

கொள்கை, மாநிலங்களிடையே போக்குவரத்துத் தொடர்புகள்,
நாணயச் செலாவணி ஆகியவைகளைக் குறித்த அதிகாரங்கள்
மாத்திரம் மத்திய கூட்டாட்சி அரசுக்கு ஒதுக்கப்பட்டு எஞ்சிய
அதிகாரங்கள் உள்பட மற்ற எல்லா அதிகாரங்களும் மாநிலங்
களுக்கு மாத்திரமே இருக்கிற வகையில் உண்மையான
கூட்டாட்சி அரசை நிறுவும் நோக்கத்தோடு மேற்சொன்ன
அதிகார விவர பட்டியலை ஆராய்ந்து அவற்றை கூட்டாட்சிப்
பட்டியல் என்றும், மாநிலப் பட்டியல் என்றும், பொதுப்
பட்டியல் என்றும் 3 தொகுப்புகளாக ஒதுக்கப்பட்டு, அவைகள்
பிரித்துத் தரப்பட்டிருக்கின்றன. அன்றைக்கு நிறைவேற்றப்
பட்ட அந்தத் தீர்மானத்தினுடைய நடவடிக்கைக் குறிப்பை
எடுத்துப் பார்த்தால்—ஆங்கிலத்திலே அனக்ஷர் என்றும்
தமிழிலே இணைப்பு என்றும் தரப்பட்டிருக்கிற அந்தக் குறிப்பு
களிலே எவையெவை மத்தியப் பட்டியலில் இருக்கவேண்டும்,
எவையெவை மாநிலப் பட்டியலுக்கு வரவேண்டும், எவையெவை
மத்தியப் பட்டியலிலிருந்து நீக்கப்பட வேண்டும், எவையெவை
பொதுப் பட்டியலுக்கு உரியனவ என்பதை ராஜமன்னார் குழு
வினுடைய பரிந்துரையினுடைய அடிப்படையில் அன்றைய தினம்
மேலும் சற்றுத் தீவிரமாக நிறைவேற்றி வைத்திருக்கிறோம்.
இப்போது மத்தியப் பட்டியலுக்கு இருக்கிற அதிகாரங்கள்
97 அதிகாரங்கள், மாநிலப் பட்டியலுக்கு இருக்கிற அதிகாரங்கள்
66. அதிலே சில எடுக்கப்பட்டுவிட்டன. பொதுப் பட்டியலில்
47 அதிகாரங்கள். பொதுப் பட்டியலிலே அதிகாரங்கள் 47
என்று எண்ணிக்கை அளவில் இருந்தாலும் கூட ஒருமுறை திரு.
கே. சந்தானம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் பொதுப்பட்டி
யலிலே உள்ள அதிகாரங்கள் காலகட்டத்தில் மத்திய பட்டி
யலுக்குப் போய்விடக்கூடியனவ என்பதை நாம் மறந்துவிடக்
கூடாது. அது எவ்வாறு? திரு. சந்தானம் அவர்களுடைய
கருத்து எவ்வாறு நமக்கு உடன்பாடு உடையது என்பதை நான்
விளக்க விரும்புகிறேன். பொதுப் பட்டியலில் குறிப்பிடப்படும்
விஷயங்களில் மாநில அரசும் மத்திய அரசும் சட்டமியற்றலாம்.
பொதுப் பட்டியலில் உள்ள ஒரு விவரம் குறித்து ஒரு அதிகாரம்
குறித்து மாநில அரசும் சட்டமியற்றலாம், மத்திய அரசும் சட்ட
மியற்றலாம், ஆனால் அந்தச் சட்டங்கள் ஒன்றுக்கொன்று
முரண்பாடு உள்ளவைகளாக இருந்தால் மத்திய அரசு நிறை
வேற்றுகிற சட்டம்தான் செல்லுபடியாகும். மாநில அரசு நிறை
வேற்றுகிற சட்டம் செல்லுபடியாகாது. ஒருவேளை ஏற்கனவே
உள்ள சட்டத்திற்கு குடியரசுத் தலைவருடைய ஒப்புதல் பெற்று
மாநிலத்தால் அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்குமானால்
அந்தச் சட்டம் செல்லுபடியாகும், என்றாலும்கூட புதிய ஆபத்து
என்னவென்றால் குடியரசுத் தலைவருடைய ஒப்புதலைப் பெற்று
ஒரு சட்டத்தை இங்கே மாநில அரசு நிறைவேற்றிவிட்டாலும்கூட



1983 மார்ச் 29] (டாக்டர் மு. கருணாநிதி)

மத்திய அரசு விரும்பினால் இதே விஷயத்திற்கு நாடாளு
மன்றத்தில் வேறு ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து மாநில
சட்டத்தை செல்லுபடியாகாமல் செய்யமுடியும். இப்போது
பொதுப் பட்டியலில் மின்சாரம், பத்திரிகை, தொழிற்சாலை,
மருந்துகள், டிரேட் யூனியன், திருமணங்கள், விவாக ரத்துகள்,
கோர்ட் அவமதிப்பு, குடும்ப நலத் திட்டம் போன்ற 47 அதிகாரங்
களில் முரண்பாடுகள் ஏற்படுமானால், சட்டம் இயற்றுகிற
நேரத்திலே, மாநிலங்களுடைய சட்டங்கள் புறக்கணிக்கப்படக்
கூடிய சூழ்நிலை, நான் இங்கே எடுத்துச் சொன்ன இரண்டு
விவரங்களாலும் வெகு தெளிவாக உணரப்படும். மத்திய
பட்டியல்; 97 மிகக் கொழுத்த அதிகாரங்களைக் கொண்ட
பட்டியல் மத்திய பட்டியல். பாதுகாப்பு, வெளிநாட்டு
விவகாரம், ரயில்வே, தேசிய நெடுஞ்சாலை, துறைமுகம், ஆகாய
மார்க்கம், தபால் தந்தி, கரன்சி, நாணய- செலாவணி, ரிசர்வ்
வங்கி, பரிசுச் சீட்டு, வங்கிகள், இன்சூரன்ஸ், இறக்குமதி,
ஏற்றுமதி, சுரங்கம், எண்ணெய், சென்சார், வருமான வரி.
கம்பெனி வரி, உயர்தரக் கல்வி போன்ற கொழுத்த அதி
காரங்கள் இன்றைக்கு அவர்களுக்கு இருப்பதோடு, மாநிலப்
பட்டியலிலும், பொதுப் பட்டியலிலும் சேராமல் எஞ்சியிருக்
கின்ற அதிகாரங்கள் அவர்களுக்குத் தான் என்ற நிலை இன்றுள்ள
அரசியல் அமைப்புச் சட்டத்தில் இருக்கிறது. மாநிலப் பட்டி
யலில் 66 அதிகாரங்கள். இதிலே முக்கியமில்லாத அதிகாரங்கள் 30;
முள்ளு முனையிலே மூன்று குளம் வெட்டினேன்; இரண்டு குளம்
பாழ்; ஒன்றில் தண்ணீர் இல்லை: என்ற கதையைப் போல்,
66 அதிகாரங்களில் 30 அதிகாரங்கள் முக்கியமே இல்லாதவை.
22 அதிகாரங்கள் வரி விதிப்பைப் பற்றிய அதிகாரங்கள். இந்த
30-ல் முக்கியத்துவம் இல்லாத அதிகாரங்களின் பட்டியலை படிக்
கிறேன். கால்நடைகள் அடைக்கும் பட்டிகள்—பவுண்டுகள்—
பெரிய அதிகாரம், கால்நடை ட்ரெஸ்பாஸ்களை தடுக்கிற அதி
காரம்: வனவிலங்கு, பறவைகள் பாதுகாக்கிற அதிகாரம்:
மார்க்கெட்டுகள், சந்தைகள் போன்ற அதிகாரம், எடைகள்
அளவுகள்: (யாருக்காவது மந்திரிகளுக்கு இலாக்கா குறைவாக
இருக்குமானால் அதைத்தூக்கித்தான் முதலமைச்சர் அந்த
மந்திரிக்கு கொடுப்பார்.) எடைகள் அளவுகள் என்ற அந்த
அதிகாரம்: அரங்குகள், நாடகம். பொழுதுபோக்கு, கேளிக்கை:
அத்துடன் சினிமா: (சினிமாவிலே சென்சார் தவிர: அதுவும்
மாநிலங்களுக்குக் கிடையாது.) பந்தயம், சூதாட்டம், உள்நாட்டு
யாத்திரை (அதுவும் வெளிநாட்டு யாத்திரை இல்லை; உள்நாட்டு
யாத்திரை.) சத்திரம், சாவடி, இடுகாடு, சுடுகாடு, ஊனமுற்
றோர், பிச்சைக்காரர்கள் நல்வாழ்வு: இவைகள் எல்லாம் அதி
காரங்களா? அல்லது ஒரு மாநில அரசு நிறைவேற்ற வேண்டிய
பொறுப்புகளா என்பதை எண்ணிப் பார்த்தால் இவைகள்
அதிகாரப் பட்டியலில் கூட வர முடியாது.

(பிற்பகல் 12-50)

Thiru K. S. G. HAJA SHAREEF : Mr. Speaker Sir, The schedule was drafted by the Constituent Assembly. These items were given by them to the Central and State Governments. If the Hon. Leader of the Opposition wants any change he can certainly represent to the Commission, and that can be got done. Instead he goes on telling, why it should have been done, for which he must only ask the Constitution makers.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பொதுப்பட்டியலிலே உயர்தரக் கல்வி இருப்பதாக மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். உயர்தரக் கல்வி அல்ல, எல்லா கல்வியையும் இப்போது எடுத்துக் கொண்டுவிட்டார்கள். அது அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டபோது செய்யப்பட்டதல்ல; இப்போது எமெர்ஜென்சி பீரியடிலே கல்வியை சேர்த்திருக்கிறார்கள். அது தவறு என்று தான் எல்லோரும் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நண்பர் ஹாஜா செரிப் அவர்கள் சமையல்காரர்களைப் பற்றி நான் குறை சொல்வதாக எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். சமையல்காரரை குறை சொல்கிறேன்; சமையலையும் குறை சொல்கிறேன்; சில நேரங்களில் உப்பு அல்லது காரம் அதிகமாகிவிட்டது என்று சமைத்தவர்களே கூட குறைபட்டுக்கொள்வதுண்டு. அதைப் போல அரசியல் சட்டத்தை உண்டாக்கிய அம்பேத்கார் போன்றவர்கள் கூட அது குறையுள்ளது என்று ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். எனவே தான் இங்கே எடுத்துச்சொல்லப்படுகிற கருத்துக்கள் வருகிற குழுக்களில் அல்லது கமிஷன்களில் ஆராயப்பட வேண்டுமென்று சொல்லப்படுகிறதே தவிர வேறு அல்ல என்பதை அவருக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். 1970 ஆம் ஆண்டில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும்; ஒட்டுமொத்தமாக சொல்வோமேயானால் மாநில சுயாட்சி வேண்டுமென்கிற கருத்தினை வலியுறுத்துகிற வகையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, கழகம் ஒன்றாக இருந்த அந்த காலக்கட்டத்திலே, சென்னையில் ஒரு மாநாட்டை நடத்தினோம். அந்த மாநாட்டிலே மேற்கு வங்கத்தினுடைய முன்னாள் முதலமைச்சரும், பழுத்த தேசியவாதியுமான அஜாய் முகர்ஜி அவர்கள் கலந்துகொண்டார்கள். அகாலிதள பொதுச் செயலாளர் பிரேம்சிங் லால்புரா அவர்களும் கலந்து கொண்டார்கள். தெலுங்கானா போராட்ட வீரரும் முன்னாள் ஆந்திர அமைச்சரான வி. பி ராஜூ, எம். பி. அவர்களும் கலந்துகொண்டார்கள். மைசூர் நாடாளுமன்ற உறுப்பினரும்



பி. சோ. கட்சியினுடைய உறுப்பினரும், இன்றைக்கு மத்திய அமைச்சருமான எஸ். எம். கிருஷ்ணா அவர்கள் கலந்துகொண்டு ஆற்றிய உரை வீர உரையாகும். வங்காள காங்கிரசின் பொதுச் செயலாளர், இன்றைய மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்களும் அன்றைக்கு அந்த மாநில சுயாட்சி மாநாட்டிலே கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.

பீகார் மாநில சோஷலிஸட் தலைவர் காமேஸ்வர் சிங் எம். பி. அவர்களும் கலந்து கொண்டார்கள்: பஞ்சாபைச் சேர்ந்த அகாலி தளக் கட்சியைச் சேர்ந்த திருமதி நிர்லிப் கவுர், எம். பி. அவர்களும் அந்த மாநாட்டிலே கலந்துகொண்டார்கள். அந்த மாநாட்டிற்கு வரவேற்புரை ஆற்றியது இன்றைய நிதியமைச்சர் தாமுடைய நாவலர் அவர்கள்தான் என்பதையும் நான் நினைவு படுத்துகின்றேன். ஏனென்றால், இந்த விவாதத்திலே இறுதியாக பதில் அளிக்கப்போவது அவர்தான் என்று நான் அவர் மூலமாகக் கேள்விப்பட்டேன். அப்பொழுது அவரிடம் கூடச்சொன்னேன், நான் பேசத் தேவையில்லையே, நீங்கள் பதில் அளித்தால் போதுமே என்றுகூட நான் அவரிடத்திலே சொன்னேன். அந்த அளவு, தனது வரவேற்புரையிலே மாநில சுயாட்சி எந்த அளவுக்குத் தேவை, ஏன் தேவை என்கிற விளக்கங்களையும தந்து அவர்கள் அன்றைக்கு உரையாற்றியிருக்கிறார்கள்.

மாநில சுயாட்சிக்காக ஒரு குழுவை அமைக்கவேண்டுமென்கின்ற கருத்து நாங்களாகவே கூட உருவாக்கிக்கொண்டது அல்ல. சென்னையிலே நடைபெற்ற மாநில சுயாட்சி மாநாட்டில், 21—7—1968 ஆம் ஆண்டில், அறிஞர் அண்ணா அவர்கள் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த காலகட்டத்தில் அண்ணா அவர்களும் ஈ. எம். எஸ். நம்பூதிரிபாத் அவர்களும் காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் அவர்களும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் எம். கல்யாணசுந்தரம் அவர்களும், சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்களும் கலந்துகொண்டார்கள். அப்பொழுது ஆங்கிலப் பத்திரிகையிலே வெளியிடப்பட்ட தலைப்பே கூட "Annadurai wants panel to conside State autonomy" என்பதுதான். மாநில சுயாட்சியைப் பற்றி ஆராய்ந்திட ஒரு குழு அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்தை அண்ணா அவர்கள் 1968 ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்தபொழுதே வெளியிட்டார்கள். அண்ணா அவர்களுடைய மறைவுக்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ராஜ்மன்னார் குழு—ராஜ்மன்னாரைத் தலைவராகக் கொண்டு, பல்கலைக் கழகத்தினுடைய துணை வேந்தர் இலட்சுமணசாமி அவர்களையும்,

(டாக்டர் மு. கருணாநிதி) [1983 மார்ச் 29

முன்னாள் நீதிபதி சந்திரா ரெட்டி அவர்களையும் உறுப்பினராகக் கொண்டு—மத்திய மாநில உறவுகளை ஆராய அமைக்கப்பட்டது. அந்தக் குழு அமைக்கப்பட்டு, பணியை ஆற்றிக் கொண்டிருந்த பொழுது என். டி. சி, கூட்டத்தில் டெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில்—நான் கலந்துகொண்டு, தமிழகத்தினுடைய மக்களின் சார்பாக, முதலமைச்சர் என்கிற முறையிலே உரையாற்றிய நேரத்தில் குறிப்பிட்ட வாசகங்களை இங்கே எடுத்துக் காட்டுவது பொருத்தமுடையதாக இருக்குமென்று நம்புகிறேன் ''கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் எதிர்பார்த்த அளவுக்குப் பலன் கிடைக்கவில்லை என்று அரசியல் தலைவர்களும் பொருளாதார வல்லுநர்களும் வெளிப்படையாகவே கூறிவிட்டார்கள். அதற்குக் காரணம், திட்டம் வகுப்பதற்கும் செயல்படுத்துவதற்கும் வேண்டிய எல்லா அதிகாரங்களையும் ஒரே இடத்திலே குவித்துவைத்திருப்பதுதான். குறிப்பாக கல்வி. விவசாயம், மருத்துவம், தொழில்கள் போன்றவற்றில் மத்திய அரசு அதிகப் பிடிப்பு வைத்திருப்பது தேவையற்றது. அது நாட்டின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது நாங்கள் அடிக்கடி கூறி வருவதுபோல், இந்திய நாட்டில் பாதுகாப்பு வெளிநாட்டு விவகாரம், கரன்சி, தபால்-தந்தி, ரெயில்வே, போன்ற முக்கியமான ஒருசில துறைகளைத் தவிர்த்து பிற துறைகளின் அதிகாரங்களை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளித்தால் திட்டம், நாம் அனைவரும் விரும்பும்வண்ணம் செம்மையாகச் செயல்படவும், நாடு முன்னேறவும் வழிபிறக்கும். ஆகவேதான் மாநிலத்திலே சுயாட்சி, மத்தியிலே கூட்டாசி வேண்டுமென்று நாங்கள் சொல்லி வருகின்றோம். இம்மாதிரி சொல்வதால் நாங்கள் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் வலுவான மத்திய அரசு இருக்க வேண்டுமென்ற கொள்கைக்கும் முரண்பட்டவர்கள் அல்லவே அல்ல. மத்தியிலே வலுவான ஆட்சியிருந்தால்தான் மாநிலங்களுக்கிடையே ஏற்படக்கூடியே சிக்கல்களைத் தீர்த்து உள்நாட்டு அமைதியைப் பாதுகாக்க முடியும். ஆனால், இன்றைய தினம் மத்திய அரசானது சிக்கல் இல்லாத துறைகளில் சிக்கலை உண்டாக்குவதும், சிக்கல் இருக்கக் கூடிய இடங்களில் சிக்கலைத் தீர்க்க முடியாது தவிப்பதுமான சூழ்நிலையிலேயே இருக்கிறது. இந்நிலை தவிர்க்கப்பட வேண்டுமானால், அரசியல் சட்டத்தை மாற்றியமைக்கவேண்டும். இப்பொழுது இருக்கும் அரசியல் சட்டமானது ஒரே கட்சி எல்லா மாநிலங்களிலும், மத்தியிலும் ஆட்சிபுரியும் என்ற ஒரு திடமான நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. ஆனால், காலம் அதை ஏற்றுக் கொள்ளவில்லை இருபது ஆண்டுகளுக்குப் பிறகு பல்வேறு மாநிலங்களில் பல்வேறு மாநிலக்கட்சிகள் ஆட்சிக்கு வந்திருக்கின்றன. ஆனால் மத்தியில்வேறு ஒரு கட்சி ஆட்சிப்பொறுப்பை வகிக்கிறது.



1983 மார்ச் 29] [டாக்டர் மு. கருணாநிதி]

(பிற்பகல் 1—00)

இம்மாதிரியான மாறுபட்ட சூழ்நிலையில் மத்திய அரசு உருவாக்கும் ஒவ்வொரு கொள்கையையும் அந்தந்த மாநில அரசுகள் ஏற்றுக் கொள்ளும் என்று எதிர்பார்ப்பது சரியானதல்ல. எனவே விரைவில் அரசியல் சட்டத்தில் திருத்தத்தைக் கொண்டு வருவது, தேசீய ஒருமைப்பாட்டிற்கும், நாட்டின் பாதுகாப்பிற்கும் நல்லது என்று என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன் .'' இதைத் தான் 21—3—1970-ல் டில்லியிலே நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில், தேசீய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் நான் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறேன். ஏன் அதனை இப்போது குறிப்பிடுகிறேன் என்றால், 1970—71-ஆம் ஆண்டிலேயே மாநில சுயாட்சிக்கான கருத்துக்கள் ஆராயப்பட்டன.

நம்முடைய நண்பர் உமாநாத் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். 1977ஆம் ஆண்டு மேற்கு வங்காளத்தில், அசோக் மித்ரா (அவர் அந்த மாநிலத்தினுடைய நிதியமைச்சர் என்று நினைக்கிறேன்.) அவர்களைத் தலைவராகக் கொண்டு ஒரு நபர் கமிஷன் ஒன்று அமைக்கப்பட்டு, அதனுடைய கருத்துக்கள் அன்றைக்கு இருந்த ஜனதா ஆட்சியினுடைய தலைமை அமைச்சர் மொரார்ஜி தேசாய் அவர்களுக்கு அனுப்பப்பட்டு, அவைகளை அவர் புறங்கணித்து விட்டார் அல்லது ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார் அல்லது அதை அக்கறையற்ற தன்மையிலே விட்டுவிட்டார் என்று கொள்ள வேண்டிய சூழ்நிலை 1977ஆம்ஆண்டு ஏற்பட்டது. 1974-ஆம் ஆண்டு ராஜமன்னார் அறிக்கை வெளி வந்ததும், மாநில அரசின் சார்பிலே பிரதமர் இந்திரா அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்த அறிக்கை தனக்கு வந்து சேர்ந்ததாகவும், அதைப் பற்றி முதலமைச்சர்கள் எல்லோருடனும் கலந்து பேசி முடிவெடுக்க இருப்பதாகவும் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் அப்போது தமிழக அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். இப்பொழுது மேலும், ஒரு கட்டமாகத்தான் தென் மாநில முதலமைச்சர்கள் மாநாடு நடைபெற்றிருக்கிறது என்பதை நான் மிகுந்த பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எத்தகைய கட்டங்களையெல்லாம் தாண்டி வந்திருக்கிறது. ஆனால் இங்கே நம்முடைய இந்திராகாங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் சித்தன் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்—'' இருக்கின்ற அதிகாரங்களை வைத்துக்கொண்டு இந்த அரசு என்ன சாதித்து விட்டது'' என்று கேட்டார். ''மேலும் அதிகாரங்களைக் கேட்கிறீர்களே ; எதிர் கட்சித் தலைவர் உங்கள் மீது எவ்வளவோ குறைகளை சொல்லியிருக்கிறாரே. அதற்கெல்லாம் பதிலே சொல்ல

முடியாத நீங்கள் ஏன் மேலும் அதிகாரங்களைக் கேட்கிறீர்கள் ?
என்று என்னை அவர் துணைக்கு அழைத்தார். இந்த விவகாரத்
தில் நான் அவரோடு துணைக்குச் செல்லத் தயாராகயில்லை.
ஏனென்றால் 1974ஆம் ஆண்டு இந்தத் தீர்மானத்தை நான் முன்
மொழிந்து, பேரவைத் தலைவரவர்களே, நீங்கள் அமைச்சராக
இருந்து, நம்முடைய நாவலர் அவர்கள் முன்னவராக இருந்து,
நம்முடைய பண்ணுருட்டி அவர்கள் அமைச்சராக இருந்து, வர
லாற்றுப் பிரசித்தி பெற்ற தீர்மானம் ஒன்று நாம் எல்லாம் வாயார
மனமார மகிழ்ந்து தீர்மானத்தை நிறைவேற்றிய நேரத்திலே,
இன்றைக்கு சித்தன் என்ன பேசினாரோ அதையேதான் அண்ணா
திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் அன்றைக்கு எதிரே
யிருந்து பேசினார்கள். " இருக்கின்ற அதிகாரத்தை வைத்து
என்ன சாதித்து விட்டீர்கள், இருக்கின்ற அதிகாரத்தை வைத்து
தமிழகத்தை கெடுத்தது போதாதா " என்று சொல்லிய
வார்த்தைகளையெல்லாம் எடுத்துக் கொண்டால், வேடிக்கையாக
இருக்கும். இன்றைக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த
கருப்பையா அவர்கள் மிக அழகாக அரசியல் சட்டம் திருத்தப்பட
வேண்டியிருக்கிறது, என்று கூறினார்கள். ஆனால் அன்றைக்கு
கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கொடுத்த திருத்தம் என்ன தெரி
யுமா? காங்கிரஸ்காரர்களுடன் சேர்ந்து கம்யூனிஸ்ட்டும்,' ஒரே
மாதிரியான திருத்தத்தைக் கொடுத்தார்கள்.

கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரை திரு. கே. டி. கே.
தங்கமணியும், காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு. ஏ. ஆர். மாரி
முத்து அவர்களும் கீழ்க்கண்ட திருத்தத்தைக் கொடுத்தார்கள்.

"THIRU K. T. K. THANGAMANI : Sir, I move the following amendment :

This House, having conside ed the va ious ecommendations of the Rajamanna Committee a d also the views of the Tamil Nadu State Gove nment is of opinion that no cunstitutional ame dment in necessa y in the matter of Cen re-State relations.

THIRU A. R. MARIMUTHU : Sir, I move th following amendment :

This House, having conside ed th various recommendations of the Rajamannar Committee and also the views of the Tamil Nadu State Government is of opinion that no constitutional amendment is necessary in the matter of Centre-State relations."



இரண்டு கட்சிகளும் ஒரே மாதிரியான திருத்தம் கொடுத்த
போதிலும் இப்போது அவர்கள் (கம்யூனிஸ்டுக்காரர்கள்) மாறி
விட்டார்கள். ஆனால் காங்கிரஸ்காரர்கள் இன்னும் மாற
வில்லை என்பதை நான் வருத்தத்தோடு குறிப்பிடுகிறேனே
அல்லாமல், வேறல்ல. அரசியல் சட்டத்திலே திருத்தமே
தேவையில்லை என்று இந்திய கம்யூனிஸ்டு கட்சி அன்றைக்கு ஒரு
தீர்மானத்தைக் கொடுத்தது. ஆனால், அ. தி. மு. க. உறுப்
பினர்கள் அரசியல் சட்டத்திலே திருத்தம் தேவை தான், இன்னும்
சொல்லப் போனால், மாநில சுயாட்சிகூட தேவை தான். ஆனால்,
திராவிட முன்னேற்றக் கழகத்தின் கையில் மாநில சுயாட்சி தரக்
கூடாது என்று சொன்னார்கள்.

இது ஒரு கொள்கை பிரச்சினையே தவிர, யாரிடத்திலே
சுயாட்சியைத் தருவது, யாரிடத்திலே அதிகாரத்தைத் தருவது
என்பது பிரச்சினை அல்ல. எனவேதான் ஆயிரம் குறைகள் இருக்
கலாம். அவைகளை இந்த மாநிலத்திற்குள்ளே நாம் தீர்த்துக்
கொள்ளலாம். குறைகளை எடுத்துச் சொல்லி, 5 ஆண்டுகளுக்கு
ஒரு முறை இந்த அரசு வேண்டாம், இன்னொரு அரசு வரட்டும்
என்று தீர்ப்பு அளிக்கக்கூடிய வாய்ப்பு மக்களுக்கு இருக்கின்ற
காரணத்தால், மாநிலத்திற்குள்ளே இருக்கின்ற குறைபாடுகளை
நாங்கள் பார்த்துக் கொள்கிறோம், எங்களுக்குள்ளே இருக்கின்ற
சண்டையை—அதாவது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்
திற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் நான் சொல்ல
வில்லை—மாநிலத்திற்குள்ளே இருக்கின்ற சங்கடங்கள், சிக்கல்
கள், தொழிலாளர்கள் பிரச்சினையிலோ, அல்லது வேறு பிரச்
சினையிலோ இருக்கின்ற சிக்கல்கள், இவைகளை எல்லாம் வைத்து
எப்படி பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவைப் பிரித்தாள எண்ணினார்
களோ, அதைப்போல மாநிலங்களைப் பிரித்து ஆளுகின்ற எண்
ணம் மத்தியிலே இருப்பவர்களுக்கு வரக்கூடாது என்று நான்
மிக மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதுமாத்திரம் அல்ல. மாநில சுயாட்சித் தீர்மானம் இங்கே
ராஜமன்னார் கமிட்டியினுடைய பரிந்துரையின் அடிப்படையிலே
இந்த அவையிலே வந்தபோது This is a very mischievous
என்றெல்லாம், இன்றைக்கு அமைச்சராக இருக்கின்ற நண்பர்
டாக்டர் ஹெண்டே அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள்
This is a very mischievous என்றுகூட அன்றைக்குச்
சொன்னார்கள். அவர்கள் இன்னொன்றையும் சொன்னர்கள்.

Who are going to be in the Inter State Ccuucil after ull the Chief Ministers of different states. "After all." "After all Chief Ministers."

[டாக்டர் மு. கருணாநிதி] [1983 மார்ச் 29

அப்பொழுது நான் சீப் மினிஸ்டராக இருந்த காரணத்தால், எல்லா சீப் மினிஸ்டர்களும்—ஆப்டர் ஆல் சீப் மினிஸ்டர்களாக அன்றைக்கு இருந்தார்கள். அந்த நிலைமைகள் எல்லாம் இன்றைக்கு மாறி இருப்பதைப் பார்த்து நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற துணைத் தலைவராக இருந்த என்னுடைய அருமை நண்பர் எட்மண்ட் அவர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா ? மாநில சுயாட்சி என்று இருப்பதால், அது எப்படி இருந்தாலும் நாங்கள் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்று திட்டவட்டமாகச் சொன்னார்கள். அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். '' எங்களுடைய சந்தேகம் எல்லாம்—(எட்மன்ட் அவர்கள் சொன்னது)— இருக்கின்ற அதிகாரத்தை நீங்கள் எந்த வகையிலே பயன்படுத்தியிருக்கிறீர்கள் என்பதைப் பார்க்கும்போதுதான் சந்தேகம் எழுகிறது என்று சொன்னார்கள். படி அரிசித் திட்டத்தை ஒழித்து விட்டீர்கள் (நான் கேட்கிறேன். இப்போது என்ன படி அரிசி திட்டத்தை மறுபடியும் அமுலுக்கு கொண்டு வந்தா அதிகாரம் கேட்கிறோம், இல்லை) மதுவிலக்கை ஒழித்துவிட்டீர்கள். சாராயக் கடைகளை திறந்துவிட்டீர்கள். இப்போது அதிகாரம் கேட்கலாமா '' என்று எட்மண்ட் அவர்கள் கேட்டார்கள். இப்போது என்ன, சாராயக் கடைகளை எல்லாம் மூடிவிட்டா அதிகாரம் கேட்கிறோம். ஆகவே, மாநிலத்திற்குள்ளே இருக்கின்ற பிரச்சினைகள் வேறு, பொதுவான பிரச்சினைகள் வேறு என்பதை எடுத்துக் காட்டத்தான் இதைச் சொன்னேனே தவிர, வேறு அல்ல. இன்னொன்றையும் கூட நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த ராஜமன்னார் கமிட்டி புத்தகத்தைப் பற்றி நம்முடைய எட்மண்ட் அவர்கள் சொன்னார்கள். '' இது சட்டமன்ற உறுப்பினர்கள் படிப்பதற்கு தகுதி உள்ள புத்தகம் அல்ல. உயர்நிலைப் பள்ளியிலே படிக்கின்ற மாணவர்களுக்குக்கூட பயன்படாது. இதிலே எந்தவிதமான கருத்தும் இல்லை. குப்பைக் கூடையிலே தூக்கி எறியப்பட வேண்டிய அறிக்கை என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.''

ராஜமன்னார் கமிட்டி அறிக்கையை குப்பைக் கூடையிலே தூக்கி எறியச் சொன்னார். ஆனால் பெங்களூர் மாநாட்டில் அதைக் குப்பைக் கூடையிலேயிருந்து எடுத்து அதிலுள்ள பல திருத்தங்களை இன்றைக்கு ஏற்றுக்கொள்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றதைப் பார்க்கும்போது, அன்றைக்கு நாவலர் அவர்கள் தீர்க்கதரிசனமாக சொன்ன, ஒரு வார்த்தை, இன்றைக்கு எந்த அளவிற்கு பலித்திருக்கிறது என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அன்றைக்கு சொன்னார்கள் நாவலர் அவர்கள். இங்கே பேசும்போது மாநில சுயாட்சித்



1983 மார்ச் 29) [டாக்டர் மு. கருணாநிதி]

தீர்மானத்தில் நான் இறுதியாகப் பேசுவதற்கு முன்பு நாவலர் அவர்கள் பேசினார்கள். அப்போது சொன்னார். '' மாநிலத்திலே சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி என்ற அடிப்படையிலே மாநிலங்களுக்கு என்னென்ன அதிகாரங்கள் தரப்பட வேண்டும் என்பதை ஆராய ராஜமன்னார் குழு போடப்பட்டு அவர்களுடைய அறிக்கை தந்ததற்குப் பின்னாலே இதிலே என்ன என்ன மாற்றங்களைச் செய்யலாம் என்று அரசு ஆராய்ந்து அந்த அடிப்படையிலேதான் நாம் வெள்ளை அறிக்கை வைத்திருக்கிறோம். தீர்மானம் கொண்டு வந்திருக்கிறோம். எந்த எந்த அதிகாரங்கள் அப்படி மாற்றப்படலாம் என்று சொல்லியிருக்கிறோம். அப்படி மாற்றப்பட்டால்தான் புது வாழ்வு ஏற்படும், நல்லாட்சி மலரும். இந்தக் கருத்துக்கு எதிர்ப்பு இருந்தாலும் ,10,15 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்ததைவிட இப்போது இந்தக் கருத்துக்கு வலிவு ஏற்பட்டுக் கொண்டு வருகிறது. அரசியல் தலைவர்களும், மாநில அரசுகளும், முதல் அமைச்சர்களும், பல்வேறு அரசியல் கட்சிகளும் ஆக்கம் தருகிறார்கள். இன்றைக்கு நாம் செடியை நட்டிருக்கிறோம். அந்தச் செடி மரமாகி, பூத்து, காய்த்து, கனிந்து பழத்தைத் தரும் என்ற நம்பிக்கை உண்டு என்று நாவலர் அவர்கள் சொன்னார்கள். நாவலர் அவர்களே, அன்றைக்கு 1974-ஆம் ஆண்டு நாமெல்லாம் சேர்ந்து நட்ட அந்தச் செடி இன்றைக்கு பூத்துக் காய்த்து இருக்கிறது. கனியும் நாள் தொலைவிலே இல்லை என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு இருக்கின்ற வேதனை எல்லாம் ஆளும் கட்சி எது ? எதிர்க்கட்சி எது ? ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் பல்வேறு வகையான, மனக்கசப்புகள், மாச்சரியங்கள் எவை என்பதைப் பற்றி எண்ணிப்பார்க்காமல் இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும். அன்றைக்குக்கூட நண்பர் ஹண்டே அவர்கள், மன்னிக்க வேண்டும், இன்றைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உங்களிடத்திலே மாநில சுயாட்சி தரமுடியாது என்று சொன்னார்கள். நான் சொன்னேன். '' வேண்டாம், நீங்கள் வந்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுங்கள், எதிர்காலத்திலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்து மாநில சுயாட்சித் தீர்மானத்தை இந்த அவையிலே கொண்டுவருமேயானால், அதை ஆதரிக்கிற முதல் ஆளாக கருணாநிதி இருப்பான் '' என்று நான் அன்றைக்குச் சொன்னேன். ஆகவே கொள்கைரீதியிலே சில விஷயங்களை அணுக வேண்டும். சின்னச் சின்ன பிரச்சினைகள், சிக்கல்கள், மனமாச்சரியங்கள், கட்சி மாச்சரியங்கள் இவைகளுக்கு அப்பாற்பட்டு மத்திய மாநில உறவுகளை நாம் ஆராயவேண்டும்.

(பிற்பகல் 1-10)

(டாக்டர் மு. கருணாநிதி) [1983 மார்ச் 29

356-பிரிவைப் பற்றி இங்கே பேசிய கட்சியின் தலைவர்கள்
எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். 356-பிரிவு என்பது என்ன?
அதுதான் ஒவ்வொரு மாநில சர்க்காருடைய தலையிலும்
தொங்கிக்கொண்டு இருக்கும் கொடுவாள். அந்த வாள் தான்
எந்த நேரத்திலும் குடியரசுத் தலைவர் சில காரணங்களைச் சுட்
டிக்காட்டி ஒரு மாநில ஆட்சியைக் கலைக்க முடியும் என்பது
அந்த வாள் ஆகும். அந்தக் கொடுவாளுக்கு தப்பிய கட்சி
ஏதாவது இங்கே இருக்கிறதா, நான் கேட்கிறேன். கம்யூனிஸ்ட்
கட்சி ஆட்சி அந்த 356-பிரிவின்படி கலைக்கப்பட்டது ஒரு முறை
அல்ல, இரண்டு முறை. திராவிட முன்னேற்றக் கழகம் அந்தக்
கொடுவாளுக்குத் தப்பவில்லை. கலைக்கப்பட்டு இருக்
கிறது. ஜனதா மத்தியில் அரசுக்கு வந்ததும் காங்கிரஸ்
ஆட்சிகள் 9 மாநிலங்களில் கலைக்கப்பட்டன. பிறகு இந்திராக்
காங்கிரஸ் கட்சி அங்கே ஆட்சிக்கு வந்ததும், ஜனதா கட்சி
ஆண்ட மாநில ஆட்சிகள் கலைக்கப்பட்டன. அ.தி.மு.க.
ஆட்சி கலைக்கப்பட்டது. இன்னும் மற்ற கட்சிகள் எல்லாம்
வளர்ச்சியடையாத காரணத்தால் கலைக்கப்படவில்லையே தவிர,
ஆகவே, ஒரு பெரிய பரிசு நாம் எல்லோருமே கலைக்கப்பட்ட
கட்சியைத் சேர்ந்தவர்கள்தான். கலைக்கப்பட்ட ஆட்சி
களைச் சேர்ந்தவர்கள்தான். எனவே இப்படிப்பட்ட பொதுவான
நோக்கத்தோடு பார்த்தாலும்கூட—இது இந்திரா காங்கிரஸ்
கட்சிக்கும் கூடாத ஒரு பிரிவுதான் என்பதை நண்பர் சித்தன்
அவர்களும், ஹாஜா ஷெரீப் அவர்களும் உணர்ந்து கொள்ள
வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். இந்த 356 பிரிவிலே
ஒரு வேடிக்கை என்ன இருக்கிறது என்று சொன்னால், ஒரு
மாநில அரசைக் கலைக்க வேண்டுமானால்

Art.356 of the Constitution : "If the P esident, or receipt of a
report from the Governor of a St te or otherwise..,

கவர்னருடைய ரிப்போர்ட்டைக்
கொண்டோ, அல்லது அந்த ரிப்போர்ட் இல்லாமலேயோ கலைக்
கலாம் என்று இருக்கிறது. ஆனால் இன்றைக்கு பெங்களூரில்
மாநாட்டைக் கூட்டியவர் ஜனதா கட்சியைச் சேர்ந்தவர் என்றா
லும்கூட முதன்முதலாக கவர்னருடைய ரிப்போர்ட் இல்லாமல்

If the Pr sident, on receipt o a report from the Governor of
State or otherwise...."

என்று இருக்கிறதே, அதிலே அந்த 'அதர்வைஸ்' என்ற
வார்த்தையைப் பயன்படுத்தி 9 மாநில ஆட்சிகளை அன்றைக்
குக் கலைத்தது ஜனதா கட்சியின் ஆட்சி என்பதை நாம் மறந்து
விடக்கூடாது. குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. ஒரு வேளை



1983 மார்ச் 29] (டாக்டர் மு. கருணாநிதி)

நாமே கூட மத்தியில் இருந்தால் அதைச் செய்வோமோ
என்னவோ. ஏனென்றால் அப்படிப்பட்ட அதிகாரக் குவியல்
களை வைத்துக்கொள்ளவேண்டும் என்ற ஆசை மத்தியில் இருப்
பவர்களுக்கு வந்து விடுகிறது.

இங்கே பேசிய நண்பர்கள் எடுத்துக்காட்டியதைப்போல,
ஜனதா கட்சியினுடைய தேர்தல் பிரகடனத்திலே கூட மாநில
உரிமைகள் தாராளமாக வழங்கப்படும் என்றுதான் சொல்லப்
பட்டு இருக்கிறது. ஆனால் தரப்பட்டதா? ஜனதா கட்சி
ஆட்சி காலத்தில் ராஜ்ய சபையில் முரசொலி மாறன்—கழக
உறுப்பினர்—356 பிரிவையே எடுத்து விட வேண்டும்—இஷ்டத்
திற்கு மாநில அரசுகளைக் கலைக்கின்ற அதிகாரம் இருப்பதை
எடுத்து விடவேண்டும் என்று தீர்மானம் கொண்டு சென்ற
போது அதை ஆதரித்து மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்
பினர்களும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் மாறனின்
தீர்மானத்தை ஆதரித்து அந்தப் பிரிவு அகற்றப்படவேண்டும்
என்று சொன்னபோது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக
உறுப்பினர்கள் மௌனமாகவும் இருக்கவில்லை. ஆதரிக்கா
மலும் இருக்கவில்லை, எதிர்த்தே வாக்களித்தார்கள், மாநில
அரசுகள் கலைக்கப்படவேண்டும் என்பதற்கு ஆதரவாக முர
சொலி மாறனின் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தார்கள்.

ஆனால் எனக்கு இருக்கும் மகிழ்ச்சி எல்லாம் அந்த நிலைமை
யெல்லாம் மாறி, இப்போது நம்முடைய பட்ஜெட்டிலே, இந்த
ஆண்டு படிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையிலே, நம்முடைய
நாவலர் அவர்கள் மிக அழகாக குறிப்பிட்டு இருக்கிறார்கள்.
நான்கூட நாவலர் அவர்கள் கழகத்தை விட்டு அங்கே சென்ற
போது மெத்த வருத்தப்பட்டேன். இப்போது கொஞ்சம்
மகிழ்ச்சி எனக்கு. அங்கே சென்றதால் அல்லவா நம்முடைய
கருத்தை அவர் வாயாலே சொல்ல வைக்க முடிகிறது என்கிற
ஒரு மகிழ்ச்சி கூட எனக்கு இருக்கிறது.

"This Government has been, constan ly stressing the need for
autonomy of the States with adequate powers, without in any way
affecting national integration...."

என்று அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இந்திய ஒரு
மைப்பாட்டுக்கு ஊறு தேடாவண்ணம், மாநில சுயாட்சி—
ஸ்டேட் அடானமி—அன்று கூட முதலமைச்சர் சொன்னார்—
ஸ்டேட் அடானமி என்ற வார்த்தையை நான் மறுக்கிறேன்
என்று கூட சொன்னார்—ஸ்டேட் அடானமி என்பதை நம்
முடைய நாவலர் அவர்கள், நிதி அமைச்சர் அவர்கள், பட்ஜெட்
உரையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். உமாநாத் அவர்கள்

(டாக்டர் மு. கருணாநிதி) [1983 மார்ச் 29

கூட இங்கே பேசும்போது குறிப்பிட்டார்கள். ஸ்டேட் அடானமி என்பது பிரிவினை வாதம் என்று சொல்லப்படுமானால், நாம் கேட்கிற அந்த உரிமையை மட்டும் பிரிவினை வாதம் என்று சொல்லாமலா இருக்கிறார்கள். பெங்களூரில் நடைபெற்ற மாநாட்டை ஒப்புக்கொண்டார்களா? பிரிவினை வாதம் என்ற குற்றச்சாட்டுக்கு ஒரு படி மேலே போய், தேசத் துரோகம் என்றே சொல்லிவிட்டார்கள். அதை ஒரு பிராந்திய பித்து என்றே சொல்லிவிட்டார்கள். நாட்டைக் குலைக்கக் கூடிய காரியம் என்றே கூட கூறிவிட்டு இருக்கிறார்கள். எனவே, இந்தத் தீர்மானத்தை இன்றைக்கு வரவேற்பது மாத்திரம் அல்ல, இந்த அரசு இரண்டாவது கட்டமாக 1974 ஆம் ஆண்டு இங்கே மாநில சுயாட்சி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது போல், அதைப்போலவே இரண்டாவது கட்டமாக மற்றொரு மாநில சுயாட்சித் தீர்மானம் இங்கே நிறைவேற்றுவதற்கு வழி வகை செய்யவேண்டும். அதுதான் இந்தத் தீர்மானத்தின் சரியான எதிரொலியாக இருக்கும் என்று கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. ரா. உமாநாத் :** சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்வார்கள் என்று தெரியவில்லை; அதற்குப் பின்னால் நான் பேச வேண்டும். அதிக நேரமாகுமானால் நாளை வைத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவ :** அப்படியானால் கேள்வி நேரம் வேண்டாமா?

**திரு. என். சங்கய்யா :** கேள்வி நேரம் இருக்கட்டும். அது முடிந்தவுடன் அவர்கள் கொடுத்த தீர்மானத்திற்கான பதில் உரையை வைத்துக்கொள்ளலாம். மானியக் கோரிக்கைககள் மீதான விவாதத்திற்கு நேரம் போதவில்லை என்றால் நாளை மாலையிலும் வைத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 30-3-1983 காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-16 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.





## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

219. சமய நிறுவனங்களின் அறங்காவலர்களுக்கு பயணப் படிகள் வழங்குதல் தொடர்பான விதிகளில் சில திருத்தங்கள் செய்வது தொடர்பாக வணிக வரி—அறநிலையத்துறையின் 22-1-1983 ஆம் நாளிட்ட 81 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய—அறக்கட்டளைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

220. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக வணிக வரி—அறநிலையத்துறையின் 29-7-1982 ஆம் நாளிட்ட 882 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

221. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் 1979-80 ஆம் ஆண்டிற்கான முதலாம் ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

222. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் 1980-81 ஆம் ஆண்டிற்கான இரண்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

132. பெங்களூரில் 20-3-1983 ஆம் நாளன்று நடைபெற்ற தென் மாநிலங்களான ஆந்திரப்பிரதேசம், கருநாடகம், தமிழ் நாடு ஆகிய மூன்று மாநிலங்கள், மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியைச் சேர்ந்த புதுச்சேரி ஆகியவற்றின் முதலமைச்சர்கள், நிதி அமைச்சர்கள் பேரவையில் மேற்கொள்ளப்பட்ட ஒருமித்த கருத்துக்கள் பற்றிய அறிக்கை.

## இணைப்பு I.

258-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 581-க்கான விடையைக் காண்க.)

(அ) கோவை மாவட்டம், மருதமலை ஆண்டவர் கோயிலுக்கு நிலம் மற்ற சொத்துக்கள என்ன உள்ளது?

கோவை மாவட்டம், அருள்மிகு மருதமலை ஆண்டவர் கோயிலுக்கு சொந்தமான நிலங்கள் விபரம் பின்வருமாறு:—

| | விவசாய நிலங்கள். | | விவசாயமல்லாத நிலங்கள். | |
|---|---|---|---|---|
| | ஏ. | செ. | ஏ. | செ. |
| நஞ்சை .. .. | 5 | 31 | 1 | 53 |
| புஞ்சை .. .. | 11 | 27 | 7 | 08 |
| மொத்தம் .. | 16 | 58 | 8 | 61 |

மேற்கண்ட நிலத்தைத் தவிர மருதமலையின் அடிவாரத்தில் ஒரு கட்டிடம் உள்ளது.

(ஆ) சொத்துக்களிலிருந்து வருமானம் என்ன?

விவசாய நிலங்களிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு ரூ.3,150 வருமானம் கிடைக்கிறது. மருதமலையின் அடிவாரத்திலுள்ள கட்டிடத்தின் மூலம், ஆண்டு ஒன்றுக்கு ரூ. 24 அஞ்சலகத்திற்கு வாடகைக்கு விடப்பட்டதன் மூலம் வருமானம் கிடைக்கிறது.

சோமையாம்பாளையம் கிராமத்தில் 12 கடைகள் புறம்போக்கு நிலத்தில் உள்ளன. அவைகள் ஆலய அனுபவத்தில் 1947-ம் ஆண்டு முதல் இருந்து வந்து, மேற்படி அனுபவ பாத்தியத்தில் 1961-ம் ஆண்டு சோமையாம்பாளையம் ஊராட்சித்தலையிட்டதால், ஆலய சார்பில் கோவை மாவட்ட முன்சிப் நீதிமன்றத்தில் ஓ.எஸ்.எஸ். 315/81 என்ற வழக்குத் தொடரப்பட்டது. இவ்வழக்கு சமரசம் செய்யப்பட்டு வருமானத்தினை ஒரு ரூபாயில் 56 பைசா பஞ்சாயத்திற்கும் 44 பைசா ஆலயத்திற்கும் என்ற விகிதத்தில் பிரிக்கப்பட வேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஏலம் தொடர்பான செலவுத்





தொகைகளும் இதே விகிதத்தில் பிரிக்கப்பட வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இக்கடைகளை ஏலம் விடுவதன் மூலம் ஏலத் தொகையில் 44 சதவீதமாக 1—12—1981 முதல் 30—11—1982 முடிய உள்ள காலத்திற்கு ரூ. 18,757 மருதமலை ஆண்டவர் ஆலயத்திற்கு வரவு வந்துள்ளது.

(இ) வருமானத்திலிருந்து கோவிலின் செலவுகள் போக வருடம் என்ன மிச்சம் ஏற்படுகிறது?

கடந்த மூன்று பசலிகளில் செலவுகள் போக நிகர ஆண்டு வருமானம் பின்வருமாறு:—

| பசலி. | ரூ. |
|---|---|
| 1368 .. .. .. | 7,51,417·33 |
| 1389 .. .. .. | 7,38,528·78 |
| 1390 .. .. .. | 6,49,600·25 |

## இணைப்பு II.

(277-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 428-க்கான விடையைக் காண்க.)

(அ) ஆம்.

(ஆ) 1978 மற்றும் 1979 ஆம் ஆண்டுகளில் நீலகிரி மாவட்
டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவுகளால் மாவட்டத்தில் குறிப்பிட்ட
பகுதிகள் பாதிக்கப்பட்டன. நிலச் சரிவுகளால் அபாயம்
விளைவிக்கக்கூடிய பகுதிகளைக் கண்டறியவும், நிலச்சரிவு
களால் உண்டாகும் உயிர் மற்றும் பொருட்சேதங்களைத் தவிர்க்க
மாற்று வழிமுறைகளைக் கூறவும், புவியியல் ஆய்வுகளை,
இந்திய புவியியல் ஆய்வகத்தின் ஐதராபாத்தில் உள்ள தென்
மண்டலத்தைச் சேர்ந்த பொறியியல் பிரிவும், மாநில புவியியல்
பிரிவும் மேற்கொண்டன. இந்த ஆய்வின்போது பெரிதும்
சிறிதுமான நிலச்சரிவுகள் ஏற்பட்டிருந்த சுமார் 300 பகுதிகள்
குறிப்பிடப்பட்டன. நிலச் சரிவுகளின் முதுமையான கார
ணத்தை அறிய தேசீய தொலை தூர நுண் ஆய்வுக்கழகம்
மாவட்டம் முழுவதும் வான் புகைப்படங்கள் எடுத்தல் பல
வண்ணப்பட்டை ( Multispectral Scanner ) நுண்
ஆய்வு போன்றவைகளை மேற்கொண்டது. புவியியல் கனி
மங்கள் பொருட்களின் தன்மை, மண்ணின் தன்மை, பூமிக்கு
அடியில் இருக்கும் தண்ணீர் ஆகியவைகளின் தன்மைகளை
அறிய மேற்பரப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப்படவிருக்கிறது.
நிலச்சரிவு ஏற்பட்ட பகுதியில் பதினொன்று துளையிட்டு துரப்
பணிகள் நடத்தப்பட்டன. மண்ணின் தன்மையைச் சோதிக்க
150-க்கு அதிகமான 19 மீட்டர் ஆழத்திற்கு துளையிடப்பட்டன.
நிலச்சரிவைக் கண்டுபிடிப்பதற்கு அப்பகுதியை 5 மண்டலங்
களாகப் பிரிக்கப்பட்டன. முதல் மண்டலம், அதிக அளவு
நிலச்சரிவுகளால் பாதிக்கப்படாத பகுதி என்றும், ஐந்தாவது
மண்டலம் நிலச்சரிவுகளால் அதிகமாகப் பாதிக்கப்படும்
பகுதி என்று வரைப்படத்தின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டன.
இந்த வரைப்படத்தின் உதவியால் மாவட்ட அதிகாரிகள்
முன்னெச்சரிக்கையான தீர்வுகாண் முறைகளை எடுக்க முடியும்.

இந்திய புவியியல் ஆய்வுத் துறை விரைவில் நீலகிரி மாவட்ட
நிலச்சரிவு அறிக்கையை வெளியிடவிருக்கிறது.





## இணைப்பு III.

( 299-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.)

பெங்களூரில் 20-3-1983 ஆம் நாளன்று நடைபெற்ற தென் மாநிலங்
களான ஆந்திரப் பிரதேசம், கருநாடகம், தமிழ்நாடு ஆகிய மூன்று
மாநிலங்கள், மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதியைச் சேர்ந்த
புதுச்சேரி ஆகியவற்றின் முதலமைச்சர்கள், நிதியமைச்சர்கள்
பேரவையில் மேற்கொள்ளப்பட்ட ஒருமித்தக் கருத்துக்கள்.

(1) மத்திய மாநில நிதியுறவுகள் :

தென் மாநிலங்களின் வரி விதிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து
மன நிறைவளிக்கத்தக்க வகையில் அமைந்துள்ளன. எனினும்,
இம்மாநிலங்களின் நோக்கங்களை அடைவதற்குத் தேவையான
வற்றை நிறைவு செய்ய அவைகள் போதியனவாக இல்லை.
தற்போது கிடைக்கப்பெறும் நிதி ஆதாரங்கள் இந்திய அரசி
யலமைப்புச் சட்டத்தின்படி மாநிலங்கள் ஆற்றவேண்டிய கடமை
களுக்கு நிகராக இல்லை. மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்ளப்
படும் மொத்த நிதி ஆதாரத்தை அதிகரிக்க வேண்டியுள்ளது.
இதற்காக அடிப்படை வருமான வரியுடன் மேல் வரியை
இணைத்து, ஆயத்தீர்வையில் மாநிலங்களின் பங்கினை 40 சத
வீதத்திலிருந்து 50 சதவீதமாக அதிகரிக்க வகை செய்யலாம்.
மாநிலங்களால் பகிர்ந்து கொள்ளப்படும் நிதி ஆதாரத்தில் கூட்டு
நிறுவன (கார்ப்பரேஷன்) வரியையும் சேர்ப்பதோடு, மாநிலங்
களுக்கு 60 சதவீதம் அத்தொகையிலிருந்து கிடைக்கச் செய்ய
வேண்டும்.

(2) பின்தங்கிய மாநிலங்களுக்கு உதவியாக அமைவ
தோடன்றி முன்னேறிய மாநிலங்களுக்கும் போதியளவிற்கு நிதி
ஆதாரங்களுக்கு வகை செய்வதாகவும், நிதி ஆதாரக் கோட்
பாட்டை வகுக்க வேண்டும். விருப்புரிமையின்படி அமையாமல்,
நிதி ஆதாரங்களில் பெரும்பகுதி சட்டரீதியில் அளிக்கப்பட வேண்
டும். மேலும், விருப்புரிமையின்படி நிதி ஆதாரங்களை வழங்கு
வதற்குரிய நெறிமுறை, முதலமைச்சர்கள் குழுவால் தீர்மானிக்
கப்பட வேண்டும்.

(3) திட்டங்களுக்காக அளிக்கப்படும் மத்திய நிதி உதவியில்
கடன் பகுதியாக அளிக்கப்படும் தொகையைக் குறைப்பதன்
மூலம், மாநிலங்களின் கடன் சுமையைக் குறைக்க உதவும் வகை
யில், மத்திய-நிதி உதவி முறையை மாற்றியமைக்க வேண்டும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 275ஆம் பிரிவின்கீழ் மத்திய அரசு வழங்கும் மானியங்கள், மாநிலங்களின் வருவாய்ப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கு மாறாக, ஒவ்வொரு மாநிலத்தின் குறிப்பிட்ட தேவைகளை அடிப்படையாகக் கொண்டு, வழங்கப்பட வேண்டும்.

(4) நிவாரணச் செலவு :

வறட்சியால்/வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தக்க நிவாரணம் அளிக்க மாநிலங்களுக்கு இயலும் விதத்தில் ஏழாம் நிதிக்குழுவின் பரிந்துரையைத் திருத்தியமைக்க வேண்டும். நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக மாநில வரவு-செலவுத்திட்ட மதிப்பீட்டில், தற்போது உள்ள அளவிலேயே துவக்க உதவித் தொகைக்கு (Margin Money) வகை செய்யலாம். இருப்பினும், நிவாரணப் பணிகளுக்குரிய மத்திய உதவி திட்டம் சாராப்பணிகளுக்கு வழங்கப்படும் முறையில் இருக்க வேண்டும். அப்போதுதான் திட்ட முதலீடு குறையாமல் இருக்கும். வறட்சி நிவாரணப் பணிகள் குறித்த நிதி உதவியில் 75 சதவீதம் மானியமாகவும், 25 சதவீதம் கடனாகவும் இருக்க வேண்டும். வெள்ளம்-புயல் நிவாரணப் பணிகளைப் பொறுத்தமட்டில் வழங்கப்படும் மத்திய நிதி உதவியானது 100 சதவீதம் மானியமாக அமைய வேண்டும்.

(5) மிகைப்பற்று :

மிகைப்பற்று குறித்து மாற்றியமைக்கப்பட்ட ஒழுங்குமுறைகள், தங்களுடைய நிதி நிலைமையை முன்னரே நன்முறையில் நிருவகித்து வந்த மாநிலங்களுக்கு அநீதியை விளைவித்துள்ளன. மாநிலங்களின் பெருகிவரும் வரவு-செலவினங்களையும் தேவைகளையும் நிறைவு செய்ய, கீழ்க்காண்பனவற்றைச் செயற்படுத்தலாம்:—

(அ) எல்லா மாநிலங்களுக்கும் வழங்கப்படும் வழிவகை முன்பணங்களின் அளவினை மாநிலங்களுக்காக 1—7—82 ஆம் நாளன்று வரையறுக்கப்பட்ட வழிவகை முன்பணங்களைக் காட்டிலும் 50 சதவீதம் அதிகரிக்கலாம்.

(ஆ) 30—6—1982 ஆம் நாளன்றைய நிலவரப்படி மிகைபற்று வைத்துள்ள மாநிலங்களுக்கு, 31—3—1982 ஆம் நாளன்றைய நிலவரப்படி, மிகைப்பற்று வைத்திருந்த மாநிலங்களுக்கு வழங்கப்பட்டதைப் போன்று குறிப்பிட்ட காலக் கடன்களை வழங்கலாம்.





(6) மத்திய அரசு திட்ட உதவி வழங்கும் முறை :

மத்திய அரசு திட்ட உதவி வழங்குவதற்குத் தற்போது வழக்கில் உள்ள "காட்கில்" நடைமுறை மாற்றப்பட வேண்டும். மாநிலங்களின் நபர் வாரியான வருமானத்தைக் கணக்கிடுகையில், நிதி உதவி அடிப்படையைத் தீர்மானிப்பதற்கு, ஐந்தாண்டுக் கால சராசரிக் கணக்கைப் பின்பற்ற வேண்டும். இருப்பினும், மாநிலங்கள், அவற்றின் நிலை, தேவைக்கேற்ப நிறை முக்கியத்துவத்தை (Weightage) கருத்தில் கொள்ளலாம்.

(7) மாநிலங்களுக்குக் கணிசமான அளவு கூடுதல் வளவாயில்களை அளிக்கும் நோக்கத்துடன், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 269 ஆம் பிரிவின்கீழ் வரி விதிக்கப்பட வேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(8) மாநில அரசுக்குச் சேர வேண்டிய நிகர சிறுசேமிப்புத் தொகைப் பங்கை, 75 சதவீதமாக அதிகரிக்க வேண்டுமென்று நிதிக் குழு கேட்டுக் கொள்ளப்பட வேண்டும். சிறுசேமிப்பைப் பொறுத்த மட்டில் திட்டம் சாராப் பணிகளுக்கான, மூலதனப் பற்றாக்குறைக்கு என வழங்கப்படும் நிதி உதவி மானியமாகக் கருதப்பட வேண்டும்.

(9) உருக்கு, பெட்ரோலியப் பொருள்கள் முதலியவற்றின் விலையை, மத்திய அரசு, பலமுறை அதிகரிப்பதன் காரணமாக, மாநிலத்தில் நிதி வாயில்கள் குறைந்து கொண்டே வருகின்றன. மாநிலத்திலிருந்து வளவாயில்களை மத்திய அரசுக்கு மாற்றுவது இவ்விலை உயர்வால் ஏற்பட்ட விளைவுகளில் ஒன்றாகும். ஆகவே, மத்திய அரசு நிர்ணயித்த விலையில் பொருள்கள் விற்கப்படும் நிலைகளில், அதிகரிக்கப்பட்ட ஆயத் தீர்வை என்ற வகையில் இந்த விலை மாற்றம் செய்யப்படவேண்டுமென்று பரிந்துரைக்குமாறு எட்டாம் நிதிக்குழு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(10) இந்திய வருமான வரிச் சட்டத்தின் 35 (cc) 35 (cca) பிரிவின்படி, கிராம வளர்ச்சிக்கான ஏற்பளிக்கப்பட்ட திட்டங்களுக்காகும் செலவுக்கு வரிக்குறைப்பு உண்டு. அண்மையில், கொண்டு வரப்பட்ட மத்திய அரசு வரவு-செலவுத் திட்டத்தின்படி மேற்கூறிய பிரிவுகள் ரத்து செய்யப்பட்டன. மாறாக, வரிவிலக்கு வேண்டுமெனில், இத்தொகை, பிரதமரின் கிராம வளர்ச்சி நிதிக்கு வழங்கப்படவேண்டும். சில மாநிலங்கள் ஏற்கெனவே முன்னேற்றமடைந்து இருப்பதால், இந்நிதியால் பயன்பெறப்பட மாட்டா. ஆகவே, முன்னர் இருந்த அதே நிலையே தொடர்ந்து இருக்கலாம்.

[1983 மார்ச் 29

(11). மத்திய அரசின் வருவாய்க் கணக்கில் உள்ள வரவு களிலிருந்து மாநிலங்களுக்கு மாற்றப்படும் மொத்தத் தொகை குறைந்து கொண்டே வருகிறது. 1982-83-ல் இது 23.23 சத வீதமாகும். இத்தொகை வருங்காலத்தில் 40 சதவீதத்திற்குக் குறைவாக இருக்கக்கூடாது.

அவைமுன் வைக்கப்பெற்ற ஏடு.

உறுப்பினர்களின் தகவலுக்காக.

தென் மாநிலங்களுக்குப் பொதுவான விவகாரங்கள் பற்றிய ஒருமித்த கோட்பாடு.

அனைத்து மாநிலங்களுக்கும் பொதுவான முதன்மை வாய்ந்த விவகாரங்களை அவ்வப்போது விவாதிக்க அனைத்து மாநில முதலமைச்சர்களைக் கொண்ட குழுவை அமைப்பது தக்கதும், தேவையானதுமாகும். இதற்கு முன்னோடியாகத் தென்மாநில முதலமைச்சர்களைக் கொண்ட குழுவை அமைக்க அனைவரும் இசைந்துள்ளனர். குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை இக்குழு கூடி மாநிலங்களுக்குப் பொதுவான விவகாரங்களை விவாதிக்கும்.

2. மைய, மாநில உறவு முறையில் கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக மாநிலங்களுக்கு இடையே ஏற்பட்ட அனுபவத்தைக் கருத்திற்கொண்டு நிதி தொடர்பாகப் பரிசீலனை செய்யவும், சட்டபடியான தக்க அதிகாரங்களைப் பிரித்துக் கொடுத்து நிதி ஆணைக்குழு (Finance Commissi n) ஒன்றை அமைக்க வேண்டு மென்றும், இந்த ஆணைக்குழுவில் மாநிலங்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் வழங்க வேண்டுமென்றும், மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்குமிடையே நிதி வாயில்களை சமமாகப் பகிர்ந் தளிக்க அரசியலமைப்பில் தக்க திருத்தங்களைச் செய்யவும், இது தொடர்பாகப் பிற சட்டங்களை இயற்றவும், நிதியாணைக் குழு பரிந்துரைக்க வேண்டுமென்றும் மத்திய அரசைக் கேட்டுக் கொள்வதெனவும் இக்கூட்டத்தில் ஒருமனதாக முடிவு செய்யப் பட்டது.

3. வேளாண்மை விளைபொருளுக்கு விலை நிர்ணயிக்கும் முறைமை தற்போது நன்றாக இல்லை. உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் விவசாயிகளுக்குக் கிட்டுகிறதா என கருதிப் பார்க்கப் படுவதில்லை. இந்த வகையில் விவசாயிகளுக்கு மாநில அரசுகள் மானியம் மற்றும் உதவித் தொகை வழங்குவதன்மூலம் ஏராள மாகச் செலவாகிறது. உற்பத்திச் செலவு, உற்பத்தித் திறன்,



1983 மார்ச் 29]

ஊக்கத் தொகை, அங்காடி நிலவரம் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு விவசாயிகள் சங்கங்களுடன் கலந்தாலோசித்து மாநில அரசுகள் விலையை வரையறை செய்ய வேண்டும். இவ்வாறு மாநில அரசு நிர்ணயிக்கும் நியாயமான விலைக்கு ஏற்பக் கடன் வசதி அமைய வேண்டும். மாநில அரசுகளில் கட்டுப்பாட்டையும் மீறி விளை பொருளுக்கு நல்ல விலை கிட்டாமற் போனால் மத் திய அரசு திட்டஞ்சாரா வகையில் தேவையான உதவித் தொ கையை தேவைக்கேற்ப வழங்க வேண்டும்.

4. இடைத் தரகர்கள் அதிக ஆதாயம் பெறுவதைத் தடுப்ப தோடு விவசாயிகள் சங்கங்கள் விளைபொருள்களை விற்கவும், அவர்களே பிற மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யவும் வாய்ப்பு அமையவேண்டும்.

5. விளைபொருளை மாநில அரசுகளோ, கழகங்களோ, விற்க வும், கொள்முதல் செய்யவும், மத்திய அரசிடமிருந்து முன்னொப் புதல் பெறுவதற்காகக் காத்திராமல், வங்கிகளிடமிருந்து தேவை யான கடன் வசதியைப் பெறவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

6. உலக வங்கியிடமிருந்தும், கடனுதவி செய்யும் அனைத்து நாட்டு நிறுவனங்கள் அல்லது நாடுகளிலிருந்தும் பெறும் நிதி உதவியை மத்திய அரசு பெற்று வரும் நிபந்தனைகளின்படியே அதே வகையாக அந்தந்த மாநில அரசுகளுக்கும் அவ்வுதவியை வழங்க வேண்டும். இவ்வாறு கடனுதவியை வாங்கிக் கொடுப்ப தற்கு சேவைத் தொகையாக பெயரளவில் ஒரு தொகையைக் கட்டணமாக மத்திய அரசு பெற்றுக் கொள்ளலாம்.

7. மத்திய அரசின் சார்பில் மாநில அரசுகள் மேற்கொள் ளும் பணிகள் தொடர்பான செலவினை மத்திய அரசு திருப்பித் தர வேண்டும். சான்றாக இரயில்வே துறையினருக்கு காவலர் சேவையை மாநில அரசுகள் வழங்குகின்றன. இதற்கான செலவை மத்திய அரசு திருப்பித்தர வேண்டும்.

8. (a) மைய, மாநில அரசுகளின் உறவு (ஆ) மாநிலங்களுக் கிடையே அமையும் உறவு பற்றிய குறிப்புகளை அரசியலமைப் பில் இடம் பெறச் செய்து அவற்றிற்கு மாறிவரும் புது உறவு களுக்கு ஏற்றபடி தெளிவான பொருள் விளக்கம் அமையவும் வகை செய்ய வேண்டும். இந்த நெறியில் மீண்டும் பரிசீலிக்க வேண்டிய அரசியலமைப்பின் விதித்துறைகள் வருமாறு :—

(அ) அரசியலமைப்பில் 256, 257 ஆம் பிரிவுகளின்படி மைய மாநில நிருவாக உறவு ;

(b) அரசியலமைப்பில் 7ஆம் விவர அட்டவணையை மாற்றியமைப்பது உட்படச் சட்டமியற்றுவதற்கான அதிகாரம்;

(c) மாநிலப் பட்டியலிலும், மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் பொதுவான பட்டியலிலும் (பொதுப் பட்டியலிலுள்ள பொருள் குறித்து சட்டம் இயற்றும் பொறுப்பு முதற்கண் மாநில அரசுக்காக அமையும்போது) குடியரசுத் தலைவரின், இசைவினைப் பெற அவசியமின்றி சட்டமியற்ற மாநிலச் சட்டமன்றத்திற்கு அதிகாரம்;

(d) அந்தந்த மாநில மொழியை நன்கறிந்தவர்களை உயர் நீதி மன்ற நீதிபதிகளாக அமர்த்தம் செய்து நீதித்துறையின் தன்னுரிமையைக் காத்தல்.

9. கனிப்பொருள்கள் மீது உரிமைத் தொகை பெறுவது சில மாநிலங்களுக்கு வருவாய்த் தொகைகள் வகுக்கும் வாயிலாக அமையலாம். பெரிய கனிப் பொருள்கள் மீதான உரிமைத் தொகை வீதத்தை மத்திய அரசே திருத்தியமைக்கக் கூடியதாய் உள்ளது. இவ்வாறு திருத்தியமைப்பதும் குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறையாகவும் இந்தக் கனிப்பொருள் விற்பனையாகும் அங்காடி விலை விதார்ச்சாரத்திற்கு ஏற்பவும் இவை திருத்தியமைக்கப்படுவதில்லை. உரிமைத் தொகை வீதத்தை அவ்வப்போது திருத்தியமைக்க மாநிலங்களுக்கு அதிகாரத்தைப் பிரித்துக் கொடுக்க வேண்டும்.

10. மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியாக அமைந்திருப்பதால் எட்டாம் நிதியாணைக் குழுவிற்குக் குறிப் பேதுவும் அனுப்பப் போவதில்லை என அம்மாநில முதலமைச்சர் தெளிவுபடுத்தினார்.

11. மத்தியஅரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளைப் பொறுத்த வரையில் வறட்சிப் பணிகளையும் பிற துயர்துடைப்புப் பணிகளையும் மேற்கொள்ள உரிய காலத்தில் போதிய மத்திய நிதி உதவி வழங்கப்பட வேண்டும். வழக்கம் போல் திட்டப்பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதைத் தவிர தனியாக இந்த நிதி உதவி வழங்கப்பட வேண்டும். மாநிலங்களின் சில்லறைச் செலவு நிதியை அதிகரித்து நிதி [illegible] மாநிலங்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டும் ... அதிக

TD
Y311,31'N83
136019
N83-47-2 293